வெளிப்படுத்தின விசேஷம், 2

டேவிட் ரோப்பர்

15. கடந்த காலத்தில் ஜீவித்துக் கொண்டிருந்த சபை (3:1-6)
16. தன்னிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தன்னால் முடிந்தவற்றைச் செய்திருந்த சபை (3:7-13)
17. தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 1 (3:14-17)
18. தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 2 (3:14-22)
19. கருத்து நோக்கில் விஷயங்களை வைத்தல் (4:1-11)
20. "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" (5:1-14)
21. இடிமுழக்கக் குளம்பொலிகள் (6:1-18)
22. வியப்பெதுவும் இல்லை! (6:1-8)
23. நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்! (6:9-11)
24. "மகாப்பெரிய நாள்... வருகிறது" (6:12-17)
25. புயலின் மையத்தில் அமைதி (7:1-8)
26. புயலின் மேலாக உயருதல் (7:9-17)
27. கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது (8:1-6)
படிப்பு உதவிகள்

15

கடந்தகாலத்தில் ஜீவித்துக்கொண்டிருந்த சபை

(3:1-6)

கடந்த முப்பது ஆண்டுகளாக நான் பாதுகாத்து வைத்திருந்த பதிவேடு ஒன்றை, சமீபத்தில் நான் படித்தேன். அதன் வார்த்தைகள் பல பத்தாண்டுகள் பழைமையானவைகளாய் இருந்தாலும், அவைகள் என் வாழ்வின் இடர்ப்பாடு மிக்க காலகட்டத்தின் தெளிவான நினைவுகளைத் திரும்பக் கொண்டு வந்தன: எனது மனைவியான ஜோவும் நானும், சுவிசேஷ ஊழியர்களாக ஆஸ்திரேலியா செல்லுவதைத் தேவன் விரும்பினாரா இல்லையா என்பது பற்றி நாங்கள் வியப்படைந்து கொண்டிருந்தோம். புதிதாய்ப்பிறந்த எங்கள் மகளான ஏஞ்சிதான் எங்கள் கடைசிக் குழந்தையாக இருப்பாள் என்று எங்களுக்குக் கூறப்பட்டு இருந்தது. எனது முதல் இரண்டு புத்தகங்கள் அச்சகத்திலிருந்து வந்திருந்தன, நான் எதிர்காலத்தில் எழுத்து ஊழியம் செய்வதன் சாத்தியக்கூறு பற்றி மும்முரமாகச் சிந்திக்கத் தொடங்கியிருந்தேன். அந்தப் பதிவேட்டில் உள்ள பதிவுகளை நான் வாசிக்கையில், எனது நம்பிக்கைகள் மற்றும் கனவுகள் ஆகியவற்றில் நான் வெற்றியும் தோல்வியும் அடைந்தது எப்படி என்பதைப் பற்றி மீண்டும் நினைத்துப்பார்த்தல் என்பதைத் தவிர்க்க இயலாது இருந்தது.

அதுபோலவே, ஆசியாவில் இருந்த ஏழு சபைகளுக்கும் எழுதப்பட்ட கடிதங்களை நாம் பரிசோதிக்கையில், அவர்களின் வெற்றிகள் மற்றும் தோல்விகள் ஆகியவற்றின் வெளிச்சத்தில் நமது சொந்த வாழ்வை மதிப்பீடு செய்யும்படி நாம் கட்டாயப்படுத்தப்படுகின்றோம். இந்தக் கடிதங்கள் காலத்தினால் தூசுபடிந்த கடிதத்தொடர்புகள் அல்ல; இவைகள் நமது சொந்த ஆத்துமாக்களைப் பிரதிபலிக்கின்ற உயிருள்ள கண்ணாடிகளாக உள்ளன.

ஒருகாலத்தில் மேன்மை பெற்று விளங்கிய சர்தை[1] நகரில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதமான இது நமது தற்போதய படிப்பான ஐந்தாவது கடிதமாக உள்ளது. இந்த சபையானது, நல்லது எதுவும் கூறப்படாது இருந்த இரு சபைகளில் ஒன்று என்ற ஐயத்திற்கு இடமான தனித்துவத்தைக் கொண்டுள்ளது - இது குறைந்தபட்சம் இந்த முழு சபையையும் பொறுத்தவரையிலாவது உண்மையாக உள்ளது.[2] இருந்தபோதிலும், சரியானதைச் செய்வதற்கு இன்னும் முயற்சி செய்து கொண்டிருந்த உண்மையுள்ள ஒருசிலரை இது கொண்டிருந்தது (3:4). நமது பாடத்தின்போது, நாம் இந்த விசேஷித்த மனிதர்களைப் பற்றி முக்கிய

கவனம் செலுத்துவோம்.

மேட்டிமையான ஒரு மாகாணம் (3:1அ)

இந்தக் கடிதம், "சர்தை சபையின்[3] தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்" (வசனம் 1அ) என்று தொடங்குகிறது.

ஏழு சபைகளைப் பற்றிய நமது படிப்பில் இதுவரைக்கும் நாம், (சபைக் குழுமங்கள்) இருந்த இடங்களின் சமூகங்களினால் - எதிர்மறையாகவோ அல்லது நேர்மறையாகவோ - அடிக்கடி துன்புறுத்தப்பட்ட சபைக்குழுமங் களைப் பற்றிக் கண்டிருக்கின்றோம். சபையானது சமூகத்தின்மீது செல்வாக்குச் செலுத்துவதாயிருக்க வேண்டும் (மத்தேயு 5:13-16), ஆனால் மிகவும் அடிக்கடி, விஷயம் இதற்கு நேர்மாறாக இருந்தது. சர்தையில் இருந்த சபையானது இதற்கு மிகச்சிறந்த உதாரணமாக உள்ளது. சபையில் பிரதிபலித்த நகரத்தின் மூன்று பண்புகளை ஆழ்ந்து சிந்தித்துப் பார்க்க நாம் விரும்புகின்றோம்:

(1) சர்தை நகரம் கடந்தகால மகிமையின் வரலாற்றைக் கொண்டிருந்தது. இது ஆசியாவின் பழம் பெரும் நகரங்களில் ஒன்றாக இருந்தது மற்றும் பெரிய நகரங்களில் ஒன்றாகவும் இருந்தது. கி.மு. 560ல், குரோசஸ்[4] என்பவரின்கீழ், இது பழங்கால இராஜ்யம் ஒன்றின் தலைநகராயிற்று. தொடக்கத்தில் இந்த நகரம் மொலஸ் [Tmolus] மலையின்மீது கட்டி எழுப்பப்பட்டது. அந்த மலையின் அடிவாரத்தில், குரோசஸின் செல்வத்திற்குப் பங்களித்த தங்கம் நிறைந்த மண்ணால் நிரப்பப்பட்ட நதியொன்று இருந்தது.[5] குரோசஸ் என்பவர், அரசு அலுவலகரீதியான முதல் நாணயத்தை ஏற்படுத்தினார்; வார்த்தையின் நவீனக் கருத்துணர்வின்படி, சர்தையில்தான் பணம் தனது தோற்றத்தைக் கொண்டிருந்தது.[6] பெர்சியா நாட்டை ஆண்ட மகா கோரேஸ் என்பவர் இந்த நகரத்தைக் கைப்பற்றியபோது, 2640 கோடிரூபாய்களுக்கும் அதிகமான மதிப்புக்கொண்ட தங்க நாணயங்களை எடுத்துச் சென்றார்! இந்த நகரம், மூன்று கடற்கரையோர நகரங்களின் சாலைகளும், பிரதான உள்சாலைகளும் சந்திக்கும் இடத்திற்கு அண்மையிலிருந்தது என்ற உண்மையானது இதன் செல்வங்களுக்கு ஆதாரமூலமாக இருந்தது. இது இவ்விதமாக செல்வமிக்க வர்த்தக நகரமாயிற்று.

(2) சர்தை நகரம் அளவுக்கு அதிகமான நம்பிக்கையின் வரலாற்றைக் கொண்டிருந்தது. தொடக்க காலத்திய நகரம், இயற்கைக் கோட்டையை உண்டாக்கிய மொலஸ் மலையின் உச்சியில் கட்டியெழுப்பப்பட்டிருந்தது. இந்த மலையுச்சியானது, பரந்த வளமான சமவெளியில் இருந்து 1500 அடிகள் உயரத்திலிருந்தது, மற்றும் ஏறக்குறைய செங்குத்தான வழுவழுப்பான பக்கங்களைக் கொண்டிருந்தது. ஒருசில மனிதர்களால் காவல் செய்யப்பட்ட குறுகிய கடவுவழிதான் இந்த நகருக்குள் சென்று சேருவதற்கான வழியாக இருந்தது. இது தாக்குதலுக்கு அசையாத நிலைப்பாட்டில் இருந்ததாகக் காணப்படுகிறது.

ஆவியின் வாக்கு ஒன்று குரோசஸிடத்தில், அவரால் பெர்சியரான

கோரேஸைத் தோல்வியடையச் செய்ய முடியும் என்று கூறியதாக அவர் (குரோசஸ்) நம்பினார்.[7] அதில் அவர் தவறியபோது, அவர் தமது "தாக்க இயலாத" கோட்டைப் பகுதிக்குப் பின்வாங்கிச் சென்றார். கடவுவழியைத் தவிர நகருக்குள் செல்வதற்கு ஒரு வழியைக் கண்டுபிடிக்கக் கூடியவருக்கு வெகுமதி அளிக்கப்படும் என்று கோரேஸ் அறிவித்தார். சர்தையின் போர்வீரன் ஒருவனால் தவறவிடப்பட்ட தலைச்சீரா ஒன்று மலைப் பகுதியோரமாக உருண்டு கீழே வந்துகொண்டிருந்ததைப் பெர்சியப் போர்வீரன் ஒருவன் கண்டான். சற்றுநேரம் கழித்து, அந்த சர்தைப்போர் வீரன் தனது தலைச்சீராவைத் திரும்ப எடுப்பதற்கு மலைக்குன்றினுடைய அடிப்பகுதியை நோக்கிச் சென்றான். சர்தைப்போர்வீரன் சரிவில் கீழ்நோக்கி வரமுடியும் என்றால், பெர்சியர்கள் அதே சரிவின் வழியாக மேல்நோக்கிச் செல்ல முடியுமே என்று அந்தப் பெர்சியப்போர்வீரன் தர்க்கரீதியாகச் சிந்தித்தான். அவன் அந்த இடத்தைக் குறித்துவைத்துக் கொண்டான், பின்பு அந்த இரவில், பெர்சியப்போர்வீரர்களின் ஒரு சிறுகுழு மலையின் ஓரமாகவே மேலேறிற்று. சர்தை நகரத்தைச் சேர்ந்தவர்களின் அளவுக்கு அதிகமான நம்பிக்கையின்காரணமாக, கோட்டையானது காவலின்றி விடப்பட்டிருந்ததை அவர்கள் கண்டனர் - அந்த நகரம் வீழ்ந்தது.[8]

(3) முதல் நூற்றாண்டின் கடைசியில் சர்தை நகரம், கடந்தகாலப் பெருமையில் வாழ்ந்து கொண்டிருந்தது. கோரேஸ் சர்தை நகரத்தைக் கைப்பற்றியபின்பு, அந்த நகரத்தைச் சேர்ந்தவர்கள் ஆயுதங்களைச் செய்வதற்கு அனுமதிக்கப்படவில்லை. தந்தையர்கள் தங்கள் மகன்களுக்குச் சுரமண்டலங்களை மீட்டவும், நடனம் ஆடவும், வர்த்தகர்கள் ஆகவும் மாத்திரமே போதிக்க முடிந்தது. வில்லியம் பார்க்ளே அவர்கள், சர்தை நகரத்தை "பொழுதுபோக்கு நடன - இசைக்குழுவினர் மற்றும் கடைக்காரர் களின் நகரம்" என்று அழைத்தார்.[9] பிற்பாடு கி.பி. 17ல், இந்த நகரம் ஒரு பூமியதிர்ச்சியால் அழிவடைந்தது. இது மீண்டுமாய்க் கட்டப்பட்டது, ஆனாலும் இது தனது முந்திய அந்தஸ்தை ஒருபோதும் மீண்டும் ஆதாயப்படுத்தவில்லை. வெளிப்படுத்தின விசேஷம் 3:1-6 எழுதப்பட்ட வேளையில், சர்தை நகரமானது கடந்த கால நினைவுகளில் வாழ்ந்து கொண்டிருந்த ஒரு மூன்றாந்தர நகரமாய் இருந்தது.

நாம் காணப்போகின்றபடி, சர்தையில் இருந்த சபையானது அந்த நகரத்தின் பண்புகளைக் கொண்டிருந்தது.

நேர்மறையான ஒரு விவரிப்பு (3:1ஆ)

இயேசு, சர்தையில் இருந்த சபையின் சுகவீனங்களைப் பரிசோதிக்கு முன், அவர் முதலில் தம்மை, "தேவனுடைய **ஏ**ழு ஆவிகளையும் **ஏ**ழு நட்சத்திரங்களையும் உடையவர்" (வசனம் 1ஆ) என்று அடையாளப் படுத்திக் கொண்டார். இது கடிதங்களில் உள்ள எல்லா விவரிப்புகளைக் காட்டிலும் மிகுந்த ஆறுதல் உள்ளதாக இருக்கிறது[10] "ஏழு ஆவிகள்" என்ற சொற்றொடர் 1:4ல் காணப்படுகிறது, அங்கு இது பரிசுத்த ஆவியானவரைக் குறித்தது.[11] கிறிஸ்தவர்களுக்கு உதவுவதற்காகவும் அவர்களைப்

பலப்படுத்துவதற்காகவும் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியானவர் தரப்பட்டிருந்தபடியால் (நடபடிகள் 2:38; 5:32; ரோமர் 8:11, 13, 26), இயேசு "ஏழு ஆவிகளைக் கொண்டிருந்தார்" என்ற உண்மையானது, அவர் கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்த தயாராக இருக்கின்றார் என்பதைச் சுட்டிக் காண்பிக்கிறது. அவர் "ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்" என்ற அறிவிப்பினாலும் இதே செய்தியே தெரிவிக்கப் படுகிறது. 1:16ன்படி, இயேசு இந்த நட்சத்திரங்களை, பாதுகாப்பிற்கு வல்லமை நிறைந்த தமது வலது கரத்திலே ஏந்திக் கொண்டிருக்கின்றார். இது அவரது மக்களைப் பாதுகாப்பதற்கும் காவல்செய்வதற்குமான அவரது வல்லமையைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.[12] ("தமது வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

சர்தை நகரில் இருந்த சபையானது பொதுவான பாராட்டுதல் எதையும் பெற்றிராத நிலையில், இயேசு இந்தக் கடிதத்தை ஆறுதலின் இந்தச் செய்தியுடன் தொடங்கியது ஏன்? ஒரு வேளை, சோதிக்கப்பட்ட சூழ்நிலைகளில் உண்மையுடன் நிலைத்திருந்த "ஒருசிலரை" (3:4) உற்சாகப்படுத்துவதற்கு அவர் விரும்பியிருக்கலாம்.

வேதனை நிறைந்த பரிசோதனை (3:1இ, ஈ, 2அ, இ)

இந்தக் கடிதத்தின் பொருளுரை, எபேசு மற்றும் தியத்தீரா நகரங்களில் இருந்த சபைகளுக்கு இயேசு எழுதிய கடிதங்களில் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தைகளைக் கொண்டு தொடங்கிற்று: "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" (வசனம் 1இ).[13] பின்பு இயேசு, அந்த இரண்டு சபைகளையும் பாராட்டி இருந்தார். எபேசுவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு அவர், "உன் கிரியைகளையும், உன் பிரயாசத்தையும், உன் பொறுமையையும், நீ பொல்லாதவர்களைச் சகிக்கக்கூடாமலிருக்கிறதையும், ... அறிந்திருக்கிறேன்" என்று கூறியிருந்தார் (2:2). தியத்தீராவில் இருந்தவர்களை அவர், "உன் கிரியைகளையும், உன் அன்பையும், உன் ஊழியத்தையும், உன் விசுவாசத்தையும், உன் பொறுமையையும், நீ முன்பு செய்த கிரியைகளிலும் பின்பு செய்த கிரியைகள் அதிகமாயிருக்கிறதையும் அறிந்திருக்கிறேன்" என்று கூறிப் புகழ்ந்திருந்தார் (2:19).

இந்த ஏழு கடிதங்களும் தனித்தனியே சுற்றுக்கு விடப்பட்டிருந்த தில்லை என்பதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள். ஏழு சபைகளில் ஒன்று தனது கடிதத்தை வாசிக்க கேட்பதற்குக் கூடிவந்திருக்கையில், அந்த உறுப்பினர்கள் மற்ற ஆறு கடிதங்கள் வாசிக்கப்பட்டதையும் கேட்டனர். இவ்விதமாக, சர்தையில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதம் வாசிக்கப்படுவதற்கு முன்பு, சர்தையில் இருந்த கிறிஸ்தவர்கள், மற்ற நான்கு சபைக்குழுமங்களைப் பற்றி இயேசுவின் புகழ்ச்சியை வாசிக்க கேட்டிருந்தனர். எபேசு, தியத்தீரா சபைகளைப்பற்றி இயேசு தமது பாராட்டுதலுடன் கூடுதலாக, சிமிர்னா சபையானது உபத்திரவத்தின் மத்தியிலும் உண்மையுடன் நிலைத்திருந்தமைக்காகவும், பெர்கமுவில் இருந்த சபையானது அவரது நாமத்தை உறுதியாய்ப் பற்றிக்கொண்டிருந்தமைக்

காகவும் அவற்றைப் பாராட்டியிருந்தார். சர்தையில் இருந்த சபையானது பெருமைமிகுந்த கடந்த காலத்தைக் கொண்டிருந்தபடியால், அதன் உறுப்பினர்கள் ஒருவேளை, இயேசுவிடமிருந்து மிகவும் தாராளமான புகழ்ச்சியை எதிர்பார்த்து இருந்திருக்கலாம். அதற்குப் பதிலாக, அவர்கள் யாவரும் பெருமூச்சு விடவும் அவர்களில் சிலர் கோபம் அடையவும் காரணமான தெய்வீக மதிப்பீடு ஒன்றையே அவர்கள் வாசிக்க கேட்டனர். மூலவசனத்தில் இந்த மதிப்பீட்டிற்கு ஆறு வார்த்தைகள் மாத்திரமே எடுத்துக்கொள்ளப்பட்டது, ஆனால் கடினமாய்த் தாக்கும் மொழிநடையைக் கற்பனை செய்தல் என்பது சிரமமாக இருக்கும்: "நீ உயிருள்ளவனென்று பெயர்கொண்டிருந்தும் செத்தவனாயிருக்கிறாய்" (வசனம் 1ஈ).

இந்த சபைக்குழுமம் "உயிருள்ளதாக" இருந்ததற்கு "பெயர் ஒன்றை" கொண்டிருந்தது - இது சகோதரர்கள் மத்தியில் ஆவிக்குரிய வலிவார்ந்த தன்மையால் ஒரு நற்பெயராக இருந்தது.[14] ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று நீங்கள் இந்த சபைக்குழுமத்திற்குச் சென்று, அங்கு மனதை ஈர்க்கக்கூடிய ஆராதனை ஊழியத்தை - கம்பீரமான ஜெபங்கள், நேர்த்தியாகப் பாடுதல், தலைசிறந்த பிரசங்கித்தல், கண்ணியம் மிகுந்த வகையில் கர்த்தரின் இராப்போஜனத்தை ஆசரித்தல், மிகவும் ஏராளமான காணிக்கை ஆகியவற்றை - கவனித்துப்பார்த்து, "அந்த சபை கிறிஸ்துவுக்கென்று உயிருள்ளதாக இருக்கிறது!" என்று கூறிச் சென்றிருப்பீர்கள்.

இருப்பினும் தேவன், (எந்த ஒரு விஷயத்தையும்) மனிதர் காண்பது போல் காண்பதில்லை (1 சாமுவேல் 16:7). இந்த சபை "செத்தது" - 1 தீமோத்தேயு 5:6ல் "சுகபோகமாய் வாழ்கிறவள் உயிரோடே செத்தவள்" என்று கூறப்பட்ட பெண்ணைப்போல், ஆவிக்குரிய வகையில் செத்ததாய் இருந்தது. "செத்தது" என்ற வார்த்தை "பிரிதல்" என்று விளக்கப்படலாம்;[15] ஆவிக்குரிய மரணம் என்பது தேவனிடத்தில் இருந்து பிரிதலாக உள்ளது (ஏசாயா 59:1, 2). சர்தையில் இருந்த சபையானது, கர்த்தருடன் கொண்டிருந்த உறவுமுறை சரியானதாக இராதபடியால், அது நற்பெயர் கொண்டிருந்தது. ஆயினும் உண்மைத்தன்மை கொண்டிருக்கவில்லை, அது வடிவமைப்பைக் கொண்டிருந்தது, ஆயினும் சக்தியைக் கொண்டிருக்கவில்லை.

சர்தையில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, இயேசுவின் மதிப்பீடு எவ்வளவு அதிர்ச்சியானதாக இருந்திருக்கும் என்பதை மதித்து அறிவதற்கு, உடல்ரீதியான வலிமையால் எப்போதும் தன்னைப் பெருமையாக நினைத்துக் கொண்டிருந்த ஒரு மனிதரை நாம் கற்பனை செய்துகொள் வோம் (அவரை நாம் திருவாளர். ஜோன்ஸ் என்று அழைப்போம்). திருவாளர். ஜோன்ஸ் அவர்கள் தமது இளமைப் பருவத்தில், தலைசிறந்த ஒரு விளையாட்டு வீரராக இருந்தார், அவர் இன்னமும் உடல்நலத்திற்கான தோற்றத்தைக் கொண்டுள்ளார். ஒருநாள் அவர், வழக்கமான உடல் பரிசோதனைக்காக மருத்துவரிடம் சென்றார். பரிசோதனைகள் முடிந்த பின்பு, மருத்துவர் ஆய்வறைக்குத் திரும்பிவந்து, அவரது கண்களுக்குள் அவரை உற்றுநோக்கி, "திருவாளர். ஜோன்ஸ் அவர்களே, நீங்கள் ஒரு செத்த

மனிதராக இருக்கின்றீர்கள்!'' என்று கூறுகின்றார். அந்த மருத்துவ ஆய்வறிக்கையானது திருவாளர். ஜோன்ஸ் அவர்களை, இயேசுவின் ஆவிக்குரிய ஆய்வறிக்கை சர்தையில் இருந்த கிறிஸ்தவர்களைப் புரட்டிப்போட்டதைக் காட்டிலும் அதிகமாகப் புரட்டிப்போட்டிருக்காது.

இவர்கள், "... பாவங்களினாலும் மரித்தவர்களாயிருந்தார்கள்'' (எபேசியர் 2:1) என்று ஆய்ந்தறியப்பட்ட முதல் நபர்களாகவோ அல்லது கடைசி நபர்களாகவோ இருந்ததில்லை. ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில், ஒரு பிரசங்கியார், மிகச்சிறந்த உறுப்பினர் ஒருவரின் சவ அடக்க ஆராதனையின் போது அன்று மாலை தாம் பிரசங்கிக்கப் போவதாக அறிவித்தார். அந்த இரவில், சபைக் கட்டிடத்தின் முன்னால் ஒரு சவப்பெட்டி இருந்ததைக்கண்டு, சபையின் உறுப்பினர்கள் திகைப்படைந்தனர். பிரசங்கியாரின் பிரசங்கத்திற்கான நேரம் வந்தபோது, அவர் மரணம் அடைந்தவர்கள் பற்றிய பொதுவான கருத்துக்களை (முதலில்) கூறினார். கடைசியில் அவர், "யார் மரித்துப்போனார் என்று உங்களில் சிலர் வியப்படைந்து இருக்கலாம். நீங்களே சவப்பெட்டியின் அருகில் வந்து பாருங்கள்" என்று கூறினார். உறுப்பினர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து, சவப்பெட்டிக்குள் பார்த்தபோது, அதில் அவர்கள் ... ஒரு கண்ணாடியை ... அதில் தங்கள் சொந்த முகம் பிரதிபலிப்பதைக் கண்டனர்! இது அந்த சபைக்குழுமத்திற்கு உயிர்ப்பித்தல் அவசியமாய் இருந்தது என்று கருத்துத் தெரிவிப்பதற்குப் பிரசங்கியாரின் மதிநுட்பமான வழிமுறையாக இருந்தது (சங்கீதம் 85:6; 119:25ஐக் காணவும்).

உடல்ரீதியான மரணம் உடனடியாக வரவுள்ளது என்று உங்களுக்கும் எனக்கும் கூறப்பட்டால், நாம் அனேகமாக அந்த மருத்துவ முன்னாய்வுக்கு ஆதாரத்தை வேண்டிக்கேட்போம். அடுத்த சில வசனங்கள், சர்தையில் இருந்த சபையானது மரணத்தில் முடியக்கூடிய சுகவீனத்தைக் கொண்டிருந்தது என்று இயேசு முடிவுசெய்வதற்கு அவரை வழிநடத்திய நான்கு திட்டவட்டமான அறிகுறிகளைக் குறிப்பிடுகின்றன அல்லது மறைமுகமாய் உணர்த்துகின்றன:

(1) நித்திரை மயக்கம். உற்சாகமாய் இருந்த யாரேனும் ஒருவர், உறங்குவதைத் தவிர வேறெதுவும் செய்ய விரும்பாது இருக்கின்றார் என்றால், அது மருத்துவரிடம் ஆலோசனை பெறவேண்டிய வேளையாக உள்ளது. சர்தையில் இருந்த சபைக்கு இயேசு, "நீ விழித்துக்கொண்டு, ..." என்று ஆலோசனை அளித்தார் (வசனம் 2அ).

(2) சோம்பேரித்தனம். செயல்துடிப்புடன் இருந்த யாரேனும் ஒருவர் சோம்பல் உள்ளவராகி விடுவார் என்றால், நாம் அதைப் பற்றிக் கவலைப் படுகின்றோம். சர்தையில் இருந்த கிறிஸ்தவர்கள் ஒருகாலத்தில் உற்சாகமிக்கவர்களாய் இருந்தனர், ஆனால் இயேசு "உன் கிரியைகள் (என்) தேவனுக்கு[16] முன் நிறைவுள்ளவைகளாக[17] நான் காணவில்லை'' என்று கூறினார் (வசனம் 2இ). அவர்கள் தலைசிறந்த ஊழியத்தைத் தொடங்கி யிருந்தனர், ஆனால் ஆர்வத்தை இழந்திருந்தனர்; அவர்கள் ஒன்றையும் செய்துமுடிக்கவில்லை.[18]

(3) அலட்சியம். தமது தோற்றத்தில் பெருமையை மேற்கொண்

டிருக்கும் யாரேனும் ஒருவர் உருவத்தில் நயமும் ஒழுங்கும் இல்லாது இருக்கும்போது, நாம் எச்சரிக்கை அடைகின்றோம். 3:4ல் இயேசு, "ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு"[19] என்று கூறினார், இது எஞ்சியவர்கள் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தியிருந்தனர் என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. "அசுசிப்படுத்துதல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை யானது, தற்செயலாகச் சிதறியதினால் விளைந்த சிறு கறை போன்ற விஷயத் தைக் குறிப்பதில்லை. மாறாக, இவ்வார்த்தையானது, அசுத்தத்தினால் அழுந்தப்பட்டிருத்தல் என்பதை, சேறு அல்லது சகதியில் உருண்டு புரளுதலினால் விளைகின்ற அசுசியின் வகையைக் குறிக்கிறது.[20] சர்தையில் இருந்த கிறிஸ்தவர்களில் பலர், "புறதெய்வ வழிபாடு செய்யும் அவர்களின் அயலகத்தார்களிடத்தில் இருந்து வித்தியாசப்படுத்த முடியாத ஒரு வாழ்க்கையை வாழ வந்தனர்."[21] அவர்கள், "உலகத்தால் கறைபடாத படிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளவேண்டும்" என்ற கட்டளைப்படி தங்களைக் காத்துக்கொள்வதில் தவறியவர்களாய் ஆகியிருந்தனர் (யாக்கோபு 1:27).[22]

(4) *எளிதில் தாக்கப்படக் கூடிய தன்மை.* ஒருவரின் நோய் எதிர்ப்பு அமைப்பு பழுதடைகின்றபோது, அவரது எதிர்ப்புசக்தி குறைந்துபோய், அவர் எளிதில் நோய் தாக்கக் கூடியவராகின்றார். ஆவிக்குரிய வகையில் பேசும்போது, இதுவே சர்தையில் இருந்த சபையின் சூழ்நிலையாக இருந்ததாகக் காணப்படுகிறது. அந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தை நாம் படிக்கையில், மற்ற சபைகளால் எதிர்கொள்ளப்பட்டிருந்த சோதனைகள் உபத்திரவங்கள் ஆகியவை பற்றிய குறிப்பிடுதல் இல்லை என்ற உண்மையால் நாம் தாக்கப்படுகின்றோம்: அவர்கள் எதிர்த்து வாதிட வேண்டியதாயிருந்த கள்ளப்போதகர்களைக் கொண்டிருக்கவில்லை (2:2, 6, 14, 15, 20). அவர்கள், அவிசுவாசமுள்ள யூதர்களால் துன்புறத்தப் பட்டிருக்கவில்லை (2:9; 3:9). அவர்களில் யாரும் சிறையில் போடப் படவில்லை (2:10). எவரொருவரும் விசுவாசத்திற்காக மரித்திருக்கவில்லை (2:13). அவர்கள் சமாதானத்தைக் கொண்டிருந்தனர் - ஆனால் அது கல்லறையின் சமாதானமாக இருந்தது.

அவர்கள் இன்னமும் ஆராதனைக்குக் கூடி வந்தனர், ஆனால் அவர்கள் இனியும் தங்கள் விசுவாசத்தைத் தாங்கள் வாழ்ந்த சமூகத்தில் தீவீரமாகப் பகிர்ந்துகொள்ளவில்லை. அவர்கள் தங்கள் புறதெய்வ வணக்க அயலகத்தவர்களுடன் ஆறுதல் நிறைந்த வகையில் கூடிவாழ்ந்து வந்தனர். "அவர்கள் மரித்துக் கொண்டிருந்த சாட்சியமும், கெட்டுப்போய்க் கொண்டிருந்த ஊழியமும் கொண்ட மதிப்புள்ள மக்களாக இருந்தனர்" என்று வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள் முடிவுசெய்தார்.[23] அவர்கள் அனேகமாக, "அந்த மூலையில் கூடிவருகின்ற, நயப் பாங்குள்ள, தீங்கற்ற மதக்குழுவினர்" என்று கருதப்பட்டிருக்கலாம். அவர்கள் - பிசாசானவன் தங்களைத் தனியே விட்டுவிடும்படியாக - பாவத்துடன் எதிர்ப்பற்றவகை யிலான ஒரு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருந்தனர்.

பரிவிரக்கம்கொண்ட ஒரு அறிவிப்பு (3:2அ, ஆ, 3)

சர்தையில் இருந்த சபையானது சாவுக்கேதுவான சுகவீனம் கொண்டிருந்து இருக்கலாம், ஆனால் கர்த்தர், ஆவிக்குரிய CPR[24] சிகிச்சையொன்றை அந்த சபைக்கு முயற்சி செய்து பார்ப்பதற்கு முன்பு அதற்கு மரணச்சான்றிதழில் கையொப்பம் இடப்போவதில்லை. அவரது பரிவிரக்கமான வேண்டுதலை கவனியுங்கள்: "நீ விழித்துக்கொண்டு, சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை[25] ஸ்திரப்படுத்து" (வசனம் 2அ, ஆ).

அவர்கள் "செத்தவர்களாய்" இருந்தார்கள் என்று இயேசு ஏற்கனவே அறிவித்திருந்தபடியால், "சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப் படுத்து" என்ற அவரது அறைகூவல் திகைப்புக்குரியதாக இருக்கலாம். அவர்கள் செத்திருந்தும் சாகாதிருக்கக்கூடுவது எப்படி? உடல்நலத்துடன் காணப்பட்ட மனிதர் மற்றும் உணர்வற்ற மருத்துவர் ஆகியோரைப் பற்றிய விவரிப்பை நான் இன்னும் விரிவாக்க அனுமதியுங்கள்: "நீங்கள் செத்துப்போன மனிதராக இருக்கின்றீர்கள்!" என்று மருத்துவர் அறிவித்த பின்பு, அவர் சற்று நேரம் அமைதியாக இருந்துவிட்டு, பின்பு அம்மனிதனிடத்தில், "ஆனால் ஒரு சக்திவாய்ந்த புதிய சிகிச்சை உள்ளது ... ஒருவேளை அது, ஒருவேளை அதுமாத்திரமே உங்களுக்கு உதவும்" என்று கூறுகின்றார். எனது விவரிப்பு பூரணமானதாக இருப்பதில்லை, ஏனென்றால் மாபெரும் மருத்துவர், "ஒருவேளை நம்பிக்கை இருக்கலாம்" என்று ஒரு போதும் கூறவில்லை. அதற்குப் பதிலாக அவர், "நீங்கள் எனது அறிவுறுத்துதலைப் பின்பற்றினால் நம்பிக்கை உள்ளது" என்று கூறுகின்றார்.

சர்தையில் இருந்த சபையின் உறுப்பினர்கள் என்ன செய்யவேண்டி யிருந்தது? முதலாவது அவர்கள் எழுந்து, உணர்ந்து அறியும்படி [*rouse, realize,* and *recognize*] கூறப்பட்டனர். இயேசு, "நீ விழித்துக்கொண்டு,[26] சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை ஸ்திரப்படுத்து" என்று கூறினார் (வசனம் 2அ). அவர்கள் தங்கள் ஆவிக்குரிய சூழ்நிலைக்கு "விழித்துக்கொள்ள" வேண்டியிருந்தது (எபேசியர் 5:14; ரோமர் 13:11-14ஐக் காணவும்), கடந்த கால மகிமையில் தாங்கள் வாழ்ந்திருந்ததை உணர்ந்தறிய வேண்டியிருந்தது, மற்றும் தங்களின் ஆவிக்குரிய அபாய நிலையை அறிந்துணர வேண்டியிருந்தது. கடந்த காலத்தில் இருந்து கற்றுக் கொள்ளுதல் என்பது விரும்பப்படத்தக்கதாக உள்ளது, ஆனால் கடந்த காலத்திலேயே வாழ்தல் என்பது அழிவுக்குரியதாக உள்ளது.

இரண்டாவது, அவர்கள் நினைவுகூர்ந்து, கைக்கொண்டு, மனந் திரும்பும்படி அறிவுறுத்தப்பட்டனர். இயேசு, "ஆகையால்[27] நீ கேட்டுப் பெற்றுக்கொண்ட வகையை நினைவுகூர்ந்து,[28] அதைக் கைக்கொண்டு[29] மனந்திரும்பு" என்று கூறினார் (வசனம் 3அ). அவர்கள் தாங்கள் கேட்டிருந்த பிரசங்கித்தலை நினைவுகூர்ந்திருக்க வேண்டிய வேளையில், தங்கள் பெற்றிருந்த புகழ்ச்சியை மீண்டும் நினைத்துப் பார்த்துக் கொண்டிருந்தனர். அவர்கள் விசுவாசத்தின் அடிப்படை விஷயங்களுக்குத் திரும்பச் சென்று அந்த சத்தியங்களைப் பற்றிக்கொள்ள வேண்டியிருந்தது. பின்பு, அவர்கள்

தங்கள் மனதிருப்திக்காக மனந்திரும்பக்கூடியவர்களாகி அவசியமான மாற்றங்களை ஏற்படுத்துவார்கள்!

கர்த்தருடைய அறிவுறுத்துதல்களை அவர்கள் புறக்கணித்தால் என்னவாகும்? இயேசு, "நீ விழித்திராவிட்டால், திருடனைப்போல் உன்மேல் வருவேன், நான் உன்மேல் வரும்வேளையை அறியாதிருப்பாய்" என்று எச்சரித்தார் (வசனம் 3ஆ).[30] *பெர்சியர்கள் மலைச்சரிவுகளில் ஏறிவந்து, ஆயத்தமாய் இருந்திராத சர்தையின் குடிமக்களைப் பிடித்துக்கொண்டது போலவே, அவர்கள் எதிர்பாராத வேளையில் இயேசு அவர்களிடம் வருவார். சர்தையில் இருந்த சபையானது அவரது வருகைக்குத் தயாரற்ற நிலையில் இருந்தால், விளைவுகள் அழிவுக்குரியதாக இருக்கும்.*[31]

விடாமுயற்சியுடன் இருந்த சீஷர்கள் (3:4)

இயேசு, (சர்தையில் இருந்த) சபைக்குழுமத்தின் சுகவீனங்களை வெளிப்படுத்தி, நிவாரணமுறையைப் பரிந்துரைத்து இருந்தபடியால், அவர் ஜெயங்கொள்கின்றவர்களுக்கான வாக்குத்தத்தங்களுடன் இந்த இடத்தில் இந்தக் கடிதத்தை முடித்திருக்க முடியும். ஆனுல் அதற்கு முன்பாக, சபைக்குழுமத்தில் உண்மையுள்ளவர்களாய் இருந்த ஒரு சிலர் என்று நான் குறிப்பிட்டிருந்த ஒரு விசேஷித்த குழுவினருக்குப் பாராட்டைத் தெரிவிக்க அவர் விரும்பினார்: "ஆனாலும் தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர் சர்தையிலும் உனக்குண்டு" (வசனம் 4அ).

விசுவாசம் நிறைந்த ஒருசிலரைத் தேவன் எப்போதுமே கொண்டிருந்துள்ளார்: தேவபக்தியற்ற நாட்களில் தேவன், நோவாவையும் அவரது குடும்பத்தையும் கொண்டிருந்தார். விக்கிரக ஆராதனையின் நாட்களில் தேவன், ஆபிரகாமையும் அவரது சந்ததியையும் கொண்டிருந்தார். சோதோம் கொமோராவில்கூட தேவன், "நீதிமானாகிய லோத்தை" கொண்டிருந்தார் (2 பேதுரு 2:7). இயேசு, "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று கூறினார் (மத்தேயு 7:14). அதுபோலவே, சர்தை சபையில் விசுவாசம் நிறைந்தவர்களாய் நிலைத்திருந்த ஒருசிலரைத் தேவன் கொண்டிருந்தார்.

இயேசு, "அவர்கள் ... வெண்வஸ்திரந்தரித்து[32] *என்னோடேகூட நடப்பார்கள்" (வசனம் 4இ) என்று வாக்குத்தத்தம் செய்தார்.*[33] *"வெண்வஸ்திரம்" தரித்தவர்களாய் இயேசுவுடன் நடத்தல் என்பது அவரது வெற்றியில் பங்கேற்றல் என்பதாக உள்ளது. இங்கு, வெற்றிபெற்ற அரசர், யுத்தத்தை வென்றபின்பு, தமது தோழர்களுடன் வெற்றிப்பிரவேசம் செய்தல் பற்றிய சித்தரிப்பு உள்ளது (2 கொரிந்தியர் 2:14ஐக் காணவும்).*

பின்பு இயேசு, "அவர்கள் பாத்திரவான்களானபடியால்" என்று கூடுதலாகக்கூறினார் (வசனம் 4ஆ). இந்தச் சொற்றொடர், "ஒருசிலர்" பூரணமானவர்களாய் இருந்தனர் என்று அர்த்தப்படுவதில்லை, ஏனென்றால், நாம் யாவருமே பாவிகளாய் இருக்கின்றோம் (ரோமர் 3:10, 23) மற்றும் நம்மில் எவரும் தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெறுவதற்குத் தகுதியானவர்களாய் இருப்பதில்லை (ஆதியாகமம் 32:10; லூக்கா

17:10ஐக் காணவும்).[34] இதற்கு மாறாக இயேசுவின் வார்த்தைகள், சோதிக்கப்பட்ட சூழலின்கீழ் இவர்கள் முன்வைத்திருந்த வீரமான முயற்சிகளைப் பாராட்டுதலாக இருந்தது. நம்மைச் சுற்றிலும் உள்ள யாவரும் - பிற கிறிஸ்தவர்களும்கூட - உண்மையற்றவர்களாகிவிடும்போது, நாம் உண்மையுள்ளவர்களாய் இருத்தல் என்பது சுலபமானதல்ல. உண்மையுள்ள சிலருக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்!

இந்த உலகத்தின் தரஅளவைகள் சீர்குலைகின்றபோது, "பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் ... மேன்மேலும் கேடுள்ளவர் களாவார்கள்'' (2 தீமோத்தேயு 3:13அ), பலர் தங்கள் கைகளை மேல்நோக்கித் தூக்கி வெளியேறிவிடுவார்கள் - ஆனால் விசுவாசம் நிறைந்தவர்களாய் உள்ள ஒருசிலர் எப்போதும் செயல்படுவதில் தொடர்ந்து நிலைத்திருப்பார்கள். சில இடங்களில் திருமணம் என்ற நிறுவன அமைப்பு நொறுங்கி, பாலியல் பாவம் பொதுவான செயலாகும்போது, "நான் ஏன் இதை முயற்சித்துப் பார்க்க வேண்டும்?" என்று பலர் தர்க்கம் செய்கின்றனர் - ஆனால் உண்மையுள்ள ஒருசிலர் எப்போதும், "நான் ஒரு கிறிஸ்தவராய் இருப்பதால் அதைச் செய்யவேண்டும்; அதனால்தான்'' என்று பதில் அளிக்கின்றனர். மாறுபாடும் மனதிருப்தியும் பூமியில் நிறைந்திருக்கும் போது, விசாலமான வழியில், மிகவும் பிரபலமான வழியில் பயணிப்பதைச் சுலபமானதாகப் பலர் கண்டறிகின்றனர் - ஆனால் உண்மையுள்ள ஒருசிலர் எப்போதுமே இடுக்கமான வழியில், தனிமையான வழியில் ஒப்புக்கொடுத்தவர்களாய்ப் பயணிக்கின்றனர் (மத்தேயு 7:13, 14). உண்மையுள்ள ஒருசிலருக்காகத் தேவனுக்கு நன்றி!

கர்த்தருடைய சபையின் சபைக்குழுமங்கள் உண்மையுள்ள ஒரு சிலரைத் தங்களுக்குக் கொண்டுள்ளன: இவர்கள் ஆராதனைக் கூட்டங்கள் யாவற்றிலும் தவறாது கலந்துகொள்பவர்களாக, தங்களின் பெரும் பான்மையான பணத்தைக் கொடுப்பவர்களாக, ஊழியத்தில் பெரும் பான்மையானவற்றைச் செய்பவர்களாக, ஞானஸ்நானம் பெற்ற மற்றும் திரும்பக் கட்டுவிக்கப்பட்ட பெரும்பான்மையானவர்களைச் சென்று அடைபவர்களாக எண்ணப்படுகின்றனர். சிலவேளைகளில் பிரசங்கி யார்கள், தேவனுடைய செய்தியால் செயல்விளைவுக்கு உட்படாதவர் களைக் கண்டு ஊக்கம் இழக்கின்றனர்; அவர்கள், ''நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்களாக" (மத்தேயு 5:6) இருக்கும் ஒரு சிலரைக் கவனிப்பது மேன்மையாக இருக்கும். உண்மையுள்ள ஒருசிலருக்காகத் தேவனுக்கு நன்றி!

உறுதியளிக்கும் ஒரு அறிவிப்பு (3:5, 6)

சர்தையில் இருந்த பெரும்பான்மையானவர்களுக்குச் சூழ்நிலை நம்பிக்கையற்றதாயிருந்தது என்று இயேசு கூறினாரா? இல்லவே இல்லை. அவர்கள் "விழித்துக்கொண்டு மனந்திரும்பினால்" (3:2, 3), உண்மையுள்ள ஒருசிலருக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அதே ஆசீர்வாதங்களைப் பெறமுடியும்: "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண் வஸ்திரம் தரிப்பிக்கப்படும், ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை

நான் கிறுக்கிப்போடாமல், என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" (வசனம் 5).

ஜெயங்கொள்கின்றவர்களுக்கு இயேசு, ஆவிக்குரிய வஸ்திரத்தை (உடையை) வாக்குத்தத்தம் செய்தார்: "ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்" (வசனம் 5அ).[35] இவை, உண்மையுள்ள ஒருசிலருக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்ட அதே வஸ்திரங்களாகவே உள்ளன (3:4) - இவைகள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தினால் தோய்க்கப்பட்டவைகளாக உள்ளன (7:14).[36]

ஜெயங்கொள்கின்றவர்களுக்கு இயேசு, குறிப்பிடத்தக்க தொடர் செயல் ஒன்றை வாக்குத்தத்தம் செய்தார்: "ஜீவபுஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கப்போடாமல்" (வசனம் 5ஆ). ஜீவபுத்தகம் என்பது தேவனுக்கு உண்மையுள்ளவர்களைப் பற்றிய பதிவேடாக உள்ளது (சங்கீதம் 69:28; மல்கியா 3:16; எபிரெயர் 12:23) மற்றும் இது வேதவசனங்கள் முழுவதிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்ரவேல் மக்களுக்காக மோசே தேவனிடத்தில் பரிந்துபேசியபோது அவர், "ஆகிலும், தேவரீர் அவர்கள் பாவத்தை மன்னித்தருளுவீரானால் மன்னித்தருளும். இல்லாவிட்டால் நீர் எழுதின உம்முடைய புஸ்தகத்திலிருந்து என் பேரைக் கிறுக்கிப்போடும்" என்றான். அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி: "எனக்கு விரோதமாகப் பாவம் செய்தவன் எவனோ, அவன் பேரை என் புஸ்தகத்திலிருந்து கிறுக்கிப் போடுவேன் ..." என்றார் (யாத்திராகமம் 32:32, 33). பிரசங்கப் பயணத்தை முடித்து விட்டு எழுபதுபேர் திரும்பி வந்தபோது, இயேசு அவர்களிடத்தில் "ஆகிலும் ஆவிகள் உங்களுக்குக் கீழ்ப்படிகிறதற்காக நீங்கள் சந்தோஷப்படாமல், உங்கள் நாமங்கள் பரலோகத்தில் எழுதியிருக்கிறதற்காகச் சந்தோஷப்படுங்கள் என்றார்" (லூக்கா 10:20). பிலிப்பியர் 4:3ல் பவுல் "... என் உடன்வேலையாட்களோடுங்கூட சுவிசேஷ விஷயத்தில் என்னோடேகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது" என்று கூறினார். வெளிப்படுத்தின விசேஷம் 20ன் மாபெரும் நியாயத்தீர்ப்பின் காட்சியில் நாம் பின்வருமாறு வாசிக்கின்றோம்:

> *மரித்தோராகிய சிறியோரையும் பெரியோரையும் தேவனுக்கு முன்பாக நிற்கக்கண்டேன்; அப்பொழுது புஸ்தகங்கள் திறக்கப்பட்டன; ஜீவபுஸ்தகம் என்னும் வேறொரு புஸ்தகமும் திறக்கப்பட்டது; அப்பொழுது அந்தப் புஸ்தகங்களில் எழுதப்பட்டவைகளின்படியே மரித்தோர் தங்கள் தங்கள் கிரியைகளுக்குத்தக்கதாக நியாயத்தீர்ப்படைந்தார்கள். சமுத்திரம் தன்னிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தது; மரணமும் பாதாளமும் தங்களிலுள்ள மரித்தோரை ஒப்புவித்தன. யாவரும் தங்கள் தங்கள் கிரியைகளின்படியே நியாயத்தீர்ப்படைந்தார்கள். அப்பொழுது மரணமும் பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம். ஜீவபுஸ்தகத்திலே எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக்கடலிலே தள்ளப்பட்டான் (20:12-15).*

> "ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம்" பரலோகத்தில் பிரவேசிக்கக் கூடியவர்களாய் இருக்கின்றனர் (21:27ஆ).[37]

நாம் இரட்சிக்கப்படும்போது (மாற்கு 16:16), நமது பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்படுகின்றன. இருப்பினும், நாம் கர்த்தருக்கு உண்மையுள்ளவர்களாக நிலைத்திராவிட்டால், நமது பெயர்கள் கிறுக்கிப்போடப்படும் என்பதை நாம் புரிந்துக்கொண்டிருக்க வேண்டும்! (யாக்கோபு 5:19, 20ஐக் காணவும்.)[38]

கடைசியாக இயேசு, ஜெயங்கொள்கின்றவர்களுக்கு ஒரு விசேஷித்த அறிக்கையை வாக்குத்தத்தம் செய்தார்: "என் பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன்" (வசனம் 5இ). இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது, பின்வரும் வாக்குத்தத்தத்தை ஏற்படுத்தினார்:

> மனுஷர் முன்பாக என்னை அறிக்கை பண்ணுகிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கைபண்ணுவேன். மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன் (மத்தேயு 10:32, 33).[39]

நாம் இயேசுவின்மீது கொண்ட விசுவாசத்தை அறிக்கையிட்டு ஞானஸ்நானம் பெறுகின்றபோது, அவர் நமது பெயர்களை அறிக்கை யிடுகின்றார் (நடபடிகள் 8:37-39; ரோமர் 10:9, 10), ஆனால் அது அவரது வாக்குத்தத்தத்தை தீர்ந்துபோகச் செய்துவிடுவதில்லை. அவரது நாமத்தை அறிக்கையிடவோ அல்லது மறுதலிக்கவோ முடியாமல் ஒரு நாள் கடந்து செல்லுதல் என்பது மிகவும் கடினமானதாக உள்ளது. இது விசேஷமாக, இயேசுவை மறுதலித்து பேரரசின் கர்த்தத்துவத்தை அறிக்கையிடும்படி தொடர்ந்து கட்டாயப்படுத்தப்பட்டுக்கொண்டிருந்த முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, உண்மையாக இருந்தது. அவர்கள் இயேசுவைத் தைரியமாகத் தொடர்ந்து அறிக்கையிட்டால், அவர் பரலோகத்தில் அவர்களின் பெயர்களைத் தொடர்ந்து அறிக்கையிடுவார் என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று இயேசு விரும்பினார்!

"ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (வசனம் 6).

முடிவுரை

சர்தையில் இருந்த கிறிஸ்தவர்கள் கர்த்தரின் கண்டனத்தை எவ்வாறு ஏற்றுக்கொண்டனர் என்பது நமக்குத் தெரியவில்லை. அவர்களின் மனச்சாட்சிகள் தொடப்பட்டிருக்கும் மற்றும் அவர்களின் வாழ்வு செயல் விளைவுக்கு உட்பட்டிருக்கும் என்று நாம் நம்புகின்றோம். சர்தையில் இருந்த சபைக்குழுமம், குறைந்தபட்சம் அளவில் வளர்ந்தது என்று ஆதாரம்

கருத்துத் தெரிவிக்கிறது; மனதை ஈர்க்கக்கூடிய ஒரு சபைக்கட்டிடம் கட்டியெழுப்பப்பட்டது என்றும் பிற்கால ஆண்டுகளில் தனிச்சிறந்த நடத்துநர்கள் அங்கிருந்தனர் என்றும் வரலாறு கூறுகிறது. இருப்பினும் இன்றைய நாட்களில் - அந்த நகரம் மற்றும் அங்கிருந்த சபை ஆகியவற்றின் - கடந்தகாலத்தின் மகிமை கடந்து சென்றுவிட்டது. அந்த நகரத்தில் சிதிலங்களே எஞ்சியுள்ளன,[40] சபைக்குழுமம் இருந்ததற்கான அடையாளம் இல்லை.

சர்தையில் இருந்த சபை முழுவதற்கும் என்னவாயிற்று என்பதை நாம் அறியாதிருப்பினும், உண்மையாயிருந்த ஒருசிலருக்கு என்னவாயிற்று என்பதை நாம் அறிகின்றோம்: அவர்கள் இயேசுவுடன் “வெண்வஸ்திரம்” தரித்து நடக்கின்றனர் (3:4)! “உண்மையாயிருந்த ஒருசிலரில்” ஒருவராக இருத்தல் என்பதே இந்தப்பாடத்தின் அறைகூவலாக இருக்கிறது. ஃபிராங்க் பேக் அவர்கள், டெக்ஸாஸில் இருந்த ஒரு சிறு சபைக்குழுமத்திற்கு ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று பிரசங்கிக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டார். ஆராதனைக் கூட்டத்தின் முடிவில், கலவரம் அடைந்தவராகக் காணப்பட்ட வயது முதிர்ந்த ஒரு பெண் உறுப்பினர் அவரை அணுகி, “சகோதரர் பேக் அவர்களே, நாங்கள் செத்தவர்களாய் இருக்கின்றோம் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? கடந்த ஞாயிறு அன்று பிரசங்கியார், இந்த சபை செத்துப்போய் இருப்பதாகக் கூறினார்” என்றார்கள். சகோதரர் பேக் அவர்கள் பதில் அளிக்கக்கூடுவதற்கு முன்பு, அந்தப் பெண்மணி தமது பாதங்களைத் தரையில் அழுத்தி மிதித்து, “நாங்கள் செத்துப்போனவர்கள் அல்ல! நான் உயிருடன் இருக்கும் வரையிலும் நாங்கள் செத்துப்போன வர்களாய் இருக்க மாட்டோம்!” என்று அறிவித்தார்கள். அந்த சபைக்குழுமத்தின் ஆவிக்குரிய நிலை என்னவாக இருந்தது என்று எனக்குத் தெரியாது, ஆனால் குறைந்த பட்சம் அதன் ஒரு உறுப்பினராவது, அணைக்கப்பட முடியாத வாழ்வின் சுடர் ஒன்றைக் கொண்டிருந்தார். நீங்கள் ஊழியம் செய்து ஆராதிக்கின்ற சபையானது உயிருடன் உள்ளதாகவோ அல்லது செத்துப்போனதாகவா, எவ்வாறு வகைப்படுத்தப் படுகிறது என்று எனக்கு தெரியாது, ஆனால் நீங்கள் கர்த்தருடைய ஊழியத்தில் நிலைத்திருப்பது என்று தீர்மானித்துக் கொள்ளுங்கள். இயேசுவுடன் நீங்கள் ஒருநாளில், வெண்வஸ்திரம் தரித்து நடக்கும்படி உங்கள் வஸ்திரங்களைத் தூய்மையாகக் காத்துக்கொள்ளுங்கள்![41]

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தக் கடிதத்தைப் பற்றிய பிரசங்கத் தலைப்புகள் பெரும்பாலும், சபைக்குழுமத்தின் செத்த தன்மையை வலியுறுத்துகின்றன: “கல்லறையில் இருந்த சபை,” “கல்லறைக் கல்லின் எல்லைப்பகுதியில் இருந்த சபை,” “கோபுரம் கொண்ட பிணம் வைக்குமிடம்,” “செத்தவர்கள் அல்லது உயிருள்ளவர்கள்,” “பெலனற்ற சபை,” “உயிருடன் இருந்த செத்தவர்களின்

சபை." மற்ற தலைப்புகள், தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாமல் இருந்த ஒருசிலரை வலியுறுத்துகின்றன: "உண்மையுள்ள ஒருசிலரைக் கொண்டிருந்த உண்மையற்ற சபை," "ஒருசிலர், மேட்டிமையுள்ளவர்கள், மற்றும் பலப்படுத்துகின்ற ஒருவர்," "உண்மையுள்ள ஒருசிலரில் ஒருவராய் இருங்கள்," "உண்மையுள்ள ஒருசிலருக்காகத் தேவனுக்கு நன்றி!" சாத்தியமான மற்ற சில தலைப்புகள் பின்வருமாறு: "கடந்தகால மாட்சிமையும் நிகழ்காலச் சிதைவும்" மற்றும் "திருடனைப்போல."

குறிப்புகள்

[1]*சர்தை நகரம் தியத்தீராவின் தெற்கு - தென்கிழக்குப் பகுதியில் இருந்தது. இந்தப் புத்தகத்தில் உள்ள "ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும்" என்ற வரைபடத்தைக் காணவும்.* [2]*இன்னொரு சபை லவோதிக்கேயாவில் இருந்தது.* [3]*சர்தையில் சபை எப்போது நிலைநாட்டப்பட்டது என்று நாம் அறிவதில்லை. இது பெரும்பாலும் பவுல் எபேசுவில் ஊழியம் செய்தபோது நிலைநாட்டப் பட்டிருக்கலாம் (நடபடிகள் 19:1, 8-10). சுவிசேஷம் சர்தைக்குக் குறிப்பிடத்தக்க வகையில் வந்திருந்தது என்று வசனம் 3 சுட்டிக்காண்பிக்கலாம்.* [4]*கி.மு. 546ல் இறந்துபோன குரோசஸ் என்பவர் லிடியாவின் கடைசி அரசராயிருந்தார்.* [5]*"குரோசஸைப் போல செல்வந்தர்" என்ற சொல்விளக்கம் இன்றைக்கும் பயன்படுத்தப் படுகிறது.* [6]*தரஅளவுப் படுத்தப்பட்ட நாணயங்கள் சர்தையில் இருந்துதான் முதன் முதலில் வெளியாயின, இது அரசு முத்திரையினால் எடை உத்தரவாதப்படுத்தப் பட்டதாக இருந்தது.* [7]*புறஜாதியாரின் தெய்வீகக்குரல்கள் என்பவை, அவைகள் தவறானவை என்று நிரூபிக்கப்படுவதில் இருந்து பாதுகாப்பதற்காக, "ஏவுதல் பெற்ற" அறிவிப்புகள் என்று அழைக்கப்பட்டவைகள் வேண்டுமென்றே தெளிவற்றவைகளாக இருந்தன.* [8]*இது சுமார் ஒரு நூறு ஆண்டுகளுக்குப் பின்பு மீண்டும் நடைபெற்றது.* [9]William Barclay, *Letters to the Seven Churches* (Philadelphia: Westminster Press, 1957), 84. [10]*எபேசுவில் இருந்த சபைக்கு எழுதிய கடிதத்தில் இயேசு, தம்மை ஏழு நட்சத்திரங்களை ஏந்திக்கொண்டிருப்பவராகவும் அடையாளப்படுத்தினார், ஆனால் இதை அவர் ஏழு சபைகளின் மத்தியில் உலாவி, அவற்றை ஆய்வுசெய்தல் என்ற மனக்கலக்கம் ஏற்படுத்தும் சத்தியத்துடன் பிணைத்தார் (2:1). 3:1ல் உள்ள முழுவிவரிப்பும் ஊக்கம் அளிப்பதாக உள்ளது.*

[11]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள 1:4க்கான குறிப்புகளைக் காணவும்.* [12]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள 1:16க்கான குறிப்புகளைக் காணவும்.* [13]*இந்த வார்த்தைகளை இயேசு, பிலதெல்பியாவிலும் லவோதிக்கேயாவிலும் இருந்த சபைகளுக்கு எழுதிய கடிதங்களில் மீண்டும் உரைத்தார் (3:8, 15).* [14]*உங்களைப் பற்றி மக்கள் என்ன நினைக்கின்றார் என்பது நற்பெயராக இருக்கையில், உண்மையிலேயே நீங்கள் யார் என்பது பண்பு என்பதாக உள்ளது என்று யாரோ ஒருவர் கூறினார்.* [15]*உடல்ரீதியான மரணம் என்பது உடல் மற்றும் ஆவி ஆகியவை பிரிதல் என்பதாக உள்ளது (யாக்கோபு 2:26ஐக் காணவும்).* [16]*"என் தேவன்" என்று இயேசுவால் பேசப்பட்ட சொற்றொடர், அப்போஸ்தலரான யோவானின் எழுத்துக்களில் மாத்திரம் காணப்படுகின்றன, இது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை இவர்தாம் எழுதினார் என்பதற்கான இன்னொரு ஆதாரமாக உள்ளது.* [17]KJV *வேதாகமத்தில்*

"perfect" என்றுள்ளது. இந்த கிரேக்க வார்த்தை, "பூரணப்பட்டிருத்தல்" அல்லது "முழுமையாயிருத்தல்" என்று அர்த்தப்படுகிறது. [18]நாம் தொடங்குபவற்றை முடிக்க வேண்டியதன் அவசியத்திற்கு இது திறவுகோல் வசனப்பகுதியாக உள்ளது. உலகத்தின் சிலபகுதிகளில், நீங்கள் பின்வரும் வார்த்தை விளையாட்டை விரும்பலாம்: They had *initiative,* but they lacked *finish-ative.* [19]"வஸ்திரம்" என்பது அவர்களின் வாழ்வைக் குறிக்கிறது. இதேபோன்ற பேச்சு உருவகங்கள் வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிறது (கலாத்தியர் 3:27; எபேசியர் 4:22, 24; வெளிப்படுத்தின விசேஷம் 7:9 ஆகியவற்றில் உள்ளதுபோல்.) [20]KJV வேதாகமத்தில் "defiled" என்றுள்ளது, இது "soiled" என்பதை விடப் பலமான வார்த்தையாக உள்ளது மற்றும் இது இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தைக்கான விளக்கத்தை இன்னும் அதிகமாய்க் காத்துக்கொள்கிறது. சர்தை நகரம், புறதெய்வ வணக்க எழுத்தாளர்களின் எழுத்துக்களின்படி பார்க்கையிலும் கூட, ஒழுக்கவீனத்திற்கு அறியப்பட்டதாக இருந்தது.

[21]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 47. [22]யூதா 23ஐக் காணவும். [23]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 577. [24]"CPR" என்பது "cardiopulmonary resuscitation" என்பதன் சுருக்கக் குறியீடாகும், இது இருதயம் செயல்படுதல் நின்றுபோன, சுவாசிக்காத ஒரு மனிதருக்கு செயற்கையான இரத்த ஓட்டம் மற்றும் சுவாசம் ஆகியவற்றை அளிக்கிற ஒரு முதலுதவித் தொழில் நுட்பமாகும். CPR என்ற இந்த சிகிச்சை முறைமை தக்கவேளையில் தொடங்கப்பட்டால், இருதயம் நின்றுபோன மனிதர்களில் இருபது முதல் ஐம்பது சதவிகிதத்தினர் வரையுள்ள நபர்களின் இருதயங்கள் உயிர்ப்பிக்கப்பட முடியும். [25]"சாகிறதற்கேதுவாயிருக்கிறவைகளை" என்பது சபைக்குழுமத்தில் இன்னமும் உயிருடன் இருக்கும் எதையாவது - அவர்களின் இருதயங்களில் ஆவிக்குரிய வாழ்வின் சுடர்களாக எஞ்சியுள்ளவைகள், சத்தியம்பற்றிய அவர்களின் அறிவு, மற்றும் சபைக்குழுமத்தில் எஞ்சியுள்ளவர்களை ஊக்குவிக்கக்கூடிய வகையில் இன்னும் உண்மையுடன் இருப்பவர்களை - குறிப்பதாக உள்ளது. [26]"விழித்துக்கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்கச் சொற்றொடரானது நிகழ்கால வினைச்சொல்லாக உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது: அவர்கள் "விழித்துக் கொள்ளுதலுடன்" தொடர்ந்து கவனம் நிறைந்தவர்களாகவும் இருக்க வேண்டியது அவசியமாயிருந்தது. "நித்தியத்திற்கும் கவனம் நிறைந்தவர்களாய் இருத்தல் என்பதே சுயாதீனத்திற்கான விலையாக உள்ளது" என்று யாரோ ஒருவர் கூறினார். [27]இந்த வசனத்தை 2:5உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும். சர்தை மற்றும் எபேசு நகரங்களில் இருந்த சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் பல ஒற்றுமைகள் உள்ளன. [28]"நினைவுகூர்ந்து" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது வெறுமனே நினைத்துப் பார்த்தலை மாத்திரமல்ல ஆனால் அதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுதலையும் அர்த்தப்படுத்துகிறது. [29]"கைக்கொண்டு" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது நிகழ்கால வினைச்சொல்லாக உள்ளது, இது அவர்கள் இவ்விஷயங்களைத் தொடர்ந்து கைக்கொள்ள வேண்டியது அவசியம் என்பதை வலியுறுத்துகிறது. [30]வேறொரு இடத்தில், திருடனைப்போல் எதிர்பாராத நேரத்தில் வருதல் என்பதற்கான விவரிப்பானது இரண்டாம் வருகையின் காலம் பற்றி எந்த மனிதரும் அறிந்திருப்பதில்லை என்பதை வலியுறுத்துவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (மத்தேயு 24:42-44; லூக்கா 12:39, 40; 1 தெசலோனிக்கேயர் 5:2, 4; 2 பேதுரு 3:10). வெளிப்படுத்தின விசேஷம் 3:3ல் "இது மனந்திரும்பாத பாவிகளின்மீது நியாயத்தீர்ப்பு கொடுப்பதற்கான

வரைமுறைக்குட்பட்ட வருகையாக உள்ளது என்பது தெளிவு" (Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987], 76).

[31] *முந்திய கடிதங்களில், இயேசு வரும்போது என்ன செய்வார் என்பதை அவர் கூறியிருந்தார் (2:5, 16). சர்தையில் மனந்திரும்பாதவர்களைப் பற்றி அவர் விபரம் எதுவும் கொடுக்கவில்லை, ஆனால் "அவர்களின் முடிவு விளக்கப்படுத்தப்படாது விடப்பட்டபடியால் பயங்கரத்திற்குரியது என்பதைவிடக் குறைவானதாக இருப்பதில்லை"* (Morris, *76).* [32] *வெண்மை என்பது தூய்மை, கொண்டாட்டம் மற்றும் வெற்றி ஆகியவற்றுடன் தொடர்புடையது. உண்மையுள்ள ஒருசிலர் ஏற்கனவே தூய்மையாக இருக்கின்றனர் என்பதால், வெற்றிப்பிரவேசத்தின் விவரிப்பில் நான், கொண்டாட்டத்தையும் வெற்றியையும் பற்றிய கருத்துக்களை இணைத்துள்ளேன்.* [33] *யாரேனும் ஒருவருடன் நடத்தல் என்பது அவருடன் இணைந்திருத்தல், ஐக்கியமாயிருத்தல் மற்றும் கருத்து ஒருமைப்பட்டிருத்தல் ஆகியவற்றைக் குறிக்கிறது (ஆமோஸ் 3:3; ஆதியாகமம் 5:22, 24; 6:9 ஆகிய வசனங்களைக் காணவும்).* [34] *"தேவனுடைய வசனம், மனிதனுக்குக் குறிப்பிட்ட சில தகுதிகளை உரித்தாக்குகிறது, இது ஒருக்காலும் முற்றானதாக இருப்பதில்லை, ஆனால் எப்போதும் சார்புடையதாக இருக்கிறது"* (James M. Tolle, *The Seven Churches of Asia* [Pasadena, Tex.: Haun Publishing Co., 1968], 62). *சகோதரர் டோலி அவர்களின் கூற்று சரியானதே என்பதற்கு ஆதாரமாக, வெளிப்படுத்தின விசேஷம் 5:2-4ஐக் காணவும்: இந்த அண்டம் முழுவதிலும் படைக்கப்பட்ட எந்த உயிரினமும் (மனிதனும்?) உண்மையில் "பாத்திரராக" இருக்கவில்லை.* [35] *சர்தை நகரமானது தனது பளிச்சென்ற வண்ணம் கொண்ட உடைகளுக்கென்று நன்கு அறியப்பட்டிருந்தது. கம்பளிக்குச் சாயமிடுதல் என்ற தொழிற்கலை அந்த நகரத்தில் தோற்றுவிக்கப் பட்டிருக்கலாம்.* [36] *இந்தப் புத்தகத்தின் பிற்பகுதியில் உள்ள "புயலுக்கு மேலாக எழும்பி நிற்குதல்" என்ற பாடத்தில் 7:14க்கான குறிப்புகளைக் காணவும்.* [37] *வெளிப்படுத்தின விசேஷம் 13:8; 17:8 ஆகிய வசனங்களைக் காணவும்.* [38] *இது விசுவாசவிலக்கம் பற்றிய வல்லமை நிறைந்த வசனப்பகுதியாக உள்ளது. கால்வினியத்தை ஏற்றுக்கொண்டுள்ளவர்கள் இவ்வசனப்பகுதியில் இடறல் அடைகின்றனர்.* [39] *லூக்கா 12:8, 9ஐக் காணவும்.* [40] *பழங்கால ஜெப ஆலயம், உடற்பயிற்சிக்கூடம் மற்றும் கோவில் உட்பட, கீழ்நகரத்தின் மனதை ஈர்க்கும் சிதிலங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ளன.*

[41] *ஆவிக்குரியவை பற்றிய இருப்புக்கணக்கைச் சோதிக்கும்படி, கேட்பவர்களுக்கு அறைகூவல் விடுவதற்கு இது ஒரு மிகச் சிறந்த பாடமாகும். சபைக்குழுமம் முழுவதற்குமான வகையில் இயேசுவின் கடிந்துகொள்ளுதல் அவர்களுக்கு நடைமுறைப் படுத்தப்படக்கூடியது என்று அவர்கள் கண்டறிந்தால் (3:1), இயேசுவின் அறிவுறுத்துதல்களுக்குக் கீழ்ப்படியும்படி (3:2, 3) அவர்களை ஊக்குவியுங்கள். எல்லாரும் ஜெயங்கொள்பவர்களாய் இருக்கும்படி அவர்களுக்கு அறைகூவல் விடுங்கள் (3:5).*

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *பாராட்டுதலைப் பெறாத இரண்டு சபைகள் எவை?*
2. *சர்தை நகரத்தின் எந்த மூன்று குணங்கள் சர்தையில் இருந்த சபைக்கும் உண்மையாயிருந்தன?*

3. "ஏழு ஆவிகள்" என்பது என்ன (அல்லது யார்)?
4. சர்தையில் இருந்த சபை "உயிருள்ளது என்று பெயர்கொண்டிருந்தது" என்று இயேசு கூறியபோது அவர் அர்த்தப்படுத்தியது என்ன?
5. அவர்கள் எந்தக் கருத்தில் "செத்தவர்களாய்" இருந்தனர்?
6. அவர்களின் ஆவிக்குரிய நிலை பற்றிய நான்கு அறிகுறிகள் இந்தப் பாடத்தில் தரப்பட்டுள்ளன. அவற்றைப் பட்டியலிடவும்.
7. "உன் கிரியைகள் தேவனுக்குமுன் நிறைவுள்ளவைகளாக நான் காணவில்லை" என்பதன் அர்த்தம் என்ன? நீங்கள் ஆராதிக்கும் சபையில் தொடங்கப்பட்டு நிறைவடையாத திட்டங்கள் எவற்றையாவது நீங்கள் நினைத்துப் பார்க்க முடிகிறதா? நீங்கள் நல்ல செயல்கள் எதையாவது தொடங்கி அவற்றை முழுமையாகச் செய்து முடிக்காதிருக்கின்றீர்களா?
8. துன்புறுத்தப்படுதல் எதுவும் இந்தப் பாடத்தில் குறிப்பிடப்படாதது ஏன் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
9. உயிர்ப்பிக்கப்படுதலுக்கு இந்த சபை என்ன செய்ய வேண்டியிருந்தது?
10. "வஸ்திரங்களை அசுசிப்படுத்துதல்" என்று இயேசு குறிப்பிட்டபோது, அவர் அர்த்தப்படுத்தியது என்ன? கிறிஸ்தவர் ஒருவர் இந்த உலகத்தைக் காட்டிலும் மாறுபட்ட வகையில் வாழவேண்டுமா?
11. நீங்கள் ஆராதிக்கின்ற சபையானது தனது "உண்மையுள்ள ஒருசிலரை" கொண்டுள்ளதா? அவர்களில் நீங்களும் ஒருவராக இருக்கின்றீர்களா?
12. செயலற்றதன்மை மற்றும் மனதிருப்தி ஆகியவற்றை வெற்றிகொள்கின்றவர்களுக்கு இயேசு எதை வாக்குத்தத்தம் செய்தார்?
13. "ஜீவபுத்தகம்" என்றால் என்ன? உங்கள் பெயர் ஜீவபுத்தகத்தில் இருக்க வேண்டியது எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்ததாக உள்ளது? உங்கள் பெயர் அந்தப்பதிவேட்டில் எழுதப்படுவதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதில் உங்கள் பெயரைத் தொடர்ந்து காத்துக்கொள்வதற்கு நீங்கள் என்ன செய்ய வேண்டும்?



தமது வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார் *(1:12-3:22)*

16

தன்னிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தன்னால் முடிந்தவற்றைச் செய்திருந்த சபை

[3:7-13]

இயேசு, சபைகளில் மிகச்சிறந்தவற்றையும் மிக மோசமானவற்றையும் கடைசிக்காக விட்டு வைத்திருந்தார். இந்த எடுத்துரைப்பில் நாம், மிகச்சிறந்த சபையாகிய பிலதெல்பியாவைப் பற்றிப் படிப்போம்.

பிலதெல்பியா நகரம் சர்தையில் இருந்து தெற்கு - தென்கிழக்கில் இருந்தது.[1] இது கடற்கரையில் இருந்த மற்ற நகரங்களைப்போல் அவ்வளவு பெரியதாகவோ அல்லது வளமானதாகவோ அல்லது நன்கு அறியப்பட்டதாகவோ இருந்ததில்லை, ஆனால் இது இன்னமும் நினைவுகூரத்தக்க பல பண்புகளைக் கொண்டிருந்தது. இதன் பெயரானது இதைத் தோற்றுவித்தவராகிய இரண்டாம் அட்டாலஸ் பிலடெல்ஃபஸ் என்ற பெர்கமுவின் அரசரைக் கனப்படுத்திற்று. “Philadelphus” என்ற வார்த்தையானது, “அன்பு” (*philia*) என்பதற்கான கிரேக்க வார்த்தையையும் “சகோதரன்” (*adelphos*) என்பதற்கான வார்த்தையையும் இணைத்துப் பெறப்பட்டதாக உள்ளது; இவ்விதமாக இது, “சகோதரனின் அன்பு” அல்லது “சகோதர அன்பு” என்று அர்த்தப்படுகிறது.[2] அந்தப் பட்டப்பெயர், அட்டாலஸ் அரசர் தமது மூத்த சகோதரரான யூமெனெஸ் (Eumenes) என்பவர்மீது கொண்டிருந்த பற்றுறுதியின் காரணமாக அவர் (அட்டாலஸ்)மீது பொழியப்பட்டிருந்தது.

மீசியா, லிடியா மற்றும் பிரிகியாவுக்குச் செல்லும் வர்த்தகச் சாலைகளின்மீது இருந்த இந்த பிலதெல்பியா நகரம் “கிழக்கிற்கான நுழைவாயில்” என்று அறியப்பட்டிருந்தது. இது - லிடியாவிலும் பிரிகியாவிலும் கிரேக்க மொழியையும் கிரேக்க கலாச்சாரத்தையும் பரப்புவதற்கென்று - ஒரு பணி நகரமாக அட்டாலஸினால் நிலைநாட்டப்பட்டிருந்தது. இது ஒரு பெரிய நகராயிருந்ததில்லை, ஆனால் இது ஒரு வளமிக்க பகுதியில் இருந்தது, மற்றும் இது தனது திராட்சரச உற்பத்திக்காக நன்கு அறியப்பட்டிருந்தது. இதன் கோவில்கள் மற்றும் பொதுக்கட்டிடங்

களின் எண்ணிக்கை மற்றும் பெருஞ்சிறப்பு ஆகியவற்றின் காரணமாக இது சிலவேளைகளில் "சிறிய ஏதென்ஸ் (அத்தேனே)" என்று குறிப்பிடப்பட்டது.

இந்த நகரத்தின் புதைபொருள் ஆராய்ச்சியில் கிடைத்த அமைப்பு ஒன்று கவனிக்கப்பட வேண்டும்: இது ஒரு தவறான (பூமிக்) கோட்டின்மீது கட்டப்பட்டிருந்தது எனவே இது பூமியதிர்ச்சிகளில் தனக்குரிய பங்கைக் காட்டிலும் அதிகமானவைகளைப் பட்டு அனுபவித்து இருந்தது.[3]

> கி.பி. 17ல் ஏற்பட்ட ஒரு பயங்கரமான பூமியதிர்ச்சியினால், ... (சர்தை உட்பட) இந்தப் பகுதியில் இருந்த மற்ற நகரங்களுடன், பிலதெல்பியா நகரமும் அழிக்கப்பட்டது ... அந்தப்பகுதியை அச்சுறுத்திய தொடர்ந்த நிலநடுக்கங்களினால் இதன் மக்கள் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து பயத்திலேயே இருந்தனர், இந்த பயத்தின் காரணமாக, மக்களில் பெரும்பாலானவர்கள் நகரத்திற்கு வெளியில் பக்கத்தில் இருந்த கிராமப்பகுதியில் குடிசைகளில் வாழ்ந்தனர்.[4]

கர்த்தருடைய மக்களின் - கடந்த காலத்தில் கடுமையாக சோதிக்கப்பட்டதும் எதிர்காலத்தில் இன்னும் மோசமானவற்றை எதிர்கொள்ள இருந்ததுமான - சபைக்குழுமம் ஒன்று அந்த நகரத்தில் கூடி வந்துகொண்டிருந்தது என்பதுதான், கர்த்தருக்கு அந்த நகரத்தைப் பற்றி முக்கியமான விஷயமாக இருந்தது.[5] இயேசுவின் கண்டனமற்ற இந்தக் கடிதம், அவருக்கு விலையேறப்பெற்றதாக இருந்த இந்த சிறு குழுவை ஆறுதல்படுத்துவதற்காக எழுதப்பட்டது.

அவரது நபர்த்துவத்தின் நிமித்தம் ஆறுதல் (3:7)

இதன் உறுப்பினர்களுக்கு இயேசு, முதலில் தமது அடையாளத்தை நினைவூட்டியதன் மூலம் ஆறுதல் படுத்தினார்: "பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும்,[6] ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது" (வசனம் 7). ("தமது வலதுகரத்தில் ஏழு நட்சத்திரங்களை ஏந்திக் கொண்டிருந்தார்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

துன்புறுத்துபவர்கள் வெளிப்படுத்தப்படுவார்கள்

இயேசு தம்மை, "பரிசுத்தமுள்ளவர்" என்று அடையாளப்படுத்தினார். "பரிசுத்தமுள்ளவர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "பரிசுத்தமுள்ள [ஒரு]வர்" என்று அர்த்தப்படுகிறது; இதன் தொடக்ககாலச் சொற்றொடரானது தேவனுக்கென்று ஒதுக்கி வைக்கப்பட்டதாக இருந்தது (ஏசாயா 40:25; ஆபகூக் 3:3; வெளிப்படுத்தின விசேஷம் 6:10). இவ்விதமாக இயேசு, தமது தெய்வீகத்தை உறுதிப்படுத்தினார் - ஆனால் அதற்கும் அதிகமானதை அவர் செய்தார். பரிசுத்தத்தின் தேவன் என்ற வகையில், அவர் பாவத்தைச் சகித்துக் கொள்ள முடியாது, அதைச் சகித்துக்கொள்ள

மாட்டார். இந்த விவரிப்பு, துன்மார்க்கர், அதிலும் குறிப்பாகக் கிறிஸ்தவர்களைத் துன்புறுத்துபவர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்பதற்கு உத்தரவாதமாக இருந்தது.

அடுத்ததாக அவர், "சத்தியமுள்ளவர்" (நேரடியான அர்த்தத்தில், "சத்தியமுள்ள[ஒரு]வர்") என்று தம்மைக் குறிப்பிட்டார். பிலதெல்பியா நகரத்தில் பொய்க்கடவுள்களும் பொய்யான யூதர்களும்கூட நிறைந்திருந்தனர் (3:9), ஆனால் இயேசு உண்மையானவராகவும் நம்பத்தக்கவராகவும் இருந்தார்.

இதுபோன்ற பண்புகள், துன்புறுத்தப்பட்டுக் கொண்டிருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆறுதலாய் இருந்தனவா? அதிகாரம் 6ல், வேதசாட்சியாக மரித்தவர்கள் கர்த்தரிடத்தில் வேண்டுதல் எழுப்பியபோது, அவர்கள் அவரை "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள(வர்)" என்று குறிப்பிட்டனர் (6:10): அவர் பரிசுத்தமுள்ளவராக இருப்பதால், பாவத்தை நியாயந்தீர்ப்பார் என்று அவர்கள் அறிந்திருந்தனர். அவர் சத்தியமுள்ளவராக இருப்பதால், தமது மக்களைத் தற்காப்பார் என்று அவர்கள் அறிந்திருந்தனர்.

அதிகாரம் செயல்படுத்தப்படும்

இயேசு, "தாவீதின் திறவுகோலை உடையவரும்" என்று தம்மைப் பற்றி எடுத்துரைத்தார் (ஏசாயா 22:15-25ஐக் காணவும்).[7] ஒரு "திறவுகோலை" கொண்டிருத்தல் என்பது ஒருவர் அதிகாரத்தைக் கொண்டிருத்தலை,[8] அதிலும் குறிப்பாக, அனுமதியை அளித்தல் அல்லது மறுத்தல் என்பதற்கான அதிகாரத்தைக் கொண்டிருத்தலைக் குறித்தது.[9] இயேசு, தாவீதின் திறவுகோலைக் கொண்டிருந்தார் என்ற உண்மையானது, அவர் தாவீதின் வம்சவழியில் வந்திருந்த மேசியாவாக இருந்தார் (2 சாமுவேல் 7:16) என்பதையும் இப்போது அவர் தாவீதின் அரியணையில் ஆளுகை செய்தார் (நடபடிகள் 2:30-36) என்பதையும் நிரூபித்தது.

இயேசுவே இந்தத் திறவுகோலுக்கு முற்றிலும் உரியவராய் இருந்தார். ஆகையால், அவர் திறந்தபோது, எவரொருவரும் பூட்ட முடியாதிருந்தது; மற்றும் அவர் பூட்டியபோது, எவரொருவரும் திறக்க முடியாதிருந்தது. பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு முன்பாக அவர், "திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்" என்பதை அவர்களுக்குக் கூறினார் (3:8ஆ). கர்த்தருடைய சபைக்கான அவரது திட்டங்களைச் சாத்தான் தற்காலிகமாகத் தடைசெய்து இருக்கலாம், ஆனால் முடிவில், தேவனுடைய நோக்கங்களே நிறைவேற்றப்படும்.

அவரது புகழ்ச்சியின் நிமித்தம் ஆறுதல் (3:8-10அ)

ஒவ்வொருவருமே பாராட்டப்பட விரும்புகின்றனர், உண்மையுள்ள இந்த சபைக்கு இயேசு தமது பாராட்டுதலைக் காண்பித்தார்:

உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன், உனக்குக் கொஞ்சம் பெலன்

இருந்தும், நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். ... என் பொறுமையைக்[10] *குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், ... பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனை காலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன் (வசனங்கள் 8-10அ).*

சொற்பமானது ஆனால் பயனுள்ளது

சபைக்குழுமத்தின் "கொஞ்சம் பெலன்" பற்றி இயேசு பேசினார். இயேசு, அவர்களின் சிறிய எண்ணிக்கையிலான உறுப்பினர்த்துவம் பற்றி, தாலந்துகளில் இருந்த பஞ்சம் பற்றி அல்லது குறைவாக இருந்த நிதி ஆதாரமூலங்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கலாம். சபைக்குழுமத்தில் இருந்த சில உறுப்பினர்களின் சமூக நிலையின் காரணமாக, அதை சமுதாயம் கண்ணோக்கியிருந்த வகையைக்கூட அவர் மறைமுகமாக உணர்த்தியிருக்கலாம் (1 கொரிந்தியர் 1:26ஐக் காணவும்).

இயேசு அவர்களைச் சங்கடப்படுத்துவதற்காக "கொஞ்சம் பெலன்" என்பதைப் பேசவில்லை, ஆனால் அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவே அதைப் பற்றி அவர் பேசினார். அவர்கள் ''கொஞ்சம் பெலன்'' கொண்டிருந்தனர் என்பது உண்மையாக இருந்தாலும், அதை அவர்கள் ஒன்றும் செய்யாதிருப்பதற்கான சாக்குப்போக்காகப் பயன்படுத்தியிருக்கவில்லை. மாறாக அவர்கள், தங்களிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தங்களால் முடிந்ததைச் செய்திருந்தனர். ஆல்பிரட் பிளம்மர் அவர்களின் கூற்றுப்படி, வசனத்தின் இந்தப் பகுதியினுடைய வலியுறுத்தம் பின்வருமாறு உள்ளது: "நீ கொஞ்சம் பெலன் கொண்டுள்ளதால், மற்றும் அந்தக் கொஞ்சத்தை நன்முறையில் பயன்படுத்தியதால், நான் உன்னிடத்திலிருந்து வேறு எவரும் அபகரிக்க இயலாத வாய்ப்பை உனக்குக் கொடுத்துள்ளேன்."[11]

நாம் செய்யக்கூடியவற்றைப் பார்க்கிலும் அதிகமானவற்றைத் தேவன் நம்மிடத்தில் இருந்து ஒருக்காலும் எதிர்பார்ப்பதில்லை, ஆனால் அவர் நமக்குக் கொடுத்துள்ள ஆதாரமூலங்களை நாம் பயன்படுத்த வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கின்றார். "நம்மால் கொஞ்சமே செய்யமுடியும் என்பதால் நாம் ஒன்றும் செய்யப்போவதில்லை" என்ற தத்துவம் கொண்ட கிறிஸ்தவர்களாய் உள்ள தனிநபர்களையும் சபைக்குழுமங்களையும் நான் அறிந்துள்ளேன். இதற்கு மறுபுறத்தில், பிலதெல்பியாவில் இருந்த சபையானது, மாற்கு 14:8அ வில் இயேசு பாராட்டிய, ''தன்னால் இயன்றதைச் செய்த" பெண்ணைப்போல் இருந்தது.

துன்புறுத்தப்பட்டது ஆனால் விடாமுயற்சி கொண்டிருந்தது

உண்மையுடன் நிலைத்திருத்தல் என்பதே கிறிஸ்தவர்கள் செய்யக்கூடிய - மற்றும் செய்திருந்த - ஒரே விஷயமாக இருந்தது. இயேசு, "... நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே ... என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால்" என்று கூறினார். இயேசு தமது பூமிக்குரிய

ஊழியத்தின்போது, தமது சீஷர்களிடத்தில், "ஒருவன் என்னில் அன்பாயிருந்தால், அவன் என் வசனத்தைக் கைக்கொள்ளுவான்" என்று கூறினார் (யோவான் 14:23அ).

"என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே" என்ற சொற்றொடரும், "என் நாமத்தை மறுதலியாமல்" என்ற சொற்றொடரும் aorist வினைச்சொல்லாக உள்ளன, இது ஒருமுறை மாத்திரம் நடைபெறும் நிகழ்ச்சியை குறிக்கிறது. கடந்த காலத்தில் அவர்களின் விசுவாசம் கடுமையாகச் சோதிக்கப்பட்ட ஒரு குறிப்பிட்ட வேளை இருந்திருந்தது - ஒருவேளை இது அந்திப்பா கொல்லப்பட்ட அதே வேளையாக இருந்திருக்கலாம் (2:13). இயேசுவை மறுதலித்து பேரரசரை அறிக்கையிடும்படியான அழுத்தம்/வலியுறுத்தம் இருந்த போதிலும், அவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தனர்.

அவர்களின் சொந்த "பலன்" என்பது "கொஞ்சமாக" இருந்தபோது, இதை அவர்களால் செய்ய முடிந்தது எவ்வாறு? பவுலைப்போல் அவர்கள் கர்த்தருடைய வல்லமையைச் சார்ந்திருக்கக் கற்றிருந்தனர் என்பது தெளிவு:

> அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும். பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன். ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன் (2 கொரிந்தியர் 12:9, 10).[12]

பெரும் பள்ளத்தை கடக்க வைக்கும் பாலத்திற்கு நாம் நடந்து வந்தால், நான் "இந்தப் பள்ளத்தை கடப்பதற்கு எனது கால்கள் போதிய பலம் கொண்டுள்ளனவா?" என்று கேட்க மாட்டேன். அதற்குப் பதிலாக, "இந்தப் பாலத்தின்மீது நான் நடந்து செல்லுகையில் என்னைத் தாங்கும் அளவுக்கு இந்தப் பாலம் பலமாக உள்ளதா?" என்றே கேட்பேன். அதுபோலவே, வாழ்வின் சோதனைகளை நாம் எதிர்கொள்ளுகையில், "நாம் போதிய அளவு பலம் கொண்டிருக்கின்றோமா?" என்பது அல்ல, ஆனால் "நமது கர்த்தர் போதிய அளவு பலம் கொண்டிருக்கின்றாரா?" என்பதே கேள்வியாக இருக்க வேண்டும். அந்தக் கேள்விக்கு பிலதெல்பியாவில் இருந்த சபையானது உரத்த குரலில் "ஆம்!" என்று பதில் அளித்திருந்தது.

அவரது அளிப்பின் நிமித்தம் ஆறுதல் (3:8-10ஆ)

பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் விடாமுயற்சியுடன் இருந்தபடியால், அவர்களின் எதிர்காலமானது பேராச்சரியமான நிகழ்வுகளால் நிறைந்திருக்கும்.

செயலாற்றல் பெருகிற்று

இயேசு அவர்களுக்கு விசேஷித்த வாய்ப்புகளைக் கொடுக்கத்

தொடர்வார்: "இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்"[13] (வசனம் 8அ). புதிய ஏற்பாட்டில், திறந்தவாசல் என்ற உருவகம், விசேஷித்த வாய்ப்புக்களை, அதிலும் குறிப்பாக சுவிசேஷத்தைப் பரப்புவதற்கு விசேஷித்த வாய்ப்புக்களைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது (நடபடிகள் 14:27; 1 கொரிந்தியர் 16:9; 2 கொரிந்தியர் 2:12; கொலோசெயர் 4:3).[14] பிலதெல்பியா நகரம் கிரேக்கக் கலாச்சாரத்தைப் பரப்புவதற்கென்று அட்டாலஸினால் நிலைநாட்டப்பட்டிருந்தாலும், அதை ஆசியா மைனரின் கிழக்கில் உள்ள நாடுகளில் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கென்று ஒரு ஊழிய மையமாகத் தேவன் பயன்படுத்துவார்.

கர்த்தர் நமது செயலாற்றலைப் பெருக்குகின்றார் என்பதே நம்மிடம் உள்ளவற்றை நம்மால் செய்ய முடிந்தவற்றைச் செய்யப் பயன்படுத்துவதற்கான எதிர்பாராப் பெருநிதியாக (serendipity)[15] உள்ளது. பயிற்சிக்கு உட்படுத்தப்பட்ட தசைகள் அதிக பலமுள்ளவையாகின்றன, அவைகளால் இன்னும் அதிகமானவற்றைச் செய்யமுடியும். இரண்டு தாலந்துகள் நான்காக முடியும் (மத்தேயு 25:17).

நிச்சயமாக, சபையானது இந்த வாய்ப்பைப் பயன்படுத்த வேண்டும். இயேசு கதவைத் திறந்து வைத்து, பிரவேசிக்கும்படி அழைக்கின்றார், ஆனால் அவர் நம்மை அதனூடே கடந்து செல்லும்படி கட்டாயப்படுத்துவதில்லை. பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள், சூழ்நிலையை இன்னமும் அனுகூலப் படுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அவர்கள் தங்களின் புதிய செயலாற்றலுடன் தங்களால் செய்ய முடிந்தவற்றைத் தொடர்ந்து செய்வார்கள் என்பதில் கர்த்தர் சிறிதளவே சந்தேகம் கொண்டிருந்தார் என்பது உறுதி.[16]

விடாமுயற்சி நியாயப்படுத்தப்பட்டது

மீண்டுமாக இயேசு, தம்மில் அவர்கள் கொண்டுள்ள விசுவாசம் பற்றி அவர்கள் நியாயப்படுத்துவார்கள் என்று கூறினார்: "இதோ, யூதரல்லாதிருந்தும் தங்களை யூதரென்று பொய்சொல்லுகிறவர்களாகிய சாத்தானுடைய கூட்டத்தாரில் சிலரை உனக்குக் கொடுப்பேன், இதோ, அவர்கள் உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து, நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்" (வசனம் 9).

சிமிர்னாவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தை நாம் படித்தபோது, "சாத்தானுடைய கூட்டத்தார்" என்ற சொற்றொடர் நமக்கு அறிமுகப்படுத்தப்பட்டது (2:9). அந்தச் சொற்றொடர் ஒரு சாதாரண ஜெப ஆலயத்தை - இயேசுவை மேசியாவல்ல என்று புறக்கணித்திருந்த யூதர்களின் குழுவை - குறித்தது என்று நாம் குறிப்பிட்டிருந்தோம்.[17] அவர்கள் சாத்தானுடைய செயல்களைச் செய்துகொண்டிருந்தபடியால், "சாத்தானுடைய கூட்டத்தார்" என்று அழைக்கப்பட்டனர். கண்டனம் பண்ணப்படுதலைப் பெற்றிராத - சிமிர்னா மற்றும் பிலதெல்பியா ஆகிய இடங்களில் இருந்த - இரு சபைக்குழுமங்களும் வேறுசிலவற்றை (யும்) பொதுவானவைகளாகக் கொண்டிருந்தன என்றும் நாம் கவனித்திருந்தோம்: அவை இரண்டுமே

யூதர்களால் துன்புறுத்தப்பட்டிருந்தன.[18] அனேகமாக, ரோம அதிகாரிகள் கிறிஸ்தவர்கள் மீது அதிக அழுத்தத்தைச் செலுத்தும்படி அவர்களை ஊக்குவிப்பதற்கு, யூதர்கள் தங்களின் அரசியல் செல்வாக்கைப் பயன்படுத்தியிருக்கலாம்.

இயேசு, சிமிர்னாவுக்கு எழுதியபோது, அந்த சபைக்குழுமம், சாத்தானுடைய கூட்டத்தாரின் கொலைவெறிச் செயல்களிலும் உயிர்பிழைத்திருக்கும் என்று மறைமுகமாய்க் குறிப்பிட்டிருந்தார். பிலதெல்பியாவில் இருந்த சபைக்கு அவரது வாக்குத்தத்தமானது அதற்கும் அப்பால் சென்றது: "அவர்கள் [போலியான யூதர்கள்] உன் பாதங்களுக்கு முன்பாக வந்து பணிந்து,[19] நான் உன்மேல் அன்பாயிருக்கிறதை அறிந்துகொள்ளும்படி செய்வேன்." இது பிலதெல்பியாவில் கிறிஸ்தவர்கள் ஆகிக்கொண்டிருந்த யூதர்களைக் குறிக்கிறது என்று சிலர் நம்புகின்றனர்;[20] இது அந்த சபைக்குழுமத்திற்குக் கொடுக்கப்பட்டிருந்த "திறந்தவாசலின்" ஒருபகுதியாக இருந்தது என்று அவர்கள் நினைக்கின்றனர். மற்றவர்கள், இந்த வாக்குத்தத்தமானது, கிறிஸ்தவர்களும் தேவனுடைய விசேஷித்த மக்களாக இருந்தனர் என்பதை மனந்திரும்பாத யூதர்கள் எரிச்சலுடன் ஒப்புக்கொள்ளுதலைக் குறிக்கும் என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். இந்த வார்த்தை வேறு எதை அர்த்தப்படுத்தினாலும், அவிசுவாசிகள் யாவரும், இயேசுவே தேவனுடைய குமாரன் என்று (ஆகையால் அவரைப் பின்பற்றுபவர்கள் சரியானவர்களே என்றும்) ஒப்புக்கொள்ளும் நாள் வரும் என்று வேதாகமம் தெளிவாகப் போதிக்கிறது:

> ... முழங்கால் யாவும் எனக்கு முன்பாக முடங்கும், ... என்று என்ஜீவனைக்கொண்டு உரைக்கிறேன் என்பதாய்க் கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறது (ரோமர் 14:11).
>
> இயேசுவின் நாமத்தில் வானோர் பூதலத்தோர் பூமியின் கீழானோருடைய முழங்கால் யாவும் முடங்கும்படிக்கும், பிதாவாகிய தேவனுக்கு மகிமையாக இயேசுகிறிஸ்து கர்த்தரென்று நாவுகள் யாவும் அறிக்கை பண்ணும்படிக்கும், ... (பிலிப்பியர் 2:10, 11).

பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது

இயேசு, பிலதெல்பியா சபைக்குத் தமது தொடர்ந்த பாதுகாப்பை உறுதிப்படுத்தினார்: "என் பொறுமையைக்குறித்துச் சொல்லிய வசனத்தை நீ காத்துக்கொண்டபடியினால், பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்திற்குத் தப்பும்படி நானும் உன்னைக் காப்பேன்" (வசனம் 10). அவர்கள் கடந்த காலத்தில் துன்புறுத்தப்பட்டிருந்தனர், மிகவும் மோசமான சோதனைகள் அவர்களுக்காகக் காத்திருந்தன, ஆனால் இயேசு அவர்களுடன் இருப்பார். அவரது வார்த்தை விளையாட்டைக் கவனியுங்கள்: அவர்கள் அவரது வசனத்தைக் காத்துக்கொண்டபடியினால், அவர்களை அவர் காப்பார்.

"சோதனைகாலம்" என்ற சொற்றொடர், உடனடியாக எதிர்காலத்தில்

அதிகரிக்கப்படவிருந்த துன்புறுத்துதலைக் குறித்தது.[21] 6 முதல் 19 வரையில் உள்ள அதிகாரங்கள், சோதனையின் அந்தப் பயங்கரமான வேளையைப் பற்றிக் கூறுவதற்குப் பல்வேறு வகையான உருவகங்களைப் பயன்படுத்து கின்றன. இந்த "சோதனைகாலம்" என்பது கிறிஸ்தவர்கள் மீது மாத்திரமின்றி "பூச்சக்கரத்தின்மேலெங்கும்"[22] வரவிருந்தது, மற்றும் இது, "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாக" என்ற ஒரே நோக்கத்தைக் கொண்டிருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தில், பூமியில் குடியிருக்கிற வர்கள் என்ற கருத்து அவிசுவாசிகளைக் குறிப்பதாக உள்ளது (6:10; 8:13; 11:10; 13:8, 14; 17:8). இந்த வசனப்பகுதியானது, பூமியின்மீது தேவன் இடர்ப்பாடுகளை அனுமதிக்கும்போது, அது மக்களை மனந்திரும்பு தலுக்குக்[23] கொண்டுவருதல் என்ற ஒரு நோக்கம்[24] கொண்டுள்ளது என்று நம்மை அறிய அனுமதிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை நாம் தொடர்ந்து படிக்கையில் இதைச் சிந்தையில் வைத்துக் கொள்ளுங்கள்; இது, இந்தப் புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ள பயங்கரம் நிறைந்த பேரழிவுகளில் தேவன் எதை நிறைவேற்ற முயற்சி செய்துகொண்டிருந்தார் என்பதைப் புரிந்து கொள்வதற்கான திறவுகோல் குறிப்பாக உள்ளது.

இயேசு, "சோதனை காலத்திற்கு" கிறிஸ்தவர்கள் தப்பும்படி செய்வார் (அவர்களைக் காவல்காத்து பாதுகாப்பார்) என்பதே வசனம் 10ல் அவரது முக்கிய கருத்தாக உள்ளது. "(காலத்)திற்கு" என்பது "இருந்து" என்று அர்த்தப்படுகிற *ek* என்ற கிரேக்க முன்னிடைச் சொல்லின் மொழிபெயர்ப் பாக உள்ளது. இந்த முன்னிடைச் சொல்லானது "... ல் இருந்து தொற்றாப் பாதுகாப்பு, அல்லது ... பாதுகாப்பாகக் கொண்டுவரப்படுதல்" என்பதைக் குறிப்பிடக்கூடும்.[25] 2:10ல் இது "... ல் இருந்து தொற்றாப் பாதுகாப்பு என்பதை" அர்த்தப்படுத்துகிறதா? கிறிஸ்தவர்கள் யுத்தம், பஞ்சம் மற்றும் கொள்ளை நோய் ஆகியவற்றினால் பாதிக்கப்படாது இருக்கும்படி அவர்களுக்கு இயேசு அற்புதவிதமாகத் தடுப்பு ஏற்பாடுகளைச் செய்வித்தாரா? அவர் தம் மக்களைச் சுற்றி, பட்டயங்கள், அம்புகள் மற்றும் கோடரிகள் ஆகியவற்றினால் துளைக்க முடியாத தடைச்சுவர்களை ஏற்படுத்தினாரா? அவர் தமது மக்களை அக்கினி மற்றும் ஏவுகணைகளால் தாக்க இயலாதவர்கள் ஆக்கினாரா? அவர் இவ்வாறெல்லாம் செய்யவில்லை என்று நீங்கள் அறிந்திருக்கின்றீர்கள். சோதனை காலம் முடியும் முன்பு கிறிஸ்தவர்கள் பலர் இறந்து போவார்கள் (6:9; 17:6ஐக் காணவும்). ஆகையால் இயேசு அவர்களை சோதனையினூடே "பாதுகாப்பாக வழி நடத்துவார்" என்பதே அவரது வாக்குத்தத்தின் அர்த்தமாக இருக்க வேண்டும்.[26]

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நமக்கு, சோதனையிலிருந்து விடுதலை என்பது வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை, ஆனால் உயிர்பிழைத்திருப் பதற்கான ஆவிக்குரிய ஆதாரமூலங்கள் நமக்கு வாக்குத்தத்தம் செய்யப்பட்டுள்ளன (2 கொரிந்தியர் 12:9; 2 தீமோத்தேயு 3:12; 4:18; எபிரெயர் 4:16). புதிய எண்ணப்போக்கு[27] - எது முக்கியம் எது முக்கிய மற்றது என்பது பற்றி மாற்றப்பட்ட கண்ணோக்கக் கருத்து - என்பதே இயேசுவின் அளிப்பில் உள்ள ஒரு திறவுகோல் காரணியாக இருக்கிறது.[28] அந்த எண்ணப்போக்கு, இரக்கமற்ற வகையில் துன்புறுத்தப்பட்ட பவுல்

மற்றும் பிறரினால் சான்றுடன் விளக்கப்பட்டது:

> *ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது (2 கொரிந்தியர் 4:16).*
>
> *... நாம் தைரியங்கொண்டு: கர்த்தர் எனக்குச் சகாயர், நான் பயப்படேன், மனுஷன் எனக்கு என்னசெய்வான் என்று சொல்லலாமே (எபிரெயர் 13:6).*
>
> *கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம் (பிலிப்பியர் 1:21).*

பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்குச் சோதனைகள் வரும்போது இயேசு அவர்களைக் கைவிடுவதில்லை என்று அவர்களுக்கு வாக்குத்தத்தம் செய்தார். அவர் நம்மையும் கைவிடமாட்டார் (எபிரெயர் 13:5).

அவரது உணர்ந்தறிதல் நிமித்தம் ஆறுதல் (3:11)

கர்த்தருடைய அளித்தல் என்பது சபையின் உண்மைத் தன்மையைச் சார்ந்திருக்கும். அவர்கள் பலத்துடன் நிலைத்திருப்பதற்கு அவர்களுக்கு அவசியமானது எது என்பதை இயேசு அறிந்தார்.

அவரது பிரசன்னம் உத்தரவாதப்படுத்தப்பட்டது

இந்தக் கிறிஸ்தவர்களுக்கு இயேசுவின் பிரசன்னம் உறுதிப்படுத்தப் படுதல் அவசியமாய் இருந்தது, எனவே அவர் - அவர்களைப் பாதுகாப் பதற்கும் அவர்களின் விரோதிகளைத் தண்டிப்பதற்கும் - "இதோ, சீக்கிரமாய் வருகிறேன்"[29] என்று கூறினார் (வசனம் 11அ).

அவர்களின் பொறுமை அவசியமாய் இருந்தது

அவர்கள் (தங்கள் விசுவாசத்தை) விட்டுவிடாதிருக்கும்படி உற்சாகப் படுத்தப்படுதலும் அவசியமாயிருந்தது, எனவே அவர்களிடத்தில் அவர், "ஒருவனும் உன் கிரீடத்தை எடுத்துக்கொள்ளாதபடிக்கு உனக்குள்ளதைப் பற்றிக்கொண்டிரு"[30] என்று வற்புறுத்தினார் (வசனம் 11ஆ). "கிரீடம்" என்று இவ்விடத்தில் உள்ளது, 2:10ல் குறிப்பிடப்பட்ட - stephanos - என்ற அதே வார்த்தையாகவே உள்ளது, இது வெற்றியின் கிரீடம் என்று அர்த்தப்படுகிறது. உண்மையுள்ள கிறிஸ்தவர் ஒவ்வொருவருக்காகவும் பரலோகத்தில் ஒரு கிரீடம் வைக்கப்பட்டுள்ளது (2 தீமோத்தேயு 4:8), ஆனால் அந்தக் கிரீடம் இழந்துபோகப்பட(வும்)கூடும். அதைத் தவிர்ப்பதற்கு, பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் தங்களுக்குள்ள வைகளைப் பற்றிக்கொண்டிருக்க வேண்டியிருந்தது.

இந்தக் கிறிஸ்தவர்கள் தங்களுக்கென்று கொஞ்சமானவைகளையே கொண்டிருந்தனர் - ஆனால், முக்கியமானவற்றைப் பொறுத்தமட்டில்

இவர்கள் அதிகமானவைகளைக் கொண்டிருந்தனர்: இவர்கள், இரட்சிப்பு, வசனம், கர்த்தரில் இவர்களின் விசுவாசம், தேவன் இவர்களுக்குக் கொடுத்திருந்த கொஞ்சம் பெலன், புதிய வாய்ப்புகள், மற்றும் இயேசுவின் வாக்குத்தத்தங்கள் ஆகியவற்றைக் கொண்டிருந்தனர். இவர்கள் தங்களுக்குத் தேவன் கொடுத்திருந்தவைகள் ஒருக்காலும், ஒருக்காலும் தங்களைவிட்டுப் போகும்படி அனுமதிக்காமல் உறுதியாய்ப் பற்றிக் கொண்டிருக்க வேண்டியதாக இருந்தது. கிறிஸ்தவர்களின் ஒரு குழுவிற்குப் பவுல், "நான் உங்களுக்குப் பிரசங்கித்தபிரகாரமாய், நீங்கள் அதைக் கைக்கொண்டிருந்தால்,[31] ..." (1 கொரிந்தியர் 15:2ஆ) சுவிசேஷத்தினால் இரட்சிக்கப்படுவார்கள் என்று கூறியிருந்தார்.

அவரது வாக்குத்தத்தங்களின் நிமித்தம் ஆறுதல் (3:12)

கடிதத்தின் இந்தப் பகுதி வரையிலும் இயேசுவின் வாக்குத்தத்தங்கள், உண்மையுள்ளவர்களுக்கு அவர் இந்த வாழ்வில் என்ன செய்வார் என்பதையே முக்கியமாக மையங்கொண்டிருந்தன. அவர் இதை முடிப்பதற்கு முன்பு, அவர்களுக்கு இனிவரவிருக்கும் வாழ்வில் வைக்கப் பட்டுள்ளவைகள் என்ன என்பதை அவர்கள் அறிய வேண்டும் என்று விரும்பினார்:

> ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனை என் தேவனுடைய ஆலயத்திலே[32] தூணாக்குவேன், அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை, என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் அவன்மேல் எழுதுவேன் (வசனம் 12).

முதன்மைச் சிறப்பு

"தூண்" என்பதற்கான இயேசுவின் குறிப்பில் உள்ள அடிப்படை மறைமுகக் கருத்தை நாம் புரிந்துகொள்கின்றோம். சில கட்டிடங்களில் தூண்கள் உள்ளன, மற்றும் இப்போதும்கூட நாம், "இடர்ப்பாட்டின்போது, அவர் பலத்தின் தூணாக இருந்தார்" அல்லது "அவர் சமுதாயத்தில் ஒரு தூணாக இருக்கின்றார்" என்பது போன்ற சொல்விளக்கங்களைப் பயன்படுத்துகின்றோம். நாம், "தூண்" என்ற உருவகத்தைப் பயன் படுத்தும்போது, தாங்கி நிற்கின்ற மற்றும் நிலைநிறுத்துகின்ற சிலவற்றை (1 தீமோத்தேயு 3:15ஐக் காணவும்) அல்லது முதன்மைச் சிறப்புவாய்ந்த ஒருவரை (கலாத்தியர் 2:9ஐக் காணவும்) குறிப்பிடுகின்றோம்.

புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், "ஒரு தூண்" என்ற கருத்து கூடுதலான சொல்லர்த்தங்களைக் கொண்டிருந்தது. சிலவேளைகளில், தனிநபர்களைக் கனப்படுத்துவதற்குத் தூண்கள் எழுப்பி நிறுத்தப்பட்டன: அந்தத் தூண்களில் கனப்படுத்தப்பட வேண்டியவர்களின் பெயர்களும்

தகவல்களும் செதுக்கப்பட்டன.[33] இன்றைய நாட்களில், பழைய பிலதெல்பியா இருந்த இடமானது பழைய தியத்தீரா இருந்த இடத்தைப் போன்றதாகவே உள்ளது: அதே இடத்தில் நவீன நாட்களின் கிராமம்[34] ஒன்று கட்டியெழுப்பப்பட்டுள்ளதால், சிறிதளவே அகழ்வாய்வு சாத்தியமாகியுள்ளது. நகரத்தின் மையமாக இருந்த ஒரே ஒரு பகுதி மாத்திரம் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது,[35] ஆனால் அந்தக் காட்சித் தோற்றத்தின் ஒரு பண்பு நமது படிப்பிற்கு ஆர்வம் ஊட்டுவதாக உள்ளது. அந்த இடத்தில் வீரர்களின் பெயர்கள் செதுக்கப்பட்ட பழங்காலத்தின் தூண்கள் பல நின்ற நிலையில் நிலைத்துள்ளன.

இயேசு, "அவனை என் தேவனுடைய ஆலயத்திலே தூணாக்குவேன்" என்று கூறியபோது, இவை யாவற்றையும் - இன்னும் அதிகமானவற்றையும் - தமது சிந்தையில் கொண்டிருக்க வேண்டும். இந்த வாழ்வில் பிலதெல் பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள் பலவீனர்களாகக் கருதப்பட்டிருக்கலாம், ஆனால் அவர்களை இயேசு "பலத்தின் தூண்கள்" ஆக்குவார்.

நிரந்தரத் தன்மை

நிரந்தரமான குடியிருப்பு என்பது ஒரு முக்கியமான உய்த்துணர்தலாக உள்ளது; ஏனெனில் இயேசு, "அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை"[36] என்று வலியுறுத்தினார். பிலதெல்பியாவில் இருந்த குடிகள் நொறுங்கி விழும் கட்டிடங்களினால் நசுக்கப்பட்டு விடாதபடிக்கு, அடிக்கடி அந்த நகரத்தில் இருந்து வெளியே ஓடினர், ஆனால் பரலோகத்தில், கர்த்தருடைய தூண்கள் நிரந்தரமாய் நிலைத்திருப்பவைகளாக இருக்கும்! நாம் பரலோகத்திற்குச் செல்லும்போது, சோதனை காலம் முடிந்திருக்கும். முடிவற்ற காலத்திற்கு நமது தங்குமிடம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது! சங்கீதக்காரரின் ஊக்கமான விருப்பம் கடைசியில் உணர்ந்தறியப்படும்:

> *கர்த்தரிடத்தில் ஒன்றை நான் கேட்டேன், அதையே நாடுவேன், நான் கர்த்தருடைய மகிமையைப் பார்க்கும்படியாகவும், அவருடைய ஆலயத்தில் ஆராய்ச்சிசெய்யும்படியாகவும், நான் என் ஜீவனுள்ள நாளெல்லாம் கர்த்தருடைய ஆலயத்தில் தங்கியிருப்பதையே நாடுவேன் (சங்கீதம் 27:4).*

அகஸ்டீன் என்பவர், "எந்த நண்பரும் விட்டுப்பிரியாத, எந்த விரோதியும் உள்நுழையாத அந்த நகரத்திற்காக ஏங்கியிராதவர்கள் ... யார்?" என்று எழுதினார்.[37]

உடைமை/உரித்தாக்கியிருத்தல்

ஒவ்வொரு தூணின்மீதும் இயேசு, "என் தேவனுடைய நாமத்தையும் என் தேவனால் பரலோகத்திலிருந்திறங்கிவருகிற புதிய எருசலேமாகிய என் தேவனுடைய நகரத்தின் நாமத்தையும், என் புதிய நாமத்தையும் ... எழுதுவேன்" என்று வாக்குத்தத்தம் செய்தார். இந்தப் பெயர்கள், தூண்களை உயர்த்துகின்றன மற்றும் இவைகள் தெய்வீகத்துடனான ஒரு

உறவுமுறையைச் சுட்டிக்காண்பிக்கின்றன.[38]

தேவன் நமது பிதாவாக இருப்பதால், அவர் நமது கண்களில் இருந்து கண்ணீர் யாவையும் துடைப்பதால், அவரது நாமம் நம்மீது செதுக்கப்படும் (7:17; 21:4).

“தேவனிடத்தினின்று பரலோகத்தைவிட்டு இறங்கி வரும் புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம்” என்பது நமது பரலோக குடியிருப்புக்கு இன்னொரு பெயராக உள்ளது (21:2, 10ஐக் காணவும்).[39] (“புதிய எருசலேம்” என்ற விளக்க படத்தைக் காணவும்.) பழைய எருசலேம் நகரம், ஏறக்குறைய இருபது ஆண்டுகளுக்கு முற்பட்ட காலமான, கி.பி. 70ல் ரோமர்களால் அழிக்கப்பட்டிருந்தது, ஆனால் கிறிஸ்தவர்கள், “மேலான எருசலேமை” (கலாத்தியர் 4:26; எபிரெயர் 12:22ஐக் காணவும்) எதிர்நோக்கியிருக்க முடியும், அது “தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகர”மாக இருந்தது (எபிரெயர் 11:10).[40] “புதிய எருசலேம்” என்ற பெயரானது நமது நிரந்தரமான முகவரியாக இருப்பதால், அது நம்மை அழகுபடுத்துவதாக இருக்கும்.

அத்துடன் கூடுதலாக, ஒரு மணமகன் தனது பெயரைத் தனது மணமகளுக்கு கொடுத்து கனப்படுத்துவதுபோல, இயேசுவின் “புதிய பெயரையும்”[41] நாம் பெற்றுக்கொள்வோம். கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் கிறிஸ்துவின் மணவாட்டியாகிய சபையின் அங்கமாக இருக்கின்றோம் (எபேசியர் 5:23-33). ஒரு நாளிலே அவர் தம்மிடத்தில் நம்மைச் சேர்த்துக் கொள்ளும்படிக்குத் தோன்றுவார். பின்பு, “அவர் வெளிப்படும்போது அவர் இருக்கிறவண்ணமாகவே நாம் அவரைத் தரிசிப்பதினால், அவருக்கு ஒப்பாயிருப்போம்” (1 யோவான் 3:2ஆ).

முடிவுரை

“ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்” (வசனம் 13).

இந்தக் கடிதம் எனக்குத் தனிப்பட்ட முறையில் மதிப்புமிக்க செய்திகளைக் கொண்டுள்ளது. இதன் வார்த்தைகள் எனக்கு அறைகூவல் விடுக்கின்றன. தேவனால் தரப்பட்ட வாய்ப்புக்களை நான் இன்னும் அதிக கவனமாகக் கண்ணோக்கி, அவற்றின் அனுகூலங்களை எடுத்துக்கொண் டாக வேண்டும். அவரது வசனத்திற்குக் கீழ்ப்படிவதற்கும், அவரை ஒருக்காலும் மறுதலியாது இருப்பதற்குமான எனது உறுதிப்பாட்டை நான் புதுப்பிக்க வேண்டும். எனது கிரீடத்தை நான் இழந்து போகாதபடிக்கு, தேவன் எனது பராமரிப்பில் ஒப்புவித்துள்ள எல்லாவற்றின் மீதான பிடியை நான் பலப்படுத்த வேண்டும். விசேஷமாக இந்தக் கடிதம், என்னை ஊக்குவிக்கிறது. நான் பலவீனமுள்ளவனாக இருக்கும் வேளையிலும், ஒரு நாளில் நான் பலம் மற்றும் நிலைப்புத் தன்மையின் தூணாக விளங்க முடியும்.

நாம் யாவரும் “கட்டுமானத்தின் கீழ் உள்ளார்” என்ற ஒரு அடையாளக்குறியை அணிய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது. “என்னில் அவர் இன்னும் கிரியை செய்கின்றார்” என்ற பாடலின் உணர்வை நான்

விரும்புகின்றேன். அவருடன் நான் நெருங்கியிருந்து மனக்கலக்கம் அடையாதிருந்தால், அவர் இன்னும் என்னில் சிலவற்றைச் செய்யக்கூடிய வராக இருக்கின்றார்![42]

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

இந்தப் பாடத்திற்கு பிரசங்கியார்கள் பெரும்பாலும், "திறந்த வாசலைக் கொண்டிருந்த சபை" (அல்லது "திறந்த வாசல்" என்று மாத்திரம்) தலைப்பிடுகின்றனர் மற்றும், வாய்ப்புக்களை, அதிலும் விசேஷமாக, சுவிசேஷ ஊழியத்திற்கான வாய்ப்புக்களை அனுகூலப்படுத்திக் கொள்ளுதல் பற்றி வலியுறுத்துகின்றனர். இந்தப் படிப்பு, ஒருவர் மற்றவரை அன்புகூருதலின் அவசியம் பற்றி அதிகமான வலியுறுத்துதலுடன் (யோவான் 13:34; ரோமர் 5:5; 1 தெசலோனிக்கேயர் 4:9; 1 யோவான் 4:19) "சகோதரத்துவ அன்பின் சபை" என்றும் அழைக்கப்பட முடியும்: ஆவிக்குரிய வகையில் பேசுவதென்றால், நாம் யாவரும், சகோதரத்துவ அன்பின் நகரமாகிய பிலதெல்பியாவில் வாழ வேண்டும்.

குறிப்புகள்

[1]இந்தப் புத்தகத்தில் உள்ள "ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும்" என்ற வரைபடத்தைக் காணவும். [2]அமெரிக்க நாட்டில், பென்சில்வேனியா மாகாணத்தில் பிலதெல்பியா என்ற பெயரில் நாங்கள் ஒரு நகரத்தைக் கொண்டுள்ளோம், "சகோதரத்துவ அன்பின் நகரம்" என்பதே இதன் குறிக்கோளாக உள்ளது. [3]இந்தப் பகுதி முழுவதும் பூமியதிர்ச்சிக்கு உட்படக்கூடியதாக இருக்கிறது. பயணவழிகாட்டியானவர் எனது பயணக்குழுவிற்கு நகரத்தின் சிதிலங்களைக் காண்பித்தபோது பெரும்பாலும், பூமியதிர்ச்சி அந்த நகரத்தை அழித்த தேதியைக் குறிப்பிடுவார். [4]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 149. [5]இந்த சபைக்குழுமம் எப்போது நிலைநாட்டப்பட்டது என்பதை நாம் அறிவதில்லை; இது ஒருவேளை எபேசுவில் பவுலின் ஊழியத்தின்போது நிலைநாட்டப்பட்டிருக்கலாம் (நடபடிகள் 19:1, 8-10). [6]"திறத்தல்" மற்றும் "பூட்டுதல்" என்ற இரண்டுமே நிகழ்கால வினைச் சொற்களாக உள்ளன, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. கர்த்தர் தமது சபையின் வாழ்வில் தொடர்ந்து ஈடுபாடு கொண்டுள்ளார். [7]" 'தாவீதின் திறவுகோல்' என்பது நம்மை, ஏசாயா 22:22ஐ நோக்கிப் பின்னாக எடுத்துச் செல்லுகிறது. அங்கு எசேக்கியா என்ற நல்ல அரசரின் உண்மையுள்ள உக்கிராணக்காரரான எலியாக்கீம் 'தாவீதுடைய வீட்டின் திறவுகோலை' கொண்டிருந்ததாகவும் அவர் மாத்திரமே அரசருடைய சமூகத்தில் வேண்டுதல்களை அனுமதிக்க உரிமை கொண்டிருந்ததாகவும் குறிப்பிடப்பட்டார் … அவர் மூலமாகவே ஒருவர் அரசரிடத்தில் சென்று சேர முடியும், ஏனெனில் அவர்மாத்திரமே அரசரின் சமூகத்திற்கு வழிதரும் கதவை மூடவும் திறக்கவும் உரிமை கொண்டிருந்தார்" (Rubel

Shelly, *The Lamb and His Enemies: Understanding the Book of Revelation* [Nashville: 20th Century Christian Foundation, 1983], 41). [8]*இயேசு, "பின்வரும் எல்லா வட்டாரங்களிலும் அதிகாரம் உள்ளவராய் இருக்கின்றார்: வானத்திலும் பூமியிலும் (மத்தேயு 28:18), தேவதூதர்கள், அதிகாரங்கள் மற்றும் வல்லமைகள் மீது (1 பேதுரு 3:22), சபையின்மீது (எபேசியர் 1:20-22), பூமியின் அரசர்கள் மீது (வெளிப்படுத்தின விசேஷம் 1:5), மற்றும் மரணம், பாதாளம் ஆகியவற்றின் மீது (வெளிப்படுத்தின விசேஷம் 1:18)"* (Hailey, *150).* [9]*குறிப்பிட்ட ஒரு நபர் மீட்கப்படுவாரா அல்லது இழந்துபோகப்படுவாரா என்பது பற்றி நான் என்ன நினைக்கின்றேன் என்று அவ்வப்போது யாரேனும் ஒருவர் என்னிடத்தில் கேட்கின்றார். அனுமதிக்கவோ அல்லது அனுமதியை மறுக்கவோ இயேசு ஒருவர் மாத்திரமே உரிமை கொண்டுள்ளார் என்று நான் கூறுவதுண்டு; அவைகள் என்னுடைய முடிவுகள் அல்ல, ஆனால் அவருடைய முடிவுகளாகவே உள்ளன (மற்றும் இது இவ்வாறு இருப்பதற்காக நான் அவருக்கு நன்றிசெலுத்துகின்றேன்). நான் தேவனல்ல என்பதை நான் வலியுறுத்துகின்றேன்; நான் ஒரு பிரசங்கியாராக மாத்திரமே இருக்கின்றேன், வசனத்தைப் பிரசங்கித்தல் மாத்திரமே எனது பணிப்பொறுப்பாக உள்ளது. பொதுவாக நான் பின்வரும் புத்திமதியுடன் முடித்துக்கொள்வதுண்டு: 'யாரேனும் ஒரு மனிதரைப் பற்றிய கருத்தைக் கேட்பதற்குப்' பதிலாக, நீங்கள் "இரட்சிப்பின் விஷயம் பற்றி வேதாகமம் போதிப்பது என்ன?" என்று கேட்க வேண்டும்.* [10]*"எனது பொறுமையின் வசனம்" என்பது வழக்கத்திற்கு மாறான ஒரு சொல்விளக்கமாக உள்ளது, இது அனேகமாக, "எனது பொறுமையைப் பற்றிக் கூறுகிற வசனம்" என்று அர்த்தப்படலாம். உறுதியுடன் நிலைத்திருத்தல் பற்றிய விஷயத்தில், இயேசு நமக்கு உதாரணத்தை விட்டுச் சென்றுள்ளார் (எபிரெயர் 12:2, 3). அவர் பொறுமையைப் பற்றிப் போதித்ததுடன் (மத்தேயு 24:13), அதை நடைமுறைப்படுத்தியும் இருந்தார்.*

[11]Alfred Plummer, *"The Revelation of St. John the Divine,"* in The Pulpit Commentary, vol. 22, *Epistles of Peter, John & Jude, The Revelation,* ed. H. D. M. Spence and Joseph S. Exell (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1950), 111. [12]*ஏசாயா 40:29; எபிரெயர் 11:34 ஆகிய வசனங்களைக் காணவும்.* [13]*"ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்கு" என்ற சொற்றொடர், சிலர் கதவைப் பூட்ட முயற்சி செய்வார்கள் என்று மறைமுகமாய் உணர்த்துகிறது. 1 கொரிந்தியர் 16:9ல் பவுல், "ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது. விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்" என்று கூறினார். சுவிசேஷ ஊழியத்தைச் சாத்தான் ஒருக்காலும் சுலபமாயிருக்கும்படி அனுமதிப்பதில்லை. கதவு திறந்திருக்கும் போது, ஈக்களும் தொல்லைப்படுத்துகிற மற்ற பூச்சிகளும் உள்ளே நுழைகின்றன! என்று யாரோ ஒருவர் சுட்டிக்காண்பித்தார்.* [14]*"திறந்த வாசல்" என்பதன் சாத்தியக்கூறுள்ள மற்ற அர்த்தங்கள் கருத்தாகத் தெரிவிக்கப்பட்டுள்ளன, இதில் பொது ஊழியத்தின் திறந்த கதவுகளும் வளர்ச்சியின் திறந்த கதவுகளும் உள்ளடங்கும். அத்துடன் கூடுதலாக, நித்திய ஆசீர்வாதத்திற்கான (2 பேதுரு 1:10, 11) "திறந்த கதவு" என்பதை அல்லது வெளிப்படுத்துதலுக்கான (வெளிப்படுத்தின விசேஷம் 4:1) "திறந்த கதவு" என்பதையும், இயேசு தமது சிந்தையில் கொண்டிருக்கலாம் என்றும் கருத்துத் தெரிவிக்கப்பட்டுள்ளது.* [15]Serendipity *என்பது ஒரு சாதனையின் மூலம் கிடைக்கக் கூடிய எதிர்பாராத பலனாக உள்ளது.* [16]*நாம் அனுகூலப்படுத்திக்கொள்ள இயலாத திறந்த வாசலைக் கர்த்தர் ஒருக்காலும் நமக்குக் கொடுப்பதில்லை. "கர்த்தர் கட்டளையிடுகின்றபோது, அதை நிறைவேற்றுவதற்கான பலத்தையும் அளிக்கின்றார்" என்று யாரோ ஒருவர் கூறியுள்ளார்.* [17]*இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களே "உண்மையான" யூதர்கள் என்று பவுல் வலியுறுத்தியிருந்தார் (ரோமர் 2:28, 29).* [18]*கி.பி. 70ல் எருசலேமின்*

அழிவிற்குப் பின்பு, ஜெப ஆலயங்களில் கிறிஸ்தவர்களுக்கு எதிரான ஆழ்ந்த வெறுப்பு முடுக்கிவிடப்பட்டது. [19]KJV வேதாகமத்தில் "Worship" என்ற வார்த்தை உள்ளது, ஏனென்றால் இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது "ஆராதனை" என்பதற்குரிய பொதுவான வார்த்தையாக உள்ளது. ASV வேதாகமத்திலும் "Worship" என்றே உள்ளது, ஆனால் இது பின்வரும் அடிக்குறிப்பைச் சேர்த்துள்ளது: "The Greek word denotes an act of reverence, whether paid *to a creature,* or to the Creator." ["இவ்விடத்தின் கிரேக்க வார்த்தையானது படைக்கப்பட்டவற்றிற்கோ அல்லது படைத்தவருக்கோ காண்பிக்கிற பயபக்தியைக் குறிப்பிடுகிறது"]. புறஜாதியார் ஒருநாளிலே யூதர்களுக்கு முன்பாகப் பணிந்துகொண்டு அவர்கள் உண்மையான தேவனை ஆராதிப்பதை ஒப்புக்கொள்வார்கள் என்பது பற்றி ஏசாயா பேசினார் (ஏசாயா 49:23; 60:3, 14). இந்த வாக்குத்தத்தத்தை ஒரு திரிபுநிலையாக இயேசு கொடுத்தார்: இப்போது யூதர்கள் அந்த ஒப்புக்கொள்ளுதலைச் செய்வார்கள். [20]கடிதத்தின் தொடக்கத்தில் இயேசுவைப் பற்றிய விவரிப்பு மேசியாத்துவப் பண்புகளை வலியுறுத்திற்று என்று அவர்கள் சுட்டிக்காண்பிக்கின்றார். மேலும் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்டு இருபது ஆண்டுகளுக்குப் பின்பு, பிலதெல்பியாவில் இருந்து மற்றும் அந்த நகரத்தில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதத்தொடர்புகள், அந்த சபைக்குழுமம் யூதத்துவப் போதகர்களினால் பாதிக்கப்பட்டிருந்ததைச் சுட்டிக்காண்பித்தன - இவற்றில் யூதர்கள் சிலர் கிறிஸ்தவர்களானது பற்றியும் சுட்டிக்காண்பிக்கப்பட்டுள்ளது என்றும் குறிப்பிடுகின்றனர். இவ்வாறு சிந்திப்பவர்கள், "பாதிக்கப்பட்டவர்களும் வெற்றியாளர்களும் வெற்றியை ஒருசேரப் பகிர்ந்து கொள்கின்றனர்" என்பது பற்றிப் பேசுகின்றனர்.

[21]ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பலர், "சோதனை காலம்" என்பது, இயேசுவின் ஆயிரம் ஆண்டு அரசாட்சி தொடங்குவதற்கு முன்னதாக பூமியில் ஏற்படவிருக்கும் ஏழு ஆண்டுகள் உபத்திரவத்தைக் குறிக்கிறது என்று போதிக்கின்றனர். ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "பல ஆயிரமாண்டு முன் அரசாட்சிக் கொள்ளைக்காரர்களால் முன்மொழியப்பட்ட வெளிப்படுத்தின விசேஷத்தின் புறக்குறிப்பு" என்ற வரைவட்டவணையைக் காணவும்.) இருப்பினும், இந்த "சோதனை காலம்" என்பது "பூச்சக்கரம் எங்கும் வரவிருந்தது" [ஆங்கிலத்தில், "*about to come* upon the whole world" என்றுள்ளது; இது "விரைவில் வரவிருந்த" என்று அர்த்தப்படுகிறது] என்பதைக் கவனியுங்கள். பத்தொன்பது நூற்றாண்டுகளுக்கும் அப்பால் ஏற்படவிருக்கும் ஒரு உபத்திரவத்தைப் பற்றியல்ல, ஆனால் உடனடியான எதிர்காலத்தின் பிரச்சனைகளைப் பற்றியே பேசினார். [22]இது முழு உலகத்தையும், மக்கள் இருந்த முழு உலகத்தையும் அல்லது ரோமப் பேரரசைக் குறிப்பதாக இருக்கலாம். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் ரோமப்பேரரசுதான் அடிப்படை அக்கறைக்குரிய விஷயமாக இருந்தது. [23]துன்பம் வந்தபோது மனிதர்கள் மனந்திரும்பவில்லை என்ற உண்மையின் மீதுள்ள வலியுறுத்தத்தைக் கவனியுங்கள் (9:20, 21; 16:9, 11). இது, அவர்கள் மனந்திரும்ப வேண்டும் என்பது தேவனுடைய விருப்பமாக இருந்தது என்று சுட்டிக்காண்பிக்கிறது (2 பேதுரு 3:9ஐக் காணவும்). [24]சோதிக்கப்படுபவர்களின் உண்மை இயல்பை வெளிப்படுத்துதல் என்பது சோதனையின் இன்னொரு நோக்கமாக உள்ளது. அதுபோலவே, மனந்திரும்பாதவர்கள் சோதனையில் தவறிப்போய், உண்மையான தேவனை எதிர்த்து நிற்பவர்களைப் போலவே வெளிப்படுத்தப்படுவார்கள். பழைய ஏற்பாட்டில் இதைப்போன்ற இணைக்கருத்து ஒன்றைக் காண்பதற்கு, உபாகமம் 4:34; 7:19; 29:2, 3 ஆகிய வசனங்களில் "சோதனை" (அதாவது, சோதிக்கப்படுதல்) என்ற வார்த்தையைக் கண்ணோக்கவும். [25]Henry Alford, quoted by Hailey in *Revelation*, 152.

[26]பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்கள், அந்த நாட்களில் ஏற்பட்ட இடர்ப்பாடுகள் சிலவற்றில் இருந்து தப்பித்தனர் என்று சிலர் நம்புகின்றனர். பூமியதிர்ச்சியைப் பற்றிய பயத்தினால், ட்ரேஜன் என்பவர் பிலதெல்பியா நகரில் இருந்து புறம்பே தங்கியிருந்தார் என்றும், பொருளை அபகரிக்கும் காட்டுமிராண்டிக் கும்பல்கள், பெரிய நகரங்களைக் காட்டிலும் குறைவான செல்வங்கள் கொண்டிருந்தபடியால் பிலதெல்பியா நகரத்தைக் கடந்து சென்றனர் என்றும் அவர்கள் கூறுகின்றனர். உலகப் பிரகாரமான இந்த விதிவிலக்குகள் இயேசுவின் வாக்குத்தத்தத்தின் பாகமாக இருந்திருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம், ஆனால் இயேசு தமது மக்களுக்கு உலகப்பிரகாரமான பாதுகாப்பை அல்ல, ஆனால் ஆவிக்குரிய பாதுகாப்பையே அடிப்படையில் கொடுக்கின்றார் என்று வெளிப்படுத்தின புத்தகத்தின் எஞ்சிய பகுதி வலியுறுத்துகிறது. [27]தெய்வீகப் பாதுகாப்பு என்பது பற்றி, 144,000 பேர் (7:3, 4) முத்திரையிடப்படுதலைப் பற்றி கலந்துரையாடலில் அதிகமாய் ஆராயப்படும். இந்தப் புத்தகத்தில், "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற இனிவரும் பாடத்தில் காணவும். [28]நமது திராணிக்கு மேலாக நாம் சோதிக்கப்பட மாட்டோம் (1 கொரிந்தியர் 10:13) என்பது போன்ற கர்த்தருடைய வாக்குத்தத்தத்தின் பிற காரணிகள் உள்ளடங்கியிருக்கின்றன. [29]''சீக்கிரமாய் வருகிறேன்'' என்ற சொற்றொடர், தற்காலிக வருகையையோ அல்லது இரண்டாம் வருகையையோ குறிப்பிடக்கூடும். இயேசு எந்த வேளையிலும் வரலாம் என்ற கருத்தமைவில், இரண்டாம் வருகையானது "நிச்சயமானதாக" நினைக்கப்படலாம் (யாக்கோபு 5:7, 9; பிலிப்பியர் 4:5ஐக் காணவும்), ஆனால் சந்தர்ப்பப் பொருளானது தற்காலிக வருகைக்கே ஆதரவாக உள்ளது. [30]திருடன் ஒருவனால் திருடப்பட்ட செல்வம் என்ற உருவகத்தை இயேசு, கிரீடம் (அதாவது, இரட்சிப்பு) என்பது இழந்துபோகப்படவும் கூடியதாக உள்ளது என்ற உருவகத்திற்குப் பயன்படுத்தினார். வெளிப்படுத்தின விசேஷத்தில், விசுவாசவிலக்கம் சாத்தியமானதுதான் என்பதைப் போதிக்கும் அநேக வசனப்பகுதிகளில் இதுவும் ஒன்றுக இருக்கிறது. இருப்பினும், இந்த உருவகம் அந்த சத்தியத்தை விவரிப்பதாக மாத்திரம் உள்ளது என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். இது, யாரேனும் ஒருவர் உங்கள் இரட்சிப்பைத் தமக்காக எடுத்துக்கொண்டு, அவ்வாறு எடுக்கப்பட்ட உங்கள் இரட்சிப்பை அவர் நித்தியத்திற்கும் அனுபவிக்க முடியும் என்று போதிப்பதில்லை.

[31]"பற்றிக்கொண்டிரு" என்பது நிகழ்கால வினைச்சொல்லாக உள்ள ஒரு தனித்த கிரேக்க வினைச்சொல்லை மொழிபெயர்த்ததாக உள்ளது, இது தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. அவர்கள் தொடர்ந்து ''பற்றிக்கொண்டிருக்கும்படி'' அறிவுறுத்தப்பட்டனர். [32]''ஆலயம்'' என்பது (1 கொரிந்தியர் 3:16; எபேசியர் 2:21; மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 11:1, 2 ஆகிய வசனங்களில் உள்ளதுபோல்) சபையை அர்த்தப்படுத்தக்கூடும். இயேசு, நிறைவாக வெற்றியடையப் போகின்றவர்களைப் பற்றிப் பேசியதால், "ஆலயம்" என்பது அனேகமாக - வெளிப்படுத்தின விசேஷ புத்தகத்தின் பெரும்பான்மையான பகுதிகளில் குறிப்பிடப்படுவது போல - பரலோகத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (11:19; 14:17ஐக் காணவும்). பிற்பாடு யோவான், பரலோகத்தில் ஆலயம் எதையும் தான் காணவில்லை என்று கூறினாரே (21:22) என்று சிலர் மறுப்புரைக்கின்றனர். உருவகங்கள் இந்தப் புத்தகத்தினூடே மாறக்கூடும் மற்றும் சீர்த்தன்மை என்பது மிகமுக்கியமான காரணியல்ல என்பவற்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். இருப்பினும், 3:12ஐ 21:22 உடன் ஒப்புரவாக்க வேண்டியது அவசியம் என்று நீங்கள் நினைத்தால், பின்வருவது பற்றி ஆழ்ந்து சிந்தியுங்கள்: பரலோகம் முழுவதுமே தேவனுடைய ஆலயமாயிருக்கும் (அங்கு நாம் அவரை ஆராதித்து அவரைச்

சேவிப்போம்); இவ்விதமாக, யோவான் அங்கு, "ஆலயம்" என்று அழைக்கப்பட்ட கட்டிடம் ஒன்றைக் கண்டிருக்க மாட்டார். [33]*இன்றைய நாட்களில் எழுப்பப்படுகின்ற நினைவு வில்லைகள் அல்லது பிற நினைவுச்சின்ன வகைகள் பற்றிய ஒப்பீடு ஒன்றை ஏற்படுத்த முடியும்.* [34]*அலாஷெர் என்பது இந்தக் கிராமத்தின் பெயராக உள்ளது.* [35]*இந்தப் பகுதியில், பழங்காலத்திய சபைக்கட்டிடம் ஒன்றின் சிதிலங்கள் உள்ளன - இது, அங்கு ஒருகாலத்தில் இயேசுவைப் பற்றிய விசுவாசம் மலர்ந்து செழித்திருந்தது என்பதை நினைவூட்டுவதாக உள்ளது - அதே வேளையில், தெருவின் குறுக்கே, ஒரு பெரிய முஸ்லீம் மசூதியானது இன்னமும் அன்றாடம் பயன்படுத்தப்படுவதாக உள்ளது.* [36]*கிரேக்க வசனப்பகுதியில் இவ்விடத்தில் இரண்டு எதிர்மறைச் சொற்கள் பயன்படுத்தப்படுதலானது இந்தக் கூற்றை வலிவார்ந்ததாகச் செய்கிறது:* "He will *not* go out, by *no* means!" *(அதினின்று அவன் ஒருக்காலும் நீங்குவதில்லை.)* [37]Quoted by James M. Tolle, *The Seven Churches of Asia* (Pasadena, Tex.: Haun Publishing Co., 1968), 69. [38]*வசனம் 12ல் தேவன் உயர்த்தப்படுகின்றார்: "என் தேவன்" என்ற சொற்றொடர் நான்கு முறைகள் வருகிறது.* [39]*இந்த "எருசலேம்" என்பது "பரலோகத்தில் இருந்து இறங்கி வருகிறது" என்பதால், சிலர் இதை பூமியில் உள்ள சபையுடன் அடையாளப்படுத்தியுள்ளனர். சிலர், இது "இயேசுவின் ஆயிரம் ஆண்டுகள் அரசாட்சி"யாக உள்ளது என்றும்கூடக் கருத்துத் தெரிவித்துள்ளனர். இருப்பினும், இது பரலோக வட்டாரத்தில் உள்ள மகிமைப்படுத்தப்பட்ட சபையைக் குறிக்கிறது என்றும் "பரலோகத்தில் இருந்து இறங்கி வருகிற" என்ற சொற்றொடரானது, இது நமக்காகத் தேவன் அருளுகிறது என்பதை மாத்திரமே வலியுறுத்துகிறது என்றும் பெரும்பாலான எழுத்தாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.* [40]*எபிரெயர் 13:14ஐக் காணவும்.*

[41]*அனேகமாக, முன்பே 2:17ல் குறிப்பிடப்பட்ட அதே "புதிய நாமமாக" இருக்கலாம். பிலதெல்பியா நகரத்திற்கு ஆண்டுகளினூடே பல்வேறு பெயர்கள் தரப்பட்டிருந்தபடியால், அதில் குடியிருந்தவர்களுக்கு, "புதிய நாமம்" என்பதன் கருத்து, விசேஷித்த தனிச்சிறப்பான குறிப்பைக் கொண்டதாக இருந்திருக்கும்.* [42]*நீங்கள் உங்களுக்கு - மற்றும் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கு - நடைமுறைப் பயன்பாட்டை மேற்கொள்ள விரும்பலாம். அவர்கள் கிறிஸ்தவரல்லாதவர்களாய் இருந்தால், சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியும்படி அவர்களை ஊக்குவியுங்கள் (நடபடிகள் 2:36-38).*

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *ஏழு சபைகளில் மிகச்சிறந்தது எது? மிகவும் மோசமானது எது? (அடுத்த பாடத்தைக் காணவும்.)*
2. *"பிலதெல்பியா" என்ற பெயர் எதை அர்த்தப்படுத்துகிறது?*
3. *அட்டாலஸ் ஏன் பிலதெல்பியாவை நிலைநாட்டினார்? இது அங்குள்ள சபைக்குக் கர்த்தரின் நோக்கத்துடன் எவ்வாறு உறவுபடுகிறது?*
4. *பிலதெல்பியா கொண்டிருந்த புவியியல் ரீதியான பிரச்சனை என்ன? இந்தப் பிரச்சனையானது இக்கடிதத்தின் முடிவுப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட வாக்குத்தத்தங்களில் பிரதிபலிக்கிறதா?*

5. புதிய ஏற்பாட்டில், "திறந்த வாசல்" என்ற உருவகம் எதைக் குறிப்பிடுகிறது?
6. "கொஞ்சம் பெலன்" என்பது அவமதித்தலையா அல்லது பாராட்டு தலையா, எதை நோக்கங் கொண்டிருந்தது?
7. "சாத்தானுடைய கூட்டம்" என்பது எதுவாக இருந்தது?
8. யூதர்கள் எந்தக் கருத்தமைவில் கிறிஸ்தவர்களின் பாதங்களில் "பணிந்து" கொள்வார்கள்?
9. "பூச்சக்கரத்தின்மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலம்" என்பது எதுவாக இருந்தது?
10. அவர்களை இயேசு, "சோதனைகாலத்தில்" தப்புவிப்பதாகக் கூறியபோது, கிறிஸ்தவர்கள் சோதனையில் இருந்து விதிவிலக்குப் பெறுவார்கள் என்று அவர் அர்த்தப்படுத்தினாரா?
11. வெளிப்படுத்தின விசேஷத்தில், "பூமியின் மீதெங்கும் குடியிருக்கிறவர்கள்" என்பவர்கள் யார்?
12. 3:12ல் "தூண்" என்ற சொற்றொடரின் சில மறைவான கருத்துக்கள் யாவை?
13. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில், தூண்களில் பெயர்கள் எழுதப்பட்டது ஏன்?
14. "புதிய எருசலேம்" என்றால் என்ன?
15. இந்தக் கடிதத்தில் உங்களுக்கு அறைகூவல் விடுத்த அல்லது ஆறுதல் படுத்திய விஷயம் எதையாவது நீங்கள் கண்டறிந்தீர்களா?



புதிய எருசலேம் (21:2, 10)

17

தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 1

[3:14-17]

பிலதெல்பியாவுக்குத் தென்கிழக்கில் நாற்பத்து மூன்று மைல்கள் தொலைவில், லவோதிக்கேயாவின் பரந்து விரிந்த சிதிலங்கள் கிடக்கின்றன.[1] இந்த நகரம் அகழ்ந்தெடுக்கப்படவில்லை, மற்றும் கனத்த வளைவுகளின் உச்சிகளும் மற்ற கட்டிட அமைப்புகளும், "தன்னை ஏற்படுத்தியிருந்ததாக" நினைத்த மேட்டிமையான நகரத்தின் கவலைக்குரிய நினைவுகளில், பேருருவான கல்லறைக்கற்கள் போன்று பாறை நிலத்தில் இருந்து வெளிக்கிளம்பியவைகளாக உள்ளன. ஆசியா மைனர் பகுதியில் நான் பயணம் சென்று கண்டிருந்த இடங்களில் எதுவும், லவோதிக்கேயாவின் வறண்ட தனிமையைப்போல் என் இருதயத்தைக் கலக்கம் அடையச் செய்தது இல்லை.

இந்தப் பாடமானது "ஆசியாவிலுள்ள ஏழு சபைகள்" (1:4அ) பற்றிய கடைசிப் பாடமாக உள்ளது. நாம் எபேசுவில் தொடங்கி பெர்கமு கடற்கரை வரையிலும் சென்றோம். தியத்தீராவை நோக்கி உள்நாட்டிற்கு வந்தபின்பு, நாம் லவோதிக்கேயாவை நோக்கித் தெற்கு முகமாய்ப் பயணம் செய்கின்றோம். அந்த நகரத்தில் இருந்து, மேற்கில் எண்பது மைல்கள் பயணம் செய்தால் நாம் திரும்பவும் எபேசுவில் இருப்போம் - நமது வட்டப்பயணம் நிறைவடையும்![2]

பண்புகள்

லவோதிக்கேயா நகரத்தின் மூன்று பண்புகள் அங்கிருந்த சபையுடன் நேரடியாக உறவுபடுகின்றன:

(1) அங்கிருந்த குடிமக்களில் பலர் செல்வந்தர்களாய் இருந்தனர். லவோதிக்கேயா நகரம், அந்த நாட்களில் உலகத்தின் செல்வம்மிகுந்த வர்த்தக நகரங்களில் ஒன்றாக இருந்தது. அதன் - கிழக்கு நாடுகளுக்குச் செல்லும் மிக முக்கியமான நெடுஞ்சாலையின் பக்கமாய் அகன்றிருந்த - வியூகத்துவமான நிலையானது அதை மாபெரும் வங்கிகளுடன் கூடிய ஒரு நிதிநிலை மையமாக்குவதற்கு உதவியிருந்தது. அது, "ஆசியாவின் வால் தெரு"[3] என்றும் "கோடீஸ்வரர்களின் நகரம்" என்றும் அழைக்கப்பட்டிருந்தது.

அதன் குடிமக்கள் நிதிநிலை சார்ந்த விஷயங்களில் "அதை நிலைநாட்டி/ஏற்படுத்தி" இருந்ததாக நினைத்திருந்தனர். அவர்களிடத்தில் யாரேனும் ஒருவர், "உங்களுக்கு நான் எவ்விதத்தில் உதவக்கூடும்?" என்று

கேட்டால், அவர்களின் பதிலானது "எங்களுக்கு ஒன்றும் தேவையில்லை" என்பதாகவே இருக்கும் (3:17ஐக் காணவும்). கி.பி. 60ல் ஒரு பூமியதிர்ச்சியினால் லவோதிக்கேயா அழிக்கப்பட்டபோது, அதன் குடிமக்கள் ரோமாபுரியில் இருந்து வந்த உதவியை ஏற்க மறுத்து, தங்கள் சொந்த செலவிலேயே நகரத்தைக் திரும்பக் கட்டியெழுப்பினர்.[4]

(2) பொதுவாக அவர்கள் ஆரோக்கியம் உள்ளவர்களாய் இருந்தனர். அந்த நகரத்திலிருந்த வெளியில் பதிமூன்று மைல்கள் தூரத்தில், புகழ்பெற்ற மருத்துவ மையம் ஒன்று இருந்தது. கண்களுக்குக் கலிக்கமாக ஏற்படுத்தக் கூடிய பிரகியாவின் துகள் ஒன்று அவ்விடத்தில் தயாரிக்கப்பட்டது. இந்தத் துகள் உலகம் முழுவதற்கும் அனுப்பப்பட்டது.

உலகப்புகழ் பெற்றிருந்த மருத்துவ குணம் வாய்ந்த வெந்நீர் ஊற்றுக் களைக் கொண்டிருந்த ஏராப்போலிஸ் (கொலோசெயர் 4:13) என்ற இடமானது, ஆறுமைல்கள் தூரத்தில் இருந்தது. எனது பயணக் குழுவினர் லவோதிக்கேயாவின் சிதிலங்களைப் பார்த்தபோது, எங்கள் பயண வழிகாட்டி, தொலைவில் இருந்த, வெள்ளை வண்ணம் பூசப்பட்டதாய்க் காணப்பட்ட ஒரு கரையைச் சுட்டிக்காண்பித்தார். "அங்கே அந்தக் கரையின் உச்சியில் ஏராப்போலிஸ் உள்ளது" என்று அவர் கூறினார். நாங்கள் அங்கு வாகனத்தில் சென்றபோது, மலைக்குன்றில் இருந்து ஓடிவந்த தண்ணீரில் இருந்து தாதுக்கள் படிந்தபடியினால் அந்த நிறமாற்றம் ஏற்பட்டிருந்ததைக் கண்டோம். அந்தக் கரையின் உச்சியில், பயணிகளைக் கவர்ந்திழுக்கும் நூற்றுக்கணக்கான சிறுகுளங்கள், வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில் இருந்தது போலவே இருந்தன. அந்தப் பகுதியானது நீண்டகாலமாகவே, ஒரு ஆரோக்கிய சாலையாக இருந்துள்ளது.[5]

(3) அவர்களில் பெரும்பான்மையானவர்கள் நன்கு உடுத்தியவர்களாய் இருந்தனர். வழக்கத்திற்கு மாறான நேர்த்தியான கம்பளிரோமம் கொண்ட கறுப்பு ஆடுகள் [black sheep][6] *அருகில் இருந்த குன்றுகளில் மேய்ந்து கொண்டிருந்தன. இந்த ஆடுகளில் இருந்து கிடைத்த மென்மையான, பளபளப்புள்ள கறுப்புக்கம்பளியானது விலையுயர்ந்த உடையாகத் தயாரிக்கப்பட்டது. இந்த உடையானது உலகச் சந்தைகளில் மிக உயர்ந்த விலைகளைப் பெற்றுத் தந்தது, ஆனால் லவோதிக்கேயாவின் குடிமக்களுக்கு இவைகள் நியாயமான விலைகளில் கிடைத்தன. இவ்விதமாக நாம் லவோதிக்கேயாவின் பின்வரும் பண்புகளைக் காண்கின்றோம்:*

நகரம்
செல்வவளம் (வங்கித்துறை) *மருத்துவ மையம் (கண்களுக்கு விசேஷித்த சிகிச்சை)* *உடைத் தயாரிப்பு நிறுவனம் (கறுப்புக் கம்பளி)*

சபைக்குழுமம் (3:14அ)

"லவோதிக்கேயா சபையின் தூதனுக்கு நீ எழுதவேண்டியது என்னவெனில்": (வசனம் 14அ). லவோதிக்கேயாவில் இருந்த சபைக்குழுமம், அனேகமாகப் பவுல் எபேசுவில் இருந்தபோது நிலைநாட்டப்பட்டிருக்கலாம் (நடபடிகள் 19:1, 8-10).[7] எவ்வகையிலும், இதனுடனும் இதன் உறுப்பினர்களுடனும் அப்போஸ்தலர் (பவுல்) நன்கு பழக்கப்பட்டவராக இருந்தார். அவர் கொலோசெயருக்கு (லவோதிக்கேயாவில் இருந்து சுமார் பத்து மைல்கள் தொலைவில் இருந்த ஊர்) எழுதியபோது, "உங்களுக்காகவும் லவோதிக்கேயாவிலிருக்கிற வர்களுக்காகவும் ... மிகுந்த போராட்டம் எனக்கு உண்டென்று நீங்கள் அறியவிரும்புகிறேன்" என்று எழுதினார் (கொலோசெயர் 2:1அ). அந்த நிருபத்தின் முடிவில், லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களை அவர் மீண்டும் குறிப்பிட்டு, அவர்களுக்கு ஒரு கடிதத்தைத் தாம் அனுப்பி யிருந்ததாகக் கூறினார்:

> *லவோதிக்கேயாவிலிருக்கிற சகோதரரையும், நிம்பாவையும், அவன் வீட்டில் கூடுகிற சபையையும் வாழ்த்துங்கள். இந்த நிருபம் உங்களிடத்தில் வாசிக்கப்பட்டபின்பு இது லவோதிக்கேயா[8] சபையிலும் வாசிக்கப்படும்படி செய்யுங்கள். லவோதிக்கேயாவி லிருந்து[9] வரும் நிருபத்தை நீங்களும் வாசியுங்கள் (கொலோசெயர் 4:15, 16).*

வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், லவோதிக்கே யாவில் இருந்த சபைக்குழுமம் சுமார் முப்பது ஆண்டுகளுக்கும் அதிகமான காலங்களாக இருந்து வந்தது.

கிறிஸ்து (3:14ஆ, இ)

சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் முதன்முறையாக (மற்றும் ஒரே முறை), இயேசு தம்மை அடையாளப்படுத்திக் கொள்வதற்குப் பயன்படுத்திய சொற்றொடர்களின் பெரும்பகுதியானது, வெளி. புத்தகத்தின் முதல் அதிகாரத்தில் பயன்படுத்தப் பட்டவற்றைப் பிரதிபலிக் காததாக இருந்தது.[10] ஒரு மருத்துவர், நோயாளிக்கான தமது சிகிச்சை முறையை விசேஷித்த தேவைகளுக்கு ஏற்றாற்போன்று தகவமைத்துக் கொள்வதுபோல், இயேசு தமது கடிதங்களை, குறிப்பிட்ட சபைக்குழுமங் களின் தேவைகளைச் சந்திக்குமாறு தகவமைத்துக் கொண்டார். இந்தக் கடிதத்தில் இயேசு பட்டியலிட்ட பண்புகள், லவோதிக்கேயாவில் இருந்த சபையின் பண்புகளுடன் மிகநுண்மையான வகையில் நேர்மாறானவை களாய் இருந்தன.

முதலாவது, நிச்சயமற்ற செல்வங்களில் நம்பிக்கை வைத்திருந்த ஒரு சபைக்குழுமத்திற்கு, இயேசு தம்மை, எப்போதும் நம்பிக்கை வைக்கப்படக் கூடியவர் என்று அடையாளப்படுத்தினார்: "உண்மையும் சத்தியமுமுள்ள

சாட்சியும், ... ஆமென் என்பவர்" (வசனம் 14ஆ).

வேதாகமத்தில் இந்த ஒரு இடத்தில் மட்டுமே "ஆமென்" என்பது இயற்பெயராகக் காணப்படுகிறது.[11] சிலர், "ஆமென்" என்பது ஜெபம் முடிந்தது என்பதற்கான ஒரு வார்த்தை அடையாளக்குறி என்பதைவிட அதிகமானதாக இருப்பதில்லை என்று நினைக்கின்றனர், ஆனால் இவ்வார்த்தையானது ஒரு விசேஷித்த அர்த்தத்தைக் கொண்டுள்ளது. இது முதலில் ஒரு எபிரெயச் சொல்லாகவும், பின்பு ஒரு கிரேக்கச் சொல்லாகவும் இருந்தது, இப்போது இது ஒரு ஆங்கில மற்றும் தமிழ்ச் சொல்லாக இருக்கிறது; ஆனால் எந்த மொழியிலும் இது உண்மைநிறைந்த தன்மையை உறுதிப்படுத்துவதாக உள்ளது.[12] ஒரு பொது ஜெபத்தில் நாம், நமது "ஆமென்" என்பதைக் கூட்டும்போது (1 கொரிந்தியர் 14:16), நாம் அந்த ஜெபத்தின் மீது நமது அங்கீகார முத்திரையை இடுகின்றோம். வேதாகமச் செய்திக்கு நாம் "ஆமென்" என்று கூறும்போது (நெகேமியா 5:13), நாம் "அது சரியானது!" என்று கூறுகின்றோம். "ஆமென்" என்பதை ஜெபத்தின் தொடக்கத்திலோ அல்லது முடிவிலோ (வெளிப்படுத்தின விசேஷம் 7:12; 22:20, 21) அல்லது எந்த வேளையிலும் ஒரு விஷயம் மெய்யானது என்பதை உறுதிப்படுத்த நாம் விரும்பும்போதோ பயன்படுத்தலாம். இயேசு, கனமான கூற்றுக்களுக்கு முன்பாக "மெய்யாகவே"[13] என்ற வார்த்தையை அடிக்கடி பயன்படுத்தினார் (மத்தேயு 5:18; யோவான் 1:51ஐக் காணவும்); "மெய்யாகவே" என்பது ஆமென் என்ற வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.

"ஆமென்" என்ற சொற்பதம், "உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும்"[14] என்ற சொற்றொடருடன் பிணைக்கப்படுகின்றபோது, இயேசுவின் மீது முழுமையாக நம்பிக்கை வைப்பதற்கான வல்லமை நிறைந்த ஒரு கூற்றை நாம் பெறுகின்றோம்!

இரண்டாவது, சுய நிறைவு கொண்டிருந்ததாக உணர்ந்திருந்த ஒரு சபைக்குழுமத்திற்கு, இயேசுவே அவர்களின் உலகப்பிரகாரமான ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாக இருந்ததாகக் குறிப்பிட்டார்: "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிற ... வர்" (வசனம் 14இ). "தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்" என்ற சொற்றொடர், "சிருஷ்டிக் கப்பட்டவர்களில் முதல்வர்"[15] என்று அர்த்தப்படுத்துவதில்லை, ஆனால் அதற்கு மாறாக, "எல்லாவற்றையும் தொடங்கி வைத்தவர்"[16] என்றே அர்த்தப்படுகிறது. NASB வேதாகமத்தில், "சிருஷ்டிக்கு" என்ற வார்த்தையின்மீது பின்வரும் பக்கக் குறிப்பு உள்ளது: "I.e., origin or source"[17] ("அதாவது, ஆதாரமூலத்தின் தொடக்கம்"). இயேசுவினால் பயன்படுத்தப்பட்ட இந்தச் சொல்லாக்கமானது, பவுல் கொலோசெயருக்கு எழுதிய நிருபத்தில் பயன்படுத்திய சொல்லாக்கத்தைப் போன்றதாக உள்ளது:

> அவர் அதரிசனமான தேவனுடைய தற்சுரூபமும், சர்வ சிருஷ்டிக்கும் முந்தின பேறுமானவர். ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. பரலோகத்திலுள்ளவைகளும் பூலோகத்திலுள்ளவைகளுமாகிய காணப்படுகிறவைகளும் காணப்படாதவைகளுமான சகல வஸ்துக்களும், சிங்காசனங்களானாலும், கர்த்தத்துவங்

களானாலும், துரைத்தனங்களானாலும், அதிகாரங்களானாலும், சகலமும் அவரைக்கொண்டும், அவருக்கென்றும் சிருஷ்டிக்கப் பட்டது. அவர் எல்லாவற்றிற்கும் முந்தினவர், எல்லாம் அவருக்குள் நிலைநிற்கிறது (கொலோசெயர் 1:15-17).[18]

"அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது" என்றால், லவோதிக்கேயர்கள் தங்களின் உலகப்பிரகாரமான வளமைக்காகத் தங்களையே பாராட்டிக் கொள்வதற்குப் பதிலாக, கர்த்தருக்கு நன்றிசெலுத்துபவர்களாய் இருந்திருக்க வேண்டும்.

அவர்களின் நிலை (3:15)

லவோதிக்கேயர்களின் நிலை பற்றிய இயேசுவின் மதிப்பீடானது, அவர்கள் ஏற்றுக்கொள்வதற்குக் கடினமானதாய் இருந்த காரணத்தினால், இயேசு தமது நம்பத்தகுந்த தன்மையையும் தெய்வீகத்தையும் வலியுறுத்தி யிருக்கலாம். லவோதிக்கேயாவில் இருந்த சபையானது பாராட்டு எதையும் பெற்றிராத ஒரே சபையாக இருந்தது. சர்தையில் இருந்த சபை ஒரு குழு என்ற வகையில் பாராட்டு எதையும் பெற்றிருக்கவில்லை, ஆனால் அவர்கள் அப்போதும்கூட, "தங்கள் வஸ்திரங்களை அசுசிப்படுத்தாத சிலபேர்" களைக் கொண்டிருந்தனர் (3:4). லவோதிக்கேயாவில் "சிலபேர்"கூட அவ்வாறு இருக்கவில்லை. ஆகையால் இயேசு, தாம் கூறவேண்டியிருந்த யாவும், வார்த்தைகள் மகிழ்ச்சியற்றவைகளாய் இருந்தாலும், மெய்யான வைகளே என்று உறுதிப்படுத்துவதைக் கொண்டு தொடங்கினார்!

இயேசு, "உன் கிரியைகளை அறிந்திருக்கிறேன்" (வசனம் 15அ) என்று கூறியதன்மூலம், சபைக்குழுமத்தைப் பற்றிய தமது மதிப்பீட்டைத் தொடங்கினார். லவோதிக்கேயாவில் இருந்த சபை "கிரியைகளை" கொண்டிருந்தது என்பதை அவர் மறுக்கவில்லை; அவர்கள் சிலவற்றைச் செய்துகொண்டிருந்தனர். இருப்பினும், அவர்கள் செய்து கொண்டிருந் தவை எதுவாயிருப்பினும், அவைகள் பணத்தொடர்பானவைகளாயும் பெருமைபாராட்டக்கூடியவையாகவுமே இருந்தன: "நாங்கள் வெள்ள நிவாரணத்திற்கென்று அந்தியோகியாவுக்கு ஆயிரம் சேக்கல்களை அனுப்பி வைத்தோம்! நாங்கள் எத்தியோப்பியாவுக்குப் பன்னிரண்டு இரதங்கள் நிறைய உணவுப் பொருட்களை அனுப்பி வைத்தோம்!" தேவன் ஒரு மனிதனை உலகப்பிரகாரமான பொருட்களினால் ஆசீர்வதிக்கும்போது, தனிப்பட்ட ஈடுபாடு எதுவும் இன்றி பணத்தைப் பிறருக்குக் கொடுத்தல் என்பது அம்மனிதருக்குச் சாத்தியமானதாக உள்ளது. உண்மையான தியாகம் எதையும் ஏற்படுத்தாமல் அவர் தமது மனச்சான்றுக்கு ஒத்தடம் கொடுத்துக் கொள்ளவும் சாத்தியக்கூறு உள்ளது![19]

பின்பு இயேசு அவர்களின் பிரச்சனையை எடுத்துரைத்தார்: "நீ குளிருமல்ல அனலுமல்ல" (வசனம் 15அ, ஆ). *Zestos* என்ற கிரேக்க வார்த்தையே "அனல்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதிலிருந்தே

நாம் zest (பெரும் ஆர்வம்) என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். இது "கொதிநிலையுள்ள அனலாக இருத்தல்" என்று அர்த்தப்படுகிறது! "குளிர்" என்பது *Zestos* என்பதற்கு நேர்மாறானதாக இருப்பதால், "குளிர்" என்ற வார்த்தையானது பனிக்கட்டி போன்று குளிராக இருத்தலைக் குறிப்பதாக இருக்க வேண்டும் (மத்தேயு 24:12ஐக் காணவும்). லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய நிலையில் பனிக்கட்டி போலக் குளிராக (அதாவது, அவர்கள் அவிசுவாசிகளாகவும் தேவனுடைய மக்களைத் துன்புறுத்துபவர்களாகவும்) இல்லாதிருந்த வேளையில், அவர்கள் ஆவிக்குரிய வகையில் அனல் கொண்டவர்களாகவும் இருக்கவில்லை. (அவர்கள் கர்த்தருக்கென்று அனலுள்ளவர்களாய் இருக்கவில்லை.) அவர்கள் "வெதுவெதுப்பாக" மாத்திரம் இருந்தனர் (3:16).

நான் அறிந்துள்ள ஒவ்வொரு சபையும், தனது வெதுவெதுப்பான உறுப்பினர்களைக் கொண்டுள்ளது; இவர்கள், தனிப்பட்ட ஜெபம், வேதாகமப் படிப்பு, மற்றும் சுயபரிசோதனை ஆகியவற்றில் அக்கறையற்ற உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் சபைக்கு வருகை தருவதில் சீர்த்தன்மையற்ற உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் தங்கள் கொடுத்தலில் ஒருக்காலும் தியாகம் செய்திராத உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் உள்ளூர் சபையின் செயல் திட்டங்களில் கொஞ்சமே அக்கறை காண்பிக்கின்றவர்களாக உள்ளனர்; இவர்கள் வியாதிப்பட்டவர்களைச் சந்தித்தல், புலம்புபவர்களை ஆறுதல்படுத்துதல் அல்லது இழந்து போகப்பட்டவர்களுக்குப் போதித்தல் ஆகியவற்றை அரிதாகவே செய்கின்ற உறுப்பினர்களாக உள்ளனர்; இவர்கள் "கிறிஸ்துவினிமித்தம் தங்களை ஒருக்காலும் எந்த வசதிக்குறைவிற்கும் இட்டுக்கொண்டதில்லை, எந்த ஏளனத்தையும் வீரத்துடன் தாங்கியிருக்கவில்லை அல்லது எந்த ஒரு வசதியையும் கைவிட்டதும் இல்லை, ..."[20]

மாறுபாடுள்ள அந்த உறுப்பினர்களுக்கு இயேசு, "நீ குளிராயாவது அனலாயாவது இருந்தால் நலமாயிருக்கும்" என்று கூறினார் (வசனம் 15இ). இதைப் பிரசங்கியார்கள், "ஒன்று, முழுவதுமாக உள்ளிருங்கள் அல்லது முழுவதுமாக வெளியேறுங்கள்!" என்று கூறுவதன் மூலம் தொகுத்துரைத்துள்ளனர். ஒரு பிரசங்கியார், "ஆனால் கதவருகில் நிற்பதை நிறுத்திவிடுங்கள்; நீங்கள் ஒரு நழுவிச்செல்லுதலுக்குக் காரணமாகின்றீர்கள்!" என்று கூடுதலாகக் கூறினார்.

முதலில், இயேசு தாம் எதை விரும்பினார் என்று கூறியது குழப்பம் ஏற்படுத்துவதாக இருக்கலாம். அவர்கள் "அனலாக" இருக்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன் என்பதைக் காண்பது சுலபமானதாக உள்ளது. "அனல்"[21] என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையானது வழக்கமாக "ஊக்கம்" என்பதைத் தரவழைக்கிறது. எடுத்துக்காட்டாக, ரோமர் 12:11ல் பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தையானது, நாம் யாவரும் "ஆவியில் ஊக்கமாக இருந்து கர்த்தருக்கு ஊழியம் செய்யவேண்டும்" என்று அறைகூவல் விடுக்கிறது. அவர்கள் வைராக்கியமாகவும் ஊக்கமாகவும் இருக்கும்படி இயேசு விரும்பியது ஏன் என்பதைப் புரிந்துகொள்வதில் நமக்குப் பிரச்சனை எதுவும் இருப்பதில்லை.

இதற்கு மறுபுறத்தில், அவர்கள் "வெதுவெதுப்பாக" இருப்பதற்குப் பதில் "குளிராக" இருக்க வேண்டும் என்று அவர் விரும்பியது ஏன்?[22] *நாம், "ஒரு கிறிஸ்தவராக - ஒருபகுதி ஈடுபாடுள்ள கிறிஸ்தவராகவாவது - இருத்தல் என்பது, கிறிஸ்தவரல்லாதவராக இருத்தலைக் காட்டிலும் சிறந்ததாக இருப்பதில்லையா?"*[23] *என்று நாம் தர்க்கம் செய்கின்றோம். வரையரைக்குட்பட்ட ஒப்புக்கொடுத்தல் என்பது மாறுதல் அடையும் நிலையில், ஆவிக்குரிய வகையில் ஒரு படி வளரும் நிலையில் உள்ளதென்றால் நமது தர்க்கம் சரியானதாகவே உள்ளது. மதப்பின்னணி எதுவுமற்றவராக இருந்து கிறிஸ்துவுக்குள் குழந்தையாகிய ஒருவர் ஆராதனை ஊழியங்கள் சிலவற்றுக்கு வருகைதரத் தொடங்கும்போது நாம் அகம் மகிழ்கின்றோம். அவர் எதுவும் கொடுக்காத நிலையில் இருந்து சிலவற்றைக் கொடுத்தல் என்ற நிலைக்குக் கடந்து செல்வதைக் காண்பதில் நாம் சந்தோஷம் அடைகின்றோம். வளர்ச்சிக்கான எந்தச் சான்றும் அவர் கிறிஸ்தவராக வளரத்தொடங்கியுள்ளார் மற்றும் அவர் இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டியிருக்கிறது என்பதை அவர் புரிந்துகொள்ளும் வரைக்கும் கொண்டாடத்தக்கதாகவே உள்ளது.*

லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களிடத்தில் விஷயம் இப்படிப்பட்டதாக இருக்கவில்லை. அவர்களின் வெதுவெதுப்பான தன்மை என்பது ஒரு நிலையான சூழ்நிலையாக, வாழ்வின் வழியாக இருந்தது. உண்மையில் அவர்கள், தங்களின் ஆவிக்குரிய நிலையில் பெருமைகொண்டிருந்தனர் (3:17). வரைமுறைக்குட்பட்ட ஈடுபாடு என்பது மாறுதலுக்கு உட்படும் நிலையாக இருப்பதில்லை என்னும்போது, ஆவிக்குரிய முறையில் பனிக்கட்டிபோல் குளிர்ந்த நிலையில் இருத்தலைக் காட்டிலும் இது விரும்பித்தேர்ந்து கொள்ளப்படுவதாக இருப்பதில்லை. அவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதைக் காட்டிலும் குளிராய் இருந்தால் நலமாயிருக்கும் என்று இயேசு விரும்பியிருந்ததற்கு, குறைந்தது மூன்று காரணங்களைக் கொடுக்க என்னை அனுமதியுங்கள்:

(1) பனிக்கட்டிபோலக் குளிர்ந்த நிலை என்பது அதிகம் நேர்மையானதாக உள்ளது, ஏனெனில் அது கிறிஸ்தவராய் இருப்பதாக உரிமை கோருவதில்லை.

(2) சுயதிருப்தி கொண்ட, மனநிறைவு உடைய, வெதுவெதுப்பான தேவனுடைய பிள்ளையை மாற்றுவதைக் காட்டிலும், கிறிஸ்தவர் என்று நடிக்காமல்கூட இருக்கின்ற, பனிக்கட்டிபோலக் குளிர்ந்த தனிநபரை மாற்றுவது என்பது அதிக நம்பிக்கை உடையதாக உள்ளது (எபிரெயர் 6:4-6; 2 பேதுரு 2:20ஐக் காணவும்).

(3) வெதுவெதுப்பான தன்மை என்பது, குளிர்ந்த தன்மையைக் காட்டிலும் அதிகமாக சபைக்கு ஊறுவிளைவிக்கிறது. தேவபக்தியற்ற ஒரு புறதெய்வ வணக்கத்தாரைச் சுட்டிக்காண்பித்து, "அதனால்தான் நான் கிறிஸ்தவனாகவில்லை!" என்று எவரொருவரும் கூறியதாக நான் ஒருக்காலும் அறிந்தது இல்லை, ஆனால் சபையில் உள்ள அரைமனதான உறுப்பினர்களைச் சுட்டிக்காண்பித்து, "நான் ஏன் கிறிஸ்தவனாக வேண்டும்? அவர்களைப்போல நானும் நல்லவனாகவே இருக்கின்றேன்!"

என்று கூறுபவர்களை நான் அறிந்திருக்கின்றேன்.

சர்தையில் இருந்தவர்களுக்கு எழுதப்பட்ட கடிதத்தைப்போல், லவோதிக்கேயாவில் இருந்தவர்களுக்கு எழுதப்பட்ட கடிதம் - அந்த நகரத்தில் கணிசமான அளவுக்கு யூதர்கள் இருந்தனர்[24] என்ற உண்மை காணப்பட்டபோதும்கூட - உபத்திரவம் பற்றி எதுவும் குறிப்பிடுவதில்லை என்பது குறிப்பிடத்தக்கதாக உள்ளது. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களைச் சாத்தான் தனியே விட்டுவிட்டது ஏன்? அவர்கள் இருந்த நிலையிலேயே அவர்களை அவன் விரும்பினான்! அவர்கள் தங்களின் ஆவிக்குரிய வகையில் மேம்போக்காக இருக்கும் நிலையைத் தக்கவைத்துக் கொண்டிருந்த வரைக்கும், அவர்கள் ரோமாபுரியின் சிறைக்கைதிகளாய் இருக்கும் நிலையில் அவனது ஊழியத்திற்கு உதவுவதைக் காட்டிலும், அவர்கள் சுயாதீனமுள்ள மனிதர்களாய் இருக்கும் நிலையில் அதிகமாக உதவுவார்கள்!

விளைவு (3:16)

லவோதிக்கேயர்கள் தங்களின் ஆவிக்குரிய நிலைபற்றித் திருப்தியடைந்திருக்கலாம், ஆனால் கர்த்தர் அவ்வாறு திருப்தியடையவில்லை. அவர்களிடத்தில் அவர், "இப்படி நீ குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருக்கிறபடியினால் உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்[25]" என்று கூறினார் (வசனம் 16). "வாந்திபண்ணிப்போடுவேன்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *emeo* என்ற கிரேக்க வார்த்தையில் இருந்து, நாம் வாந்திக்குக் காரணமாகும்படி வடிவமைக்கப்பட்ட ஒரு முகமைப்பொருளைக் குறிக்கும் "emetic" என்ற ஆங்கில வார்த்தையைப் பெறுகின்றோம். தெளிவான மொழிநடையில் கூறுவதென்றால், இயேசு "நீ என்னை வாந்தியெடுக்க விரும்பும்படி செய்கின்றாய்" என்று கூறினார்.[26] அவர்களின் ஆவிக்குரிய சுயதிருப்தியானது, வயிற்றில் வெதுவெதுப்பான தண்ணீர் ஏற்படுத்தும் செயல்விளைவை இயேசுவுக்கு ஏற்படுத்தியிருந்தது. அநேக ஆண்டுகளாக, உடலுக்குக் கேடு விளைவிக்கக் கூடிய எதையாவது உண்டிருந்தால், அதை வாந்தி எடுப்பதன் மூலம் வெளியே கொண்டுவர வெதுவெப்பான தண்ணீர் குடிக்கக் கொடுக்கப்பட்டது. லவோதிக்கேயாவைச் சுற்றிலும் இருந்த பகுதியில் வெந்நீர் ஊற்றுக்கள் ஏராளமாய் இருந்தன, அனேகமாக ஒன்றுக்கு மேற்பட்ட தாகமுள்ள பயணிகள் அந்த ஊற்றில் இருந்து ஆழமாக தண்ணீரைக் குடித்து அதன்மூலம் குமட்டல் எடுக்கும் நிலைக்கு உட்பட்டிருக்கலாம்.

இவ்விதமாக இயேசு, "உன்னை என் வாயினின்று வாந்திபண்ணிப் போடுவேன்" என்று கூறியபோது, அவர் "நீ என்னை வியாதிப்படுத்துகின்றாய்!" என்று கூறினார். மேலும் அவர், "உன் நிர்ப்பாக்கியமான நிலையில் இருந்து நீ மனந்திரும்பாவிட்டால், என்னுடன் நீ நெருங்கிய உறவுகொள்ள இயலாது" என்றும் கூறினார்.[27] அவர்களின் நித்திய அடைவிடமானது இடர்ப்பாட்டில் இருந்தது!

நேர்மாறு
(3:17)

வாசிப்பவர், கடிதத்தின் இந்த இடத்தை அடைந்தபோது, லவோதிக்கேயர்கள் அனேகமாக, அந்தக் கடிதமானது இன்னொரு சபைக்குழுமத்திற்கு எழுதப்பட்ட கடிதமாயிருக்கலாம், அது இங்கு தங்கள் கடிதங்களுடன் கலந்திருந்தது என்று நினைத்திருக்கலாம். அவர்கள், "முகவரியை மீண்டும் பாருங்கள். பெயர்கள் ஏதோ ஒருவகையில் மாறியிருக்கவில்லை என்பதை நீங்கள் நிச்சயப்படுத்திக் கொண்டீர்களா?" என்று கேட்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. ஒரு உண்மை நிச்சயமானதாக உள்ளது: அவர்கள் தங்களைக் கர்த்தர் கண்டவிதத்தில் காணவில்லை. அவர்களிடத்தில் இயேசு, "நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்" என்று கூறினார் (வசனம் 17ஆ).[28] அவர்கள் தங்களின் ஊக்கக் குறைவிற்காக வெட்கப்படுவதற்குப் பதிலாக, அதைப்பற்றிப் பெருமை பாராட்டியிருந்தனர். ஆவிக்குரிய வகையில் தனித்திருத்தலை மக்களில் சிலர் ஒழுக்கநெறியாக எண்ணுகின்றனர்,[29] மற்றும் அவர்கள், கிறிஸ்தவர்கள் உணர்வெழுச்சியடையும்போது சங்கடப்படுகின்றனர்.

பெரும்பாலான மொழிபெயர்ப்புகளில் பிரதிபலிக்கப்பட்டிராத திரும்பக்கூறுதல் என்பது மூல வசனத்தில் உள்ளது. இவ்வசனப்பகுதியானது, நேரடி அர்த்தத்தில் "நான் ஐசுவரியவானாக இருக்கின்றேன் மற்றும் ஐசுவரியவானாகிக் கொண்டிருக்கின்றேன், எனக்கு ஒரு குறைவுமில்லை" என்றுள்ளது. திரும்ப கூறுதல் என்பது வலியுறுத்தத்திற்கானதாக உள்ளது. அவர்கள், "நாங்கள் ஐசுவரியவான்கள், ஐசுவரியவான்கள், ***ஐசுவரிய வான்கள்!*** *" என்று கூறிக்கொண்டிருந்தனர். அவர்கள் அனேகமாக, உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய ஐசுவரியங்கள் இரண்டையும் சிந்தையில் கொண்டிருக்கலாம்; பூமிக்குரிய செல்வங்களைப் பலர், பரலோகத்தின் அங்கீகாரத்திற்கு நிரூபணமாகக் கண்ணோக்குகின்றனர் (மத்தேயு 19:24, 25ஐக் காணவும்). சபைக்குழுமம் ஒன்று, வசீகரமான கட்டிடத்தையும், புகழ்பெற்ற பிரசங்கியார் ஒருவரையும், ஊழியத்திற்கான மனதை ஈர்க்கும் செயல்திட்டம் ஒன்றையும் கொண்டிருந்தும், ஒரு கதவு ஆணியைப்போல் செத்ததாக இருக்கச் சாத்தியம் உள்ளது! என்பதை நாம் அறியவேண்டும் என்று இயேசு விரும்பினார்.[30]*

லவோதிக்கேயர்கள், தாங்கள் செல்வந்தர்களாய் இருந்ததாக நினைத்தனர், ஆனால் அவர்கள் சுயமாகவே வஞ்சிக்கப்பட்டவர்களாய் இருந்தனர். இயேசு, "நீ நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்க வனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாயிருக்கிறதை அறியாமல்" என்று கூறினார் (வசனம் 17அ). "மனுஷன் பார்க்கிறபடி தேவன் பார்க்கிற தில்லை" என்பது மீண்டும் ஒருமுறை நமக்கு நினைவுபடுத்தப்படுகிறது (1 சாமுவேல் 16:7).

அவர்களின் ஆவிக்குரிய நிலையைத் தொகுத்துரைக்க முதலில் இயேசு, பொதுவான சொற்றொடர்களைப் பயன்படுத்தினார். "நிர்ப்பாக்கியம்"[31]

என்பது அவ்வாறு பயன்படுத்தப்பட்ட ஒரு வார்த்தையாக இருந்தது. "நிர்ப்பாக்கியம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது, "கல்வெட்டும் இடத்தில் வேலைசெய்பவர்கள் அல்லது சுரங்கங்களில் வேலை செய்யும்படி தண்டனை விதிக்கப்பட்டவர்கள் உழைப்பதுபோல் பெருந்துன்பத்துடன் உழைப்பதினால் சக்திதீர்ந்துபோய் இளைப்படைந்து இருத்தல்" என்பதைக் குறித்தது.[32] கர்த்தர் அவர்களைக் கோடீஸ்வரர் களாகக் காணவில்லை; அவர், அவர்களைக் கைவிடப்பட்ட அடிமை களாகக் கண்டார்! இயேசு, "பரிதபிக்கப்படத்தக்க" என்ற சொற்றொ டரையும் பயன்படுத்தினார். இதற்கான கிரேக்க வார்த்தையானது இரக்கம் தேவைப்படுபவர்களைப்பற்றிப் பேசியது. கர்த்தருடைய பார்வையில், அவர்கள் புகழ்ச்சிக்குப் பாத்திரராய் இருப்பதற்குப் பதிலாக, பரிதாபத்திற்கு உரியவர்களாய் இருந்தனர். இயேசுவின் ஆய்வை அவர்கள் எவ்வளவாக வெறுத்திருக்க வேண்டும்! மேட்டிமையுள்ள மனிதன், (தன்னைப்பற்றிப் பிறர்) பரிதபிப்பதை, வேறு எதைக் காட்டிலும் அதிகமாக வெறுக்கின்றான்.

பின்பு இயேசு, அவர்களின் ஆவிக்குரிய பிரச்சனையை, திட்டவட்டமான சொற்றொடர்களில் விவரித்தார்:

நகரம் (மற்றும் சபை)	**நிலை (வச. 17)**
செல்வவளம் *(வங்கித்துறை)*	தரித்திரர்
மருத்துவ மையம் *(கண்களுக்கு விசேஷித்த சிகிச்சை)*	பார்வையற்றவர்
உடைத் தயாரிப்பு நிறுவனம் *(கறுப்புக் கம்பளி)*	நிர்வாணி

அவர்கள், தாங்கள் "செல்வந்தர்களாய்" இருந்ததாக நினைத்தனர், ஆனால் உண்மையில் அவர்கள் "தரித்திரர்களாய்" இருந்தனர். "தரித்திரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது "கொஞ்சம் உடையவர்கள்" என்று அர்த்தப்படுவதில்லை; இது "ஒன்றும் இல்லாத வர்கள்" என்று அர்த்தப்படுகிறது. அவர்கள் ஆசியா மைனர் பகுதியின் மிகுந்த செல்வவளம் கொண்ட நகரத்தில் வாழ்ந்திருந்தபோதிலும், ஆவிக்குரிய வகையில் தரித்திரராகவே இருந்தனர். சிமிர்னாவில் இருந்த சபையானது, "செல்வத்துடன் இருந்த ஏழை சபையாக" இருந்த வேளையில், லவோதிக்கேயாவில் இருந்த சபை, "ஏழையாக இருந்த செல்வமிக்க சபையாக" இருந்தது.

அவர்கள், உலகத்தில் இருந்தவற்றிலேயே மிகச்சிறந்த கண்சிகிச்சை பெற வகைகொண்டிருந்தனர், ஆனால் அவர்கள் "பார்வையற்றவர்களாக"[33] இருந்தனர். அவர்கள் தங்களின் ஆவிக்குரிய நிலையைக் காணமுடியாத வர்களாய் இருந்தனர் மற்றும் அவர்கள் கிறிஸ்தவத்தின் இயல்பையும் காண முடியாதவர்களாய் இருந்தனர். கிறிஸ்தவத்தைப் பற்றி உணர்வெழுச்சி

யடைதலுக்குக் கிறிஸ்தவம் பாத்திரமானதாக இருந்தது என்பதை அவர்கள் காண்பது அவசியமாய் இருந்தது!

ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸனின் கதையில்[34] வரும் பேரரசரைப் போல, லவோதிக்கேயர்கள், உண்மைநிலையில் "நிர்வாணிகளாய்" இருந்தபோது, தாங்கள் மிகநேர்த்தியான உடையை உடுத்தியிருந்ததாக நினைத்தனர். வேதவசனங்கள் முழுவதிலும், நிர்வாணம் என்பது வெட்கக் கேட்டைக் குறிக்கும் சொல்லாக உள்ளது.[35] கிழக்கத்திய நாடுகளில், ஒரு மனிதனின் உடைகளை உரிந்து போடுதல் என்பது அம்மனிதனை அவமானப்படுத்தியது,[36] ஆனால் அவனுடைய முதுகில் ஒரு அங்கியை அணிவித்தல் என்பது அவனைக் கனப்படுத்தியது.[37] உலகரீதியில், லவோதிக்கேயர்கள் விலைமதிப்பற்ற, காகம்போலக் கருமையான அங்கிகள் ஆகியவற்றைக் கொண்டிருந்தனர்; ஆனால் ஆவிக்குரிய வகையில் அவர்கள், கர்த்தர் மாத்திரமே அளிக்கக்கூடிய நீதியென்னும் வெண் அங்கிகளைக் கொண்டிருக்கவில்லை (3:18ஐக் காணவும்).

முடிவுரை

இந்தப் பாடத்தில் நாம், லவோதிக்கேயர்களின் பிரச்சனையைச் சுட்டிக்காண்பிக்க முயற்சி செய்திருக்கின்றோம். அடுத்த பாடத்தில் நாம், இயேசுவின் தீர்வைக் காண்போம்.

இந்த எடுத்துரைப்பை நாம் முடிக்கும் இவ்வேளையில், இரண்டு உண்மைகள் வலியுறுத்தப்பட வேண்டும்: (1) லவோதிக்கேயாவில் இருந்த பிரச்சனை, சபைக்குழுமத்தினுடையதாக மாத்திரமின்றி, தனி நபருக்குடையதாகவும் இருந்தது. லவோதிக்கேயாவில் இருந்த சபையின் தனிநபர்கள் வெதுவெதுப்பாய் இருந்தபடியால், அந்த சபையும் வெதுவெதுப்பாக இருந்தது. ஒரு சபைக்குழுமத்தில் இருந்து வெதுவெதுப்பான உறுப்பினர்கள் நீக்கப்பட வேண்டுமென்றால், ஒவ்வொரு உறுப்பினரும் தன்னைப் பற்றிய இருப்புச்சோதனையை மேற்கொள்ள வேண்டும், பின்பு தனிப்பட்ட செயல்முறையைச் செய்ய வேண்டும்.

(2) லவோதிக்கேயாவில் இருந்த பிரச்சனையானது வட்டாரத்திற்குரியதல்ல ஆனால் உலகளாவியதாக இருந்தது. லவோதிக்கேயாவின் பிரச்சனை தனித்தன்மை வாய்ந்ததல்ல, அதாவது வெதுவெதுப்பானவர்கள் ஆண்டுகளினூடே சபையில் பாதிப்பை ஏற்படுத்தத் தொடருவார்கள் என்று அறிந்திருந்தபடியால், கர்த்தர், இந்தக் கடிதத்தைப் பாதுகாத்தார். மதரீதியாக மனநிறைவுள்ளவர்களாகுதல் என்பது எவ்வளவு சுலபமானதாக உள்ளது!

இந்த வரிகளைப் படிக்கும் ஒவ்வொருவரும் இவற்றைத் தனிப்பட்ட முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன். எஜமானருக்கான உங்கள் ஊழியத்தில் நீங்கள் வெதுவெதுப்பானவர்களாகி இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் உற்சாகத்தை இழந்திருக்கின்றீர்களா? நீங்கள் ஆவிக்குரிய வகையில் உங்களுக்கு வசதியான செயல்திறன் குன்றிய நிலையில் அமர்ந்து அமைந்து இருக்கின்றீர்களா? அப்படியானால், இன்றே கர்த்தருக்கான உங்கள் உறுதிப்பாட்டைப் புதுப்பியுங்கள்!

அவருக்கான உங்கள் ஊழியத்தில் நீங்கள் அக்கினியாய் இருக்க வேண்டும் என்று அவர் விரும்புகின்றார்![38]

குறிப்புகள்

[1]எனது பயணக்குழுவை வழிநடத்திய துருக்கிய வழிகாட்டி, "லவோதிக்கேயாவை" "LAH-oh-de-ce-uh" என்று உச்சரித்தார். [2]இந்தப் புத்தகத்தில் உள்ள ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும் என்ற வரைபடத்தைக் காணவும். [3]நியூயார்க் நகரத்தில் உள்ள வால் தெரு [Wall Street] என்பது அமெரிக்கநாட்டின் நிதிநிலை மையம் என்று பொதுவாகக் கருதப்படுகிறது. [4]அது அவர்கள் பகுதியில் கௌரவமானதாக இருந்தது - ஆனால் நிதி நிலைகளில் பாராட்டத்தக்கதாக இருத்தல் என்பது மதரீதியாக ஏற்புடையதாயிருக்க வேண்டும் என்று அவசியமில்லை. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், இரட்சிப்பைப் பொறுத்தமட்டில் தங்கள் சொந்தத்தில் எதையும் ஏற்படுத்த இயலாது என்பதை உணர்ந்தறிய வேண்டியிருந்தது. [5](அர்க்கன்சாஸில் உள்ள வெந்நீர் ஊற்றுக்கள்போல்) தாதுவளம் நிறைந்த வெந்நீர் ஊற்றுக்களை ஏராளமாகக் கொண்ட எந்தப் பகுதியும், பெரும்பாலும் ஆரோக்கியப் பராமரிப்பு நிலையம் என்று அறியப்பட்டு பயணிகளைக் கவர்ந்தது. [6]அமெரிக்காவில், "கறுப்பு ஆடு" என்பது ("He is the black sheep of his family" என்ற வாக்கியத்தில் உள்ளதுபோல்) எதிர்மறை அர்த்தம் கொண்டுள்ளது, ஆனால் லவோதிக்கேயாவில் இவ்வாறு இருக்கவில்லை. லவோதிக்கேயாவில் "கறுப்பு ஆடு" என்பது பணத்தை அர்த்தப்படுத்தியது! [7]எப்பாப்பிரா என்ற பெயர்கொண்ட, பவுலின் உடன் ஊழியர் ஒருவர், கொலோசே பட்டணத்தில் சபையை நிலைநாட்டினார் என்பது உறுதி (கொலோசெயர் 1:7; 4:12), இவர் அந்த நகரத்திற்கு அருகில் இருந்த லவோதிக்கே யாவிலும் சபையை நிலைநாட்டியிருக்கலாம். [8]இவ்வசனப் பகுதியானது, புதிய ஏற்பாட்டுப் புத்தகங்கள் சபைகளில் எவ்வாறு சுற்றுக்கு விடப்பட்டன என்பது பற்றிய உட்கண்ணோட்டத்தைத் தருகிறது. [9]லவோதிக்கேயாவுக்குப் பவுலின் கடிதத்தைப் பொறுத்தமட்டில், இங்கு இரண்டு சாத்தியக்கூறுகள் உள்ளன: (1) இது "எபேசியருக்கு எழுதிய நிருபம்" என்று நாம் அழைக்கும் கடிதமாக நமக்காகப் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்தது. பழைய கையெழுத்துப் பிரதிகளில், எபேசியர் 1:1ல், "எபேசுவில்" என்ற வார்த்தை இருப்பதில்லை என்பதாலும், எபேசியருக்கு எழுதிய நிருபத்தைப் பவுல், தனித்தனி உறுப்பினர்களுக்கான அவரது வழக்கமான வாழ்த்துதலுடன் முடிக்கவில்லை என்பதாலும், இது பவுலினால் எழுதப்பட்ட பொதுவான கடிதம் என்றும் இவற்றின் தனித்தனிப் பிரதிகள், முதலில் சபையின் இருப்பிடத்தைக் குறிப்பிடுவதன் மூலம் அவைகளுக்கு உரியவைகளாக்கப்பட்டன என்றும் சிலர் முடிவுசெய்துள்ளனர். (2) லவோதிக்கேயாவிற்கு எழுதப்பட்ட கடிதம், புதிய ஏற்பாட்டின் பிற புத்தகங்களில் காணப்படும் விஷயங்களைப் பிரதியெடுத்ததாக இருந்ததாலும், ஆகவே அது அவசியமற்றதாக இருந்தது என்பதாலும், அது நமக்காகப் பாதுகாத்து வைக்கப்படவில்லை. இயேசுவினால் பேசப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் நாம் கொண்டிருப்பதில்லை (யோவான் 20:30, 31) என்பது போலவே, ஏவுதல் பெற்ற மனிதர்களால் எழுதப்பட்ட ஒவ்வொரு வார்த்தையையும் நாம் கொண்டிருப்பதில்லை - ஆனால் நாம் கொண்டிருக்க வேண்டும் என்று தேவன் விரும்பிய யாவற்றையும், எந்த நற்கிரியையும் செய்ய நம்மைத் தகுதிப்படுத்துவதற்கு அவசியமான ஒவ்வொரு விஷயத்தையும் (2 தீமோத்தேயு 3:17) நாம் கொண்டுள்ளோம். [10]3:14ல் உள்ள ஒரு சொற்றொடரான,

"உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும்" என்பது 1:5ல் உள்ள ("உண்மையுள்ள சாட்சியும்" என்ற) சொற்றொடரைப் போன்றதாக உள்ளது.

[11]*பழைய ஏற்பாட்டில், "ஆமென்" என்பது தேவனுக்கான ஒரு சிறப்புப் பெயராகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (ஏசாயா 65:16ல், "சத்தியம்" என்பது "ஆமென்" என்பதற்கான வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது), ஆனால் இது ஒரு தகுதிபெயராகப் பயன்படுத்தப்படுவதில்லை.* [12]*ஆமென் என்ற கிரேக்க வார்த்தை,* "to be" *என்ற வினைச் சொல்லின் வேற்றுமை உருபை ஏற்றுத் திரிந்த வடிவமாக உள்ளது. இவ்விதமாக, "ஆமென்" என்று கூறுதல் சிலவேளைகளில் "அப்படியே ஆகட்டும்!" என்று அர்த்தப்படுகிறது.* [13]KJV *வேதாகமத்தில்* "verily" *என்றுள்ளது.* [14]*1:5ல் இயேசு, "உண்மையுள்ள சாட்சி" என்று குறிப்பிடப்பட்டார். அங்கு, மரணபரியந்தமும் இயேசு உண்மையுடன் இருந்த (அதாவது, வேதசாட்சியாக இருந்த) விஷயத்தின்மீது வலியுறுத்தம் செலுத்தப்பட்டது. இங்கு, அவரது நம்பத்தகுந்த நிலையின்மீது வலியுறுத்தம் செலுத்தப்படுகிறது.* [15]*இந்த வசனம், இயேசு படைக்கப்பட்டவர் என்று நிரூபிக்க முயற்சிப்பதற்காக யெகோவா சாட்சிக்காரர்களால் பயன்படுத்தப்படுகிறது. குறிப்பு எண் 18ஐக் காணவும்.* [16]*இவ்விடத்தில் இயேசு தம்மை, ஆவிக்குரிய படைப்பின் - அதாவது, சபையின் - தோற்றுவிப்பாளர் என்று குறிப்பிடுவதாகச் சிலர் நினைக்கின்றனர். இதன் சந்தர்ப்பப் பொருளானது, உலகப்பிரகாரமான படைப்பு என்ற கருத்தை ஆதரிக்கிறது, ஆனால் ஆவிக்குரிய படைப்பு என்பதும் மறைமுகமாக உணர்த்தப்படலாம்.* [17]NASB, KJV *மற்றும் தமிழ் வேதாகமம் ஆகியவற்றில், "ஆதியும்" என்று மொழிபெயர்க்கப்பட்ட,* arche *என்ற கிரேக்கவார்த்தை, "ஆளுநர்" அல்லது "முதன்மையானவர்" என்றும் மொழிபெயர்க்கப்பட முடியும். இவ்வாறு,* NIV *வேதாகமத்தில்,* "the ruler of God's creation" ["*தேவனுடைய படைப்பின் ஆளுநர்*"] *என்றுள்ளது.* [18]*"சகலமும் அவரைக்கொண்டு படைக்கப்பட்டது" மற்றும் "அவர் சகலத்திற்கும் முந்தினவர்" என்றால், இயேசு படைக்கப்பட்டவராயிருப்பதற்கு வழியே இல்லை. யோவான் 1:1-3; எபிரெயர் 1:8, 10ஐக் காணவும்.* [19]*மேற்கத்திய உலகத்தில் உள்ள பல கிறிஸ்தவர்களைப் பற்றி லவோதிக்கேயர்களின் எண்ணப்போக்கு மிகவும் ஏற்புடைய வகையில் பேசுகிறது என்பதால் நான் இந்தப் பத்தியை உள்ளடக்குகின்றேன். இந்தப் பத்தியானது, நீங்கள் வாழும் பகுதிக்கு ஏற்புடையதாக இல்லையென்றால், லவோதிக்கேயர்களின் "கிரியைகள் மனச்சாட்சிக்கு ஒத்தடம் கொடுப்பவையாக, மிகவும் குறைவானவைகளாக, ஆழமான உறுதிப்பாட்டின் உற்சாகம் இல்லாத செயல்களாக இருந்தன" என்று மாத்திரம் விளக்கப்படுத்துங்கள்.* [20]Boyd Carpenter, quoted by James M. Tolle, *The Seven Churches of Asia* (Pasadena, Tex.: Haun Publishing Co., 1968), 73.

[21]*"அனல்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையான Zeo என்பது, Zestos என்ற கிரேக்க வார்த்தையின் வேராக உள்ளது.* [22]*லவோதிக்கேயர்கள் வெதுவெதுப்பாக இருப்பதைக் காட்டிலும் குளிராக இருத்தலை இயேசு விரும்பித் தேர்ந்து கொண்டது ஏன் என்பது பற்றி இடர்ப்பாடு அடைகின்ற ஒருசிலர், "குளிர்" மற்றும் "அனல்" என்று இரண்டுமே நல்ல கருத்துணர்வில் பயன்படுத்தப் பட்டிருக்கையில், "வெதுவெதுப்பு" என்பது மோசமான கருத்துணர்வில் பயன்படுத்தப்பட்டுள்ளது என்று கருத்துத் தெரிவிக்கின்றனர். எடுத்துக்காட்டாக, நம்மில் பெரும்பான்மையானவர்கள், சூடான பானங்களையும், குளிர் பானங்களையும் மகிழ்வுடன் விரும்பி அருந்தமுடிகிறது, ஆனால் வெதுவெதுப்பான பானங்களை நமது வயிறு ஏற்பதில்லை. இந்தச் சிந்தனையை ஏற்றுக் கொள்கின்றவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 3:15, 16ல் "குளிர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை மத்தேயு 10:42ல் "ஒரு கலசம்*

தண்ணீர்" என்பதைக் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் குறிப்பிடுகின்றனர். இருப்பினும், பெரும்பாலான எழுத்தாளர்கள், வெளிப்படுத்தின விசேஷம் 3:15, 16ல் உள்ள "குளிர்" என்ற வார்த்தை ஆவிக்குரிய வகையில் விரும்பத்தகாத நிலையைக் குறிப்பிடுகிறது என்றே நம்புகின்றனர். [23]*விசுவாச விலக்கம் என்பது ஆவிக்குரிய வகையில் "குளிரான தன்மையுடன்" இருத்தலுக்கான இன்னொரு சாத்தியக்கூறாக உள்ளது.* [24]*லவோதிக்கேயா நகரம் நிர்மாணிக்கப்பட்டுக் கொண்டிருந்தபோது, நகரத்தின் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புவதற்காக, யூதர்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்தனர். பின்வந்த ஆண்டுகளினூடே, வர்த்தகம் மற்றும் ஆதாயம் ஆகியவற்றின் வாய்ப்புக்களினால் கவர்ந்திழுக்கப்பட்ட மற்ற யூதர்களும் லவோதிக்கேயாவுக்கு வந்திருந்தனர்.* [25]*நேரடியான அர்த்தத்தில், வசனமானது "நான் ... போடவிருக்கின்றேன்" என்றே கூறுகிறது.* [26]Eugene H. Peterson, *The Message: New Testament With Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 614-15. [27]*வசனம் 20ஐக் கவனியுங்கள்: அவர்கள் தங்கள் வாழ்வில் இருந்து இயேசுவை வெளியேற்றிப் பூட்டிக்கொண்டிருந்தனர்.* [28]*இந்த வசனத்தை லூக்கா 12:19 உடன் ஒப்பிடவும்.* [29]*உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள், "மதத்தில் 'குளிராக' இருத்தலை அவர்கள் ஒழுக்கநெறி என்று நினைத்தனர்" என்று கூறுவதுண்டு.* [30]*"கதவு ஆணியைப் போல் செத்திருத்தல்" என்பது சுய விளக்கம் உடைய பேச்சுருவகமாக உள்ளது. இதற்குப் பதிலாக நீங்கள் வாழும்பகுதியில் பயன்படுத்தப்படும் வேறொரு சொல்விளக்கத்தைப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம். ("செத்த மரக்கட்டைபோல" என்று நாம் கூறலாம்.)*

[31]*மூலவசனத்தில், "the* wretched [ones]" *என்றுள்ளது - இது, மிகவும் பரிதபிக்கப்படத்தக்கவர்கள் என்பதைக் குறிக்கிறது.* [32]Tolle, *75.* [33]*2 பேதுரு 1:9ஐக் காணவும்.* [34]*ஹான்ஸ் கிறிஸ்டியன் ஆண்டர்ஸன் அவர்கள், "பேரரசரின் புதிய உடை" என்று அழைக்கப்பட்ட ஒரு கதையை எழுதினார், அதில் ஒரு பேரரசர் நிர்வாணமாக இருந்தார் என்பதை ஒரு குழந்தை சுட்டிக்காண்பிக்கும் வரையில் அவர், மாயமான பொருளினால் ஆன ஒரு கம்பீரமான உடையைத் தாம் அணிந்திருந்ததாக நம்பும்படி வஞ்சிக்கப்பட்டார்.* [35]*இது, தேவனால் அங்கீகரிக்கப்பட்ட திருமண வாழ்வில் ஒரு கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் உள்ள தனிப்பட்ட நிர்வாணத்திற்கு (ஆதியாகமம் 2:25; 1 கொரிந்தியர் 7:4) நடைமுறைப்படுத்தப்படுவதில்லை, இது பொதுவான நிர்வாணத்தையே குறிப்பிடுகிறது.* [36]*2 சாமுவேல் 10:4; ஏசாயா 20:4; எசேக்கியேல் 16:37-39; நாகூம் 3:5 ஆகிய வசனங்களைக் காணவும்.* [37]*ஆதியாகமம் 41:42; எஸ்தர் 6:6-11; தானியேல் 5:29 ஆகிய வசனங்களைக் காணவும்.* [38]*இந்தப் பாடத்தை ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தினால், கிறிஸ்தவர்களின் மனநிறைவு என்பது அடிப்படை செயல்முறைப்படுத்துதலாக இருக்கும், ஆனால் கிறிஸ்தவர்களாகும்படி மக்களை அழைத்தல் உள்ளடக்கப்பட வேண்டும் (கலாத்தியர் 3:26, 27). அந்த அழைப்பானது, அவர்கள் "கட்டளைகளுக்குக் கீழ்ப்படிதல் என்பதுடன் நின்றுவிடக்கூடாது; மாறாக, அவர்கள் தங்கள் வாழ்வைக் கர்த்தருக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும்" என்பதை வலியுறுத்த வேண்டும்.*

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. இந்தப் புத்தகத்தில் உள்ள ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மூ தீவும் என்ற வரைபடத்தைப் பயன்படுத்தி, அதிகாரம் 1முதல் 3வரை கொடுக்கப்பட்டுள்ள வரிசைமுறைப்படி ஆசியாவில் இருந்த ஏழு சபைகளின் அமைவிடங்களை உங்களால் சுட்டிக்காண்பிக்க முடியுமா?
2. லவோதிக்கேயாவின் எந்த மூன்று பண்புகள் அங்கிருந்த சபைக்குரிய கடிதத்தில் பிரதிபலிக்கின்றன?
3. “ஆமென்” என்ற வார்த்தை எதை அர்த்தப்படுத்துகிறது? இதை இயேசுவுக்கு நடைமுறைப்படுத்தும்போது இது எதை அர்த்தப்படுத்துகிறது?
4. “தேவனுடைய சிருஷ்டிக்கு ஆதியுமாயிருக்கிறவர்” என்ற சொற்றொடரின் அர்த்தம் என்ன?
5. ஆவிக்குரிய வகையில், “குளிராய்” அல்லது “அனலாய்” இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?
6. “வெதுவெதுப்பாய்” இருத்தல் என்பது எதை அர்த்தப்படுத்துகிறது? ஆவிக்குரிய வெதுவெதுப்புத்தன்மைக்குச் சில உதாரணங்களைத் தரவும்.
7. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதற்குப் பதில், குளிராய் இருந்திருக்கலாம் என்பதை இயேசு விரும்பித் தேர்ந்துகொண்டது ஏன்?
8. இயேசு, லவோதிக்கேயர்கள் “துப்பிவிட” அல்லது “வாந்திபண்ணிப் போட” தயாராயிருந்ததாகக் கூறியபோது எதை அர்த்தப் படுத்தினார்?
9. லவோதிக்கேயர்கள் தங்களை எவ்வாறு கண்ணோக்கினார்கள்? ஒருவர் தமது ஆவிக்குரிய நிலை பற்றி சுயமாக வஞ்சிக்கப்பட்டிருத்தல் என்பது சாத்தியமாக உள்ளதா?
10. அவர்களின் உண்மையான ஆவிக்குரிய நிலை என்னவாக இருந்தது?
11. அவர்கள் எந்தக் கருத்தமைவில் “தரித்திரராக,” “பார்வையற்றவர் களாக,” “நிர்வாணிகளாக” இருந்தனர்?

18

தன்னை ஏற்படுத்தியிருந்த சபை, 2

[3:14-22]

சபை பூரணப்பட்டதாக இருக்க வேண்டும் என்று நான் விரும்பு கின்றேன், நீங்கள் அவ்வாறு விரும்புவதில்லையா? தெய்வீகத்துவப் பகுதியில் இது அவ்வாறே உள்ளது; சபைக்கான தேவனுடைய தெய்வீக வடிவமைப்பு தவறு எதுவும் இல்லாததாக உள்ளது. இருப்பினும் மனிதத்துவப் பகுதியில், சபை பிரச்சனைகள் நிறைந்ததாக உள்ளது - ஏனென்றால், இது மக்கள் நிறைந்ததாக உள்ளது, மக்கள் பிரச்சனைகளைக் கொண்டுள்ளனர். இந்த உண்மை, சிலரைச் சங்கடப்படுத்துகிறது, அவர்கள் சபையின் பூரணமற்ற தன்மைகளை மறைக்க முயற்சி செய்கின்றனர். இது சிலரை, சபையைவிட்டுச் சென்றுவிடும் அளவு தொல்லைப்படுத்துகிறது.

சபையின் குறைவுகளைப் பற்றிக் கர்த்தர் எப்பொழுதுமே நேர்முறை யானவராக இருந்துள்ளார். ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களைப் பற்றிய நமது படிப்பில், இயேசுவின் சபைகளுடைய சபைக்குழுமங்கள், தேவன்மீதான தங்கள் அன்பை விட்டுவிடுதல் (2:4), தேவபக்தியற்ற வாழ்வை வாழ்தல் (2:14, 15, 20), மற்றும் மாய்மாலத்தினால் நிறைந்தும் இருத்தல் (3:1, 2) என்பது அவற்றிற்குச் சாத்தியமானதாக உள்ளது என்பதை வெளிப்படுத்த அவர் தயங்கியதில்லை என்பதைக் கண்டிருக்கின்றோம்.

ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களைப் படித்தல் என்பது, நீங்கள் ஒரு வீட்டாரைக் காணச்செல்லும்போது அந்த வீட்டின் பெண்மணியினிடத்தில் முன் எச்சரிக்கை செய்யாமல் அந்த வீட்டிற்குச் செல்லுதலைப் போன்றதாக உள்ளது. அந்த வீடு, நீங்கள் காண்பதற்கு எப்படி இருக்க வேண்டும் என்று அந்தப் பெண்மணி விரும்புவாரோ, அவ்வாறு இருப்பதற்குப் பதிலாக அது வழக்கமாக இருக்கும் நிலையில் நீங்கள் காண்பதற்கு வாய்ப்பு உள்ளது: பழைய காகிதங்களும் பத்திரிக்கைகளும் குவிந்து கிடக்க, பொம்மைகள் சிதறியிருக்க, துணிகள் தரையில் கிடக்க, மிச்சமான உணவுகொண்ட தட்டுகள், பாதி வெறுமையான குளிர்பானப் புட்டிகள், மூலைகளில் தூசி அண்டியிருத்தல் - மற்றும் அவர்களின் வாழ்வறையே அந்த நிலையில் இருக்கும்![1]

வெவ்வேறான சபைக்குழுமங்களில் கர்த்தர், பாவத்தை அங்கீகரியாது இருந்திருப்பினும் - மற்றும் மனந்திரும்பும்படி அவர்களுக்குக் கட்டளை யிட்டிருப்பினும் - அவர் இன்னமும் அவர்கள்மீது அன்புகூர்ந்திருந்தார். இது

லவோதிக்கேயா சபையைக் காட்டிலும் வேறு எவ்விடத்திலும் அதிக தெளிவாய் இருப்பது இல்லை. இந்த சபைக்குழுமத்தைப் பற்றி நல்லதாகக் கூறுவதற்குக் கர்த்தர் ஒன்றும் கொண்டிருந்தது இல்லை, ஆனாலும் அவர்களை அவர் இன்னமும் அன்புகூர்ந்தார் (3:19). அவ்வாறே, நீங்களும் நானும்கூட, சபையை அதன் எல்லாத் தவறுகளுடனும் அன்புகூர வேண்டும். சபையின் பூரணமற்ற தன்மைகளுடன் அதை நாம் அன்புகூரக் கற்றுக்கொள்ளவில்லை என்றால், அதை நாம் ஒருக்காலும் அன்பு கூரமாட்டோம் - ஏனெனில் அது எப்போதுமே குறைகளைக் கொண்டிருந்தது, எப்போதுமே குறைகளைக் கொண்டிருக்கும்.

மறுகண்ணோட்டம் (3:14-17)

நமது முந்திய பாடத்தில் நாம், லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட கடிதம் பற்றிய நமது படிப்பை தொடங்கினோம். அந்த நகரத்தின் குடிமக்களுடைய மூன்று விவரிப்புகளைக் குறிப்பிடுவதைக் கொண்டு அதை நாம் தொடங்கினோம்: (1) செல்வ வளம்: லவோதிக்கேயர்கள் அனேகமாக ஆசியாவிலேயே மிகுந்த செல்வந்தர்களாக இருந்திருக்கலாம். (2) ஆரோக்கிய வளம்: அருகில் இருந்த ஒரு மருத்துவ மையம், கண்களுக்குப் புகழ்பெற்ற கலிக்கம் ஒன்றைத் தயாரித்தது. (3) நன்கு உடுத்துவிக்கப் பட்டிருந்த நிலை: லவோதிக்கேயா, உயர்தரமான கறுப்புக் கம்பளியில் இருந்து உற்பத்தி செய்யப்படும் அங்கிகள் மற்றும் பிற உடைகள் ஆகியவற்றின் தயாரிப்பில் கவனம் செலுத்தும் வடிவமைப்பு மையமாக விளங்கியது. (வரைவட்டவணையைக் காணவும்.) அந்தக் குடிமக்களின் எண்ணப்போக்கு, “எங்களுக்கு ஒன்றும் குறைவில்லை. நாங்கள் சுயநிறைவு உடையவர்களாய் இருக்கின்றோம்!” என்ற வார்த்தைகளில் தொகுத்துரைக் கப்பட முடியும்.

இயேசு தம்மை, “உண்மையும் சத்தியமுமுள்ள சாட்சியும், ... ஆமென் என்பவர்” (வசனம் 14ஆ) என்று விவரித்ததை நாம் கண்டோம் - அவர் விஷயங்களை அவற்றின் உண்மை நிலையில் கண்டார் மற்றும் அவர் தமது மதிப்பீட்டில் நம்பத்தக்கவராக இருந்தார். லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்களைப் பற்றிய அவரது மதிப்பீடு என்னவாக இருந்தது? அவர்கள் “குளிருமின்றி அனலுமின்றி வெதுவெதுப்பாயிருந்தனர்” என்று இயேசு கூறினார் (வசனங்கள் 15, 16), இது அவரது வயிற்றில் சுகவீனத்தை ஏற்படுத்திய ஒரு நிலையாக இருந்தது! அவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதற்கு மாறாக, “குளிராயாவது” (முற்றிலும் வெளியேறிய நிலை) அல்லது “அனலாயானது” (முற்றிலும் உள்ளாக இருக்கும் நிலை) இருக்கும் நிலையை அவர் விரும்பித் தேர்ந்துகொண்டார் (வசனம் 15).

ஒருமுறை, இரண்டு பையன்கள் ஒரு சிறிய சிகப்பு நிற (பொம்மை) வண்டியைக்கொண்டு விளையாடிக்கொண்டிருந்தனர். வண்டிக்குள் ஒரு பையனை வைத்து இன்னொருவன் அந்த வண்டியை இழுத்துக் கொண்டிருந்தான், ஆனால் வண்டிக்குள் இருந்த பையன் தனது பாதங்களை வெளியே நீட்டித் தரையில் இழுத்துக்கொண்டு செல்லும்படித்

தொங்கவிட்டிருந்தான். கடைசியில், வண்டியை இழுத்துக் கொண்டிருந்த பையன் அதை நிறுத்தி, வண்டிக்குள் இருந்த பையனிடத்தில், "உள்ளே இரு அல்லது வெளியே வந்துவிடு, ஆனால் உன் பாதங்களைத் தரையில் போட்டு இழுப்பதை நிறுத்திவிடு[2] - ஏனென்றால் நீ என்னைக் களைப்படையச் செய்கின்றாய்!" என்று கூறினான்.

லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் வெதுவெதுப்பாய் இருப்பதற்கு மாறாகக் குளிராய் இருப்பதை இயேசு விரும்பித்தேர்ந்து கொண்டதற்குப் பின்வரும் மூன்று காரணங்கள் கருத்தாகத் தெரிவிக்கப் பட்டது: (1) குளிராய் இருத்தல் என்பது அதிகம் நேர்மையானதாக உள்ளது, (2) வெதுவெதுப்பாய் இருப்பவரை மாற்றுவதைக் காட்டிலும் குளிராய் இருப்பவரை மாற்றுதல் என்பது மிகவும் சுலபமானதாக உள்ளது, மற்றும் (3) குளிராய் இருப்பவர்கள், வெதுவெதுப்பாய் இருப்பவர்களைக் காட்டிலும் அதிகமாக சபைக்கு ஊறுவிளைவிப்பதில்லை.

பின்பு நாம், லவோதிக்கேயாவில் இருந்த சபையில் அந்த நகரத்தின் எண்ணப்போக்குகள் தனதாக்கப்பட்டிருந்ததைக் கவனித்தோம். வசனம் 17அ, "நீ, ... நான் ஐசுவரியவானென்றும், திரவியசம்பன்னனென்றும், எனக்கு ஒரு குறைவுமில்லையென்றும், சொல்லுகிறபடியால்'' என்று கூறுகிறது. அவர்கள் அக்கறையற்ற தன்மையை ஒழுக்கநெறி என்பதாகக் கருதினர்! மனிதர்கள் தங்கள் உழைப்புகளில் தங்கள் சக்தியைத் தீர்ந்துபோகச் செய்யமுடியும், அதைப் பாராட்டத்தக்கதாக மற்றவர்கள் கண்டறிகின்றனர்; விளையாட்டுப் போட்டியொன்றில் பார்வையாளர்கள் உணர்வெழுச்சியடைய முடியும், அவர்கள் ''விசிறிகள்'' என்று அழைக்கப்படுகின்றனர்; ஆனால் மதரீதியாக அதிகம் உணர்வெழுச்சி அடைந்திருத்தல் என்பதைப் பலர், ருசி குறைந்ததாக நினைக்கின்றனர்.

யாரோ ஒருவர், வெதுவெதுப்பான தன்மையை, சபையில் "டிரேஜன் குதிரை" என்று அழைத்துள்ளார். "டிரேஜன் குதிரை" என்ற சொற்றொடர், கிரேக்கர்கள் - டிரேஜர்கள் ஆகியோரின் யுத்தத்தில் இருந்து நமக்குக் கிடைத்துள்ளது,[3] இதில் கிரேக்கர்கள், ஆசியா மைனரின் வடமேற்குப் பகுதியில் இருந்த டிராய் நகரத்தை முற்றுகையிட்டிருந்தனர். ட்ரேஜன் நகரத்தில் இருந்தவர்களுக்குப் பரிசாக ஒரு மாபெரும் மரக்குதிரையை அளிக்கும் திட்டத்தை யுலிஸ்ஸெஸ்[4] பிறப்பித்தபோது, முரண்பாடு ஒரு இக்கட்டான நிலையை அடைந்தது. ட்ராய் நகரின் அரசருடைய மகளான கேசன்ட்ரா, அந்தப் பரிசைப் புறக்கணிக்க வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தாள்: ''கிரேக்கர்கள் பரிசுகளைச் சுமந்து வரும்போதுகூட அவர்களுக்கு நான் அஞ்சுகின்றேன்.'' கேசன்ட்ராவின் அறிவுரை புறக்கணிக்கப்பட்டது, பரிசாகத் தரப்பட்ட குதிரை, (நகரத்தின்) மதில் களுக்குள் இழுத்துவரப்பட்டது. அந்த இரவில், கிரேக்கப் போர்வீரர்கள் அந்தக் குதிரைக்குள்ளிருந்து வெளியில் வந்து, நகரத்தின் வாயில்களைத் திறந்துவிட்டு, கிரேக்கப்படையை உள்ளே அனுமதித்தனர். ட்ரேஜன் நகரமக்கள் அடிக்கப்பட்டனர், அந்த நகரம் அழிக்கப்பட்டது.

வெதுவெதுப்பான தன்மை, "ட்ரேஜன் குதிரை" என்று அழைக்கப் பட்டுள்ளது, ஏனென்றால் இது நமது மத்தியில் சகித்துக் கொள்ளப்

பட்டுள்ளது. இது அபாயகரமானதாகக் காணப்படுவதில்லை, ஏனென்றால் இது கர்த்தருடைய நோக்கத்தை உண்மையில் எதிர்ப்பதில்லை, மற்றும் இது அதற்குத் தன்னை நண்பனாகக் காண்பித்து நடிக்கக்கூடச் செய்கிறது. இருப்பினும், வெதுவெதுப்பான தன்மை என்பது, சாத்தானின் சேனைகளுக்குக் கதவைத் திறந்துவிடக்கூடும் என்பதை நாம் அறிந்திருக்க வேண்டும். இது சபையின் அழிவை விளைவிக்கக் கூடும். இது இயேசுவை வியாதிக்குள்ளாக்கியது, இது நம்மையும் வியாதிக்குள்ளாக்க வேண்டும்! வெதுவெதுப்பான தன்மை என்பது, லவோதிக்கேயர்களை "நிர்ப்பாக்கியமுள்ளவனும், பரிதபிக்கப்படத்தக்கவனும், தரித்திரனும், குருடனும், நிர்வாணியுமாய்" ஆக்கியிருந்தது (வசனம் 17ஆ). அவர்களின் நிலை மற்றும் குணமாக்கப்படுதல் ஆகியவற்றைக் குறித்துப் பின்வரும் வரை வட்டவணையில் காணவும்.

பரிகாரம்/நிவர்த்தி (3:18, 19ஆ)

லவோதிக்கேயாவில் இருந்த சபையின் ஆவிக்குரிய நிலையானது கவலைக்கிடமானதாக இருந்தது, ஆனால் நம்பிக்கையற்றதாக இருக்கவில்லை. இயேசு பின்வருமாறு கூறினார்:

> நான்: நீ ஐசுவரியவானாகும்படிக்கு நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்னையும், உன் நிர்வாணமாகிய அவலட்சணம்[5] தோன்றாதபடிக்கு நீ உடுத்திக்கொள்வதற்கு வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும்,[6] நீ பார்வையடையும்படிக்கு உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டுமென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்[7] (வசனம் 18).

நகரம் (மற்றும் சபை)	நிலை (வச. 17)	குணமாக்குதல் (வச. 18)
செல்வவளம் (வங்கித்துறை)	தரித்திரர்	புடமிடப்பட்ட பொன்
மருத்துவ மையம் (கண்களுக்கு விசேஷித்த சிகிச்சை)	பார்வையற்றவர் ↘	↗ வெண்வஸ்திரங்கள்
உடைத் தயாரிப்பு நிறுவனம் (கறுப்புக் கம்பளி)	நிர்வாணி ↗	↘ கண்களுக்குக் கலிக்கம்

உலகப் பிரகாரமான செல்வத்தை நம்பியிருப்பதற்குப் பதிலாக, அவர்கள் கர்த்தரிடத்தில் இருந்து மாத்திரமே பெற்றுக்கொள்ளக்கூடிய உண்மையான செல்வங்களை நாடியிருக்க வேண்டும்: ஆவிக்குரிய வகையில் அவர்களைச் செல்வந்தர்களாக்குவதற்கு, "நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்."[8] மலைப்பிரசங்கத்தில் இயேசு பின்வருமாறு கூறியிருந்தார்:

> பூமியிலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவைக்க வேண்டாம், இங்கே பூச்சியும் துருவும் அவைகளைக் கெடுக்கும்,

இங்கே திருடரும் கன்னமிட்டுத் திருடுவார்கள். பரலோகத்திலே உங்களுக்குப் பொக்கிஷங்களைச் சேர்த்துவையுங்கள், அங்கே பூச்சியாவது துருவாவது கெடுக்கிறதும் இல்லை, அங்கே திருடர் கன்னமிட்டுத் திருடுகிறதும் இல்லை (மத்தேயு 6:19, 20).[9]

இயேசுவின் வாசகர்கள் (லவோதிக்கேயக் கிறிஸ்தவர்கள்), தங்களின் அழகுமிகுந்த கறுப்பு உடைபோதுமானது என்று நினைப்பதற்குப் பதிலாக, தங்கள் ஆவிக்குரிய நிர்வாணம் வெளிப்படுத்தப்படாதபடிக்குத் தங்களுக்கு "வெண் உடைகளை" உடுத்திக்கொள்ளுதல் அவசியமாய் இருந்தது என்று நினைக்க வேண்டியிருந்தது. வெள்ளை (அல்லது தூய்மையான) உடைகளின் அடையாளத்துவம், வெளிப்படுத்தின விசேஷத்தில் இரண்டு வலியுறுத்தங்களைக் கொண்டிருந்தது: (1) "வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள்" (வெளிப்படுத்தின விசேஷம் 7:13) "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (7:14). லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், வெள்ளை அங்கிகளை உடுத்துவதற்குத் தங்களையல்ல, ஆனால் இயேசுவின்மீதே சார்ந்திருக்க வேண்டியிருந்தது. (2) 19:8ல் கிறிஸ்துவின் மணவாட்டி "சுத்தமும் பிரகாசமுமான மெல்லிய வஸ்திரம்"[10] தரித்துக் கொண்டிருந்ததாகச் சித்தரிக்கப்படுகிறது, மற்றும் நமக்கு, "அந்த மெல்லிய வஸ்திரம் பரிசுத்தவான்களுடைய நீதிகளே" என்று கூறப்படுகிறது. லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள் வெள்ளை உடைகள் உடுத்திக்கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் தேவனுடைய பிள்ளைகள் வாழவேண்டிய பிரகாரம் வாழத்தொடங்க வேண்டியிருந்தது.

பிரிகியாவின் கண்மருத்துவத் தூளைச் சார்ந்திருப்பதற்குப் பதிலாக, அவர்கள் வாழ்வின் உண்மை நிலையைக் காணக்கூடும்படிக்குத் தங்கள் கண்களில் இடுவதற்குப் பரலோகத்தின் "கண்கலிக்கத்தை" விரும்ப வேண்டியிருந்தது.[11] அவர்களுக்கு, தேவனுடைய வசனத்தைப் படிப்ப தாலும் அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படிவதாலும் மாத்திரமே வரக்கூடிய ஒரு புதிய கண்ணோக்கு அவசியமாய் இருந்தது.

வசனம் 18ல் இயேசுவின் புத்திமதியில் உள்ள, "வாங்கிக்கொள்ளவும்" என்ற வார்த்தையைக் கவனியுங்கள்: "நான், நீ ... நெருப்பிலே புடமிடப் பட்ட பொன்னையும், ... வெண்வஸ்திரங்களையும் என்னிடத்திலே வாங்கிக்கொள்ளவும், ... உன் கண்களுக்குக் கலிக்கம்போடவும் வேண்டு மென்று உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்." நேரடியான அர்த்தத்தில் நாம், இயேசு குறிப்பிட்ட ஆவிக்குரிய பொருட்களை வாங்க (அல்லது ஈட்ட) முடியாது,[12] ஆனால் அவைகள் இன்னமும் சிலவற்றைக் கிரயமாகக் கொடுக்க வேண்டியவைகளாக உள்ளன; ஒரு விலை செலுத்தப்பட்டாக வேண்டும். லவோதிக்கேயர்கள் தங்கள் அக்கறையற்ற தன்மைகளை, தங்களின் ஆவிக்குரிய வகையிலான சுயநிறைவை மற்றும் தங்கள் மேட்டிமையை விட்டுவிட வேண்டியிருந்தது!

பின்பு இயேசு, அவர்கள் தங்கள் எண்ணப்போக்கை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் தங்கள் உற்சாகத்தை மீண்டும் தூண்டிவிட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்: "ஆகையால் நீ ஜாக்கிரதையாயிருந்து,[13]

மனந்திரும்பு"[14] (வசனம் 19ஆ)! "ஜாக்கிரதையாயிருந்து" என்ற வார்த்தை யானது, வசனங்கள் 15 மற்றும் 16ல் உள்ள "அனல்" என்ற அதே வார்த்தையில் இருந்தே மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. கர்த்தர், (தமது மக்கள்) வெதுவெதுப்பாய் இருப்பதைக் காட்டிலும் குளிராய் இருப்பதை விரும்பித் தேர்ந்து கொள்கின்றார் (3:15), ஆனால் தமது மக்கள் அக்கினியாய் இருக்க வேண்டும் என்பதையே அவர் உண்மையில் விரும்புகின்றார்! வெதுவெதுப்பான கிறிஸ்தவரும், குளிரான அவிசுவாசியும் ஆகிய இருவருமே இழந்து போகப்படுவார்கள்; தேவனுடைய ஊக்கமான பிள்ளை மாத்திரமே ஆசீர்வதிக்கப்படுவார்!

காரணம் (3:19அ, 20)

லவோதிக்கேயாவில் இருந்த சபையின் உறுப்பினர்கள், தங்களை இயேசு வெறுத்தார் என்று முடிவு செய்யும்படியான இவ்வித கடுஞ்சொல் மொழிநடையை இயேசு பயன்படுத்தியிருந்தார். இவ்விதமாக அவர், "நான் நேசிக்கிறவர்களெவர்களோ[15] அவர்களைக் கடிந்துகொண்டு சிட்சிக் கிறேன்" (வசனம் 19அ) என்று கூடுதலாகக் கூறுவதற்குத் துரிதப்பட்டார். சிலர், கடிந்துகொள்ளுதலையும் திருத்துதலையும் பகையுணர்வு அல்லது விரோதம் என்பதுடன் சமமாகப் பாவிக்கின்றனர், ஆனால் தேவனுடைய ஒழுங்கு நடவடிக்கை, அன்பின் வெளிப்பாடாக உள்ளது. எபிரெயருக்கு நிருபத்தை எழுதியவர், "கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ[16] அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார்" என்று குறிப்பிட்டார் (எபிரெயர் 12:6).[17] இன்னொரு வருக்குள் அவரது ஆத்துமாவை அபாயத்திற்குள்ளாக்கக்கூடிய பாவத்தைக் கண்டு, அமைதியாய் இருத்தல் என்பது அன்பின் அடையாளமாயிராமல், அன்புக் குறைவின் அடையாளமாக உள்ளது.

பின்பு இயேசு, லவோதிக்கேயக் கிறிஸ்தவர்களின் மீதான தமது அன்பின் வெளிப்பாடாக, வேதாகம வசனங்களில் காணப்படும் மிகவும் இனிமையான அழைப்புக்களில் ஒன்றைக் கொடுத்தார்: "இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன்,[18] ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து,[19] அவனோடே போஜனம்பண்ணுவேன்,[20] அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வசனம் 20).

இந்த வார்த்தைகள் லவோதிக்கேயர்களை அதிர்ச்சிக்கு உள்ளாக்கி யிருக்க வேண்டும், ஏனெனில் அவர்கள் தங்கள் இருதயங்களில் இருந்தும் வாழ்வில் இருந்தும் இயேசுவை வெளியே தள்ளியிருந்தனர் என்று இயேசு வெளிப்படுத்தினார். அவர்கள் இவ்வாறு செய்திருந்ததைப் பற்றி அனேகமாக அறியாமல்கூட இருந்திருக்கலாம். இது நம்மில் எவருக்கும் நடைபெறக்கூடும், விசேஷமாக நாம் கர்த்தருக்கான நம் ஒப்புக் கொடுத்தலில் மனநிறைவடைந்தவர்களாய் ஆகியிருந்தால் இவ்வாறு நடைபெறக் கூடும்.

அதே வேளையில், இயேசுவின் வார்த்தைகள் லவோதிக்கேயர்களை

உற்சாகப்படுத்தி இருக்கவும் வேண்டும், ஏனெனில் அவர்களுடன் அவர் ஒரு நெருங்கிய உறுவுமுறையை மீண்டும் விரும்பியதையும் அவர் உறுதிப்படுத்தி இருந்தார். அந்த நாட்களில் (இன்றைய நாட்களில் பொதுவான உண்மையாக இருப்பதுபோலவே), யாரேனும் ஒருவருடன் உணவு அருந்துதல் என்பது அவருடன் ஐக்கியம் கொள்ளுதலாக இருந்தது.[21] இந்தக் கிறிஸ்தவர்கள் அவரிடத்திற்கும் அவரது வழிக்கும் திரும்பினார்கள் என்றால், ஐக்கிய விருந்து திரும்பக் கட்டுவிக்கப்பட முடியும் என்று இயேசுவின் கடிதம் சுட்டிக்காண்பித்தது.

இது நடைபெற வேண்டும் என்று இயேசு எவ்வளவு அதிகமாய் விரும்பினாலும், அவர் தமது வழியை அவர்களின் வாழ்விற்குள் வலிந்து திணிக்கமாட்டார்; அவர் எவரொருவரின் இருதயக் கதவையும் உடைத்துத் தள்ள மாட்டார். மாறாக அவர், கதவுக்கு வெளியே பொறுமையாகக் காத்திருந்து, அவர்களின் கவனத்தைப் பெறவும் அனுமதி கேட்கவும் முயற்சி செய்தார். முடிவு அவர்களுடையதாக இருந்தது.[22]

ஹோல்மன் ஹன்ட் அவர்களால் வரையப்பட்டு, "உலகின் ஒளி" என்று தலைப்பிடப்பட்ட ஒரு வரைகலை ஓவியமானது, கதவருகில் கிறிஸ்து நிற்பதன் மிகப் புகழ்பெற்ற சித்தரிப்பாக உள்ளது. அந்தச் சித்திரத்தில், இயேசு தமது கரத்தில் ஒரு விளக்குடன் கதவுக்கு முன்பாக நிற்கின்றார். கதவின் மீது படரும் கொடி வளர்ந்துள்ள அளவுக்கு நீண்ட காலமாகக் கதவு பூட்டப்பட்டுள்ளது. இருந்தபோதிலும் இயேசு பொறுமையாகத் தொடர்ந்து தட்டுகின்றார். திரு. ஹன்ட் அவர்கள் தமது இந்தச் சித்திரத்தை வரைந்து முடித்தபின்பு, தமது நண்பர் ஒருவரை அழைத்து இதைக் காண்பித்தார் என்பதாக ஒரு கதை நிலவுகிறது. அந்த நண்பர் இந்தச் சித்திரத்தைப் பார்த்துவிட்டு, "ஆனால் இந்தச் சித்திரம் முழுமையடையவில்லை. கதவின் வெளிப்புறத்தில் தாழ்ப்பாள் ஒன்றை இடுவதற்கு நீங்கள் மறந்து விட்டீர்களே" என்றார். அதற்கு திரு. ஹன்ட் அவர்கள், "ஒரு நோக்கத்துடன்தான் நான் அவ்வாறு இதை வரைந்தேன். கதவு என்பது மனித இருதயம் என்பதை நீங்கள் காண்கின்றீர்கள், இருதயமானது உள்ளிருந்து மட்டுமே திறக்கப்பட முடியும்" என்று கூறினார்.

விளைவு (3:21, 22)

லவோதிக்கேயாவில் இருந்த சபையானது தங்கள் ஆவிக்குரிய செயல்துடிப்பின்மையை வெற்றிகொண்டால், அற்புதமான ஆசீர்வாதங்கள் முன்னால் காத்திருந்தன. இயேசு, "நான் ஜெயங்கொண்டு[23] என் பிதாவினுடைய சிங்காசனத்திலே[24] அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன்" (வசனம் 21). இயேசுவுடன் அவரது அரியணையில் அமருதல் என்பது அவருடன் ஆளுகை செய்தலாக உள்ளது![25] லவோதிக்கேயாவில் வாழ்ந்தவர்கள், அந்த நகரத்தின் குடிமக்களாக இருப்பதை ஒரு கனத்திற்குரிய விஷயமாகக் கருதினர்; இயேசுவுடன் அவரது அரியணையில் வீற்றிருந்து ஆளுகை

செய்தல் என்பது எவ்வளவு மாபெரும் கனத்திற்குரிய விஷயமாய் இருக்கவேண்டும்!

மீண்டும் ஒருமுறை இயேசு, நம்மைத் தனிப்பட்ட வகையிலான பயன்பாட்டை ஏற்படுத்தச் செய்கின்றார்: "ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்" (வசனம் 22).

முடிவுரை

ஏழு கடிதங்கள் பற்றிய நமது படிப்பின் முடிவுக்கு நாம் வந்திருக்கையில், 3:20-22ல் உள்ள இயேசுவின் வார்த்தைகளைக்கொண்டு இதை முடிப்பதைவிட மேன்மையான வழியொன்றை என்னால் கற்பனை செய்ய இயலவில்லை. இவ்வார்த்தைகள், லவோதிக்கேயா சபைக்கு எழுதப்பட்ட கடிதத்திற்கு ஏற்புடையதான முடிவாக இருப்பதோடு, எல்லாக் கடிதங்களுக்கும் இது ஒரு பொருத்தமான முடிவை அளிப்பதாகவும் உள்ளது:

> *இதோ, வாசற்படியிலே நின்று தட்டுகிறேன், ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால், அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம் பண்ணுவான். நான் ஜெயங்கொண்டு என் பிதாவினுடைய சிங்காசனத்திலே அவரோடேகூட உட்கார்ந்ததுபோல, ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனும் என்னுடைய சிங்காசனத்தில் என்னோடேகூட உட்காரும்படிக்கு அருள்செய்வேன். ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்.*

இயேசுவின் அழைப்பும் வாக்குத்தத்தமும் சபைக்குழுமத்திற்கானதாக இராமல் தனிநபருக்கானதாக உள்ளன: "ஒருவன் என் சத்தத்தைக்கேட்டு, ... ஜெயங்கொள்ளுகிறவனெவனோ" இயேசு தமது கரங்களை ஒவ்வொரு நபரை நோக்கியும் நீட்டுகின்றார்.

அவரை ஒருக்காலும் தங்கள் வாழ்வில் அனுமதித்திராதவர்களை(யும்) அவர் அழைக்கின்றார். "எல்லா மனுஷரும் இரட்சிக்கப்படவும், சத்தியத்தை அறிகிற அறிவை அடையவும், அவர் சித்தமுள்ளவராயிருக்கிறார்" (1 தீமோத்தேயு 2:4). அவர்மீது நீங்கள் விசுவாசம் கொண்டிருந்தால், நீங்கள் "கிறிஸ்துவுக்குள்" ஞானஸ்நானம் பெறமுடியும், இவ்விதமாக "கிறிஸ்துவை" தரித்துக்கொள்ள முடியும் (கலாத்தியர் 3:26, 27). நீங்கள் அவரது அங்கமாவீர்கள், அவர் உங்கள் அங்கமாவார்!

இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் 3:20ல் இயேசுவின் அழைப்பு, உதாசீனப் படுத்துகிற தேவபிள்ளைக்கே முதலாவதாகவும் முதன்மையானதாகவும் உள்ளது என்ற உண்மையைப் பற்றிய கண்ணோக்கத்தை நாம் இழந்து விடக்கூடாது. லவோதிக்கேயர்களைப்போல், நம்மில் கிறிஸ்தவர்களாய் இருக்கின்றவர்கள் நமது வாழ்விலிருந்து கிறிஸ்துவை வெளியேற்றி (கதவை) மூடிவிடுதல் என்பதை நாம் அறியாமலேயே செய்து விடக்கூடும். உங்கள் சொந்த வாழ்வைக் கண்ணோக்குவதற்கு நேரம் எடுத்துக் கொள்ளுங்கள்: ஒருகாலத்தில் நீங்கள்

கிறிஸ்தவத்தைப் பற்றி மிகவும் உற்சாகமுள்ளவர்களாய் இருந்தீர்களா? நீங்கள் எப்போதாவது இயேசுவுக்கு மிகவும் நெருக்கமானவர்களாய் இருந்தீர்களா? கடந்தகாலத்தில் நீங்கள் அவரது பிரசன்னத்தைப் பற்றி அதிகம் அறிந்திருந்தீர்களா? இப்போது இயேசு உங்கள் இருதயக் கதவருகில் நின்றுகொண்டு அதைத் தட்டுவதற்கான சாத்தியக்கூறு உள்ளதா? இந்தப் பாடம், உங்கள் கவனத்தைப் பெறுவதற்கான கர்த்தருடைய வழியாக இருக்கலாம். உங்கள் ஊழியத்தில் நீங்கள் வெதுவெதுப்பான வர்களாகியிருந்தால், இன்றே நீங்கள் மனந்திரும்பி அவரிடத்திற்கு வரும்படி நான் ஜெபிக்கின்றேன் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16; 1 யோவான் 1:9).

உங்கள் இருதயத்திற்குள் நீங்கள் இயேசுவை அனுமதிக்க வேண்டி யிருந்தால், அதை நான் உங்களுக்காகச் செய்ய விரும்புகின்றேன். ஆண் களும் பெண்களும், மரணம் என்பது ஒரு இதயத்துடிப்பு தூரத்தில் மாத்திரமே இருக்கும்போது, தயங்குவதைக் கண்டு எனது இருதயம் வெடிக்கிறது. உங்களுக்காக நான் கர்த்தருக்குக் கீழ்ப்படிய முடியாது; அந்த முடிவை நீங்கள் மாத்திரமே மேற்கொள்ள முடியும். இன்னும் நீங்கள் அதை மேற்கொள்ளாதிருந்தால், நீங்கள் - உடனடியாக - உங்கள் பாவங்களில் இருந்து மனந்திரும்பி உங்கள் வாழ்வை அவருக்குக் கீழ்ப்படுத்த வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்!

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

லவோதிக்கேயாவைப் பற்றிய இந்த இரண்டாவது பாடம் "மிகச்சிறந்த வாக்குத்தத்தம்" என்று தலைப்பிடப்படலாம். லவோதிக்கேயாவில் இருந்த சபைக்கு எழுதப்பட்ட கடிதம் பற்றிய பாடங்களுக்கு பயன்படுத்தப்பட்ட மற்ற தலைப்புகளில், "வியாதிப்பட்ட சமூகம்," "கிறிஸ்துவைப் பற்றித் தீவிரமாய் இருங்கள்!" மற்றும் "மூடிய கதவுடன் இருந்த சபை" (திறந்த கதவுடன் இருந்த பிலதெல்பியாவின் சபைக்கு நேர்மாறானது) என்பவைகள் உள்ளடங்கும். வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், லவோதிக்கேயாவில் இருந்த கிறிஸ்தவர்கள், தங்கள் வலிமையை [vigor] *இழந்திருந்தனர் (3:16, 17), தங்கள் மதிப்பீடுகளை* [values] *இழந்திருந்தனர் (3:17, 18அ), தங்கள் கண்ணோக்கத்தை* [vision] *இழந்திருந்தனர் (3:18ஆ), மற்றும் தங்கள் உடைகளை* [vesture] *இழந்திருந்தனர் (3:17-22) என்று கூறி, அந்த சபைக்குழுமத்தை "மதியீனமான சபை" என்று அழைத்தார்.*[26]

சிலர் ஏழு சபைகளைப் பற்றிப் பிரசங்கிக்கும்போது, அவர்கள் "(உள்ளூர் சபைக்குழுமத்திற்கான) ஒரு கடிதம்" என்பதன் மீதான ஒரு பிரசங்கத்தையும் கூட்டுகின்றனர். நான் அவ்வாறு செய்வதற்குப் பதிலாக, "இங்குள்ள சபைக்குக் கர்த்தர் ஒரு கடிதத்தை எழுதினால், அது எப்படியிருக்கும்? அவர் என்ன கூறுவார் என்று நான் வியப்படைகின்றேன்" என்று மாத்திரம் கூறுவதுண்டு. இதைப் பற்றிச் சிந்திப்பதற்கு எனது உரையைக் கேட்பவர்களுக்குச் சற்று நேரம் கொடுத்தபின்பு,[27] *பெரும்*

பாலான சபைக்குழுமங்கள், ஆசியாவில் இருந்த ஏழு சபைகளின் பலங்கள் மற்றும் பலவீனங்கள் ஆகியவற்றின் இணைவாக உள்ளன என்பதைச் சுட்டிக்காண்பித்து - "இந்த சபை அதற்கு விதிவிலக்காக இருப்பதில்லை" என்பதை கவனியுங்கள் என்று கூறுவதுண்டு. பின்பு நான், "கர்த்தர் எனக்கு ஒரு கடிதம் எழுதுவாரென்றால், அவர் என்ன கூறுவார்?'' என்று கூறுவதுண்டு. வந்திருக்கும் ஒவ்வொருவரையும் தனிப்பட்ட வகையில் பயன்பாட்டை மேற்கொள்ளும்படி நான் வற்புறுத்துவதுண்டு.[28]

குறிப்புகள்

[1]இந்தக் காட்சியானது ஒவ்வொரு இல்லத்திலும் நடக்கும் மாதிரியானதல்ல, ஆனால் சில இல்லங்களில் இது உண்மையானதாக உள்ளது. இது ஒரு கருத்தை ஏற்படுத்துவதற்காக மிகைப்படுத்தப்பட்டுள்ளது, பெரும்பாலான கவனிப்பாளர்கள் கருத்தைப் புரிந்துகொள்வார்கள். இந்தக்காட்சியை நீங்கள் வாழும் பகுதிக்கு ஏற்றவாறு தகவமைத்துக் கொள்ளுங்கள். [2]உலகில் நான் வாழும் பகுதியில், "பாதங்களை இழுத்துச் செல்லுதல்" என்பது, தயங்குதல் அல்லது தாமதப்படுத்துதல் என்று அர்த்தப்படுகிற பேச்சு உருவகமாக பயன்படுத்தப்பட முடியும். உலகில் நீங்கள் வாழும் பகுதியில் இதேவிதமான கூற்று ஒன்றை நீங்கள் கொண்டிருக்கலாம். [3]இந்த யுத்தம், ஹோமர் என்பவரின் தரமுயர்ந்த புராணங்களான *Ilia* மற்றும் *Odyssey* என்பவற்றின் கருத்துப் பொருளாக இருந்தது. அவற்றின் விபரங்கள் கிரேக்க மூடநம்பிக்கைகள் நிறைந்தவையாக இருந்தாலும், அவைகள் பெரும்பாலும் கி.மு. பன்னிரண்டாம் நூற்றாண்டில் நடைபெற்ற உண்மையான வரலாற்று நிகழ்ச்சிகளின் அடிப்படையிலேயே அமைந்துள்ளன. [4]Ulysses என்பது அவரது பெயரின் இலத்தீன வடிவமாக உள்ளது, இந்த வடிவமைப்பானது, நம்மில் பலருக்கு, Odysseus என்ற அவரது கிரேக்கப் பெயரைக்காட்டிலும் அதிகம் பழக்கமானதாக உள்ளது. [5]இந்தப் புத்தகத்தில் "தன்னை ஏற்படுத்தியிருந்த சபை" என்ற முந்தின பாடத்தில் "நிர்வாணம்" என்ற வார்த்தையின் மீதான குறிப்புகளைக் காணவும். [6]இயேசுவே ஆவிக்குரிய எல்லா ஆசீர்வாதங்களின் ஆதாரமூலமாக இருக்கின்றார் (எபேசியர் 1:3). [7]"நான் உனக்கு ஆலோசனை சொல்லுகிறேன்" என்ற வார்த்தைகள் திகைப்புக்குரியவைகளாக உள்ளன! அகிலத்தின் ஆண்டவராகிய இயேசு, அவர்களுக்கு கட்டளையிடாமல், ஆலோசனை சொல்லுகின்றார்! ஆகவே, கர்த்தர் நமக்கு "ஆலோசனை" சொல்லும்போது, நாம் கேட்போமாக. [8]1 பேதுரு 1:7ஐக் காணவும். [9]மத்தேயு 19:21ஐக் காணவும். [10]KJV வேதாகமத்தில் "clean and white" என்றுள்ளது.

[11]ஆவிக்குரிய வகையில் பார்வையற்ற தன்மை பற்றிய ஒரு கலந்துரையாடலை யோவான் 9:39-41ல் காணவும். [12]ரோமர் 4:1-5; எபேசியர் 2:8, 9 மற்றும் இவைபோன்ற வசனப் பகுதிகளைக் காணவும். [13]இந்தக் கட்டளையில் பயன்படுத்தப்பட்டுள்ள நிகழ்கால வினைச் சொல்லானது, தொடர்ந்து நடைபெறும் செயலைக் குறிக்கிறது. அவர்கள் கடந்தகாலத்தில் தொடர்ந்து வெதுவெதுப்பானவர்களாய் இருந்தது போலவே, எதிர்காலத்தில் தொடர்ந்து வைராக்கியமுள்ளவர்களாய்/அனலுள்ளவர்களாய் இருக்க வேண்டும் என்று இயேசு விரும்பினார். [14]"மனந்திரும்பு" என்பது ஒருமுறை மாத்திரம் செயல்படும் வினைச் சொல்லாக உள்ளது, இது ஒரேமுறை நடைபெறுகிற, தீர்மானமான செயலைக் குறிக்கிறது. [15]பிரியமான "அன்பு" என்பதற்கான கிரேக்க வார்த்தையான

philia என்பது இங்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. [16]இவ்வசனப்பகுதியில், "அன்பு" என்பதற்குப் புதிய ஏற்பாட்டின் மிகப்பொதுவான வார்த்தையான *agape* என்பது பயன்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் இதன் அடிப்படை அர்த்தம், 3:19ல் உள்ளதைப் போலவே இருக்கிறது. [17]இவ்வசனப்பகுதியானது நீதிமொழிகள் 3:12ல் இருந்து மேற்கோள் காண்பிக்கப்படுகிறது, இது சங்கீதம் 119:75ஐயும் குறிப்பிடலாம். [18]நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது; இயேசு தொடர்ந்து தட்டிக்கொண்டிருக்கின்றார். தட்டுதல் மற்றும் கூப்பிடுதல் (கூப்பிடுதல் என்பது "என் சத்தத்தைக் கேட்டு" என்ற சொற்றொடரினால் மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது) என்பவற்றின் அடையாளத்துவம், இயேசு நமது இருதயங்களிலும் வாழ்விலும் அழைக்கப்பட வேண்டும் என்ற அவரது விருப்பத்தைக் குறிப்பதாக மாத்திரம் உள்ளது. இயேசு எவ்வாறு தட்டுகின்றார் மற்றும் கூப்பிடுகின்றார் என்பதை அறிய வேண்டும் என்று இந்தப் பாடத்தைக் கேட்பவர்களில் ஒருவர் வலியுறுத்துவாரென்றால், பின்வரும் கூற்று பயனுள்ளதாக இருக்கலாம்: "அவர் சூழ்நிலைகளின் மூலமாகத் தட்டுகின்றார், அவரது வசனத்தின் மூலமாக அழைக்கின்றார்" (Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989], 581). [19]யோவான் 14:23ஐக் காணவும். [20]"போஜனம் பண்ணுவான்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, நாளின் பிரதான உணவிற்கான வார்த்தையின் வினைச் சொல் வடிவமாக உள்ளது, இது விரைவான சிற்றுண்டியாக இராமல், ஓய்வாக உண்ணும் விஷயமாக இருந்தது.

[21]"பரலோக விருந்து" பற்றிய குறிப்பு ஒன்றும் மறைமுகமாய் உணர்த்தப்படலாம். (லூக்கா 22:30; வெளிப்படுத்தின விசேஷம் 19:9 ஆகிய வசனங்களைக் காணவும்.) [22]அவரது அழைப்பை அவர்கள் புறக்கணித்தால், நியாயத்தீர்ப்பு காத்திருந்தது. யாக்கோபு 5:9ஐக் காணவும், அங்கு இயேசு, கதவுக்கு முன்னால் இருக்கும் நியாயாதிபதியாகச் சித்தரிக்கப்பட்டுள்ளார். [23]இயேசு கடந்து சென்றிராத எதன்வழியாகவும் அவர்கள் கடந்து செல்லவேண்டியிராது என்று அவர் மீண்டும் ஒருமுறை வலியுறுத்தினார். அவர் மரணத்தை எதிர்கொண்டிருந்தார் - மற்றும் வெற்றிகொண்டிருந்தார். ஒரு பாடலில், "சிலுவையை நீ சுமக்காவிட்டால், கிரீடத்தை நீ அணிய முடியாது" என்ற வார்த்தைகள் உள்ளன. [24]இயேசு தமது உயிர்த்தெழுதலினால் சிலுவையை வெற்றிகொண்டார். பின்பு அவர் பரலோகத்திற்கு ஏறிச்சென்று தேவனுடைய வலது பாரிசத்தில் உட்கார்ந்தார் (நடபடிகள் 2:30-36). [25]கிறிஸ்தவர்கள் இயேசுவுடன் அரசாளுகின்றனர் என்பது வெளிப்படுத்தின விசேஷத்தின் மாபெரும் சத்தியமாக உள்ளது. நாம், இராஜரீகக் குடும்பத்தின் அங்கம் என்ற வகையில் அவருடன் இப்போது அரசாளுகின்றோம் (1:6; 5:10; ரோமர் 8:17; எபேசியர் 2:6 ஆகிய வசனங்களைக் காணவும்). மரணபரியந்தம் உண்மையாய் இருப்பவர்கள் அவருடன் "என்றென்றும்" அரசாளுவார்கள் (22:5; 2 தீமோத்தேயு 2:12ஐக் காணவும்). [26]Wiersbe, 579-81. [27]ஒரு வகுப்பு சூழ்நிலையில், இந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கும்படி மாணவர்களுக்கு வாய்ப்புகள் தரப்படலாம். [28]தனிப்பட்ட குறைவுகளைக் காட்டிலும் சபைக்குழுமத்தின் குறைவுகளைச் சுட்டிக்காண்பிப்பதைப் பலர் விரும்பித் தேர்ந்து கொள்கின்றனர்.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. கர்த்தருடைய சபையின் தனிப்பட்ட சபைக்குழுமங்கள் எப்போதுமே பிரச்சனைகளைக் கொண்டிருந்தனவா? ஏன்? இது, நாம் சபையின்மீது அன்புகூரக்கூடாதென்று அர்த்தப்படுத்துகிறதா?
2. இயேசு, 3:18ல் அளித்த "நெருப்பிலே புடமிடப்பட்ட பொன்" என்பது என்னவாக உள்ளது?
3. "வெண் வஸ்திரங்கள்" என்பவை எவை?
4. "கண்ணுக்குக் கலிக்கம்" என்பது என்ன?
5. இந்த ஆவிக்குரிய பொருட்களை நாம் எந்தக் கருத்தில் "வாங்குகின்றோம்"?
6. 3:19ன்படி, இந்த சபையை இயேசு ஏன் இவ்வளவு பலமாகக் கடிந்துகொள்கின்றார்?
7. நீங்கள் பின்வரும் கூற்றை ஒப்புக்கொள்கின்றீர்களா அல்லது கருத்து வேறுபடுகின்றீர்களா: "இன்னொருவரின் ஆத்துமாவை அபாயத்திற்கு உட்படுத்தும் தவறு ஒன்றை அவரில் கண்டும் அமைதியாக இருந்து விடுதல் என்பது அன்பின் அடையாளமாயிராமல், அன்புக்குறைவின் அடையாளமாகவே உள்ளது"?
8. 3:20ல் பேசப்படுகிற "கதவு" என்பது என்ன?
9. தேவனுடைய பிள்ளையாக இருக்கின்ற ஒருவர் தமது இருதயம் மற்றும் வாழ்வு ஆகியவற்றில் இருந்து இயேசுவை வெளியேற்றி மூடிவிடுதல் சாத்தியமாக உள்ளதா? லவோதிக்கேயர்கள் தங்களின் வெதுவெதுப்பான தன்மையினால் அதைச் செய்தனர். நமது வாழ்வில் இருந்து இயேசுவை வெளியேற்றி மூடிவிடக்கூடிய மற்ற சில வழிகள் யாவை?
10. நாம் இயேசுவை வெளியேற்றி மூடிவிட்டோம் என்று கண்டறிந்தால், அவரை நாம் திரும்ப அனுமதிப்பது எவ்வாறு?
11. வெற்றிகொள்பவர்களுக்கு இயேசு 3:21ல் கொடுத்த வாக்குத்தத்தம் என்ன?

19

கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்

(4:1-11)

ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்கள் பற்றிய நமது படிப்புகளில் நாம், கிறிஸ்தவர்கள் கடந்த காலத்தில் துன்புறுத்தப்பட்டிருந்தனர் (2:13; 3:8), நிகழ்காலத்தில் துன்புறுத்தப்பட்டனர் (2:9; 3:9), மற்றும் எதிர்காலத்தில் இன்னும் மோசமாகத் துன்புறுத்தப்பட இருந்தனர் (2:10; 3:10) என்பதைக் கண்டோம். கிறிஸ்தவர்களுக்குக் காத்திருந்த சோதனைகளில் பல, அதிகாரம் 6லும் அதைத் தொடர்ந்து வரும் அதிகாரங்களிலும், வரைகுறிப்பிடப்பட்டுள்ளன. இருப்பினும் இயேசு, எதிர்கால இடர்ப் பாடுகள் பற்றிக் கூறி முடிக்கும் முன், அவர் அதிகாரங்கள் 4, 5 ஆகியவற்றில் ஒவ்வொன்றையும் கருத்துநோக்கில் வைத்தார்.

வெளிப்படுத்தின விசேஷத்தின் இந்தத் திறவுகோல் அதிகாரங்களில், துன்புறும் கிறிஸ்தவர்களுக்கு - தோற்றத்திற்கு நேர்மாறான வகையில் - தேவன் இன்னமும் அரியணையில் இருந்தார் என்பதும், ரோமப் பேரரசர் அல்ல, ஆனால் அவரே இன்னமும் கட்டுப்பாடு செலுத்தினார் என்பதும் காண்பிக்கப்பட்டன. மற்றும், தேவன் தமது திட்டங்களையும் நோக்கங் களையும் கொண்டிருந்தார் என்றும், நிறைவாக அவர் அந்தத் திட்டங்கள் மற்றும் நோக்கங்களின்படியே எல்லாவற்றையும் செயல்படுத்துவார் என்றும் அவர்களுக்கு உறுதியளிக்கப் பட்டது.

அந்தக் கருத்து நோக்கு இன்றைக்கு அவசியமாய் இருக்கிறது. முதல் நூற்றாண்டில் கிறிஸ்தவர்கள் துன்புறுத்தப் பட்டது போலவே இப்போதும் சிலர் துன்புறுத்தப் படுகின்றனர். மற்றவர்கள், அன்றாட வாழ்வின் பிரச்சனைகளினால் மூழ்கடிக்கப் படுகின்றனர். இன்னும் பிறர், "ஐசுவரியத்தினாலும் சிற்றின்பங்களினாலும்" பார்வையற்றுப் போகும்படி ஆகியிருக்கின்றனர் (லூக்கா 8:14). அவ்வப்போது, நம்மில் ஒவ்வொருவரும், வாழ்வு என்பது உண்மையில் என்னவாக உள்ளது என்பதைக் காண்பதற்குத் தேவனுடைய அரியணை அறைக்குத் திரும்ப வேண்டும்.

அதிகாரங்கள் 4, 5 ஆகியவை நம்மைத் தேவனுடைய பிரசன்னத்திற் குள்ளாக்குகின்றன. இவ்விதமாக நாம், நமது வாழ்வில் விஷயங்களைக் கருத்துநோக்கில் காத்துக்கொள்வது எப்படி என்று காண்பதற்கு, நமது வேதவசனப் பகுதியைப் பயபக்தியுடன் அணுகுகின்றோம்.

சுற்றிலும் கண்ணோக்குவதற்குப் பதிலாக, மேலே கண்ணோக்குங்கள் (4:1, 2அ)

பூமியில் தீமை ஆர்ப்பரித்துக் கொண்டிருந்தது, அது சகல வல்லமையும் நிறைந்திருந்ததாகக் காணப்பட்டது. நற்தன்மை என்பது சலிப்படைந்திருந்த தாகவும், பலவீனமாகவும் தாக்குதலுக்கு உட்பட்டதாகவும் இருந்தது. அந்தக் கண்ணோக்கக் கருத்தை மாற்றுவதற்கு, யோவான் மேலே கண்ணோக்கினார்.

> *இவைகளுக்குப்பின்பு, இதோ, பரலோகத்தில் திறக்கப்பட்டிருந்த ஒரு வாசலைக் கண்டேன்.[1] முன்னே எக்காளசத்தம்போல என்னுடனே பேச நான் கேட்டிருந்த சத்தமானது: "இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன் என்று விளம்பினது." உடனே ஆவிக்குள்ளானேன், அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம் வைக்கப்பட்டிருந் தது (வசனங்கள் 1, 2அ).*

"ஏழு கடிதங்களும் முடிக்கப்பட்ட முதல் தரிசனத்திற்குப் பின்பு" என்பதே "இவைகளுக்குப் பின்பு" என்பதன் இயல்பான அர்த்தமாக உள்ளது.[2] NCV *வேதாகமத்தில்,* "after *the vision* of these things ... " *என்று உள்ளது. விஷயங்கள் இருந்த நிலையில் யோவானுக்குக் காண்பித்தபின்பு, அவர் இனி நடக்க இருப்பவற்றைக் காணவேண்டும் என்று இயேசு விரும்பினார். இவ்வாறு, இரண்டாம் தரிசனம் அறிமுகப்படுத்தப்பட்டது.*

யோவான் மேலே கண்ணோக்குகையில், "பரலோகத்தில் திறக்கப் பட்டிருந்த ஒரு வாசலைக்" கண்டார். அந்த கதவு திறந்திருந்தாலும், யோவான் உள்நுழைவதற்குத் தள்ளிக்கொண்டு செல்லவில்லை, ஆனால் ஒரு அழைப்பிற்காகக் காத்திருந்தார். முதலில், "மனுஷகுமாரனுக் கொப்பானவரின்" (1:13) தரிசனத்தில் அவருடன் பேசியிருந்தது போன்ற அதே எக்காளசத்தம்போன்ற குரலானது[3] பேசிற்று. அந்தக் குரல், "இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன்" என்று அவரை அழைத்தது.

"இவைகளுக்குப்பின்பு சம்பவிக்கவேண்டியவைகள்" என்பதில் சபைக்களுக்காக வைக்கப்பட்டிருந்தவைகளும், ரோமாபுரி தனது பாவங்களுக்காக அறுவடை செய்ய வேண்டியவைகளும், இந்த உலகம் எவ்வாறு முடிவு பெறும் என்பதும், மற்றும் வரவிருக்கும் உலகம் எவ்வாறு இருக்கும் என்பதும் உள்ளடங்கியிருந்தன. "வேண்டியவைகள்" என்ற வார்த்தையை அடிக்கோடிட்டுக் கொள்ளுங்கள். வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது, "நடக்கூடிய விஷயங்கள்" அல்லது "நடக்கலாம் என்றுள்ள விஷயங்கள்" பற்றியதாக இராமல், "நடக்க வேண்டிய விஷயங்கள்" பற்றியதாக இருந்தது. அவைகள் நடக்க வேண்டியவைகளாக இருந்தன, அவைகள் நடந்தேறும், ஏனென்றால் அவைகள் "தெய்வீக சித்தத்தின் வெளிச் செயல்களாக" இருந்தன.[4]

அவரது ஆர்வம் தூண்டப்பட்டது, யோவான் தம்மை "ஆவிக் குள்ளாக"[5] இருந்ததாகக் கண்டார், இது பதில் செயல் செய்வதற்குத்

தயாரான நிலையாக இருந்தது. உடனடியாக அவர், திறந்தகதவினூடே, பரலோகத்தின் அரியணை அறைக்குள் கொண்டு செல்லப்பட்டார்![6]

யோவான் கண்டவற்றைக் குறிப்பிடுவதற்கு முன் நாம், கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட சோதனைகள் மற்றும் துன்பங்கள் ஆகியவை கண்ணோக்கப்பட வேண்டிய சரியான கருத்து நோக்கத்தை யோவான் பெற்றுக் கொள்ள முடிந்த வழியைப் பற்றி வலியுறுத்துவதற்கு நாம் சற்றே தாமதிப்போம். அவரது கண்கள், கிறிஸ்தவர்களின் பலவீனத்திலும், ரோமர்களின் பலத்திலும் நிலைத்திருந்த வரையிலும், ஒவ்வொன்றும் நம்பிக்கையற்றதாகவே காணப்படும். அவரது பார்வை பரலோகத்தை நோக்கி மாற்றப்பட்ட பின்புதான், அவர் சூழ்நிலையைத் தேவனுடைய கண்ணோக்கக் கருத்தில் இருந்து காணும்போது, அது அவரது வெளிக்கண்ணோக்கத்தை மாற்றும்.

நமது கண்கள் இந்த உலகத்தினால் நிறைந்திருக்கையில், மூழ்கிப் போய்விடுதல் என்பது சுலபமானதாக உள்ளது. செய்தியைக் கவனிப்பதற்கோ அல்லது செய்தித்தாளை வாசிப்பதற்கோ நான் பயப்படும் அளவுக்கு, அவ்வளவு அதிகமான கோபம், வெறுப்பு மற்றும் கலப்படமில்லாத அற்பத்தனம் ஆகியவை இந்த உலகத்தில் நிலவுகின்றன. சமூகத்தின் அழகற்ற தன்மையுடன் கூடுதலாக, தனிப்பட்ட பிரச்சனைகளும் நம்மை விழுங்கி விடுவதாக அடிக்கடி பயமுறுத்துகின்றன: பணப்பிரச்சனைகள், குடும்பத்தில் சிரமமான சூழ்நிலைகள், பகையுணர்வுள்ள உறவுகள், வேலை அழுத்தங்கள், வியாதிகள் மற்றும் மரணம். பிரச்சனைகள் நம்மை நசுக்கும்போது நாம் என்ன செய்ய வேண்டும்? யோவானைப் போல் நாம் மேலே கண்ணோக்க முடியும். தேவனுடைய அரியணை அறையின் கதவைக் கர்த்தர் திறந்து வைத்துள்ளார், எனவே, யோவான் கண்டவற்றை இன்றைய நாட்களில் நாமும்கூட காணமுடியும் - மற்றும் ஆறுதல் படுத்தப்பட முடியும்!

உலகத்தின் அழகற்ற தன்மையைக் காண்பதற்குப் பதிலாக, தேவனுடைய தனிச்சிறந்த தன்மையைக் கண்ணோக்குங்கள் (4:2-8)

யோவான் பரலோகத்திற்குள் எடுத்துக் கொள்ளப்பட்டபோது, அவர் கண்டது என்ன? அந்தத் தரிசனம் உங்கள் ஆத்துமாவை நிரப்பட்டும்:

> உடனே ஆவிக்குள்ளானேன், அப்பொழுது, இதோ, வானத்தில் ஒரு சிங்காசனம்[7] வைக்கப்பட்டிருந்தது, அந்தச் சிங்காசனத்தின்மேல் ஒருவர் வீற்றிருந்தார். வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக்கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார்; அந்தச் சிங்காசனத்தைச்சுற்றி ஒரு வானவில்லிருந்தது,[8] அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று. அந்தச் சிங்காசனத்தைச் சூழ இருபத்துநான்கு சிங்காசனங்களிருந்தன, இருபத்துநான்கு மூப்பர்கள்[9] வெண்வஸ்திரந்தரித்து, தங்கள் சிரசுகளில் பொன்முடி சூடி,[10] அந்தச் சிங்காசனங்களின்மேல் உட்கார்ந்திருக்கக்கண்டேன். அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும்[11] புறப்பட்டன, தேவனுடைய

ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள்[12] சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன. அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக் கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது, அந்தச் சிங்காசனத்தின் மத்தியிலும்[13] அந்தச் சிங்காசனத்தைச் சுற்றிலும் நான்கு ஜீவன்களிருந் தன, அவைகள் முன்புறத்திலும் பின்புறத்திலும் கண்களால் நிறைந் திருந்தன. முதலாம் ஜீவன் சிங்கத்திற்கொப்பாகவும், இரண்டாம் ஜீவன் காளைக்கொப்பாகவும், மூன்றாம் ஜீவன் மனுஷமுகம் போன்ற முகமுள்ளதாகவும், நான்காம் ஜீவன் பறக்கிற கழுகுக்கு ஒப்பாகவு மிருந்தன. அந்த நான்கு ஜீவன்களிலும் ஒவ்வொன்று அவ்வாறு சிறகுகளுள்ளவைகளும், சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அந்தச் சுற்றிலும் உள்ளேயும் கண்களால் நிறைந்தவைகளுமாயிருந்தன. அவைகள்: இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன (வசனங்கள் 02-8). ('அரியணைச் சுற்றிலும் இருந்த காட்சிகள்" என்ற விளக்கப்படத்தைக் காணவும்.)

விபரங்களினால் மூழ்கிப்போய்விடாதீர்கள். இருபத்திநான்கு மூப்பர்களின் அடையாளத்துவம், கண்ணாடிக்கடலின் முக்கியத்துவம், மற்றும் நான்கு ஜீவன்களின் அர்த்தம் மற்றும் நோக்கம் ஆகியவை பற்றி விளக்கவுரையாளர்கள் போராடுகின்றனர்; ஆனால் அந்த விபரங்களின்மீது வலியுறுத்தம் வைத்தல் என்பது, கருத்தைத் தவறவிடுவதாக உள்ளது. இந்தக் காட்சியானது கண்களைப் பளபளக்கச் செய்வதாகவும் கற்பனையை அலைக்கழிக்கச் செய்வதாகவும் உள்ளது. இது, தேவனுடைய மகத்துவத்தைப் பற்றி நம்மைப் பெருவியப்படையச் செய்யும்படிக்குப் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது!

நாம் முடிக்கும் முன், இங்கு பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளங் களின் சாத்தியமான முக்கியத்துவத்தைப் பற்றி நாம் போராடவும் செய்வோம். இருப்பினும், முதலாவதாகவும் முதன்மையாகவும் நாம், இந்தத் தரிசனத்தை முழுமையாகக் கண்ணோக்கவும், அது யோவான் மீது எவ்வாறு செயல்விளைவை ஏற்படுத்தியிருக்கும் என்பதை ஆராயவும் விரும்புகின்றோம். உங்களை யோவானின் இடத்தில் வைத்து, அவர் கண்டவை என்ன மற்றும் அவர் எவ்வாறு உணர்வடைந்திருப்பார் என்பவை பற்றிக் கண்ணோக்க முயற்சி செய்யுங்கள். எனது சிந்தையில் நான் இதை எவ்வாறு உணர்ந்தறிகின்றேன் என்பதை இங்கு தருகின்றேன்.

யோவான் எதிர்பார்த்திருந்தது என்ன என்று அவர் அறிந்திருக்க வில்லை, ஆனால் அந்த மகிமையும் மாட்சிமையும் அவரால் கற்பனை செய்யக்கூடிய எதையும் விஞ்சியிருந்தது. அந்த ஒளிப்பிரகாசத்தினால் பாதி பார்வையற்றுப்போய், அந்தக்காட்சியினால் திகைப்படைந்துபோய் இருந்த அவர், தமக்குமுன்பு தோன்றிய அந்தக் காட்சியை வகைப்படுத்தப் பிரயாசப்பட்டார்.

மேடையின் மையத்தில் ஒரு பெரிய அரியணை இருந்தது, அது சர்வவல்லவரின் இருக்கையாக இருந்தது! அரியணையில் இருந்து வானவில்லின் மயங்க வைக்கும் நிறங்கள் துடிப்புடன் ஒளிர்ந்தன.

அரியணையைச் சுற்றிலும் அதேபோன்ற, ஆனால் சிறிய அளவிலான அரியணைகள்[14] வட்டமாக வைக்கப்பட்டிருந்தன. அந்த அரியணைகளில், முதிய மனிதர்கள் வெள்ளை அங்கி தரித்து, பொன்முடி சூடி அமர்ந்திருந்தனர், அவர்களின் சுருக்கம் நிறைந்த முகங்கள் வானலோகத்து ஒளியில் குளித்திருந்தன.

எச்சரிக்கை எதுவுமின்றி, அரியணையில் இருந்து தனிவகைப்பட்ட இடிமுழக்கமும் மின்னல்களின் கண்கூசும் ஒளியும் வந்தன. ஏழு விளக்குகள் அரியணையின் பாதபடியில் பிரகாசித்தன. இது யோவானைத் திகைக்கச் செய்தது. அவருக்கும் அந்த உரம் வாய்ந்த வல்லமைக்கும் இடையில் பரந்து விரிந்த ஒரு பிரகாசமான இடைவெளி இருந்தது - யோவான் அந்தத் தூரத்தைக் குறித்து மகிழ்ச்சியடைந்தார். அவரது இருதயம், அவரது மார்பில் இருந்து வெடித்து விழுந்து விடுமோ என்று காணப்படுமளவுக்கு மிகவும் வேகமாகத் துடித்தது.[15]

யோவானின் கண்கள் அனுசரித்துப்போன வேளையில், அவரது பார்வையினால், அரியணையைச் சுற்றிலும் இருந்த ஒளிவெள்ளத்தை ஊடுருவிக் கண்ணோக்க முடிந்தது, அவர் விசித்திரமான நான்கு ஜீவன்களைக் கண்டார். அவற்றின் வடிவம் அழகானதாகவும் விகாரமானதாகவும் இருந்தது. அவை யாவையும் சிறகுகளைக்கொண்டிருந்தன மற்றும் சிமிட்டாத கண்களால் மூடப்பட்டிருந்தன, அவைகள் எல்லாவற்றையும் பார்க்கின்ற கண்களாக இருந்தன. அவைகள், அண்டத்திலேயே வீரமிக்க, பலமிக்க, ஞானமிக்க, மற்றும் வேகமான ஜீவன்கள் என்று யோவான் ஆவியினாலே அறிந்தார். பின்பு அந்த அப்போஸ்தலர், அவைகளின் பாடல் பற்றி அறிந்தார். அவைகள், அரியணையில் அமர்ந்திருந்தவரைத் துதித்துப் புகழுகையில், அவைகளின் பாடல் அப்போஸ்தலரின் ஆத்துமாவை நிரப்பிற்று: "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்." யோவான் பயபக்தியினால் மேற்கொள்ளப்பட்டிருந்தார் ... .

வசனம் 2முதல் 8வரையிலான பகுதியை மறுபடி வாசிப்பதற்கும், காட்சியை மீண்டும் உருவாக்குவதற்கான எனது முயற்சிக்கும் சற்றே தாமதியுங்கள். பின்பு, பின்வரும் கேள்விகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்: இந்தத் தரிசனம் யோவான்மீது ஏற்படுத்தியிருக்கக் கூடிய முழுமையான மனப்பதிவு என்ன என்பது பற்றி நீங்கள் நினைப்பது என்ன? இது உங்களிடத்தில் ஏற்படுத்துகிற மனப்பதிவு என்ன? இந்தக் காட்சியைப் புரிந்துணர்ந்து கொள்கையில் உங்கள் மனதிற்கு வரும் வார்த்தைகள் என்ன?: "மகிமை," "மகத்துவம்," "மேன்மை," "வல்லமை," "பலம்"? தேவனுடைய மகாபராக்கிரமத்தை உங்கள் சிந்தையிலும் இருதயத்திலும் செயல்தாக்கம் செய்தல் என்பதே இந்தத் தரிசனத்தின் அடிப்படை நோக்கமாக உள்ளது! இந்த விபரங்களின் மீது கவனம் செலுத்துதல் என்பது அவற்றின் நோக்கமாயிருப்பதில்லை, ஆனால் கருத்தை மேம்படுத்துதல் என்பதே அவற்றின் நோக்கமாக உள்ளது.

இங்கு ஆழ்ந்து சிந்திப்பதற்கு இன்னொரு கேள்வி உள்ளது: இந்தத் தரிசனம், யோவான் மீது கொண்டிருந்த நடைமுறைச் செயல்விளைவு

என்ன? யோவான், தேவனுடைய மகிமையையும் வல்லமையையும் கண்டபின்பு, அவரால் ரோமாபுரியின் பலத்தைப் பற்றி முன்புபோன்றே மீண்டும் ஒருக்காலும் நினைத்துப் பார்க்க இயலாதிருந்தது. தேவனுடைய அரியணையுடன் ஒப்பிடப்படுகையில், டொமீஷியனின் அரியணை, ஒரு குப்பைக் குவியலுக்கு மாத்திரமே தகுதியான ஆட்டம்காணும் சிற்றிருக்கை யாக இருந்தது. தேவனுடைய மகிமைக்கு முன்னால், ரோமாபுரியின் மேன்மையானது மெல்லியதாகவும் அற்ப ஒளியுடைதாகவும் இருந்தது. தேவனுடைய வல்லமைக்கு எதிராக, ரோமாபுரிப்படையானது, புதிதாய்ப் பிறந்த குழந்தை போல், உதவியற்ற வகையில் இருந்தது.

உங்களில் பலர், உங்களுக்கு எதிராக அணிவகுத்துள்ள பேய்க்குணம் கொண்ட சக்திகளுடன், கிறிஸ்தவ வாழ்வை வாழ்வதில் உள்ளடங்கி யிருக்கும் சிரமத்தை அறிவீர்கள். சிலருக்கு அந்த சக்தியாக இருப்பது, தேவன்மீதான நம்பிக்கைக்கு எதிரான அரசாங்கமாகும். மற்றவர்களுக்கு இது பரிவிரக்கமற்ற வேலைக்கு அமர்த்தியிருப்பவர், அவிசுவாசமான ஒரு குடும்பம், ஒத்துழைக்காத ஒரு வாழ்க்கைத் துணை, நட்புறவற்ற அயலகத்தவர்கள் அல்லது ஆதரவு அளிக்காத நண்பர்கள் என்பதாக இருக்கிறது. நமது கைகள் களைத்துப்போய், நமது பாத அடிவைப்புகள் தள்ளாடும்போது (கலாத்தியர் 6:9; 2 தெசலோனிக்கேயர் 3:13), நாம் நமது தலைகளை உயர்த்தி தேவனுடைய - நம்மீது அன்புகூர்ந்து நம்மைப் பராமரிக்கின்ற, சர்வ வல்லமை நிறைந்த அன்புகூரும் தேவனுடைய - மகிமையை மீண்டும் ஒருமுறை காணவேண்டும் (ரோமர் 8:35-39). இந்த உலகத்தில் உள்ள மற்ற யாவும் - இந்த அண்டத்தில் உள்ள மற்ற யாவும் - நமது தேவனுக்கு முன்பாக மங்கித் தேய்ந்து விடுகிறது. அந்த சத்தியத்தில் இருந்து நாம் ஆறுதலையும் பலத்தையும் பெற்றுக்கொள்வோமாக.

தேவனே அகிலத்தை ஆளுகின்றார் - மனிதன் அல்ல - என்பதைப் பகுத்தறியுங்கள் (4:2-8அ)

நாம் இந்தத் தரிசனத்தை முழுமையாகக் கண்ணோக்கியுள்ள நிலையில், இப்போது இதன் விபரங்களைக் கண்ணோக்கும் வேளையாக உள்ளது. "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர்" தாம் (வசனம் 8) அரியணையின்மீது வீற்றிருந்தார் (மற்றும் வீற்றிருக்கின்றார்). இவர், 4:5ல் பரிசுத்த ஆவியானவருடனும், 5:13ல் இயேசுவு(ஆட்டுக்குட்டியானவரு)டனும் குறிப்பிடப்படுவதால், இவர் பிதாவாகிய தேவனாக இருக்கின்றார்.

யோவான், பிதாவை விவரித்தல் என்ற சாத்தியமற்ற அறைகூவலைக் கொண்டிருந்தார். "தேவன் ஆவியாயிருக்கிறார்" (யோவான் 4:24அ) என்பதாலும், "தேவனை ஒருவனும் ஒருக்காலும் கண்டதில்லை" (யோவான் 1:18அ) என்பதாலும், அவரை யோவான் எவ்வாறு சாத்தியமான வழியில் விவரிக்க முடியும்? யோவான் இதற்கு முன்பே, "தேவன் ஒளியா யிருக்கிறார்" (1 யோவான் 1:5; 1 தீமோத்தேயு 6:16ஐக் காணவும்) என்று எழுதியிருந்தார். இவ்விதமாக அவர், கர்த்தரை ஒளி மற்றும் வண்ணம் ஆகிய

சொற்றொடர்களில் சித்தரித்தார்[16]; "வீற்றிருந்தவர், பார்வைக்கு வச்சிரக் கல்லுக்கும் பதுமராகத்துக்கும் ஒப்பாயிருந்தார், அந்தச் சிங்காசனத்தைச் சுற்றி ஒரு வானவில்லிருந்தது, அது பார்வைக்கு மரகதம்போல் தோன்றிற்று" (வசனம் 3).

வச்சிரக்கல் என்பது நன்கு அறியப்பட்ட ஆபரணக்கல்லாக இருந்தது (எசேக்கியேல் 28:13), இது பிரதான ஆசாரியரின் மார்ப்பதக்கத்திலும் (யாத்திராகமம் 28:20; 39:13), புதிய எருசலேமின் அஸ்திபாரத்திலும் (வெளிப்படுத்தின விசேஷம் 21:18, 19) காணப்பட்டது. வச்சிரக்கல் என்பது சிலவேளைகளில் பச்சையாக இருந்தது என்றாலும், ஒரு தெளிவான வகையையே யோவான் தமது சிந்தையில் கொண்டிருந்தார்,[17] ஏனெனில் பிற்பாடு அவர், பரலோக எருசலேமின் பிரகாசமானது "பளிங்கினொளியுள்ள வச்சிரக்கல்லைப்போல" இருந்தது என்று எழுதினார் (21:11). மின்னுகிற மற்றும் ஒளிவீசுகிற மேன்மையான, வானவில்லின் நிறங்களைக் கதிரொளி பரப்புகிற ஒரு வைரக்கல்லை நீங்கள் கற்பனை செய்தால் அது தவறில்லை.[18] தெளிவான வச்சிரக்கல் என்பது தேவனுடைய மகிமையைக் குறிக்கிறது (21:11அ), அது அவரது பரிசுத்தத்தையும் குறிக்கலாம்.

பதுமராகக் கல் என்பதும் வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் மதிப்பு மிக்கதாக இருந்தது. இதுவும் பிரதான ஆசாரியரின் மார்ப்பதக்கம் (யாத்திராகமம் 28:17) மற்றும் பரலோக நகரத்தின் அஸ்திபாரம் (21:20) ஆகியவற்றில் காணப்பட்டது. இதைப் பலர், இன்றைய நாட்களில் கார்னெலியன் (மாணிக்கம்) என்று நினைக்கின்றனர்,[19] இது சாதாரணமாக ஆழ்ந்த சிகப்பு வண்ணத்தில், ரூபியின் தோற்றத்திற்கு ஒப்பானதாக உள்ளது.[20] "ஒருவர், மாணிக்கக்கல் ஒன்றைத் தமது கையில் வைத்திருக்கும்போது, அது அந்தக் கல்லினுள் ஒரு நெருப்பு எரிந்துகொண்டிருப்பது போன்று காணப்படும்."[21] இந்தக் கல்லானது தேவனுடைய அக்கினிபோன்ற கோபத்தின் அடையாளத்துவமாக இருக்கலாம்.

மரகதம் என்பது அனேகமாக இன்றைய நாட்களிலும் அந்தப் பெயராலேயே அழைக்கப்படுகிற அதே கல்லாக இருக்கலாம், இது அழமான, மினுமினுப்பான பச்சை நிறக் கல்லாகும் - இது சாத்தியமான வகையில் தேவனுடைய இரக்கத்தைக் கருத்தாகத் தெரிவிக்கிறது.[22] இப்படிப்பட்டதொரு விளக்கம், வானவில்லின் அடையாளத்துவத்துடன் சீர்பொருந்தியதாக இருக்கும். நோவா மற்றும் பேழை பற்றி ஆதியாகமம் 6முதல் 9வரையுள்ள வரலாற்றை மறுபடியும் வாசியுங்கள், 9:8-17ல் உள்ள வானவில்லின் தனிச் சிறப்பான கருத்தின்மீது விசேஷித்த கவனம் செலுத்துங்கள்.[23] வானவில் என்பது, தேவனுடைய கோபத்தையும் இரக்கத்தையும் நமக்கு நினைவூட்டுகிறது. விசேஷமாக வானவில் என்பது, தேவன் தமது வார்த்தையைக் காத்துக்கொள்கின்றார் என்பதற்கு நிரூபணமாக உள்ளது: அவர் நோவாவுடன் ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்தினார், அந்த வாக்குத்தத்தத்தை அவர் காத்திருக்கின்றார். இவ்விதமாக, வானவில் என்பது, துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு, தேவன் அவர்களைப் பாதுகாத்துப் பத்திரப்படுத்துவார் என்று கொடுத்த அவரது வாக்குத்தத்தத்தை உறுதிப்படுத்திற்று.

அரியணையில் வீற்றிருப்பவர் பற்றிய இன்னொரு கருத்து நோக்கத்தை

வசனம் 5 தருகிறது: "அந்தச் சிங்காசனத்திலிருந்து மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன" (வசனம் 5அ). நமது சிந்தைகள் சீனாய் மலையை நோக்கிப் பின்செல்லுகின்றன, அப்போது தேவனுடைய பிரசன்னம் மலையில் வெளிப்பட்டது - மக்கள் பயந்து நடுங்கினார்கள் (யாத்திராகமம் 19:16). இடிமுழக்கத்தின் அடையாளம், வேதவசனத்தில் தேவனுடைய வல்லமையை, விசேஷமாக, அவரைக் கர்த்தர் என்று ஒப்புக்கொள்ளாதவர்களை தண்டிப்பதில் அவரது வல்லமையைச் சித்தரிக்கப் பயன்படுத்தப்படுகிறது (1 சாமுவேல் 2:10ஐக் காணவும்). அதிகாரம் 4ன் மின்னல்களும் இடிமுழக்கங்களும், பூமியின்மீது வரவிருந்த புயலின் முன் அடையாளங்களாக இருந்தன (8:5; 11:19; 16:18ஐக் காணவும்).

யோவான், "தேவனுடைய ஏழு ஆவிகளாகிய ஏழு அக்கினி தீபங்கள் சிங்காசனத்திற்கு முன்பாக எரிந்துகொண்டிருந்தன'' என்று கூறினார் (வசனம் 5ஆ). "ஏழு ஆவிகள்'' என்பவை பரிசுத்த ஆவியானவரே.[24] நீங்கள் "ஏழு அக்கினி தீபங்கள்'' பற்றி வாசிக்கும்போது, அனேகமாக நீங்கள், ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்த ஏழு விளக்குகளைக் கொண்ட விளக்குத்தண்டைப் பற்றி நினைக்கலாம்,[25] அது பரிசுத்த ஸ்தலத்தின் வெளிச்சத்திற்கு ஆதார மூலமாக இருந்தது (யாத்திராகமம் 25:31-37; 40:24). ஆவிக்குரிய வெளிச்சத்திற்காக (சங்கீதம் 119:105) பரிசுத்த ஆவியானவர் நமக்கு வசனத்தை (2 பேதுரு 1:21) கொடுத்துள்ளார்.[26] தரிசனத்தில், ஏழு சுடர்கள் அரியணையின் மேன்மையைக் கூட்டின.

அடுத்துவரும் விபரங்கள் கல்வியாளர்களைத் திகைக்கச் செய்கின்றன: இருபத்துநான்கு மூப்பர்களும் நான்கு ஜீவன்களும். சாத்தியமான அர்த்தங்களில் நாம் தத்தளித்துக் கொண்டிருக்கையில், இந்த அடையாளங்களின் நோக்கம், ஆபரணக் கற்கள், வானவில், புயல் மற்றும் விளக்குகள் ஆகிய அடையாளங்களின் நோக்கத்தைப் போன்றதாகவே இருந்தது என்ற உண்மையின் கண்ணோக்கை நாம் இழந்து போய்விடாது இருப்போமாக: அது தேவனுடைய மேன்மையை/மாட்சிமையைக் காண்பித்தலாகும்.

இந்த இருபத்து நான்கு மூப்பர்கள் என்பவர்கள் யார்? இவர்கள், "வெற்றிகொண்ட'' கிறிஸ்தவர்களுக்கு இயேசு வாக்களித்து இருந்த ஆசீர்வாதங்களில் மூன்றைப் பெற்றிருந்தனர் என்பதைக் கவனியுங்கள்: இவர்கள் ஆளுகை செய்துகொண்டிருந்தனர் (2:26, 27; 3:21ஐக் காணவும்), இவர்கள் வெண் உடைகளை உடுத்தியிருந்தனர் (3:5ஐக் காணவும்), மற்றும் இவர்கள் வெற்றி கிரீடங்களைக் கொண்டிருந்தனர் (2:10ஐக் காணவும்). இது என்னை, இவர்கள் வெற்றிகொண்டிருந்த கிறிஸ்தவர்களைக்[27] குறித்தனர் என்று நம்பும்படிக்கு வழிநடத்துகிறது. அப்படியிருந்தால், இருபத்துநான்கு என்ற எண்ணின் தனிச்சிறப்பு என்னவாயிருக்கும்? இது, பன்னிரண்டு (முழுமையைக் குறிக்கிற எண்) என்பது இரண்டாக வலுசேர்க்கப்படுதலாக உள்ளது[28] - இது, இருபத்துநான்கு என்பது "மரணபரியந்தம் உண்மையாயிருக்கும்'' யாவரையும் குறிக்கும் என்று கருத்துத் தெரிவிக்கிறது (2:10).[29]

இருப்பினும் இந்த அடையாளத்தின் மிகவும் தனிச்சிறப்பான அம்சம், வசனங்கள் 10, 11ல் காணப்படுகிறது: வயதுமுதிர்ந்த இந்த முற்பிதாக்கள்

தேவனுக்கு முன்பாக விழுந்து பணிந்து, தங்கள் கிரீடங்களை அரியணைக்கு முன்பாக வைத்து,[30] "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர் ..." என்று பாடினார்கள். ("மூப்பர் ஒருவர் தமது கிரீடத்தை அரியணையின் முன்பாக வைத்தல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) அவர்கள் மகிழ்வுடன் அனுபவித்த மகிமை எதுவாக இருந்தாலும், அது பிரதிபலிக்கப்பட்ட மகிமையாகவே இருந்தது; அவர்கள் தங்களின் மேன்மைப்படுத்தப்பட்ட நிலைக்கு தங்கள் சுயத்திற்கு மதிப்பு எதையும் எடுத்துக்கொள்ள இயலாதிருந்தது. தேவன் மாத்திரமே துதிக்குப் பாத்திரராய் இருந்தார்!

இப்போது நாம், இந்தத் தரிசனத்தின் வினோதமிக்க பாகத்திற்கு வருகின்றோம்: பல சிறகுகளும் கண்களும் கொண்டிருந்த நான்கு ஜீவன்கள்.[31] ("நான்கு உயிருள்ள ஜீவன்கள் சிங்காசனத்தைச் சுற்றியிருத்தல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) "நான்கு ஜீவன்களுக்கு" (4:6) முன்பிருந்தவைகள், ஏசாயா 6 மற்றும் எசேக்கியேல் 1; 10ல் பதிவுசெய்யப்பட்டுள்ள தரிசனங்களில் காணப்படுகின்றன. வெளிப்படுத்தின விசேஷம் 4ன் வினோதமான நான்கு ஜீவன்கள், ஏசாயா மற்றும் எசேக்கியேல் ஆகியோரால் முன்பு காணப்பட்டிருந்த ஜீவன்களின் ஒன்றுசேர்ந்த வடிவமாக[32] உள்ளன.

வெளிப்படுத்தின விசேஷம் 4ன் முதல் பாகத்தில் உள்ள விவரிப்பானது எசேக்கியேலின் தரிசனத்துடன் உறவுபடுகிறது: அவைகள் நான்கு ஜீவன்களாக இருந்தன (எசேக்கியேல் 1:5), அவைகள் "கண்களால் நிறைந்தவை"யாக இருந்தன, எசேக்கியேலின் (தரிசனத்தில் காணப்பட்ட) உயிரினங்களின் "சக்கரங்கள்" கூடக் கண்களால் நிறைந்திருந்தன (எசேக்கியேல் 1:16-18). எசேக்கியேல் தரிசனத்தில் கண்டிருந்த ஜீவன்கள் நான்கு முகங்களைக் கொண்டிருந்த (எசேக்கியேல் 1:10) வேளையில், வெளிப்படுத்தின விசேஷம் 4ன் ஜீவன்கள் ஒவ்வொன்றும் ஒரே ஒரு முகத்தை மாத்திரம் கொண்டிருந்தன; ஆனால் அந்த முகங்கள்,[33] எசேக்கியேலினால் குறிப்பிடப்பட்ட முகங்களைப் போன்றவைகளாகவே இருந்தன: ஒரு சிங்கம், ஒரு காளை [a bull-calf[34]], ஒரு மனிதன் மற்றும் ஒரு கழுகு. வெளிப்படுத்தின விசேஷம் 4ல் உள்ள எஞ்சிய விபரங்கள், ஏசாயாவின் தரிசனத்துடன் உறவுபடுகின்றன: அந்த ஜீவன்கள் தலா ஆறு செட்டைகளைக் கொண்டிருந்தன (ஏசாயா 6:2)[35] மற்றும் அவைகள், "சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர்" என்று கூப்பிட்டுச் சொல்லின (ஏசாயா 6:3).

ஒவ்வொரு விபரமும், அந்த ஜீவன்கள் எவ்வளவாகக் குறிப்பிடத் தக்கவையாய் இருந்தன என்பதை வலியுறுத்துகின்றன: அவைகள் "கண்களால் நிறைந்திருந்தன," இவ்விதமாக அவைகள் எல்லாவற்றையும் அறிந்திருந்தன. அவைகள் சிங்கத்தைப்போல் வீரமும், காளையைப்போல் பலமும், மனிதனைப்போல் வினாவும், கழுகைப்போல் வேகமும் கொண்டிருந்தன.[36] அவற்றின் பல எண்ணிக்கையிலான செட்டைகள் அவற்றை, எஜமானரின் ஊழியத்திற்கென்று எங்கு வேண்டுமென்றாலும் துரிதப்படுத்த முடிந்தவையாய் இருந்தன.

நம்புதற்கு அரிய இந்த ஜீவன்கள் யார் அல்லது என்ன? ஏசாயா தரிசனத்தில் கண்டிருந்த ஜீவன்கள் "சேராபீன்கள்" என்று அழைக்கப் பட்டன (ஏசாயா 6:2, 6).[37] எசேக்கியேல் தரிசனத்தில் கண்டிருந்த ஜீவன்கள், "கேருபீன்கள்" என்று எசேக்கியேல் 10ல், மீண்டும் மீண்டும் அழைக்கப்பட்டன (விசேஷமாக, வசனங்கள் 15 மற்றும் 20ஐ வாசியுங்கள்).[38] சேராபீன்களும் கேருபீன்களும், சாத்தியமான வகையில் தூதர்களின் விசேஷித்த இரண்டு வகைகளாக, தேவனுடைய படைப்பில் மிக உயர்ந்தவைகளின் மத்தியில் இருப்பவைகளாகப் பொதுவாக நினைக்கப்படுகிறது.[39] ஒருவேளை அதுவே யோவான் கண்ட நான்கு ஜீவன்களாக இருக்கலாம் - அல்லது அவைகள் எல்லா ஜீவன்களுக்கும் அடையாளத்துவமாக இருக்கலாம்.[40] அவைகள், தேவனுடைய பண்ணைப் பற்றிய பரலோகத்திற்குரிய நினைவூட்டுதல்களாக மாத்திரம் இருக்கலாம்.

அவைகள் யாராக அல்லது என்னவாக இருந்தன என்பது, அவைகள் என்ன *செய்தன* என்பதைப்போல் அவ்வளவு முக்கியமானதாக இருப்ப தில்லை. அவைகள் எவ்வளவுக்குத் தோற்றப்பொலிவு உடையவைகளாய் இருந்தனவோ, அவ்வளவுக்கு அவைகள் தங்களுக்கென்று துதியை எடுத்துக் கொள்ளாதிருந்தன, ஆனால் பிதாவானவருக்கே எல்லா மகிமையையும் செலுத்தின: "சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர்"!

இன்னும் ஒரு குறிப்பிற்குப் பின்பு நாம், இந்த விபரங்களை முடிப்போம். (விபரங்களில் புதைந்து போகாதிருத்தல் என்பது மிகவும் கடினமானதாக உள்ளது!) இப்போது வரையிலும் நான், வசனம் 6ன் முதல் பகுதியை வேண்டுமென்றே விட்டுவைத்துள்ளேன்: "அந்தச் சிங்காசனத்திற்கு முன்பாகப் பளிங்குக்கொப்பான கண்ணாடிக்கடலிருந்தது"[41] வெளிப்படுத்தின விசேஷத்தில் கடலின் உருவகம் அடிக்கடி உள்ளது.[42] இவ்விடத்தில் இது, நாம் மாம்சத்தில் இருக்கையில் - யோவானை அரியணையில் இருந்து பிரித்து வைத்திருந்த கண்ணாடிக்கடலைப் போலவே - நமக்கும் தேவனுக்கும் இடையில் எப்போதுமே ஒரு தடைச்சுவர் இருக்கும் என்று மறைமுகமாய் உணர்த்தலாம்.[43] "இருக்கலாம்" அல்லது "ஒருவேளை" என்பவற்றினால் கவலையடையாதீர்கள். மாறாக, யோவான் கண்ட காட்சியைக் கண்ணின்முன் நிறுத்தி, "கடல்" என்று அழைக்கப்படுகிற மினு மினுப்பான பரப்பெல்லையைச் சிந்தித்துப் பாருங்கள்.

நான், அமைதியான ஏரிகளின் அருகில் நின்று, உயர்ந்த மரங்கள், கம்பீரமான மலைகள் மற்றும் மேகங்களால் நிறைந்த ஆகாயம் ஆகியவற்றின் பிரதிபலிப்பைப் பெரும் வியப்புடன் உற்றுநோக்கியுள்ளேன். யோவானின் புலன்களை நிறைத்திருந்த காட்சியானது எவ்வளவு பயபக்தி நிறைந்த ஏவுதலாக இருந்திருக்க வேண்டும்: இருபத்து நான்கு அரியணை களில் அவற்றிற்கே உரிய அமர்வாளர்கள்; நான்கு விநோதமான ஜீவன்கள்; ஒளிவீசும் ஏழு தீபங்கள்; பிரகாசிக்கும் வெளிச்சங்கள், தனிச்சிறந்த மேகங்கள் மற்றும் மின்னல் வெளிச்சங்கள் ஆகியவற்றுடன் மேன்மையான அரியணை - இவை யாவும் கண்ணாடிக் கடலில் பிரதிபலிக்கப்பட்டன!

அந்தக் காட்சியை நீங்கள் சித்தரித்துக் காண்கையில், அரியணைதான்

கவனக்குவிப்பின் இடமாக உள்ளது என்பதைப் பற்றி விழிப்புணர்வுடன் இருங்கள். "அரியணை" (அல்லது "அரியணைகள்") என்ற வார்த்தை, அதிகாரம் 4ல் பதினான்கு முறைகள் வருகிறது.[44] மற்ற ஒவ்வொன்றும் அரியணையுடன் உறவுபட்டு இருப்பதாகக் காணப்படுகிறது: இருபத்து நான்கு மூப்பர்களும் "அரியணையைச் சுற்றி" அமர்ந்திருந்தனர் (வசனம் 4); மின்னல்களும் இடிமுழக்கங்களும் "அரியணையில் இருந்து" புறப்பட்டன (வசனம் 5); ஏழு ஆவிகளும் கண்ணாடிக்கடலும் "அரியணைக்கு முன்பாக" இருந்தன (வசனங்கள் 5, 6); நான்கு ஜீவன்களும் "அரியணையின் நடுவில் அதைச் சுற்றிலும்" இருந்தன (வசனம் 6); ஆராதனை யாவும் அரியணையை நோக்கிச் செலுத்தப்பட்டது (வசனங்கள் 9, 10).

J. W. இராபர்ட்ஸ் அவர்கள், "(வெளிப்படுத்தின விசேஷம்) புத்தகத்தின் மையப்போதனையானது கிறிஸ்தவ விசுவாசம் முழுமையின் மையமாகவும் உள்ளது." இது, "பரலோகத்தில் அரியணையில் வீற்றிருக்கும் நித்தியமான தேவன், இந்த அகிலத்தின் மையமான வல்லமையாக இருக்கின்றார்" என்பதே ஆகும் என்று கூறினார்.[45] டொமீஷியன் தமது அரியணையில் - தற்காலிகமாக - வீற்றிருக்கும்படி, தேவனுடைய புரலத்தன்மையினால் அனுமதிக்கப்பட்டிருந்தார், ஆனால் அவர் எந்தக் கணத்திலும் அகற்றிப் போடப்படக் கூடியவராக இருந்தார். தேவனுடைய அரியணையானது எந்த ஒரு அரியணைக்கும் மேலானதாக உள்ளது!

இதை இன்றைய நாட்களில் நாம் புரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது. உலகில் சிலர், ரோமாபுரியை தங்கள் கவனக்குவிப்பிடமாகக் கொண்டு இருக்கலாம், ஆனால் அதற்குச் சமமான வகையில் தகுதியற்றதாக உள்ள விருப்பங்களின்மீது பலர் தங்கள் வாழ்வின் கவனத்தைக் குவித்துள்ளனர்: வளமை, கௌரவம், அதிகாரம், மற்றும் பிரபலமாகுதல். மற்றவர்கள் பிறவற்றைக் கொஞ்சமாகவே காணும்படிக்குத் தங்கள் கண்களில் இந்த வாழ்வின் அநீதிகள் மற்றும் துன்பங்கள் ஆகியவற்றினால் நிறைத்துள்ளனர். வாழ்வைச் சிலர், "ஒரு முட்டாளினால் கூறப்பட்ட கதையாக, சத்தம் மற்றும் உக்கிரம் ஆகியவற்றினால் நிறைந்ததாக, ஏதொன்றையும் தனிப்பட்ட வகையில் குறிப்பிடாததாக" காண்பதில் வியப்பு எதுவும் இல்லை.[46] தேவனுடைய அரியணை வாழ்வின் மையத்தில் இராத வரையிலும் அது (வாழ்வு) கருத்தறிவு எதையும் ஏற்படுத்துவதில்லை.

சங்கீதக்காரர், "கர்த்தர் ராஜரிகம்பண்ணுகிறார், மகத்துவத்தை அணிந்து கொண்டிருக்கிறார், கர்த்தர் பராக்கிரமத்தை அணிந்து, அவர் அதைக் கச்சையாகக் கட்டிக்கொண்டிருக்கிறார்" என்று கூறினார் (சங்கீம் 93:1அ, ஆ). O. W. ஹோம்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> எல்லாமுமாக இருக்கின்ற கர்த்தர், தூரத்தில் அரியணை கொண்டுள்ளார், அவரது மகிமை சூரியன் மற்றும் விண்மீன்களில் இருந்து ஒளிர்கிறது; ஒவ்வொரு வட்டாரத்தின் மையமாக, ஆத்துமாவாக அவர் திகழ்கின்றார், ஆயினும் அன்புகூரும் ஒவ்வொரு இருதயத்திற்கும் எவ்வளவு அண்மையில் உள்ளார்![47]

தேவனுடைய அரியணையை இந்த அகிலத்தின் மையமாகக்

கண்ணோக்குதல் - மற்றும் அவரது அரியணையை உங்கள் வாழ்வின் மையமாக்குதல் - என்பது இந்தப் பாடத்தின் அறைகூவல்களில் ஒன்றாக உள்ளது. நீங்கள் விரும்பினால் உங்கள் கருத்துநோக்கு பாதிக்கப்படுவதை உங்களால் தடுக்க இயலும்.

தேவன் - தேவன் மாத்திரமே - துதிக்குப் பாத்திரர் என்பதை ஒப்புக்கொள்ளுங்கள் (4:8ஆ-11அ)

காட்சியை ஆய்வுசெய்துள்ள நிலையில் நாம், செயல்பாட்டை, குறிப்பிடத்தக்க ஒரு ஆராதனை ஊழியத்துடன் மீண்டும் துவங்குவோம். நான்கு ஜீவன்களைப் பற்றி யோவான் விவரித்தபின்பு அவர், "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகிய சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தர் பரிசுத்தர் பரிசுத்தர் பரிசுத்தர் என்று இரவும் பகலும் ஓய்வில்லாமல் சொல்லிக்கொண்டிருந்தன" என்று கூறினார் (4:8).

அந்த ஜீவன்கள் முதலில், தேவனுடைய தூய்மைக்காக அவரைத் துதித்தன. "பரிசுத்தர்" என்பதற்கான வார்த்தை மூன்றுமுறை திரும்பக் கூறப்பட்ட விஷயமானது, உயர்வு நவிற்சியின் அளவை வெளிப்படுத்தும் எபிரெய வழியாக உள்ளது. தேவன் மிகவும் பரிசுத்தராக இருக்கின்றார்; அவர் பரிசுத்தர்! பின்பு அவைகள் அவரது வல்லமையை ஒப்புக்கொண்டன: அவர் "சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தராக" இருக்கின்றார். இந்தப் பட்டப்பெயரை டொமீஷியன் தனக்குப் பயன்படுத்திக் கொண்டிருந்தான், ஆனால் இது தேவனுக்கு மாத்திரமே உரியதாக இருந்தது. கடைசியாக, தேவனுடைய நிலைத்திருக்கும் தன்மை பற்றி விநோதமான நால்வர் பாடினர்:[48] "இருந்தவரும் இருக்கிறவரும் வருகிறவருமாகியவர்."[49] இந்த உலகம் நிலைதடுமாறுகிறது, ஆனால் தேவன் மாறாதவராக நிலைத்திருக்கின்றார்.

உயிருள்ள அந்த ஜீவன்கள், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருந்து, சதாகாலங்களிலும் உயிரோடிக்கிறவருக்கு அந்த ஜீவன்கள், மகிமையையும் கனத்தையும் ஸ்தோத்திரத்தையும்" செலுத்தியபோது (வசனம் 9), இருபத்து நான்கு மூப்பர்களும், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுதுகொண்(டனர்)" (வசனம் 10). ஆராதனை என்பது ஒட்டி பரவக் கூடியதாக உள்ளது!

மூப்பர்கள், "தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்குமுன்பாக வைத்தனர்" (வசனம் 10ஆ), நன்மையான எந்த ஈவும், அவரிடத்தில் இருந்தே வருகின்றன (யாக்கோபு 1:17) என்பதை அவர்கள் ஒப்புக்கொண்டனர். (பக்கம் 98ஐக் காணவும்.) பின்பு அவர்கள் தங்கள் பல்லவியைத் தொடர்ந்து பாடினர்: "கர்த்தாவே, தேவரீர், மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்றுக்கொள்ளுகிறதற்குப் பாத்திரராயிருக்கிறீர்" (வசனம் 11அ). மூலவசனத்தில், "மகிமை," "கனம்," மற்றும் "வல்லமை," என்ற வார்த்தைகள் ஒவ்வொன்றும் ("the") என்ற திட்டமான சுட்டுச்சொல்லைத் தனக்கு முன்னதாகக் கொண்டுள்ளது - இது தேவன்

மாத்திரமே துதியின் இந்தச் சொல்விளக்கங்களுக்குப் பாத்திரராயிருக்கின்றார் என்று மறைமுகமாய் உணர்த்துகின்றன.

பரலோகத்தில் உள்ள இந்த அற்புதமான ஜீவன்கள் தேவனைத் துதிக்கின்றன, ஆனால் பூமியில் பலர் அவ்வாறு செய்ய மறுக்கின்றனர் என்பது திகைக்க வைப்பதாக இருப்பதில்லையா? டென்னீஸ் விளையாட்டு வீரர்களில் தொடங்கி பற்பசை வரையிலும் ஒவ்வொன்றையும் மனிதகுலம் துதிக்கிறது, ஆனால் தேவனைத் துதிப்பதைப் பரவலாக மறுக்கிறது என்பது இருதயத்தை உடைந்துபோகச் செய்வதாக இருப்பதில்லையா?

நீங்களும் நானும் "ஆவியோடும் உண்மையோடும் அவரைத் தொழுதுகொள்ளவேண்டும்" (யோவான் 4:24ஆ) என்றால், நாம் தேவனைத் துதிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும், ஏனெனில் துதி என்பதே ஆராதனை யின் இருதயம் போன்ற மையப்பகுதியாக உள்ளது. "Worship" என்ற வார்த்தையானது, "பாத்திரர் என்று குறிக்கிற" என்பதாக அர்த்தப்படும் ஒரு பழைய ஆங்கில வார்த்தையில் இருந்து வருகிறது. தேவனுடைய தகுதியை/பாத்திரராய் இருக்கும் தன்மையை உணர்ந்தறிந்து அறிவித்தலே ஆராதனையின் சாராம்சமாக உள்ளது. சங்கீதக்காரர் பின்வரும் ஆணையைக் கொடுத்தார்:

> ஜனங்களின் வம்சங்களே, கர்த்தருக்கு மகிமையையும் வல்லமையையும் செலுத்துங்கள், கர்த்தருக்கே அதைச் செலுத்துங்கள். கர்த்தருக்கு அவருடைய நாமத்திற்குரிய மகிமையைச் செலுத்தி, காணிக்கை களைக் கொண்டுவந்து, அவருடைய பிரகாரங்களில் பிரவேசியுங்கள். பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள், பூலோகத்தாரே, நீங்கள் யாவரும் அவருக்கு முன்பாக நடுங்குங்கள் (சங்கீதம் 96:7-9).

நாம் இவ்வாறு அவரைத் துதிக்கும்போது, குறைந்தபட்சம் நான்கு ஆசீர்வாதங்கள் நம்முடையவைகளாகும்: நாம் தேவனுக்கென்று புதுப்பிக்கப்பட்ட பயபக்தியை, அவரது பிரசன்னம் பற்றிய ஆழமான கருத் துணர்வை, அவர் நமக்குத் தேவை என்ற பெருகிய அறிவை மற்றும் நம்முடன் தொழுதுகொள்ளுபவர்களுடன் ஒரு நெருக்கமான உறவைக் கொண்டிருப்போம்.

நமது சுய சித்தத்தையல்ல - தேவனுடைய சித்தத்தைச் செய்தலே பூமியில் நமது நோக்கமாக உள்ளது என்பதைப் புரிந்துகொள்ளுங்கள் (4:11)

தேவன் பரிசுத்தராக, வல்லமை நிறைந்தவராக, மற்றும் நித்தியமான வராக இருக்கின்றார் என்ற வகையில் நான்கு ஜீவன்களும் அவரைத் துதித்தன. அடுத்ததாக, அவரைச் சிருஷ்டிகர் என்ற வகையில் இருபத்து நான்கு மூப்பர்களும் துதித்தனர்: "கர்த்தாவே, தேவரீர், ... பாத்திரராயிருக் கிறீர், நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர், உம்முடைய சித்தத்தினாலே

அவைகள் உண்டாயிருக்கிறவைகளும் சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக் கிறது" (வசனம் 11).

வேதாகமத்தின் தொடக்கத்தில் நாம், "ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்" என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளோம் (ஆதியாகமம் 1:1). வேதாகமத்தின் மையத்தில் நாம், "அவர் கட்டளையிட அவைகள் சிருஷ்டிக்கப்பட்டது" என்று வாசிக்கின்றோம் (சங்கீதம் 148:5ஆ). வேதாகமத்தின் கடைசிப்பகுதியில், "அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப் பட்டது; ... சகலமும் அவரைக் கொண்டும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது" என்பது மீண்டும் உறுதிப்படுத்தப்படுகிறது (கொலோசெயர் 1:16; நடபடிகள் 17:24; எபிரேயர் 11:3ஐக் காணவும்). "மனிதன் பலவிதமான வல்லமைகளை/அதிகாரங்களைப் பெற்றுக் கொண்டிருக்கின்றான், ஆனால் படைப்பதற்கான அதிகாரத்தை அவன் பெற்றிருப்பதில்லை. அவனால் மாற்றவும் மறுமுறைமைப் படுத்தவும் முடியும்; அவனால் ஏற்கனவே உள்ள பொருட்களில் இருந்து வேறுபொருட்களை உண்டாக்க முடியும்; ஆனால் தேவன் மாத்திரமே ஒன்றுமில்லாமையில் இருந்து சிலவற்றைப் படைக்கக் கூடியவராக இருக்கின்றார்."[50]

வசனம் 11ஐ நான் வாசிக்கையில், எல்லாக் காலங்களிலும் ஆழ்ந்து சிந்திக்கப்படுகிற மூன்று கேள்விகள் எனக்கு நினைவூட்டப்படுகின்றன: "நான் எங்கிருந்து வந்தேன்?"; "நான் ஏன் இங்கிருக்கின்றேன்?"; "நான் எங்கு சென்றுகொண்டிருக்கின்றேன்?" நமது வசனப்பகுதி, இவற்றில் முதல் இருகேள்விகளுக்கு நேரடியாகப் பதில் அளிக்கிறது, மூன்றாவது கேள்விக்கான பதிலை மறைமுகமாய் உணர்த்துகிறது.

"நான் எங்கிருந்து வந்தேன்?" நான் தேவனிடத்தில் இருந்து வந்தேன்: "நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர்" நான் தற்செயலான வாய்ப்பின் மூலமாகவோ அல்லது கற்பனை செய்யப்பட்ட பரிமாணச் செயல்முறையின் மூலமாகவோ உண்டானவனாக இருப்பதில்லை. மாறாக நான், தேவனு டைய விசேஷித்த படைப்பாக இருக்கின்றேன். நான் அவருடைய சாயலில் படைக்கப்பட்டுள்ளேன் - நீங்களும் அவ்வாறே படைக்கப் பட்டிருக்கின்றீர்கள். அவர், "எல்லாருக்கும் ஜீவனையும் சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற"வராக இருக்கின்றார் (நடபடிகள் 17:25இ).

"நான் ஏன் இங்கிருக்கின்றேன்?" நான் தேவனுடைய சித்தத்தின் விளைவாக இங்கிருக்கின்றபடியால் ("உம்முடைய சித்தத்தினாலேயே அவைகள் இருக்கின்றன"), அவருடைய சித்தத்தை நிறைவேற்றுதல் என்பதே வாழ்வில் எனது நோக்கமாக உள்ளது. வசதியான வாழ்வை நாடுவதற்காக, எனது நாட்களை மகிழ்ச்சியால் நிறைத்துக் கொள்வதற்காக அல்லது உலகம் வெற்றி என்பதை விளக்கப்படுத்துகின்ற வகையில் வெற்றி நிறைந்தவனாய் இருப்பதற்காகக்கூட நான் இந்த பூமியில் வைக்கப்பட்டிருப்பதில்லை. KJV வேதாகமத்தின் சொற்றொடரைப் பயன்படுத்துவதென்றால், அவருடைய "சந்தோஷத்திற்காகவே" (வசனம் 11) நீங்களும் நானும் இங்கிருக்கின்றோம்.

"நான் எங்கு சென்றுகொண்டிருக்கின்றேன்?" என்னைப் படைத்த தேவனை ஒருநாளிலே நான் எதிர்கொள்வேன், அப்போது நான், பூமியின்

மீது எனது நோக்கங்களை எவ்வாறு நிறைவேற்றினேன் என்பதைப் பற்றி அவருக்குக் கணக்கு ஒப்புவிப்பேன் (20:11-15ஐக் காணவும்). "ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக்குறித்துத் தேவனுக்குக் கணக்கொப்பு விப்பான்" (ரோமர் 14:12); "மேலும், உக்கிராணக்காரன் உண்மையுள்ளவ னென்று காணப்படுவது அவசியமாம்" (1 கொரிந்தியர் 4:2). இதைவிட அதிகம் பயபக்தியுள்ள சத்தியத்தை நீங்களும் நானும் ஒருக்காலும் அறிந்துணரப் போவதில்லை.

முடிவுரை

பர்ட்டன் காஃப்மன் என்பவர், "கட்டுப்படுத்தும் மையம் ஒன்றுள்ளது என்பதே இந்த அகிலத்தைப் பற்றி எவரொருவரும் அறியக்கூடிய மிகவும் முக்கியமான விஷயமாக உள்ளது" என்று கூறினார்.[51] பூமியின்மீது எவ்வளவுதான் குழப்பங்கள் நிலவினாலும், பரலோகத்தில் ஒழுங்குமுறை உள்ளது. நம்மைச் சுற்றிலும் விஷயங்கள் எவ்வளவுதான் மாறினாலும், தேவன் மாறாதவராக நிலைத்திருக்கின்றார். நாம் எவ்வளவுதான் தனிமையாக உணர்ந்தாலும், தேவன் நம்மைக் கைவிட்டுவிடுவதில்லை. தேவன் தமது அரியணையைத் துறந்துவிடவில்லை என்பதே வெளிப்படுத்தின விசேஷம் 4ம் அதிகாரத்தின் செய்தியாக உள்ளது.

தேவனுடைய அரியணை அறைக்குள் நாம் கண்ணோக்குகையில், வாழ்வின் கலக்கமூட்டும் எல்லாப் பிரச்சனைகளுக்கும் எல்லா விடைகளும் நமக்குத் தரப்படுகின்றனவா? இல்லை, ஆனால் மிகமுக்கியமான பதில் நமக்குத் தரப்படுகிறது: என்ன நடக்கிறது, ஏன் அது நடக்கிறது என்பதை நாம் புரிந்துகொண்டாலும், இல்லாவிட்டாலும், தேவன் இன்னமும் கட்டளையிடுகின்றார் என்றும் அவர் எல்லாவற்றையும் சரியாக்குவார் என்றும் நமக்கு உறுதிப்படுத்தப்பட முடியும்! அதுவே நமக்கு அவரது உத்தரவாதமாக உள்ளது.

அதிகாரம் 5, வாழ்வுபற்றிய ஆட்டுக்குட்டியானவர் மற்றும் தேவன் ஆகியோரின் மகத்துவமான மற்றும் முழுமையான நோக்கத்தை அறிமுகப்படுத்துகையில், அது நமது புரிந்துகொள்ளுதலை மேம்படுத்தும். நாம் நமது படிப்பைத் தொடருகையில், துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர் களின் வாழ்வில் தேவன் எவ்வாறு கிரியை செய்தார் என்பது பற்றிய உட்கண்ணோக்கு நமக்குக் கொடுக்கப்படும்.

இருப்பினும் இந்த வேளையில், நாம் இப்பாடத்தில் இருந்து கற்றுக் கொண்டுள்ளவற்றினால் பலப்படுவோமாக. ரெஜினால்டு ஹெபர் அவர்கள், இந்தத் தரிசனத்தின் சாராம்சத்தை, "தூய, தூய, தூயா" என்ற பாடலில் படம்பிடித்துள்ளார்:

தூய, தூய, தூயா! சர்வவல்ல நாதா!
தேவரீர்க்கெந்நாளும் சங்கீதம் ஏறுமே;
தூய, தூய, தூயா! மூவரான ஏகா!
காருண்யரே, தூய திரியேகரே!
தூய, தூய, தூயா! அன்பர் சூழ நின்று

தெய்வ ஆசனமுன்னர் தம் கிரீடம் வைப்பரே,
கேருபின், சேராபின் தாழ்ந்து போற்றப்பெற்று
என்றென்றும் வீற்றாள்வீர், அநாதியே.[52]

தேவனுடைய மகிமையைக் காணக்கூடிய வழியைக் காட்டிலும் வேறெதுவும் மனிதனுடைய கருத்து நோக்கை மாற்ற இயலாது. ஸ்தேவான் கல்லெறியப்பட்டுக் கொண்டிருக்கையில், அவர் "வானத்தை அண்ணாந்து பார்த்து, தேவனுடைய மகிமையை"க் கண்டார் (நடபடிகள் 7:55ஆ). அந்தத் தரிசனம், அவர் தமது உதடுகளில் ஒரு ஜெபத்துடன் மரிப்பதற்கு அவருக்குப் பலம் அளித்தது (நடபடிகள் 7:60). நீங்களும் நானும் நம்பிக்கையிழந்து போய் நமது பலமானது விளிம்பில் நிற்கக் காணும்போது, நாம் திறந்த வாசல் வழியாகத் திரும்பக் கண்ணோக்கி, "ஆண்டவர் உயரமும் உன்னதமுமான சிங்காசனத்தின்மேல் வீற்றிரு"ப்பதைக் காண்போமாக (ஏசாயா 6:1ஆ). அது நாம் விஷயங்களைப் பார்க்கின்ற வகையை மாற்றும்![53]

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

"நமது வாழ்வைக் கவனம் குவித்ததாகக் காத்துக்கொள்ளுதல்" என்பது இந்தப்பாடத்திற்கான ஒரு மாற்றுத்தலைப்பாக இருக்க முடியும்.

பிரையன் வாட்ஸ் அவர்கள் வரைந்த ஒரு படம் இந்தப் பாடத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது. நீங்கள் பிரசங்கிக்கும்போது அல்லது போதிக்கும்போது இந்தத் தரிசனத்தை வரைவதை விரும்பித் தேர்ந்து கொண்டால், அந்த நோக்கத்திற்கு, பிரையனின் சித்திரம் மிகவிரிவான தென்று நீங்கள் காணலாம். கீழே தரப்பட்டுள்ள அடிப்படை விபரங்கள் கொண்ட எளிய அணுகுமுறையை நீங்கள் விரும்பித் தேர்ந்து கொள்ளலாம்.



1 - பச்சை
2 - சிவப்பு
3 - தெளிவானது

யோவான், இந்த உலகத்தில் இருந்து பரலோகத்திற்குத் தமது கண்களை

ஏறெடுத்தல்பற்றி நான் நினைக்கையில், ஒரு விவரிப்பு எனது சிந்தைக்கு வருகிறது: சேதமடைந்த பெட்டியொன்று அஞ்சலில் வருவதாகக் கற்பனை செய்துகொள்ளுங்கள். அதன் மேல்காகிதம் கிழிந்து அழுக்காகி இருக்கிறது. அந்த பெட்டியானது மதிப்புள்ள ஏதொன்றையும் கொண்டிராததாகக் காணப்படுகிறது மற்றும் அது தூக்கியெறியப்பட வேண்டியதாகக் காணப்படுகிறது - ஆனால் அது திறக்கப்படுகையில், ஒரு புதையல் வெளிப்படுத்தப்படுகிறது! அதுபோலவே, நமது கண்கள் இந்த உலகத்தின்மீது இருக்கையில், வாழ்வின் சேதமடைந்த மூடல்களை மாத்திரமே நாம் காண்கின்றோம். நமது கண்கள் பரலோகத்தை நோக்கி ஏறெடுக்கப்படும்போது, வாழ்வு என்றால் முழுவதும் எதைப் பற்றியது என்பதை நாம் காண்கின்றோம், மற்றும் பரலோக பொக்கிஷங்கள் நம்முடையவைகளாக முடியும். நீங்கள் ஒரு பெட்டியைக் காண்பித்து இந்த விவரிப்பை ஒரு பொருளறி பாடமாகப் பயன்படுத்தலாம்.

அரியணையின் மீது கவனம் குவித்தல் என்பது அதிகாரம் 4க்கான இன்னொரு அணுகுமுறையாக உள்ளது. இந்தப் பாடம் "தேவனுடைய அரியணை அறை" என்று அழைக்கப்படலாம், மற்றும் இதன் முக்கிய கருத்துக்களில் "அரியணை" என்ற வார்த்தை பயன்படுத்தப்படலாம்: (1) அரியணையின் மீது: மகத்துவம் (வசனங்கள் 1-3); (2) அரியணையைச் சுற்றிலும்: கிருபையின்தன்மை[54] (வசனங்கள் 4, 10); (3) அரியணையிலிருந்து: அரசாங்கம் (வசனம் 5அ); (4) அரியணைக்கு முன்பாக: வழிநடத்துதல்/ஆற்றுப்படுத்துதல்[55] (வசனங்கள் 5ஆ, 6அ); (5) அரியணையின் மத்தியில்: மாட்சிமை/மாபெரும் தன்மை (வசனங்கள் 6ஆ-8அ); (6) அரியணைக்கு: நன்றிநிறைந்த தன்மை (வசனம் 8ஆ-11). மெரில் C. டென்னீ அவர்கள், இந்த அதிகாரத்தை "என்றென்றைக்கும் உள்ள அரியணை" என்று அழைத்து, பின்வரும் முக்கிய கருத்துக்களைப் பட்டியலிட்டார்: (1) அரியணையில் வீற்றிருப்பவர், (2) அரியணை இருக்கும் இடம், (3) அரியணையை நோக்கி ஆராதனை.[56]

இந்த அதிகாரத்திற்கான உங்கள் அணுகுமுறை எதுவாயிருப்பினும், இந்த அல்லது இதைப்போன்ற பாடங்களை நீங்கள் கர்த்தரைத் துதிப்பதற்கான வாய்ப்பாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். வெளிப் படுத்தின விசேஷம் புத்தகம் மாபெரும் பாடல்களால் நிறைந்துள்ளது, இவற்றில் பல பாடல்கள் நமது பாடல் புத்தகங்களில் பிரதிபலிக்கப் படுகின்றன. நீங்கள் படித்துக்கொண்டிருக்கும் வசனப்பகுதி தொடர்பான பாடலை அவ்வப்போது பாடுதல் என்பது ஏற்புடையதாகவே உள்ளது.

அதிகாரங்கள் 4 மற்றும் 5 ஆகியவை இரு கருத்துக்களுடன் ஒரே பாடத்தில் படிக்கப்படலாம்: அதிகாரம் 4, தேவன் சிருஷ்டிகர் என்று கூறுகையில், அதிகாரம் 5, தேவன் மீட்பர் என்று கூறுகிறது. அதிகாரம் 4, பழைய சிருஷ்டியை மையப்படுத்துகையில், அதிகாரம் 5 புதிய சிருஷ்டியை மையப்படுத்துகிறது. அதிகாரம் 4, கர்த்தரால் உண்டாக்கப்பட்ட உலகப்பிரகாரமான வாழ்வைச் சிறப்பிக்கிறது, ஆனால் அதிகாரம் 5, ஆவிக்குரிய வாழ்வைச் சிறப்பிக்கிறது. இந்த இரண்டு அதிகாரங்களின் வலியுறுத்தங்களைக் குறிப்பிடுவதற்கான சில வழிமுறைகள் இங்குள்ளன:

(1) தேவனுடைய மகத்துவமும் (2) மீட்பின் இரகசியமும்; (1) கர்த்தரின் ஆளுகையும் (2) மீட்கும் ஆட்டுக்குட்டியானவரும். ஜிம் மெக்குகன் அவர்கள், இந்த இரண்டு அதிகாரங்களுக்கும், யோவான் 14:1ல் இயேசுவின் வார்த்தைகள் ஒருவகையான வரைக்குறிப்பாக இருப்பதாகக் கருத்துத் தெரிவித்துள்ளார்: "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக (இரு அதிகாரங்களுக்குமான ஆய்வுக்கருத்து); தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள் (அதிகாரம் 4), என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள் (அதிகாரம் 5)."[57] ஜிம் பில் மெக்கின்ட்டீர் அவர்கள், மகிமைப்படுத்தப்பட்ட இயேசு என்ற கருத்தின்மீதான பாடம் ஒன்றிற்கு அதிகாரங்கள் 4, 5 ஆகியவற்றை அடிப்படையாகப் பயன்படுத்தினார்.[58]

குறிப்புகள்

[1]இந்தச் சூத்திரம்/வாய்ப்பாடு புதிய தரிசனங்களை அறிமுகப்படுத்துவதற்கு வெளி. புத்தகத்தில் அடிக்கடி பயன்படுத்தப் பட்டுள்ளது (7:1, 9; 15:5; 18:1; 19:1 ஆகிய வசனங்களைக் காணவும்). [2]ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களில் பலர், அதிகாரங்கள் 4 மற்றும் 5ல், ஆகாயத்தில் ஏழு ஆண்டுகள் பரவச நிலை இருக்கும்போது பூமியில் ஏழு ஆண்டுகள் உபத்திரவம் இருக்கும் என்பதைக் கூறுகின்றன என்று நம்புகின்றனர். இதன் தொடர்பாக, ஏழு சபைகள் என்பது சபையின் ஏழு காலகட்டங்களைக் குறிக்கின்றன, இவற்றில் லவோதிக்கேயா சபையானது சபையின் கடைசிக்காலத்தைக் குறிக்கிறது என்று ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கையாளர்களில் சிலர் போதிக்கின்றனர். அவர்கள், "இவைகளுக்குப் பின்பு" என்பது "சபையின் ஏழு காலகட்டங்களும் முடிவடைந்த பின்பு" என்று அர்த்தப்படுத்துவதாகப் போதிக்கின்றனர். ஏழு சபைகளும் சபையின் ஏழு காலகட்டங்களைக் குறிப்பதில்லை என்று நாம் முன்னரே கண்டோம். இப்போது நான், "இவைகளுக்குப் பின்பு" என்பது கற்பனையான "ஏழாவது காலத்தை" அர்த்தப்படுத்துவதில்லை என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். [3]இது அனேகமாக, இயேசுவின் குரலாக இருந்திருக்கலாம். இந்தக் குரல் பற்றிய குறிப்புகளை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் காணவும். [4]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 85. *[5]1:10உடன் தொடர்புடைய வகையில், "ஆவிக்குள்" என்பதன் சாத்தியக்கூறுள்ள அர்த்தங்கள் பற்றிய கலந்துரையாடலை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "மனுஷகுமாரனுக்கு ஒப்பானவர்" என்ற பாடத்தில் காணவும். வெளிப்படுத்துதல் நடைபெற்றபோது யோவான் ஆவிக்கு "உள்ளும் புறம்புமாக" இருந்தார் என்று நாம் முடிவு செய்யக்கூடாது. மாறாக, இது வெளிப்படுத்துதல் நடைபெற்ற காலம் முழுவதிலும், யோவான் ஆவியானவரால் வழிநடத்தப்பட்டார் (அல்லது அவரது ஆவி கர்த்தரின் ஆவியினுடைய கட்டுப்பாட்டின் கீழ் இருந்தது) என்பதை வலியுறுத்துவதற்கு, அவ்வப்போது பயன்படுத்தப்பட்ட நாடக இயல்பான கருவியாக இருந்தது (17:3; 21:10ஐக் காணவும்). [6]அவர் உடலுடன் மேலே சென்றாரா அல்லது "ஆவிக்குள்ளாக" மாத்திரம் மேலே சென்றாரா? அனேகமாக, அவரது ஆவி மட்டும் மேலே சென்றிருக்கும், ஆனால் இதை நாம் நிச்சயமாக அறிய இயலாது.* [7]"Throne" [*"அரியணை"*] *என்பது* *thronos* *என்ற கிரேக்க வார்த்தையின் ஒலியாக்கமாக உள்ளது.*

மையமான அரியணை ஒன்றே ஒன்றுதான் உள்ளது. இது சிலவேளைகளில் தேவனுடைய அரியணை (மத்தேயு 5:34) என்றும், சிலவேளைகளில் இயேசுவின் அரியணை (மத்தேயு 25:31) என்றும் அழைக்கப்பட்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 22:1 மற்றும் 3ம் வசனங்களில், இது "தேவனுடைய மற்றும் ஆட்டுக்குட்டியானவருடைய அரியணை" என்று குறிப்பிடப்படுகிறது. [8]எசேக்கியேல் 1:28ஐக் காணவும். "வானவில்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "வில்" அல்லது "வட்டம்" என்று அர்த்தப்படக் கூடும். சில தனிநபர் மொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தையை "halo" [ஒளிவட்டம்] என்றும் மொழிபெயர்த்துள்ளன. இருப்பினும் பெரும்பாலான மொழிபெயர்ப்புகள் இவ்வார்த்தையை "வானவில்" என்றே மொழிபெயர்த்துள்ளன. வெளிப்படுத்தின விசேஷம் 10:1ம் வசனத்தில் வானவில்லின் அடையாளமும் பயன்படுத்தப்பட்டுள்ளது. [9]"மூப்பர்கள்" என்ற வார்த்தை, "முதிர்வயதுள்ளவர்கள்" என்று அர்த்தப்படும் ஒரு கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இந்த சந்தர்ப்பப் பொருளில் இது சபையில் உள்ள (மூப்பர்களின்) பணிப்பொறுப்பைக் குறிப்பிடுவதில்லை, ஆனால் முதிர்வயதான (மற்றும் மறைமுகக் கருத்தில், பக்குவம் வாய்ந்த) மனிதர்களை மாத்திரமே குறிப்பிடுகிறது. முதிர்வயதான இந்த முற்பிதாக்கள் தேவனுக்கு முன்பாக விழுந்து பணிந்தனர் என்பது காட்சியின் செயல்வலிவைக் கூட்டுகிறது. [10]"கிரீடங்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது *stephanos* என்பதன் பன்மை வடிவமாக உள்ளது, இது 2:10ல் பயன்படுத்தப்பட்ட வார்த்தையாக உள்ளது. "வெளிப்படுத்தின விசேஷம் 1" என்ற புத்தகத்தில் இந்த வார்த்தையின்மீதான குறிப்புகளைக் காணவும்.

[11]"சத்தங்கள்" என்ற வார்த்தை, "குரல்" என்பதற்கான வார்த்தையான *phone* என்பதின் பன்மை வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இவ்விதமாக KJV வேதாகமத்தில், "voices" என்றுள்ளது. இருப்பினும் இவ்வார்த்தையானது "கூச்சல்கள்" அல்லது "ஒலிகள்" என்பதின் பொதுவான அர்த்தமாகவும் இருக்கலாம். NIV மற்றும் NRSV வேதாகமங்களில் "rumblings" என்றுள்ளது. சீனாய் மலையில் நடந்தவற்றின் இணைவு ஒன்றைத் தருதல் இங்கு நோக்கங்கொள்ளப்பட்டால், சத்தங்கள் என்பவை எக்காள சத்தம் போல் ஒலித்திருக்கக் கூடும் (யாத்திராகமம் 19:16ஐக் காணவும்). [12]"Lamps" ["தீபங்கள்"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, யோவான் 18:3ல் "torches" ["தீவட்டிகள்"] என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இதன் ஒருமை வடிவமானது NASB வேதாகமத்தில் வெளிப்படுத்தின விசேஷம் 8:10ல் "torch" ["தீவட்டி"] என்று மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. பல நவீன மொழிபெயர்ப்புகள் வெளிப்படுத்தின விசேஷம் 4:5ல் "lamps" என்பதற்குப் பதில் "torch" என்று குறிப்பிட்டுள்ளன. [13]மூல வசனத்தில் "அரியணையின் மத்தியில்" என்றுள்ளது. இந்தச் சொல்லாக்கம் மற்ற இடங்களில் இயேசுவைப் பற்றிப் பயன்படுத்தப்பட்டுள்ளது (5:6; 7:17). இது, அரியணையுடன் உள்ள தனிச்சிறந்த உறவைச் சுட்டிக்காண்பிக்கிறது. [14]KJV வேதாகமத்தில் "seats" என்றுள்ளது, ஆனால் கிரேக்க மொழியில், "throne" என்பதன் பன்மை வடிவமான *thronous* என்றுள்ளது. [15]வசனம் 1 மற்றும் 2 ஆகியவற்றின் மத்தியில் உள்ள "இதோ" என்ற வார்த்தையானது, உணர்வெழுச்சியைச் சுட்டிக்காண்பிக்கிறது. சில மொழிபெயர்ப்புகள், இந்த உணர்வெழுச்சியை, இவ்வசனங்களுக்குப் பின்பு ஆச்சரியக்குறியைச் சேர்த்துக் கொடுப்பதன்மூலம் சுட்டிக்காண்பிக்கின்றன. [16]அடுத்த அதிகாரத்தில், தேவன் ஒரு "கரத்தை"க் கொண்டுள்ளதாகக் கூறப்படுகின்றார் (5:1). தேவன் புத்தகத்தைக் கொண்டிருந்தார், அவரிடமிருந்து அதை ஆட்டுக்குட்டியானவர் பெற்றுக்கொண்டார் என்பதை வலியுறுத்துவதற்கு

இந்த அடையாளத்துவம் அவசியமாக இருந்தது. [17]பழங்கால எழுத்தாளர்கள், ஆபரணக்கற்களைப் பற்றிய தங்கள் பயன்பாட்டில் சீர்பொருத்தமற்ற தன்மையுடன் இருந்தனர், எனவே இவற்றிற்குச் சமமாக உள்ள நவீனகாலத்தியப் பொருட்கள் பற்றி போதனையியல் முறையில் நாம் மிகச்சரியானவர்களாய் இருக்க இயலாது. [18]எனது உரையைக் கேட்பவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு வச்சிரக்கல் என்பது பழக்கமற்றதாக இருப்பதால், அதை நான் வைரத்துடன் ஒப்பிடுகின்றேன் (LB வேதாகமத்தில் காணவும்), ஏனெனில் பெரும்பாலான வைரங்கள் தெளிவாக உள்ளன. வைரமும் வச்சிரக்கல்லும் மதிப்பில் ஒப்பிடப்படக் கூடியவையாக இல்லாதிருப்பினும், இவ்விரண்டு கற்களின் காட்சிச் செயல்தாக்கம் ஒரேமாதிரியானதாக இருக்கும். உங்கள் உரையைக் கேட்பவர்களுக்குப் பழக்கமாகியுள்ள தெளிவான ஆபரணக்கல் எதையும் இவ்விடத்தில் பதிலியாகக் குறிப்பிடலாம். [19]RSV, NIV மற்றும் NCV வேதாகமங்களில் காணவும். Carnelian என்பது chalcedonyயின் ஒரு வகையாகவும், யோவானின் நாட்களில், செதுக்கப்பட்டு ஆபரணங்களில் பதிக்கப்பட்ட முதன்மையான கல்லாகவும் இருந்தது. (Chalcedony பற்றி வெளிப்படுத்தின விசேஷம் 21:19ல் காணவும்.) [20]LB வேதாகமத்தில் காணவும். பின்பு, வேதாகமத்தின் யாத்திராகமம் 28:17ஐ NASBயின் அதே வசனத்துடன் ஒப்பிடவும்.

[21]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 48. [22]நிறங்களின் மனோதத்துவ ரீதியிலான செயல்விளைவுகளைப் பற்றிப் படித்துள்ளவர்கள், பச்சை என்பது இளைப்பாறுதல் மிகுந்த நிறம் என்று கூறுகின்றனர். மருத்துவமனை அல்லது அதைப் போன்ற நிறுவனங்கள் சிலவேளைகளில் இளம்பச்சை நிறத்தில் வண்ணம் தீட்டப்படுகின்றன. [23]நோவா, ஜலப்பிரளயம் மற்றும் வானவில் பற்றிய வரலாற்றை நீங்கள் மறுபடியும் கூற விரும்பலாம். இந்தப்பாடத்தை நீங்கள் ஒரு வகுப்பறையில் பயன்படுத்தினால், அந்த வரலாற்றை மறுகண்ணோட்டம் இடும்படி நீங்கள் மாணவர் ஒருவரைக் கேட்கலாம். இந்த அடையாளம் வெளி. புத்தகத்தில் பயன்படுத்தப்படுகையில் இதன் "திரிபு" பற்றி அறிந்திருங்கள்: இது பலவண்ணமாக இருப்பதற்குப் பதிலாக, மரகத நிறமாக இருந்தது. [24]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்" என்ற பாடத்தில் உள்ள, 1:4ன் மீதான குறிப்புகளைக் காணவும். "அரியணைக்கு முன்பாக" என்ற சொற்றொடர், தமது தெய்வீக முடிவுகளைச் செயல்படுத்துவதற்கான அவரது தயார்நிலையைச் சுட்டிக்காண்பிக்கிறது. [25]இந்த விளக்கத்திற்கு நான் மூன்று காரணங்களைக் கொண்டுள்ளேன்: (1) "ஏழு ஆவிகள்" என்பவை உண்மையில் ஒரே (பரிசுத்த) ஆவியாக இருக்கின்றன, மற்றும் ஆசரிப்புக்கூடாரத்தில் இருந்த விளக்குத் தண்டு - அது ஏழு விளக்குகளைக் கொண்டிருந்தாலும் - பணிமுட்டுகளில் ஒரே பொருளாகத்தான் இருந்தது. (2) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் உள்ள பரலோகத்துவ அடையாளங்களில் பெரும்பான்மையானவை ஆசரிப்புக் கூடாரத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன, பொன் குத்துவிளக்கிற்கான குறிப்பு அதனுடன் சீர்பொருந்தியுள்ளது. (3) இது ஏழு தீபங்களை (ஆவியை), அதிகாரம் 1ல் உள்ள ஏழு தனித்தனி மற்றும் சுயாதீனமான விளக்குத் தண்டுகளில் (ஏழு சபைகளில்) இருந்து வித்தியாசப்படுத்துகிறது. பொன் குத்துவிளக்கின் இடம், "வெளிப்படுத்தின விசேஷம், 1" புத்தகத்திலுள்ள ஆசரிப்புக் கூடாரத்தின் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளது. [26]வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும், வெளிப்படுத்துதல் ஆவியானவரால் கொடுக்கப்பட்டது என்ற கருத்து வலியுறுத்தப்பட்டுள்ளது. (எடுத்துக்காட்டாக, 1:10; 2:7; 4:2; 14:13 ஆகிய வசனங்களைக் காணவும்.) [27]5:10ல், பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில்,

மூப்பர்கள் "... have made *us* to be a kingdom and priests; and *we* shall reign on the earth" *என்று கூறுவதாக உள்ளது (KJV வேதாகமத்தைக் காணவும்). இது மூப்பர்கள் கிறிஸ்தவர்களைக் குறித்தனர் என்ற விளக்கத்துடன் இணைவு பெற்றதாக இருக்கும். மூப்பர்கள், 7:13, 14 மற்றும் 14:3ல் கூறப்படும் மீட்கப்பட்டவர்களில் இருந்து வித்தியாசப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது என்பது இந்த உறுதிப்பாட்டிற்கு ஒரு அடிப்படையான மறுப்பாக உள்ளது. இந்தப் புத்தகத்தில் உள்ள "புயலுக்கு மேலாக உயருதல்" என்ற இனிவரும் பாடத்தில் 7:13, 14க்கான குறிப்புகளைக் காணவும். சீர்பொருத்தமான தன்மை என்பது யோவானின் குறிக்கோளாய் இருந்ததில்லை என்பதை மனதில் வைத்துக் கொள்ளுங்கள்.* [28]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள எண்களின் அடையாளத்துவம் பற்றிய கலந்துரையாடலைக் காணவும். "பன்னிரண்டு" என்பது மதரீதியான முழுமைத் தன்மையைக் குறிப்பதற்கு அடிக்கடி பயன்படுத்தப்பட்டது.* [29]*"இருபத்து நான்கு" என்ற எண் தொடர்பாக மற்ற ஆலோசனைகளும் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, மூப்பர்கள் என்பவர்கள், ஒவ்வொரு காலத்திலும்/யுகத்திலும் மீட்கப்பட்டிருப்பவர்களைக் குறிக்கின்றனர் என்று பலர் நம்புகின்றனர். அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் பன்னிரண்டு கோத்திரங்களையும் (21:12) பன்னிரண்டு அப்போஸ்தலர்களையும் (21:14) குறிப்பிடுவதைச் சுட்டிக்காண்பிக்கின்றனர். பன்னிரண்டு கோத்திரங்களும் (பழைய ஏற்பாட்டில் தேவனுடைய மக்களின் பிரதிநிதிகள்), பன்னிரண்டு அப்போஸ்தலர்களும் (புதிய ஏற்பாட்டின் காலத்தில் தேவனுடைய மக்களின் பிரதிநிதிகள்) என்பது இருபத்து நான்கிற்குச் சமமாகிறது. 15:3ல், மீட்கப்பட்டவர்கள், "மோசேயின் பாடலையும் மற்றும் ஆட்டுக்குட்டியானவரின் பாடலையும்" பாடியதையும் அவர்கள் உற்றுக்கவனித்து இருக்கின்றனர். மற்றவர்கள், லேவியின் ஆசாரியத்துவக் கோத்திரமானது பணிப்பொறுப்புக் களின்படி இருபத்து நான்கு பிரிவுகளைக் கொண்டிருந்தது என்பது பொருத்தமானது என்று காண்கின்றனர் (1 நாளாகமம் 24:18; 28:21; 2 நாளாகமம் 8:14; 31:2, 17; 35:10; லூக்கா 1:5, 8, 9). வெளிப்படுத்தின விசேஷம் 4ல் இருபத்து நான்கு மூப்பர்களும் தேவனைத் தொழுது கொண்டபடியால், ஒருவேளை இந்த எண் அவர்கள் ஆசாரியர்களாய் இருந்தனர் என்று வலியுறுத்துவதாக இருக்கலாம். இந்த விளக்கத்தின்படி, மூப்பர்களின் ஆசாரியத்துவமானது இருபத்து நான்கு என்ற எண்ணைக்கொண்டு மறைமுகமாய் உணர்த்தப்பட்டாலும், பரலோகத்தில் நமக்காகப் பரிந்துபேசுகின்றவர்கள் என்ற வகையில் அதிபரிசுத்தர்களின் குழு ஒன்றுள்ளது என்று இது அர்த்தப்படுவதில்லை என்பது வலியுறுத்தப்பட வேண்டும். எல்லாக் கிறிஸ்தவர்களும் ஆசாரியர்களாய் இருக்கின்றோம் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது (1 பேதுரு 2:5) மற்றும் நாம் பரலோகத்தின் மத்தியஸ்தராக ஒரே ஒருவரை மாத்திரமே கொண்டுள்ளோம் (1 தீமோத்தேயு 2:5, 6).* [30]*அரியணைக்கு முன்பாக அவர்கள் தங்கள் கிரீடங்களை வீசினர் (அல்லது வைத்தனர்) என்பது அவர்கள் தங்கள் கிரீடங்களுக்கு (ஆவிக்குரிய வெற்றிக்கு) குறைவான மதிப்பளித்தனர் என்று சுட்டிக்காண்பிப்பதில்லை, ஆனால், தேவனே அந்த வெற்றியைச் சாத்தியமாக்கினார் என்று ஒப்புக்கொள்ளுதலைச் சுட்டிக்காண்பிக்கிறது. அந்த நாட்களில், ஒரு அரசர் பிடிக்கப்படும்போது, அவரைப் பிடித்தவருக்கு முன்பாக அவர் தமது கிரீடத்தைக் கழற்றி வைக்க செய்தனர். தோற்கடிக்கப்பட்ட அரசர்களைக் கட்டாயத்தின்பேரில் செய்ய வைத்த செயல்களை, ஜெயங்கொண்ட மூப்பர்கள் மனமுவந்து செய்தனர்.*

[31]KJV *வேதாகமத்தில்* "beasts" ["*மிருகங்கள்*"] *என்ற துரதிர்ஷ்டவசமான தரவழைப்பு உள்ளது, இது மிருகத்தனமான அசுரவிலங்குகள் என்று கருத்துத் தெரிவிக்கிறது. கிரேக்க வசனமானது (பிற்பாடு 13:1, 11ல் இயேசுவின்*

விரோதிகளைப் பற்றிக் கூறுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ள) "மிருகம்" என்ற வார்த்தையை இங்கு பயன்படுத்துவதில்லை, ஆனால் அதற்கு மாறாக "living [things or ones]" என்ற வார்த்தைகளைக் கொண்டுள்ளது. [32]இது பழைய ஏற்பாட்டுக் குறிப்புகளின் "திரிபாக" உள்ளது. [33]வெளிப்படுத்தின விசேஷம் 4ல் ஒரே ஒரு ஜீவனின் "முகம்" மட்டுமே குறிப்பிடப்பட்டது (மனித முகம்), ஆனால் மற்ற மூன்று ஜீவன்களும் கூட இதைப் போன்றிருந்த முகத்தைக் கொண்டிருந்தன என்பது மறைமுகமாய் உணர்த்தப்பட்டது. அவைகளின் முகங்கள் தவிர, அந்த நான்கு ஜீவன்களின் வடிவம் பற்றி நாம் உறுதியாய் அறியமுடிவதில்லை. எசேக்கியேலின் ஜீவன்கள், முகத்தைத் தவிர எல்லாம் ஒன்றுபோல காணப்பட்டன (எசேக்கியேல் 10:10). யோவான் கண்ட ஜீவன்களுக்கு இது உண்மையாயிருக்கலாம் அல்லது இல்லாதிருக்கலாம். [34]RSV மற்றும் NIV வேதாகமங்களில் "ox" என்றுள்ளது. [35]ஆறு செட்டைகளின் நோக்கத்தை ஏசாயா 6:2 கூறுகிறது. ஆறு செட்டைகளும் இரண்டிரண்டாக உள்ள மூன்று ஜோடிகளாய் இருந்தன என்பதைக் கவனியுங்கள். ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் "ஆறு" என்ற எண் பற்றிய கலந்துரையாடலைக் காணவும்.) [36]"ஒப்புவமைப்படுத்துதல்" என்று அழைக்கப்படுகிற விளக்கம் தரும் முறையானது, இந்த நான்கு ஜீவன்களும் நான்கு சுவிசேஷ எழுத்தாளர்களைக் குறித்தன. வண்ணக்கண்ணாடி ஜன்னல்களில் மத்தேயு ஒரு சிங்கமாகவும், மாற்கு ஒரு கன்றுக்குட்டி அல்லது காளையாகவும், லூக்கா ஒரு மனிதனாகவும் யோவான் ஒரு கழுகாகவும் பிரதிநிதித்துவப் படுத்தப்படுகின்றனர். மூல வசனத்தில் உள்ள எதுவும் இந்த விளக்கத்தைக் கருத்தாக ஏற்படுத்துவதில்லை. ஒப்புவமைப்படுத்துதல் என்பது மொழிபெயர்ப்பாளர் என்ன நினைக்கிறார் என்பதை வெளிப்படுத்துகிறதே ஒழிய, வேதாகமம் என்ன கூறுகிறது என்பதை அல்ல. [37]"சேராபீன்" என்பது "ஒளிவீசுகின்றவர்கள்" என்று (அல்லது "பற்றியெரிகின்றவர்கள்" என்று) அர்த்தப்படுகிற எபிரெய வார்த்தையாகும். "சேராபீன்," "கேருபீன்" ஆகியவற்றில் "இன்" என்று முடிதல் எபிரெய மொழியில் பன்மை முடிதலாக உள்ளது. [38]கேரூபீன்கள் என்பவை அவ்வப்போது வேதாகமத்தின் வேறிடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளன (ஆதியாகமம் 3:24; யாத்திராகமம் 25:18-20, 22). [39]"பிரதான தூதன்" என்ற சொற்றொடரானது (இது "மேலாக உள்ள தூதன்" என்று நேரடி அர்த்தப்படுகிறது; 1 தெசலோனிக்கேயர் 4:16), சில தூதர்கள் மற்ற தூதர்களைவிட மேலானவர்களாக இருக்கின்றனர் என்று கருத்துத் தெரிவிக்கிறது. மிகாவேல் ஒரு பிரதான தூதன் என்று குறிப்பிடப்பட்டுள்ளார் (யூதா 9). தூதர்களின் முறைமை பற்றி நாம் கொஞ்சமாகவே கூடுதலான தகவல் பெற்றுள்ளோம். [40]"நான்கு" என்பது வானவியல் எண்ணாக இருந்தது, இது படைப்பின் எண்ணாக இருந்தது. ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் "நான்கு" என்ற எண்ணின்மீதான கலந்துரையாடலைக் காணவும்.) ஒரு பாடல் கூறுகிறபடி, "எங்களைப் படைத்த கரம் தெய்வீகத்துவமானது" என்று எல்லா படைப்பும் அறிவிக்கிறது (சங்கீதம் 19:1; 150:6ஐக் காணவும்).

[41]அந்த நாட்களில், பெரும்பாலான கண்ணாடிகள் கருமையாகவும் ஒளியைத் தடுப்பதாகவும் இருந்தன. "படிகம் போல்" தெளிவான கண்ணாடி என்பது அரிதானதாகவும் மிகவும் விலை உயர்ந்ததாகவும் இருந்தது. தெளிவான கண்ணாடி ("படிகம்"; KJV) என்பது பொன்னைப்போல் மதிப்புடையதாக இருந்தது என்று யோபு 28:17 சுட்டிக்காண்பிக்கிறது. [42]வெளிப்படுத்தின விசேஷத்தில் அதிகமான வேளைகளில், "கடல்" என்ற அடையாளம், பூமியின்மீது தண்ணீரால் மூடப்பட்ட பகுதியின் அடிப்படையில் உள்ளது (5:13; 7:1). அவ்வப்போது இந்தச் சொற்றொடர்

மனிதகுலத்தின் ஏராளமான திரளைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (17:1, 15). கடல் என்பதைப் பற்றிய எல்லாக் குறிப்புகளையும் சீரான விளக்கத்திற்கு இணைவு படுத்துவதற்கு விளக்கவுரையாளர்கள் போராடுகின்றனர், ஆனால் அது பின்வரும் மூன்று காரணங்களினால் அவசியமற்றதாக உள்ளது: (1) அதிகாரம் 4ஐ எழுதுவதில் யோவான் உண்மையான கடல் ஒன்றைக் காணவில்லை, ஆனால் அவருக்குக் கடலை நினைவுபடுத்தக்கூடிய ஒன்றையே கண்டார் ("கடலைப் போன்ற"). (2) சீர்பொருத்தமான தன்மை என்பது இந்தப் புத்தகத்தைப் பொறுத்தமட்டில் எப்போதுமே உயர்ந்த முன்னுரிமையாக இருப்பதில்லை. (3) யோவானால் விவரிக்கப்பட்ட பரலோகத்திற்குரிய "கடல்" என்பது நிச்சயமாகவே, வேசி அமர்ந்திருந்த "தண்ணீர்கள்" என்பதிலிருந்து மாறுபட்டதாக உள்ளது; அனேகமாக இவ்விரு தண்ணீர்களும் ஒரு நேர்மறை நோக்கம் கொண்டிருக்கக் கூடும் (வெளிப்படுத்தின புத்தகம் பல நேர்மாறுகளைக் கொண்டுள்ளது.) [43]21:1ல், மீட்கப்பட்டவர்கள் கடைசியில் தேவனுடைய பிரசன்னத்தில் பரலோகத்திலிருந்தபோது, "சமுத்திரம் ஒன்றும் இருக்கவில்லை." (4:6ல் உள்ள கடலுக்கு மற்ற விளக்கங்கள் கருத்தாக தெரிவிக்கப்பட்டுள்ளன. இந்தச் சொற்றொடர், சாலொமோனின் தேவாலயத்தின் முன்பாக இருந்த கை கழுவும் தொட்டியைக் குறிக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர், அதுவும் "கடல்" என்றே அழைக்கப்பட்டிருந்தது [1 இராஜாக்கள் 7:23].) [44]மூலவசனத்தின் அதிகாரம் 4ல் இவ்வார்த்தையானது பதினான்கு முறை காணப்படுகிறது. வெளி. புத்தகம் முழுவதிலும் இவ்வார்த்தை நாற்பதுக்கும் அதிகமான முறை காணப்படுகிறது. [45]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 57. [46]Shakespeare *Macbeth* 5.1.17. [47]O. W. Holmes, "Lord of All Being, Throned Afar," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [48]நான்கு ஜீவன்களும் தூதர்களின் முறைமையாக இருக்கின்றன என்றால், அவர்களுடன் தொடர்பான "பாடின" என்ற வார்த்தையைப் பற்றிய எனது பயன்பாட்டைக் குறித்துச் சிலர் அறைகூவல் விடுப்பார்கள்; ஆனால் நான், இந்த நான்கு ஜீவன்களும் அதை செய்தன(ர்) என்று நம்புகின்றேன். [49]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் 1:4 மற்றும் 1:8க்கான குறிப்புகளைக் காணவும். [50]WIlliam Barclay, *The Revelation of John*, vol. 1, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 164.

[51]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, *1979), 100.* [52]Reginald Heber, "Holy, Holy, Holy," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [53]இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், கிறிஸ்தவரல்லாதவர்களும் தவறு செய்கின்ற கிறிஸ்தவர்களும் அரியணைக்கு முன்பாக விழுந்து பணியும்படி (அதாவது, தங்களைத் தேவனுக்கு ஒப்புக்கொடுக்கும்படி)யும், அவரது சித்தத்திற்குக் கீழ்ப்படியும்படியும் ஊக்கப்படுத்துங்கள் (மாற்கு 16:16; யாக்கோபு 5:16). [54]மூப்பர்களின் நிலைப்பாடானது தேவனுடைய கிருபைத்தன்மையின் விளைவு என்பதை அவர்கள் உணர்ந்து அறிந்திருந்தனர். [55]இவ்விடத்தில் பரிசுத்த ஆவியானவரின்மீதே வலியுறுத்தம் உள்ளது, அவரே வசனத்தின்மூலம் அடிப்படையாக வழிநடத்துகின்றார். [56]Merrill C. Tenney, *Proclaiming the New Testament Series*: *The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 22-24. [57]Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 78. [58]Jim Bill McInteer, "The Vision Into Heaven," *Great Preachers of Today ... Sermons of Jim Bill McInteer*, ed. J. D. Thomas (Abilene, Tex.: Biblical Research Press, 1966), 169-74.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. நம்முடைய கண்கள் அடிக்கடி இந்த உலகத்தைக் கொண்டு நிறைந்து விடுகின்றனவா? யோவானைப் போல் நாம் நமது கருத்துநோக்கை மாற்றுவதற்குச் சிலவேளைகளில் “மேல்நோக்கி” கண்ணோக்குகின்றோமா?
2. அதிகாரம் 4ன் தரிசனத்தை நீங்கள் வாசிக்கையில், அது உங்களிடத்தில் ஏற்படுத்தும் மனப்பதிவு என்ன? உங்கள் சிந்தைக்கு வரும் வார்த்தைகள் யாவை?
3. வச்சிரக்கல், பதுமராகக்கல், மற்றும் மரகதம் ஆகியவை உங்களுக்குப் பழக்கமற்றிருந்தால், இதேபோன்ற காட்சி மனப்பதிவைத் தரும், உங்களுக்குப் பழக்கமான சில ஆபரணக்கற்களைப் பற்றி குறிப்பிடுங்கள்.
4. வானவில்லின் அடையாளம் போதிக்கும் பாடங்களாக நீங்கள் நினைப்பவை என்ன?
5. இடிமுழக்கம் மற்றும் மின்னல் ஆகியவற்றைக் குறிப்பிடுவதன்மூலம் என்ன பாடங்களைக் கொடுக்க நோக்கங் கொள்ளப்பட்டுள்ளது?
6. இருபத்துநான்கு மூப்பர்கள் பிரதிநிதித்துவப்படுத்துவதாக யாரை நீங்கள் நினைக்கின்றீர்கள்?
7. உங்கள் கருத்தில், நான்கு ஜீவன்களினால் பிரதிநிதித்துவப்படுத்தப் படுவது யார் அல்லது எது?
8. “பரிசுத்தர்” என்ற வார்த்தையை மூன்று முறை திரும்பக் கூறுவதன் தனிச்சிறப்பு என்ன?
9. “ஆராதனை” என்ற வார்த்தை அர்த்தப்படுத்துவது என்ன?
10. நாம் தேவனால் படைக்கப்பட்டுள்ளோம் என்பதைப் புரிந்து கொள்ளுதல் முக்கியமானதாக உள்ளதா? ஏன்?
11. இந்தப் பாடத்தின்படி, ஒரு நபர் கேட்கக்கூடிய முக்கியமான மூன்று கேள்விகள் யாவை? இந்தக் கேள்விகளுக்கு வேதாகமம் எவ்வாறு பதில் அளிக்கிறது?
12. உங்கள் வாழ்வில் சலிப்பு மிகுந்த அல்லது ஊக்கம் இழக்கச் செய்த அனுபவத்தை நினைத்துக் கொள்ளுங்கள். அதிகாரம் 4ன் தரிசனம் அந்த அனுபவத்துடன் எவ்வாறு உறவுபடுகிறது?

தீர்க்கதரிசன தரிசனங்களில் உயிருள்ள ஜீவன்கள்

எசேக்கியேல் கண்ட ஜீவன்கள் (எசேக்கியேல் 1; 10)		யோவான் கண்ட ஜீவன்கள் (வெளிப்படுத்தின விசேஷம் 4)		ஏசாயா கண்ட ஜீவன்கள் (ஏசாயா 6)
நான்கு ஜீவன்கள்	→	நான்கு ஜீவன்கள்		(எண்ணிக்கை குறிப்பிடவில்லை)
கண்கள் நிறைந்தவை	→	கண்கள் நிறைந்தவை		(கண்கள் குறிப்பிடவில்லை)
நான்கு ஜீவன்களின் ஒவ்வொரு ஜீவனுக்கும் நான்கு முகங்கள்	→	நான்கு ஜீவன்களுக்கும் நான்கு முகங்கள்		(முகங்கள் குறிப்பிடவில்லை)
நான்கு செட்டைகள்		ஆறு செட்டைகள்	←	ஆறு செட்டைகள்
பறக்கக்கூடியவை		தேவனைத் துதித்தல்	←	தேவனைத் துதித்தல்
கேருபீன்		(பெயரிடப்படவில்லை)		சேராபீன்



அரியணையைச் சுற்றிலும் இருந்த காட்சிகள் (4:2-8)

நான்கு உயிருள்ள ஜீவன்கள் சிங்காசனத்தைச் சுற்றியிருத்தல் (4:5-8)



மூப்பர் ஒருவர் தமது கிரீடத்தை அரியணையின் முன்பாக வைத்தல் (4:10)

20

"ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்"

(5:1-14)

வேதவாக்கியங்கள் இயேசுவுக்குச் சாட்சியுரைப்பதாக அவரே கூறினார் (யோவான் 5:39). பழைய ஏற்பாட்டிற்கு உண்மையாக இருப்பது எதுவோ அது - வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் உட்பட - புதிய ஏற்பாட்டிற்கும் உண்மையாக உள்ளது. இயேசு, வெளிப்படுத்தின விசேஷத்தின் "பிரதானக் கருத்துப் பொருளாக" இருக்கின்றார்.[1] ரே சம்மர்ஸ் அவர்கள், வெளிப்படுத்தின விசேஷம் பற்றிய தமது விளக்க உரைப் புத்தகத்திற்கு, ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார் என்று தலைப்பிட்டார். இது ஏன் என்று அவர் தமது புத்தக அறிமுகத்தில் பின்வருமாறு விளக்கினார்:

> *இந்தத் தலைப்பு ... இப்புத்தகத்தின் மையக்கருத்தை முன்வைக்கிறது. தேவனுடைய மீட்கும் ஆட்டுக்குட்டியானவர் தமது மக்களின் வாழ்வின்மீதும் இப்புத்தகத்தின் செயல்பாடுமீதும் ஆதிக்கம் செலுத்துகின்றார். அவர், தேவனுடைய ஊழியத்தையும் அவரது மக்களையும் அழிக்க முயற்சிசெய்யும் சக்திகளின்மீது கடைசியிலும் முழுமையாகவும் வெற்றிகொள்பவராக இருக்கின்றார். இந்த அற்புதமான நாடகத்தின் கடைசிக்காட்சியில் திரை விழுகிறபோது, வாசகர் தேவனுக்கு முன்பாகத் தமது தலையைப் பயபக்தியுடன் தாழ்த்துவதற்கும் ... ஆத்துமாவை ஊக்குவிக்கும் "தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, ... அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும் கனத்தையும் மகிமையையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்" என்ற பல்லவியுடன் சேர்ந்துகொள்வதற்கும் தம்மை வழிநடத்துகிற உணர்வினால் மேற்கொள்ளப்படுகிறார்.[2]*

சம்மர்ஸ் அவர்களால் மேற்கோள் காண்பிக்கப்பட்ட பாடல், நமது இந்தப் படிப்பிற்கான வேதவசனப் பகுதியாகிய வெளிப்படுத்தின விசேஷம் 5ன் அடிப்படையில் அமைந்துள்ளது.

அதிகாரங்கள் 4ம் 5ம் ஒன்றிணைந்து செல்லுகின்றன. (நமது முந்திய பாடத்தில் நாம் படித்த) அதிகாரம் 4, சிருஷ்டிகர்/படைப்பவர் என்ற வகையில் தேவனைத் தொழுதுகொள்வதை மையங்கொண்டு

இருக்கையில், அதிகாரம் 5, மீட்பர் என்ற வகையில் கிறிஸ்துவைத் தொழுதுகொள்வதைச் சித்தரிக்கிறது. 5:1ல் பரலோகத்திற்குரிய இந்த நாடகத்தின் திரை எழுகையில் (விலகுகையில்), அரியணையானது மேடையின் மையத்தில் நிலைத்திருந்தது. மூப்பர்களும், ஜீவன்களும், ஏழு ஆவிகளும் இன்னமும் பிரசன்னமாகியிருந்தனர் (5:5, 6). இருப்பினும், இப்போது, காட்சியில் எதிர்பார்ப்பின் காற்றொன்று அலை மோதிற்று.

"பாத்திரராயிருப்பவர் யார்?" (5:1-4)

ஒரு புத்தகச் சுருள் (வசனம் 1)

ஏறக்குறைய உடனடியாக, பதற்றம் எழும்பத் தொடங்கிற்று. யோவான் அரியணையைக் கண்ணோக்கிக்கொண்டிருக்கையில், அவர் "உள்ளும் புறம்பும் எழுதப்பட்டு, ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப் பட்டிருந்த ஒரு புஸ்தகத்தைச் சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய வலதுகரத்திலே[3]" கண்டார் (வசனம் 1). ("ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த புத்தகச்சுருள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) இந்தப் புத்தகம் என்பது - ஒன்று அல்லது இரண்டு கம்பிகளைச் சுற்றி சுருட்டப்பட்டிருந்த ஒரு நீளமான காகிதத்தினாலான - புத்தகச் சுருளாக[4] இருந்திருக்க வேண்டும். இந்தப் புத்தகச் சுரளானது இரண்டு தனித்தன்மைகளைக் கொண்டிருந்தது.

முதலாவது, காகிதத்தின் இருபுறமும் எழுதப்பட்டிருந்தது.[5] காகிதம் பொதுவாக, பாப்பிரஸில் இருந்து தயாரிக்கப்பட்டது. பாப்பிரஸ் செடியின் உட்புறம் (தண்டின் உட்சோறு) மெல்லியதாக நறுக்கப்பட்டு, நெட்டுக்குத் தான துண்டுகளாக ஒன்றிணைக்கப்பட்டிருந்தது. பின்பு இரண்டாவது அடுக்கு, முதல் அடுக்கின்மீது கிடைமட்டமாக வைக்கப்பட்டது. இவ்விரு அடுக்குகளும் பசையினால் ஒட்டப்பட்டு தட்டையாயிருக்கும்படி அழுத்தப்பட்டது. காகிதம் உலர்ந்தபின்பு, மென்மைத்தன்மைக்காக உப்புத்தாள் கொண்டு உரசப்பட்டது. நெட்டுக்குத்தான பகுதியின்மீது எழுதுதல் என்பது கடினமாயிருந்ததால், காகிதத்தின் ஒருபுறத்தில் மாத்திரமே எழுதப்பட்டது. யோவானின் தரிசனத்தில், புத்தகச்சுருளின் இருபுறங்களும் பயன்படுத்தப் பட்டிருந்தன. இது செய்தியின் முழுமைத் தன்மையைக் கருத்தாகத் தெரிவிக்கலாம்.

இரண்டாவது, புத்தகச்சுருள் ஏழு முத்திரைகளினால் முத்தரிக்கப்பட்டு இருந்தது.[6] பல ஆண்டுகளாகவே, முக்கியமான பதிவேடுகள் முத்திரையிடப் பட்டிருந்தன (ஏசாயா 29:11; எரேமியா 32:44; தானியேல் 6:17; 12:4 ஆகிய வசனங்களைக் காணவும்). சுருட்டப்பட்ட அல்லது மடிக்கப்பட்ட பதிவேட்டின் முனையின்மீது, உருகிய மெழுகு சொட்டுசொட்டாக விடப்பட்டது. பின்பு அந்த மெழுகு உறைந்து கடினமாவதற்கு முன்பு, அதன்மீது முத்திரை கொண்ட மோதிரம் அல்லது உலோக முத்திரையை வைத்து அழுத்தப்பட்டது. முத்திரை என்பது மூன்று நோக்கங்களுக்கு உதவிற்று: அது உரிமைத்துவத்தை நிரூபித்தது, உண்மைத் தன்மையை

உறுதிப்படுத்தியது மற்றும் அதற்குள் இருப்பவற்றைப் பாதுகாத்தது.[7] *இந்தப் புத்தகச்சுருள் ஏழு முத்திரைகளைக் கொண்டிருந்தது என்ற உண்மை, இது முழுமையாக முத்திரை இடப்பட்டிருந்ததைச் சுட்டிக்காண்பித்தது.*[8] *முத்திரைகளை உடைக்காமல் உள்ளிருப்பது என்ன என்பதை எவரொருவராலும் அறிய இயலாதிருந்தது.*

பலர், " 'ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த' இந்தப் 'புத்தகத்தின் உள்ளாகவும் பின்புறமாகவும் எழுதப்பட்டிருந்தது என்ன'?" என்று வியப்படைகின்றனர். முத்திரையிடப்பட்டிருந்த புத்தகச்சுருளினுள் என்ன இருந்தது என்பதை நாம் அறிய இயலாது என்பதுபோல், விளக்கவுரைகளில் பரவலாக மாறுபட்டுள்ள யூகங்களை வாசித்தல் என்பது திகைப்படையச் செய்வதாக உள்ளது.[9] *அதிகாரம் 6ல் தொடங்கி, நமக்குச் செய்தி விபரமாகத் தரப்பட்டுள்ளதால், இந்தக் குழப்பத்தைப் புரிந்து கொள்ளுதல் என்பது கடினமானதாக உள்ளது. முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, வெள்ளைக் குதிரையில் ஏறியிருந்தவர் வெளி வந்தார்; இரண்டாம் முத்திரை உடைக்கப்பட்ட போது சிகப்புக் குதிரையில் ஏறியிருந்தவர் வெளிவந்தார்; மற்றும் இன்னபிற. இந்தப் புத்தகச்சுருளில், வெளி. புத்தகத்தின் அதிகாரம் 6முதல் 22வரையுள்ள எஞ்சியுள்ள பகுதி அடங்கியிருந்தது என்பது தெளிவு.*[10]

ஒரு ஆராய்ச்சி (வசனங்கள் 2, 3)

ஒரு பலம் வாய்ந்த தூதன் மேடையின்மீது அடியெடுத்து வைக்கையில் பதற்றம் அதிகப்பட்டது. உலகப்பிரகாரமான மற்றும் ஆவிக்குரிய உலகங்களினூடே ரீங்காரமிடும்படியான உரத்தகுரலில், அவர் பின்வரும் அறைகூவலை வெளியிட்டார்: "புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரவான் யார்?" (வசனம் 2அ). AB *வேதாகமம் இந்தக் கேள்வியைப் பின்வருமாறு விரித்துரைக்கிறது: "புத்தகச்சுருளைத் திறக்கத் தகுதியானவர் யார்? மற்றும் அதன் முத்திரைகளை உடைப்பதற்கு நியமிக்கப்பட்டவரும், தகுதியானவரும் மற்றும் ஒழுக்கரீதியாகப் பொருத்தமானவரும் யார்?"*[11] *முத்திரையை உடைத்தல் என்பது வெறும் மெழுகை உடைத்தல் என்பதைவிட அதிகமான விஷயங்களை உள்ளடக்கியிருந்தது; முத்திரையை உடைப்பவர் அந்தப் பதிவேட்டில் உள்ளவற்றிற்குப் பொறுப்பேற்றுக் கொண்டவராக இருக்க வேண்டும்.*

அந்தக் கேள்வி கேட்கப்பட்ட பின்பு, ஒரு மவுனம் - ஒரு நீண்ட மவுனம் - நிலவியிருக்க வேண்டும், யோவான் பதிலுக்காகக் காத்திருந்தார். புத்தகத்தைத் திறப்பதற்கு யாரேனும் ஒருவர் கண்டறியப்படுவார் என்று நம்புவதற்கு அவர் ஒவ்வொரு காரணத்தையும் கொண்டிருந்தார். அவருக்கு, "நீ கண்டவைகளையும், இருக்கிறவைகளையும், இவைகளுக்குபின்பு சம்பவிப்பவைகளையும் எழுது" என்று கட்டளையிடப்பட்டு இருந்ததே (1:19ஆ). மேலும் அவர் பரலோகத்திற்குள் அழைக்கப்பட்டபோது, "இங்கே ஏறிவா, இவைகளுக்குப் பின்பு சம்பவிக்கவேண்டியவைகளை உனக்குக் காண்பிப்பேன்" என்று கூறப்பட்டிருந்தது (4:1). இவ்விதமாக நாம்,

யாரேனும் ஒருவர் முன்னோக்கி அடியெடுத்து வைக்கவும், யோவானின் சிந்தையை நிச்சயமாகவே வேட்டையாடிக்கொண்டிருந்த பின்வரும் கேள்விகளுக்கான பதில்களை வெளிப்படுத்தவும் வருவார் என்று அவர் (யோவான்) மூச்சுவிடாமல் காத்திருந்ததைச் சித்தரிக்கிறோம்: "கிறிஸ்தவர்களுக்கு என்ன நடக்கும்? எல்லா விஷயமும் சரியாகி விடுமா? எல்லாவற்றையும் தேவனால் எப்படி நன்மைக்கேதுவாகச் செய்யமுடியும்?"

ஒரு கவலை (வசனங்கள் 3, 4)

கடைசியில், "வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின்கீழாவது,[12] ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறக்கவும், அதைப் பார்க்கவும் கூடாதிருந்தது" என்பது வேதனைநிறைந்த வகையில் தெளிவாயிற்று (வசனம் 3). "வானத்தில்" இருந்தவர்களில் தூதர்கள், கேருபீன், சேராபீன் மற்றும் மிகாவேல் போன்ற பிரதான தூதர்கள் உள்ளடங்கினர். "பூமியில்" என்ற சொற்றொடரில், மாபெரும் கிறிஸ்தவ நடத்துநர்கள், தேவபக்தியுள்ள பரிசுத்தவான்கள் மற்றும் யோவான் தாமும்கூட உள்ளடங்கினர். "பூமியின் கீழ்" என்பது பிரிந்து சென்ற ஆவிகள் இருக்கும் வட்டாரத்தைக்[13] குறித்தது, இதில் ஆபிரகாம், மோசே, தாவீது, எலியா மற்றும் பவுல் போன்ற தேவனுடைய குறிப்பிடத்தக்க ஊழியக்காரர்கள் உள்ளடங்கினர். இவர்கள் யாவரும் எவ்வளவு பெரியவர்களாகவும் நல்லவர்களாகவும் இருந்தாலும், புஸ்தகத்தை திறக்க ஒருவரும் தகுதியுள்ளவராய் இருக்கவில்லை. எவரொருவரும் முன்னோக்கி அடியெடுத்து வைக்கவில்லை.

அந்தவேளையில், யோவான் தாம் அறியும்படி ஏங்கியிருந்ததை ஒருக்காலும் அறியமாட்டார் என்பதாகக் காணப்பட்டிருக்க வேண்டும். அவர், "ஒருவனும் அந்தப் புஸ்தகத்தைத் திறந்து வாசிக்கவும் அதைப் பார்க்கவும் பாத்திரவானாகக் காணப்படாததினால் நான் மிகவும் அழுதேன்" என்று எழுதியதில் வியப்பெதுவுமில்லை (வசனம் 4). "அழுதேன்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தை "கசந்து அழுதல், துக்கித்தல்" என்று அர்த்தப்படுகிறது. இயேசு எருசலேமுக்காக அழுததை லூக்கா எழுதியபோது, அவர் (லூக்கா) இதே வார்த்தையைப் பயன்படுத்தினார் (லூக்கா 19:41). ஏக்கத்தின் காரணமாக அழுதல் என்பது உடல் வேதனையைக் காட்டிலும் அதிக ஆழமானதாக உள்ளது. யோவான் தமது துன்புறும் சகோதர சகோதரிகளின்மீது தாம் கொண்டிருந்த அக்கறையின் காரணமாக - தம்மால் தேவனுடைய மீட்பின் திட்டங்களை அறிய இயலாதிருந்ததின் காரணமாக - அழுதார்.

நாம், பாவத்தில் இழந்துபோகப்பட்டுள்ள உலகத்தை நம்மைச் சுற்றிக் கண்ணோக்குகையில், சரியானதைச் செய்ய முயற்சி செய்பவர்கள் துன்புறுவதை நாம் கண்ணோக்குகையில், யோவான் கொண்டிருந்த அக்கறையின் அதே வலிவு அளவை நாம் கொண்டுள்ளோமா? சில காலத்திற்கு முன்னர் நான், சிலவேளைகளில் நாம் காட்சிப்படுத்துகின்ற அக்கறைக்குறைவைப் பற்றி விளக்கம் அளித்த பிரசங்கத் தலைப்பு ஒன்றைக் கண்டேன்: "நரகத்தை நோக்கிச் சென்று கொண்டிருக்கும் உலகத்தில் உலர்ந்த கண்களுடன் உள்ள ஒரு சபை." வயது முதிர்ந்த யோவான் அழுததையும்,

சிலவிஷயங்கள் கவலைப்படப் பாத்திரமானவைகளாக உள்ளன என்று அறிந்து கொள்ளுங்கள்.[14] *"அழ ஒரு காலமுண்டு" (பிரசங்கி 3:4)!*

"நான் ... ஆட்டுக்குட்டியை ... கண்டேன்" (5:5-7)

ஒரு கம்பீரமான சிங்கம் (வசனம் 5)

யோவான் நீண்ட நேரம் அழவில்லை, ஏனெனில் அவரிடத்தில் மூப்பர்களில் ஒருவர், பாத்திரரான ஒருவர் இருந்தார் என்று கூறி அவரது கண்ணீரை உலரச் செய்தார்: "நீ அழவேண்டாம், இதோ, யூதா கோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் புஸ்தகத்தைத் திறக்கவும் அதின் ஏழு முத்திரைகளையும் உடைக்கவும் ஜெயங்கொண்டிருக்கிறார்" (வசனம் 5).

மூப்பரால் பயன்படுத்தப்பட்ட பட்டப்பெயர்கள் மேசியாத்துவச் சொல்விளக்கங்களாக இருந்தன: "யூதா கோத்திரத்துச் சிங்கம்" என்பது எனது சிந்தையில், ஆதியாகமம் 49:8-11ஐ நினைவுக்குக் கொண்டுவருகிறது, அங்கு யாக்கோபு தமது மகன் யூதாவிற்கு தீர்க்கதரிசனவகையில் செங்கோலைக் கொடுத்து, அவரது சந்ததியார்களை அரசர்களின் கோத்திரமாக்கினார். "சிங்கம் என்பது வேதாகம எழுத்தாளர்களினால், பலம் வாய்ந்த மற்றும் உக்கிரமான விலங்கு என்று அறியப்பட்டிருந்தபடியால்,"[15] *"யூதா கோத்திரத்துச் சிங்கம்" என்பது யாக்கோபின் நான்காவது மகனிடத்தில் இருந்து என்றென்றும் இருக்கும்படித் தோன்றிய மகாப்பெரியவரைக் குறித்தது.*

"தாவீதின் வேருமானவர்" என்ற சொல்லாக்கம், ஏசாயா 11ஐ நமக்கு நினைவூட்டுகிறது, இது "ஈசாயின் வேர்" என்பதைப் பற்றிப் பேசுகிறது (ஏசாயா 11:10; வசனம் 1ஐக் காணவும்). ஈசாய் என்பவர் தாவீதின் தந்தையாயிருந்தார். மேசியா, தாவீதின் வம்சவழியில் வரவேண்டியிருந்தது என்பதே, "தாவீதின் வேருமானவர்"[16] *என்ற சொற்றொடரின் அடிப்படை முக்கியத்துவமானதாக உள்ளது.* CEV *வேதாகமத்தில்,* "King David's Great Descendant" *("தாவீது அரசரின் மாபெரும் சந்ததி") என்றுள்ளது.*

யூதாகோத்திரத்துச் சிங்கமும் தாவீதின் வேருமானவர் "புஸ்தகத்தைத் திறக்க ... ஜெயங்கொண்டிருக்கிறார்" என்பது வலியுறுத்தப்பட்டது. "ஜெயங்கொள்ளுதல்" என்பது, ஏழு சபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில் நாம் மீண்டும் மீண்டும் கண்ட வார்த்தையாக உள்ளது; இது "வெற்றி" என்பதற்கான கிரேக்க வார்த்தையின் வினைவடிவமாக உள்ளது. அவர் வெற்றிகொண்டவராக இருந்ததால், அவர் புத்தகத்தைத் திறக்கத் தகுதிவாய்ந்தவராக இருந்தார்.

இவ்வசனப்பகுதி இயேசுவைப் பற்றிப் பேசுகிறது என்பதை அனேகமாக நீங்கள் உய்த்துணர்ந்து இருக்கலாம். மனிதத்துவப் பகுதியில் இயேசுவானவர், யூதா மற்றும் தாவீது ஆகியோரின் சந்ததியாய் இருந்தார் (மத்தேயு 1:1, 3, 6, 17; எபிரெயர் 7:14; வெளிப்படுத்தின விசேஷம் 22:16).[17] *மேலும் அவர் "வெற்றிகொண்டவராகவும்" இருந்தார்: அவர் சோதனையை வெற்றிகொண்டார்; அவர் சாத்தானுடைய தொடர்ந்த/நிலையான*

தாக்குதல்களை வெற்றி கொண்டார்; அவர் வாழ்வின் ஏமாற்றங்களை வெற்றிகொண்டார். இருப்பினும் நாம் காணப்போகின்றபடி, இவ்வசனப்பகுதியானது மரணத்தின்மீது இயேசுவின் வெற்றியையே முதன்மையாகக் குறிப்பிடுகிறது.

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி (வசனம் 6அ)

யோவானின் நம்பிக்கைகள் உயிர்ப்பிக்கப்பட்டிருந்தன. அவர் ஒரு சிங்கத்தைக் காண்பதை எதிர்பார்த்துத் திரும்பினார். அதற்குப் பதிலாக அவர் ஒரு ஆட்டுக்குட்டியைக் கண்டார்! "அப்பொழுது, இதோ, அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற[18] *ஒரு ஆட்டுக்குட்டி (உயிருள்ள நான்கு ஜீவன்கள் அருகிலிருந்த) சிங்காசனத்திற்கும்,*[19] *நான்கு ஜீவன்களுக்கும், மூப்பர்களுக்கும் மத்தியிலே நிற்கக்கண்டேன், அது ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதாயிருந்தது, அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்" (வசனம் 6). ("அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு ஆட்டுக்குட்டி" என்ற விளக்க படத்தைக் காணவும்.) யோவான் திகைப்பினால் விழித்திருக்க வேண்டும். அவர் பயமுறுத்தும் பிரசன்னமுடைய ஒரு ஜீவனைக் காணப்போவதாக நினைத்தார், ஆனால் அவருக்கு முன்பாக நின்று கொண்டிருந்ததோ, விலங்குகளிலேயே மிகவும் உதவியற்றதாக துன்பம் தராததாக இருந்த ஒன்றாகும்.*

"ஆட்டுக்குட்டி" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை, "சிறிய ஆட்டுக்குட்டி" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. இந்தக் காட்சியைச் சிந்தையில் பெறுவதற்கு, முதலில் நீங்கள் அப்போதுதான் பிறந்த ஒரு ஆட்டுக்குட்டியை, ஒரு வேளை தள்ளாடும் கால்கள் கொண்ட புதிதாய்ப் பிறந்த ஆட்டுக்குட்டியைக் காட்சிக்குக் கொண்டுவாருங்கள். பின்பு (உங்கள் மனம் அனுமதித்தால்) அந்த ஆட்டுக்குட்டி தொண்டையில்/ கழுத்தில் வெட்டப்பட்டு, "இன்னும் திறந்ததாக, குணப்படுத்தப் படாததாக உள்ள பெரிய காயத்துடன்"[20] *அதன் பச்சிளம் தோல் தனது சொந்த இரத்தத்தினாலேயே சிவப்பாய்க் கறைப்பட்டிருப்பதைக் கற்பனை செய்து பாருங்கள்.*

"அடிக்கப்பட்ட" என்பதற்கான sphatto என்ற கிரேக்க வார்த்தை, வன்முறையான மரணம் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. NEB *வேதாகமத்தில்,* "with the marks of slaughter upon him" [*"அதன்மீது கொலை செய்யப்பட்ட அறிகுறிகளுடன்"*] *என்றுள்ளது. வன்முறையான இந்த மரணத்தின் நோக்கம் பற்றி இந்தக் கிரேக்க வார்த்தை நமக்குக் கூறுவது என்ன என்பதே மாபெரும் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது.* W. E. *வைன் அவர்கள், sphatto என்பது " 'அடிக்கப்பட, கொல்லப்பட,' விசேஷமாக பலிக்கு ஆளாகின்ற, ..." என்று அர்த்தப்படுகிறது என்பதாகக் குறிப்பிட்டார்.*[21]

அனேகமாக நீங்கள், அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி என்பது சிலுவையில் இருந்த கிறிஸ்துவின் அடையாளமாக இருந்தது என்பதை உய்த்துணர்ந்து இருக்கலாம். இயேசுவின் தியாகமான மரணத்தைப் பற்றி

ஏசாயா பேசியபோது, அவர் (ஏசாயா), அவரை (இயேசுவை) "அடிக்கப் படும்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டி"க்கு ஒப்பிட்டார் (ஏசாயா 53:7ஆ). யோவான் ஸ்நானன் இயேசுவைச் சுட்டிக் காண்பித்து. "இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி" என்று கூறினார் (யோவான் 1:29ஆ). நாம், "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டி யாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப்பட்டு" இருக்கின்றோம் என்று பேதுரு எழுதினார் (1 பேதுரு 1:19).

ஆட்டுக்குட்டியானவர் *நின்றுகொண்டிருந்தார்* என்பதைக் கவனிக்கத் தவறாதீர்கள். அவர் அடிக்கப்பட்டிருந்தார், ஆனால் அவர் உயிர்த் தெழுந்தும் இருந்தார். முன்னதாக யோவானிடத்தில் இயேசு, "மரித்தேன், ஆனாலும், இதோ, சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று கூறியிருந்தார் (1:18ஆ). இவ்விதமாக அவர் புத்தகத்தைத் திறக்கத் தயாராக நின்றார்.

"மரியாளின் சிறிய ஆட்டுக்குட்டியை" ["Mary's little lamb"[22]] நாம் கண்ணோக்குகையில், தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகளல்ல (ஏசாயா 55:8) என்பது நமக்கு மீண்டும் ஒருமுறை நினைவூட்டப்படுகிறது. தீமைக்கு எதிரான யுத்தத்தில், மற்றவர்களைத் துன்புறுத்தும் உக்கிரமான விலங்கை நாம் விரும்பி தேர்ந்து கொள்ளலாம், ஆனால் தேவன் நமக்கு, "பிறருடைய துன்பங்களைத் தம்மீது மேற்கொள்கின்ற ஒரு பலி ஆட்டுக்குட்டியையே"[23] கொடுத்தார். விரல்களை இறுக்க மூடிய கை தேவை என்று நாம் நினைக்கலாம், ஆனால் துளைக்கப்பட்ட கரம்தான் வெற்றிகொள்ளும் என்பதை நாம் அறிய வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்![24]

வல்லமையுள்ள கர்த்தர் (வசனங்கள் 6ஆ, 7)

ஆட்டுக்குட்டியானவர் முதல் பார்வைக்குத் தோன்றியதுபோல், உதவியற்றவராக இருக்கவில்லை என்பது இப்போது தெளிவாகியிருக்க வேண்டும். அவர், "ஏழு கொம்புகளையும் ஏழு கண்களையும் உடையதா யிருந்தது, அந்தக் கண்கள் பூமியெங்கும் அனுப்பப்படுகிற தேவனுடைய ஏழு ஆவிகளேயாம்" என்று விவரிக்கப்பட்டுள்ளார் (வசனம் 6ஆ). கொம்புகள் என்பவை பலத்தின் அடையாளமாக இருந்தன (உபாகமம் 33:17ஐக் காணவும்). ஏழு கொம்புகள் என்பது ஆட்டுக்குட்டியின் சர்வ வல்லமையைப் பற்றிப் பேசுகிறது. அவர் ஏழு கண்களையும் கொண்டிருந்தார்: அவர் எல்லாவற்றையும் காண்பவராக, எல்லாவற்றையும் அறிபவராக இருந்தார்/இருக்கின்றார் (2 நாளாகமம் 16:9அ; சகரியா 4:10ஐக் காணவும்). மேலும், அவரது ஏழு கண்களும், "பூமியெங்கும் அனுப்பப் படுகிற[25] தேவனுடைய ஏழு ஆவிகளேயாம் (வேறுவார்த்தைகளில் கூறுவதென்றால், பரிசுத்த ஆவியேயாம்[26])" என்று அடையாளப்படுத்தப் படுகிறது. "பூமியெங்கும்" என்பது அவர் எங்கும் *நிறைந்திருக்கின்றார்* என்று கருத்துத் தெரிவிக்கிறது. தற்காப்பற்ற ஆட்டுக்குட்டியாக இருப்பதற்குப் பதிலாக, அவர் உண்மையில் ஆதிக்கம் செலுத்தும் ஆண்டவராக இருந்தார்/இருக்கின்றார் (17:14ஐக் காணவும்)!

பின்பு, யோவான் கவனித்துக் கொண்டிருக்கையில், ஆட்டுக்குட்டியானவர், "வந்து, சிங்காசனத்தின் மேல் உட்கார்ந்தவருடைய வலது கரத்திலிருந்த புஸ்தகத்தை வாங்கினார்"[27] (வசனம் 7). ("முத்தரிக்கப்பட்ட புத்தகச்சுருளும் அடிக்கப்பட்டவண்ணமாயிருந்த ஆட்டுக்குட்டியும்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) இவ்விதமாக இந்தக் காட்சியானது, முதல் முத்திரை உடைக்கப்படுவதற்கான வழியை அமைத்தது - அது அடுத்த அதிகாரத்தின் தொடக்கத்தில் நடைபெறுகிறது.

"... 'நீர் பாத்திரராயிருக்கின்றீர்' என்று அவர்கள் பாடினர்" (5:8-14)

மன்னிப்பின் பாடல் (வசனங்கள் 8-10)

முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்னால், படைப்புகள் யாவும் ஆராதனையில் பொங்கி எழுந்தன - அதிகாரம் 4ல் இருந்து மேடையில் இருந்திருந்தவர்களில் இது தொடங்கிற்று: "அந்தப் புஸ்தகத்தை அவர் வாங்கினபோது, அந்த நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் தங்கள் தங்கள் சுரமண்டலங்களையும்,[28] பரிசுத்தவான்களுடைய[29] ஜெபங்களாகிய தூபவர்க்கத்தால் நிறைந்த பொற்கலசங்களையும் பிடித்துக் கொண்டு, ஆட்டுக்குட்டியானவருக்கு[30] முன்பாக வணக்கமாய் விழுந்து" (வசனம் 8).

அவர்கள் பாடிய பாடலைக் கவனிப்பதற்கு முன் நாம், சுரமண்டலங்கள் பற்றி ஆழ்ந்து சிந்திக்க வேண்டும். "பரலோகத்தில் அவர்கள் சுரமண்டலங்களை வைத்திருந்தபடியால்" கிறிஸ்தவ ஆராதனையில் இசைப்பதற்கு இயந்திர இசைக்கருவிகளைப் பயன் படுத்துதல் ஏற்புடையதாகவே உள்ளது என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இருப்பினும் இங்கும், அதிகாரம் 14 மற்றும் 15 ஆகியவற்றிலும் உள்ள சுரமண்டலங்கள் (அல்லது தம்புராக்கள்) என்பவைகள் தூபவர்க்கம் என்பவற்றைக் காட்டிலும் அதிகம் நேரடியான அர்த்தத்தில் இருப்பதில்லை; சுரமண்டலங்கள் என்று இவ்விடத்தில் குறிப்பிடப்படுதல் என்பது, கிறிஸ்தவ ஆராதனையில் சுரமண்டலங்களை இசைக்கலாம் என்பதை, தூபவர்க்கம் இங்கு குறிப்பிடப்படுவதால் கிறிஸ்தவ ஆராதனையில் தூபவர்க்கம் பயன்படுத்தப்படலாம் என்று நியாயப்படுத்துவதைக் காட்டிலும் அதிகமாக நியாயப்படுத்துவது இல்லை. இந்த சுரமண்டலங்கள் என்பவை அடையாளத்துவமாக, "துதியின் அடையாளத்துவமாக"[31] இருந்தன. ஹென்றி ஸ்வீட் அவர்கள், "சபையின் ஜெபங்கள் தூபவர்க்கத் தினால் அடையாளப்படுத்தப்படுகிறது ... , இதன் கீதப்பாடல்கள் (சங்கீதங்களைப் பாடுதல்) என்பது ... சுரமண்டலங்களைக் கொண்டு குறிப்பிடப்படுகிறது" என்று எழுதினார்.[32] அடையாளத்துவமானது நான்கு ஜீவன்களும், இருபத்துநான்கு மூப்பர்களும் கர்த்தரைத் துதிக்கத் தயாராக இருந்தனர் என்ற உண்மையை அடிக்கோடிடுகிறது.

ஆகையால் அவர்கள் தங்கள் குரல்களை உயர்த்தி, பலத்த தூதனால்,

"பாத்திரவான் யார்?" என்று கேட்கப்பட்ட கேள்விக்குப் பதில் அளித்தனர்:

> *தேவரீர் புஸ்தகத்தை வாங்கவும் அதின் முத்திரைகளை உடைக்கவும் பாத்திரராயிருக்கிறீர், ஏனெனில் நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு, எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்,[33] நாங்கள் பூமியிலே அரசாளுவோம் என்று புதிய பாட்டைப் பாடினார்கள் (வசனங்கள் 9, 10).*

தேவன் படைப்பவராக இருந்த காரணத்தினால், அவரை அவர்கள் துதித்திருந்தனர் (4:11); ஆட்டுக்குட்டியானவர் மீட்பராக இருந்த காரணத்தினால், அவரை அவர்கள் இப்போது துதித்தனர். அவர்களின் பாடல் "ஒரு புதிய பாடலாக" இருந்தது; ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்படுவதற்கு முன்பு அது பாடப்பட முடியாததாக இருந்தது![34]

பரலோக பாடகர்கள், முதலில் மீட்பிற்கான காரணத்தைப் பற்றிப் பாடினர்: "நீர் அடிக்கப்பட்டு, சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு." நாம் "கிரயத்துக்கு கொள்ளப் பட்டுள்ளோம்" (1 கொரிந்தியர் 7:23; 1 கொரிந்தியர் 6:19, 20ஐக் காணவும்), மற்றும் இயேசுவின் மதிப்புமிகுந்த இரத்தமே அந்தக் கிரயமாக இருந்தது (நடபடிகள் 20:28)! சிலகாலத்திற்கு முன்பு நான், ஒரு நாமகரணக்கூட்டமானது தனது உறுப்பினர்களுக்கு "இரத்தம்" என்ற வார்த்தை "ருசியற்றதாக" காணப்பட்டதால், அது தனது பாடல் புத்தகத்தில் இருந்து ["இரத்தம்" என்ற] அவ்வார்த்தையை நீக்கிப்போட்டது என்று வாசித்தேன். அந்தப் பாடல் புத்தகம் பரலோகத்தில் ஒருக்காலும் பயன்படுத்தப்பட இயலாது, ஏனெனில் அவர்கள், இரட்சிப்பைக் கொண்டுவருகிற இரத்தத்தைப் பற்றியே பரலோகத்தில் பாடுகின்றனர்!

அவர்கள் மீட்பின் அடைதலைப் பற்றியும் பாடினர்: "சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து[35] எங்களைத் தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக் கொண்டு." "கோத்திரம்" என்பது குடும்பக்குழு ஒவ்வொன்றையும், "பாஷைக்காரர்" என்பது மொழிசார்ந்த குழு ஒவ்வொன்றையும், "ஜனங்கள்" என்பது சமூகக்குழு ஒவ்வொன்றையும், "ஜாதிகள்" என்பது இனக்குழு ஒவ்வொன்றையும் குறிக்கிறது. இயேசு, "எல்லாருக்காகவும் மரித்தார்" (2 கொரிந்தியர் 5:15).

பின்பு அவர்கள் மீட்பின் விளைவைப் பற்றிப் பாடினர்: "எங்கள் தேவனுக்குமுன்பாக எங்களை ராஜாக்களும் ஆசாரியர்களுமாக்கினீர்[36], நாங்கள் பூமியிலே அரசாளுவோம்[37]." கிறிஸ்துவின் மூலமாக நாம் ஒரு விசேஷித்த மக்களாகியிருக்கின்றோம்: "நீங்களோ, ... தெரிந்துகொள்ளப் பட்ட சந்ததியாயும், ராஜரீகமான ஆசாரியக்கூட்டமாயும், பரிசுத்த ஜாதியாயும், அவருக்குச் சொந்தமான ஜனமாயும் இருக்கிறீர்கள்" (1 பேதுரு 2:9).

"நாங்கள் பூமியிலே அரசாளுவோம்" என்ற வியப்புக்குரிய கூற்றைப் பற்றிச் சற்றுநேரம் சிந்தித்துப் பாருங்கள். கிறிஸ்தவர்கள் அன்று எந்தக் கருத்தில் "பூமியின்மீது அரசாண்டனர்"? மற்றும் நாம் எந்தக்கருத்தில் இன்றைய நாட்களில் "பூமியின்மீது அரசாளுகின்றோம்"? யோவானின் நாட்களில், கிறிஸ்தவர்கள் சிறையில் அடைக்கப்பட்டு, சிங்கங்களுக்கு உணவாக்கப்பட்டு இருக்கையில், அவர்கள் ஆட்சிசெய்து கொண்டிருந்த தாகக் காணப்படவில்லை என்பது உறுதி. இன்றைய நாட்களில் நீங்களும் நானும் பிரச்சனைகள் மத்தியில் உழன்று கொண்டிருக்கையில், நாம் ஆட்சிசெய்து கொண்டிருப்பதாகக் காணப்படுவதில்லை. இருப்பினும், தோற்றங்கள் வஞ்சிப்பதாயிருக்கக்கூடும். முதல் நூற்றாண்டின் கலவரத்திற்கு மத்தியில், தேவன் இனியும் தமது அரியாசனத்தின்மீது வீற்றிருக்கவில்லை என்றே நிச்சயமாகத் தோன்றிற்று - ஆனால் அவர் அவ்வாறு வீற்றிருந்தார் என்பதை அதிகாரம் 4 உறுதிப்படுத்திற்று. ஆகையால் நாம் மீண்டுமாக, "கிறிஸ்தவர்கள் எந்தக்கருத்தில் பூமியின்மீது அரசாண்டார்கள் - மற்றும் அரசாளுகின்றார்கள்?" என்று கேட்கின்றோம்.

கிறிஸ்தவர்கள் என்ற வகையில் நாம் பலவழிகளில் அரசாளுகின்றோம்: (1) நாம் கிறிஸ்துவின் இராஜ்யமாக இருக்கின்றோம் (வெளிப்படுத்தின விசேஷம் 1:6), இது சபையாக உள்ளது (மத்தேயு 16:18, 19). (2) தேவன் நமது பிதாவாக இருப்பதால் (1 கொரிந்தியர் 1:3), நாம் இராஜரீகக் குடும்பத்தின் அங்கமாக இருக்கின்றோம். (3) கிறிஸ்து இப்பொழுது அரசாண்டு கொண்டிருப்பதாலும் (நடபடிகள் 2:33-36; 1 கொரிந்தியர் 15:25), நாம் "கிறிஸ்துவுக்குள்" இருப்பதாலும் (2 கொரிந்தியரர் 5:17), நாம் அவரது ஆளுகையில் பங்கடைகின்றோம். (4) நாம் இரட்சிக்கப்பட்டிருப் பதால், மரணம் இனியும் நம்மீது ஆளுகை செய்வதில்லை; மாறாக நமக்கு, "இயேசுகிறிஸ்து என்னும் ஒருவராலே ஜீவனை அடைந்து ஆளுவார் களென்"பதின் மூலம் (ரோமர் 5:17ஆ; வசனங்கள் 14, 21ஐக் காணவும்) பலம் கொடுக்கப்பட்டுள்ளது.

யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களின் நிலைப்பாட்டில் இருந்து காணுகையில், "பூமியின் மீது அரசாளுவார்கள்" என்ற வார்த்தைகள் அனேகமாக அடிப்படையில் வெற்றியைக் குறித்திருக்க வேண்டும். ரோமாபுரியானது, கிறிஸ்தவர்களை ஆளவும், இராயனை வணங்கும்படி அவர்களை நிர்ப்பந்திக்கவும் முயற்சி செய்தது; ஆனால் கிறிஸ்துவின் பலத்துடன் இருந்த கிறிஸ்தவர்கள், தங்கள் சொந்த வாழ்வு மற்றும் அடைவிடங்கள் ஆகியவற்றின்மீது கட்டுப்பாட்டைச் செலுத்துபவர்களாய் நிலைத்திருந்தனர். அதுபோலவே, நீங்களும் நானும் கர்த்தருக்கு நமது வாழ்வை ஒப்புவிக்கையில், நாம் வெற்றிகொண்ட வாழ்வை வாழ்வதற்கு, வாழ்வானது நமது பாதைகளில் இடுகிற ஒவ்வொரு தடையின்மீதும் "ஆளுகை செய்வதற்கு" அவர் நமக்கு உதவுகின்றார்.

பங்கேற்றலின் பாடல் (வசனங்கள் 11, 12)

இருபத்து எட்டு பாடகர்களும் மீட்பின் பாடலைப் பாடிய பின்பு, அவர்களுடன் தூதத்துவப் பல்லவியொன்று இணைந்துகொண்டது. வசனம்

11, "பின்னும் நான் பார்த்தபோது, சிங்காசனத்தையும் ஜீவன்களையும் மூப்பர்களையும் சூழ்ந்திருந்த அநேக தூதர்களுடைய சத்தத்தைக் கேட்டேன், அவர்களுடைய இலக்கம் பதினாயிரம் பதினாயிரமாகவும், [myriads of myriads[38]] *ஆயிரமாயிரமாகவுமிருந்தது" என்று கூறுகிறது (வசனம் 11). கடந்தகாலத்தில்* "myriad" *என்ற ஆங்கில வார்த்தை, "பதினாயிரம்" என்று அர்த்தப்பட்டது, எனவே* KJV *வேதாகமத்தில்,* "ten thousand times ten thousand, and thousands of thousands" *என்றுள்ளது* [*இது தமிழில் "பதினாயிரம் பதினாயிரமாகவும், ஆயிரமாயிரமாகவும்" என்றுள்ளது.*] *பரலோகத்தில் எத்தனை தூதர்கள் இருக்கின்றனர் என்று கணக்கிட முயற்சி செய்யாதீர்கள். "பத்து" (முழுமையைக் குறிக்கும் எண்[39]) என்ற எண்ணின் தாராளமான பெருக்கம், பரலோகத்தின் தூதர் ஒவ்வொருவரும் பிரசன்னமாகியிருந்தார் என்று மட்டும் குறிப்பிடுகிறது!*

இந்த "ஆயிரம் பதினாயிரமான தேவதூதர்கள்" (எபிரெயர் 12:22) தங்கள் குரல்களை, மூப்பர்கள் மற்றும் ஜீவன்களின் குரல்களுடன் ஒன்றிணைத்தனர். அவர்களின் பாடல்[40] "கருத்தொருமைப்பாட்டின் பாடல்" என்று அழைக்கப்பட்டுள்ளது. இயேசு, தூதர்களுக்காக அல்ல, ஆனால் மனிதர்களுக்காகவே மரித்திருந்தார் என்றாலும், தேவனுடைய மக்களின் மீட்பில் தூதர்கள் ஆர்வமற்றிருந்தனர் என்று அது அர்த்தப்படுவதில்லை (லூக்கா 15:10). மீட்புக்கான தேவனுடைய திட்டத்தின் தொடக்கத்தில் இருந்தே அதில் தூதர்கள் பங்கேற்றிருந்தனர்.[41] வசனம் 12ல் அவர்கள் அந்தத் திட்டத்தில் இயேசுவின் பங்கிற்காக அவரைக் கனப்படுத்தினர்: "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையையும் ஐசுவரியத்தையும் ஞானத்தையும் பெலத்தையும்[42] கனத்தையும் மகிமையையும்[43] ஸ்தோத்திரத்தையும்[44] பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார்." நான்கு தெய்வீகப்பண்புகளும் அத்துடன் மூன்று ஆராதனைக்குரிய எண்ணப்போக்குகளும் குறிப்பிடப்பட்டன - மொத்தத்தில் ஏழு விஷயங்கள் குறிப்பிடப்பட்டன, இது இயேசுவின் பூரணத்தன்மையை வலியுறுத்துகிறது![45] 4:11ல் தேவனுக்குக் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பண்பும், இவ்விடத்தில் ஆட்டுக்குட்டியானவருக்குக் குறிப்பிடப்பட்டது - இது இயேசுவின் தெய்வீகத்துவத்திற்கு இன்னொரு நிரூபணமாக உள்ளது.

துதியின் பாடல் (வசனங்கள் 13, 14)

அந்த வேளையில், படைப்பு யாவும் துதியின் பாடலில் இணைந்தது: "அப்பொழுது, வானத்திலும் பூமியிலும் பூமியின்கீழுமிருக்கிற சிருஷ்டிகள் யாவும், சமுத்திரத்திலுள்ளவைகளும், அவற்றுளடங்கிய வஸ்துக்கள்யாவும் ..." (வசனம் 13அ). கவிதைத்துவமான இந்த மொழிநடையானது, எங்கும் உள்ள எல்லாமும் தனது குரலை உயர்த்திற்று என்பதை வலியுறுத்தியது. கர்த்தருக்குத் துதிகளை நாம் பாடும்போது, நமது இருதயங்களும் குரல்களும், வானத்திலும் பூமியிலும் அவரை மதிக்கின்ற எல்லாருடைய குரல்களுடனும் இணைகின்றன என்பதை நாம் அறியச்செய்கிறது. உங்கள் சபைகூடுகையானது "இரண்டுபேராவது மூன்றுபேராவது ...

கூடியிரு"ப்பதாக (மத்தேயு 18:20) இருந்தாலும், நீங்கள் இந்த அகிலத்தின் மிகவும் மேன்மையான பல்லவியின் அங்கமாய் இருக்கின்றீர்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

அதிகாரம் 4ல் தேவனை நோக்கி இரண்டு பாடல்கள் பாடப்பட்டன, அதிகாரம் 5ல் இயேசுவை நோக்கி இரண்டு பாடல்கள் பாடப்பட்டன. இது ஐந்தாவது பாடலாக உள்ளது, இது தேவன் மற்றும் இயேசு ஆகிய இருவரையும் நோக்கிப் பாடப்பட்டது: *"சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும்*[46] *கனமும் மகிமையும் வல்லமையும்*[47] *சதா காலங்களிலும் உண்டாவதாக"* (வசனம் 13ஆ).

பாடகர் குழு துதிகளைப் பாடுகையில், *"அதற்கு நான்கு ஜீவன்களும் 'ஆமென்' என்று சொல்லிக் கொண்டிருந்தன"* (வசனம் 14அ): படைப்புகள் யாவும், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் ஸ்தோத்திரம் ... உண்டாவதாக" என்று கூறின, அதற்கு ஜீவன்கள், "ஆமென்" என்று கூறின. அவைகள், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் கனம் ... உண்டாவதாக" என்று கூறின, அதற்கு ஜீவன்கள், "ஆமென்" என்று கூறின. அவைகள், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக் குட்டியானவருக்கும் மகிமை ... உண்டாவதாக" என்று அறிவித்தன, அதற்கு ஜீவன்கள், "ஆமென்" என்று கூறின. அவைகள், "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் வல்லமை சதா காலங்களிலும் ... உண்டாவதாக" என்று உரத்துக் கூவின, அதற்கு ஜீவன்கள், "ஆமென்" என்று கூறின. *"கர்த்தருக்கு என்றென்றைக்கும் ஸ்தோத்திரமுண்டாவதாக. ஆமென், ஆமென்"* (சங்கீதம் 89:52).

பாடல் முடிவடைகையில், இருபத்துநான்கு மூப்பர்களும் முன்பு செய்திருந்தது போலவே (4:10: 5:8), *"வணக்கமாய் விழுந்து"* (வசனம் 14ஆ) ஆராதித்தனர். *"கர்த்தரோவென்றால், தமது பரிசுத்த ஆலயத்தில் இருக்கிறார். பூமியெல்லாம் அவருக்கு முன்பாக மௌனமாயிருக்கக் கடவது"* (ஆபகூக் 2:20)!

முடிவுரை

நமது பாடல் புத்தகங்கள், வெளிப்படுத்தின விசேஷம் 5ன் வார்த்தைகள் மற்றும் உணர்வுக்கருத்தைப் பிரதிபலிக்கும் பாடல்களால் நிறைந்துள்ளன. எடுத்துக்காட்டாக, சகோதரர் டில்லிட் S. டெட்லீயின் "நீர் பாத்திரராய் இருக்கின்றீர்" என்ற அழகிய கீர்த்தனை பின்வருமாறு கூறுகிறது:

நமது மீட்பர் கிறிஸ்து துதிக்குப் பாத்திரர்;
மகிமைக்கும், கனத்துக்கும் வல்லமைக்கும் பாத்திரர்!
நம் யாவரின் ஆத்துமாவின் ஆராதனைக்குப் பாத்திரர்,
நீர் பாத்திரர்! நீர் பாத்திரர்!

ஐசுவரியம், ஆசீர்வாதம், கனத்திற்குப் பாத்திரர்,
ஞானம், மகிமை, பலத்திற்குப் பாத்திரர்!
பூமியின், வானத்தின் நன்றிக்குப் பாத்திரர்,
நீர் பாத்திரர்! நீர் பாத்திரர்![48]

அதிகாரம் 5ன் பாடகர்களினுடைய உற்சாகத்துடன் நாம் இதைப் போல் பாடுகின்றோமா? அதிகாரம் 5ன் பாடலானது யோவானை ஆசீர்வதித்திருக்க வேண்டியதுபோல் இந்தப் பாடல்கள் நம்மை ஆசீர்வதிக்கின்றனவா? புரூஸ் மட்ஸ்ஜெர் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> சர்வவல்லமையுள்ள தேவன் மற்றும் ஆட்டுக்குட்டியானவர் ஆகியோருடைய நற்தன்மை மற்றும் இரக்கம் ஆகியவற்றின் மகிமையுள்ள இந்த உறுதிப்பாடுகள் யோவானின் செவிகளில் ரீங்காரமிட்ட வேளையில், பின்வரும் அதிகாரங்களில் விவரிக்கப்பட்டபடி, உலகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்ட பயங்கரங்கள் இருந்தபோதிலும், அவரால் தைரியத்துடன் சகித்திருக்க முடிந்தது.[49]

ஜிம் மெக்குய்கன் அவர்கள், "நாம் பாடுகின்ற மற்றும் ஜெபிக்கின்றவற்றில் பாதியை மட்டுமாவது நீங்களும் நானும் நம்பினால், நமது வாழ்விலும் நாம் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையிலும் கிறிஸ்து ஒரு வேறுபாட்டை ஏற்படுத்தியாக வேண்டும்" என்று வலியுறுத்தினார்.[50]

வெளிப்படுத்தின விசேஷம் 5ல் விளக்கப்படுத்தப்படுகிற, மீட்பைப் பற்றிய மாபெரும் சத்தியங்களை நீங்கள் நம்புகின்றீர்களா? நீங்கள் நம்பினால், உங்கள் வாழ்வை உங்களுக்காக "அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவருக்கு" ஒப்புக்கொடுக்க வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்.[51] அவருக்கு உங்களையே கொடுத்தல் என்பது இந்த வாழ்வில் உங்களை ஆசீர்வதிக்கும்; பின்பு ஒருநாளில் நீங்கள் பலத்த பாடகர்குழுவுடன் நின்று, "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் ஸ்தோத்திரமும் கனமும் மகிமையும் வல்லமையும் சதா காலங்களிலும் உண்டாவதாக" என்று பாடமுடியும்!

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

வெளிப்படுத்தின விசேஷம் 5ன் மீதான பெரும்பான்மையான பிரசங்கங்கள் (இந்த அதிகாரத்தில் உள்ளது போலவே) இயேசுவை மையங்கொண்டுள்ளன. இந்த அதிகாரத்தின் எளிமையான பிரிவுகள் பின்வருமாறு: (1) மீட்பர் நாடப்பட்டார் (வசனங்கள் 1-4), (2) மீட்பர் விவரிக்கப்பட்டார் (வசனங்கள் 5-7), (3) மீட்பர் துதிக்கப்பட்டார் (வசனங்கள் 8-14). மெர்ரில் C. டென்னீ அவர்கள் இந்த அதிகாரத்திற்கு "ஆட்டுக்குட்டியானவரும் புத்தகமும்" என்று தலைப்பிட்டு, பின்வரும் வரைக்குறிப்பைக் கருத்தாகத் தெரிவித்தார்: (1) விளக்கப்படுத்தப்பட்ட

பிரச்சனை (வசனங்கள் 1-4), (2) உயர்த்தப்பட்ட நபர் (வசனங்கள் 5-7), (3) விளக்கப்படுத்தப்பட்ட துதிகள் (வசனங்கள் 8-14).[52] *வார்ரென் வயர்ஸ்ப் அவர்களின் "மீட்பரை ஆராதியுங்கள்" என்ற எடுத்துரைப்பில், அவர் தமது அறிமுகவுரையில் வசனங்கள் 1முதல் 4வரையுள்ள பகுதியைக் கூறிமுடித்து, பின்பு எஞ்சியுள்ள வசனப்பகுதிகளைப் பின்வருமாறு வரைக்குறிப்பிட்டார்; (1) அவர் யாராயிருக்கின்றார் என்பதினிமித்தம் (வசனங்கள் 5-7), (2) அவர் எங்கிருக்கின்றார் என்பதினிமித்தம் (வசனம் 6), (3) அவர் என்ன செய்கின்றார் என்பதினிமித்தம் (வசனங்கள் 8-10), (4) அவர் என்ன கொண்டுள்ளார் என்பதினிமித்தம் (வசனங்கள் 11-14). பின்வரும் மிகவும் பொதுவான வரைக்குறிப்பையும் வார்ரென் அவர்கள் முன்வைத்துள்ளார்: (1) முத்திரையிடப்பட்ட புத்தகம் (வசனங்கள் 1-5), (2) அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் (வசனங்கள் 6-10), (3) சத்தமிடும் சேனைகள் (வசனங்கள் 11-14).*[53]

அதிகாரம் 5ல் உள்ள பாடல்களைப் பற்றிப் பிரசங்கித்தல் என்பது இயேசுவை மையங்கொண்ட இன்னொரு அணுகுமுறையாக உள்ளது. இந்தப் பிரசங்கத்திற்கு "நமது மீட்பராகிய கிறிஸ்து துதிக்குப் பாத்திரராய் இருக்கின்றார்" என்று தலைப்பிடப்படலாம். கிறிஸ்துவின் வாழ்வில் இருந்து விவரிப்புகள் இந்த எடுத்துரைப்பில் பின்னப்படலாம்.

"குறைவாகப் பயணம் செய்யப்பட்ட சாலையொன்றை" மேற்கொள்வதை நீங்கள் விரும்பித் தேர்ந்து கொண்டால், யோவானின் கண்ணீரைச் சித்தரியுங்கள்: "கண்ணீர் யாவையும் தேவன் துடைத்துப்போடுவார்." இப்படிப்பட்ட பிரசங்கம் பின்வருபவற்றை வலியுறுத்த முடியும்: (1) யோவான் எதற்காக அழுதார்? நாம் எதற்காக அழுகின்றோம்? (2) யோவானின் கண்ணீரைத் தேவன் எவ்வாறு உலரச் செய்தார்? நமது கண்ணீரை அவர் எவ்வாறு உலரச் செய்கின்றார்?

குறிப்புகள்

[1]Merrill C. Tenney, quoted by Warren W. Wiersbe in *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 566. [2]Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), viii. [3]"த்திலே" ("in") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *epi* என்ற வார்த்தையானது "on" அல்லது "upon" என்று அர்த்தப்படக்கூடிய கிரேக்க முன்னிடைச் சொல்லாக உள்ளது. இது, தரிசனத்தில் புத்தகச்சுருள் தேவனுடைய நீட்டப்பட்ட கரத்தில் இருந்தது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. [4]இன்னும் சிலகாலத்திற்குப் பின்பு வரை, பக்கங்கள் கொண்ட புத்தகங்கள் பொதுவான பயன்பாட்டில் இருந்ததில்லை. பல மொழிபெயர்ப்புக்களில், வெளிப்படுத்தின விசேஷம் 5:1ல் "புத்தகச்சுருள்" என்றே உள்ளது, இவற்றில் James Moffatt, *The New Testament: A New Translation* (New York: Harper & Brothers Publishers, n.d.) என்ற புத்தகமும் உள்ளடங்குகிறது. [5]இது நமக்கு, எசேக்கியேல் 2:9, 10ல் உள்ள புத்தகச்சுருளை நமக்கு நினைவுபடுத்துகிறது, ஆனால் எசேக்கியேல் 2ன் புத்தகம் வெளிப்படுத்தின விசேஷம் 10:2ல் உள்ள "சிறிய புத்தகம்" என்பதற்குச் சிறப்பான இணைவாக உள்ளது. [6]நாம் அனேகமாக, வெளிவிளம்பில்

ஏழு முத்திரைகளைக் கொண்ட புத்தகச்சுருள் ஒன்றைக் கற்பனை செய்ய வேண்டும். அந்தப் புத்தகச்சுருளானது ஏழு தனித்தனித் தாள்களைக் கொண்டதாக, அவை ஒவ்வொன்றும் தனித்தனியே முத்திரையிடப்பட்டதாக இருந்திருக்கவும் சாத்தியக்கூறு உள்ளது. விஷயம் இப்படியிருந்தால், ஏழாவது தாள் மேலே சுருட்டப்பட்டு முத்திரையிடப்பட்டிருக்கும், ஆறாவது தாள், ஏழாவது தாளைச் சுற்றிச் சுருட்டப்பட்டு முத்திரையிடப்பட்டிருக்கும், இன்னும் இதுபோல் மற்ற தாள்களும் சுருட்டப்பட்டு முத்திரையிடப்பட்டிருக்கும். இப்படிப்பட்ட ஒரு ஏற்பாடானது, முதல் முத்திரை உடைக்கப்பட்டபோது செய்தியின் முதல்பாகம் வெளியாக்கப்பட்டது எவ்வாறு என்பதை நாம் கற்பனை செய்வதைச் சுலபமாக்குவதாக இருக்கும், ஆனால் இந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளுதல் என்பது சில அசௌகரியங்களைக் கொண்டுள்ளது: இது புத்தகச்சுருளைத் தயாரிக்கும் வழக்கமான வழிமுறையாக இருந்ததில்லை; விஷயம் இப்படி இருந்திருந்தால், யோவான், வெளியே இருந்ததான ஒரே ஒரு முத்திரையை மாத்திரமே கண்டிருப்பார். [7]முத்திரை என்பது கையெழுத்துப்பிரதியின் உள்ளடக்கங்களைப் பாதுகாத்தது, இது மருந்துப்புட்டியில் உள்ளவற்றை அதன்மீதுள்ள முத்திரை பாதுகாப்பது போன்றதாக இருந்தது: முத்திரை உடைந்திருந்தால், அதில் உள்ளவற்றைப் பற்றி நாம் எச்சரிக்கையாய் இருக்கின்றோம். முத்திரைகளின் முக்கியத்துவம் பற்றிய கூடுதலான கலந்துரையாடலை, இந்தப் புத்தகத்தில் இனிவரும் "புயலின் மையத்தில் அமைதி" என்ற பாடத்தில் 7:3க்கான விளக்கங்களில் காணவும். [8]இந்தப் புத்தகச்சுருளின் இருபுறமும் எழுதப்பட்டு பின்பு இது ஏழு முறை முத்திரையிடப்பட்டிருந்தது என்ற உண்மையானது, வெளிப்படுத்தின விசேஷத்தின் நிறைவான தன்மையைப் பற்றிச் சுட்டிக் காண்பிப்பதாகவும் இருக்கலாம். ஆண்டுகளினூடே, மனிதர்கள் பலர், விசேஷித்த (கூடுதலான) வெளிப்படுத்து தல்களைப் பெற்றதாக உரிமைகோரியுள்ளனர் - ஆனால் இவைகள், தேவனுடைய நிறைவுபெற்ற (மற்றும் முடிக்கப்பட்ட) வெளிப்படுத்துதலுடன் கூட்டுவதாகவே இருக்கும் (22:18, 19ஐக் காணவும்). [9]இந்தப் புத்தகச்சுருள் ஒரு உயிலாக இருந்தது என்பது அதிக ஆர்வத்திற்குரிய கருத்தாக உள்ளது - ஏனென்றால் ரோமர்களின் உயில்கள் ஏழு முத்திரைகளினால் முத்தரிக்கப்பட்டன. வெளிப்படுத்தின விசேஷம் என்பது இயேசுவின் கடைசி உயில் மற்றும் ஏற்பாட்டின் பாகமாக இருப்பதால், இந்தக் கருத்து ஓரளவு பாராட்டத்தக்கதாக உள்ளது. இருப்பினும், அந்த ஒப்பீட்டைப் பரிசுத்த ஆவியானவர் தமது சிந்தையில் கொண்டிருந்தார் என்றால், அவர் அதை முற்றிலுமாக எடுத்தாளவில்லை. (See Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series [Austin, Tex.: R. B. Sweet Co., 1965], 55-56.) [10]ஏழாவது முத்திரை உடைக்கப்பட்டபோது, ஏழு எக்காளங்கள் முழங்கின. ஏழாவது எக்காளம் முழங்கினபோது, ஏழு கலசங்கள் ஊற்றப்பட்டன. ஏழு முத்திரைகளும் உடைக்கப்பட்டதன் விளைவாக, செய்தி யாவும் வெளிப்படுத்தப்பட்டது; ஆகையால், ஏழு முத்திரைகளுடன் இருந்த புத்தகச்சுருள் எல்லாச் செய்தியையும் கொண்டிருந்தது. இதைப் பற்றிய மற்ற கலந்துரையாடலுக்கு, இந்தப் புத்தகத்தில் இனிவரும் "கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது" என்ற பாடத்தில் காணவும்.

[11]*The Amplified Bible* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1965). [12]"வானத்திலாவது, பூமியிலாவது, பூமியின்கீழாவது" என்ற சொல்லாக்கமானது, "எங்கும் இருக்கும் எவரொருவரும்" புத்தகத்தைத் திறக்க முடியாதிருந்தது என்பதை மாத்திரம் வலியுறுத்திற்று. (வசனம் 3ஆ வை பிலிப்பியர் 2:10ஆ உடன் ஒப்பிட்டுப் பார்க்கவும்.) [13]"பூமியின் கீழ்" என்பது, மரித்தவர்கள் நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருக்கும் இடமான பாதாள (காணப்படாத) உலகத்தைக் குறித்தது. இயேசு மரித்தபோது, அவரது ஆத்துமா தற்காலிகமாகப் பாதாளத்திற்குச் சென்றது

(நடபடிகள் 2:31); ஆனால் பிற்பாடு புதிய ஏற்பாட்டில், உண்மையில் அவர் "பூமியின் கீழ்" இருந்தார் என்று கூறப்பட்டது (எபேசியர் 4:9ஐக் காணவும்). வெளிப்படுத்தின விசேஷம் 5:3ல் AB வேதாகமத்தில், "under the earth [in the realm of the dead, Hades]" என்றுள்ளது. [14]எடுத்துக்காட்டாக, யோவேல் 2:12; மாற்கு 14:72; பிலிப்பியர் 3:18 ஆகிய வசனங்களைக் காணவும். நாம், மிகவும் அடிக்கடி, தனிச்சிறப்பு எதுவுமற்றவற்றைக் குறித்து அழுது, நித்திய விளைவு பற்றிய விஷயங்கள் குறித்து அசைவற்றவர்களாக இருந்து விடுகின்றோம். [15]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 28. [16]"வேர்" என்ற சொற்றொடர் துணை மறைக்கருத்து ஒன்றையும் கொண்டுள்ளது. (1) "வேர்" என்ற வார்த்தை, "ஆதார மூலம்" என்பதையும் குறிப்பிடமுடியும். "இயேசுவின் மனிதத்துவத்தைப் பொறுத்தமட்டில், அவர் தாவீதிற்குள் தமது வேர்களைக் கொண்டிருந்தார் ... ; ஆனால் இயேசுவின் தெய்வீகத்துவத்தைப் பொறுத்தமட்டில், அவர் தாவீதுக்கு வேராயிருந்தார்" (Wiersbe, 584). (2) "வேர்" என்ற வார்த்தை ஏசாயா 53:2 ஐ நமக்கு நினைவூட்டுகிறது: "வறண்ட நிலத்திலிருந்து துளிர்க்கிற வேரைப் போலவும் ... எழும்புகிறார்." இயேசு பிறந்தபோது, தாவீதின் சந்ததியார் அரியணையில் வீற்றிருந்து பல ஆண்டுகள் ஆகியிருந்தது; தாவீதின் வம்சவழியானது மிகவும் தாழ்ந்து போயிருந்தது. [17]விசேஷமாக, உங்கள் உரையைக் கேட்பவர்கள் இயேசுவின் வம்சவழி பற்றி அறியாதவர்களாய் இருந்தால், யாக்கோபுவில் இருந்து இயேசு வரையிலும் உள்ள தலைமுறைகளைக் காண்பிக்கும் வரைவட்டவணை ஒன்றை நீங்கள் முன்வைக்க விரும்பலாம்: யாக்கோபு யூதா ஈசாய் தாவீது இயேசு. (மத்தேயு 1:1-16ஐக் காணவும்.) [18]"அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற" என்பது, அந்த ஆட்டுக்குட்டி கொல்லப்பட்டதா இல்லையா என்று கேள்வியொன்று இருந்தது என்று அர்த்தப்படுவதில்லை. வசனங்கள் 9, 12 ஆகியவை "வண்ணமாயிருக்கிற" என்ற வார்த்தைகள் இன்றி "அடிக்கப்பட்ட" என்ற வார்த்தையைக் கொண்டுள்ளன. "அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற" என்பது, ஆட்டுக்குட்டியானவர் அடிக்கப்பட்டிருந்தபடியால், அவர் அடிக்கப்பட்ட வண்ணமாய்க் காணப்பட்டார் என்று மாத்திரம் அர்த்தப்படுகிறது. [19]கிரேக்க மொழியில் நேரடியாக, "அரியணையின் மத்தியில்" என்றே உள்ளது. இந்தச் சொல்லாக்கமானது, அரியணையில் இருந்தவருடன் ஆட்டுக்குட்டியானவர் கொண்டிருந்த நெருக்கத்தன்மையை வலியுறுத்துகிறது. [20]Jimmy Adcox, "Victory Through Surrender," *Harding University Lectures* (1992): 89.

[21]W. E. Vine, Merrill F. Unger, and William White, Jr., *Vine's Complete Expository Dictionary of Old and New Testament Words* (Nashville: Thomas Nelson Publishers, 1985), 342. [22]Adcox, 89. அச்சிட்ட பிரசங்கப்பள்ளி மாணவர்களுக்கான குறிப்பு: நன்கு அறியப்பட்ட அமெரிக்க நாட்டுக் குழந்தைப் பாடல் ஒன்று, "Mary had a little lamb; its fleece was white as snow" என்று தொடங்குகிறது. "மரியாளின் சிறு ஆட்டுக்குட்டி" என்பது சொற்களில் விளையாடுதலாக உள்ளது, இது இயேசுவையும் அவரது தாயாகிய மரியாளையும் குறிக்கிறது. [23]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 52. [24]Adapted from Adcox, 89. [25]இயேசு பரிசுத்த ஆவியை "பூமியெங்கும்" அனுப்புகின்றார் என்று குறிப்பிடுதலானது, அவர் அப்போஸ்தலர்களுக்குப் பரிசுத்த ஆவியை அனுப்பு தலுக்கான ஒரு குறிப்பாக உள்ளது (யோவான் 14:16, 17, 26; 15:26; 16:7-14; நடபடிகள் 1:8; 2:1-4, 16, 17, 33; 1 கொரிந்தியர் 2:10), எனவே அவர்கள் "உலகமெங்கும் போய் சுவிசேஷத்தை அறிவித்தல்" என்ற பிரதான கட்டளையை (மாற்கு 16:15) நிறைவேற்ற முடிந்தது. பரிசுத்த ஆவியானவர், அப்போஸ்தலர்களை, "பாவத்தைக்குறித்தும், நீதியைக்குறித்தும், நியாயத்தீர்ப்பைக்குறித்தும், உலகத்தைக்

கண்டித்து உணர்த்து”வதற்கான (யோவான் 16:8) வல்லமையுள்ளவர்களாக்குவார். [26]பரிசுத்த ஆவியானவர் இயேசுவின் கண்களாய் இருக்கின்றார் என்று பேசப்பட்டுள்ள உண்மையானது, தேவத்துவத்தின் இவ்விரு உறுப்பினர்களுக்கும் இடையில் உள்ள நெருங்கிய உறவை மறைமுகமாய் எடுத்துரைக்கிறது: இயேசு தமது பூமிக்குரிய ஊழியத்தின்போது, “ஆவியை அளவில்லாமல்” கொண்டிருந்தார் (யோவான் 3:34); பிலிப்பியர் 1:19ல் பரிசுத்த ஆவியானவர் “இயேசுகிறிஸ்துவினுடைய ஆவி” என்று அழைக்கப்பட்டுள்ளார் (நடபடிகள் 16:7). [27]கிரேக்க மொழியில் நேரடியான அர்த்தத்தில், “அவர் வந்து [அதை] எடுத்துக்கொண்டுள்ளார்” என்றுள்ளது. இது, இந்த நிகழ்ச்சியானது உண்மையில் கடந்த காலத்தில் நடைபெற்றிருந்தது என்பதை அடையாளப்படுத்திற்று என்று சுட்டிக் காண்பிக்கிறது. இதேபோன்று தானியேல், “மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர்” நீண்ட ஆயுசுள்ளவரிடத்தில் வந்தது பற்றிய தரிசனத்தைக் கண்டிருந்தார் (தானியேல் 7:13), இது இயேசு தாம் பரத்துக்கேறின பின்பு மகிமையடைதலைக் குறிக்கிறது என்று பெரும்பாலான கல்வியாளர்கள் ஒப்புக்கொள்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷம் 5:7 அனேகமாக அதே நிகழ்ச்சியைக் குறிப்பிடலாம். [28]“சுரமண்டலம்” என்று இவ்விடத்தில் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை *kithara* என்பதாக உள்ளது, இதிலிருந்தே நாம், “*guitar*” என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். புதிய ஏற்பாட்டின் காலத்தில், இவ்வார்த்தை “ஒரு தம்புராவை அல்லது சுரமண்டலத்தை குறிப்பிட்டது” (Vine, 527). [29]“பரிசுத்தவான்” ["saint"] என்ற வார்த்தை “பரிசுத்தமான ஒருவர்” அல்லது “பிரித்து எடுக்கப்பட்டவர்” என்று அர்த்தப்படுகிறது. இவ்வசனப் பகுதியில் உள்ள இவ்வார்த்தையை SEB வேதாகமம், “the holy people” என்று மொழிபெயர்த்துள்ளது. “பரிசுத்தவான்” என்ற வார்த்தை “பாவமற்ற ஒருவர்” என்று அர்த்தப்படுவதில்லை. “பரிசுத்தவான்கள்” என்பது கிறிஸ்தவர்களுக்கு, பலவீனமான மற்றும் பாவம் நிறைந்த கிறிஸ்தவர்களுக்குக் கூட, இன்னொரு இயற்பெயராக உள்ளது (1 கொரிந்தியர் 1:1, 2ஐக் காணவும்). [30]மூப்பர்கள் இதற்கு முன்பு, அரியணையில் இருந்தவருக்கு முன்பாக விழுந்து வணங்கியதைப்போலவே (4:10), இப்போது “ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக விழுந்து” வணங்கினர். தேவன் ஒருவர் மாத்திரமே தொழுதுகொள்ளப்பட வேண்டியவராய் இருக்கின்றார் என்பதால் (19:10; 22:8, 9), இது இயேசுவின் தெய்வீகத்துவத்திற்கு இன்னொரு நிரூபணமாக உள்ளது.

[31]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 61. [32]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 80. [33]பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் பலவற்றில், இவ்விடத்தில் படர்க்கைப் பெயர்ச்சொல்லுக்குப் பதிலாக, தன்மைப் பெயர்ச்சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது (தமிழ் மொழிபெயர்ப்பிலும் இவ்வாறே உள்ளது: “எங்களை ... நாங்கள் ... அரசாளுவோம்”). இவ்விடத்தின் சந்தர்ப்பப் பொருளானது படர்க்கைப் பெயர்சொல்லுக்குப் பதில் தன்மைப் பெயர்ச்சொல்லையே ஏற்புடையதாக்குகிறது என்று சில கல்வியாளர்கள் நம்புகின்றனர். [34]மேசியா வரும்போது “புதிய பாடல்” பாடப்படுவது பற்றிப் பழைய ஏற்பாடு பேசிற்று (எடுத்துக்காட்டாக, ஏசாயா 42:8-10ல்). [35]வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில், “கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலும்” என்ற சொற்றொடர், மனிதகுலம் யாவற்றையும், பற்றிப் பேசுவதற்குப் பயன்படுத்தப் பட்டுள்ளது. (நான்கு சொற்றொடர்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன - “நான்கு” என்பது வானவியல் எண்ணாக, படைப்பின் எண்ணாக உள்ளது.) உதாரணத்திற்கு, 7:9; 11:9; 13:7; 14:6 ஆகிய வசனங்களைக் காணவும். ஒவ்வொரு முறையும் வித்தியாசப்பட்ட வரிசைமுறை/ஒழுங்கமைவு முறை பயன்படுத்தப் பட்டுள்ளது,

இது இந்தப் புத்தகத்தின் வியூகத்துவமான வடிவமைப்பிற்கு இன்னொரு உதாரணமாக உள்ளது. [36]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் 1:6ன் மீதான விளக்கங்களைக் காணவும். [37]ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கை எழுத்தாளர்களுக்கு, "அவர்கள் ஆளுகை செய்வார்கள்" என்பதில் பயன்படுத்தப்பட்டுள்ள எதிர்கால வினைச்சொல்லானது, பூமியின்மீது கிறிஸ்து எதிர்காலத்தில் ஆளுகைசெய்வார் என்பதற்கான "ஆதாரமாக" உள்ளது, அந்த வேளையில் (அவர்களின் போதனைப்படி) கிறிஸ்தவர்களும் அவருடன் ஆளுகை செய்வார்கள். இவ்விடத்தில் பல விளக்கங்கள் முறையானவைகளாக உள்ளன: (1) இவ்வசனப்பகுதியில், வசனரீதியான பிரச்சனைகள் எழும்புகின்றன, மற்றும் கல்வியாளர்கள், இதில் நிகழ்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட வேண்டுமா அல்லது எதிர்கால வினைச்சொல் பயன்படுத்தப்பட வேண்டுமா என்பதில் பிரிவுபட்டுள்ளனர். எடுத்துக்காட்டாக, NASB வேதாகமம் எதிர்கால வினைச்சொல்லைக் கொண்டிருக்கையில், அதன் முந்திய பதிப்பு (ASV வேதாகமம்) நிகழ்கால வினைச்சொல்லைப் பயன்படுத்தியது. (2) எதிர்கால வினைச்சொல் பயன்படுத்தப் பட்டிருப்பினும்கூட, இது கிறிஸ்தவர்கள் இப்போது ஆளுகை செய்கிறதில்லை என்று நிரூபிப்பதில்லை. G. B. கெயர்டு அவர்கள், "கிறிஸ்தவர்களின் ஆளுகை என்பது எதிர்காலத்திற்குரியதாக உள்ளது என்ற எந்த ஆலோசனையும் ... கருத்திற்கு அப்பாற்பட்டதாக உள்ளது, ஏனெனில் அவர்கள் ஏற்கனவே இராஜாக்களும் ஆசாரியர்களுமாயிருக்கிறார்கள் என்று நமக்கு இருமுறை சொல்லப்பட்டிருக்கிறது (*A Commentary on the Revelation of St. John The Divine* [London: Adam & Charles Black, 1966], 77). ஜிம் மெக்குய்கன் அவர்கள், கிறிஸ்தவர்கள் ஆசாரியர்களாய் இருப்பதைப்பற்றி 20:6ல் எதிர்கால வினைச்சொல் உபயோகப்படுத்தப் பட்டிருப்பதைச் சுட்டிக் காட்டினார், பின்பு அவர், "அவர்கள் ஏற்கனவே ஆசாரியர்களல்ல என்று அது அர்த்தப்படுகிறதா? என்று கேட்டார். அது அப்படி அல்ல, அது இயேசுவுடன் அவர்களின் உறவு முறையானது மரணத்தினாலோ அல்லது உபத்திரவத்தினாலோ துண்டிக்கப்பட முடியாதது என்று கிறிஸ்தவர்களுக்கு உறுதியளிக்கும் யோவானின் வழிமுறையாய் இருக்கிறது" (*The Book of Revelation*, Looking Into The Bible Series) [Lubbock, Tex.: International Biblical Resources, 1976], 93). (3) உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் இப்போது ஆளுகை செய்து கொண்டிருக்கின்றனர் ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்?" என்ற பாடத்தில் 1:5, 6க்கான குறிப்புகளைக் காணவும்), அவர்கள் மரணத்திற்குப்பின் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருக்கையில் தொடர்ந்து ஆளுகை செய்வார்கள் (20:4-6), மற்றும் பின்பு, கர்த்தருடன் நித்தியம் முழுவதிலும் ஆளுகை செய்வார்கள் என்று வெளிப்படுத்தின விசேஷம் போதிக்கிறது (22:5). [38]"Myriads" என்பது மூலவசனத்தில் பயன்படுத்தப்பட்ட வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது, இது "எண்ணற்ற" (அல்லது "எண்ணிக்கையற்ற") என்பதற்கான கிரேக்க வார்த்தையின் மாறுபாடாக உள்ளது. [39]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்திலுள்ள "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தில் "பத்து" என்ற எண்ணின் அடையாளத்துவ முக்கியத்துவம் பற்றிய கலந்துரையாடலைக் காணவும். [40]"வேதாகமம் தூதர்கள் பாடுவதைப் பற்றி ஒருக்காலும் பேசுவதில்லை" என்று சிலர் போதிக்கின்றனர் என்ற உண்மை இருந்தபோதிலும், "அவர்களின் பாடல்" என்று கூறுவதற்கு நான் தயங்குவதில்லை. இந்த நிலைப்பாட்டைப் பற்றிக்கொண்டிருப்பவர்கள், வசனம் 12 "பாடுதல்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "கூறுதல்" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகிற உண்மையைச் சுட்டிக்காண்பிக்கின்றனர். இரு உற்றுநோக்கல்கள் இங்கு முறையாக உள்ளன: (1) எதையேனும் "கூறுதல்" என்பதற்கும் "பாடுதல்" என்பதற்கும்

சிறிதளவே வித்தியாசம் உள்ளது - இது குரல் மாறுபாடு மற்றும் இசை நயம் ஆகியவற்றில் உள்ள சிறிய வேறுபாடாகவே உள்ளது (இது பாடுதலின் சிலவடிவங்களில் இல்லாமல்கூட உள்ளது). (2) வசனம் 9ல் "பாடினார்கள்" என்ற வார்த்தையும் "கூறினார்கள்" என்ற வார்த்தையும் (ஆங்கில வேதாகமத்தில்) ஒன்றுக்குப் பதில் ஒன்றாகப் பயன்படுத்தப் பட்டுள்ளன: "And they *sang* a new song, *saying*, ..."

[41]*எடுத்துக்காட்டாக, மத்தேயு 1:20; 4:11; 24:31; 28:2; லூக்கா 1:11, 26; 2:9-14; 15:10; 16:22; யோவான் 20:12; நடபடிகள் 8:26; 10:3 ஆகிய வசனங்களைக் காணவும்.* [42]*"பெலம்" (அல்லது* "strength"; KJV*) என்பது* "power" *என்ற அதிகாரத்தின் சொல்விளக்கத்தில் இருந்து மாறுபடுகிறது, அதில் வல்லமையை வெளிப்படுத்துவதாக இருக்கிறது. அதிகாரம் இருந்தும் அதைப் பயன்படுத்தாத நிலை இருக்கச் சாத்தியக்கூறுள்ளது.* [43]*"மகிமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள oxa என்ற கிரேக்க வார்த்தையில் இருந்தே நாம்* "doxology" *என்ற வார்த்தையைப் பெற்றுள்ளோம், இது "மகிமையின் வார்த்தை" என்ற நேரடியான அர்த்தம் உடையதாக உள்ளது.* "Doxology" *என்பது தேவனுடைய மகிமையைத் துதிக்கிற பாடல் ஒன்றைப் பொதுவாகக் குறிப்பிடுகிறது.* [44]*"ஸ்தோத்திரம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையில் இருந்து நாம்* "eulogy" *என்ற வார்த்தையைப் பெறுகின்றோம், இது "ஒரு நல்ல வார்த்தை" என்று நேரடியாக அர்த்தப்படுகிறது. இவ்வார்த்தை துதியையோ அல்லது ஆசீர்வதித்தலையோ குறிப்பிடக்கூடும் என்பதால், இவ்விடத்தில் சில மொழிபெயர்ப்புக்களில் "துதி" என்றுள்ளது.* [45]*கிரேக்க வசனத்தில், ஏழு பண்புகளுடன் ஒரே ஒரு திட்டவட்டச் சுட்டுச்சொல்* ("the") *மாத்திரம் பயன்படுத்தப்பட்டுள்ளது, இது இந்த ஏழு பண்புகளும் ஒருசேர எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்று சுட்டிக் காண்பிக்கிறது. பட்டியலிடப்பட்டுள்ள ஒவ்வொரு பண்பும் புதிய ஏற்பாட்டில் வேறிடங்களில் இயேசுவுக்குக் குறிப்பிடப்பட்டுள்ளது.* [46]*கிரேக்க வசனத்தில், இந்தப் பட்டியலில் உள்ள நான்கு விஷயங்கள் ஒவ்வொன்றிற்கு முன்பாகவும் திட்டவட்டச் சுட்டுச்சொல்* ("the") *உள்ளது, இது தேவனும் இயேசுவும் மாத்திரமே துதிக்கப்படத் தகுதிவாய்ந்தவர்கள் என்று கருத்துத் தெரிவிக்கிறது. இந்தப் புத்தகத்தில் முன்பு குறிப்பிட்ட 4:11க்கான குறிப்புகளைக் காணவும்.* [47]*"வல்லமை" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது, வசனம் 12ல் "அதிகாரம்" மற்றும் "பெலம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தைகளைப்போன்ற அர்த்தம் கொண்டுள்ளது. இது அதிகாரத்தைத் தொடர்ந்து செயல்படுத்துதல் என்பதைக் குறிக்கிறது.* [48]Tillit S. Teddlie, "Worthy Art Thou," *Songs of Faith and Praise*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1994). [49]Metzger, 54. [50]McGuiggan, 90.

[51]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், கேட்பவர்கள் ஞானஸ்நானம் பெறும்படி (மாற்கு 16:16) அல்லது மீளக்கட்டுவிக்கப்படும்படி (யாக்கோபு 5:16) வேண்டிக்கேட்டுக்கொள்ளுங்கள்.* [52]Tenney, 25-29. [53]Warren W. *Wiersbe*, *Wiersbe's Expository Outlines on the New Testament* (Wheaton, Ill.: Victor Books, 1992), 809-12.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *யோவான் கண்ட புத்தகத்தை/புத்தகச் சுருளைப் பற்றி விவரிக்கவும், ஒவ்வொரு விபரத்திற்கும் சாத்தியக்கூறுள்ள தனிச்சிறப்பைப் பற்றிக் கலந்துரையாடவும்.*
2. *இந்தப் பாடத்தின்படி, முத்திரையின் மூன்று நோக்கங்கள் யாவை?*
3. *இந்தப் பாடத்தின்படி, முத்திரையிடப்பட்ட புத்தகம் என்பது என்னவாக இருந்தது? அதில் அடங்கியிருந்த செய்தி என்ன?*
4. *யோவான் அழுதது ஏன் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? நாம் அழ வேண்டிய வேளை உள்ளதா?*
5. *"யூதா கோத்திரத்துச் சிங்கம்" "தாவீதின் வேர்" என்ற சொற்றொடர் களின் அர்த்தம் என்ன? இந்தப் பட்டப் பெயர்கள் யாருக்குப் பயன்படுத்தப்படுகின்றன?*
6. *யோவான் கண்ட ஆட்டுக்குட்டியானவரைப் பற்றி விவரிக்கவும், ஒவ்வொரு விபரத்திற்கும் சாத்தியக்கூறுள்ள தனிச்சிறப்பைப் பற்றிக் கலந்துரையாடவும்.*
7. *அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் என்ற அடையாளத்துவம், தேவனுடைய வழிகள் நம்முடைய வழிகள் அல்ல என்பதை நமக்கு எவ்வாறு நினைவூட்டுகிறது? நாம் தெய்வீக வல்லமையைவிட மனித பலத்தையும் ஞானத்தையும் சார்ந்திருக்கச் சாய்கின்றோமா?*
8. *வெளிப்படுத்தின புத்தகத்தில் தூபவர்க்கம் பற்றிக் குறிப்பிடுதல் என்பது, கிறிஸ்தவ ஆராதனையில் நாம் தூபவர்க்கத்தைப் பயன்படுத்தவேண்டும் என்று நிரூபிக்கிறதா? வெளி. புத்தகத்தில் சுரமண்டலங்களைப் பற்றிக் குறிப்பிடுதல் என்பது, கிறிஸ்தவ ஆராதனையில் நாம் சுரமண்டலங்களை இசைக்க வேண்டும் என்று நிரூபிக்கிறதா?*
9. *அதிகாரம் 5ன் மூன்று மாபெரும் பாடல்களைப் பற்றிச் சிந்தித்துத் தியானிக்கவும். அவற்றைப் பாட முயற்சி செய்யவும். அவை ஒவ்வொன்றிற்கும் மெட்டு ஒன்றை ஏற்படுத்தவும். அந்த மெட்டு இசையற்றதாக இருந்தாலும் அதைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம். ஆராதனையின் பாடலினுடைய மெட்டு என்பது தற்செயலானதாக உள்ளது; அதன் வார்த்தைகளே முக்கியமான வைகளாக உள்ளன.*
10. *இந்த மூன்று பாடல்களில் நீங்கள் தனிப்பட்ட வகையில் உணருகின்ற மிகவும் குறிப்பிடத்தக்க சத்தியங்கள் யாவை?*



ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்டிருந்த
புத்தகச்சுருள் (5:1)

அடிக்கப்பட்ட வண்ணமாயிருக்கிற ஒரு
ஆட்டுக்குட்டி *(5:6)*

முத்தரிக்கப்பட்ட புத்தகச்சுருளும்
அடிக்கப்பட்டவண்ணமாயிருந்த
ஆட்டுக்குட்டியும் *(5:1-7)*

21

இடிமுழக்கக் குளம்பொலிகள்

[6:1–8]

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் உருவகமும் சொல்லாக்கமும் மேற்கு உலகத்தின் சொல்லாடலின் பாகமாகியுள்ளன. உதாரணத்திற்கு, "இறைவெளிப்பாடு" என்ற வார்த்தையைப் பற்றி நினைத்துப் பாருங்கள். "மாபெரும் அல்லது முழுமையான பேரழிவு"[1] என்பது பிரபலமான விளக்கமாக உள்ளது, மற்றும் பகட்டான சொல்லணிச் சிறப்பைக் கொண்ட செய்தித்தாள்கள் இந்த வார்த்தையை அந்தக் கருத்திலேயே தங்களின் தலைப்புச் செய்திகளில் பயன்படுத்துகின்றன. அழிவின் தீர்க்கதரிசிகள் உலகத்தின் முடிவைப் பற்றி முன்னுரைக்கையில் "இறைவெளிப்பாடு" என்ற வார்த்தையைப் பயன்படுத்துகின்றனர்.

"அர்மகெதோன்" என்பது அடிக்கடி கேட்கப்படக் கூடிய இன்னொரு வார்த்தையாக உள்ளது, இது "வானவியல் கலகம்" அல்லது "நன்மை மற்றும் தீமை ஆகியவற்றின் சக்திகளுக்கு இடையிலான கடைசி யுத்தம்" என்றுகூட நினைக்கப்படுகிறது. அணு உட்கரு யுத்த வியூகம் பற்றிய புத்தகம் ஒன்று *The Wizards of Armageddon* என்று அழைக்கப்பட்டது. "Millennium" என்ற இன்னொரு வார்த்தைகூட வெளிப்படுத்தின விசேஷத்தில் இருந்து எடுத்துரைக்கப்படுவதாக உள்ளது, இது "ஆயிரம் ஆண்டுகள்" என்று அர்த்தப்படுகிறது. இந்த வார்த்தையானது இருபத்தியோராம் நூற்றாண்டை நெருங்கிய வேளையில் பொதுவான பயன்பாட்டில் இருந்தது. இந்தச் சொற்றொடர் அடிக்கடி பாவம்நிறைந்த மிகைக்கூற்றுக்களை உரித்தாக்கிற்று.

வெளிப்படுத்தின விசேஷம் 6ல் உள்ள நான்கு குதிரை வீரர்கள் என்பது வெளிப்படுத்தின விசேஷத்தில் நன்கு அறியப்பட்ட அடையாளங்களில் ஒன்றாக உள்ளது. உலகத்தின் சுய அழிவுமிகுந்த நடைபாவனைகளைப் பற்றி எச்சரிப்பதற்கு, பில்லி கிரஹாம் என்பவர் ஒரு புத்தகத்தை எழுதியபோது, அதை அவர் "*Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse*" ["அணுகும் குளம்பொலிகள்: இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்கள்"] என்று அழைத்தார். வின்சென்ட் பிளாஸ்கோ - இபெனெஸ் என்பவரின் புகழ்பெற்ற, யுத்தத்திற்கு எதிரான நாவல் (பிற்பாடு திரைப்படம்), *The Four Horsemen of the Apocalypse* [இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்கள்] என்று தலைப்பிடப்பட்டது. இப்படிப்பட்ட பணிகள், நான்கு குதிரை வீரர்களைப் பற்றிய தவறான புரிந்துகொள்ளுதலைப் பிரதிபலிக்கிறது, ஆனால் இவைகள், இந்த உருவகம் இன்னமும் நவீனமான சிந்தைகளில் பேசுகிறது என்ற உண்மையை

விவரிக்கிறது. புரூஸ் மெட்செஜெர் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

> வெளிப்படுத்தின விசேஷத்தின் சில அதிகாரங்கள் நமது காலத்தைப் பற்றி நேரடியாகப் பேசுகின்றன ... புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் நாம், இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களில் உலகில் பவனிவருவது பற்றி வாசிக்கின்றோம் மற்றும் கேட்கின்றோம்.[2]

இந்தப் பாடத்தில் நாம், யோவானின் நாட்களில் இந்த நான்கு குதிரை வீரர்களின் சாத்தியமான அர்த்தங்கள் பற்றி ஆராய விரும்புகின்றோம். அடுத்த பாடத்தில் நாம், இந்தப் பவனியாளர்கள் நமது நாட்களில் ஏதேனும் முக்கியக் கருத்தைக் கொண்டுள்ளனரா என்பது பற்றிக் கலந்துரையாடுவோம்.

எதிர்பார்ப்பு

அரியணையில் வீற்றிருப்பவரிடத்தில் இருந்து முத்திரையிடப்பட்ட புத்தகத்தை ஆட்டுக்குட்டியானவர் வாங்கிக்கொள்ளுதல் என்பதே அதிகாரம் 5ல் முக்கியத்துவப்படுத்தப்பட்ட நிகழ்ச்சியாக இருந்தது (5:7). 6:1ல் யோவான், "ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக்கண்டேன். அப்பொழுது நான்கு ஜீவன்களில் ஒன்று[3] என்னை நோக்கி: நீ வந்து பார்[4] என்று இடிமுழக்கம்போன்ற சத்தமாய்ச் சொல்லக் கேட்டேன்" என்று கூறினார்.

யோவான், அந்தப் புத்தகச்சுருளில் எழுதப்பட்டிருந்தவற்றை தாம் வாசிப்பார் என்றோ அல்லது யாரேனும் ஒருவர் அதன் வார்த்தைகளைத் தமக்கு வாசித்துக் காண்பிப்பார் என்றோ நினைத்து இருக்கலாம். வாசித்தல் அல்லது வாசிக்கக் கேட்டல் என்பதற்குப் பதிலாக, குதிரைகள் தாவிவருவதைக் காட்சியில் அவர் கண்டார். அந்தப் புத்தகச்சுருளானது, யோவானின் தரிசனத்தில் பக்கத்திற்குப் பக்கம் படங்களைக் கொண்டிருந்து தானே புரளுகிற சித்திரத் தொகுதியாயிற்று.[5] நான் ஒரு சிறுபையனாக இருந்தபோது சாதாரணமாகக் கிடைத்த ஒரு புத்தகம் என் நினைவுக்கு வருகிறது. இவ்வகையான புத்தகங்கள் ஒவ்வொன்றும் அதன் பக்கங்களின் மூலைகளில் கேலிச்சித்திரங்களின் வரிசைத்தொடர் ஒன்றைக் கொண்டிருக்கும். பக்கங்கள் (வேகமாய்த்) திருப்பப்படும்போது, அந்தக் கேலிச்சித்திரங்கள் உயிர்பெற்று இருப்பவைகள் போலக் காணப்படும்.

முதல் நான்கு முத்திரைகளின் அடையாளத்துவம், சில அம்சங்களில் அந்த நாட்களில் இருந்த யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்களுக்கு நன்கு பழக்கமானதாக இருந்தது. குதிரை என்பது வழக்கமாக யுத்தத்தின் சிந்தனைகளைத் தட்டியெழுப்பிற்று. "குதிரை என்பது யுத்தத்தின் மிருகமாய் இருந்தது: காளைகள் பண்ணை வேலைக்கும், கழுதைகள் போக்குவரத்துக்கும், குதிரைகள் யுத்தத்திற்கும் பயன்படுத்தப்பட்டன."[6] குதிரைகளின் எண்ணிக்கையும் அவைகளின் மாறுபட்ட நிறமும்கூட,

பழைய ஏற்பாட்டில் ஒரு மாற்றுப்பிரதியைக் கொண்டிருந்தன. சகரியா 1:8-10 மற்றும் 6:1-7 வசனப்பகுதிகள், தேவனுடைய ஊழியத்தில் பயன்படுத்தப்பட்ட நான்கு விதமான நிறம்கொண்ட குதிரைகளைப் பற்றிக் கூறுகிறது. இருப்பினும் சகரியாவின் புத்தகத்தில் உள்ள குதிரைகளுக்கும் வெளிப்படுத்தின விசேஷம் 6ல் உள்ள குதிரைகளுக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வேறுபாடுகளைக் காணமுடியும்.[7] கடைசி ஆய்வில், இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்களும் தனிச்சிறந்தவர்களாய் இருந்தனர்.

செயல்பாடு!

வெற்றி (6:1, 2)

முதலாம் முத்திரை உடைக்கப்பட்டபோது, யோவான் "ஒரு வெள்ளைக்குதிரையைக் கண்டேன், அதின்மேல் ஏறியிருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான், அவனுக்கு ஒரு கிரீடங் கொடுக்கப்பட்டது,[8] அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்" என்று எழுதினார் (வசனம் 2). ("முதலாம் குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தச் சவாரிசெய்பவர் ஒரு வில்லைப் பிடித்திருந்தார், இது இராணுவ பலத்தை அடையாளப்படுத்தும் ஒரு ஆயுதமாயிருந்தது (சங்கீதம் 46:9; எரேமியா 51:56; எசேக்கியேல் 39:3, 9; ஓசியா 1:5 ஆகிய வசனங்களைக் காணவும்). இந்த முதல் முத்திரையின் பெரும்பாலான அடையாளத்துவம் வெற்றியின் ஆய்வுக்கருத்தை எடுத்துரைக்கிறது: "பழங்காலத்தவர்களின் மத்தியில், வெள்ளைக்குதிரை என்பது வெற்றியை அடையாளப் படுத்திற்று."[9] இதில் சவாரி செய்தவருக்குக் கொடுக்கப்பட்ட கிரீடம், ஆளுகை செய்யும் கிரீடம் (diadema) அல்ல, ஆனால் வெற்றியின் கிரீடம் (stephanos) என்பதாக இருந்தது.[10] மேலும், "ஜெயிக்கிறவன்" மற்றும் "ஜெயிப்பவன்" என்ற வார்த்தைகள் nike ("வெற்றி") என்பதின் வினைவடிவில் இருந்து வந்துள்ளன.

வெற்றிகரமாக சவாரிசெய்யும் இவரை அடையாளப்படுத்துவது என்பது நமக்குச் சாத்தியமானதாக உள்ளதா? நான்காவது குதிரை வீரர் "மரணம்" (6:8) என்று அடையாளப்படுத்தப்பட்ட உண்மையானது, சவாரிசெய்யும் ஒவ்வொருவருக்கும் பொதுவான பெயர்ப்பட்டியொன்று தரப்படமுடியும் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. விஷயம் இப்படியிருந் தால், "வெள்ளைக் குதிரையின்மீது சவாரிசெய்பவர் யாரை அல்லது எதைக் குறிப்பிட்டார்?" என்று நாம் கேட்கின்றோம்.[11]

பல ஆண்டுகளுக்கு முன்பு நான், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தைப் பற்றிப் போதிக்கத் தொடங்கியபோது, சவாரி செய்யும் இவர் இயேசுவாகவே இருந்தார் என்று நிச்சயமாயிருந்தேன். அதிகாரம் 19ல் கிறிஸ்து வெள்ளைக் குதிரையின்மீது தோன்றுகின்றாரே. இந்தக் கண்ணோட்டம் ஒரு பலத்த பின்பற்றுதலைக் கொண்டுள்ளது, இது

சரியானதாக இருக்கலாம்;[12] *ஆனால் காலம் கடந்தபோது, நான் பிராங்க் பேக் அவர்களால் விளக்கப்பட்ட அதே முடிவை அடைந்தேன்: "இந்தக் குதிரைக்கும் சவாரி செய்பவருக்கும், 19:11ல் விவரிக்கப்படுகிற குதிரையின் மீது சவாரிசெய்பவருக்கும் இடையில் உள்ள ஒரே ஒற்றுமையாக உள்ளது … குதிரையின் நிறம் என்பது மட்டுமேயாகும்."*[13] *சில நேர்மாறுகளை ஆழ்ந்து சிந்தியுங்கள்:*

முதல் குதிரை வீரர் (வெளிப்படுத்தின விசேஷம் 6:2)	***இயேசு*** (வெளிப்படுத்தின விசேஷம் 19:11-16)
ஒரு கிரீடம்	*பல கிரீடங்கள் (வசனம் 12)*
வெற்றி கிரீடம் (stephanos)	*ஆளுகைசெய்யும் கிரீடம் (diadems) (வசனம் 12)*
வில் வைத்திருந்தார்	*பட்டயம் வைத்திருந்தார் (வசனம் 15)*
மூன்று குதிரை வீரர்களால் தொடரப்பட்டார்	*பரலோக சேனையினால் தொடரப் பட்டார் (வசனம் 14)*
பெயரிடப்படவில்லை	*பெயரிடப்பட்டார் (வசனங்கள் 11-13, 16)*
உடையைப் பற்றிக் குறிப்பிடப்படவில்லை	*இரத்தத்தில் தோய்க்கப்பட்ட உடையணிந்தவர் (வசனங்கள் 13, 16)*
வெற்றி அடைதல்	*நீதியைச் சரிக்கட்டுகின்றவர் (வசனங்கள் 11, 15)*

சந்தர்ப்பப்பொருளானது, முதலாம் குதிரைவீரர் என்பவர், பூமியின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட அழிவுசக்திகளின் அத்தியாவசியமான பாகமாக மற்றும் மூன்று குதிரைவீரர்களுடனும் அடையாளப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாக உள்ளது. பின்வரும் கருத்தைச் சற்றே சிந்தியுங்கள்: நான்கு குதிரை வீரர்களும், நான்கு ஜீவன்களினால் ஒரேவகையில் அறிமுகப்படுத்தப்பட்டனர். (நான்கு ஜீவன்களும் மற்ற முத்திரைகள் எதையும் அறிமுகப்படுத்தவில்லை.) நான்கு குதிரை வீரர்களும் ஒருவர் பணிக்கு மற்றவர்கள் துணையாயிருக்கும்படிக்கு ஒரு குழுவாகச் செயல்பட்டனர் என்பது உறுதி. மற்றும், "நான்கு" என்பது வானவியல் எண்ணாக[14] *- இந்தப் பூமிக்குத் தொடர்புடைய எண்ணாக - உள்ளது என்ற உண்மையானது, இந்த நான்கு குதிரை வீரர்களும் பூமியின் பேரழிவில் ஈடுபட்டிருந்தனர் என்ற கருத்தைத் தெரிவிக்கிறது.*[15]

அதிகாரம் 6ல் வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவர், அதிகாரம் 19ல் வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவருக்கு (கிறிஸ்துவுக்கு) நேர்மாறாக இருத்தலை நோக்கங்கொண்டிருந்தார் என்ற கருத்திற்கு நான் இணங்குகின்றேன்;[16] *அதிகாரம் 6ல் வரும் குதிரைவீரர் வெற்றிகொள் பவராகத் தோற்றமளித்தார்,*[17] *ஆனால் இயேசுவே உண்மையான வெற்றி யாளராக இருப்பார்.*[18]

நான் சரியான கருத்துக் கொண்டிருந்தால், இந்த முதலாம் குதிரைவீரர்மீது என்ன பெயர்ப்பட்டி இடப்படலாம்? "ஏகாதிபத்தியம்" அல்லது "பெருவிருப்பம்" ("பேராசை") என்று பெயரிடப்படுதல் பற்றிய

கருத்து என்ன?[19] இன்னொருவருக்குரியதின்மீது ஒரு குழு கொள்ளுகின்ற இச்சையினால், அடிக்கடி உலகளாவிய விரோதம் உந்தி இயக்கப்படுகிறது. பேராசை என்பது எவ்வித மாறுபாடும் இன்றி, எதிர்ப்பைச் சந்திக்கிறது மற்றும் கலகத்தை விளைவிக்கிறது. விரோதத்தின் - அது உலகளாவியதோ, நாடளாவியதோ அல்லது தனிப்பட்டதோ, எதுவாயிருப்பினும் அதன் - ஆதாரமூலத்தைப் பற்றி யாக்கோபு பேசியபோது, அவர் "உங்களுக்குள்ளே யுத்தங்களும் சண்டைகளும் எதினாலே வருகிறது, உங்கள் அவயவங்களில் போர்செய்கிற இச்சைகளினாலல்லவா?" என்று எழுதினார் (யாக்கோபு 4:1). இவ்விதமாக முதல் குதிரை வீரர், இரண்டாவது குதிரை வீரருக்குக் காட்சியை அமைத்தார்.

கொந்தளிப்பு/கலவரம் (6:3, 4)

> அவர் இரண்டாம் முத்திரையை உடைத்தபோது, இரண்டாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். அப்பொழுது சிவப்பான[20] வேறொரு குதிரை புறப்பட்டது, அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு, பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச்[21] சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது: ஒரு பெரிய பட்டயமும்[22] அவனுக்குக் கொடுக்கப்பட்டது (வசனங்கள் 3, 4). ("இரண்டாவது குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவர் யார் என்பது பற்றிய நமது கருத்தில் நாம் ஒருமையின்றி இருக்கலாம், ஆனால் இந்த இரண்டாவது வீரருக்குப் பெயரளித்தல் பற்றி நாம் இடர்ப்பாடு எதுவும் கொண்டிருப்பதில்லை: இவர் இரத்தம்போன்று சிவப்பான குதிரையின்மீது சவாரி செய்தார், இவர் பூமியிலிருந்து சமாதானத்தை துரத்திவிட்டார், இவர் மனிதர்கள் தனிப்பட்ட விரோதத்துடன் ஒருவரையொருவர் கொலை செய்யும்படி தூண்டிவிட்டார், மற்றும் ரோமச் சேனையினால் பிரபலமாக்கப்பட்டிருந்த மரணத்திற்கு ஏதுவான பட்டயம் ஒன்றை அவர் உயர்த்திப் பிடித்திருந்தார்.

இவர் நாடுகளை/மக்களினங்களைப் பேரழிவுக்கு உட்படுத்துகின்ற கொடுமையும் இரத்ததாகமும் உடைய குதிரை வீரராய் இருக்கின்றார், இவர் குடும்பவட்டாரங்களில் வெறுமையான இடத்தை விட்டுச்செல்லுகின்ற, தாய்மார்களின் இருதயங்களை உடைக்கின்ற நபராய் இருக்கின்றார். இது பிள்ளைகள் மற்றும் ஒன்றும் அறியாத பிறர் உட்படப் பல்லாயிரக் கணக்கானவர்களை அழிக்கின்ற யுத்தமாக[23] உள்ளது.

சோதனைகள் (6:5, 6)

பொருளாதார சிரமம் என்பது யுத்தத்தினால் ஏற்படும் தவிர்க்க இயலாத விளைவாக உள்ளது.[24] எனவே மூன்றாவது குதிரை வீரர் அனுப்பப் பட்டார்:

அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது, மூன்றாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லக்கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, ஒரு கறுப்புக் குதிரையைக்[25] கண்டேன், அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான். அப்பொழுது, ஒரு பணத்துக்கு ஒருபடி[26] கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு[27] மூன்றுபடி வாற்கோதுமையென்றும், எண்ணெயையும் திராட்சரசத்தையும் சேதப்படுத்தாதே என்றும், நான்கு ஜீவன்களின் மத்தியிலிருந்து உண்டான சத்தத்தைக் கேட்டேன் (வசனங்கள் 5, 6). ("மூன்றாவது குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தக் குதிரை வீரர், குதிரை வீரர்களுக்கு வழக்கமற்ற ஒரு கருவியைக் கையில் பிடித்திருந்தார்: முதலாம் குதிரை வீரர் ஒரு வில்லைப் பிடித்திருந்தார், இரண்டாம் குதிரை வீரர் ஒரு பட்டயத்தைப் பிடித்திருந்தார், ஆனால் இந்தக் குதிரைவீரர் ஒரு *தராசைத் தன் கையிலே* பிடித்திருந்தார் - இது இங்கு குறிப்பிடப்பட்ட தானியத்தை நிறுப்பதற்கானது என்பது உறுதி. ஒருவரின் உணவை நிறுக்க வேண்டியதின் அவசியம், எல்லைக்குட்பட்ட விநியோகத்தை மறைமுகமாய்க் குறிப்பிட்டது (லேவியராகமம் 26:26; எசேக்கியேல் 4:16 ஆகிய வசனங்களைக் காணவும்). குறைந்தபட்சம், சராசரி மனிதனுல் பெறக்கூடிய அளவானது, எல்லைக்கு உட்படுத்தப்பட்டது - இது, "ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமையென்றும்" என்ற கூற்றினால் சுட்டிக்காண்பிக்கப்படுகிறது.

பணம் (தினேரியம்) என்பது சாதாரணத் தொழிலாளியின் ஒருநாள் கூலியாக இருந்தது (மத்தேயு 20:2ஐக் காணவும்), மற்றும் ஒருபடி கோதுமை என்பது "ஒரு நபருக்கு ஒரு நாளில் சாதாரணமாய் ஏற்படும் பசியைத் தணிக்கப் போதுமானதாக" இருந்தது.[28] இவ்விதமாக, இங்கு சித்தரிக்கப்பட்டுள்ள இடர்ப்பாடு மிகுந்த காலத்தில், ஒரு தொழிலாளி தான் உண்பதற்குப் போதுமான கோதுமையை வாங்கக் கூடிய அளவுக்கு மாத்திரமே சம்பாதிக்க முடிந்தது - அவரது குடும்பத்திற்கு ஏதொன்றும் மிச்சப்படுவதில்லை. குடும்பங்களைக் காப்பாற்ற வேண்டிய நிலையில் இருந்த மனிதர்கள், வாற்கோதுமையை வாங்கிக் கொள்ள வேண்டியதாய் இருந்தது. வாற்கோதுமை என்பது விலங்குகளால் அல்லது விலங்குகள்போல் வாழும்படிக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களால் மாத்திரம் பயன்படுத்தத் தகுதியானது என்று கருதப்பட்ட ஒரு முரட்டுத்தன்மை கொண்ட தானியமாக இருந்தது[29] - ஆனால் இது விலைமலிவானதாக இருந்தது: அதாவது, ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை கிடைத்தது.

பழங்கால எழுத்தாளர்களின் கூற்றுப்படி, இங்கு குறிப்பிடப்பட்ட விலைகள், கோதுமை மற்றும் வாற்கோதுமை ஆகியவற்றின் சாதாரண விலையைக் காட்டிலும் எட்டு முதல் பதினாறு மடங்கு வரை அதிகமானவைகளாயிருந்தன. வரம்புமீறிய பணவீக்கம் என்பதே இங்கு சித்தரிக்கப்பட்டுள்ளது.

ஒலிவ எண்ணெய் மற்றும் திராட்சரசம் போன்ற மற்ற உணவுப் பொருட்களைப் பற்றிய விஷயம் என்ன? சாதாரணக் குடிமகன் இவற்றை வாங்க இயலாதிருந்தது[30] - இது அனேகமாக, "எண்ணெயையும் திராட்சரசத்

தையும் சேதப்படுத்தாதே"[31] என்ற ஒளிவுமறைவான கட்டளையின் தனிச்சிறப்பாயிருக்கலாம்.

மூன்றாவது குதிரைவீரர் பூமியின்மீது முழக்கமிட்டு வந்தபோது, ஒரு சாதாரணத் தொழிலாளி தன் குடும்பத்திற்கு, உடை, வீடு அல்லது வாழ்வின் மற்ற தேவைகள் எதுவும் நிறைவுசெய்யாமல் விடப்பட்டு, அதற்கு உணவளிப்பதற்காக மாத்திரமே, சூரிய உதயத்திலிருந்து சூரிய அஸ்தமனம் வரையிலும் உழைக்க வேண்டியிருந்தது! அவனது பரிதபிக்கப்படத்தக்க நிலையை அடையாளப்படுத்துவதற்கு, உங்கள் ஊதியம் உயராதிருக்கும் நிலையில், பலசரக்குப் பொருட்களும் மற்ற அத்தியாவசியப் பொருட்களும் 1,600 சதவிகிதம் விலை உயர்ந்தால் எப்படியிருக்கும் என்று கற்பனை செய்துபாருங்கள்!

உபத்திரவம் (6:7, 8)

யுத்தத்தின் பின்விளைவுகளை நாம் இன்னும் முழுமையாகப் பார்த்து முடிக்கவில்லை, நான்காவது குதிரைவீரர் இன்னும் வரவேண்டியிருந்தது, இவர் மங்கின நிறமுள்ள குதிரையின்மீது சவாரி செய்யும், பயங்கரத்திற் குரியவராய் இருந்தார்:

> அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது: நீ வந்துபார் என்று சொல்லுஞ் சத்தத்தைக் கேட்டேன். நான் பார்த்தபோது, இதோ, மங்கின நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன், அதின்மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர், பாதாளம் அவன்பின் சென்றது. பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படியான[32] அதிகாரம் அவைகளுக்குக் கொடுக்கப்பட்டது (வசனங்கள் 7, 8). ("நான்காவது குதிரை வீரன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

நான்காவது வீரரின் வாகனமானது பயங்கரத்திற்குரிய நிறம் கொண்டதாக இருந்தது. "மங்கின" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள *chloros* என்ற வார்த்தை, "பச்சை" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையாக உள்ளது. இந்தக் குதிரை "மங்கின பச்சை நிறமுள்ளதாக," அழுகிப்போன மாம்சத்தின் வர்ணம்போல் இருந்தது.

பச்சைக் குதிரையின்மீது மரணம் என்ற பயங்கரமானவர் சவாரி செய்தார், மற்ற வீரர்களினால் விடப்பட்டிருந்தவர்களைக் கூட்டிச் சேர்த்தல் என்பதே இவரது பணிப்பொறுப்பாக இருந்தது. மரணத்திற்குப் பின்னால் நெருக்கமாக, பாதாளம் இருந்தது, இது உருவமற்ற ஆவிகளின் தங்குமிடமாகும்.[33] பாதாளத்தை "ஐந்தாவது குதிரைவீரர்" என்றோ அல்லது தனிப்பட்ட உயிர்ப்பொருள் என்றோ நினைக்காதீர்கள். வெளிப்படுத்தின விசேஷத்தில் பாதாளம் என்பது எப்போதுமே மரணத்துடன் இணையாகக் கூறப்பட்டுள்ளது (1:18; 20:13, 14). இவ்விரண்டும் ஒன்றாய் செயல்பட்டன, மரணம் உடலை உரிமை கோருகையில், பாதாளம் ஆத்துமாவை உரிமை கோரிற்று.

மரணம் என்பது, முக்காடிட்ட ஒரு மண்டையோட்டு முகத்துடன் சவாரி செய்வதாக அடிக்கடி சித்தரிக்கப்படுகிறது. பாதாளம் என்பது, திறந்த கல்லறையாக அல்லது தடுமாறும் உயிரினம் ஒன்று "நொண்டிக்கொண்டு, தனது நிலைபிறழ்ந்த உறுப்புக்களில் ஒன்றை இழுத்துக்கொண்டு" செல்லும் நிலையில் சித்தரிக்கப்பட்டுள்ளது.[34] பாதாளத்தை நான், மரணத்திற்குப் பின்னால் நெருக்கமாக, மங்கிய நிறமுள்ள குதிரை வீரரால் விழத்தள்ளப் பட்ட யாவரையும் விழுங்குவதாக, கணத்திற்குக் கணம் சுழலும் புகை பெரியதாய் வளருவதாக நான் காண்கிறேன். இவைகள் இரண்டும் பயங்கரம் நிறைந்த இணையை ஏற்படுத்துகின்றன.

முதல் மூன்று குதிரை வீரர்களால் விடப்பட்டிருந்தவற்றைப் பயங்கரமாக அறுவடை செய்வதுடன் கூடுதலாக, மரணத்திற்கும் பாதாளத் திற்கும் "பட்டயத்தினாலும்,[35] பஞ்சத்தினாலும், சாவினாலும்,[36] பூமியின் துஷ்ட மிருகங்களினாலும்,[37] பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலைசெய்யும்படி" கூறப்பட்டது. யுத்தம் முடிந்தவுடன் யுத்தத்தின் விளைவுகள் முடிவதில்லை. வியாதிகள், பட்டினி, மற்றும் யுத்தத்தினால் பீறிப்போடப்பட்ட வன்முறை நிகழ்ச்சி போன்ற சண்டையில் இறப்பவர் களைக் காட்டிலும் கடைசிக்குண்டு வெடிக்கப்பட்ட பின்பு இறப்பவர்கள் அதிகமானவர்களாய் இருத்தல் என்பது அசாதாரணமானது அல்ல.

மரணத்தின் இந்த நான்கு முகவர்களும், எருசலேமின் பாவத்திற்காக அதைத் தண்டிப்பதற்குத் தேவனால் பயன்படுத்தப்பட்ட விஷயங்களைப் போன்றவைகளாகவே இருந்தன என்பது குறிப்பிடத்தக்கதாக இருக்கலாம். எசேக்கியேல் 14ல், கர்த்தர் தமது "பட்டயம், பஞ்சம், துஷ்டமிருகங்கள், கொள்ளை நோய் என்னும் இந்நான்கு கொடிய தண்டனைகளையும்" அனுப்பவிருந்ததாகத் தீர்க்கதரிசியினிடத்தில் கூறினார் (வசனம் 21). பாவம் என்பது தன்னிலேயே கட்டப்பட்டிருந்த விளைவுகளைக் கொண்டிருந்தது. "மனு ஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்" (கலாத்தியர் 6:7). இது மக்களினத்திற்கும் உண்மையானதாகவே உள்ளது.

நடைமுறைப் பயன்பாடு?

நான்கு குதிரை வீரர்களும் "T" என்ற பெரிய எழுத்தைக் கொண்டு Trouble (இடர்ப்பாடு) என்று குறிக்கப்படலாம் என்பது தெளிவு, ஆனால் இந்த வீரர்களைப் பற்றியும் தேவனுடைய திட்டத்தில் இவர்களுடைய நோக்கங்கள் பற்றியும் நாம் இன்னும் அதிக திட்டவட்டமானவர்களாய் இருக்க முடியுமா?

முதல் நான்கு முத்திரைகள், ரோமப்பேரரசைத் தண்டிப்பதற்கான தேவனுடைய திட்டத்தை வெளிப்படுத்துதல் என்பதை (முழுமையாக இல்லாவிட்டாலும்) அடிப்படையான நோக்கமாகக் கொண்டிருந்தன என்ற கருத்திற்குச் சிலர் இணங்குகின்றனர். துன்மார்க்கத்தின்மீதான தண்டனையை உள்ளடக்காமல் இருக்க முடியாது[38] என்றிருக்கையில், இது இந்தத் தரிசனத்தின் அடிப்படை வலியுறுத்தமாய் இருந்தது என்பதில் நான் சந்தேகம் கொள்கின்றேன்: (1) வெளிப்படுத்தப்பட்ட துன்பங்கள், உலகம்

முழுவதிலும், ரோமர்களோ கிறிஸ்தவர்களோ, எவர்களாயிருப்பினும் குதிரைவீரர்களின் கொந்தளிக்கும் பாதையில் இருந்த யாவராலும் அனுபவிக்கப்பட்டன.[39] *(2) குதிரைவீரர்களைத் தொடர்ந்து ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டது, இது வேதசாட்சிகளாக மரித்த பரிசுத்தவான்கள், "அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் ... எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?" என்று சத்தமிட்டுக் கூப்பிடுதலை வெளிப்படுத்துகிறது (6:10). இவர்கள், இந்தக் குதிரை வீரர்கள் பயணம் செய்த இரத்தக்கறை படிந்த சாலையில் கொல்லப்பட்டனர் என்று யூகித்தல் இயல்பானதாக உள்ளது.*[40] *(3) வேதசாட்சிகள் பற்றிய சித்தரிப்பைத் தொடர்ந்து ஆறாம் முத்திரை உடைக்கப்படுதல் வருகிறது (6:12-17), இது துன்மார்க்கருக்குத் தண்டனை பற்றி அக்கறையுடையதாக உள்ளது - எனவே இது, முந்திய முத்திரைகள் வேறுசிலவற்றைக் குறிக்கின்றன என்று மறைமுகமாய் உணர்த்துகிறது.*

இவை எல்லாவற்றையும் கருத்தில் எடுத்துக்கொள்ளுகையில், நான்கு குதிரை வீரர்களுக்கும் பொதுவான விளக்கம் ஒன்று அவசியமாகிறது என்று காணப்படுகிறது - இந்த விளக்கமானது, முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களால் எதிர்கொள்ளப்பட்டிருந்த தனிப்பட்ட பிரச்சனைகளின் உண்மை நிலையுடன் உலகளாவிய துன்பத்தின் கருத்தை ஒன்றுகலந்த விளக்கமாக இருத்தல் வேண்டும். இதைப் பற்றிய எனது விளக்கம் முழுமைத் தன்மையில் இருந்து தொலைவில் உள்ளது, ஆனாலும் அதை நான் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்:

> *மனிதனுடைய பேராசை (முதல் குதிரை வீரர்), கலகம் மற்றும் சோதனைகள் (இரண்டாம் மற்றும் மூன்றாம் குதிரை வீரர்கள்) ஆகியவை உலகத்தில் கட்டவிழ்த்து விடப்பட்டிருந்தன. இந்தத் துன்பங்களுடன், பாவம் நிறைந்த உலகில் உள்கட்டமைப்பாக இருந்த உபத்திரவங்களும் (நான்காவது குதிரை வீரன்) கூடுதலாயிருந்தன.*
>
> *கலகம், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் என்பவை எல்லா மனிதர்களுக்கும் உரிய பங்குகளாய் இருக்கின்றன, ஆனால் கிறிஸ்தவர்கள் இரண்டு மடங்கைப் பெறுகின்றனர்: இயேசுவைப் பின்பற்றுபவர்கள் வாழ்வின் சாதாரண கேடுபாடுகளுக்கு ஆளாவதுடன், அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்.*

"கிறிஸ்தவர்கள் இரண்டு மடங்கைப் பெறுகின்றனர்" என்பதற்கான ஒரு விவரிப்பு என்ற வகையில், மூன்றாவது குதிரை வீரரால் நபர்த்துவப் படுத்தப்பட்ட பொருளாதாரச் சீர்குலைவை ஆழ்ந்து சிந்தியுங்கள்: "கிறிஸ்தவர்களை எதிர்த்து நின்றவர்களால் அவர்கள் தங்கள் விசுவாசத்தை விட்டு விலகும்படி வற்புறுத்துவதற்காக, அவர்களை சந்தையிடங்கள், பொருளாதார முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் ஆகியவற்றிலிருந்து விலக்கி வைத்தல் என்பது கிறிஸ்தவர்களுக்கு எதிராகப் பயன்படுத்தப்பட்ட முதன்மையான ஆயுதங்களில் ஒன்றாக இருந்தது."[41]

வெளிப்படுத்தின விசேஷத்தில் இயேசுவின் செய்தியானது முதலாவதாக மற்றும் முக்கியமாக ''தம்முடைய ஊழியக்காரருக்கு'' (1:1) என்றிருந்தபடியால் 6:1-8ல், யோவானும் மற்ற கிறிஸ்தவர்களும், தங்களை நோக்கியே இந்த நான்கு குதிரைவீரர்களும் பாய்ந்துவந்தனர், அவர்கள் தங்களை (கிறிஸ்தவர்களை) அழிப்பதையே நோக்கங்கொண்டிருந்தனர் என்று காணும்படிக்கு இயேசு விரும்பினார் என்று நான் நம்புகின்றேன்.

இந்தக் காட்சியை, இது யோவானுக்குக் காணப்பட்டபடி காட்சிப் படுத்திக் கொள்ள முயற்சி செய்யுங்கள். உங்கள் சிந்தையில், மென்மையான பந்தயக் குதிரைகளையல்ல, ஆனால் "விம்மிப் பெருத்த தொடைகளும் நெருப்பைக்கக்கும் நாசித்துவாரங்களும் கொண்டு, தங்கள் பயங்கரமான குளம்புகளைக் கொண்டு காற்றில் முன்னோக்கிப் பாய்ந்து வருகிற"[42] பெரிய அளவிலான யுத்தக்குதிரைகளைச் சித்தரித்துப் பாருங்கள். மேலும் இந்த வீரர்கள், "வரலாற்றுக் காலகட்டங்களில் வரிசையைக் குறிப்பது இல்லை"[43] என்பதையும் சிந்தையில் கொள்ளுங்கள். அவர்கள் நாள்வரிசை முறையில் தோன்றுவதற்குப் பதிலாக தர்க்கவியல் முறையில் தோன்றுகின்றனர்.[44]

பின்பு, தடதடக்கும் குளம்பொலியுடனும், பளபளக்கும் கண்களுடனும், காற்றில் பிடரிமயிர் பறக்க, குதிரையின்மேல் அமர்ந்திருப்பவர்கள் துரத்துவதால் நான்கு யுத்தக்குதிரைகள் அருகருகாகப் பாய்ந்து வந்து - உங்களை அச்சுறுத்துவதைக் கற்பனை செய்து பாருங்கள்.[45] உங்கள் சிந்தை அனுமதிக்குமென்றால், அவற்றின் குளம்புகள் உங்கள் மாம்சத்தைக் கிழித்து, உங்கள் எலும்புகளை நொறுக்கி, உங்கள் உடலில் இருந்து உயிரை நசுக்குவதற்கு முன்பு அவற்றின் நாசித்துவாரங்களில் இருந்து வரும் வெப்பமான மூச்சை உணருங்கள்.

ஏர்ல் பால்மர் அவர்கள், "இறையியல் வெளிப்பாட்டின் இந்த நான்கு குதிரைகள் மற்றும் அதன்மீது ஏறியிருந்தவர்கள் போல் அச்சுறுத்தும் பயங்கரச் சித்தரிப்பு வேறெதுவும் அனேகமாக இருப்பதில்லை'' என்று கூறினார்.[46] இதைத் தொடர்ந்து வருகிற முத்திரைகள் பற்றிய வெளிப் படுத்துதல்களை மதித்து உணருவதற்கு, அந்தப் பயங்கரத்தை நீங்கள் உணர வேண்டும். முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் இடத்தில் உங்களை வைத்து அவர்கள் வாழ்வில் இருந்த அபாயத்தை ருசிபாருங்கள்!

முடிவுரை

அடுத்த பாடத்தில் நாம், நான்கு குதிரை வீரர்கள் பற்றிய நமது படிப்பைத் தொடருவோம், அதில் அவர்கள் இன்றைய நாட்களில்கூட நமது வாழ்வில் எவ்வாறு செயல்தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர் என்பதை ஆழ்ந்து சிந்திப்போம். இருப்பினும், இந்தப் பாடத்தை முடிப்பதற்கு முன்பு, ''தேவன் கிறிஸ்தவர்களுக்கான தமது செய்தியை இப்படிப்பட்ட பயங்கரமான தரிசனத்துடன் தொடங்கியது ஏன்?'' என்று நாம் கேட்க வேண்டும். முத்திரைகள் உடைக்கப்படத் தொடங்கியபோது, சமாதானத்தின் செய்தியையே யோவான் எதிர்பார்த்து நம்பியிருந்திருக்க வேண்டும்; அதற்குப் பதிலாக அவர் பிரச்சனைகள் பற்றி நினை

வூட்டப்பட்டார். ஏன்? தேவனுடைய சிந்தையை நம்மால் அறிய இயலாது, ஆனால் இந்த நான்கு குதிரைவீரர்களை முன்னதாக அனுப்பியதற்கான சாத்தியக்கூறுள்ள சில நோக்கங்களை அறிமுகப்படுத்த என்னை அனுமதியுங்கள்.

(1) முன்வந்து கொண்டிருந்தவற்றிற்காகக் கிறிஸ்தவர்களை ஆயத்தம் செய்தல். "முன்னெச்சரிக்கை செய்தல் என்பது முன்னதாகவே ஆயுதம் தரித்திருத்தலாக உள்ளது" என்ற பழைய கூற்றை நான் ஒப்புக் கொள்கின்றேன்.

(2) தேவன் இன்னமும் கட்டுப்பாடு செலுத்துகின்றார் என்பதை வலியுறுத்துதல். இந்த எட்டு வசனங்களையும் நன்கு வாசித்து, "இங்கு வா!" மற்றும் "கொடுக்கப்பட்டது (அல்லது அனுமதிக்கப்பட்டது)" என்பது போன்ற சொற்றொடர்களை அடிக்கோடு இடுங்கள். குதிரைவீரர்கள் தங்களுக்குத் தேவன் அனுமதித்திராத எதையும் செய்யவில்லை.

(3) கிறிஸ்தவர்களின் பிரச்சனைகளைத் தேவன் எல்லைக்கு உட்படுத்துகின்றார் என்பதை வலியுறுத்துதல். 1 கொரிந்தியர் 10:13, தேவன் உண்மையுள்ள கிறிஸ்தவர்களை, அவர்களால் தாங்க இயலுகின்றவற்றிற்கு அப்பால் சோதிக்கப்பட அனுமதிப்பதில்லை என்று வலியுறுத்துகிறது. இதேபோன்ற ஒரு சிந்தனையானது 6:8ல் அடையாளத்துவமாக விளக்கப்படுகிறது, இது மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றின் அதிகாரம் "பூமியில் நான்கில் ஒரு பங்கினரை"[47] மாத்திரம் அழிக்கும் அளவுக்கு எல்லைக்கு உட்படுத்தப்பட்டது என்று கூறுகிறது. நம்மை ஒடுக்குகின்றவர்கள்மீது தேவன் எல்லைகளை வைக்கிறார்.

(4) நாம் "நல்லது" என்றோ அல்லது "மோசமானது" என்றோ நினைக்கின்றதான, நமக்கு நடக்கின்ற யாவற்றிலும் தேவன் செயல்முனைப்புடன் இருக்கின்றார் என்று போதித்தல். இது 6:1-8ன் மிகமுக்கியமான பாடங்களில் ஒன்றாக உள்ளது. தேவன் தமது நோக்கங்களை நிறைவேற்றச் செயல்பட்டுக் கொண்டிருந்தார். இதைப் பற்றி நாம், அடுத்த பாடத்திலும் அதற்கடுத்த பாடத்திலும் அதிகமாய்க் கலந்துரையாடுவோம், ஆனால் இந்த சத்தியமானது நமது படிப்பில் இருந்து ஏற்கனவே தெளிவாகியிருக்க வேண்டும். தேவன் தாம் செய்கிறது இன்னதென்று அறிகின்றார்! அவர்மீது நம்பிக்கையாய் இருக்கக் கற்றுக்கொள்ளுதல் என்பதே நமது அறைகூவலாக உள்ளது![48]

குறிப்புகள்

[1]*இந்தப் பாடத்தில் உள்ள ஆங்கில வார்த்தைகள்* American Heritage Electronic Dictionary, 3d. ed. (1992) *என்ற புத்தகத்தில் இருந்து எடுக்கப்பட்டுள்ளன. அகராதிகள் பிரபலமான விளக்கங்களைத் தருகின்றன, அவைகள் வேதாகம ரீதியானவைகளாய் இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.* [2]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 59. [3]*உயிருள்ள மற்ற ஜீவன்கள்*

"இரண்டாவது" (4:3), "மூன்றாவது" (4:5) மற்றும் "நான்காவது" (4:7) என்று அடையாளப்படுத்தப்படுவதால் இது "சிங்கத்தைப் போன்றிருந்த" (4:7) "முதலாவது" ஜீவனாக இருந்தது என்பது உறுதி. (இந்த நான்கு ஜீவன்களையும் பற்றிய விவரிப்புகளுக்கு 4:7ஐக் காணவும்.) [4]பழங்காலக் கையெழுத்துப் பிரதிகள் சிலவற்றில் "Come and see" ["வந்து பார்"] என்றுள்ளது, தமிழ் வேதாகமத்திலும் இவ்வாறே உள்ளது, இது யோவானுக்கு உரைக்கப்பட்டது என்ற கருத்தைத் தெரிவிக்கிறது. இருப்பினும் கையெழுத்துப்பிரதிகளின் முழுமையான ஆதாரமானது "வா" என்று மாத்திரமே கூறப்படுவதை ஆதரிக்கிறது, இது அனேகமாக, குதிரையின்மீது ஏறியிருந்தவர்களுக்கான ஒரு கட்டளையாக இருக்கலாம். [5]This sentence was adapted from Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 71. [6]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: HarperCollins Publishers, 1988), 74. [7]சகரியாவின் தரிசனத்தில் வந்த குதிரைகள் இரதங்களை இழுத்துச் சென்றவைகளாய் இருக்கையில், வெளிப்படுத்தின விசேஷம் 6ல் வந்த குதிரைகள் தங்கள் மீது சவாரி செய்பவர்களைக் கொண்டிருந்தன. சகரியா புத்தகத்தின் குதிரைகள் ஒரு அறிக்கையைக் கொண்டுவந்தன, வெளி. புத்தகத்தின் குதிரைகள் அழிவைக் கொண்டுவந்தன. நிறங்கள் என்பது மூன்றாவது வேற்றுமையாக உள்ளது: வெளி. புத்தகத்தில், குதிரைகளின் நிறங்கள் அவற்றின்மீது சவாரி செய்பவர்களால் விதிக்கப்பட்ட தண்டனையின் வகையை எடுத்துரைக்கிறது. [8]வசனம் 2ல் உள்ள கற்பனையானது, வில்லுகள் மற்றும் கிரீடங்கள் ஆகியவற்றுடன் சித்தரிக்கப்பட்டிருந்த பார்த்தியக் குதிரைவீரர்கள் பற்றிய விபரத்தின் எச்சமாக உள்ளது. ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "ரோமாபுரிக்கு எதிராளி: பார்த்தியா" என்ற துணைப்பாடத்தைக் காணவும்.) இது, பார்த்தியர்கள் கைகளில் ரோமாபுரி துன்பப்படும் என்ற முன்னுரைத்தலின் அடையாளத்துவமாக உள்ளது என்று சிலர் நம்புகின்றனர்; மற்றவர்கள், இந்த உருவகமானது வெற்றிகொள்ளும் எந்த ஒரு சக்தியையும் குறிப்பிடுவதாக மாத்திரம் உள்ளது - அது பார்த்தியா, ரோமாபுரி அல்லது வெற்றிகொண்ட வேறு நாடுகள் எதை வேண்டுமென்றாலும் குறிக்கலாம் - என்று நம்புகின்றனர். [9]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 64. See also James M. Efird, *Revelation for Today* (Nashville: Abingdon Press, 1989), 70. [10]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "செல்வத்துடன் இருந்த ஏழை சபை" என்ற பாடத்தில் கிரீடங்கள் பற்றிய குறிப்புகளைக் காணவும்.

[11]இந்தப் பாடத்தில் நான், வெள்ளைக் குதிரையின்மீது சவாரிசெய்பவரை அடையாளப்படுத்தும் இரண்டு சாத்தியக்கூறுகளை - அவர் இயேசுவாக இருக்கலாம் அல்லது வெற்றி/ஏகாதிபத்தியம் என்பதன் அடையாளமாக இருக்கலாம் என்பவற்றை - முன்வைத்துள்ளேன், ஏனென்றால், இவையிரண்டும் சட்டப்பூர்வமான சாத்தியக்கூறுகளாய் இருக்கின்றன என்று நான் நம்புகின்றேன். மற்ற கருத்துக்களும் தரப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, "தொடர் வரலாறு" அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றவர்கள், இந்த வீரரைக் குறிப்பான வரலாற்றுப் பாத்திரமாக அடையாளப்படுத்த முயற்சி செய்துள்ளனர். (இந்த அணுகுமுறையின் பலவீனங்கள் பற்றிய ஒரு கலந்துரையாடலுக்கு "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில் காணவும்.) "எதிர்காலவியல்" அணுகுமுறையைப் பயன்படுத்துகின்றவர்கள் (ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்கள்) இந்த வீரரை "அந்திகிறிஸ்து" என்று (இது ஒரு குறிப்பிட்ட தனிநபர் என்று அவர்கள் நினைக்கின்றனர்) பொதுவாக அடையாளப்

படுத்துகின்றனர், ஆயினும் இந்தக் கருத்தை வசனப்பகுதி எவ்விடத்திலும் ஆதரிப்பதில்லை. (எதிர்காலவியல் அணுகுமுறையின் பலவீனங்கள் பற்றி "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "நன்கு தொடங்கப்பட்டது பாதி முடிந்ததாக உள்ளது" என்ற பாடத்தில் காணவும்.) முதல் வீரரை, (இயேசுவைத் தவிர) குறிப்பிட்ட ஒரு வரலாற்றுக் கதாபாத்திரம் என்று அடையாளப்படுத்தச் செய்யப்படும் எந்த முயற்சியும், இறையியல் வெளிப்பாட்டு மொழிநடையின் இயல்பைப் புறக்கணிப்பதாக உள்ளது. [12]இந்த நிலைப்பாட்டிற்குப் பலத்த ஆதாரத்தின் சுருக்கத்தை William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 113-17 என்ற புத்தகத்தில் காணமுடியும். [13]Pack, 64. [14]"நான்கு" என்பதின் அடையாளத்துவ அர்த்தம் பற்றிய கலந்துரையாடலை, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும். [15]வெள்ளைக் குதிரையின்மீது சவாரி செய்தவர் கிறிஸ்து அல்ல என்ற கருத்தை ஆதரிக்கும் பிற விவாதங்கள் தரப்பட்டுள்ளன. உதாரணமாக, முதல் முத்திரையை உடைத்து, பின்பு உடனடியாக ஒரு வெள்ளைக் குதிரையின்மீது சவாரிசெய்தல் என்பது ஆட்டுக்குட்டியானவருக்கு (கிறிஸ்துவுக்கு) இயல்பற்ற தன்மையாக உள்ளது என்று காணப்படுகிறது. [16]அதிகாரம் 19ல் கிறிஸ்து வெள்ளைக் குதிரையில் தோன்றும் போது, "இதோ" என்ற வார்த்தையை யோவான் பயன்படுத்தினார் (வசனம் 11), இவ்வார்த்தை ஆச்சரியத்தையும் உணர்வெழுச்சியையும் குறிப்பிடுகிறது. யோவான், வெற்றிக்குதிரையின்மீது இயேசுவை மீண்டும் காண்கின்ற நிலையாக இருப்பதைக் காட்டிலும் இது, அவ்வாறு அவர் காண்பதன் முதன்முறையாக இருந்திருந்தால்தான் இவ்வாறு உணர்வெழுச்சியையும் பெரும் வியப்பையும் ஏற்படுத்தியிருக்கும் என்பது அதிகம் சாத்தியக்கூறுள்ளதாக இருக்கிறது. [17]துன்மார்க்கச் சக்திகளுக்கு வெற்றியைக் குறிப்பிடுவதில் வெளிப்படுத்தின புத்தகம் தயங்குவதில்லை (எடுத்துக்காட்டாக 13:7ஐக் காணவும்); அது குறுகியகாலமே இருந்த வெற்றி என்பதும் உண்மையே, ஆனாலும் அது வெற்றியாகவே இருந்தது. [18]எனது கண்ணோட்டத்தைக் கூறின பின்பு, முதல் குதிரை வீரர் இயேசுவா அல்லவா என்பது பற்றி இதற்கு எதிராகப் பிடிவாதமாயிருப்பது பற்றி நான் எச்சரித்தாக வேண்டும். இவ்விரண்டு நிலைப்பாடுகளுக்குமே சட்டப்பூர்வமான ஆதாரங்கள் தரப்படக்கூடும், இவ்விரு அணிகளிலுமே நல்ல மனிதர்களும் புகழ் பெற்ற கல்வியாளர்களும் உள்ளனர். ஒருவர் எந்த நிலைப்பாட்டை மேற்கொண்டாலும், அடிப்படை முடிவு என்பது பின்வரும் ஒரேவிதமானதாகவே இருக்கும்: நான்கு குதிரைவீரர்களின் தரிசனமானது, உண்மையுள்ள கிறிஸ்தவராய் இருப்பதில் உள்ள சிரமத்தை அறிவிக்கின்றன! கிறிஸ்தவர்களின்மீதான உபத்திரவம் முதல் குதிரை வீரருடன் தொடங்குகிறதா அல்லது இரண்டாம் குதிரை வீரருடன் தொடங்குகிறதா என்பதே இந்த இரு நிலைப்பாடுகளுக்கும் இடையிலான அடிப்படை வேறுபாடாக உள்ளது. [19]"ஏகாதிபத்தியம்" என்பது, ஆங்கில அகராதியில் "the policy of extending a nation's authority by territorial acquisition or by the establishment of economic and political [influnence] over other nations" என்று விளக்கப்படுகிறது [ஒரு நாடு, பிற நாடுகளின் எல்லைகளைப் பிடிப்பதால் அல்லது அவற்றின் பொருளாதார மற்றும் அரசியல் செல்வாக்குகளில் தனது அதிகாரத்தை நிலைநாட்டுவதால் தன் அதிகாரத்தை விரிவாக்கும் கொள்கை.] இருப்பினும் நான் இந்தச் சொற்றொடரைப் பயன்படுத்துவதில், ஒரு மக்களினம் அல்லது ஒரு தனிநபர் என்ற வகையில், மற்றவர்களைக் கட்டுப்படுத்துவதற்கான விருப்பம் என்பதையே என் சிந்தையில் கொண்டுள்ளேன். [20]"சிவப்பு" என்பது "நெருப்பு" என்பதற்கான கிரேக்க வார்த்தையில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. CEV வேதாகமத்தில் "fiery

red" ["நெருப்பாய்ச் சிவந்த"] என்றுள்ளது.


ரோம பட்டயம் மற்றும் உறை

[21]"கொலைசெய்ய" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது 5:6, 9, 12 வசனங்களில் "அடிக்கப்பட்ட" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையாகவே உள்ளது. CEV வேதாகமத்தில், "so that people would slaughter one another" என்றுள்ளது. [22]இவ்விடத்தில் "பட்டயம்" என்பது, 1:16 மற்றும் 2:12 வசனங்களில் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட வார்த்தையில் இருந்து மாறுபட்டதாக உள்ளது. இவ்விடத்தில் *machaira* என்ற கிரேக்க வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது, இது ரோமபடையினரால் பயன்படுத்தப்பட்ட நெருக்கமான யுத்தத்திற்கான பட்டயமாய் இருந்தது. இந்தப் பட்டயம் "பெரிய" என்று அழைக்கப்பட்டதால் இது நீளமானதாக இருந்ததென்று அர்த்தமல்ல (*machaira* வின் மாதிரிகள் பாம்ப்பியின் சிதலங்களில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இவைகள் பத்தொன்பதரை அங்குலம் நீளமும் இரண்டு அங்குலம் அகலமும் கொண்டவைகளாக மாத்திரமே உள்ளன), ஆனால் இது ரோமப் படையின் வெற்றிகளில் ஒரு பிரதான காரணியாக இருந்தபடியால் அவ்வாறு அழைக்கப்பட்டது. *Macahira* என்பது சிலர் நினைத்துள்ளதுபோல், ஆசாரியர்களால் விசேஷமாகப் பலியிடப் பயன்படுத்தப்படும் வளைவான கத்தியைக்கொண்ட பட்டயமல்ல. [23]வசனப்பகுதியானது, மனிதர்கள் "ஒருவர் மற்றவரை" கொலை செய்தல் பற்றிப் பேசுவதால், இவ்விடத்தில் உள்நாட்டு யுத்தம் விசேஷமாகக் கண்ணோக்கப்படுகிறது என்று சிலர் நினைக்கின்றனர். உள்நாட்டு யுத்தம் என்பது, சகோதரன் சகோதரனுக்கு விரோதமாக அணிவகுத்து நிற்குதல் என்ற வகையில் மிகவும் பயங்கரமான யுத்த வகையாக உள்ளது. [24]நாட்டுப்புறங்களில் வாழ்ந்து யுத்தத்தினால் சீர்குலைக்கப்பட்டுள்ளவர்கள் இந்தக்கூற்றின் உண்மைத்தன்மைக்குச் சாட்சியளிக்கக் கூடும். யுத்தமானது வேறிடத்தில் நடந்திருந்தால், ஒரு நாட்டின் பொருளாதாரமானது (மக்களில் ஒருசிலர் செல்வந்தர்களாவதைக்கொண்டு) தற்காலிகமாக மேம்பட்டு இருக்கலாம். இருப்பினும் கடைசியில் யுத்தம் பணத்தையும், காலத்தையும், முயற்சியையும், நாட்டின் உள்ளான பிரச்சனைகளைத் தீர்த்து வைப்பதில் இருந்து விலக்கிவைக்கிறது - மற்றும் நாடு துன்புறுகிறது. [25]வேதவசனங்களில் கறுப்பு நிறம் என்பது பொதுவாக, துக்கம் மற்றும் புலம்புதல் ஆகியவற்றுடன் இணைவுகொண்டுள்ளது (ஏசாயா 50:3; எரேமியா 4:28; 14:2ஆகிய வசனங்களைக் காணவும்). இந்த நிறமானது சிலவேளைகளில், இவ்வசனத்தில் உள்ளது போல், உணவுக்குறைவுடன் இணைவுகொண்டுள்ளது (எரேமியா 14:1, 2; புலம்பல் 5:10 ஆகிய வசனங்களைக் காணவும்). [26]"படி" ("measure"["அளவு"]; KJV) என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தையானது மிகச்சரியாக மொழிபெயர்க்கப்படுவதற்குக் கடினமானதாக உள்ளது. புதிய ஏற்பாடு எழுதப்பட்ட காலத்தில் புழக்கத்தில் இருந்த அளவுமுறைகள் இன்றைய நாட்களில் உள்ள அளவு முறைகளைப் போன்றே இருப்பதில்லை, மற்றும் நவீனகால அளவுமுறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடுகிறது. (எடுத்துக்காட்டாக, பிரிட்டிஷ் பேரரசின் படி என்பது அமெரிக்க நாட்டின் படி அளவு போன்றதாக இருப்பதில்லை.) நமது நோக்கங்களுக்காக, இது நீங்கள் வாழும் இடத்தில் "படி" என்று அழைக்கப்படும் அளவைவிடச் சற்றே குறைந்த அளவாக இருந்தது என்று நினைப்பது போதுமானது. [27]"பணம்" ["தினேரியம்"] என்பது கிரேக்க வார்த்தையின் ஒலிபெயர்ப்பாக உள்ளது. KJV வேதாகமத்தில் இவ்விடத்தில் "penny" என்றுள்ளது, ஆனால் NKJV வேதாகமத்தில் "denarius" என்றுள்ளது. [28]W. E. Vine, *The Expanded*

Vine's Expository Dictionary of New Testament Words, ed. John R. Kohlenberger III with James A. Swanson (Minneapolis, Minn.: Bethany House Publishers, *1984), 724.* *இந்த வார்த்தைகள் பெயரற்ற ஒரு பழங்கால அதிகாரியின், ஒருவேளை ஹெரோடொட்டஸ்ஸின் கூற்றிலிருந்து வந்த மேற்கோளாக உள்ளன.* [29]*திரளான மக்கள் கூட்டத்திற்கு இயேசு உணவளித்தபோது, அவர் ஒரு பையனின் மதிய உணவைப் பயன்படுத்தினார், அதில் வாற்கோதுமையினால் செய்யப்பட்ட அப்பங்கள் இருந்தன (யோவான் 6:9). இது அந்தப் பையனுடைய வீட்டாரின் பொருளாதார நிலையைப் பற்றிச் சிலவற்றைக் கூறுவதாக இருக்கலாம்.* [30]*இது உணவுக்குறைவினால் ஏற்பட்ட பஞ்சமாக இருந்தது இல்லை என்று காணப்படுகிறது. உணவை வாங்கக் கூடியவர்களுக்கு அது கிடைத்திருந்தது.*

[31]*இந்தக் கட்டளையானது, தரிசனத்தின் இந்தப் பாகம், எண்ணெய் மற்றும் திராட்சரசம் ஏராளமாய் இருந்தது, அதே வேளையில் தானியக் குறைவு ஏற்பட்டிருந்தது என்று சுட்டிக்காண்பித்ததாகச் சிலர் நினைக்கின்றனர். யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள் பின்வரும் பொழிப்புரையைத் தந்தார்:* "But all the oil and wine you want" [*"ஆனால் நீ விரும்புகின்ற எண்ணெய் மற்றும் திராட்சரசம் எல்லாவற்றையும்"*] *(The Message: New Testament With Psalms and Proverbs* [Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995], 618). [32]*"கொலைசெய்ய" என்ற வசனம் 8ல் மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது வசனம் 4ல் "கொலைசெய்ய" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையாக இருப்பதில்லை. (*KJV *வேதாகமத்தில் இரு வசனங்களிலும் "*Kill*" என்ற வார்த்தையே உள்ளது.) இது, இங்கு குறிப்பிடப்படுகிற மரணங்கள் மனிதகுலத்திற்குப் பொதுவாகச் செய்யப்பட்ட தவறான செயல்களினால் விளைந்தவையாக உள்ளன என்ற அளவுக்கு, அவைகள் கிறிஸ்தவர்களுக்குத் தனிப்பட்ட வகையில் தரப்பட்ட துன்புறுத்துதலின் விளைவாக இருந்தன என்று அர்த்தப்படுவதில்லை.* [33]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "கர்த்தர் அறிகின்ருர்" என்ற பாடத்தில் 1:18க்கான குறிப்புகளைக் காணவும்.* [34]Jim McGuiggan, *The Book of Revelation,* Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 102. [35]*வசனம் 8ல் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தை, வசனம் 4ல் "பட்டயம்" என்று மொழிபெயர்க்கப்பட்ட அதே வார்த்தையாக இருப்பதில்லை. (குறிப்பு எண் 22ஐக் காணவும்.) இந்தப் பட்டயம் ஒரு பெரிய யுத்தப் பட்டயமாக இருந்தது.* [36]"Pestilence" [*தமிழில் "சாவினாலும்"*] *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை "மரணம்" என்பதற்கான வார்த்தையாகவே உள்ளது. பழங்காலத்தில், "மரணம்" என்பது, மக்களில் ஏராளமானவர்களைக் கொல்லும் கொள்ளை நோய்களைக் குறிப்பிட அடிக்கடி பயன்படுத்தப்பட்டது: கறுப்பு மரணம் (பியூபோனிக் கொள்ளைநோய்), சிகப்பு மரணம் (பெரியம்மை நோய்), வெள்ளை மரணம் (எலும்புருக்கி நோய்). வசனம் 8, ஏற்கனவே "மரணம்" மற்றும் "கொலை" என்ற வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பதால், இவ்விடத்தில் "மரணம்"* [*"சாவு"*] *என்ற வார்த்தையானது அனேகமாகப் பலவகையான கொள்ளை நோய்களைக் குறிப்பிடுவதாயிருக்கலாம்.* [37]*வேதாகமம் எழுதப்பட்ட காலத்தில், நகரங்கள் அழிக்கப்பட்டபோது, காட்டுமிருகங்கள் பொதுவாகப் பெருகி, அந்தப்பகுதியை மேற்கொண்டு விடும் (எரேமியா 9:11; 10:22; 49:33; 50:39).* [38]*நாம் காணப்போகின்றபடி, ஏழு எக்காளங்கள் மற்றும் ஏழு கலசங்கள் ஆகியவற்றின் நிகழ்ச்சித் தொடர்கள் ரோமாபுரியை எச்சரிக்கவும் பின்பு அதைத் தண்டிக்கவும் பயன்படுத்தப்பட்ட ஒரேவிதமான பேராபத்துக்களாக இருந்தன.* [39]*"நான்கு" என்பது வானவியல் எண்ணாக, மனிதகுலத்தின் எண்ணாக இருக்கிறது என்பதைச் சிந்தையில் வைத்துக்*

கொள்ளுங்கள். (நான்கு என்பதின் அடையாளத்துவ அர்த்தம்பற்றிய கலந்துரையாடலை "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும்.) நான்கு குதிரைவீரர்களாலும் எல்லா மக்களும் ஒரு அளவுக்குப் பாதிக்கப்பட்டனர். [40]*6:4ல் உள்ள "கொலை" என்ற வார்த்தையானது 5:6, 9, 12ல் இயேசுவின் மரணத்தை விவரிக்கவும், 6:9ல் வேதசாட்சிகளின் மரணத்தை விவரிக்கவும் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக இருக்கிறது என்ற உண்மையானது, 6:4 வசனமானது இயேசுவைப் பின்பற்றுபவர்களாய் இருந்தவர்கள் கொல்லப்பட்டனர் என்று அர்த்தப்படுவதாக மறைமுகமாக உணர்த்தலாம்.*

[41]Efird, 71. [42]Graham, viii. [43]Eldred Echols, *Haven't You Heard? There's a War Going On! Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 72. [44]*ஏகாதிபத்தியத்தை தொடர்ந்து யுத்தம் வந்தது. யுத்தத்தைத் தொடர்ந்து பொருளாதாரச் சிரமங்கள் வந்தன, மற்றும் இன்னும் பிற.* [45]*பிரையன் வாட்ஸ் வரைந்துள்ள நான்கு குதிரைகள் பற்றிய ஒட்டு மொத்தச் சித்திரத்தை இந்த புத்தகத்தில் காணவும்.* [46]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 177. [47]*"பூமியின் காற்பங்கினர்" என்பது மக்களின் ஏராளமான எண்ணிக்கை என்பதுபோல் ஒலிக்கிறது, ஆனால் நாம் மரணத்தைப் பற்றிப் பேசுகின்றோம் என்பதைச் சிந்தையில் வைக்கவும். எல்லா மக்களுமே கடைசியில் மரிக்கின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்தின் அடையாளத்துவத்தில், "நான்கில் ஒரு பகுதி" என்பது "எல்லாரும் அல்ல" என்று விசேஷமாக அர்த்தப்படுகிறது. ("நான்கில் ஒரு பகுதி" என்பதின் அடையாளத்துவ, அர்த்தத்தைப் பற்றிய கலந்துரையாடலை, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் காணவும்.)* [48]*இந்தப் பாடத்தைப் பிரசங்கமாகப் பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் கீழ்ப்படிதலின்மூலம் தங்கள் நம்பிக்கையை வெளிப்படுத்தும்படி உற்சாகப்படுத்துங்கள் (மத்தேயு 7:21; மாற்கு 16:16; லூக்கா 6:46; நடபடிகள் 2:38).*

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *நீங்கள் செய்தித்தாள்கள் அல்லது பத்திரிகைகளில், "இறை வெளிப்பாடு," "அர்மகெதோன்," "ஆயிரம் ஆண்டுகள்" அல்லது "நான்கு குதிரைவீரர்கள்" போன்ற வார்த்தைகள் பயன்படுத்தப் பட்டிருப்பதைக் கண்டிருக்கின்றீர்களா? அச்சிடும் நிறுவனம் பொதுவாக இவ்வார்த்தைகளைச் சரியாகப் பயன்படுத்துகின்றனரா?*
2. *சகரியா 1 மற்றும் 6ன் குதிரைகளை வெளிப்படுத்தின விசேஷம் 6:1-8ன் குதிரைகளுடன் ஒப்பிடவும். இவைகள் எந்தக் கருத்தில் ஒன்றுபோல் உள்ளன? எவ்வகையில் இவை மாறுபடுகின்றன?*
3. *முதல் குதிரையின்மீது ஏறியிருந்தவர் எவ்வகையில் பார்த்தியக் குதிரை வீரரைப் போல் இருந்தார்? ("வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ரோமாபுரிக்கு எதிராளி: பார்த்தியா" என்ற*

துணைப் பாடத்தில் காணவும்.)

4. வெள்ளைக் குதிரையின்மீது இருந்தவர் கிறிஸ்து என்ற விவாதத்திற்கு ஆதரவான மற்றும் எதிரான விவாதங்களைக் கலந்துரையாடவும்.
5. "ஏகாதிபத்தியம்" என்ற வார்த்தையின்மூலம் இந்தப் புத்தகத்தை எழுதியவர் எதனை அர்த்தப்படுத்துகின்றார்? (அடிக்குறிப்பை ஆராயவும்.)
6. சிவப்புக் குதிரை மற்றும் அதன்மீது சவாரி செய்தவர் என்பவற்றினால் குறிப்பிடப்படுவது எது?
7. கறுப்புக் குதிரை மற்றும் அதன்மீது சவாரி செய்தவர் என்பவற்றினால் குறிப்பிடப்படுவது எது?
8. ஒரு "பணம்" என்றால் என்ன? "ஒரு பணத்துக்கு ஒருபடி கோதுமையென்றும், ஒரு பணத்துக்கு மூன்றுபடி வாற்கோதுமை யென்றும்" என்ற கூற்றின் மறைவான கருத்து என்ன?
9. இதில் சித்தரிக்கப்பட்ட பணவீக்கத்தை நீங்கள் எப்போதாவது அனுபவித்து இருக்கின்றீர்களா? அல்லது இதை அனுபவித்துள்ள மற்றவர்களை நீங்கள் அறிந்திருக்கின்றீர்களா? அதைப் பற்றிக் கூறுங்கள்.
10. மங்கின நிறமுள்ள குதிரை மற்றும் அதன்மீது சவாரி செய்தவர் என்பவற்றினால் குறிப்பிடப்படுவது எது?
11. மரணமும் பாதாளமும் எவ்வாறு ஒன்றிணைந்து செயல்படுகின்றன?
12. மரணம் மற்றும் பாதாளம் ஆகியவற்றினால் பயன்படுத்தப்பட்ட நான்கு முகமைகளைப் பற்றிக் கலந்துரையாடவும்.
13. எசேக்கியேல் 14:21ன் சந்தர்ப்பப் பொருளை வாசித்து, தேவனு டைய "எருசலேமுக்கு விரோதமான நான்கு கடுமையான தண்டனைகளை" விளக்கத் தயாராய் இருக்கவும்.
14. இந்தப் பாடத்தின்படி, நான்கு குதிரைவீரர்கள் பற்றிய தரிசனத்தின் பொதுவான மற்றும் திட்டவட்டமான வலியுறுத்தங்கள் யாவை?
15. இந்தப் பாடத்தின்படி, தேவன் முத்திரைகளைக் கட்டவிழ்த்தலுடன் இந்தப் பயங்கரத்தின் சித்தரிப்புகளைத் தொடங்கியது ஏன்? இதற்குச் சாத்தியக்கூறுள்ள மற்ற காரணங்களை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா?

இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்கள்

பாவம் நிறைந்த மனிதன்

(1) **வெற்றி** - ஏகாதிபத்தியத்தில் காணப்படுவதுபோல், மனிதனின் பேராசை வெற்றி பெறுதல் (மற்றவர்களின்மீது, விசேஷமாகக் கிறிஸ்தவர்களின்மீது வெற்றி பெற்றுள்ளதாகத் தோற்றம்).

(2) **கலகம்** - ஒன்றுமறியாத பலர் (விசேஷமாகக் கிறிஸ்தவர்கள்) கொலை செய்யப்படுதலுடன் இணைந்த யுத்தத்தின் வகை.

(3) **சோதனை** - கொலை செய்யப்படாதவர்கள்மீது (விசேஷமாகக் கிறிஸ்தவர்கள்மீது) பொருளாதாரச் சிரமங்கள்.

பாவம் நிறைந்த உலகில்

(4) **உபத்திரவம்** - உலகம் முழுவதும் அனுபவிக்கப்பட்ட துன்பம், இது (கிறிஸ்தவர்கள் மற்றும் கிறிஸ்தவரல்லாதவர்கள் ஆகிய இருசாராருக்குமான) இயற்கைக்கு மாறான காரணங்களினால் ஏற்பட்ட மரணத்தில் உச்சக்காட்சியை அடைந்தது.

கிறிஸ்தவர்கள் இரண்டு பங்கைப் பெறுவ து__ன்

முதலாம் குதிரை வீரன் (6:1, 2)

இரண்டாவது குதிரை வீரன் (6:3, 4)

மூன்றாவது குதிரை வீரன் (6:5)

நான்காவது குதிரை வீரன் (6:7, 8)

22

வியப்பெதுவும் இல்லை!

[6:1-8]

இது உங்கள் பிறந்த நாளாக உள்ளது, எவரொருவரும் உங்களை நினைவுகூறவில்லை என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். நீங்கள் கதவருகில் வருகின்றீர்கள், யாரோ ஒருவர், "வியப்பு!" என்று உரக்கக் கூறுகின்றார், திடீரென்று, உங்கள் நண்பர்கள் தங்கள் முகங்களில் பெரிய புன்னகை களுடன் உங்களைச் சுற்றிக் கூட்டம்கூடுகின்றனர். அது பலருக்குப் பெரியதொரு மகிழ்பொங்கும் வியப்பாயிருக்கும்.[1]

சில வியப்புக்கள் அவ்வளவு மகிழ்ச்சி நிறைந்தவையாய் இருப்ப தில்லை. நீங்கள் ஒரு புதிய வண்டியை வாங்கிச் சிலவாரங்களில் அது ஓடாது நின்று விடுகிறது. அந்த வண்டியைச் சரிபார்ப்பதற்கு சில ஆயிரம் ரூபாய்கள் செலவாகும் என்று பழுதுநீக்கும் ஒருவர் கூறுகின்றார். நீங்கள் அந்த வண்டியை வாங்கிய நிறுவனத்திற்குக் கையில் உத்தரவாத அட்டையுடன் செல்லுகின்றீர்கள். அங்குள்ளவர் புன்னகையுடன் அந்தப் பதிவேட்டில் உள்ள சிற்றெழுத்தில் அச்சிடப்பட்ட குறிப்பைச் சுட்டிக்காண்பிக்கின்றார்: அந்தக் குறிப்பிட்ட பிரச்சனை உத்தரவாதத்திற்குள் வருவதில்லை. வியப்பு!/திகைப்பு!

உங்களுக்கு உடல்நிலை சரியில்லை. அதைத் தீவிரமானதாக நீங்கள் நினைக்கவில்லை - நீங்கள் மிக விரைவில் களைப்படைந்து போகின்றீர்கள், அவ்வளவே. இருப்பினும், மருத்துவப் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என்று நீங்கள் நினைக்கின்றீர்கள். மருத்துவர் உங்களைப் பலவகையில் பரிசோதனை செய்து பின்பு ஆய்வறைக்குத் தமது முகத்தில் கவலையான பார்வையுடன் வருகின்றார். "உங்களுக்கு இரத்தப் புற்றுநோய் உள்ளது, எங்களால் உங்களுக்கு உதவக்கூடும் அல்லது கூடாதுபோகும்" என்று கூறுகின்றார். வியப்பு!/திகைப்பு!

அவ்வப்போது ஏற்படுகிற வியப்பு/திகைப்பு என்பது வாழ்வை வெறும் மந்தமாக இருப்பதில் இருந்து பாதுகாக்கிறது, ஆனால் அன்றாட நடவடிக்கைகளைப் பொறுத்தமட்டில், நம்மில் பெரும்பான்மையான வர்கள் எதை எதிர்பார்க்க வேண்டும் என்பதை அறிய விரும்புகின்றோம். பொதுவாகப் பேசுவதென்றால், வாழ்வு என்பது "வியப்பு/திகைப்பு எதுவும் அற்றதாக" இருக்க விரும்புகின்றோம்.

கிறிஸ்தவர்கள் "வியப்பெதுவும் இல்லாத" வாழ்வை - விசேஷமாக, உபத்திரவம் பற்றிய வியப்பெதுவும் இல்லாத வாழ்வை - கொண்டிருப்பது முக்கியம் என்று கர்த்தர் நினைத்தார். அவர் தமது சீஷர்கள் எதிர்கொள்ள விருந்த உபத்திரவம் பற்றித் திகைப்புக்குரிய வகையில் கபடமின்றிப்

பேசினார்:

> சகோதரன் தன் சகோதரனையும், தகப்பன் தன் பிள்ளையையும், மரணத்துக்கு ஒப்புக்கொடுப்பார்கள், பெற்றோருக்கு விரோதமாகப் பிள்ளைகள் எழும்பி அவர்களைக் கொலைசெய்வார்கள். என் நாமத்தினிமித்தம் நீங்கள் எல்லாராலும் பகைக்கப்படுவீர்கள் … (மத்தேயு 10:21, 22).
>
> பூமியின்மேல் சமாதானத்தை அனுப்பவந்தேன் என்று எண்ணாதிருங்கள், சமாதானத்தையல்ல, பட்டயத்தையே அனுப்ப வந்தேன் (மத்தேயு 10:34).[2]

பவுலும் இவ்வாறே நினைத்தார். புதிய கிறிஸ்தவர்களுக்கு அவர், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று" கூறினார் (நடபடிகள் 14:22ஆ). மேலும் அவர், "அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள்" என்று எழுதினார் (2 தீமோத்தேயு 3:12). பேதுரு, "பிரியமானவர்களே, உங்களைச் சோதிக்கும்படி உங்கள் நடுவில் பற்றியெரிகிற அக்கினியைக்குறித்து ஏதோ புதுமையென்று திகையாமல்" என்று எழுதக்கூடுமளவுக்கு (1 பேதுரு 4:12), இயேசுவைப் பின்பற்றுபவர் களுக்கு ஏற்படும் உபத்திரவம் பற்றி வேதாகமம் மிகவும் அதிகமாய்க் கூறுகிறது.

நமது முந்திய பாடத்தில், வரப்போகிற "அக்கினியாய்ப் பற்றியெரியும் கொடுமைகள்" பற்றி முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களுக்கு "வியப்பு எதுவும் இருக்கக் கூடாது" என்பது, தீமையென்று கருதப்படும் நான்கு குதிரைகள் பற்றிய தரிசனத்துடன் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் பொருளுரை தொடங்குவதற்கான சாத்தியக்கூறுள்ள காரணங்களில் ஒன்றாக இருந்தது என்று நான் சுட்டிக்காண்பித்தேன். இயேசுவுக்கு நமது வாழ்வை ஒப்புவிக்கும்போது அதில் அடங்கியுள்ளது என்ன என்பதை நாம் இன்னும் புரிந்து கொள்ள வேண்டியது அவசியமாக உள்ளது. நான்கு குதிரை வீரர்களைப் பற்றிய நமது படிப்பை, இன்றைய நாட்களின் அறைகூவல்களுக்கு விசேஷித்த நடைமுறைப் பயன்பாட்டுடன் நாம் தொடருவோம். ("நான்கு குதிரை வீரர்கள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

குதிரை வீரர்கள் தொடர்ந்து சவாரி செய்கின்றனரா?

அச்சுறுத்தும் அந்தக் குதிரை வீரர்கள், முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் நூற்றாண்டில் வெறுமனே சவாரி செய்திருக்கவில்லை என்பதைப் புரிந்துகொள்ளுங்கள். உலகத்தில் பாவம் பிரவேசித்தபோதே, இந்த நால்வரும் தங்கள் ஓட்டத்தைத் தொடங்கியிருந்தனர் (ஆதியாகமம் 3), மற்றும் அவர்கள் காலங்கள் தோறும் மனிதகுலத்தைத் தொடர்ந்து வதைத்து

வந்தார்கள். வெளிப்படுத்தின விசேஷம் 6:1-8 வசனப்பகுதியானது "துன்புறுதல் வலம்வரும் காட்சியின் வரலாற்று நிகழ்ச்சி" என்று அழைக்கப் பட்டுள்ளது. ஜான் பௌமன் அவர்கள், முதல் நான்கு காட்சிகளும், "ஒரு வருத்தம் தோய்ந்த வரலாற்றைக் கூறுகின்றன. இது மனிதனின் சலிப்பு மற்றும் அவனது உழைப்புகளின் வீணானதன்மை பற்றிய கவலைக்குரிய வரலாறாக உள்ளது; இது கலாச்சாரங்கள் மற்றும் நாகரீகங்கள் ஆகியவற்றின் எழுச்சி மற்றும் வீழ்ச்சி ஆகியவற்றின் சுழல் முழக்கமாக உள்ளது" என்று கூறினார்.[3] யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள், இந்தக் குதிரைவீரர்கள், மனிதனுக்கு மனிதன் காண்பித்த மனிதத்தன்மையற்ற குணத்திலிருந்து விளைந்த தீமையின் மாதிரியாக உள்ளது என்று அறிவித்தார்:

> யுத்தம் என்பது சமுதாயத் தீமையாக உள்ளது; பஞ்சம் என்பது உயிர்ச்சூழல் தீமையாக உள்ளது; வியாதி என்பது உயிரியல் தீமையாக உள்ளது. யுத்தமானது சமுதாயத்தின் நற்தன்மையைத் தாக்குகிறது; பஞ்சமானது தேவனுடைய தாராளத்தன்மையை மீறி அழிக்கிறது; வியாதியானது தேவன் கொடுத்த உடல்களை அழித்து வீணாக்குகிறது: இது சமுதாயத்திற்கு எதிரான பாவங்கள், நாட்டிற்கு எதிரான பாவங்கள், உடலுக்கு எதிரான பாவங்கள்.[4]

ஒரு மறுப்பை நான் கேட்க முடிகிறது: "நிச்சயமாகவே இந்த நான்கு வீரர்களும் தங்கள் குதிரைகளை கடந்தகாலத்தின் சிலவேளைகளில் லாயங்களில் இட்டுவிட்டனர். அவர்கள் ஒளியூட்டப்பட்ட நமது காலங்களில் இன்னமும் சவாரி செய்துகொண்டிருப்பதில்லை, அல்லவா?" பின்வரும் எதிரொலிக்கும் பதிலுக்கு ஆதாரம் வேண்டப்படுவது குறித்து நான் அஞ்சுகின்றேன்: "ஆம், அவர்கள் இன்னமும் சவாரி செய்கின்றனர்!" நமது முந்திய பாடத்தில் நாம், புரூஸ் மெட்ஸ்ஜெர் அவர்களின் பின்வரும் விளக்கத்தைக் குறிப்பிட்டோம்: "புத்தகங்கள், செய்தித்தாள்கள், பத்திரிகைக் கட்டுரைகள் மற்றும் வானொலி ஒலிபரப்பு நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் நாம், இறைவெளிப்பாட்டின் நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களில் உலகில் பவனிவருவது பற்றி வாசிக்கின்றோம் மற்றும் கேட்கின்றோம்."[5] பர்ட்டன் காஃப்மன் அவர்கள் இதை ஒப்புக்கொண்டார்: "ஒவ்வொரு காலைவேளைச் செய்தித்தாளும் அழிக்கும் இந்தக் குதிரை வீரர்கள் ... இப்போது உலகம் முழுவதிலும் என்ன செய்கின்றனர் என்பது பற்றிய விபரங்களைக் கொண்டுள்ளன."[6]

இந்த நான்கு குதிரை வீரர்களும் எப்போதும் பூமியின்மீது சவாரி செய்து கொண்டு இருந்துள்ளனர், இருப்பார்கள் என்பதற்கு நிரூபணம் தேவைப்படுகிறது என்றால், பின்வருவனவற்றை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்:

வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவர்

மற்றவர்கள்மீது தங்கள் சித்தத்தைத் திணிக்க விரும்பும் எந்த ஒரு தனிநபரும் அல்லது மக்கள் குழுவும் இந்த முதல் சவாரியாளராக இருக்கின்றார் என்று நான் கருத்துத் தெரிவிக்கின்றேன்.[7] காயீன் தொடங்கி,

மக்கள் மற்றவர்களுக்கு உரியவற்றைக் கவர்ந்து கொண்டுள்ளனர் - மற்றும் அவற்றைப் பெறுவதற்கு எவ்வளவு தூரம் வேண்டுமானாலும் சென்றுள்ளனர்.[8]

> கோடீஸ்வரர் ஒருவரிடத்தில் ஒரு பிச்சைக்காரர்,
> "உங்களை உண்மையிலேயே மகிழ்ச்சியுள்ளவர் ஆக்குவதற்கு
> இன்னும் எவ்வளவு ரூபாய்கள் தேவைப்படும்?" என்று கேட்டார்.
>
> கோடீஸ்வரர் தமது கரளை வாய்ந்த கைகளை
> அந்தப் பிச்சைக்காரரின் பாத்திரத்தில் இட்டு, எடுத்துக் கொண்டு
> "ஒரே ஒரு ரூபாய் தான்!" என்று பதில் அளித்தார்.[9]

அபகரித்துப் பிடிக்கும் நில உரிமையாளர், "உலகத்தில் உள்ள எல்லா நிலத்தையும் நான் விரும்பவில்லை; என்னுடைய நிலத்திற்கு அருகில் உள்ள நிலத்தை மாத்திரமே நான் விரும்புகின்றேன்" என்று கூறுகின்றார்.

வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவர் உறவுமுறையின் ஒவ்வொரு மட்டத்தின்மீதும் செயல்படுகிறுர்: தனிப்பட்ட, நாடளாவிய, மற்றும் உலகளாவிய மட்டங்கள். இவரை நீங்கள் "வெற்றி கொண்டவர்," "ஏகாதிபத்தியம்," "பேராசை," அல்லது "சுயநலமாக ஓடும் கலகக்காரர்" என்று எப்படிப் பெயரிட்டாலும், இவர் நமது உலகத்தில் தொடர்ந்து பாய்ந்தோடுகின்றார் - மற்றும் பேரழிவு எவ்வித மாற்றமும் இன்றி இவரைத் தொடருகிறது.

சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவர்

பாவத்தினால் வியாதிப்பட்டுள்ள இந்த உலகம் எப்போதுமே, "யுத்தங்களையும் யுத்தங்களின் வதந்திகளையும்" கொண்டுள்ளது. ஆல்பர்ட் ஐன்ஸ்டின் என்பவர் பின்வரும் கவலைக்குரிய கவனக்குறிப்பை ஏற்படுத்தினார்: "அரசு மாட்சிமையுடைய நாடுகள் மகா சக்தியைக் கொண்டிருக்கும் வரையிலும் போர் என்பது தவிர்க்க இயலாததாக இருக்கும்."[10] யுத்தத்தை மகிமைப்படுத்த முயற்சிகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன, ஆனால் 1880ல் ஜெனரல் வில்லியம் டெக்கும்ஸேஹ் ஷெர்மேன் என்பவரால் கூறப்பட்ட வார்த்தைகள் இன்னமும் உண்மையானதாகவே ஒலிக்கின்றன: "நான் யுத்தத்தினால் களைப்படைந்து வியாதியுற்றவன் ஆனேன் ... ஒருக்காலும் குண்டடி படாதவர்களும், யுத்தமுழக்கத்தையும் காயமடைந்தவர்களின் கூக்குரல்களையும் கேட்காதவர்களும் தான் இரத்தத்திற்காக, அதிகம் பழி வாங்குதலுக்காக, அதிகம் கைவிடப்படுதலுக்காக உரத்துக் கூவுகின்றனர்."[11] ஷெர்மேனின் இந்தக் கூற்றுக்குத் தூண்டுதலாய் இருந்த யுத்தங்கள் நடந்த இடங்களில் நான் நடந்திருக்கின்றேன். விழுந்துபோன யுத்தவீரர்களின் கல்லறைகள் தொடுவானம் வரைக்கும் நீண்டுள்ள புதையிடங்களை நான் பார்த்திருக்கின்றேன். யுத்தத்தினால் சிதைக்கப்பட்ட உடல்கள், மனங்கள் மற்றும் வாழ்வுகள் என்ற அதன் கண்டிப்பான வழிமுறை உடைமைகளை நான் கண்டிருக்கின்றேன். எஞ்சியிருப்பவர்களின் உணர்வற்றுப்

போகச்செய்யும் துக்கத்தை நான் பகிர்ந்து கொண்டிருக்கின்றேன். இந்த இரண்டாம் குதிரை வீரர் இன்னமும் நம் மத்தியில் சவாரி செய்து கொண்டிருக்கின்ருர் - இவர் ஒரு நாளுக்காவது தனது குதிரையை இலாயத்தில் இடுவதற்கு மறுக்கின்றார்.

கறுப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவர்

இவர்களில் எந்த ஒரு குதிரை வீரராவது நீண்டகாலத்திற்கு முன்பே ஒய்வு பெற்றிருக்க வேண்டுமென்றால், அது கறுப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவராகத்தான் இருக்க வேண்டும்: பொருளாதார கஷ்டம். விவசாயத் தொழில் நுட்பமானது தொடர்ந்து மேம்பட்டுக்கொண்டுள்ளது; ஒரு மனிதரால் ஆயிரம் பேர்களுக்கு உணவளிக்கத் தேவையானவற்றை வளர்க்க முடிகிறது.[12] இருந்தபோதிலும், உலக மக்கள் தொகையில் 70 சதவிகிதம்பேர் இன்றிரவு பசியுடன் படுக்கச் செல்லுவார்கள் என்பது இன்னமும் உண்மையாக உள்ளது. நான் எனது கண்களை மூடிக்கொள்ளும்போது, பெருந்துன்பத்திற்குள்ளான ஆண்களும் பெண்களும் தங்களின் பசிக்கொடுமையைத் தீர்ப்பதற்கு ஒருசில உணவுத் துணுக்குகளுக்காகக் குப்பைக்குவியலில் ஆழமாய்த் தேடும் - அல்லது தீக்குச்சிபோன்ற கைகால்களையும் ஊதிய வயிறுகளையும் கொண்ட பட்டினியாய் இருக்கும் குழந்தைகளின் - தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைக் காணமுடிகிறது.

மங்கின நிறமுள்ள குதிரையின்மீது ஏறியிருந்தவர்

நான்காவது சவாரியாளர் மற்றும் அவரது துணைவர் பற்றிய விஷயம் என்ன? மரணமும் பாதாளமும், "பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும் ... கொலைசெய்யும்" (6:8) செயலை தொடர்ந்து கொண்டிருக்கின்றனவா?

பட்டயம் ஒருக்காலும் உறையில் இடப்படவில்லை என்பது தெளிவு. கடந்த மற்றும் நிகழ்காலத்தில் இதற்கு ஏராளமான உதாரணங்கள் உள்ளன: அறுபது இலட்சம் யூதர்கள் கொலைவெறியுடன் கொடூரமாக கொல்லப்பட்டனர்; ஹிரோஷிமாவில் அணுப்புயல்களினால் பல ஆண்களும், பெண்களும், சிறுவர்களும் சிறுமிகளும் புகைந்து போயினர்; யுத்தத்தினால் சீரழிக்கப்பட்ட நகர்களில் இன்றைய நாட்களிலும்கூட அலங்கோலமான உடல்கள் சிதறிக்கிடக்கின்றன.[13] இல்லத்திற்கு நெருங்கி வருகையில், தங்கள் உயிரினும் அன்பாக நேசித்த ஒருநபரை இதுவரையிலும் யாராவது அடக்கம் செய்யாது இருந்துள்ளோமா?

சாவுக்கேதுவான இந்த இரட்டையர்களால் பஞ்சம் என்பது தொடர்ந்து பயன்படுத்தப்பட்டுள்ளது. யுத்தத்தினால் தூண்டப்பட்ட பஞ்சம், 1943ல் சீனாவில் ஐம்பது இலட்சம் மரணங்களையும், 1970ன் பிற்பகுதிகளில் கம்போடியாவில் எடுத்துரைக்க இயலாத துன்பங்களையும் விளைவித்தது. வறட்சியால் தூண்டப்பட்ட பஞ்சமானது இந்தக் கணத்தில் கூட ஏராளமானவர்களைக் கொன்றுள்ளது.

கொள்ளைநோய் என்பது மரணத்தின் கோட்டையில் எப்போதுமே பேரழிவின் ஆயுதமாக இருந்துள்ளது. பிளேக் எனப்படும் கறுப்பு மரணம்

(பியூபோனிக் வியாதி) என்பது மத்திய கிழக்கு, ஐரோப்பா மற்றும் ஆசியா கண்டங்களில், ஆறாம் நூற்றாண்டில் பத்துக்கோடிப் பேர்களையும், ஐரோப்பா கண்டத்தில், பதினான்காம் நூற்றாண்டில் ஏழரைக் கோடிப் பேர்களையும் கொன்றது. 1918-19ல் ஏற்பட்ட விஷக்காய்ச்சல் பேரழிவானது எனது குடும்பத்தைத் தாக்கிற்று; இறந்துபோன இரண்டுகோடிப் பேர்களில் எனது தந்தையின் தாயும் ஒருவராயிருந்தார் (அந்த வேளையில் எனது தந்தை நான்கு வயதுடையவராய் இருந்தார்). எய்ட்ஸ் என்ற கொள்ளை நோயானது இன்றைய நாட்களில் இன்னமும் மிகவும் மரணத்திற்குரிய பெரு நோயாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

"பூமியின் துஷ்ட மிருகங்கள்" பற்றிய விஷயம் என்ன? உலகத்தில் நான் வாழும் பகுதியில், பெரும்பாலான துஷ்டமிருகங்கள் மிருகக் காட்சி சாலையில்தான் உள்ளன. மரணம் என்ற அரக்கன், "துஷ்ட மிருகங்களில்" ஒருசிலவற்றையே தனக்குக் கீழ் கொண்டுள்ளானா? அல்லது விலங்குகளின் அரசில் உள்ள மிருகங்கள் வெறுமனே, மிகவும் சாவுக்கேதுவான "காட்டு மிருகங்களால்" - அதாவது ரோமாபுரி, பெய்ரூட் மற்றும் பெல்ஃபாஸ்ட் ஆகிய இடங்களின் வன்முறையாளர்களாக - மாத்திரம் மாற்றப்பட்டுள் ளனவா?; ஆக்லஹாமா நகரில் உள்ள குடியரசுக் கட்டிடத்தை இடித்து அழித்த பிறழ்வுநிலை கொண்ட மனிதர்கள்; அர்க்கன்சாஸின் வொய்ட் மாகாணத்தின் "நீல விளக்குக் கற்பழிப்பாளர்"?[14]

நான்காவது குதிரை வீரர் தொடர்ந்து சவாரி செய்துகொண்டுள்ளார் என்று நான் கூறும்போது எவரொருவரும் நிச்சயமாக விவாதம் செய்ய மாட்டார். அவரை எவரொருவரும் தவிர்க்கவும் முடியாது. முதல் மூன்று குதிரை வீரர்களின் பாதையில் இருந்து நீங்கள் விலகியிருந்தாலும், மங்கின நிறமுள்ள குதிரையின்மீது ஏறியிருப்பவரிடமிருந்து நீங்கள் தப்ப இயலாது. அவரது வேலை அட்டவணைப் புத்தகம் உங்கள் பெயரைக் கொண்டுள்ளது (எபிரெயர் 9:27).

இந்த நான்கு குதிரை வீரர்களும் இன்னமும் சவாரி செய்து கொண்டிருக்கின்றனர் என்று உங்களை நான் நம்பச் செய்துள்ளேனா? இவர்கள் "காலம் கடந்த ஆவியுருவங்களாக" உள்ளனர் என்று ஏர்ல் பால்மர் அவர்கள் முடிவுசெய்தார், மற்றும் இவர்கள் இயங்குகிற வழிமுறை மாத்திரமே மாறியுள்ளது:

> முதல் நூற்றாண்டில் தன்னால் பாதிக்கப்படுபவரை வேட்டையாடி வீழ்த்திய வில்வீரர், இந்த நூற்றாண்டில், கண்டம் விட்டுக் கண்டம் பாயும் ஏவுகணைகளைப் பயன்படுத்துகின்றார். யுத்த இரதங்களில் சவாரி செய்தவர்கள் இருபத்தியோராம் நூற்றாண்டாகிய இந்தக் கடைசி நாட்களில், மிகு வேக டாங்கிகள், ஹெலிகாப்டர்கள், மற்றும் நகரத்தெருக்களில் திடீரென்று தாக்கிக் கொலைசெய்யும் வன்முறை யாளர்கள் மூலம் அழிவு ஏற்படுத்துகின்றனர். பஞ்சமும் மரணமும் மாத்திரமே ஒரேவிதமாக நிலைத்துள்ளன. [விவசாயம் சார்ந்த] முதல் நூற்றாண்டில் பட்டினியாய் இருந்த குழந்தையொன்று, தொழில் நுட்பம் சார்ந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் பட்டினியாய் இருக்கும் குழந்தையைப் போன்றே காணப்படுகிறது.[15]

இவர்கள் சவாரி செய்வதைத் தேவன் ஏன் அனுமதிக்கின்றார்?

இந்த நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களிலும் சவாரி செய்கின்றனர் என்பதை நாம் ஒப்புக்கொண்டால் - யோவானின் நாட்களிலும் நிச்சயமாகவே எழும்பியிருக்கக் கூடிய - ஒரு கேள்வி எழும்புகிறது: "ஏன்?" தேவன் எந்த ஒரு விஷயத்தையும் நோக்கமின்றி செய்வதில்லை. நான்கு குதிரை வீரர்கள் பற்றிய தரிசனத்தில் தேவன் எந்த செய்தியை அறிவிக்க முயற்சி செய்துகொண்டிருந்தார்? நமது முந்திய பாடத்தில் நாம், முதல் நூற்றாண்டுக் கிறிஸ்தவர்களின் நிலைப்பாட்டில் இருந்து வந்த இதே போன்ற கேள்வியோடு போராடினோம். இப்போது நாம், நமது சொந்தக் கண்ணோக்கக் கருத்தில் இருந்து இதனுடன் போராடுவோம்.[16]

எதிர்காலம் துன்பத்தினால் நிறைந்திருக்கும்

இந்த உலகத்தைப் பொறுத்த மட்டில், எதிர்காலம் என்பது எப்போதுமே துன்பத்தினால் நிறைந்து இருக்கும் என்பது நாம் அறியும்படி தேவன் விரும்புகிற ஒரு சத்தியமாக உள்ளது. டாமி சவுத் அவர்கள் "மக்களில் சிலர் எப்போதுமே ஒரு கற்பனை உலகத்தை, 'பூமியில் பரலோகத்தை,' சமாதானம் மற்றும் அமைதி நிலையின் 'பொற்காலம் ஒன்றை' எதிர்பார்க்கின்றனர். இது ஒருக்காலும் நடைபெறாது என்று முதல் நான்கு முத்திரைகளும் வலிவார்ந்த முறையில் அறிவிக்கின்றன. பரலோகம் பரலோகத்தில்தான் இருக்கும், அதற்கு ஒரு நிமிடம்கூட முன்னதாக அது இங்கிராது."[17]

நம்மைச் சுற்றிலும் உள்ள இடர்ப்பாடுகள், நாம் பாவம் நிறைந்த உலகத்தில் வாழ்கின்றோம் என்பதற்கு ஆதாரமாக உள்ளன. முதல் பாவ மானது முள்ளுகள், குருக்குகள், வியர்வை மற்றும் துன்புறுதல் ஆகியவற்றின் சாபத்தைக் கொண்டு வந்தது (ஆதியாகமம் 3:16-19). மனிதன், பாவம் நிறைந்த தன்மையில் நிலைத்திருத்தல் என்பது பூமியைத் தொடர்ந்து சீர்குலையச் செய்துள்ளது. மெட்ஸெஜெர் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> பஞ்சம், மரணம் மற்றும் நரகம் ஆகியவற்றைத் தேவன் அங்கீகரிப்பதில்லை, ஆனால் அவைகள், தேவனுடைய சட்டத்தை மக்கள் எதிர்த்து நிற்பதில் நிலைத்திருந்தால் ... ஒரு மலைக்குன்றின்மீதிருந்து குதிப்பது போன்ற இயல்பான விதிகளைப் புறக்கணித்தால், தொடர வேண்டியவைகளாக உள்ளன. ஒழுக்க விதிகளைப் புறக்கணித்தால் பேரழிவு ஏற்படுதல் உறுதியானதாக உள்ளது ... தேவன் சாபங்களை விரும்புகின்றவர் அல்ல, ஆனால் நாம் சுயாதீனமுள்ள முகவர்களாக இருக்கும் வரைக்கும் அவற்றைத் தேவன் அனுமதிக்கின்றார்.[18]

உண்மையுள்ளவர்கள் சோதனைகளை எதிர்கொள்ளுவார்கள்

நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தாலும், அப்போதும் நாம் சோதனைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று நாம்

புரிந்துகொள்ள வேண்டும் என்றும் தேவன் விரும்புகின்றார். இன்றைய நாட்களின் "சுகவாழ்வு - மற்றும் - செல்வம்" பற்றிய தீர்க்கதரிசிகள், உண்மையாகவே விசுவாசம் நிறைந்தவர்கள் வாழ்வின் சிரமங்களில் இருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளனர் என்று வலியுறுத்துகின்றனர். அவர்களின் சீஷர்களுக்கு[19] பரிபூரண ஆரோக்கியமும் நிதிநிலைப் பாதுகாப்பும் வாக்குத்தத்தம் செய்யப்படுகின்றன. சோதனைகளைப் பொறுத்தமட்டில், "துன்புறுதல் இல்லை" என்பது அவர்களின் செய்தியாக உள்ளது, ஆனால் "வியப்பெதுவும் இல்லை" என்பதே இயேசுவின் செய்தியாக உள்ளது. "அநேகரை வஞ்சிக்கும் கள்ளத் தீர்க்கதரிசிகள்" எழும்புவார்கள் என்பது பற்றி இயேசு பேசினார் (மத்தேயு 24:11). யோவான், "உலகத்தில் அநேகங் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால்" என்று கூறினார் (1 யோவான் 4:1அ). உண்மை நிறைந்தவர்கள் சோதனைகளைக் கொண்டிருக்க மாட்டார்கள்[20] என்று உரிமைகோருகின்றவர்கள் இயேசுவும் யோவானும் சத்தியத்தைப் பேசினர் என்பதற்கு நிரூபணமாக உள்ளனர்.

> கிறிஸ்தவர்கள், ஆவிக்குரிய தண்ணீர்க் கல்லறையான ஞானஸ்நானத்தில் இருந்து மேலே வெளிவரும்போது, அவர்கள் இயல்பான சமாதானமும் செல்வமும் உள்ள பூரணப்பட்ட உலகத்தினுள் வருவதில்லை என்பதே சத்தியமாக உள்ளது. இயல்பான/உயிர்வாழும் ஜீவிகள் என்ற வகையில் நாம், மனிதகுலத்தின் எஞ்சிய பகுதியினர் எதிர்கொள்ள வேண்டிய அன்றாட காயங்கள், அச்சுறுத்தும் உலக நிகழ்ச்சிகள், வியாதிகள், மற்றும் மரணம் ஆகியவற்றை எதிர்கொண்டாக வேண்டும். ...[21]

முந்திய பாடத்தில் நான், "கலகம், சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் என்பவை எல்லா மனிதர்களுக்கும் உரிய பங்குகளாய் இருக்கின்றன, ஆனால் *கிறிஸ்தவர்கள்* இரண்டு மடங்கைப் பெறுகின்றனர் என்று கூறினேன்: இயேசுவைப் பின்பற்றுபவர்கள் வாழ்வின் சாதாரண கேடுபாடுகளுக்கு ஆளாவதுடன், அவர்கள் தங்கள் விசுவாசத்திற்காகத் தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டும் அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றனர்." இந்த சத்தியத்தை அறிவதற்கு நாம் ஏற்கனவே தயாராக இல்லையென்றால், நாம் அவ்வாறு தயாராக வேண்டியது அவசியமாக உள்ளது.

நெருக்கடியில் மிதித்துத்தள்ளும் குதிரைகள் மற்றும் அவைகள் ஏற்படுத்தும் பீதி ஆகியவற்றின் கருத்தை எவ்வாறு கொடுப்பது என்று நான் போராடினேன். நெருக்கடியில் மிதித்துத்தள்ளப்படுதலை கண்டிருக்கலாம், வெகு சிலரே அதில் அகப்பட்டுக் கொண்டிருக்கலாம். நான் பல குதிரைகளைக் கண்டுள்ளேன், ஒருசிலவற்றின்மீது சவாரி செய்துள்ளேன், ஆனால் (அவற்றில் ஒரு குதிரை என்னைத் தூக்கியெறிந்ததால் எனது உணர்வுகள் புண்படுத்தப்பட்டபோதிலும்) அவற்றில் எதுவும் என்னைப் பயமுறுத்தியதில்லை. பின்வரும் விவரிப்பு என் சிந்தைக்கு வருகிறது: ஒரு புகைவண்டி நெருங்கி வந்து கொண்டிருக்கும்போது, தண்டவாளத்தின்மீது நிற்குதலில் உள்ள அபாயத்தைப் பற்றி நம்மில் பலர் அறிந்துள்ளோம்.

ஒருவேளை, என்ன நடந்தாலும் சரி, தண்டவாளத்தின்மீதே நிற்பது என்று நாம் உறுதிகொண்டுள்ளோம் என்று கற்பனை செய்வோம். இப்போது, தண்டவாளத்தின்மீது நாம் இவ்வாறு நின்றுகொண்டிருக்கையில், கனத்த ஒரு புகைவண்டி நம்மைக் கீழே சாய்த்து, சக்கரங்கள் நம்மீது சுழன்று, விசில் சத்தம் கீச்சிட்டால் எப்படியிருக்கும் என்று நினைத்துப் பாருங்கள். இந்த உணர்வு, பழங்கால உலகில் வாழ்ந்தவர்கள் தங்களை நோக்கிக் குதிரைகள் பாய்ந்தோடி வர, தாங்கள் ஒளிய இடமற்ற நிலையில் இருக்கும்போது அவர்கள் கொண்டிருந்த உணர்வுக்குச் சமமானதாக உள்ளது.

இயேசுவைப் பின்பற்றுபவராக இருத்தல் என்பது சுலபமானது அல்ல என்பதற்கு, நான்கு குதிரை வீரர்கள் பற்றிய தரிசனம் கூடுதல் நிரூபணமாக உள்ளது!

இடர்ப்படுகின்றவர்களைப் பிதாவானவர் ஆதரிப்பார்

தேவன், இடர்ப்படுகின்ற தமது பிள்ளைகளை எப்போதும் ஆதரிப்பார் என்பதே நான்கு முத்திரைகளில் இருந்து நாம் கற்றுக்கொள்ளும்படிக்குத் தேவன் விரும்புகின்ற முக்கியமான சத்தியமாக உள்ளது என்று நான் நினைக்கின்றேன். நம்மில் பெரும்பான்மையானவர்கள், இந்த உலகமானது பிரச்சனைகளினால் நிறைந்துள்ளது என்றும் அவற்றில் சில பிரச்சனைகள் நமது சொந்தவாழ்விற்குள் சிந்தப்படக் கூடியவைகளாய் உள்ளன என்றும் நம்மில் பலர் ஏற்கனவே அறிந்திருக்கின்றோம். பிரச்சனைகள் வரும்போது, தேவன் நம்மைக் கைவிடுவதில்லை என்பதை நாம் நினைவுபடுத்திக் கொள்ளுதல் அவசியமானதாக உள்ளது.

தேவன் நமக்குத் தேவை என்பதை நமது மனதில் பதியச் செய்தல் - அது நாம் அவரிடத்தில் திரும்புவதற்குக் காரணமாகுதல் - என்பது, நான்கு குதிரைவீரர்களைத் தேவன் அனுமதிப்பதற்கு ஒரு காரணமாக உள்ளது. இந்த நான்கு குதிரைவீரர்களைச் சாத்தான், இதற்கு நேர் எதிரான காரணத்திற்குப் பயன்படுத்துகின்றான்: மக்களைக் கர்த்தரிடத்தில் இருந்து புறம்பே திருப்புதல். தேவன் இல்லை என்று "நிரூபிக்க" செய்யப்படும் பிரபலமான விவாதத்தில் சாத்தானுடைய வெற்றிக்கு உதாரணம் ஒன்று காணப்பட முடியும்: பொய்யான மதி நுட்பம் வாய்ந்தவர், "தேவன் இருக்கின்றார் என்றால், உலகத்தில் ஏன் இவ்வளவு இடர்ப்பாடு இருக்கிறது?" என்று கேட்கின்றார்.[22]

இருப்பினும் மக்கள் கூட்டத்தைப் பொறுத்தமட்டில், சாத்தான் இந்தக் குதிரை வீரர்களை, அதிகம் அறிய இயலாத அணுகுமுறையொன்றில் பயன்படுத்துகின்றான்: நான்கு வீரர்களால் விளைவிக்கப்படுகிறவைகளான பெருங்கலக்கத்தை, மக்கள் பூமியென்னும் இந்தக் கோளின்மீதுள்ள பிரச்சனைகளில் கவனத்தைக் குவிக்கக் காரணமாகும்படி பயன்படுத்து கின்றான். இந்த வியூகத்தைப் பற்றி, எல்ட்ரெட் எகோல்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> நாம் இயல்பான ஜீவிகளாக இருக்கின்றோம் என்பதை அறிந்துள்ள சாத்தான், நம்மை ஆவிக்குரிய பாதுகாப்பில் இருந்து வெளியே

இழுத்து விடுவதற்கு, உலகப்பிரகாரமான வழிகள் ஒவ்வொன்றையும் பயன்படுத்துகின்றான். அவன் நம்மை சரீரப்பிரகாரமாகத் தாக்கு கின்றான், நாம் பட்டினி, வியாதி, பஞ்சம், சுற்றுச்சூழல், இன்ன பிறவற்றின்மீது கவனம் செலுத்தக் காரணமாகின்றான். அவன், ஆவிக்குரிய யுத்தத்தின் [அதாவது, அவனுடன் நாம் தொடுக்கும் யுத்தத்தின்] முக்கியத்துவத்தில் இருந்தும்கூட, நமது கவனத்தைத் திருப்புகின்றான்.[23]

சாத்தான், விசுவாசிகளுக்கு எதிரான தனது யுத்தத்தில், இந்த வியூகத்தை இன்னும் ஒருபடி மேலாக கொண்டு செல்கின்றான். இந்தக் குதிரை வீரர்கள் நமது சொந்த வாழ்வுடன் ஒரு மோதலைக் கொண்டுள்ளதாக நாம் கண்டறியும்போது, பிசாசானவன் "இந்தக் கொடிய மிருகங்கள் மற்றும் இவற்றின்மீது ஏறியுள்ள இரக்கமற்ற வீரர்கள்மீது உன் கவனத்தைத் திருப்பு. அவர்களின் ஒடுக்குமுறையானது உன் சிந்தையிலும் இருதயத்திலும் பாய்ந்தோடுவதற்கு அனுமதி. அவர்கள் கவலையிலும் பெருவருத்தத்திலும் மிதித்துத்தள்ள அனுமதி!" என்று இரகசியமாய்க் கூறுகின்றான். பீட்டர்ஸன் பின்வருமாறு எழுதினார்,

தீமையை நாம் எந்த வடிவத்தில் அனுபவிக்கும் போதும், அது முழுமையாக உணரப்படுகிறது. அது மற்ற ஒவ்வொன்றையும் துடைத்துப் போடுகிறது. பல்வலி என்பது உடலின் பிறபாகங்களின் ஆரோக்கியம் பற்றிய விழிப்புணர்வை நீக்கிப்போடுகிறது. புண் கொண்ட ஒரு கால்விரல், எனது கால்மூட்டு முயற்சியின்றி அசைகிறது என்ற அற்புதம் நிறைந்த உண்மையை மதித்தலைச் சாத்தியம் அற்றதாக்குகிறது.[24]

பீட்டர்ஸனின் வரிகளை நான் வாசிக்கும்போது, தீவிரமாய் எனக்குவந்த முதல் பல்வலியையும், எனது தாடையில் ஏற்பட்ட குத்தல் எடுக்கும் வலி மாத்திரம் விட்டுவிடப்பட்டிருந்த நிலையில், உலகம் முழுவதும் நினைவில் இருந்து ஓய்ந்து போயிருந்த, உறக்கமற்ற இரவையும் நான் நினைவுகூருகின்றேன். நாம் கவனமாக இராவிட்டால், நமது வழியில் தீவிரமான இடர்ப்பாடு வருகிறபோது, மற்ற ஒவ்வொன்றைப் பற்றிய கண்ணோக்கையும் நாம் இழந்து போய்விடும் அளவுக்கு, அவற்றில் நாம் அதிகமாய் உள்ளிழுக்கப்பட்டுவிடுவோம்: நாம் வாழ்வின் நன்மை பற்றிய, தேவைகள் கொண்டுள்ள மற்ற மக்கள், மற்றும் நம்மீது அன்புகூருகின்ற தேவனைப் பற்றியும் கூட, நாம் கொண்டுள்ள கண்ணோட்டத்தை இழக்கக்கூடும்.

Life என்ற பத்திரிகையின் 1993, அக்டோபர் மாத இதழில், புல்லாங் குழல் வாசிக்கும் ஜென்ஸன் என்று பெயர்கொண்ட ஒரு பையனின் புகைப்படம் ஒன்று வெளியாயிற்று. அவனது நீண்ட கருத்த கூந்தலின் கீழே கண்கள் இருந்திருக்க வேண்டிய இடத்தில் நீண்ட இருண்ட குழிகள் வெறுமையான குழிகளாய் இருந்தன. காரணம் எதுவாயிருப்பினும் பார்வையற்ற தன்மை என்பது பரிதபிக்கத் தக்கதாக உளளது; ஆனால் கொலம்பியா நாட்டின் பொகொட்டாவைச் சேர்ந்த இந்த ஜென்ஸன்,

பெரும்பான்மையானவர்களுடையதைக் காட்டிலும் அதிக கவலைதரும் அனுபவத்தைக் கொண்டிருந்தான். அவன் பிறந்து பத்து மாதங்கள் ஆனபோது, அவனது தாயார் அவனுக்கு ஏற்பட்ட தீவிரமான வயிற்றுப்போக்கினிமித்தம் அவனை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாள். அடுத்த நாளில் அவள் திரும்பி வந்தபோது, அவனது கண்களில் துணிகள் சுற்றி கட்டப்பட்டிருந்தது, அவனது உடலானது ஏற்கனவே, உலர்ந்த இரத்தத்தினால் சளசளத்துக் கிடந்தது. அவள் உடனே அவனை இன்னொரு மருத்துவமனைக்கு எடுத்துச் சென்றாள், அங்கு அவளிடத்தில், அவனுடைய கண்களை யாரோ திருடிச் சென்றுவிட்டனர் என்று கூறப்பட்டது. எவ்வளவு துன்பகரமானது! கொலம்பியாவில் உள்ள உடலுறுப்புத் திருடர்களின் விஷயத்தைக் காட்டிலும் அதிக துன்பகரமான விஷயம் ஒன்றை உங்களுக்குக் கூறுவதற்கு என்னை அனுமதியுங்கள்: ஆவிக்குரிய பார்வையை, உண்மையில் மிகமுக்கியமாக உள்ள காணும் மற்றும் பகுத்தறியும் திறமையை, நமது வாழ்வில் ஊடுருவுகிற இடர்ப்பாடுகளில் தேவனுடைய கரத்தைக் காணும் திறமையைத் திருடுகின்ற ஒருவன் இருக்கின்றான். அவன் சாத்தான் என்பவனாயிருக் கின்றான்![25] "அவனுடைய தந்திரங்கள் நமக்குத் தெரியாதவைகள் அல்லவே" (2 கொரிந்தியர் 2:11ஆ) என்பதால் தேவனுக்கு நன்றி. உங்கள் ஆவிக்குரிய பகுத்துணர்வைக் களவாடுவதற்கு, சாத்தான் "பிரபஞ்சத்திற்குரிய கவலைகளை" (லூக்கா 8:14) பயன்படுத்துவதை அனுமதிக்காதீர்கள்!

முந்திய பாடத்தில் நான், 6:1-8ல் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளைச் சுட்டிக்காண்பித்திருந்தேன், அவைகள் தேவன் கட்டுப்பாடு செலுத்து கின்றார் என்றும் அவர் தமது திட்டங்களையும் நோக்கங்களையும் செயல் படுத்திக் கொண்டிருக்கின்றுர் என்பதையும் வலியுறுத்துகின்றன. நமது பாடம் தொடருகையில், அவரது திட்டங்கள் மற்றும் நோக்கங்கள் ஆகியவற்றின் இருதயம் போன்ற மையப்பகுதியில், அவரது மக்களை ஆசீர்வதிக்க வேண்டும் என்ற விருப்பம் உள்ளது என்பதைக் காண்போம். தேவன் நம்மீது அன்புகூருகின்றார்; அவர் நமது பக்கம் இருக்கின்றார். நீண்ட காலத்திற்கு முன்பு, அவர் மோசேயிடத்தில், "எகிப்திலிருக்கிற என் ஜனத்தின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்து, அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, அவர்களை விடுவிக்கும்படி இறங்கினேன்" என்று கூறினார் (நடபடிகள் 7:34அ). இதே உணர்வைத் தேவன் முதல் நூற்றாண்டிலும் கொண்டிருந்தார், அவர் இன்றைய நாட்களில் இன்னமும் அதைக் கொண்டிருக்கின்றார்!

முடிவுரை

வெளிப்படுத்தின விசேஷத்தைப் படிக்கும் கிறிஸ்தவருக்கு, பிரச்சனைகளைப் பொறுத்தமட்டில், "வியப்பெதுவும் இருப்பதில்லை." இடர்ப்பாடு தவிர்க்க இயலாததாக உள்ளது என்று முதல் நான்கு முத்திரைகளும் நமக்கு நினைவூட்டுகின்றன. பேராசை, யுத்தம், பொருளா தார சிரமங்கள், மற்றும் மரணம் என்பவை வாழ்வுக் காட்சியின் பாகமாக

உள்ளன, இவைகள் பாவத்தினால் கறைபடிந்த உலகத்தின் இருளான பக்கமாக உள்ளன. இது, கிறிஸ்தவர்கள் பெருவருத்தம் அடைய வேண்டும் என்று அர்த்தப்படுவதில்லை. "தேவன் நம்முடைய பட்சத்திலிருந்தால் நமக்கு விரோதமாயிருப்பவன் யார்?" (ரோமர் 8:31).[26]

இரண்டாம் உலக யுத்தம் நடந்து கொண்டிருந்த இருளான நாட்களின் போது, ஹாரோ ஸ்கூல் என்ற பள்ளியின்[27] பட்டமேற்புக் குழுவினருக்கு வின்ஸ்ட்டன் சர்ச்சில் உரைநிகழ்த்தினார். அவரது உரையில் இருந்த பின்வரும் வார்த்தைகள் இன்றும் வாழ்கின்றன: "ஒருக்காலும் தளர்ந்து போய்விடாதீர்கள், ஒருக்காலும் தளர்ந்து போய்விடாதீர்கள், ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும், ஒருக்காலும் - ஏதொன்றிலும், பெரியதோ அல்லது சிறியதோ, அதிகமோ அல்லது அற்பமோ - ஏதொன்றிலும் ஒருக்காலும் தளர்ந்து போய்விடாதீர்கள் ..." என்று கூறினார்.[28] சாத்தானுடனான நமது யுத்தத்தில் வேதாகமும், "ஒருக்காலும் தளர்ந்து போய் விடாதீர்கள்" என்று கூறுகிறது: "பலங்கொண்டு திடமனதாயிரு. திகையாதே, கலங்காதே, நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" (யோசுவா 1:9). அந்த வசனப்பகுதியின் சத்தியமானது பின்தொடரும் பாடங்களில் திரும்பத் திரும்ப எதிரொலிக்கும். உங்கள் வாழ்வை அதனுடன் நங்கூரமிடுங்கள்.

குறிப்புகள்

[1]மகிழ்ச்சியான மற்றும் மகிழ்ச்சியற்ற வியப்புக்களுக்கான இந்த உதாரணங்கள், நீங்கள் வாழும் பகுதிக்குப் பொருத்தமற்றவையாக இருந்தால், இவ்விடத்தில் உங்கள் சொந்த உதாரணங்களைப் பதிலிட்டு நிரப்பிக்கொள்ளவும். [2]உபத்திரவம் பற்றி இயேசுவின் போதனைக்கான மற்ற உதாரணங்களுக்கு, மத்தேயு 5:10-12, 44; 10:23; 13:21; 23:34; லூக்கா 11:49; 21:12; யோவான் 15:20 ஆகிய வசனங்களைக் காணவும். [3]John Wick Bowman, *The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955), 49. [4]Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: Harper Collins Publishers, 1988), 76. [5]Bruce M. Metzger, *Breaking the Code: Understanding the Book of Revelation* (Nashville: Abingdon Press, 1993), 59. [6]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 142. [7]முதல் குதிரையின்மீது ஏறியிருந்தவர் இயேசு என்று நீங்கள் முடிவு செய்தால், பின்வரும் துணைக்கருத்தை நீங்கள் தழுவ வேண்டியிருக்கும்: "சுவிசேஷம் தொடர்ந்து முன்செல்வதற்காகத் தேவனுக்கு நன்றி," மற்றும் பிற. [8]இன்றைய நாட்களில் நான்கு குதிரை வீரர்களைப் பற்றி விவரிப்பதில் நான், எனக்கு அர்த்தம் நிறைந்தவையாகவும் எனது உரையைக் கேட்பவர்களுக்கு அர்த்தம் நிறைந்தவை என்று நான் நம்புகின்றவையாகவும் உள்ள சொல் விளக்கங்களையும் விவரிப்புகளையும் பயன்படுத்துவேன். உங்களுக்கும் உங்கள் உரையைக் கேட்பவர்களுக்கும் அதிக அர்த்தம் நிறைந்தவைகளாக உள்ள சொல்விளக்கங்களையும் விவரிப்புகளையும் தேவைக்கேற்றபடி இவ்விடத்தில் பதிலியாகப் பயன்படுத்துங்கள். [9]Calvin Miller, *A Requiem for Love*, quoted in Craig Brian Larson, ed., *Illustrations for Preaching and Teaching From* Leadership Journal (Grand Rapids, Mich.: Baker Books, 1993), 93. [10]Quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed.,

gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 636.

[11]Quoted in Leonard Louis Levinson, *Webster's Unafraid Dictionary* (New York: Collier Books, 1967), 254. *ஷெர்மன் என்பவர் அமெரிக்க ஐக்கிய நாட்டின் உள்நாட்டு யுத்தத்தில் ஒரு யூனியன் ஜெனரல் என்ற அதிகாரியாக இருந்தவர்.* [12]*எனது நண்பர் ஜோயல் டேவிஸ் அவர்கள், "உற்பத்தி என்பதல்ல, ஆனால் விநியோகம் என்பதே பிரச்சனையாக உள்ளது" என்று கவனித்துள்ளார். அவர் சரியாகவே கூறினார். தொழில் நுட்பம் மிகவும் தேவைப்படுகிற நாடுகளுக்கு அதை எடுத்துச் செல்லுதல் என்பது இதைப் போன்ற பிரச்சனையாக உள்ளது.* [13]*இந்தப் பாடத்தில் தரப்படுகிற புள்ளிவிபரங்கள், பல்வேறு வகையான கலைக்களஞ்சியங்கள் மற்றும் பிற ஆதாரமூலங்களில் இருந்து எடுக்கப்பட்டவையாகும்.* [14]*இந்த மனிதர், ஒரு காவல் துறை அதிகாரியைக் குறிக்கும் வகையில் நீலநிற விளக்கை மேற்பகுதியில் கொண்டிருந்த வாகனம் ஒன்றைக் கொண்டிருந்தார். இவர் பெண் கார் ஓட்டுனர்களை நிறுத்தி, அவர்களைக் கற்பழித்தார்.* [15]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 177. [16]*முந்திய பாடத்தில் தரப்பட்டிருந்த பதில்கள், இந்தப் பாடத்தில் தரப்படும் பதில்களின் மேல்கவிதல் என்பது அவசியமானதாக உள்ளது.* [17]Tommy South, "The Four Messages of the Seven Seals," *Truth for Today* (November 1988): 9. [18]Metzger, 58. [19]*பொதுவாக, உடல் நல நன்கொடைகள் என்பவை இந்த போதகர்களின் சீஷர்களாக இருப்பதற்கு அத்தியாவசியமானவைகளாக உள்ளன.* [20]*அவர்கள் வேதாகமத்தை வாசித்திருப்பது இல்லையா? அவர்கள் யோபுவின் வரலாற்றையோ அல்லது உணவுத் துணுக்குகளுக்காகப் போராடிக்கொண்டிருந்த உண்மையுள்ள லாசருவின் வரலாற்றையோ அல்லது உண்மையாயிருந்து துன்புற்றவர்களின் நூற்றுக்கணக்கான மற்ற உதாரணங்களையோ வாசித்தது இல்லையா?*

[21]Eldred Echols, *Haven't You Heard? There's a WAR Going On!: Unlocking the Code to Revelation* (Fort Worth, Tex.: Sweet Publishing, 1995), 82. [22]*இந்த விவாதம் பிரபலமானதாக இருந்தாலும், இது கேள்விக்குப் பதில் அளிப்பதாயிருப்பதில்லை. இது உண்மையில் தேவனுடைய இருப்பைப் பற்றியதாக இராமல், தேவனுடைய இயல்பைப் பற்றியதாகவே உள்ளது. இந்த "விவாதத்திற்கு" பதில் அளித்தல் என்பது எனது நோக்கம் அல்ல. இந்த மற்றும் இதைப் போன்ற "விவாதங்களுக்கு," கிறிஸ்தவத்திற்கான சான்றுகள் பற்றிய தரமான புத்தகங்கள் பதில் அளிக்கின்றன. சாத்தான் தன்னுடைய நோக்கத்திற்காக நான்கு குதிரை வீரர்களை எவ்வாறு உபயோகிக்கிறான் என்பதை சித்தரிக்க மாத்திரமே நான் விரும்பினேன்.* [23]Echols, 72. [24]Peterson, 73. [25]Craig Brian Larson, ed., *Contemporary Illustrations for Preachers, Teachers, and Writers* (Grand Rapids, Mich.: Baker Books, 1996), 240. [26]Eugene H. Peterson, *The Message: New Testament With Psalms and Proverbs* (Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995), 379. [27]*ஹாரோ ஹவுஸ் என்பது இங்கிலாந்தின் மிடில்செக்ஸ் என்ற மாகாணத்தின் ஹாரோ என்ற இடத்தில் உள்ள ஒரு தனியார் ஆண்கள் பள்ளியாகும்.* [28]Quoted in John Bartlett, *Bartlett's Familiar Quotations*, 16th ed., gen. ed. Justin Kaplan (Boston: Little, Brown, and Co., 1992), 621.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *மகிழ்ச்சி மற்றும் மகிழ்ச்சியற்ற வியப்புக்களுக்கு மற்ற உதாரணங்*

களை உங்களால் தர முடியுமா? மகிழ்ச்சியற்ற வியப்பை நீங்கள் விரும்புகின்றீர்களா?

2. *நான்கு குதிரை வீரர்களும் இன்றைய நாட்களிலும் சவாரி செய்து கொண்டிருக்கின்றனர் என்பதை நீங்கள் ஒப்புக்கொள்ளுகின்றீர்களா?*
3. *வெள்ளைக் குதிரையின்மீது ஏறியிருந்தவர் செய்துள்ளவற்றிற்குப் பிற உதாரணங்களை நீங்கள் தர இயலுமா? அவர் உங்கள் வாழ்வில் அல்லது உங்கள் குடும்பத்தினர் அல்லது நண்பர்களின் வாழ்வில் எப்போதாவது சவாரி செய்துள்ளாரா? சிவப்புக் குதிரை, கறுப்புக் குதிரை மற்றும் மங்கின நிறமுள்ள குதிரை ஆகியவைகளின்மீது சவாரிசெய்த நபரின் விஷயம் என்ன?*
4. *தேவன் சோதனைகளுக்குக் காரணராகுதல் மற்றும் சோதனைகளை அனுமதித்தல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்ன?*
5. *"இந்த உலகத்தைப் பொறுத்தமட்டில், எதிர்காலம் எப்போதுமே துன்பம் நிறைந்ததாகவே இருக்கும்" என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?*
6. *"நாம் உண்மையுள்ளவர்களாய் இருந்தாலும், அப்போதும் நாம் சோதனைகளை எதிர்கொள்வோம்" என்பதை நீங்கள் ஒப்புக் கொள்ளுகின்றீர்களா?*
7. *இந்தப் பாடத்தின் எழுத்தாளர், இடர்ப்பாடுகளின் "இருமடங்கை" கிறிஸ்தவர்கள் பெறுவார்கள் என்று கூறுகின்றபோது, அவர் அர்த்தப்படுத்துவது என்ன? அதை நீங்கள் ஒத்துக்கொள்கின்றீர்களா?*
8. *பல ஆண்டுகளுக்கு முன்பு பாய்ந்தோடுதல் ஒன்றின் காரணமாக எழுந்த பயங்கரத்தை விவரிப்பதற்கு இந்த எழுத்தாளர், புகை வண்டியொன்றின் விவரிப்பைப் பயன்படுத்துகின்றார். நீங்கள் எந்த விவரிப்பைப் பயன்படுத்துவீர்கள்?*
9. *தேவன், "இடர்ப்பாட்டிற்குள்ளாகும் தமது பிள்ளைகளை எப்போதும் ஆதரிப்பார்" என்பதை நீங்கள் ஒப்புக்கொள்கின்றீர்களா?*
10. *நமது விசுவாசத்தை அழிப்பதற்குச் சாத்தான், உலகப்பிரகாரமான பிரச்சனைகளை எவ்வாறு பயன்படுத்துகின்றான்? அவன் பொதுவாக உலகத்தில் செயல்விளைவுடன் இருக்கின்றான் என்று நீங்கள் நினைக்கின்றீர்களா? மிகமுக்கியமாக, அவன் உங்கள் சொந்த சிந்தனையில் செயல்விளைவு எதையும் கொண்டுள்ளானா?*
11. *தேவன் நம் பக்கமாக இருக்கின்றார் என்று உண்மையிலேயே நாம் நம்புகின்றோமா? அதை நாம் உண்மையிலேயே நம்பினால், அது நம் வாழ்வில் என்ன விதமான செயல்விளைவைக் கொண்டிருக்கும்?*

நான்கு குதிரை வீரர்கள் (6:1-8)

23

நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!

(6:9-11)

"முதல் கிறிஸ்தவ நாடகம்"[1] *என்பதின் மீதான திரையானது நான்கு முறை மேல் எழும்பியுள்ளது. குதிரை வீரர் ஒருவர் பூமியின் குறுக்கே ஓடி, அழிவின் தடத்தை விட்டுச் செல்லும் பயங்கரமான குதிரையின்மீது ஏறியிருந்ததை, யோவான் நான்கு முறை கண்டிருந்தார்.*

குளம்பொலிகள் தேய்ந்து மறைந்தபோது, திரையானது ஐந்தாவது முறையாக மெதுவாக மேல் எழும்பத் தொடங்கிற்று. பேரழிவை ஏற்படுத்தும் நான்கு சவாரிகளின் யுத்தத்திற்குப் பின்பான, கொலைகளின் காட்சியைக் காணவிருத்தல் பற்றி யோவான் வியப்படைந்திருக்க மாட்டார். சிதைக்கப்பட்ட உடல்கள் புழுதியில் கிடக்கும் அமைதியான, அசைவற்ற காட்சியை அவர் எதிர்பார்த்து இருந்திருக்கலாம். அதற்குப் பதிலாக, யோவானின் காதுகள் - இடர்ப்பாடு அடைந்த குரல்களின் பல்லவியான - இரைச்சலினால் தாக்கப்பட்டன.

திரை மேலே எழுந்தபோது, நான்கு குதிரை வீரர்களின் கைவேலையை யோவான் கண்ணோக்கிக் கொண்டிருந்தார், ஆனால் இயல்பான இவ்வுலகம் காட்சியில் அமைந்திருக்கவில்லை. மாறாக, அவர் ஆவிகளின் உலகத்தினுள் கண்ணோக்கிக் கொண்டிருந்தார். பின்னணியில் தேவனு டைய பரிசுத்த இடம் இருந்தது, மேடையின் மையப்பகுதியில் பலிசெலுத்தும் மாபெரும் பீடம் இருந்தது. பலிபீடத்தைச் சுற்றிலும் இருந்த தரைப்பகுதியில் இருந்து குரல்கள் வந்ததாகக் காணப்பட்டது.

யோவானின் கண்கள் சரிப்படுத்தப்பட்டபோது, அவர் பலிபீடத்தின் அடிப்பகுதியில் நிழலான உருவங்களைக் கண்டார்: அவைகள், குதிரை வீரர்களின் காட்டுத்தனமான சவாரிகளின் பாகமாயிருந்த உபத்திரவத்தில் தங்கள் உயிர்களை ஒப்புக்கொடுத்திருந்த கிறிஸ்தவர்களின் ஆத்துமாக் களாய் இருந்தன. இந்த வேதசாட்சிகளின் கரங்கள் தேவனுடைய பரிசுத்த இடத்தை நோக்கி நீட்டப்பட்டிருந்தன, இவர்களின் குரல்களில் குழப்பம் நிறைந்திருந்தன.

யோவான், தாம் கண்டதைப் பின்வரும் வார்த்தைகளில் விவரித்தார்:

அவர் ஐந்தாம் முத்திரையை உடைத்தபோது, வேதவசனத்தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள். அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது; அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலை செய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம் இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது (6:9-11). ("பலிபீடத்தின் கீழ் இருந்த ஆத்துமாக்கள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

அவர்களின் சலிப்பை யோவான் புரிந்து கொண்டிருப்பார். தேவன், "தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து" கிரியை செய்வார் (உபாகமம் 32:43) என்று மோசே எழுதியிருந்தார். இயேசுவும் பின்வருமாறு ஒப்புக்கொண்டிருந்தார்: "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ்செய்யாமலிருப்பாரோ?" (லூக்கா 18:7). தொடக்ககாலக் கிறிஸ்தவர்கள், தங்களுக்கு உபத்திரவம் தொடருவதைத் தேவன் ஏன் அனுமதித்தார் என்று அனேகமாக வியப்படைந்திருக்க வேண்டும்.

"பலிபீடத்தினடியில்" இருந்தவர்களால் கேட்கப்பட்ட கேள்வியைப் பற்றி யோவான் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டிருக்கையில், திரை மூடியது. அவர் தமது தலையில் சுழலும் கேள்வியுடன் இருளில் அமர்ந்திருப்பதை என்னால் கற்பனை செய்ய முடிகிறது. தேவனுடைய கடைசி பதில் என்னவாக இருக்கும்?

அதற்குப் பதில் அளிப்பதுபோல், திரை மீண்டும் மேல்நோக்கி எழும்பத் தொடங்கிற்று. யோவானுடைய காதுகள் மீண்டும் ஒருமுறை ஒலியினால் தாக்கப்பட்டன; ஆனால் இந்த வேளையில், குரல்களுக்குப் பதிலாக, மோதல்கள், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் வெடி ஒலிகள் ஆகியவற்றை அவர் கேட்டார்: அண்டத்தைக் கிழித்துப் பிளக்கும் ஒலிகள்! யோவான் கண்ட நிகழ்ச்சியானது அவரை அதிர்ச்சிக்கு உள்ளாக்கியிருக்க வேண்டும். அவர் எழுதுகையில் அவரது கைகள் நடுங்கினவா?

அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன்; இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது; சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது; சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது, அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது. வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று; மலைகள் தீவுகள் யாவும்

தங்கள் இடங்களைவிட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள்; அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்து விட்டது, யார் நிலைநிற்கக்கூடும் என்றார்கள் (6:12-17).

ஐந்தாம் மற்றும் ஆறாம் முத்திரைகள் உடைக்கப்பட்டபோது வெளிப்படுத்தப்பட்டவற்றைக் காட்டிலும் அதிகம் நாடகத்துவமான காட்சிகளைக் கற்பனை செய்து பார்த்தல் என்பது கடினமானதாக இருக்கும். இந்தக் காட்சிகள் எவற்றை அர்த்தப்படுத்துகின்றன? இவைகள் ஒன்று மற்றொன்றுடன் சில வகைகளில் உறவுபட்டுள்ளனவா?

இரண்டாவது கேள்வியைப் பொறுத்த மட்டில், ஆறாவது முத்திரைக் காட்சியானது, ஐந்தாம் முத்திரைக் காட்சியுடன் தொடர்புடைய வகையில் கேட்கப்பட்ட கேள்விக்குத் தேவனுடைய பதிலாக உள்ளது என்று நான் நம்புகின்றேன். "இந்தக் காட்சிகள் எவற்றை அர்த்தப்படுத்துகின்றன?" என்ற முதல் கேள்விக்கு இந்தப் பாடத்திலும் அடுத்த பாடத்திலும் பதில் அளிக்கலாம் என்று நாம் நம்புகின்றோம். இந்த எடுத்துரைப்பில் நாம், ஐந்தாவது முத்திரையை ஆராய்வோம்; அடுத்த பாடத்தில் நாம், ஆறாவது முத்திரையை ஆராய்வோம். ஐந்தாவது முத்திரையை தனிப்பட்ட வகையாக்குவதற்கு நான், இந்தப் படிப்பை, "நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!"[2] என்று அழைக்கின்றேன்.

நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்கள் (6:9, 10)

கேள்வியின் அமைவு

ஐந்தாவது முத்திரை உடைக்கப்பட்டபோது வெளிப்படுத்தப்பட்ட காட்சியின் விபரங்களைக் கண்ணோக்குவதில் இருந்து நாம் தொடங்கு வோம். பல உண்மைகள் தெளிவாக உள்ளன. முதலாவது, இதில் சித்தரிக்கப் பட்டவர்கள் வேதசாட்சிகளாய் இருந்தனர்;[3] இவர்கள் "தேவவசனத் தினிமித்தமும் தாங்கள் கொடுத்த சாட்சியினிமித்தமும் கொல்லப்பட்டவர் களாய்" இருந்தனர் (வசனம் 9ஆ). "கொல்லப்பட்ட" என்ற வார்த்தை, இயேசுவின் மரணம் குறித்துப் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தையாக உள்ளது (5:6, 9, 12; 13:8ஐயும் காணவும்).[4] இவர்கள், யோவான் நாடுகடத்தப்பட்டிருந்த அதே காரணத்திற்காகவே கொல்லப்பட்டிருந் தனர் (1:9; 1:2ஐயும் காணவும்). இவர்கள் பேரரசின் "உருவச்சிலையை ஆராதிக்க" மறுத்திருந்தனர் (13:15) மற்றும் "சிரச்சேதம்" செய்யப்

பட்டிருந்தனர் (20:4) என்று பிற்பாடு நாம் கற்போம். மரணத்தைத் தழுவ வேண்டியிருக்கும் என்று அச்சுறுத்தப்பட்ட நிலையிலும்கூட இவர்கள் உண்மையாய் நிலைத்திருந்தனர் (2:10); இவர்கள் கிறிஸ்துவுக்காக தங்கள் ஜீவனைத் தாங்களாகவே ஒப்புக்கொடுத்திருந்தனர்.

இயேசு தமது சீஷர்களிடத்தில், மனிதர்கள் "உங்களை உபத்திரவங்களுக்கு ஒப்புக்கொடுத்து, உங்களைக் கொலைசெய்வார்கள், என் நாமத்தினிமித்தம் நீங்கள் சகல ஜனங்களாலும் பகைக்கப்படுவீர்கள்" என்று எச்சரித்திருந்தார் (மத்தேயு 24:9). ஸ்தேவான் கல்லெறியப்பட்டது தொடங்கி, (நடபடிகள் 7:58-60) மற்றும் யாக்கோபு சிரச்சேதம் செய்யப்பட்டது (நடபடிகள் 12:1, 2; மாற்கு 6:22-29ஐக் காணவும்) கிறிஸ்தவ வேதசாட்சிகளின் இரத்தம் பூமியைக் கறைப்படுத்தியிருந்தது. அதிலிருந்து, ரோமப் பேரரசு, இயேசுவைப் பின்பற்றுபவர்கள்மீது ஒரு "தாக்குதல் வேளையை" ["open season"][5] அறிவித்திருந்தது. வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில், பவுல், அவரது உடன் ஊழியர்களான லூக்கா மற்றும் தீமோத்தேயு, யோவானைத் தவிர பன்னிரண்டு அப்போஸ்தலர்கள், மற்றும் நாம் அறியாத, ஆனால் கர்த்தருக்கு விலையேறப் பெற்றவர்களாய் இருந்த ஆயிரக்கணக்கான கிறிஸ்தவர்கள் உட்பட்ட யாவரும், வேதசாட்சிகளின் பட்டியலில் இருந்தனர்.

யோவான், இந்த வேதசாட்சிகளின் உடல்களை அல்ல, ஆனால் இவர்களின் "ஆத்துமாக்களையே" கண்டார் என்பதைக் கவனியுங்கள். "ஆத்துமாக்கள்" என்ற வார்த்தை, "உயிர்" என்று மாத்திரமே அடிக்கடி அர்த்தப்படுகிற *psuche*[6] என்ற வார்த்தையின் பன்மை வடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது (மத்தேயு 20:28; வெளிப்படுத்தின விசேஷம் 12:11).[7] இங்கு இந்த வார்த்தை அனேகமாக, அவர்களின் அழியாமையுள்ள ஆவிகளைக் குறிப்பிடலாம்.[8] யூதர்கள், ஒரு மனிதனின் ஆவியானது தான் குடியிருந்த உடலின் எஞ்சியுள்ள பகுதி என்ற வகையில் தக்கவைக்கப் படுகிறது என்று நினைத்தனர் (மத்தேயு 14:26; லூக்கா 24:36, 37). (யோவானுடைய நண்பர்கள் மற்றும் உடன் ஊழியர்களில் பலர் வேதசாட்சியாக மரித்திருந்தபடியால், பலிபீடத்தின் கீழ் இருந்தவர்களை அவர் அடையாளம் கண்டுகொண்டாரா என்பது பற்றி நான் வியப்படைகின்றேன்.)

இந்தப் பரிசுத்தவான்கள் இன்னமும் உயிருடன் இருந்தனர் என்பது இன்னொரு தெளிவான உண்மையாக உள்ளது. மரணம் என்பது முடிவாக இருந்தது இல்லை. அவர்களை அழித்து விட்டதாக அவர்களின் விரோதிகள் நினைத்தனர், ஆனால் கொலையாளிகளின் பட்டயம் அவர்களால் கொலை செய்யப்பட்டவர்களைக் கர்த்தருடைய பிரசன்னத்திற்குக் கொண்டு சென்றிருந்தது என்பதே உண்மை நிலையாக இருந்தது.[9] வேத சாட்சிகளாக மரித்த இவர்கள், எங்கிருந்தனர் என்பதையும் தங்களுக்கு என்ன நேர்ந்திருந்தது என்பதையும் அறிந்திருந்தனர். சிலர் உரிமை கோருவதுபோல், இவர்களின் ஆத்துமாக்கள் வெறுமனே "உறங்கிக்"கொண்டு மாத்திரம் இருக்கவில்லை.[10]

துன்புறுத்தப்படுதல் என்பது சிலகாலத்திற்குத் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது என்பது தெளிவான மூன்றாவது முடிவாக இருந்தது -

ஏனென்றால் போதுமான காலம் கடந்திருந்தது என்று வேதசாட்சியாக மரித்திருந்த இவர்கள் நம்பியிருந்தனர். துன்புறுத்தப்படுதல் அதிகமாகக்கூட ஆகியிருந்தது. வெளிப்படுத்தின விசேஷத்தின் முந்திய அதிகாரங்களில் வேதசாட்சியாக மரித்திருந்த ஒரே ஒரு நபர் மாத்திரம் - அந்திப்பா (2:13) - குறிப்பிடப்பட்டிருந்தார்; ஆனால் இந்த தரிசனம், அந்த எண்ணிக்கை பெரியதாக இருந்தது என்ற மனப்பதிவை விட்டுச் செல்கிறது. மேலும் உபத்திரவம் முடிதல் என்பதிலிருந்து வெகுதூரத்தில் இருந்தது. கேள்விகேட்டவர்களுக்கு, "தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களா"ன மற்ற பலரும் மரிக்க வேண்டும் என்று கூறப்பட்டது (6:11).

இந்த தரிசனத்தின் மற்ற விபரங்களினுடைய முக்கியத்துவம் அவ்வளவு தெளிவாயிருப்பதில்லை. எடுத்துக்காட்டாக, "பலிபீடத்தின் கீழே" என்ற சொற்றொடரின் அர்த்தம் என்னவாக உள்ளது?

பலிபீடத்தைப் பற்றிக் குறிப்பிடுதல் என்பது, வெளிப்படுத்தின விசேஷத்தில் பழைய ஏற்பாட்டின் சொல்லாக்கத்திற்கு, விசேஷமாக ஆசரிப்புக்கூடாரம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றிற்குத் தொடர்பான அடையாளத்துவத்திற்குச் சீர்பொருந்தியதாக உள்ளது. பலிபீடம் பற்றி வெளிப்படுத்தின விசேஷத்தில் அடிக்கடி குறிப்பிடப்படுகிறது (8:5; 11:1; 14:18; 16:7) மற்றும் இது, மகாப்பரிசுத்த ஸ்தலத்தின் நுழைவாயிலில் இருந்த பொன்னால் ஆன தூபப்பீடத்தை வழக்கமாக நமக்கு நினைவூட்டுகிறது (8:3; 9:13; யாத்திராகமம் 40:26, 27ஐக் காணவும்). இருப்பினும் வெளி.6ல், வேதசாட்சிகளாக மரித்தவர்கள் தங்கள் இரத்தத்தைத் தேவனுக்குப் பலியாகச் சிந்தியிருந்தனர். இரத்த பலிகள் பொன்னால் ஆன பலிபீடத்தில் அல்ல ஆனால் பரிசுத்த ஸ்தலத்திற்கு வெளியே இருந்த தகனபலிசெலுத்தும் வெண்கலப் பலிபீடத்தின்மீது செலுத்தப்பட்டன (யாத்திராகமம் 39:39; 40:29).[11] இராபர்ட் மவுன்ஸ் அவர்கள், "இங்கு பலிபீடம் என்பது தகனபலி பீடமா அல்லது தூபப்பீடமா என்று உய்த்துணர்தல் என்பது அனேகமாக முக்கியமற்றதாக உள்ளது[12] ... யோவானின் தரிசனத்தில் இந்த இரு பீடங்களும் ஏன் ஒன்றாகக் கலந்திருக்கக்கூடாது என்பதற்குக் காரணம் எதுவும் இருப்பதில்லை" என்று விளக்கம் அளித்தார்.[13] பலி என்பதே இந்த தரிசனத்தின் முக்கிய ஆய்வுக்கருத்தாக உள்ளது என்பதால், இந்த இடத்தில் பலிபீடத்தின் தோற்றத்தை நான், "வெண்கல பலிபீடம்" என்பதாகவே காண்கின்றேன்.[14]

இந்த பலிபீடத்தின்மீது பலிகள் எவ்வாறு செலுத்தப்பட்டன என்பதை நாம் பழைய ஏற்பாட்டில் ஆய்வுசெய்யும்போது, பலிசெலுத்தப்பட்ட மிருகத்தின் "இரத்தம் முழுவதையும்" ஆசாரியர், "ஆசரிப்புக் கூடாரவாசலில் இருக்கிற தகனபலிபீடத்தின் அடியிலே ஊற்றி"னார் என்று நாம் கண்டறிகின்றோம் (லேவியராகமம் 4:18; வசனங்கள் 7, 30; யாத்திராகமம் 29:12ஐயும் காணவும்). யோசிப்பஸ் என்பவரின் கூற்றுப்படி, பாவநிவாரண நாளின்போது, பலிபீடத்தைச் சுற்றிலும், கணுக்கால் ஆழத்திற்கு இரத்தம் இருந்தது. பூமியில் இரத்தத்தை ஊற்றுதல் என்பது, சடங்கின் முக்கியமான பாகமாயிருந்தது, ஏனெனில் தேவன், "மாம்சத்தின் உயிர் இரத்தத்தில்

இருக்கிறது" என்று கூறியிருந்தார் (லேவியராகமம் 17:11அ; வசனம் 14; உபாகமம் 12:23ஐயும் காணவும்).

எனவே நாம், வேதசாட்சிகளாக மரித்தவர்களின் ஆத்துமாக்கள் "பலிபீடத்தின் கீழே" இருந்தன என்ற உண்மையானது முக்கியத்துவம் வாய்ந்தது என்று முடிவு செய்கின்றோம், ஏனென்றால் அவர்களின் உயிரான இரத்தம் கர்த்தருக்கென்று பலியாக ஊற்றப்பட்டிருந்தது.[15] பவுல் தமக்குக் காத்திருந்த வேதசாட்சியாகும் மரணம் பற்றிக் குறிப்பிட்டபோது, இதே அடையாளத்தைப் பயன்படுத்தினார்: "ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப்போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது" (2 தீமோத்தேயு 4:6).

கேள்வியின் தீவிரத்தன்மை

இந்தப் பின்னணித் தகவலைக் கொண்டுள்ள நிலையில் நாம், பலிசெலுத்தப்பட்டிருந்தவர்களினால் கேட்கப்பட்ட கேள்வியைப் பற்றி ஆழ்ந்து சிந்திக்கத் தயாராக இருக்க வேண்டும். அவர்களின் கேள்வி இந்தக் காட்சியின் அச்சாணி மையமாக உள்ளது: "அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர் களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டார்கள்" (வசனம் 10).

இந்தக் கேள்வியானது முறைப்பாட்டின் காற்றொன்றை அடக்கியிருக் கலாம், ஆனால் இது மரியாதைக் குறைவு எதையும் விளக்கப்படுத்து வதில்லை. "ஆண்டவரே" என்பது முற்றான அதிகாரத்துடன் இருப்பவர் என்று அர்த்தப்படும் "despot" என்ற வார்த்தையே நாம் பெறும் கிரேக்க வார்த்தையின் மொழிபெயர்ப்பாக உள்ளது.[16] இது ஒரு அடிமை, தனது வாழ்வின்மீது முழுமையான கட்டுப்பாடு கொண்ட ஒருவரை அழைக்கப் பயன்படுத்தும் சொற்றொடராக இருந்தது. "பரிசுத்தம்" என்ற வார்த்தை, தேவன் பாவத்தைச் சகிக்க இயலாதவர் என்றும், எனவே அவர், துன்புறுத்துபவர்களின் முரட்டுத்தனத்தை எந்நாளும் பொறுத்திருக்கமாட் டார் என்றும் ஒப்புக்கொள்ளுதலாக இருந்தது. தேவனை "உண்மை யுள்ளவர்" என்று குறிப்பிடுதலானது, அவர் தமது - மக்களைத் துன்புறுத்துபவர்களைப் பழிவாங்குதல் உட்பட, தம்முடைய - வாக்குத்தத்தங்களைக் காக்கின்றவர் என்று புரிந்துணருதலாக இருந்தது. இந்த விசுவாசிகளைப் பொறுத்தமட்டில், அவர்களின் விரோதிகளைத் தேவன் பழிவாங்குவாரா இல்லையா என்பது அல்ல, ஆனால் எப்போது பழிவாங்குவார் என்பதே கேள்வியாயிருந்தது.

கலங்கச் செய்யும் கேள்வி. இந்தக் கேள்வியைப் பொறுத்தமட்டில், பழிவாங்குதலின்மீதான இதன் வலியுறுத்தம்தான் நவீன வாசகர்களைக் கவலையடையச் செய்கிறது. கிறிஸ்தவப்பதிவேடு[17] ஒன்றில் பழிவாங்குதல் என்ற கருத்திற்கு இடமில்லை என்று சிலர் வலியுறுத்துகின்றனர். அவர்கள், "நம்மை ஒடுக்குகின்றவர்களுக்கு நாம் நமது மறுகன்னத்தையும் திருப்பிக் காண்பிக்க வேண்டும் என்று இயேசு போதிக்கவில்லையா?[18] இயேசுவின்

விரோதிகள் அவரைச் சிலுவையில் அறைந்தபோதும்கூட, அவர்களுக்காக அவர் ஜெபிக்கவில்லையா?"[19] என்று கூறுகின்றனர்.

இது ஒரு சாதாரணமான விஷயமல்ல, ஆனால் பின்வரும் கருத்துக் களைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்:

(1) கிறிஸ்தவர்களின் வாழ்வில் பிரச்சனைகளும் சோதனைகளும் வரும்போது, அவர்கள் சிலவேளைகளில், இருதயத்தில் கிடுக்கிப்பிடி போடும் கேள்விகளைக் கொண்டுள்ளனர். கேள்விகேட்பவர், சர்வவல்ல வரில் கொண்டுள்ள விசுவாசத்தை இழந்து போகாதிருக்கும் வரையில் இப்படிப்பட்ட கேள்விகளைக் கொண்டிருப்பதில் தவறு எதுவும் இல்லை என்றுகூட இது மறைமுகமாய் உணர்த்துகிறது.

(2) இந்த ஆத்துமாக்கள், பழிவாங்குதல் என்ற விஷயத்தைத் தேவனு டைய கரங்களில் விட்டுவிட்டனர் என்பதை நினைவுகூருதல் முக்கியமான தாக உள்ளது. தனிப்பட்ட வகையில் பழிவாங்குதல் என்பதற்கு எதிராகப் புதிய ஏற்பாடு போதிக்கிறது, ஆனால் அது, தேவபக்தியற்றவர்களை ஒருநாளில் தேவன் தண்டிப்பார் என்றும் வலியுறுத்துகிறது. எடுத்துக்காட் டாக, இந்தப் பாடக்கருத்தின்மீது, ரோமர் 12:17-21ல் பவுலின் அறிவுறுத்தல் களை ஆழ்ந்து சிந்தித்துப் பாருங்கள்:

> ஒருவனுக்கும் தீமைக்குத் தீமைசெய்யாதிருங்கள், ... கூடுமானால் உங்களாலானமட்டும் எல்லா மனுஷரோடும் சமாதானமாயிருங்கள். ... நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள். அன்றியும், உன் சத்துரு பசியாயிருந்தால் அவனுக்குப் போஜனங் கொடு, அவன் தாகமாயிருந்தால், அவனுக்குப் பானங்கொடு, ... நீ தீமையினாலே வெல்லப்படாமல், தீமையை நன்மையினாலே வெல்லு.

இருப்பினும், எதிர்த்துத் தாக்குதல் செய்யாமை என்ற இந்த நன்னெறிக் கூற்றுக்கு மத்தியில் பவுல், ஒரு நாளிலே தேவன் கிறிஸ்தவர்களுக்காக வாதாடி அவர்களைத் தவறாக நடத்தியவர்களைத் தண்டிப்பார் என்று வலியுறுத்தினார். பின்பு பவுல், "பிரியமானவர்களே, ... நீங்கள் பழிவாங்காமல்" என்று கூறினார், பின்பு அவர், "பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார் என்று எழுதியிருக்கிறபடியால், நீங்கள் கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" என்று கூறினார் (ரோமர் 12:19).

தனிநபருக்குரிய அல்லது தனிப்பட்ட எதிர்த்தாக்குதலைப் புதிய ஏற்பாடு கண்டனம் பண்ணுகிறது என்பதைக் கிறிஸ்தவர்கள் புரிந்துகொள்ள வேண்டும். பழிவாங்குதல் என்பது உண்மையான அல்லது கற்பனை செய்துகொள்ளப்பட்ட எந்த ஒரு எதிரிக்கும் செய்யப்பட வேண்டிய, இயல்பான, நியாயமான மற்றும் ஏற்றுக்கொள்ளத்தக்க பதில்செயலாகப் பலரால் மேன்மைப்படுத்தப்பட்டுள்ளது.[20] "பழிவாங்குதல் இனிமையானது!" என்பது பழங்காலக் கூக்குரலாக உள்ளது. இன்றைய நாட்களில் சிலர் இதைப் பின்வருமாறு விளக்கப்படுத்துகின்றனர்: "நான் பித்தனாவதில்லை; நான் சரிக்குச்சரி செய்கின்றேன்." ஏராளமான புத்தகங்கள் மற்றும்

திரைப்படங்களின் கதைக்கருவானது பழிவாங்குதல் என்ற கருத்தையே சுற்றிச் சுழலுவதாக உள்ளது; வில்லன் ஒருவனின் தலையின்மீது இடர்ப்பாடுகளையும் சங்கடத்தையும் கதாநாயகன் குவிக்கின்றபோது, பார்வையாளர்கள் உற்சாகம் அடைகின்றனர். இயேசுவைப் பின்பற்றுபவர்கள் என்ற வகையில் நாம், இந்த நடையில் பிடிபட்டு விடுவதற்கான சோதனையை எதிர்த்து நிற்க வேண்டும். இன்னமும் வேதாகமம், "ஒருவனும் மற்றொருவன் செய்யும் தீமைக்குத் தீமைசெய்யாதபடி பாருங்கள். உங்களுக்குள்ளும் மற்ற யாவருக்குள்ளும் எப்பொழுதும் நன்மைசெய்ய நாடுங்கள்" என்றே கூறுகிறது (1 தெசலோனிக்கேயர் 5:15). பழிவாங்குதல் என்பது எவ்வித மாறுபாடுமின்றி, கிறிஸ்தவமற்ற சிந்தனைகள் மற்றும் உணர்வுகளை உள்ளடக்குவதாக இருக்கிறது. இருதயத்தில் ஒரேவேளையில் கசப்பும் அன்பும் நிறைந்திருக்க முடியாது.

இதற்கு மறுபுறத்தில், தீமையானது தண்டிக்கப்பட வேண்டும் என்று புதிய ஏற்பாடு போதிக்கிறது - மற்றும் இது, தீமையானது தண்டிக்கப்படும் ஒரு நாள் வரும் என்று நமக்கு உறுதிப்படுத்துகிறது. இவ்விதமாக நாம், முன்பு குறிப்பிட்டது போன்ற வசனப் பகுதிகளைக் கொண்டுள்ளோம்: "அவர் தமது ஊழியக்காரரின் இரத்தத்திற்குப் பழிவாங்கி, தம்முடைய சத்துருக்களுக்குப் பதிலளித்து" (உபாகமம் 32:43); "அந்தப்படியே தேவன் தம்மை நோக்கி இரவும் பகலும் கூப்பிடுகிறவர்களாகிய தம்மால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களின் விஷயத்தில் நீடிய பொறுமையுள்ளவராயிருந்து அவர்களுக்கு நியாயஞ் செய்யாமலிருப்பாரா?" (லூக்கா 18:7); "பிரியமானவர்களே, பழிவாங்குதல் எனக்குரியது, நானே பதிற்செய்வேன், என்று கர்த்தர் சொல்லுகிறார்" (ரோமர் 12:19அ).

வெளிப்படுத்தின விசேஷம் 6:10ன் மொழிநடையானது இரத்த தாகம் கொண்டதாகச் சிலரைத் தாக்கினாலும், பாவம் என்பது என்றென்றைக்கும் தண்டிக்கப்படாமல் விடப்படுதல் என்பது தவறானதாக இருக்கும் என்று பெரும்பான்மையானவர்கள் நம்புகின்றனர். சாத்தானும், அவனது தீமையின் சக்திகளும் கடைசியில் அழிக்கப்பட வேண்டும் என்று நீங்கள் நினைத்தால், உங்கள் தலையை அசையுங்கள்.[21] உங்களை நான் காண இயலாது, ஆனால் உங்களில் பெரும்பான்மையானவர்கள் உங்கள் தலைகளை அசைத்தீர்களென்று நான் அறிவேன். நன்மைக்குப் பலன் அளிக்கப்படுதலும் தீமை தண்டிக்கப்படுதலும் சரியானது என்றும், இதற்கு நேர் எதிரான விஷயம் உண்மையாய் இருத்தல் தவறானது என்றும் உள்ளுணர்வின் மூலம் நாம் அறிகின்றோம்.[22]

இருப்பினும் "தேவனுடைய பழிவாங்குபவர்"[23] என்ற பணிப் பொறுப்பை நாமே நம்மீது மேற்கொள்ளுதல் என்பது உங்களுக்கும் எனக்கும் உரியதல்ல என்பதை நான் வலியுறுத்த அனுமதியுங்கள். பவுலின் கட்டளையை மறந்து விடாதிருங்கள்: "பிரியமானவர்களே, ... நீங்கள் பழிவாங்காமல், கோபாக்கினைக்கு இடங்கொடுங்கள்" (ரோமர் 12:19).[24] "பலிபீடத்தின் கீழிருந்த" பரிசுத்தவான்கள் அதைத்தான் செய்து கொண்டிருந்தனர்.

(3) சில விளக்கவுரையாளர்கள், "எதுவரைக்கும்?" என்று கூப்பிட்டவர்கள், தேவனின் நிமித்தமானவற்றினின்று விடுவிக்கப்பட்டவர்களைப் போல் தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலைக் கொண்டிருக்கவில்லை என்ற கருத்தை முன்வைத்துள்ளனர் - இதை உண்மையென்றே நான் நம்புகின்றேன். அந்தத் துன்மார்க்கர்மீது தேவன் பழிவாங்குதலினால் அவர்கள் (பலிபீடத்தின் கீழ் இருந்தவர்கள்) தனிப்பட்ட வகையில் ஆதாயம் எதுவும் அடையப் பெற்றிருக்கவில்லை; அவர்கள் ஏற்கனவே தங்கள் நித்திய சுதந்திரத்தைப் பெற்றுக்கொள்ளும் செயல்முறையில் இருந்தனர். அவர்கள் தேவனுடைய நற்பெயரைப் பற்றி அக்கறை கொண்டிருந்தனர். தேவன் ஒன்றும் செய்யவில்லையென்றால், அவர்களின் விரோதிகளுக்கு, கர்த்தர் பலவீனமானவராகவும் ரோமர்களால் வணங்கப்பட்ட தெய்வங்களுடன் ஒப்பிடுகையில், செயல்விளைவற்றவராகவும் காணப்படலாம்.

அந்த அக்கறை வேதவசனங்களில் அடிக்கடி ஒலிக்கப்படுகிறது. உதாரணமாக, சங்கீதம் 79ஐ வாசித்துப் பாருங்கள்: சங்கீதக்காரர், "எங்களை இரட்சிக்கும் தேவனே, நீர் உமது நாமத்தின் மகிமையினிமித்தம் எங்களுக்கு உதவிசெய்து, உமது நாமத்தினிமித்தம் எங்களை விடுவித்து, எங்கள் பாவங்களை நிவிர்த்தியாக்கும்'' (வசனம் 9). ''உமது நாமத்தின் மகிமையினிமித்தம்" மற்றும் "உமது நாமத்தினிமித்தம்" என்ற வார்த்தைகளை அடிக்கோடிடவும்; மக்கள் கர்த்தரை எவ்விதமாய்க் கண்ணோக்குவார்கள் என்பது பற்றி அக்கறை வெளிப்படுத்தப்பட்டது. பின்பு அந்த எழுத்தாளர், "அவர்களுடைய தேவன் எங்கே என்று புறஜாதிகள் சொல்வானேன்?" என்று கேட்டார் (வசனம் 10அ). இது, புறதெய்வ வணக்கத்தார் ''அவர் உண்மையிலேயே தேவனாக இருந்தால், அவர் ஏன் சிலவற்றைச் செய்யாமல் இருக்கின்றார்?'' என்று கேட்கின்ற குறிப்பிட்ட வகையிலான குற்றப்படுத்துதலாக உள்ளது. இந்தக் காரணத்தினால் சங்கீதக்காரர், "உமது ஊழியக்காரருடைய சிந்துண்ட இரத்தத்தின் பழிவாங்குத(லுக்கு)" பின்வரும் வார்த்தைகளில் வேண்டுதல் செய்தார் (வசனம் 10இ): "ஆண்டவரே, எங்கள் அயலார் [அதாவது, அவர்களைச் சுற்றியிருந்த விரோதி நாடுகள்] உம்மை நிந்தித்த நிந்தையை, ஏழத்தனையாக அவர்கள் மடியிலே திரும்பப்பண்ணும்" (வசனம் 12). அவர் "எங்கள் அயலார் எங்களை நிந்தித்த நிந்தையை" என்று கூறுவதில்லை, ஆனால் "ஆண்டவரே, எங்கள் அயலார் உம்மை நிந்தித்த நிந்தையை" என்று கூறினார்.

இந்தக் காரணிகள் ஒவ்வொன்றும் ஆழ்ந்து சிந்திக்கப்படும்போது, பலிபீடத்தின் கீழ் இருந்தவர்களின் கூப்பிடுதல் "மன்னிக்கக் கூடியதாக மாத்திரம் அல்ல, ஆனால் சரியானதாகவும்'' இருந்தது என்று மிகாயீல் வில்காக் அவர்கள் சரியாகவே கூறினார்[25] என்று நான் நம்புகிறேன்.

மிகவும் நிலையான ஒரு கேள்வி. இப்போது நாம், யோவானின் நாட்களில் வேதசாட்சியாக மரித்தவர்களிடத்தில் இருந்து நமது கவனத்தை, பொதுவாக தேவனுடைய மக்கள்மீது திருப்புவோம். முதல் நூற்றாண்டின் முடிவுக்கு அண்மையில் ஒலிக்கப்பட்ட கேள்வியானது, கர்த்தரைப் பின்பற்ற முயற்சி செய்கின்றவர்களுக்கு என்றென்றைக்கும் புதிர்நிறைந்ததாக இருந்துள்ளது.[26] தாவீது, "கர்த்தாவே, எதுவரைக்கும் என்னை மறந்திருப்பீர்,

எதுவரைக்கும் உம்முடைய முகத்தை எனக்கு மறைப்பீர்? என் இருதயத்திலே சஞ்சலத்தை நித்தம் நித்தம் வைத்து, எதுவரைக்கும் என் ஆத்துமாவிலே ஆலோசனை பண்ணிக்கொண்டிருப்பேன்? எதுவரைக்கும் என் சத்துரு என்மேல் தன்னை உயர்த்துவான்?" என்று கேட்டார் (சங்கீதம் 13:1, 2).

ஆபகூக்கும் இதே கேள்வியைக் கேட்டார்: "கர்த்தாவே, நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் கேளாமலிருக்கிறீரே! கொடுமையினிமித்தம் நான் எதுவரைக்கும் உம்மை நோக்கிக் கூப்பிடுவேன், நீர் இரட்சியாமலிருக்கிறீரே!" (ஆபகூக் 1:2). எரேமியா, "எதுவரைக்கும்?" என்ற கேள்வியுடன் "ஏன்?" என்ற கேள்வியையும் ஒன்று கலந்தார்: "... ஆகாதவர்களின் வழி வாய்க்கிறதென்ன? துரோகஞ்செய்து வருகிற அனைவரும் சுகித்திருக்கிறதென்ன? ... எந்தமட்டும் தேசம் புலம்பி, எல்லா வெளியின் புல்லும்வாடி, அதின் குடிகளுடைய பொல்லாப் பினிமித்தம் மிருகங்களும் பறவைகளும் அழியவேண்டும்!" (எரேமியா 12:1இ - 4அ).

விசுவாசிகள் இந்தக் கேள்விகளுடன் எப்போதுமே போராடிக் கொண்டுள்ளனர். தேவன் துன்மார்க்கரைத் தண்டிப்பதாகவும் நீதிமான் களை நிலைநிறுத்துவதாகவும் வாக்களிக்கின்றார், ஆனால் இது நாம் பொறுமையற்றவர்கள் ஆகும்படிக்கு மிக அரிதாகவே நடைபெறுவதாக நாம் காண்கின்றோம். நம்மைப் பற்றி நாம் காணுகையில், தேவபக்தியற்ற வர்கள் சுகித்திருக்கையில், தேவபக்தியுள்ளவர்கள் அடிக்கடி ஒடுக்கப் படுகின்றனர்.

இந்த உலகத்தில்

தேவன் ஒவ்வொன்றையும் சரியாக்குவார் என்று நாம் நமது இருதயங்களில் நம்புகின்றோம், ஆனால் அவர் இதை எப்போது செய்வார்? ஆண்டுகளினூடே மற்றவர்களைப் போல், நாமும் தேவனுடைய கால அட்டவணை[27] பற்றிப் பிரச்சனையைக் கொண்டுள்ளோம். அது நம்மை, நீங்களும் நானும் கேட்கும் கேள்வியினிடத்தில் கொண்டுவருகிறது.

ஒரு தனிப்பட்ட கேள்வி. நாம் இன்னமும் கேள்விகளைக் கொண்டுள் ளோம். சிலவேளைகளில் நமது கேள்விகள், வெளிப்படுத்தின விசேஷம் 6:10ல் கேட்கப்பட்ட கேள்வியைப் போல் உள்ளன. ஆணியால் அறையப் பட்டுள்ளதாகக் காணப்படும் ஒவ்வொன்றும் கழன்று வந்து கொண்டிருப்ப தாக உணரும் ஒரு உலகத்தில் நாம் வாழ்கின்றோம்.[28] நாம் நமது தலைகளை அசைத்து, "இந்த உலகம் என்னவாகிக் கொண்டிருக்கிறது?"; "இது

நடைபெறுவதற்கு இன்னும் எவ்வளவு காலம் கர்த்தர் அனுமதிப்பார்?"; "எதுவரைக்கும் ஆண்டவரே நீர் இந்தக் குழப்பத்தை சீர்படுத்தாதிருப்பீர்?" என்கிறோம்.

சிலவேளைகளில் நமது கேள்வி அதிகம் தனிப்பட்ட வகையிலானதாக உள்ளது: "எனது வாழ்வில் தவறாயிருப்பதை ஆண்டவரே நீர் இன்னும் எவ்வளவு காலம் சீர்படுத்தாதிருப்பீர்?" யோவானின் நாட்களில்இருந்த கிறிஸ்தவர்களைப் போன்று, நீங்களும் - உங்கள் குடும்பம், உங்கள் முன்னாள் நண்பர் அல்லது உங்கள் அயலகத்தவரால் - துன்புறுத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் சரியானதைச் செய்வதற்குப் போராடிக் கொண்டு இருக்கையில் தவறாக நடத்தப்பட்டிருக்கலாம். ஒருவேளை நீங்கள் எப்போதுமே நேர்மையான முறையில் உங்கள் வேலையைச் செய்து கொண்டிருக்கலாம், ஆனால் உங்கள் முதலாளியிடம் மனங்குளிரப்பேசி (அவரைக் காக்காய் பிடித்து), தமது நேரத்தை வீணில் செலவிடும் ஒருவரே பதவி உயர்வு பெறுபவராய் இருப்பார் என்றிருக்கலாம்.

ஒருவேளை நீங்கள், எரேமியா தீர்க்கதரிசியைப் போல், உங்கள் கேள்வியுடன் "ஏன்?" என்பதையும் கூட்டிக்கொள்ளலாம்: "ஆண்டவரே, எனக்கு ஏன் இவ்வளவு அதிகமான பிரச்சினைகள்?" "ஆண்டவரே, எனது துணை (அல்லது பிள்ளை) இறந்து போனது ஏன்?" "ஆண்டவரே, நான் எனது பிள்ளையைச் சரியான முறையில் வளர்க்க முயற்சி செய்தேன்! அவர்கள் தவறானவர்கள் ஆனது ஏன்?" "ஆண்டவரே, நான் செலுத்த வேண்டிய தொகைகளைச் செலுத்த இயலாது போவது ஏன்?" "ஆண்டவரே, எனக்கு புற்றுநோய் (அல்லது வலிப்புநோய் அல்லது இருதய தொந்தரவு) வந்தது ஏன்?" "ஆண்டவரே, நான் ஏன் இவ்வளவு தனிமையாய் இருக்கின்றேன்?" "ஆண்டவரே, நான் இன்னும் எவ்வளவு காலம் இப்படியே இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியவில்லை! எதுவரைக்கும் நீர் எனக்கு உதவிசெய்யாதிருப்பீர்? எதுவரைக்கும்?"

வசனங்கள் 9, 10ல் உள்ள காட்சியை மீண்டும் கண்ணோக்குவதற்குச் சற்று நேரம் எடுத்துக் கொள்ளுங்கள். உங்கள் சிந்தையில் தோன்றும் வார்த்தை என்ன? "பொறுமையின்மை?" "குழப்பம் அடைந்த நிலை?" "சலிப்பு அடைந்த நிலை?" "கலக்கம் அடைந்த நிலை?" "இடர்ப்பாடு அடைந்த நிலை?" தேவனுடைய மக்கள் ஒடுக்கப்பட்டிருந்தனர், அதைப் பற்றி ஏதேனும் செய்வதற்கு - உடனடியாக - தேவன் வராதிருந்தது ஏன்? என்று அவர்களால் புரிந்து கொள்ள முடியாதிருந்தது! அவர்கள் எவ்வளவு தடுமாறிக் கலங்கியிருப்பார்கள் என்பதை நீங்கள் விவரிக்கலாம்.

தேவன் பதில்களைக் கொண்டுள்ளார் (6:11)

"நீங்கள் கேள்விகளைக் கொண்டிருந்தால், தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்" என்பது இந்தப் பாடத்தின் தலைப்பில் பிரதிபலிக்கிற கருத்தாக உள்ளது. இந்த வேளை, நமது வசனப் பகுதியில் - முதல் நூற்றாண்டில் இருந்தவர்களுக்கும் நமக்கும் - காணக்கூடிய பதில்கள் யாவை என்பதைக் கண்ணோக்குவதற்கான வேளையாக உள்ளது.

அப்போது தேவனுடைய பதில்

நாம் வசனம் 11ஐ வாசிக்கும்போது, நாம் ஏமாற்றம் அடையலாம் - ஏனெனில் முதலில் இது, தேவன் பரிசுத்தவான்களின் கூப்பிடுதலைப் புறக்கணித்தார் என்பதுபோல் தோற்றம் அளிக்கிறது. "எது வரைக்கும்?" என்ற கேள்வியானது பதில் அளிக்கப்படாமல் ஆகாயத்தில் தொங்குவது போல் காணப்படுகிறது:

> அப்பொழுது அவர்கள் ஒவ்வொருவருக்கும் வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டது, அன்றியும், அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணி விடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்கொஞ்சக்காலம்[29] இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது (வசனம் 11).

இருப்பினும் மேலும் படித்தபின்பு, இவ்வசனத்தில் பதில் ஒன்று தரப்பட்டுள்ளதை நாம் காண்கின்றோம். ஏற்பாடு, செயல்பாடு மற்றும் புத்திகூறுதல் ஆகியவற்றில் நாம், மூன்று பாகங்கள் கொண்ட பதில் ஒன்றைக் காண்கின்றோம். "சரியானதைச் செய்வதற்கு நீங்கள் என்னில் நம்பிக்கை கொண்டவர்களாய் இருக்க வேண்டும்" என்பது அடிப்படை யான பதிலாக உள்ளது.

மூன்று பாகங்கள் பின்வருமாறு:

(1) "என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: நீங்கள் புரிந்துகொள்ள இயலாது." வேதசாட்சிகளாக மரித்தவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டன மற்றும் அவர்கள் "இளைப்பாறும்படி" கூறப்பட்டனர் என்ற உண்மையானது, அவர்களைத் தேவன் புறக்கணிக்கவில்லை என்பதையும் அவர்களின் கேள்வியை அவர் புறக்கணிக்கவில்லை என்பதையும் நாம் அறியச் செய்கிறது. பின்பு ஏன் அவர் பதில் அளிக்காதிருந்தார்? அனேகமாக இது, அவர்கள் புரிந்துகொள்ள இயலாது என்பதால் இவ்வாறு இருந்திருக்கலாம். வேதவசனங்களின் மற்ற இடங்களில் கேட்கப்பட்டுள்ள "எது வரைக்கும்?" என்ற கேள்வியை ஆய்வு செய்யுங்கள். பெரும்பாலான வேளைகளில் தேவன் பதில் அளிப்பதற்கு அக்கறை கொள்ளவில்லை.[30] தேவனுடைய முழுமையான திட்டங் களையும் நோக்கங்களையும் பொறுத்தவரையில், மனிதர்கள் அவற்றைப் புரிந்துகொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றனர் (ஏசாயா 55:8, 9).[31]

J. W. இராபர்ட்ஸ் அவர்கள், "கேள்வி கேட்பவர்களின் அக்கறையைக் காட்டிலும் தேவனுடைய அக்கறை விலாசமானதாக உள்ளது"[32] என்று கூறினார் - அது சந்தேகத்திற்கு இடமின்றி உண்மையாக உள்ளது. வேதசாட்சிகளாக மரித்தவர்கள் நிகழ்காலத்தைப் பற்றி அக்கறை கொண்டிருக்கையில், ஆண்டவர் நீண்ட - காலக் கண்ணோக்கைக் கொண்டிருந்தார்.

(2) "என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: நான் உங்களைப் பற்றி அக்கறை கொண்டுள்ளேன்." தேவன் இந்தக் கேள்விக்கு நேரடியாக வார்த்தையின் மூலம் பதில் கொடுக்கவில்லை என்றாலும், அது அக்கறைக்

குறைவைச் சுட்டிக்காண்பிப்பது இல்லை. ரோமர் 8ல் பவுலின் வார்த்தைகள் இவ்விடத்திற்கு ஏற்புடையவைகளாய் உள்ளன:

> *உமதுநிமித்தம் எந்நேரமும் கொல்லப்படுகிறோம், அடிக்கப்படும் ஆடுகளைப்போல எண்ணப்படுகிறோம் என்று எழுதியிருக்கிறபடி நேரிட்டாலும், கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ? இவையெல்லா வற்றிலேயும் நாம் நம்மில் அன்புகூருகிறவராலே முற்றும் ஜெயங்கொள்ளுகிறவர்களாயிருக்கிறோமே. மரணமானாலும், ஜீவனானாலும், தேவதூதர்களானாலும், அதிகாரங்களானாலும், வல்லமைகளானாலும், நிகழ்காரியங்களானாலும், வருங்காரியங் களானாலும், உயர்வானாலும், தாழ்வானாலும், வேறெந்தச் சிருஷ்டியானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப் பிரிக்க மாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன் (ரோமர் 8:35-39).*

உபத்திரவமும் சோதனைகளும் தேவனுடைய அன்பை விலக்கி வைப்ப தில்லை.

இப்போது நாம் ஆழ்ந்து சிந்தித்துக் கொண்டுள்ள வசனப்பகுதியில், தேவன் பரிசுத்தவான்களுக்கு வெள்ள அங்கிகளைக் கொடுத்ததின் மூலம், தமது அன்பைக் காண்பித்தார், வெள்ளை அங்கிகள் எனப்படுபவை, தேவனுடைய அங்கீகாரத்தைச் சுட்டிக்காண்பிப்பதற்கு, வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில்[33] அடிக்கடி குறிப்பிடப்பட்டுள்ளன: இவைகள் *வாக்குத்தத்தத்தின் அங்கிகளாய்* இருந்தன. ஏழுசபைகளுக்கு எழுதப்பட்ட கடிதங்களில், ஜெயங்கொள்ளுபவர்களுக்கு "வெள்ளை உடைகள்" வாக்களிக்கப்பட்டன (3:5). இவைகள் *வெற்றியின் அங்கிகளாய்* இருந்தன. வெண்மை என்பது வெற்றியின் நிறமாய் இருந்தது.[34] கிறிஸ்தவத்தின் காரணம் பூமியின் குடிகளுக்கு எவ்விதமாய்க் காணப்பட்டாலும், அது வெற்றிகரமானதாகவே இருந்தது. தங்கள் விசுவாசத்திற்காக மரித்தவர்கள், தனிப்பட்ட முறையில் ஜெயங் கொண்டவர்களாய் இருந்தனர். இவைகள் *கனப்படுத்தப்படுதலின் அங்கிகளாய்* இருந்தன. ஜான் பௌமன் அவர்கள், வெள்ளை அங்கிகளை "பரலோக அரியணை அறையின் 'அரண்மனை உடை' " என்று குறிப்பிட்டார். அவர், "மேன்மைவாய்ந்த வட்டாரத்தில் அரசருக்கு ஏற்புடைய வகையில் உடுத்துவிக்கப்பட்டு முன்னிறுத்தப் படுபவர் யார்?" என்று கூறினார்.[35] அடுத்த அதிகாரத்தில் நாம், "... திரளான கூட்டமாகிய ஜனங்கள், ... சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக் கண்டேன்" என்பதை வாசிக்கும்போது, அவர்கள் "வெள்ளை அங்கிகளைத் தரித்து" இருப்பார்கள் (7:9).

இவ்விதமாக, பரிசுத்தவான்களுக்கு அங்கிகளைக் கொடுத்ததில் தேவன், அவர்களிடத்தில் "நான் உங்களை மறந்துவிடவில்லை. நீங்கள் சகித்துக் கொண்டிருக்க வேண்டியிருந்தது என்பதை நான் அறிந்திருக்

கின்றேன், உங்களைப் பற்றிப் பெருமைப்படுகின்றேன். உங்கள்மீது நான் கொண்டுள்ள அன்பிற்கு நிரூபணமாகவும், உங்கள் நித்திய மகிழ்ச்சியான வாக்குறுதியாகவும் இந்த அங்கிகளை உங்களுக்கு உடுத்துவிக்கின்றேன்!" என்று கூறினார்.

(3) "என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: இது சரியாகிவிடும்." தேவன் பரிசுத்தவான்களுக்குச் சிலவற்றைச் செய்வதோடு நின்றுவிடவில்லை; அவர்களுக்கு அவர் சிலவற்றைக் கூறவும் செய்தார்: "இன்னுங்கொஞ்சக் காலம்[36] இளைப்பாறவேண்டும் என்று அவர்களுக்குச் சொல்லப்பட்டது" (வசனம் 11ஆ). "இளைப்பாற" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள வார்த்தை "காத்திருக்க" என்று அர்த்தப்படக்கூடும், இங்கு "பொறுமையாக இருக்க" என்பது மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. குட்ஸ்பீடு என்பவர் மொழிபெயர்த்துள்ள வேதாகமத்தில், "அவர்கள் கொஞ்சக்காலம் அமைதியாய் இருக்கவேண்டும் என்று கூறப்பட்டது" என்றுள்ளது.[37] வெளிப்படுத்தின விசேஷத்தின் பிற்பகுதியில் இவ்வார்த்தை "இளைப் பாறுதல் மற்றும் அமைதியாயிருத்தல்" என்பதைக் குறிக்கிறது: "'கர்த்தருக்குள் மரிக்கிறவர்கள் இதுமுதல் பாக்கியவான்கள்'!, 'அவர்கள் தங்கள் பிரயாசங்களை விட்டொழிந்து இளைப்பாறுவார்கள்' ஆவியானவர் 'ஆம்' என்று திருவுளம் பற்றுகிறுர்" (14:13). 6:11ல் "இளைப்பாறுதல்" என்பது 14:13ல் உள்ள அதே அர்த்தம் கொண்டிருக்கலாம்.

வேதசாட்சிகளாக மரித்தவர்கள், "தங்களைப்போலக் கொலைசெய்யப் படப்போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும்" (வசனம் 11இ) இளைப்பாறும்படி கூறப்பட்டது. இது, தேவன் தமது கரத்தில் கணக்கிடும் கருவி[38] ஒன்றை வைத்திருப்பதாகவும் குறிப்பிட்ட தொகை வரும் வரைக்கும் கொலைசெய்யப்பட்டவர்களை அவர் எண்ணிக் கொண் டிருந்ததாகவும் மனப்பதிவு ஒன்றை விட்டுச் செல்லலாம். உங்களிடம் NASB வேதாகமம் இருந்தால், "தொகை" என்ற வார்த்தை சாய்வெழுத்துக்களில் இருப்பதைக் கவனியுங்கள், இது இவ்வார்த்தை மொழிபெயர்ப்பாளர் களால் கூட்டப்பட்டதைச் சுட்டிக்காண்பிக்கிறது. மூல வசனத்தில் "தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்கள் நிறைவாகு மளவும்" என்று மாத்திரம் உள்ளது. NCV வேதாகமம் பின்வரும் கருத்தைக் கொடுக்கிறது: "அவர்களைப்போல், கிறிஸ்துவின் ஊழியத்தில் இருந்த அவர்களின் உடன் ஊழியர்கள், சகோதர சகோதரிகள் இன்னமும் கொல்லப்பட வேண்டியிருந்தது. இது நிறைவடையும் வரைக்கும் அவர்கள் காத்திருக்க வேண்டியிருந்தது." லியோன் மோரிஸ் அவர்கள், வசனம் 11ன் கடைசிப் பகுதியைப் பற்றிப் பின்வருமாறு விளக்கம் அளித்தார்,

> இது, தேவன் வேதசாட்சியாக மரிப்பவர்களின் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையை விரும்புகின்றார் என்றும் அந்த ஏதாவதொரு வழியில் அடையப்படும் வரையிலும் அவர் காத்திருக்கின்றார் என்றும் அர்த்தப்படுவதில்லை. [மாறாக இது] அவர் தமது திட்டத்தைச்

செயல்படுத்திக்கொண்டுள்ளார் மற்றும் அந்தத் திட்டத்தில் மற்ற வேதசாட்சிகளுக்கு இடம் உள்ளது [என்று அர்த்தப்படுகிறது]. அந்தத் திட்டம் துரிதப்படுத்தப்படவோ தாமதப்படுத்தப்படவோ முடியாது.[39]

அதிக காலம் கடந்து செல்வதையும் அதிக கிறிஸ்தவர்கள் மரிப்பதையும் நியாயப்படுத்துவதைச் சாத்தியமாக்கும்படிக்குத் தேவன் கொண்டிருக்கக் கூடிய திட்டங்கள் யாவை?[40] 2 பேதுரு 3ம் அதிகாரம் ஒரு குறிப்பை அளிக்கிறது. பேதுருவின் நாட்களில், கர்த்தர் ஏன் இன்னும் திரும்ப வரவில்லை என்று சிலர் வியப்படைந்தனர் (2 பேதுரு 3:3, 4). காலத்தை நாம் கண்ணோக்குவதுபோல் தேவன் கண்ணோக்குவதில்லை என்பதைப் பேதுரு வலியுறுத்தியபின்பு (வசனம் 8), அவர் இயேசுவின் மறுவருகை தாமதப்பட்டது ஏன் என்பதை விளக்கப்படுத்தினார்: "தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தத்தைக்குறித்து தாமதமாயிராமல், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்பவேண்டுமென்று விரும்பி, நம்மேல் நீடிய பொறுமையுள்ளவராயிருக்கிறார்" (வசனம் 9). "தாமதப்படுத்தப்படும் ஒவ்வொரு கணமும் சுவிசேஷ ஊழியத்திற்கான ஒரு கொடையாக உள்ளது.'' துன்புறுத்துபவர்களைத் தேவன் உடனடியாகத் தண்டிக்காது இருந்ததற்கு, அவர்கள் மனந்திரும்புவதற்கு ஒரு வாய்ப்பைக் கொடுக்க அவர் விரும்பினார் என்பது ஒரு காரணமாயிருந்தது. (இது வினோதமானதாக ஒலிக்கலாம், ஆனால் இது உண்மையாய் இருக்கிறது என்பதைப் பிந்திய படிப்புகள் காண்பிக்கும்.)

நாம் இப்போது, இடர்ப்பாடுகளை பெற்றிருந்த பரிசுத்தவான்களுக்குத் தேவனுடைய பதிலின் மூன்றாம் பாகத்திற்குத் திரும்பச் செல்லுவோம்: வசனம் 11ன் பிற்பகுதியில் காணப்பட்ட சிந்தனைகளை நாம் ஒன்றிணைக்கும்போது, கர்த்தரிடத்தில் இருந்து நாம் பின்வரும் புத்திகூறுதலைப் பெறுகின்றோம்: "நான் எனது திட்டங்களைச் செயல்படுத்திக் கொண்டுள்ளேன். அந்தத் திட்டங்கள் சற்றுக் காலத்தை எடுத்துக் கொள்ளும், ஆனால் அவைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பதில் ஒருக்காலும் சந்தேகப்படாதீர்கள். அவற்றைத் துரிதப்படுத்த உங்களால் ஒன்றும் செய்ய முடியாது, எனவே நீங்கள் காத்திருக்கையில் பொறுமையாய் இருங்கள். எரிச்சல் அடைவதற்குப் பதிலாக, இரட்சிக்கப்பட்டுள்ள உங்கள் நிலையின் ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவியுங்கள்!" வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், ''என்னில் நம்பிக்கை கொள்ளுங்கள்: இது சரியாகிவிடும்."

மீண்டுமாக, தேவனுடைய மக்கள் "எதுவரைக்கும்?" என்று கேட்ட வேதாகமத்தின் நிகழ்ச்சிகளை ஆய்வு செய்யுங்கள். அந்த ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் முடிவில், கர்த்தர் சூழ்நிலையைச் *சரியாக்கினார்* என்பதைக் கண்டறிவீர்கள்! அடுத்த இரண்டு பாடங்களில் நாம், தேவன் தமது மக்களின் உபத்திரவம் பற்றிய ஒவ்வொன்றையும் சரியாக்குவதற்கு என்ன செய்யத் திட்டமிட்டார் என்பதன் நாடக இயல்பான செயல்விளக்கங்களைக் கொண்டிருப்போம்.[41] ஆபிரகாம், "சர்வலோக நியாயாதிபதி நீதி செய்யாதிருப்பாரோ" என்று சரியாகவே கூறினார் (ஆதியாகமம் 18:25ஆ).

இப்போது தேவனுடைய பதில்

நீங்களும் நானும் இடர்ப்பாடுகளைக் கொண்டுள்ளபொழுது, விஷயங்கள் ஏன் அவ்வாறு நடந்தன என்பதை நாம் அவ்வப்போது புரிந்து கொள்கின்றோம்: இந்தப் பாடக்கருத்தின்மீது வேதாகமம், வசனப்பகுதி யொன்றைச் சிலவேளைகளில் கொண்டுள்ளது; எப்போதாவது ஒருமுறை நாம் அதைக் கண்டறியவும் முடிகிறது. இருப்பினும், பெரும்பாலும் நாம் நமது துன்பங்களுக்குப் பகுத்தறிவுள்ள விளக்கத்தைக் காணமுடிவதில்லை. நாம் புரிந்துகொள்ளாத வேளையிலும், தேவனுடைய பதில், "சரியானதைச் செய்வதற்கு என்னில் நம்பிக்கையாய் இருங்கள்" என்பதாகவே உள்ளது - அந்தப் பதிலானது இன்னும் மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது:

(1) "என்னில் நம்பிக்கையாய் இருங்கள்: உங்களால் புரிந்துகொள்ள முடியாது." தேவனுடைய நீண்டகாலத் திட்டங்களை, முதல் நூற்றாண்டில் இருந்த கிறிஸ்தவர்களைப் போல, நீங்களும் நானும் புரிந்துகொள்ள இயலாதவர்களாய் இருக்கின்றோம். முதல் நூற்றாண்டில், "கேள்விகேட் பவர்களின் அக்கறையைக் காட்டிலும் தேவனுடைய அக்கறைகள் பெரிதாயிருந்தன" என்று நாம் கண்டோம் - இது இன்றைய நாட்களிலும் உண்மையாய் இருக்கிறது.[42] நாம் உலகத்தில் நமது சிறிய மூலையைப் பற்றி அக்கறையுடையவர்களாய் இருக்கின்றோம், அதேவேளையில் தேவன், ஒவ்வொரு நபரின்மீதும் அக்கறையுடையவராய் இருக்கின்றார். நாம் நமது இடர்ப்பாடுகளில் இருந்து விடுதலை அடைதல் பற்றி அக்கறையுடையவர் களாய் இருக்கின்றோம், அதே வேளையில் தேவன், நமக்கு எது மிகச்சிறந்தது என்பது பற்றி அக்கறையுடையவராய் இருக்கின்றார். தேவன் நம்மை மகிழ்விக்க வேண்டும் என்று நாம் விரும்புகின்றோம், அதேவேளையில் தேவன் நம்மை மேன்மையானவர்களாக்க விரும்புகின்றார்.

தேவன், " 'என் நினைவுகள் உங்கள் நினைவுகள் அல்ல, உங்கள் வழிகள் என் வழிகளும் அல்ல,' … 'பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது' " என்று கூறினார் (ஏசாயா 55:8, 9). அது உண்மையாக இருப்பதால், நீதிமொழிகள் 3:5ன் பின்வரும் போதனைக்கு நாம் கீழ்ப்படிய வேண்டியுள்ளது: "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து."

(2) "என்னில் நம்பிக்கையாய் இருங்கள்: உங்களைப் பற்றி நான் அக்கறையாய் இருக்கின்றேன்." வேதசாட்சிகளாக மரித்த பரிசுத்தவான் களுக்குத் தேவன் கொடுத்த அதே வெள்ளை அங்கிகளை நமக்கும் (கொடுப்பதாக) அவர் வாக்குத்தத்தம் செய்துள்ளார் (3:5), மற்றும் அவர் தமது அன்பை அவர்களுக்கு வெளிப்படுத்தியது போலவே நம்மீதும்கூட நிலையாக வெளிப்படுத்துகின்றார். சிறுபிள்ளைகள், "இயேசு எந்தன் நேசரே, கண்டேன் (வேதநூலிலே)" என்று பாடுகின்றனர்; வயதுவந்த வர்கள், "அன்பு என்னை உயர்த்திற்று" என்று பாடுகின்றனர். இந்தப்பாடல் களின் வார்த்தைகள் உண்மையானவைகளாய் இருக்கின்றன என்று நாம் நம்புவதால், இவற்றை நாம் பாடுகின்றோம்! யோவான், "நாம்

தேவனிடத்தில் அன்புகூர்ந்ததினால் அல்ல, அவர் நம்மிடத்தில் அன்பு கூர்ந்து, நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதாரபலியாகத் தம்முடைய குமாரனை அனுப்பினதினாலே அன்பு உண்டாயிருக்கிறது" (1 யோவான் 4:10) என்று எழுதினார். நாம், தேவனுடைய அன்பைப் பற்றிய இந்த உறுதிப்பாட்டைக் கொண்டுள்ள நிலையில், நமது வாழ்வில் என்ன நடந்தாலும் அவர் நமது இருதயத்தில் மிகச்சிறந்த ஆர்வம் கொண்டுள்ளார் என்பதை அறிவு முடியும்.

(3) "என்னில் நம்பிக்கையாய் இருங்கள்: இது சரியாகிவிடும்." நம்மில் பெரும்பான்மையானவர்கள், நிகழ்ச்சிகள் ஏன் நடக்கின்றன? தேவனுடைய முழுமையான திட்டம் என்ன? அதை அவர் எப்போது செயல் படுத்தப் போகின்றார்? என்பவற்றை அறிய விரும்புவோம். நமக்குச் செய்தியானது, நீண்ட காலத்திற்கு முன்பு கேள்வி கேட்ட பரிசுத்தவான்களுக்கு அளிக்கப்பட்ட செய்தி போன்றதாகவே உள்ளது: "அமைதியாய் இருங்கள். பொறுமையாய் இருங்கள். நான் எனது திட்டத்தைச் செயல் வடிவப்படுத்துகையில் காத்திருக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இதற்கிடையில், நான் உங்களுக்குக் கொடுத்துள்ள ஆசீர்வாதங்களை மகிழ்வுடன் அனுபவியுங்கள்!" தேவனுடைய பதிலானது, நாம் விரும்புகின்றபடியாக மிகச்சரியாய் இராதிருக்கலாம், ஆனால் அதுவே நமக்கு மிகச்சரியாகத் தேவையானதாக உள்ளது.

புகழ் பெற்ற பாடல் ஒன்று பின்வரும் வார்த்தைகளைக் கொண்டுள்ளது:

பக்தர் ஓயாத சத்தம்,
"எம்மட்டும்" என்பதாம்;
ராவில் நிலைத்த துக்கம்
காலையில் களிப்பாம்.[43]

"எதுவரைக்கும்?" என்ற கேள்வியைக் கவனியுங்கள் - ஆனால் ஒரு நாளில் எல்லாம் சரியாக்கப்படும் என்பதில் உள்ள தன்னம்பிக்கையையும்/ தைரியத்தையும் கவனியுங்கள். இதை நான் மீண்டும் கூற என்னை அனுமதியுங்கள்: நமது வழியில் இடர்ப்பாடு வரும்போது நாம், ஆண்டவர்மீது நம்பிக்கை வைக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்!

> "... உங்கள் தேவனாகிய கர்த்தரை நம்புங்கள், அப்பொழுது நிலைப்படுவீர்கள் ..." (2 நாளாகமம் 20:20).
>
> உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு, ... (சங்கீதம் 37:5).
>
> "கர்த்தரை என்றென்றைக்கும் நம்புங்கள், கர்த்தராகிய யெகோவா நித்திய கன்மலையாயிருக்கிறார்" (ஏசாயா 26:4).
>
> கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான் (எரேமியா 17:7).

முடிவுரை

"நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!" சில கேள்விகளுக்குத் தேவன் உடனடியாக நமக்குப் பதில் அளிக்கின்றார்; மற்றவற்றிற்குத் தாமதிக்கின்றார். சிலகேள்விகள் பதில் அளிக்கப்படத் தகுதியற்றவை என்பதால் அவற்றிற்கு அவர் ஒருக்காலும் பதில் அளிப்பதில்லை. தேவனுடைய பதில் என்னவாக இருப்பினும், அவர் சரியானவராகவே இருக்கின்றார் - நாம் அவரில் நம்பிக்கை வைத்தாக வேண்டும்.

ஒருகேள்விக்குத் தேவன் - தமது வசனத்தில் - ஏற்கனவே பதில் அளித்துள்ளார். அந்தக் கேள்வி 1 பேதுரு 4:17ஆ வில் காணப்படுகிறது: "தேவனுடைய சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாதவர்களின் முடிவு என்னமாயிருக்கும்?" இதற்கான பதில் 2 தெசலோனிக்கேயர் 1:7ஆ, 8ல் காணப்படுகிறது: "தேவனை அறியாதவர்களுக்கும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படியாத வர்களுக்கும் நீதியுள்ள ஆக்கினையைச் செலுத்தும்படிக்கு, கர்த்தராகிய இயேசு தமது வல்லமையின் தூதரோடும், ஜுவாலித்து எரிகிற அக்கினியோடும், வானத்திலிருந்து வெளிப்படும்போது அப்படியாகும்."

நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிகிறவரைக்கும்,[44] மறுபடியும் பிறக்கிறவரையிலும்,[45] உங்களால் தேவனுடைய பிள்ளைக்குரிய முன்னுரிமை வாய்ந்த நடத்துதலைப் பெற்றுக்கொள்ள இயலாது. நீங்கள் சுவிசேஷத்திற்குக் கீழ்ப்படிய வேண்டியது அவசியமானால், அதை இன்றே செய்யுங்கள்!

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

வேதவசனங்களின் இந்தப் பகுதிக்குச் சில வேளைகளில், "வேதசாட்சியாய் மரித்தவர்களின் கூக்குரல்" என்ற தலைப்பு பயன்படுத்தப்படுகிறது. "எதுவரைக்கும்?" என்ற தலைப்பை நீங்கள் "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள பாடத்திற்குப் பயன்படுத்தாமல் இருந்தால், அது இந்தப் பாடத்திற்குச் சாத்தியக்கூறான இன்னொரு தலைப்பாக உள்ளது.

பலிபீடத்தின்கீழ் பரிசுத்தவான்களின் படம் ஒரு ஒட்டுமொத்தக் கண்ணோக்காய் உள்ளது. இடது புறத்தில் உள்ள பரிசுத்தவான்கள், "எதுவரைக்கும்?" என்று கதறுகின்றனர். வலதுபுறத்தில், பரிசுத்தவான்களில் ஒருவருக்குத் தூதன் ஒருவர் வெள்ளை அங்கியைக் கொடுக்கின்றார் (மற்றும் பரிசுத்தவான்(கள்) காத்திருக்கும்படி கூறப்படுதல் மறைவாய் உணர்த்தப்படுகிறது). இந்தப் புத்தகத்தொடரின் சித்திரங்களில் இங்குதான் முதன்முறையாக ஒரு தூதன் தோன்றுகின்றார், எனவே பிரையன் வாட்ஸ் அவர்கள், தூதனைச் சிறகின்றிச் சித்தரித்தார் என்பதைச் சுட்டிக்காண்பிக்க

இது ஒரு சிறந்தவேளையாக உள்ளது. கேருபீன்களும் சேராபீன்களும் சிறகுகள் உள்ளவைகளாக/உள்ளவர்களாக அடையாளத்துவமாய் வேதாகமத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளன(ர்), ஆனால் மக்களுக்குத் தோன்றிய தூதர்களைப் பற்றிய விவரிப்பின் பாகமாகச் சிறகுகள் என்பவை ஒருக்காலும் குறிப்பிடப்படவில்லை (எடுத்துக்காட்டாக, லூக்கா 24:4; நடபடிகள் 1:10ஐக் காணவும்). இந்தப் புத்தகத்தொடரில், தூதர்கள் சிறகுகள் இல்லாமல் சித்தரிக்கப்படுவார்கள்.

குறிப்புகள்

[1]இது வெளிப்படுத்தின விசேஷம் பற்றி ஜான் விக் பௌமன் அவர்கள் எழுதிய புத்தகத்தின் தலைப்பாக உள்ளது: *The First Christian Drama*: *The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955). [2]இது, நான் வாழும் இடத்தில் உள்ள ஒரு சொல்விளக்கத்தின் தழுவுதலாக உள்ளது: "நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? நாங்கள் பதில்களைக் கொண்டுள்ளோம்!" [3]வசனம் 9ல் உள்ள "சாட்சி" என்ற வார்த்தை, *martus* என்ற வார்த்தையின் வினைவடிவத்தில் இருந்து மொழிபெயர்க்கப்பட்டுள்ளது, இதிலிருந்தே நாம் "martyr" என்ற வார்த்தையைப் பெறுகின்றோம். [4]இது சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவரின் தொடர்பாகப் பயன்படுத்தப்பட்டிருந்த அதே அடிப்படை வார்த்தையாகவும் உள்ளது (6:4). [5]அமெரிக்க ஐக்கிய நாட்டில் உள்ள ஒவ்வொரு மாகாணமும், குறிப்பிட்ட சில விலங்குகள் மற்றும் பறவைகளை வேட்டையாடுதல் குறித்த விதிமுறைகளைக் கொண்டுள்ளன. ஒரு குறிப்பிட்ட விலங்கின் மீதான "தாக்குதல் வேளையின்" ["open season"] போது, அதை வேட்டையாட எவரொருவருக்கும் அனுமதியளிக்கப் படுகிறது; "தாக்குதல் வேளை"யாய் ["open season"] இராதபோது, வேட்டையாடுதல் சட்டவிரோதமானதாக உள்ளது. [6]இந்த வார்த்தையில் இருந்துதான் நாம், "psyche," "psychology," மற்றும் இது தொடர்பான சொற்றொடர்களைப் பெறுகின்றோம். [7]*Psuche* அல்லது "ஆத்துமா" என்பது, ஒரு நபரைக் குறிப்பிடுவதாக மாத்திரமும் இருக்கலாம் (1 பேதுரு 3:20; KJV யை ஒப்பிட்டுக் காணவும்). [8]*Psuche* என்பது சிலவேளைகளில், மனிதனின் அழிவற்ற பகுதியைக் குறிப்பிடப் பயன்படுத்தப்படுகிறது (எடுத்துக்காட்டாக, மத்தேயு 10:28ஐக் காணவும்). சந்தர்ப்பப்பொருள்தான் *psuche* என்ற வார்த்தையின் அர்த்தத்தைத் தீர்மானிக்கிறது. [9]இந்த ஆத்துமாக்கள் எங்கிருந்தனர் என்பதை மிகச்சரியாக கூறுதல் பற்றி யோவான் வேண்டுமென்றே தெளிவற்றிருந்தார். பிற்பாடு, வேத சாட்சியாக மரித்த கிறிஸ்தவர்கள் நியாயத்தீர்ப்பை அடையாமலேயே, நேரடியாகப் பரலோகத்திற்குச் செல்லுகின்றனர் என்ற மனிதப் பாரம்பரியப் போதனையொன்று எழும்பிற்று - அதை நிரூபிப்பதற்குச் சிலவேளைகளில் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் பயன்படுத்தப்படுகிறது. இந்த ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்புக்காகக் காத்திருந்த இடம் பற்றி மிகச்சரியான தகவலைத் தருதல் என்பது யோவானின் நோக்கமாய் இருக்கவில்லை. நல்ல மற்றும் பொல்லாத ஆத்துமாக்கள் நியாயத்தீர்ப்பிற்காகக் காத்திருக்கக்கூடிய இடமான காணப்படாத உலகம் பற்றிய மிகவிரிவான கலந்துரையாடல் லூக்கா 16ல் காணப்படுகிறது. [10]யெகோவா சாட்சிக்காரர்கள் மற்றும் பிற பொருள்முதல்வாத மதக்குழுவினர், மனிதன் அழிந்துபோகாத ஆத்துமாவைக் கொண்டுள்ளான் என்ற கருத்தை மறுக்கின்றனர். ஒரு நபரின் உடல் இறக்கும்போது, அந்த நபர் தேவனின் நினைவில் தவிர, இல்லாது

ஒழிகின்றார் என்று உரிமை கோருகின்றனர். வசனரீதியற்ற இந்த நிலைப்பாட்டின்படி, உயிர்த்தெழுதல் என்பது உண்மையில் ஒரு மறுபடைப்பாக உள்ளது. இந்த மற்றும் இதைப்போன்ற நிலைப்பாடுகள் சில வேளைகளில் "ஆத்துமா நித்திரை செய்யும்" கோட்பாடு என்று அழைக்கப்படுகின்றன.

[11]இந்தப் புத்தகத்தில் "கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது," என்ற இனிவரும் பாடத்தில் உள்ள, ஆசரிப்புக்கூடாரத்தின் வரைபடத்தைக் காணவும். [12]இவ்விடத்தில் பலிபீடம் என்பது எந்த பலிபீடத்தை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றி விளக்கவுரையாளர்கள் சற்றே சரிசமமாகப் பிரிந்திருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் ஒரே ஒரு பலிபீடத்தை மாத்திரமே குறிப்பிடுகிறது என்று பெரும்பான்மையானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர். [13]Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 157. [14]இயேசு "ஒரேதரமாக" பலிசெலுத்திவிட்டதால் (எபிரெயர் 10:10, 12), இது பலிபீடமாய் இருக்க முடியாது என்று சிலர் வாதிடுகின்றனர், ஆனால் கிறிஸ்தவர்களும் கர்த்தருக்கு ஆவிக்கேற்ற பலிகளாக/ஜீவபலிகளாக பேசப்படுகின்றனர் (எபிரெயர் 13:15; ரோமர் 12:1ஐயும் காணவும்). [15]இந்த அடையாளத்துவம் நமக்கு, ஆதியாகமம் 4:10ஐ நினைவுக்குக் கொண்டு வருதலை நோக்கமாய்க் கொண்டும் இருக்கலாம். [16]பல மொழிபெயர்ப்புக்களில் "இராஜரீகமான கர்த்தர்" ["Sovereign Lord"] என்றுள்ளது. "எஜமானர்" ["Master"] என்பது நல்லதொரு மொழிபெயர்ப்பாயிருக்கும். [17]இதனால், வெளிப்படுத்தின விசேஷம் புதிய ஏற்பாட்டு மதவியல் நூலின் பகுதி என்பதை ஏற்றுக்கொள்ளச் சிலர் மறுத்துள்ளனர். சிலர், பழிவாங்குதலின் மீதான இந்த வலியுறுத்தத்தை, இந்தப் புத்தகத்தின் நம்பகத்தன்மை பற்றி அறைகூவல் விடுக்கப் பயன்படுத்துகின்றனர். வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏவுதல் பெற்ற தன்மையில் நம்பிக்கை கொண்ட மற்றவர்கள், "பலிபீடத்தின்கீழ்" இருந்தவர்கள் கிறிஸ்தவர்களாய் இருக்க முடியாது, எனவே அவர்கள் யூதர்களாய் இருக்க வேண்டும் என்று முடிவு செய்கின்றனர். இருப்பினும், இவர்கள் கிறிஸ்தவர்களே என்பது கேள்விகேட்கப்பட இயலாத கருத்தாக உள்ளது: (1) இவர்கள், யோவான் நாடுகடத்தப்பட்டிருந்த அதே காரணத்திற்காகவே கொல்லப்பட்டிருந்தனர் (1:9; 6:9). (2) இவர்கள், கிறிஸ்தவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருந்த அதே பலனைப் பெற்றிருந்தனர் (3:5). (3) வெளிப்படுத்தின விசேஷம் புத்தகமானது தங்கள் உபத்திரவத்தில் அர்த்தத்திற்காகப் போராடிக் கொண்டிருந்த (யூதர்களையல்ல, ஆனால்) கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துவதற்காகவே எழுதப்பட்டது. [18]மத்தேயு 5:39. [19]லூக்கா 23:34. ஸ்தேவான் தம்மைக் கல்லெறிந்தவர்களுக்காக இவ்வாறே ஜெபம் செய்தார் (நடபடிகள் 7:60). [20]குற்றம் இழைத்தவர்களைத் தண்டிப்பதில் மிகவும் அடிக்கடி தவறியிருந்த சட்டமுறை என்பது இதற்கு ஒரு காரணமாய் இருந்தது என்று சிலர் நினைக்கின்றனர். காரணம் எதுவாக இருப்பினும், தனிப்பட்ட வகையில் பழிவாங்குதலை மேற்கொள்வதற்கோ அல்லது அதே விஷயத்தை மற்றவர்கள் செய்யும்படி ஊக்குவிப்பதற்கோ சாய்ந்து விடுதலைக் கிறிஸ்தவர்கள் எதிர்த்து நிற்க வேண்டும்.

[21]இதை நீங்கள் வேதாகம வகுப்புப் பாடமாகவோ அல்லது பிரசங்கமாகவோ பயன்படுத்தினால், உங்கள் உரையைக் கேட்பவர்கள் ஏதாவது வழியில் பதில்செயல் செய்யும்படிக் கேட்டுக்கொள்ள நீங்கள் விரும்பலாம். [22]ஜட்சோனியாவில் எனது புதன்கிழமை இரவு வகுப்பு மாணவர்களில் ஒருவர், சிறுகுழந்தைகள்கூட நியாயம் செய்வதன் கருத்தை உள்ளுணர்விலேயே பெற்றுள்ளனர் என்று சுட்டிக்காண்பித்தார். [23]தனிநபருக்குரிய அல்லது தனிப்பட்ட வகையில் தவறான செயலுக்குப் பழிவாங்குதல் செய்யத் தனிநபர்கள் தங்களைத் தேவனால்

நியமிக்கப்பட்டவர்கள் என்று நம்புவதினால் மாபெரும் தீமைகள் விளைந்துள்ளன. குடியுரிமை அரசானது, "தீமைசெய்கிறவன்மேல் கோபாக்கினை வரப் பண்ணும்படி, அவன் நீதியைச் செலுத்துகிற தேவஊழியக்காரனாயிருக்கிறானே" என்று குறிப்பிடப்பட்டுள்ளது (ரோமர் 13:4இ), ஆனால் பழிவாங்குதல் என்பது ஒருக்காலும் தனிப்பட்ட வகையிலான பழிதீர்த்துக் கொள்ளுதலாய் இருக்கக்கூடாது. [24]பவுல் தமது சொந்த அறிவுரையை மேற்கொள்வது பற்றிய ஒரு உதாரணத்திற்கு, 2 தீமோத்தேயு 4:14ஐக் காணவும். [25]Michael Wilcock, *I Saw Heaven Opened: The Message of Revelation*, The Bible Speaks Today Series (Downers Grove, Ill.: Intervarsity Press, 1975), 73. [26]கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களுடன் கூடுதலாக, சங்கீதம் 6:3; 35:17; 74:9-11; 79:5; 80:4; 89:46; 90:13; ஏசாயா 6:11; எரேமியா 47:6; சகரியா 1:12 ஆகிய வசனங்களைக் காணவும். [27]தேவனுடைய கால அட்டவணையில் பிரச்சனைகளைக் கொண்டிருந்த சிலரைப் பற்றிக் குறிப்பிடுகிற பல இணைவுகளை 2 பேதுரு 3 உடன் தரவழைக்க முடியும். அந்த வசனப்பகுதியானது இந்தப் பாடத்தின் பிற்பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ளது. [28]"உலகம் பைத்தியமாகியுள்ளதற்கான" தற்கால உதாரணங்கள் சிலவற்றை நீங்கள் கொடுக்க விரும்பலாம். [29]அவர்களுக்கு அங்கிகளைக் கொடுத்தது யார்? அவர்கள் "இளைப்பாற" வேண்டும் என்று கூறியது யார்? அனேகமாக, அவர்களுக்குத் தூதர்கள், அங்கிகளைக் கொடுத்திருக்க வேண்டும் (எபிரெயர் 1:13, 14). புத்திமதியானது பலிபீடத்தில் இருந்தே வந்திருக்கலாம் (9:13ஐக் காணவும்). இந்த செயல் மற்றும் வார்த்தைகள் ஆகியவற்றிற்குப் பின்புறத்தில் தேவன் இருந்தார் என்பதே முக்கியமானதாக உள்ளது. [30]ஏசாயா 6:11 சாத்தியக்கூறுள்ள ஒரு விதிவிலக்காக உள்ளது.

[31]யோபுவின் முறையீட்டுக்குத் தேவன் நேரடியாகப் பதில் அளிக்காமல், அதற்கு மாறாக யோபு தமது திறனற்ற தன்மையைப் புரிந்து கொள்வதற்காக, அவரிடத்தில் தேவன் வரிசையாகக் கேள்விகள் கேட்டார் என்ற உண்மையின் இணைவு தரவழைக்கப்படலாம். [32]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 67. [33]6:11ல் "அங்கி" ["உடை"] என்பதற்கு *stole* (இது "sto-lay" என்று உச்சரிக்கப்படுகிறது) என்ற கிரேக்க வார்த்தை உள்ளது. இது "நீளமாகத் தொங்கும் ஒரு உடையாக" இருந்தது (Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* [Grand Rapids, Mich.: Baker Book House, 1979], 196). இந்தக் குறிப்பிட்ட வார்த்தையானது வெளிப்படுத்தின விசேஷத்தில் இங்குதான் முதன்முறையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது (இது மீண்டும் 7:9, 13; 22:14 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்படும்), ஆனால் இது 1:13ல் குறிப்பிடப்பட்ட அதே வகையான உடையைக் குறிக்கிறது: "a robe [or garment] reaching to the feet" [தமிழில் இது "நிலையங்கி" என்றுள்ளது.] "அங்கி" என்பதற்கு மிகவும் பொதுப்படையான வார்த்தை, 3:4, 5, 18; 4:4; 16:15; 19:13, 16 ஆகிய வசனங்களில் காணப்படுகிறது; ஆனால் இவ்விரு வார்த்தைகளின் அர்த்தத்தில் குறிப்பிடத்தக்க வேறுபாடு எதுவும் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் இல்லை. [34]இந்தப் புத்தகத்தில் "முழக்கமிடும் குழம்பொலிகள்" என்ற பாடத்தில் 6:2க்கான குறிப்புகளைக் காணவும். வெற்றிகொள்பவர்கள் வெண்மை நிற உடைகளை அணிதல் பற்றிய உதாரணங்களுக்கு, 7:9 மற்றும் 19:14 ஆகிய வசனங்களைக் காணவும். [35]Bowman, 51. அந்த நாட்களில் விசேஷ நிகழ்ச்சிகளின்போது குறிப்பிட்ட உடையை அணிதலின் அவசியம் பற்றி மத்தேயு 22:11-13ல் காணமுடியும். [36]"கொஞ்சக்காலம்" என்ற சொற்றொடர் வேண்டுமென்றே தெளிவற்றதாக உள்ளது. (அது எதனுடன் ஒப்பிடும்போது "கொஞ்சக்காலமாக" இருந்தது?) கிறிஸ்தவர்களுக்கு உபத்திரவம் என்பது என்றென்றைக்கும்

உள்ளதாயிராது, அது முடிவுக்கு வரும் என்று உறுதிப்படுத்துவதே இவ்வசனப்பகுதியின் நோக்கமாயிருந்தது. [37]*The New Testament: An American Translation*, ed. Edgar J. Goodspeed (Chicago: The University of Chicago Press, 1923), 460. [38]*எண்ணிக் கணக்கிடுவதற்கு நீங்கள் வாழும் பகுதியில் பயன்படுத்தப்படும் எந்த ஒரு கருவியையாவது இவ்விடத்தில் நீங்கள் குறிப்பிடுங்கள். நான் உக்கிரைன் நாட்டில் இருந்தபோது, வணிகர்கள் சிலர், அபாகஸ் என்ற கருவியைப் பயன்படுத்தினர்.* [39]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 107. [40]*தேவபக்தியுள்ளவர்களின் மரணத்தை நாம் கண்ணோக்குவதுபோல் தேவன் கண்ணோக்குவதில்லை என்று சுட்டிக்காண்பிக்க நீங்கள் விரும்பலாம் (சங்கீதம் 116:15).*

[41]*நீங்கள் 19:2ஐக் குறிப்பிட விரும்பலாம்: "தம்முடைய ஊழியக்காரரின் இரத்தத்திற்காக ... பழிவாங்கினாரே ... ."* [42]*இவ்விடத்தில் பயன்படுத்தக்கூடிய ஒரு சிந்தனை பின்வருமாறு: "நீங்களும் நானும் சுரங்கத் தரிசனத்தைக் கொண்டுள்ளோம்." உங்கள் உரையைக் கேட்பவர்கள் புரிந்துகொள்ளக்கூடிய வகையில் "சுரங்கத் தரிசனம்"* [tunnel vision] *பற்றிய விவரித்தல் ஒன்றைக் கூட்டிக்கொள்ளுங்கள்: பார்வை மறைப்புகளுடன் [குதிரையின் கண்களின்மீது போடப்படும் திரை] உள்ள ஒரு குதிரை, சுரங்கத் தரிசனத்தை உண்டாக்கும் குளுக்கோமா என்ற கண் நோய் அல்லது தம்மைச் சுற்றி நடக்கிற விஷயங்களைக் காண இயலாத நிலையில் உள்ள ஒரு நபர் பற்றிய உதாரணம்.* [43]S. J. Stone, "The Church's One Foundation," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). *இந்தப் பாடல் உங்கள் பாடல் புத்தகத்தில் இருந்ததென்றால், இதை நீங்கள் உங்கள் ஆராதனை ஊழியத்தில் பயன்படுத்த விரும்பலாம். "கிறிஸ்து வருகின்றார்" போன்ற மற்ற பாடல்களிலும் "எதுவரைக்கும்?" என்ற வார்த்தைகள் அடங்கியுள்ளன.* [44]*ரோமர் 6:3, 4, 17, 18 ஆகிய வசனங்கள், நாம் எவ்வாறு சுவிசேஷத்திற்கு (இயேசுவின் மரணம், அடக்கம் மற்றும் உயிர்த்தெழுதல் என்ற நற்செய்திக்கு)க் கீழ்ப்படிகின்றோம் என்பதை விவரிக்கின்றன: நாம் நமது விசுவாசம் மற்றும் மனந்திரும்புதல் ஆகியவற்றினால் பாவத்திற்கு மரிக்கின்றோம்; நாம் ஞானஸ்நானத்தில் அடக்கம்பண்ண (முழுக்காட்ட)ப்படுகின்றோம், மற்றும் நாம் புதிய ஜீவனுள்ளவர்களாய் நடந்துகொள்ளும்படிக்கு உயிர்ப்பிக்கப்/எழுப்பப் படுகின்றோம்.* [45]*யோவான் 3:3, 5; 1 பேதுரு 1:22, 23.*

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்டபோது யோவான் கண்டது என்ன?*
2. *6:9, 10ன் காட்சி உங்கள்மீது ஏற்படுத்தும் மனப்பதிவை விவரிக்க நீங்கள் என்ன வார்த்தையைப் பயன்படுத்துவீர்கள்? பலிபீடத்தின் கீழிருந்த பரிசுத்தவான்கள் உணர்ந்தவாறு நீங்கள் எப்போதாவது உணர்ந்திருக்கின்றீர்களா?*
3. *பலிபீடத்தின்கீழ் இருந்தவர்கள் யார்? அவர்களுக்கு என்ன நடந்திருந்தது?*

4. "பலிபீடத்தின்கீழ்" என்ற விவரிப்பின் தனிச்சிறப்பு என்ன?
5. வேதசாட்சியாய் மரித்தவர்கள், பழிவாங்குதலுக்காகக் கதறியது உங்களைக் கவலைப் படுத்துகிறதா? இப்படிப்பட்ட எண்ணப்போக்கிற்குக் கிறிஸ்தவப் பதிவேட்டில் இடமில்லை என்று நீங்கள் நினைக்கின்றீர்களா?
6. "சரிக்குச் சரிசெய்தல்" என்று விரும்புதல் இயல்பானதாக உள்ளதா? இது சரியானதா?
7. தனிப்பட்ட பழிவாங்குதல் மற்றும் தெய்வீக நியாயந்தீர்த்தல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாட்டைப் பற்றிக் கலந்துரையாடவும்.
8. துன்மார்க்கரைத் தண்டிக்கத் தேவன் ஏன் இவ்வளவு காலம் கடத்துகின்றார் என்று நீங்கள் எப்போதாவது வியப்படைந்து இருக்கின்றீர்களா? இப்படிப்பட்ட கேள்விகள் எப்போது தவறாகின்றன?
9. இந்தப் பாடத்தின்படி, 6:11ல் மறைமுகமாய் உணர்த்தப்பட்டுள்ள அடிப்படைப் பதில் என்ன? இந்தப் பதிலின் மூன்று பாகங்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.
10. பலிபீடத்தின்கீழ் இருந்தவர்களுக்கு வெள்ளை அங்கிகள் கொடுக்கப்பட்டதின் முக்கியத்துவம் என்ன?
11. 6:11ல் "இளைப்பாறுதல்" என்ற வார்த்தையின் அர்த்தம் என்ன?
12. நீங்களும் நானும் தேவனுடைய முழுமையான திட்டத்தை எப்போதுமே புரிந்து கொள்கின்றோமா? நாம் அதைப் புரிந்து கொள்ளாதபோது, நாம் என்ன செய்ய வேண்டும்?

பலிபீடத்தின் கீழ் இருந்த ஆத்துமாக்கள் (6:9)

24

"மகாப்பெரிய நாள் ... வருகிறது"

[6:12-17]

ஒரு காலத்தில் ஒரு விவசாயி இருந்தார்; அவரை நாம் செல்வராஜ் என்று அழைப்போம். செல்வராஜ் ஒரு கிறிஸ்தவராயிருந்தார், அவர் கர்த்தரை நேசித்தார். கர்த்தருடைய சபை கூடிவரும் ஒவ்வொரு நாளிலும் அவர் அங்கிருந்தார். அது பயிர்நடும் காலமாய் இருந்தாலும்கூட, அவர் ஆராதனைக் கூட்டத்தில் இருந்தார். நாட்டில் மேகங்கள் சூழ்ந்து தமது வயல்களை அச்சுறுத்திக் கொண்டிருந்தாலும்கூட, அவர் அப்போதும்கூட ஆராதனைக் கூட்டத்தில் இருந்தார். அறுவடை காலம் நெருங்கி அவர் தமது பயிர்களை அறுத்துச் சேர்ப்பதற்கு ஒருசில நாட்களே இருந்த வேளையிலும், அவர் அப்போதும்கூட தேவனுடைய மக்களுடன் ஆராதித்துக் கொண்டிருந்தார். செல்வராஜின் இந்த உறுதிப்பாடு, அயலகத்திலிருந்த ஒரு அவிசுவாசிக்கு எரிச்சல் மூட்டியது, எனவே அந்த அயலகத்தார், ஒரு பரிசோதனைக்காக வயல் ஒன்றை தனியே ஒதுக்கினார். அவர் அந்த வயலில், செல்வராஜ் ஆராதிக்கச் சென்ற நேரங்களில் மாத்திரம் வேலை செய்தார். அறுவடையைத் தொடர்ந்து, அந்த அயலக நண்பர் செல்வராஜை அழைத்தார். அந்த மனிதர் பணக்கட்டு ஒன்றை மேஜையின்மீது வைத்து, "இது எங்கிருந்து வந்தது என்று உமக்குத் தெரியுமா? இது நீர் தேவனிடத்தில் ஜெபிப்பதற்கு வீணாக்கிக் கொண்டிருந்த நேரங்களில் நான் வேலை செய்த வயலில் இருந்து கிடைத்தது. அந்த வயல், வேறு எந்த வயலைக் காட்டிலும் 30 சதவிகிதம் அதிக பலன் தந்துள்ளது! இதற்கு நீர் என்ன கூறுகின்றீர்?" என்று கேட்டார். பணத்தைப் பார்த்த செல்வராஜ், "அறுவடை வேளையில் எல்லாக் கணக்குகளையும் தேவன் முடிப்பதில்லை என்று கூறுகின்றேன்" என்று பதில் அளித்தார்.

நமது முந்திய பாடம், ஐந்தாம் முத்திரையின்மீதும் வேதசாட்சிகளாய் மரித்தவர்களின் கூக்குரல் மீதும் மையங்கொண்டிருந்தது: *"பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர் களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச் செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?" (6:10).* உண்மையில் தேவன் அவர்களிடத்தில், "கணக்குகளைத் தீர்க்கும்" காலம் இன்னும் வரவில்லை, ஆனால் ஒரு நாளில் அவர் அதைச் *செய்வார்* என்று கூறினார் என்பதாக முடிவு செய்தோம். குற்றம் இழைத்தவர்கள் மனந்திரும்புவதற்கான ஒரு

வாய்ப்பைக் கொடுப்பதற்காகத் தேவன் தாமதித்தார் என்றும்கூட நாம் சுட்டிக்காண்பித்தோம்.

நமது தற்போதய வசனப்பகுதியானது, இதற்கு நேர்மாறாக, தேவனுடைய பொறுமை எல்லைகளைக் கொண்டுள்ளது என்று நாம் அறியச் செய்கிறது. "இனியும் பொறுப்பதில்லை!" என்று தேவன் கூறும் நாள் எவ்வித மாறுபாடும் இன்றி வருகிறது. அது நடக்கும்போது, எபிரெயருக்கு எழுதியவர் கூறுகின்றபடி, "ஜீவனுள்ள தேவனுடைய கைகளில் விழுகிறது பயங்கரமாயிருக்குமே" (எபிரெயர் 10:31). இது எவ்வளவு பயங்கரமாயிருக்கிறது என்று வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17 நமக்குக் கூறுகிறது:

> அவர் ஆறாம் முத்திரையை உடைக்கக்கண்டேன், இதோ, பூமி மிகவும் அதிர்ந்தது, சூரியன் கறுப்புக் கம்பளியைப்[1] போலக் கறுத்தது, சந்திரன் இரத்தம் போலாயிற்று. அத்திமரமானது பெருங்காற்றினால் அசைக்கப்படும்போது,[2] அதின் காய்கள் உதிருகிறதுபோல, வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது.[3] வானமும் சுருட்டப்பட்ட[4] புஸ்தகம் போலாகி விலகிப்போயிற்று, மலைகள் தீவுகள்[5] யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்றுபோயின. பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: நீங்கள் எங்கள்மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள், அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலை நிற்கக்கூடும் என்றார்கள்.

எழுத்தாளர் ஒருவர் இந்தக் காட்சியைப் பின்வருமாறு சித்தரித்தார்:

> திடீரெனப் பெருங்குழப்பம் இந்த அண்டத்தைப் பற்றிக்கொள்கிறது. ஒரு பூமியதிர்ச்சி இந்தப் பூமி முழுவதையும் அசைக்கிறது; இதன் உக்கிரத்தை எந்த ஒரு ரிக்டர் அளவையாலும் அளக்க முடியாது இருக்கிறது. சூரியன் முற்றிலுமாக மறைகிறது. உண்மையில், யோவான் "சூரியன் கறுப்புக் கம்பளியைப்போலக் கறுத்தது, சந்திரன் இரத்தம் போலாயிற்று. ... வானத்தின் நட்சத்திரங்களும் பூமியிலே விழுந்தது" (வெளிப்படுத்தின விசேஷம் 6:12, 13) என்று அறிக்கை தந்தார்.
>
> உலகமானது பயத்தில் நடுநடுங்கிக் கொண்டிருக்கிறது. பெரிய நகரங்கள் தகர்ந்தன. அரசர்களும், பிரபுக்களும், அதிகாரிகளும், செல்வர்களும், பலவான்களும், அடிமையும் சுயாதீனரும் - பூமியில் விட்டுவைக்கப்பட்டிருந்த ஒவ்வொரு மனிதரும் தேவனுடைய கடைசி நியாயத்தீர்ப்பு என்ற பயங்கரத்தில் இருந்து தப்பிக் கொள்ளும்படி ஓடுகின்றனர். அவர்கள் மலைக் குகைகளுக்குத் தப்பி ஓடுகின்றனர். அவர்கள் பாறைகள் மற்றும் குன்றுகளுக்குப் பின்னால் தங்களை மறைத்துக் கொள்கின்றனர். ஆனால் தப்புவதற்கு வழியெதுவும் இல்லை.[6]

வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17ஐ நீங்கள் வாசிக்கையில் உங்கள் சிந்தையில் தோன்றும் வார்த்தை என்ன? "T" *என்ற எழுத்தைக் கொண்டு தொடங்கும் பல வார்த்தைகள் என் சிந்தைக்குத் தோன்றுகின்றன:* "terror" *மற்றும்* "terrible," "terrifying" *மற்றும்* "terrified," "tormenting" *மற்றும்* "tormented," "trembling" *மற்றும்* "traumatic." *இவ்வசனப்பகுதி உங்களிடத்தில் விட்டுச் செல்லும் முழுமையான மனப்பதிவு என்ன? "இது நடக்கும்போது நான் இருப்பதை விரும்பவில்லை!" என்பதே நான் கொண்டுள்ள முழுமையான மனப்பதிவாக உள்ளது.*

இது தேவனுடைய விரோதிகளுக்குத்[7] *தரப்படும் தற்காலிகத் தண்டனையைக் குறிக்கிறதா அல்லது இது காலத்தின் முடிவில் உலகத்திற்கு நடைபெறவிருக்கும் கடைசி அழிவைக் குறிக்கிறதா என்பது பற்றி கலந்துரையாடுவதில் விளக்கவுரையாளர்கள் ஈடுபட்டுள்ளனர். நாம் அந்த விஷயத்தை எடுத்துரைப்போம், ஆனால் இது எல்லைக்கு உட்பட்ட தனிச்சிறப்புக் கொண்ட ஒரு கேள்வியாக உள்ளது. நான் டெக்ஸாஸின் கிளெபர்ன் என்ற இடத்தில் வசித்தபோது, வசந்தகாலமானது உக்கிரமான புயலையும் பெரிய அழிவையும் கொண்டு வந்தது: மரங்கள் வேருடன் பிடுங்கப்பட்டன; அடையாளப் பலகைகளும் வேலிகளும் புரட்டிப் போடப்பட்டன; வியாபாரமும் வீடுகளும் சேதமடைந்தன.*[8] *ஒரு புயலைத் தொடர்ந்து உள்ளூர்ச் செய்தித்தாள்கள், சூறாவளிக்காற்று எதுவும் தொட்டிருந்ததில்லை என்று எந்தவித மாற்றமும் இன்றி அறிவிக்கும்; சூறாவளிக்காற்றுப் போன்ற காற்றுகளை மாத்திரமே நாங்கள் அனுபவித்திருந்தோம். "இது என்ன வேறுபாட்டை ஏற்படுத்துகிறது?" என்பதே எனது பதிலாயிருந்தது. உங்கள் வீடு தகர்க்கப்பட்டு இருந்தால், அந்த சேதாரமானது சூறாவளிக் காற்றினால் தாக்கப்பட்டதா அல்லது சூறாவளி போன்ற காற்றினால் தாக்கப்பட்டதா என்பது உங்களுக்கு எந்தவிதமான வேறுபாட்டை ஏற்படுத்துவதாய் இருக்கும்? அதுபோலவே, - அது இப்போதோ அல்லது கிறிஸ்து வரும்போதோ, எப்போதாயினும் தேவகோபம் தேவகோபமாகவே இருக்கிறது, என்னை நம்புங்கள், நீங்கள் அதை அனுபவிக்க விரும்ப மாட்டீர்கள்!*

நாள் சித்தரிக்கப்பட்டது (6:12-17)

வசனங்கள் 12 முதல் 17 வரையிலான பகுதியானது, இயல்பாகவே இரண்டு பாகங்களாகப் பிரிந்துள்ளது: அண்டம் துகள்களாக நொறுங்கிப் பறக்கும் சித்தரிப்பு (வசனங்கள் 12-14) மற்றும் பயமடைந்த மனிதர்களைப் பற்றிய சித்தரிப்பு (வசனங்கள் 15-17). ("தேவகோபத்தின் மகாநாள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) முதலில் நாம் அண்டத்தின் பேரழிவைப் பற்றிக் கண்ணோக்குவோம்.

அழிவின் நாள் (வசனங்கள் 12-14)

6:12-14ஐப் பற்றிய சொல்லாக்கத்தை நான் முதன்முதலில் கேள்விப்பட்டதை விரிவாக நினைவில் வைத்துள்ளேன். நான் பத்து அல்லது

பதினோரு வயதான பையனாக, ஆக்லஹாமாவின் ராக்கி என்ற இடத்தில் வாழ்ந்தேன். எனது வகுப்பு நண்பன் ஒருவன், உலகமானது அந்த நாளில் முடியப்போகிறது - அதாவது, சூரியன் கறுப்பு நிறமாகும், சந்திரன் இரத்தம்போலாகும், நட்சத்திரங்கள் பூமியில் விழும் - என்று ஒரு பிரசங்கியார் கூறியதைக் கேட்டதாகச் சொன்னான். அவன் அதை என்னிடத்தில் கூறியபின், நான் விளையாட்டு மைதானத்தில் இருந்த ஊஞ்சல் ஒன்றில் சாய்ந்து கொண்டு, ஆகாயத்தை உற்றுப் பார்த்து, சூரியன் கறுப்பு நிறமாகவும், சந்திரன் இரத்தம்போலவும் மாறும்போது எப்படிக் காணப்படுமென்று கற்பனை செய்தேன். சற்று நேரம் கழித்து, எனக்குச் சலிப்பு உண்டாயிற்று. எனவே பையன்கள் செய்வது போல, நான் மீண்டுமாக விளையாடத் தொடங்கினேன். பிரசங்கியார் முன்னுரைத்திருந்ததுபோல் உலகம் முடிந்துவிடவில்லை என்பது அடுத்த நாளுக்கு முன்னதாகவே எனக்குத் தெரிந்தது.[9]

வசனங்கள் 12 முதல் 14 வரையுள்ள பகுதியானது உலகம் எவ்வாறு முடிவடையும் என்பதற்கு நேரடி அர்த்தம் கொண்ட சித்தரிப்பாக உள்ளதா? இப்போதுள்ள உலகமானது கர்த்தர் மறுபடியும் வரும்போது அழிக்கப்படும் என்று வேதாகமம் வலியுறுத்தினாலும், இவ்வசனப்பகுதியின் விஷயங்கள் அனேகமாக அப்படியிருப்பதில்லை:

> கர்த்தருடைய நாள் இரவிலே திருடன் வருகிறவிதமாய் வரும். அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம், பூமியும் அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம். ... அந்த நாளில் வானங்கள் வெந்து அழிந்து, பூதங்கள் எரிந்து உருகிப்போம் (2 பேதுரு 3:10-12).

வெளிப்படுத்தின விசேஷம் 6:12-14ன் கற்பனையுருவமானது நிச்சயமாகவே, வானவியல் அழிவு[10] பற்றிய வேதாகமத்தின் போதனைக்குப் பொருந்துகிறது - ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 6ல் உள்ள சில விபரங்கள் நேரடியானவைகளாய் இருக்க முடியாது. உதாரணமாக, நட்சத்திரங்கள் பூமியில் விழுமா? நட்சத்திரங்கள் பூமியைவிடப் பலமடங்கு பெரியவைகளாய் உள்ளன; அவைகள் நேரடியான அர்த்தத்தில் "பூமியின்மீது" விழமுடியாது.

வசனங்கள் 12 முதல் 14 வரையுள்ள பகுதியானது உலகத்தின் முடிவைக் கண்ணோக்குவதற்காகத் தரப்படவில்லை என்றால், இப்படிப்பட்ட அளவியல் மொழிநடையை யோவான் பயன்படுத்தும்படிக்கு பரிசுத்த ஆவியானவர் கொண்டிருந்தது ஏன்? யோவான் தமது வாசகர்களுக்குப் பழக்கமான அடையாளத்துவத்தைப் பயன்படுத்தினார்: இது வேதாகமம் முழுவதிலும் காணப்படுகிற அடையாளத்துவமாக, மக்களின் வாழ்வில் தேவன் இடையிட்டார் (அல்லது இடையிடுவார்) என்பதின் அடையாளத்துவமாக உள்ளது!

இவ்வசனப்பகுதியானது பழைய ஏற்பாட்டின் சொற்றொடர்களினுடைய ஒன்றிணைப்பைப் பயன்படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, நீங்கள் எசேக்கியேல் 38:19 மற்றும் பிறவசனப்பகுதிகளில் பூமியதிர்ச்சியின்

அடையாளத்துவம் ஒன்றைக் காண்பீர்கள்.[11] பூமியதிருதல் என்பது, அசைக்கப்பட இயலாதது என்று மக்கள் கருதுவது அசைக்கப்படுவதை உணர்த்தி நிற்கிறது. நாம், *terra firma*, அதாவது "உறுதியான/திடமான பூமி" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றோம். "திடமான" பூமியானது நமது பாதங்களின்கீழ் அதிருகிறபோது, நாம் திகில் அடைகின்றோம். இறைவெளிப்பாட்டு எழுத்தாளர்கள், மக்கள் சார்ந்துள்ளவற்றின் நீக்கத்தை அடையாளப்படுத்துவதற்காகப் பூமியதிர்ச்சியை பயன்படுத்தினர். இன்றைய நாட்களில் நாம், மனிதகுலத்தைப் பாதிக்கிற நினைவில் நிற்கும்/ குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளைக் குறிப்பதற்கு "பூமியை அதிரச்செய்யும்" என்ற சொற்றொடரைப் பயன்படுத்துகின்றோம்.

மற்ற சில உருவகங்களும் பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப் பட்டுள்ள, இவைகள் இதேபோன்ற செய்தியைத் தெரிவிக்கின்றன: சூரியன் இருளாவதையும் சந்திரன் இரத்தம்போலாவதையும் யோவேல் குறிப்பிட்டிருந்தார் (யோவேல் 2:31),[12] மற்றும் நட்சத்திரங்கள் அகற்றப்படு தலையும் வானம் "சுருட்டப்படுவதையும்" பற்றி ஏசாயா உரைத்திருந்தார் (ஏசாயா 34:4). மலைகள் அசைக்கப்படுதல் என்ற உருவகத்தை எரேமியா பயன்படுத்தினார் (எரேமியா 4:24),[13] அதே வேளையில் தீவுகள் அழிக்கப்படுதல் பற்றி எசேக்கியேல் எழுதினார் (எசேக்கியேல் 27:35).[14] தேவனை எதிர்த்திருந்தவர்களுக்குக் காத்திருந்த பயங்கரத்தைச் சித்தரிப்பதற்கு யோவான், தமது காலத்தில் வாழ்ந்த மக்களைப் பயமுறுத்துவதாக அவர்கள் கற்பனை செய்திருந்த ஒவ்வொரு விஷயத்தையும் ஒன்றாகக் குவித்தார்![15]

ஜான் பௌமன் அவர்கள், வசனங்கள் 12முதல் 14வரையுள்ள பகுதியின் சொல்லாக்கத்தைப் பற்றிக் கலந்துரையாடியபோது, அவர் (எனது முடிவுப்படி) துரதிர்ஷ்டவசமான வார்த்தைகளின் தெரிந்துகொள்ளுதலைப் பயன்படுத்தினார். அவர், "இந்த வானவியல் நிகழ்ச்சிகளை அவற்றிற்குச் சொந்தமானவைகளினிமித்தமாக மிகத்தீவிரமாக எடுத்துக்கொள்ளக் கூடாது" என்று எழுதினார்.[16] நான், "இந்தக் காட்சியை நேரடி அர்த்தம் கொண்டதாக எடுத்துக்கொள்வது அவசியமல்ல, ஆனால் இதைத் தீவிரமானதாக எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறுவேன். இது கலாத்தியர் 6:7ன் சத்தியத்தினுடைய விரிவான நினைவூட்டுதலாக உள்ளது: "தேவன் தம்மைப் பரியாசம்பண்ணவொட்டார். மனுஷன் எதை விதைக்கிறானோ அதையே அறுப்பான்."

பரிதவிப்பின் நாள் (வசனங்கள் 15, 16)

அடுத்த வசனங்களில் நாம், வானவியல் அழிவில் இருந்து அதன் செயல்விளைவுக்குக் கடந்து செல்கின்றோம்: "பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான் களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாவரும், பர்வதங்களின் குகை களிலும் கன்மலைகளிலும் ஒளித்துக்கொண்டு"[17] (வசனம் 15).

வசனம் 15ல் குறிப்பிடப்பட்டுள்ள ஏழு வகுப்புகள் மனிதகுலம் முழுவதையும் (அதிலும் குறிப்பாக, தேவனுடைய சித்தத்திற்கு எதிர்த்து

நிற்பவர்களை) உள்ளடக்குகிறது[18]. இதை யோவான் எழுதிய காலத்தில், மக்கள் "பூமியின் இராஜாக்கள்" என்று வாசிக்கும்போது, அவர்கள் பேரரசரான டொமீஷியனையும் அவரது விருப்பம் மற்றும் கட்டுப்பாடு ஆகியவற்றின்கீழ் ஆட்சிசெய்து கொண்டிருந்த துணை அரசர்களையும் நினைப்பார்கள். "பெரியோர்கள்" என்ற சொற்றொடர், அரசியல் ஆட்சியாளர்களாய் இராத (ஆனால்) அதிகாரம் மிகுந்த மனிதர்களைச் சுட்டிக்காண்பிக்கிறது.[19] CEV வேதாகமத்தில் ஆர்வமிக்க ஒரு சொற்றொடர் உள்ளது: the earth's "famous people" [பூமியில் "புகழ்பெற்ற மனிதர்கள்"]. "சேனைத்தலைவர்கள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, "ஆயிரத்திற்கு அதிபதி" என்பதன் பன்மை வடிவமாக உள்ளது. பீட்டர்ஸன் அவர்களின் பொழிப்புரையில் "generals"[20] ["உயரதிகாரிகள்"] என்றுள்ளது.

"ஐசுவரியவான்கள்" என்ற சொற்றொடர், சுயவிளக்கம் கொண்டதாக உள்ளது. "பலவான்கள்" என்பது உடல்ரீதியாகப் பலம் வாய்ந்தவர்களை யல்ல, ஆனால் நாட்டில் பலத்த செல்வாக்கைச் செயல்படுத்தியிருந்தவர்களைக் குறிக்கிறது. உதாரணமாக, இது இந்தியாவில் புகழ்பெற்ற நிறுவன அதிபர்களையும் விளையாட்டு வீரர்களையும் உள்ளடக்கும்.[21] இவ்விதமாக யோவான், அரசியல் தலைவர்களையும், இராணுவத் தலைவர்களையும், சமூகத் தலைவர்களையும் குறிப்பிட்டார். D. T. நைல்ஸ் அவர்கள் பின்வருமாறு கூறினார்,

> ... பதவியினால் பயன் ஒன்றும் இல்லாதிருந்தது. பூமியின் அரசர்களுக்கும்கூடப் பாதுகாப்பு இல்லாது இருந்தது. செல்வந்தர்களின் செல்வம் பாதுகாப்பு எதையும் அளிக்கவில்லை, பலவான்களின் அதிகாரம் சமாதானத்தை அளிக்கவில்லை ... எல்லாருடைய வாழ்வின் அடிப்படைகளும் தகர்க்கப்பட்டிருந்தன, மனிதர்கள் பயத்தினால் தங்களை ஒளித்துக் கொண்டிருந்தனர் ... வாழ்வின் சாதனைகள் என்ற முகமூடிகளும் நம்பிக்கைகளும் களையப்பட்ட நிலையில் அவர்கள் தேவனுக்கு முன்பாக நிற்கப் பயந்து கொண்டிருந்தனர்.[22]

"அடிமைகள் சுயாதீனர் யாவரும்" என்பது இந்தப் பட்டியலின் முடிவில் வருகிறது. "சுயாதீனர்" என்பவர், சுதந்திரம் பெற்றிருந்த, ஆனால் இன்னமும் வாழ்வதற்கு வழியை அரிதாகப் பெற்றிருந்த ஒரு முன்னாள் அடிமையாயிருந்தார். அடிமைகளும் சுயாதீனமுள்ளவர்களும் அந்த நாட்களில் சமூக ஏணியில் அடிநிலையில் இருந்தனர், அவர்கள் வழக்கமாக, மற்ற ஐந்து வகுப்பினருடனும் கொஞ்சம் அல்லது ஒன்றுமே சம்பந்தப் படாதவர்களாக இருந்தனர். இருப்பினும் தேவனுடைய கோபத்தின் முன்னிலையில், சமூக வித்தியாசங்கள் மறக்கப்பட்டிருந்தன. தேவன் தமது கிருபையை அளிக்கின்றபோது "பட்சபாதம் காட்டுவதில்லை"; அவர் தமது கோபத்தை ஊற்றும்போதும் பட்சபாதம் காண்பிப்பதில்லை. (நடபடிகள் 10:34; ரோமர் 2:9-11ஐக் காணவும்.)

பெரியவர்களும் சிறியவர்களும் பயமடைந்தபோது, அவர்கள் ஒளிந்துகொள்ள முயற்சிசெய்தனர். ஆண்டவரின் மீதான பயமானது

மக்கள் ஒளிந்துகொள்வதற்கே எப்போதும் காரணமாகியிருக்கிறது. ஆதாமும் ஏவாளும் தேவனிடத்தில் இருந்து ஒளிந்து கொள்ள முயற்சி செய்தனர் (ஆதியாகமம் 3:8). யோனா தீர்க்கதரிசி ஆண்டவருக்குக் கீழ்ப்படியாமல் போனபோது, அவர் தேவனுடைய சமூகத்தில் இருந்து தப்பிச்செல்ல முயற்சி செய்தார் (யோனா 1:3). ஒவ்வொருவரும் கண்டறிந்துள்ளபடி, தேவனிடத்தில் இருந்து ஒளிந்துகொள்ளுதல் என்பது சாத்தியமற்றதாக உள்ளது (சங்கீதம் 139:7-12). இருப்பினும், குற்றமுள்ளவர்கள் ஒளிந்து கொள்ள முயற்சி செய்வதில் இன்னமும் பிடிவாதமாயிருக்கிறார்கள். யோவானால் பட்டியல் இடப்பட்டவர்கள், "பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு, பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி: 'நீங்கள் எங்கள் மேல் விழுந்து, சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கும், ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் ... என்றார்கள்' " (வசனங்கள் 15, 16).[23]

"மரணத்திற்கு அல்ல ஆனால் தேவனுடைய சமூகத்தில் வெளிப் படுத்தப்படுதலுக்கே பாவிகள் மிகவும் பயப்படுகின்றனர்."[24] ஒளித்துக் கொண்டிருந்தவர்கள், மரணமானது தங்களைத் தெய்வீகப் பிரசன்னத்தில் இவ்வளவு சீக்கிரமாய்ப் புகுத்தும் என்பதைத் தங்கள் அறியாமையினால் உணர்ந்தறியாது இருந்தனர் (20:12)!

வசனம் 16ல் உள்ள ஒரு சொற்றொடரானது விளக்கத்திற்காக உரத்துக் கூவுகிறது: "ஆட்டுக்குட்டியானவருடைய கோபத்திற்கும் எங்களை மறைத்துக்கொள்ளுங்கள்."[25] ஆட்டுக்குட்டியானவருடைய கோபம் என்றால் என்ன? முரட்டுத்தனம் இல்லாமை என்ற விஷயத்தைத் தெரிவிக்க ஒரு சுவரொட்டியை வைக்க நீங்கள் ஒரு மிருகத்தைத் தேர்ந்து கொள்ள வேண்டும் என்றால், ஆட்டுக்குட்டி என்பது மிகச்சிறந்த தேர்ந்து கொள்ளுதலாக இருக்கும். இனிமையான, விளையாட்டுத்தன்மை நிறைந்த ஒரு ஆட்டுக்குட்டியானது எவரொருவரையும் அல்லது ஏதொன்றையும் வேண்டுமென்றே துன்புறுத்துவதைக் கற்பனை செய்து பார்க்க யாராலாவது முடியுமா? ஒருவேளை நீங்கள் ஒரு கிராமப்புறத்தில் நடந்து செல்வதாகக் கற்பனை செய்து கொள்ளுங்கள், அங்கு ஒரு மனிதர் ஒரு சிறுகுன்றின் பின்னால் பயந்து மறைந்திருக்கின்றார், தமது இயல்புநிலையை வெளிக்காட்ட அஞ்சுகின்றார். "என்னவாயிற்று?" என்று நீங்கள் கேட்கின்றீர்கள். அவர் நடுநடுங்கிய குரலில், "ஒரு ஆட்டுக்குட்டி என்னைத் துரத்துகிறது!" என்று பதில் அளிக்கின்றார். அந்த மனிதனை "பைத்தியக்காரர்" ["crackers"[26]] என்று ஆஸ்திரேலியாக்காரர்கள் கூறுவர். நீங்கள் செய்தித்தாளை எடுத்து வாசிக்கும்போது, தலைப்புச் செய்தியானது, "ஆட்டுக்குட்டியால் தாக்கப்பட்ட மனிதர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்" என்று கூறினால், அந்தச் செய்தித்தாள் ஏப்ரல் 1ம் தேதியில் வெளியிடப்பட்டதா என்று அறிவதற்கு நீங்கள் அதன் தேதி உள்ள பகுதியைச் சோதிப்பீர்கள்.[27]

சிலவிஷயங்கள் மனதை உறைய வைக்கின்றன, பின்பு "ஆட்டுக்குட்டி யானவரின் கோபம்" என்ற சொற்றொடரைப் பற்றிய விஷயம் வருகிறது.[28]

ஒரு ஆட்டுக்குட்டி நம்மீது கோபம் கொண்டுள்ளது என்ற நிலையானது, எதிர்பார்க்கப்படாத ஒன்றாக, செல்லப்பிராணி அல்லது அன்பான பிள்ளை, நம்மீது எதிர்த்துத் திரும்பும் நிலையைப் போன்றதாக உள்ளது. இந்தப் பொருத்தமற்ற தன்மையானது, தேவனிடத்தில் இருந்து தங்களை ஒளித்துக்கொள்ள முயற்சி செய்தவர்களின் பாவத்தினுடைய ஏராளத் தன்மையை வலியுறுத்துகிறது. ஒரு ஆட்டுக்குட்டியைக்கூட கோபம் கொள்ளுமளவுக்கு இயக்குவதாக இருந்த அந்தப் பாவம் எவ்வளவு பெரியதாய் இருக்க வேண்டும்!

இந்த அண்டம் முடிந்து போவதையும் அவிசுவாசிகளின் பெருவருத்தத்தையும் நாம் கண்ணோக்குகையில், வேதசாட்சிகளாக மரித்தவர்களின் "பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?" என்ற கேள்விக்கு (6:10) கர்த்தரின் பதிலை நாம் காண்கின்றோம். அவர்களைத் துன்புறுத்தியவர்கள் மனந்திரும்புவதற்குப் போதுமான காலத்தை, அவர்கள் தங்கள் வழிகளை மாற்றிக்கொள்வதற்கு போதுமான காலத்தைக் கர்த்தர் கொடுப்பார். இருப்பினும் கடைசியில் அவர் நியாயந்தீர்ப்பார்; கடைசியில் அவர் பழிவாங்குவார். முடிவில், தேவன் "பட்சிக்கிற அக்கினியாய்" (எபிரெயர் 12:29) இருப்பார்!

நாள் கலந்துரையாடப்பட்டது (6:17)

கொஞ்சமே பொருட்படுத்தப்படுவதாக உள்ள ஒரு கேள்வி: எப்போது?

நமது பாடம் தொடருகையில், "இது தேவன் ரோமப்பேரரசை அழிப்பதைப் பற்றிப் பேசுகிறதா? அல்லது காலத்தின் முடிவில் அவர் இந்த அண்டத்தை அழிப்பதைப் பற்றிப் பேசுகிறதா?" என்பதை அறிந்து கொள்ளும்படி வலியுறுத்துகிற ஆர்வம் மிகுதியான குரல்களை நான் கேட்டுள்ளேன். இந்தக் கேள்வியின்மீது விளக்கவுரையாளர்கள் ஓரளவு சமமாகப் பிரிந்துள்ளனர்.[29]

6:12-17ல் உள்ள கூற்றுக்கள், ரோமப்பேரரசைத் தேவன் தூக்கி எறிதலைக் குறிப்பிடக்கூடும். முன்பு கொடுக்கப்பட்ட - பூமியதிர்ச்சிகள், சூரியன் இருளாகுதல், சந்திரன் இரத்தமாகுதல் மற்றும் நட்சத்திரங்கள் விழுதல் பற்றிப் பழைய ஏற்பாட்டுத் தீர்க்கதரிசிகள் பேசியது பற்றிய-குறிப்புக்களில், எழுத்தாளர்கள் வழக்கமாக, தேவனை எதிர்த்த மக்களினங்களின் (அதாவது, பாபிலோன், அசீரியா மற்றும் பிற நாடுகளின்) மீது வரவிருந்த தற்காலிகமான தண்டனையைப் பற்றி முன்னுரைத்தனர். கடந்த காலத்தில் தேவன், வெற்றிகொள்ள இயலாதவைகளாகக் காணப்பட்டிருந்த மக்களினங்களை அழித்திருந்தார் என்று யோவானின் வாசகர்கள் நினைவூட்டப்படுவார்கள். அதுபோலவே தேவன், ரோமாபுரியை அழிப்பதில் இடர்ப்பாடு எதையும் கொண்டிருக்க மாட்டார்.

ரோமப்பேரரசின் தோல்வி என்பது, வேதசாட்சிகளாக மரித்தவர்களின் "தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக் குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்?'' என்ற கூக்குரலுக்கு, நிச்சயமாகவே ஒரு நேரடியான, தனிப்பட்ட வகையிலான மற்றும் திட்டவட்டமான பதிலாய் இருக்கும். ரோம அரசானது கிறிஸ்தவர்களின் இரத்தத்தைச் சிந்தியிருந்த படியால்,ரோம அரசு தண்டிக்கப்பட வேண்டும் என்று தெய்வீக நீதி வற்புறுத்தியது. இதன் தொடர்பாக, வெளி. அதிகாரங்கள் 17முதல் 19வரை வாசித்துப் பாருங்கள். மகா பாபிலோன் (அதாவது, ரோமாபுரி[30]) அழிக்கப்பட்ட பின்பு, பரலோகத்தில் ஒரு திரளான கூட்டத்தார், 19:1ஆ, 2ல் உள்ள பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு தேவனைத் துதித்தனர்: ''இரட்சணியமும் மகிமையும் கனமும் வல்லமையும் நம்முடைய தேவனாகிய கர்த்தருக்கே உரியது, அவருடைய நியாயத்தீர்ப்புகள் சத்தியமும் நீதியுமானவைகள். தன் வேசித்தனத்தினால் பூமியைக் கெடுத்த மகா வேசிக்கு அவர் நியாயத்தீர்ப்புக்கொடுத்து, தம்முடைய ஊழியக் காரரின் இரத்தத்திற்காக அவளிடத்தில் பழிவாங்கினாரே." இவ்வசனங்கள், 6:10ன் வேண்டுகோளுடன் நேரடியாகத் தொடர்புடையவை என்று பலர் நம்புகின்றனர், இதில் அவர்கள் சரியானவர்களாய் இருக்கலாம்.[31]

இதற்கு மறுபுறத்தில், 6:12-17 வசனப்பகுதியானது "தேவகோபத்தின் மகாநாளாகிய'' கடைசி நாளைக் குறிக்கிறது என்ற விஷயமும் ஏற்படுத்தப்படலாம். இந்த நிலைப்பாட்டை மேற்கொள்கின்றவர்கள், பின்வரும் சாட்சியங்களை/ஆதாரங்களை அளிக்கின்றனர்: (1) இவ்வசனப்பகுதியைப் போல், அழிவின் உருவகங்கள் எல்லாவற்றையும், பழைய ஏற்பாட்டின் எந்த வசனப்பகுதியும் ஒன்றிணைத்துத் தருவதில்லை. (2) இந்த உருவகத்தின் குறிப்பிட்ட சில அம்சங்கள், உலகத்தின் முடிவில் நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகளை நமக்கு நினைவூட்டுகின்றன. இவற்றில், மனிதகுலம் முழுமையும் ஒன்றுகூட்டப்படுதல் (2 கொரிந்தியர் 5:10) மற்றும் பிதாவையும் குமாரனையும் உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளுதல் (பிலிப்பியர் 2:11) ஆகியவை உள்ளடங்குகின்றன. (3) ஆட்டுக் குட்டியானவரைப் பற்றிய குறிப்பிடுதலானது இந்தக் காட்சியைத் தனித்தன்மை வாய்ந்ததாக்குகிறது. இவைபற்றிய பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகள் கிறிஸ்துவை உள்ளடக்கியிருப்பதில்லை.

''நாம் ஜெயம்கொண்டோம்! தேவனுக்கு நன்றி!'' என்ற அறிமுகப்பாடம், வெளிப்படுத்தின விசேஷத்தின் ஏழு பிரிவுகளை வரைக்குறிப்பிட்டது, அந்தப் பிரிவு ஒவ்வொன்றும் "கிறிஸ்துவின் முதல் வருகையிலிருந்து இரண்டாவது வருகை வரையிலும்''[32] உள்ள கிறிஸ்தவ யுகம் முழுவதையும் தன்னில் கொண்டுள்ளது. 6:12-17ன் காட்சியானது, 1:7ல் முன்னதாகவே கொடுக்கப்பட்டுள்ள "இதோ, மேகங்களுடனே வருகிறார், கண்கள் யாவும் அவரைக் காணும், அவரைக் குத்தினவர்களும் அவரைக்காண்பார்கள், பூமியின் கோத்திரத்தாரெல்லாரும் அவரைப் பார்த்துப் புலம்புவார்கள்''[33] என்ற சித்தரிப்புடன் திட்டவட்டமாகப் பொருந்துவதாக இருக்கும். இந்தக் காரணத்தினால் நான், 6:12-17

வசனப்பகுதியானது மகாகோபத்தின் கடைசி நாளைக் குறிப்பிடுகிறது என்ற கண்ணோட்டத்தை நோக்கிச் சாய்கின்றேன்.

இருப்பினும் இது பெரிய வேறுபாட்டை ஏற்படுத்துவதை என்னால் காண இயலவில்லை. இந்த வசனப்பகுதி, ரோமப்பேரரசின் அழிவைப் பற்றி முதன்மையாகக் குறிப்பிடுகிறது என்றால், இது கடைசி மகாநாளைப் பற்றி முன்னுருவகப்படுத்துவதாகவும் தேவனுக்கு எதிராக நிற்க முயற்சி செய்கின்ற எவருக்கும் ஒரு எச்சரிக்கையாகவும் உள்ளது. இது கடைசி மகாநாளைப் பற்றிப் பேசுகிறது என்றால், இது - ரோமப்பேரரசு உட்பட - ஆண்டவருக்கு எதிர்த்து நிற்கின்ற எவரும் கடைசியில் அவரது கோபத்தை ருசிபார்ப்பார்கள் என்று போதிக்கிறது.

இவ்வசனப்பகுதி தற்காலிகத் தண்டனையைப் பற்றிப் பேசுகிறதா அல்லது நித்திய தண்டனையைப் பற்றிப் பேசுகிறதா என்ற கேள்வி சார்புநிலையில் முக்கியத்துவமற்றதாக உள்ளது. தேவகோபத்தின் மகா நாள் வந்து கொண்டிருக்கிறது என்பதே இவ்வசனப்பகுதியின் வலியுறுத்தமாய் இருக்கிறது. பாபிலோனியர்களுக்குத் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருந்தது, அசீரியர்களுக்குத் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருந்தது, ரோமானியர்களுக்குத் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருந்தது, தேவனுடைய அன்பின் உடன்படிக்கைகளைப் புறக்கணிப்பவர்களாய் இன்றைய நாட்களில் வாழும் யாவருக்கும் தேவகோபத்தின் மகாநாள் ஒன்று இருக்கும் (ரோமர் 2:5; எபேசியர் 5:6)!

நாம், வாழ்வில் கருத்தறிவு எதையாவது ஏற்படுத்துவோம் என்றால், இந்த மாபெரும் முடிவை நாம் கண்ணோக்க வேண்டும். மனித வரலாறு என்பது முடிவற்ற சுழற்சியாக, அர்த்தம் எதுவுமின்றி மீண்டும் மீண்டும் வருவதாக இருப்பதில்லை. மாறாக, வரலாறு என்பது “திட்டவட்டமான இலக்குடன் கூடிய ஒரு பயணமாக” உள்ளது.[34] கடந்து செல்லுகிற நாள் ஒவ்வொன்றிலும் நாம் உலகத்தின் முடிவை - நித்தியத்தை, பரலோகத்தை அல்லது நரகத்தை - அதிகமாய் நெருங்குகின்றோம்! வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17 போன்ற வசனப்பகுதிகள், துன்மார்க்கரின் வெற்றி குறுகிய ஆயுள் உடையது[35] என்றும் நியாயத்தீர்ப்பு நிச்சயமானது[36] என்றும் அறிவிக்கின்றன! தேவன் தமது சொந்த நோக்கங்களுக்காகத் தமது கோபத்தை தாமதிக்கலாம், ஆனால் தேவகோபத்தின் நாள் வருகிறது - ஒவ்வொரு தனிநபரும் அதற்குத் தம்மைத் தயார் செய்து கொள்வது அவசியமாய் இருக்கிறது!

அதிகம் பொருட்படுத்தப்படுவதாக உள்ள ஒரு கேள்வி: யார்? (வசனம் 17)

வசனம் 17ல் உள்ள கேள்வியானது அதிகம் பொருட்படுத்தப்படுவதாக உள்ளது: “அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது, யார் நிலைநிற்கக்கூடும்?”

வசனங்கள் 9முதல் 11வரை உள்ள பகுதியில் சித்தரிக்கப் படுபவர்களுக்கும், வசனங்கள் 15முதல் 17வரை உள்ள பகுதியில் சித்தரிக்கப் படுபவர்களுக்கும் இடையில் நாம் பல நேர்மாறுகளைக் காண்கின்றோம்.

வேதசாட்சிகளாக மரித்தவர்கள் (உண்மையில்) "எங்களுக்காகப் பழிவாங்கும்!" என்று உரத்துக் கூவியிருந்த வேளையில், தயாராக இல்லாதவர்கள் "எங்களை ஒளித்துக்கொள்ளுங்கள்!" என்று கதறினர். துன்புறுதல் அல்ல ஆனால் பாவம் தான் மனிதர்களைத் தேவனிடத்தில் இருந்து பிரித்தது என்பது இன்னொரு நேர்மாறாக உள்ளது. ஒவ்வொரு குழுவினரும் கேட்ட கேள்வி என்பது மிகவும் அழுத்தமான நேர்மாறாக இருக்கலாம்: வேதசாட்சியாக மரித்தவர்கள் "எதுவரைக்கும்?" என்று அறிய விரும்பியிருக்கையில், பயம் நிறைந்தவர்கள் "யார் நிலைநிற்கக்கூடும்?" என்று கதறினர்.

"யார் நிலைநிற்கக்கூடும்?" என்ற கேள்வி இதற்கு முன்பு(ம்) கேட்கப்பட்டிருந்தது. நாகூம், "அவருடைய கோபத்துக்கு முன்பாக நிற்பவன் யார்? அவருடைய உக்கிரகோபத்தில் தரிப்பவன் யார்? அவருடைய எரிச்சல் அக்கினியைப்போல இறைக்கப்படுகிறது. அவராலே கன்மலைகள் பேர்க்கப்படும்" என்று எழுதியிருந்தார் (நாகூம் 1:6). மல்கியாவும்கூட, "ஆனாலும் அவர் வரும் நாளைச் சகிப்பவன் யார்? அவர் வெளிப்படுகையில் நிலைநிற்பவன் யார்? அவர் புடமிடுகிறவனுடைய அக்கினியைப் போலவும், வண்ணாருடைய சவுக்காரத்தைப் போலவும் இருப்பார்" என்று கேட்டார் (மல்கியா 3:2). எஸ்றா "இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தாவே, ... இதோ, நாங்கள் உமக்கு முன்பாகக் குற்றத்திற்குள்ளானவர்கள். இதினிமித்தம் நாங்கள் உமக்கு முன்பாக நிற்கத்தக்கவர்கள் அல்ல" என்று ஜெபித்தபோது (எஸ்றா 9:15) அவர் இந்தக் கேள்விக்குப் பதில் அளித்தார். எவரொருவரும் - அதாவது, தயாராயில்லாத எவரொருவரும் - கர்த்தருக்கு முன்பாக நிற்க முடியாது.

எட்வர்டு மையர்ஸ் அவர்கள், " 'மற்றும் யார் நிலைநிற்கக்கூடும்' என்பது தேவனுடைய அற்புதமான கிருபையின் சுவிசேஷத்தை மறுதலித்தவர்களின் முற்றான நம்பிக்கையற்ற நிலையை விளக்கப்படுத்து கிறது. இது தேவபக்தியற்ற ஒவ்வொரு வாழ்வின் நிறைவான அர்த்தத்தைக் களவு செய்கிற பேரழிவுள்ள கேள்விக்குறியாக உள்ளது" என்று விளக்கம் அளித்தார்.[37]

நமது அடுத்த இரண்டு பாடங்களில் நாம், தேவபக்தியுள்ளவர்கள்மீது தேவன் கொண்டுள்ள அக்கறையைப் பற்றியும் அவர்களுக்கு அவர் பலன் அளித்தல் பற்றியும் பேசுகிற அதிகாரம் 7ஐப் படிப்போம். வசனம் 9ல் நாம், "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள் ... சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்குதல்" பற்றி வாசிக்கின்றோம். வேதசாட்சியாக மரித்தவர்கள், "எது வரைக்கும்?" என்று கூக்குரலிட்ட வேளையில், உபத்திரவப்படுத்தியவர்கள் நின்று கொண்டிருக்கையில், உபத்திரவப்படுத்தப்பட்டவர்கள் மரித்தவர் களாய்த் தெருக்களில் கிடந்தனர். இருப்பினும் முடிவில், துன்மார்க்கர் தேவனுடைய கோபத்தினால் வீழ்ந்துபோயிருக்கையில், தேவனுடைய மக்கள் நிலைநிற்பார்கள்!

முடிவுரை

பல ஆண்டுகளுக்கு முன்பு, சகோதரர் வில் தாம்ஸன் அவர்கள், "மகாநாள் வருகிறது" என்ற தலைப்பில் ஒரு பாடலை எழுதினார். அதன் செய்தியானது இன்னும் என்னை அசைக்கிறது:

மகாப்பெரிய நாள் ஒன்று வருகிறது,
மகாப்பெரிய நாள் வருகிறது,
மகாப்பெரிய நாள் ஒன்று சமீபித்து வருகிறது;
பரிசுத்தர்களும் பாவிகளும், வலது இடது புறங்களில்
பிரிக்கப்படுவார்களே,
அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாய் இருக்கின்றாயா?

வெளிச்சமான நாள் ஒன்று வருகிறது,
வெளிச்சமான நாள் வருகிறது
வெளிச்சமான நாள் ஒன்று சமீபித்து வருகிறது;
ஆனாலும் கர்த்தரை நேசிப்பவர்களுக்கு மாத்திரம்
அந்த வெளிச்சம் வருமே,
அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாய் இருக்கின்றாயா?

கவலையான நாள் ஒன்று வருகிறது,
கவலையான நாள் வருகிறது
கவலையான நாள் ஒன்று வருகிறது;
பாவி, "அகன்றுபோ, உன்னை நான் அறியேன்" என்ற
தன் அழிவுக்குரிய தீர்ப்பை கேட்பானே,
அந்த நாளின் வருகைக்கு நீ ஆயத்தமாய் இருக்கின்றாயா?[38]

கர்த்தர் மறுபடியும் வரும்போது, அது உங்களுக்கு "ஒரு மகா நாளாக," "ஒரு ஒளிமிக்க நாளாக," இருக்குமா? அல்லது அது "ஒரு கவலையான நாளாக" இருக்குமா? அந்த நாள் வருவதற்கு நீங்கள் ஆயத்தமாக இருக்கின்றீர்களா? நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களிலேயே இருந்தால், நீங்கள் ஆயத்தமாக இருக்கவில்லை என்றே ஆகிறது. சமீபத்தில் கிளென் பேஸ் அவர்கள் பின்வரும் கூற்றை உறைத்தார்:

பாவம் உங்களை நீங்கள் விரும்புவதற்கும் அதிகமான தூரத்திற்கு கூட்டிச்செல்லும்.
பாவம் உங்களை நீங்கள் விரும்புவதற்கும் அதிகமான நேரம் இருக்க வைக்கும்.
பாவம் உங்களை நீங்கள் செலுத்த விரும்புவதற்கும் அதிகமாகச் செலுத்தச் செய்யும்.
பாவம் உங்களை நீங்கள் கற்பனை செய்வதற்கும் அதிகமாகத் துன்பப்படுத்தும்.[39]

மக்கள் தேவனுடைய கோபத்தில் இருந்து ஒளிந்து கொள்ள முயற்சி செய்யும்போது, இந்த உலகின் பாறைகள் பரிதாபத்திற்கு உரிய வகையில் போதுமற்றவைகளாக உள்ளன. காலங்கள் தோறும் நிலைநிற்கின்ற

கற்பாறையான இயேசு கிறிஸ்துவே,[40] தேவகோபத்தில் இருந்து தப்பித்துக் கொள்வதற்கான ஒரே பாதுகாப்பிடமாக இருக்கின்றார். இயேசுவே, "இனிவரும் கோபாக்கினையினின்று நம்மை நீங்கலாக்கி இரட்சிக்கிறவருமாயிருக்கிறார்" (1 தெசலோனிக்கேயர் 1:10). நீங்கள் அவருக்கு உங்கள் வாழ்வை அர்ப்பணித்து இருக்கின்றீர்களா? நீங்கள் உங்கள் சித்தத்தை அவரது சித்தத்திற்கு ஒப்புவித்து இருக்கின்றீர்களா? இல்லையென்றால், இன்றே அவர்மீது நம்பிக்கை வைத்து அவருக்குக் கீழ்ப்படியுங்கள்![41]

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

முந்திய பாடத்தில் ஒரு எளிய வரைபடம் பயன்படுத்தப்பட்டது:

இந்த உலகத்தில்

தேவபக்தியுள்ளவர் **தேவபக்தியற்றவர்**

இந்தப் பாடத்துடன் தொடர்புடைய வகையில், அந்த வரைபடம் (பின்வருமாறு) திருத்தம் செய்யப்பட முடியும்:

இனிவரும் உலகத்தில்

தேவபக்தியுள்ளவர் **தேவபக்தியற்றவர்**

இந்தப் பாடத்திற்கான சாத்தியக்கூறுள்ள பிற தலைப்புக்களில், "ஆட்டுக்குட்டியானவரின் கோபம்," "நீங்கள் தேவனிடத்தில் இருந்து ஒளித்துக்கொள்ள முடியாது!" மற்றும் "யார் நிலைநிற்கக்கூடும்?" என்பவைகள் உள்ளடங்குகின்றன.

ஐந்தாம் மற்றும் ஆறாம் முத்திரைகளைப் பற்றி ஒரே எடுத்துரைப்பில் கூறிமுடிப்பதை விரும்பித் தேர்ந்து கொண்டால், உங்கள் பாடத்தை நீங்கள், "சரியான வழியும் தவறான வழியும்" என்று அழைக்கலாம். ஐந்தாம் முத்திரையானது, "உபத்திரவத்திற்கு மறுசெயல்புரியச் சரியான வழி" என்பதை விவரிக்கக்கூடும்: (1) உபத்திரவம் பற்றிக் கவலைப்படுதல்

சரியானதாகவே உள்ளது. (2) உபத்திரவம் வருகிறபோது, தேவனிடத்தில் இருந்து புறம்பே திரும்புவதற்குப் பதிலாக, தேவனை நோக்கித் திரும்புங்கள். (3) நீங்களே பழிவாங்காதிருங்கள், அதற்குப் பதில், அப்படிப்பட்ட விஷயங்களைத் தேவனிடத்தில் விட்டுவிடுங்கள். ஆறாம் முத்திரையானது, "நியாயத்தீர்ப்புக்குத் தயாராவதற்குத் தவறான வழி" என்பதை விவரிக்கக்கூடும்: (1) நியாயத்தீர்ப்பு வரும்வரைக்கும் ஒன்றும் செய்ய வேண்டாம். (2) வாழ்வில் உங்கள் நிலையானது உங்களைத் தேவகோபம் தாக்கமுடியாததாக ஆக்குகிறது என்று நினைத்துக் கொள்ளுங்கள். (3) நியாயத்தீர்ப்பு வரும்போது, ஒரு பள்ளம் பறித்து அதற்குள் தவழ்ந்து செல்ல முயற்சி செய்யுங்கள்.

அதிகாரம் 6ஐ ஒரே பாடத்தில் கூறிமுடிக்க நீங்கள் விரும்பித் தேர்ந்து கொண்டால், மெரில் C. டென்னீ அவர்கள் பின்வரும் வரைக்குறிப்பைக் கொண்டுள்ளார்: (1) வரலாற்றின் சவுக்கடிகள் (முதல் நான்கு முத்திரைகள்), (2) பரிசுத்தவான்களின் உபத்திரவம் (ஐந்தாம் முத்திரை), (3) பரலோகம் அசைதல் (ஆறாம் முத்திரை).[42]

"இடர்ப்பாடு பற்றி ஏழு கருத்துக்கள் கொண்ட தேவனுடைய பிரசங்கம்" என்பது, அதிகாரம் 6க்கான ஆர்வமிக்க இன்னொரு அணுகுமுறையாக இருக்கும். சாத்தியக்கூறுள்ள பிரதானக் கருத்துக்கள் பின்வருமாறு: (1) இடர்ப்பாடு - இதற்கு நீங்கள் தப்பிக்கொள்ள முடியாது! (முதலாம் முத்திரை); (2) இடர்ப்பாடு உங்கள் இருதயத்தை உடைந்து போகும்படி செய்யமுடியும் (இரண்டாம் முத்திரை); (3) இடர்ப்பாடு உங்கள் ஆவியை முறிந்து போகும்படி செய்யமுடியும் (மூன்றாம் முத்திரை); (4) இடர்ப்பாடு உங்களின் வாழ்வை எடுத்துக்கொள்ள முடியும் (நான்காம் முத்திரை); (5) இடர்ப்பாடு (விசுவாசிகளுக்கு) இருமடங்காக வருகிறது (ஐந்தாம் முத்திரை); (6) பொருட்படுத்தப்படக்கூடிய ஒரே இடர்ப்பாடு அவிசுவாசிகளின்மீது வருகிறது (ஆறாம் முத்திரை); (7) இன்றைய நாளின் இடர்ப்பாட்டை நீங்கள் தாங்குவதற்குத் தேவன் உதவுகின்றார் மற்றும் அவர் இடர்ப்பாடு இல்லாத நாளைய தினத்தையும் வாக்களிக்கின்றார்! (அதிகாரம் 7). இந்த அணுகுமுறையானது 6ம் அதிகாரத்துடன் பயன்படுத்தப்பட்டிருந்தால், நீங்கள் ஏழாவது கருத்தை மாத்திரம் குறிப்பிட்டு, அதிகாரம் 7ன் மீதான தொடர்ந்து வரவிருக்கும் பாடத்தின்மீது ஒரு ஆர்வத்தை ஏற்படுத்த விரும்பலாம். இது, முதல் நான்கு கருத்துக்கள் காலையிலும், கடைசி மூன்று கருத்துக்கள் மாலையிலும் பிரசங்கிக்கப்படும் ஒரு இருபகுதிப் பிரசங்கமாக இருக்கவும் முடியும்.

குறிப்புகள்

[1]சணல் துணி [sack cloth] (இது தமிழில் "கறுப்புக் கம்பளி" என்றுள்ளது) என்பது சாக்குகள் செய்வதற்குப் பயன்படும் முரட்டுத் துணியாக இருந்தது, ஆனால் இது, புலம்புதலின்போது அணிந்துகொள்ளும் உடைகள் தயாரிக்கவும் பயன்பட்டது. குறிப்பிட்ட இந்த சணல் துணி என்பது கறுப்பு ஆடுகளின் முடியில் இருந்து

தயாரிக்கப்பட்டது என்பது தெளிவு. [2]இந்த அத்திக் காய்கள், “குளிர்காலத்தின்போது காய்க்கின்றவைகளாக, இருப்பினும் பக்குவம் அடையாமல், வசந்த காலத்தில் கீழே விழுகின்ற வகையைச் சேர்ந்தவைகளாக” இருந்தன (Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* [Grand Rapids, Mich.: Baker Book House, 1979], 198). இதைப் பற்றிக் கலந்துரையாடும்போது, உங்கள் பகுதியில் பலத்த காற்று அடிக்கும்போது கீழே விழுகின்ற எந்த மரத்தைப் பற்றியாவது விவரியுங்கள். காற்று பலமாய் வீசும்போது, இறந்துபோன மரக்கிளைகளும் ஊசியிலைக் கூம்புகளும் எனது முற்றத்தில் விழுகின்றன. [3]நட்சத்திரங்கள் விழுதல் என்பது, முக்கியமான நபர்களின் வீழ்ச்சியைக் குறிப்பிடுகிறது என்று சிலர் நினைக்கின்றனர். பழைய ஏற்பாட்டில் சிலவேளைகளில், மாபெரும் மனிதர்கள் நட்சத்திரங்கள் என்று பேசப்பட்டனர். இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 6ல், நட்சத்திரங்கள் விழுதல் பற்றிய உருவகமானது முழுமையான சித்தரிப்பின் ஒரு பாகமாக மாத்திரம் உள்ளது, இது அதற்கப்பால் தனிச்சிறப்பு எதுவும் கொண்டிராதிருக்கலாம். [4]ஒரு புத்தகச்சுருளானது சுருட்டி வைக்கப்பட்டிருக்கும் என்பதால், அது திறந்து வைக்கப்பட வேண்டுமென்றால், அது விரித்து வைக்கப்பட வேண்டியதாய் இருந்தது. காய்ந்துபோன, நொறுங்கிப் போகக்கூடிய கையெழுத்துப்பிரதியொன்று விரித்து வைக்கப்பட்டிருந்தால், அதன் முனைகள் திரும்பச் சுருண்டு கொள்ளுவதாய் இருக்கும். இவ்விதமாக, ஆகாயமானது பிரிந்து துண்டாகி சுருட்டப்படுவதாகச் சித்தரிக்கப்படுகிறது. யூஜின் H. பீட்டர்ஸன் அவர்கள் தமது பொழிப்புரையில், பெரும்பாலான வாசகர்களுக்கு நன்கு பழக்கமான ஒரு உருவகத்தைப் பயன்படுத்தினார்: The “sky snapped shut like a book” [“வானம் ஒரு புத்தகம் போல் அடித்து மூடப்பட்டது”] (*The Message: New Testament With Psalms and Proverbs* [Colorado Springs, Colo.: NavPress Publishing Group, 1995], 618). ஒரு புத்தகத்தை வலிந்து மூடுதல் மூலம் இதை ஒரு காட்சி விவரிப்பாகப் பயன்படுத்த நீங்கள் விரும்பலாம். [5]மலைகளும் தீவுகளும் நெருங்கிய வகையில் உறவுகொண்டுள்ளன; ஒரு தீவு என்பது, கடலில் இருந்து மேல் நீட்டிக்கொண்டுள்ள மலை என்று மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது. இந்த சந்தர்ப்பப்பொருளில், “தீவு” என்ற சொற்றொடர் அனேகமாக, பூமியதிர்ச்சியில் பூமியின் எந்த ஒரு பாகமும் தப்பிக்காது என்பதை வலியுறுத்தலாம்; தீவுகள் என்பவை பூமியில் தொலைவில் உள்ள இடங்களாக நினைக்கப்பட்டிருந்தன. [6]Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 241. [7]வேறு வார்த்தைகளில் சொல்லுவதென்றால், இது ரோமப்பேரரசுக்குத் தரப்பட்ட தண்டனை என்று சிலர் நினைக்கின்றனர். [8]ஆறு ஆண்டுகள் காலத்தில், எனது மனைவியும் நானும் ஜன்னல் கண்ணாடிகள், வாயில்கள், வெளியில் இருந்த உடைபடும் பொருட்கள் மற்றும் இரண்டு கூரைகள் ஆகியவற்றை மாற்ற வேண்டியிருந்தது. [9]கிறிஸ்துவின் மறுவருகை பற்றி மிகச் சரியான காலத்தை யாரேனும் ஒருவர் முன்னுரைப்பதை நீங்கள் கேள்விப்படும் எந்த வேளையிலும், அவ்வாறு முன்னுரைப்பவர் ஒரு கள்ளத் தீர்க்கதரிசி என்று நீங்கள் அறிய முடியும் (மத்தேயு 24:36-44). [10]இப்போது நாம், ஒவ்வொரு பொருளும் இயக்கத்தில் உள்ள அணுக்களால் ஆனவையென்றும் இந்த அணுக்களைத் தனியே பிரித்து பறக்கச் செய்யமுடியும் என்றும் அறிந்திருப்பதால், வெளிப்படுத்தின விசேஷம் 6:12-14ன் மொழி நடையானது ஒருகாலத்தில் இருந்ததுபோல் வசீகரமானதாக இப்போது இருப்பதில்லை.

[11]எரேமியா 4:24; யோவேல் 2:10; ஆமோஸ் 8:8; ஆகாய் 2:6 ஆகிய வசனங்களைக் காணவும். [12]ஏசாயா 13:10; 50:3; எசேக்கியேல் 32:7; ஆமோஸ் 8:9 ஆகிய வசனங்களைக் காணவும். [13]நாகூம் 1:5ஐக் காணவும். [14]எசேக்கியேல் 26:15, 18ஐக் காணவும். [15]This sentence was adapted from William Barclay, *The Revelation of*

John, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 15. [16]John Wick Bowman, *The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955), 53. [17]*தேவனுக்குப் பயந்து மலைகளிலும் குகைகளிலும் ஒளிந்து கொள்ளுதல் என்ற கருத்து ஓசியா 10:8 மற்றும் ஏசாயா 2:19 ஆகிய வசனங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது. எருசலேமின்மீது இடர்ப்பாடுகள் வரும் என்பது பற்றி இயேசு பேசியபோது, அவர் இந்த உருவகத்தைத் தேர்ந்துகொண்டார் (லூக்கா 23:30).* [18]*ஏழு என்பது முழுமையைக் குறிக்கும் எண்ணாக உள்ளது.* [19]*மூல கிரேக்க வசனத்தில் நேரடி அர்த்தமாக "பெரிய மனிதர்கள்" அல்லது "மகாப்பெரியவர்கள்" என்று அர்த்தப்படுகிற கூட்டு வார்த்தையாக உள்ளது. இதே சொற்றொடர், ஒரு முக்கியமான வியாபாரியைக் குறிக்கும் லூக்கா 18:23லும் காணப்படுகிறது. சிலமொழிபெயர்ப்புகள் இந்த வார்த்தையை "பிரபுக்கள்" என்று தரவழைத்துள்ளன.* [20]Peterson, 618.

[21]*உலகில் நீங்கள் வாழும் பகுதியில் மாபெரும் செல்வாக்குடன் உள்ளவர்களைப் பற்றி விவரிப்பைக் கொடுங்கள்.* [22]D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, Publishers, 1961), 60-61. [23]*நீங்கள் எப்போதாவது, பயமுறுத்தப்பட்ட மிருகம் ஒன்று தன்னை ஒளித்துக்கொள்ள முயற்சி செய்வதைக் கண்டிருந்தால், அதை நீங்கள் இந்த மனிதர்களின் எரிச்சல்மூட்டும் செயலை விவரிக்கப் பயன்படுத்தலாம், எங்களது பூனையானது, எனது மகள் டெபியின், மிகப்பெரியதாகவும், அதிகம் சத்தமிடுவதாகவும் இருந்த புதிய வளர்ப்பு நாயினால் பயமுறுத்தப்பட்ட ஒரு நிகழ்ச்சி எனது நினைவுக்கு வருகிறது.* [24]Henry B. Swete, *The Apocalypse of St. John* (Cambridge: MacMillan Co., 1908; reprint, Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., n.d.), 94. [25]*"ஆட்டுக்குட்டியானவரின் கோபம்" என்ற சொற்றொடரில் சில விளக்கவுரையாளர்கள் சிரமம் அடைகின்றனர்; அவர்கள், இவ்வசனப்பகுதியில் இந்தச் சொற்றொடரை விசுவாசிகள் அல்ல ஆனால் அவிசுவாசிகள்தான் பயன்படுத்தினர் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றனர். இருப்பினும், "தேவனுடைய கோபம்" என்ற சொற்றொடர் வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை அடர்வுள்ளதாக்குகிறது (14:10, 19: 15:1, 7; 16:1; 19; 15; மேலும் 11:18; 16:19ஐயும் காணவும்). தேவனுடைய அரியணை என்பது ஆட்டுக்குட்டியானவரின் அரியணையாகவும் உள்ளது (22:3); ஒருவர் செய்கின்றது எதுவோ அது மற்றவர் (அவர்) செய்யும்படி கூறுவதாக உள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் அடிக்கடி, இயேசு துன்மார்க்கரைத் தண்டிப்பவராகச் சித்தரிக்கப்பட்டுள்ளார் (2:16, 22, 23; 17:14; 19:11-21). "ஆட்டுக்குட்டியானவரின் கோபம்" என்ற சொற்றொடர் இந்தப் புத்தகத்தின் எஞ்சிய பகுதியுடன் சீர்பொருந்திய நிலையில் உள்ளது என்று நான் முடிவு செய்கின்றேன்.* [26]"Crackers" *என்பது "பைத்தியம்" என்பதற்கான ஆஸ்திரேலியச் சொல் விளக்கமாக உள்ளது.* [27]*அமெரிக்காவில் ஏப்ரல் 1ம் தேதி,* "April Fool's Day" *(ஏப்ரல் முட்டாள்களின் தினம்) என்று அழைக்கப்படுகிறது, அந்த நாளில் நடைமுறை நகைச்சுவைகள்/சிரிப்பூட்டும் செயல்கள் கையாளப்படும். செய்தித்தாள்கள் தங்களின் ஏப்ரல் 1ம் தேதி வெளியீடுகளில், பொய்யான கற்பனை கதைபோன்ற கட்டுரைகளை வெளியிட்டு, அந்தக் கட்டுரைகளை "ஏப்ரல் முட்டாள்கள்!" என்ற வார்த்தைகளுடன் முடிப்பதுண்டு.* [28]*நவீனகாலத்தின் பயங்கரக் கதைகள் சில, எதிர்பாராத விரோதங்களைக் கொண்டுள்ளன: ஒரு பொம்மை, ஒரு குழந்தை அல்லது அதைப் போன்றவைகள். இந்த மறுதலைகளின் வழக்கமான, ஒன்றும் அறியாத தன்மையானது அந்தக் கதைகளைத் தங்கள் உக்கிரத்தினால் இன்னும் அதிக பயங்கரமானவைகள் ஆக்குகின்றன.* [29]*இந்தக் கூற்று ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சி விளக்கவுரையாளர்களை உள்ளடக்குவதில்லை.*

அவர்கள், அதிகாரங்கள் 4முதல் 19வரையுள்ள வசனப்பகுதியானது, பூமியின்மீது (அவர்களின்) கற்பனையான ஏழு ஆண்டு "உபத்திரவ" காலத்தைப் பற்றினது என்ற தங்கள் நம்பிக்கையால் இவ்வசனப் பகுதிக்கு கோணலான விளக்கத்தைக் கொடுத்துள்ளனர். [30]*மகாபாபிலோன் என்ற வேசி ரோமாபுரியாகவே இருந்தது என்று பலர் ஒப்புக்கொள்கின்றனர். மகாபாபிலோன் என்பது, "பூமியின் ராஜாக்கள் மேல் ராஜ்யபாரம்பண்ணுகிற மகா நகரம்" (17:18) என்பதாக, "ஏழு மலைகளின்" (17:9) மீது அமர்ந்ததாக இருந்தது. ரோமாபுரி இன்னமும் ஏழு மலைகளின்மீதுதான் அமைந்துள்ளது.*

[31]*நமது வசனப்பகுதியானது ரோமப்பேரரசின் அழிவை திட்டவட்டமாகவும் தனிப்பட்ட வகையிலும் குறிப்பிடுகிறது என்று நம்புபவர்களால் மற்ற விவாதங்களும் பயன்படுத்தப்படுகின்றன. "இது காலத்தின் முடிவில் அண்டத்தின் அழிவைக் குறிப்பிடுவதாக இருக்க முடியாது, ஏனெனில் அது 'ஒரு கண்ணிமைக்கும் பொழுதில்' (1 கொரிந்தியர் 15:52) நடைபெறும்" என்பது ஒரு விவாதமாக உள்ளது. இது அடையாளத்துவமாக இருப்பதாலும், அடையாளம் ஒன்றில் எதுவேண்டுமென்றாலும் நடக்கக்கூடும் என்பதாலும், இந்த விவாதம் மாபெரும் கனம் கொண்டுள்ளதாகக் காணப்படுவதில்லை. "மொழிநடையானது நேரடி அர்த்தமுள்ளதாயிராமல், அடையாளத்துவமாக உள்ளது, ஆகையால் இது இந்த அண்டத்தின் அழிவைக் குறிப்பதாக இருக்க முடியாது" என்பது போதுமான அளவு ஆர்வமுள்ள இன்னொரு விவாதமாக உள்ளது. அந்த விவாதம் இருவகைகளிலும் வெட்டுகிறதான இருபுறமும் கருக்குள்ள பட்டயமாக உள்ளது. வசனப்பகுதியானது தற்காலிகத் தண்டனை பற்றியோ அல்லது நிறைவான தண்டனையைப் பற்றியோ அடையாளத்துவமாக உள்ளது; இவ்வசனப்பகுதி அடையாளத்துவமாக உள்ளது என்ற உண்மையானது இவ்விரு சாத்தியக்கூறுகளில் எதையும் நீக்கிப் போடுவதில்லை.* [32]William Hendriksen, *More Than Conquerors* (Grand Rapids, Mich.: Baker Book House, 1954), 25. [33]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "ஆண்டவரே, எதுவரைக்கும்" என்ற பாடத்தில் 1:7க்கான குறிப்புகளைக் காணவும்.* [34]Owen L. Crouch, *Expository Preaching and Teaching: Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1985), 123. [35]*சங்கீதம் 94:1-7, 21-23ஐக் காணவும்.* [36]*எபிரெயர் 9:27.* [37]Edward P. Myers, *After These Things I Saw: A Study of Revelation* (Joplin, Mo.: College Press Publishing Co., 1997), 160. [38]Will L. Thompson, "There's a Great Day Coming," *Songs of the Church*, ed. Alton H. Howard (West Monroe, La.: Howard Publishing Co., 1977). [39]*சகோதரர் பேஸ் அவர்கள் 10, ஆகஸ்டு 1997 புதன்கிழமை மாலையில் ஜட்ஸோனியாவில் உள்ள கிறிஸ்துவின் சபையில் உரையாற்றினார்.* [40]*1 கொரிந்தியர் 10:4ஐக் காணவும்; மேலும் ரோமர் 9:33; 1 பேதுரு 2:8 ஆகியவற்றையும் காணவும்.*

[41]*இந்தப் பாடம் ஒரு பிரசங்கமாக எடுத்துரைக்கப்பட்டால், மாற்கு 16:16; நடபடிகள் 2:38; 22:16; கலாத்தியர் 3:26, 27 போன்ற வசனப் பகுதியைப் பயன்படுத்தவும். மேலும் இது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், முடிவுரையில் நீங்கள் எபிரெயர் 12:25-29ஐ உள்ளடக்க விரும்பலாம். அவ்வசனப் பகுதியானது, (இந்த பூமி போன்று) அசையக்கூடியவற்றை (இராஜ்யம்/சபை போன்று) அசைக்க முடியாதவற்றுடன் நேர்மாறாக ஒப்பிடுகிறது. உங்கள் உரையைக் கேட்பவர்கள் தேவனுடைய இராஜ்யத்தில் குடிமக்களாக (வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், சபையில் உறுப்பினர்களாக) இருக்க வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்துங்கள்.* [42]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 33-35.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *நீங்கள் வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17ஐ வாசிக்கும்போது, உங்கள் சிந்தைக்கு வரும் வார்த்தை அல்லது வார்த்தைகள் யாவை? இந்தத் தரிசனம் உங்களிடத்தில் விட்டுச் செல்லும் முதன்மையான மனப்பதிவு என்ன?*
2. *இவ்வசனப்பகுதி நமக்கு, இந்த உலகம் எவ்வாறு முடிவடையும் என்பது பற்றிய விபரமான நேரடி அர்த்தம் கொண்ட சித்தரிப்பைக் கொடுக்கிறதா? ஒவ்வொரு விபரமும் நேரடி அர்த்தம் கொண்டதாயிருக்க முடியாது என்று ஒருவரை நினைக்கச் செய்வது எது?*
3. *சூரியன் இருளாகுதல் மற்றும் நட்சத்திரங்கள் விழுதல் ஆகியவற்றைப் பற்றிப் பேசுகிற பழைய ஏற்பாட்டு வசனப்பகுதிகளின் சந்தர்ப்பப் பொருளை வாசியுங்கள். அந்த வசனப்பகுதிகள் எவற்றை போதிக்கின்றன என்பது பற்றிக் கலந்துரையாடத் தயாராகுங்கள்.*
4. *"இராஜாக்கள்," "பெரியோர்" மற்றும் பிறவாக, வசனம் 15ல் பயன்படுத்தப்பட்டுள்ள பல்வேறு சொற்றொடர்களைப் பற்றிக் கலந்துரையாடவும்.*
5. *மனிதனால் தேவனிடத்தில் இருந்து எப்போதாவது ஒளிந்து கொள்ள முடிந்துள்ளதா? மனிதர்கள் அவ்வாறு செய்ய முயற்சிப்பது ஏன்? நீங்கள் உங்கள் வாழ்வில் எதையாவது கர்த்தரிடமிருந்து ஒளித்து வைக்க முயற்சி செய்திருக்கின்றீர்களா?*
6. *"ஆட்டுக்குட்டியானவருடைய கோபம்" என்ற சொற்றொடர் உங்களுக்கு வினோதமானதாக இருக்கிறதா? இது, இந்தப் பாடத்தை எழுதியவருக்கு வழக்கமற்றதாகத் தோன்றியது ஏன்?*
7. *கலந்துரையாடப்படுகிற வசனப் பகுதியானது ரோமப்பேரரசின் அழிவைப்பற்றியதா அல்லது உலகத்தின் முடிவைப்பற்றியதா? எதைப்பற்றியது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? ஏன்?*
8. *வாழ்வில் கருத்துணர்வை ஏற்படுத்த வெளிப்படுத்தின விசேஷம் 6:12-17 வசனப்பகுதி நமக்கு எவ்வாறு உதவுகிறது?*
9. *இந்தப் பாடத்தின்படி, வசனப்பகுதியில் உள்ளவற்றில் முக்கியமான கேள்வி எது?*
10. *அடுத்த அதிகாரத்தின்படி, தேவன் தமது கோபத்தை ஊற்றும்போது யார் நிலைநிற்பார் (7:9)?*

மத்தேயு 24 மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 6

விளக்கவுரையாளர்கள் அடிக்கடி, மத்தேயு 24ஐ வெளிப்படுத்தின

விசேஷம் 6உடன் வைத்து, மத்தேயு 24ம் கூட, "யுத்தங்களையும் யுத்தத்தின் செய்திகளையும்," "பஞ்சங்களையும்," மற்றும் கிறிஸ்தவர்களுக்கு ஏற்படும் உபத்திரவங்களைப் பற்றியும் குறிக்கிறது என்று குறிப்பிடுகின்றனர் (மத்தேயு 24:6, 7, 9). இந்தப் பயிற்சியானது - ஒருவர், இரண்டாம் வருகை சமீபித்துள்ளது என்று நமக்குக் கூறுகிற "காலங்களின் அடையாளத்தை" வெளிப்படுத்துதல் என்பதையே மத்தேயு 24 (மற்றும் இதன் இணைவசனப் பகுதிகளான மாற்கு 13, லூக்கா 21) மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 6 ஆகியவற்றின் அடிப்படை நோக்கமாக உள்ளது என்ற தவறான வாக்குறுதியுடன் தொடங்காத வரையிலும் - ஒன்றும் அறியாததாக உள்ளது.

மத்தேயு 24:3ல் சீஷர்கள் இரண்டு கேள்விகளைக் கேட்டனர்: ஒன்று தேவாலயத்தின் அழிவைப் பற்றியதாகவும், இன்னொன்று உலகத்தின் முடிவைப் பற்றியதாகவும் இருந்தன. மத்தேயு 24ன் முதல் பகுதியானது எருசலேமின் அழிவைப் பற்றி அடிப்படையில் எடுத்துரைக்கிறது (வசனங்கள் 15முதல் 20வரையில் காணவும்), அதே வேளையில் அந்த அதிகாரத்தின் கடைசிப் பாகம் இரண்டாம் வருகையின்மீது கவனத்தைக் குவிக்கிறது. வசனங்கள் 6, 7 மற்றும் 9 ஆகியவை உலகத்தின் முடிவைப் பற்றியல்ல, ஆனால் எருசலேமின் அழிவைப் பற்றியே அக்கறை கொள்ளுவதாக உள்ளது.[1]

யுத்தங்கள், பூமியதிர்ச்சிகள் மற்றும் பஞ்சங்கள் ஆகியவற்றைப் பற்றிய இயேசுவின் குறிப்புகளை, இரண்டாம் வருகை சமீபமாயுள்ளது எனக்கூறும் அடையாளங்கள் என்ற வகையில் விளக்கப்படுத்துதலானது, அவர் தமக்கே நேரெதிராக உள்ளார் என்று ஆக்குவதாக உள்ளது. அதே அதிகாரத்தில், இரண்டாம் வருகையைப் பற்றி அவர் பேசியபோது, "அந்த நாளையும் அந்த நாழிகையையும் என் பிதா ஒருவர்தவிர மற்றொருவனும் அறியான், பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள்" என்று அவர் கூறினார் (வசனம் 36) மேலும் அவர், "நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷ குமாரன் வருவார்" என்றும் கூறினார் (வசனம் 44அ).

இயேசு வருகிறபோது வாழ்வு வழக்கமாக நடந்து கொண்டிருக்கும் என்று அவர் வலியுறுத்தினார் (வசனங்கள் 37-41). "யுத்தங்களைக் குறித்த வதந்திகளும்," பஞ்சங்களும், பூமியதிர்ச்சிகளும், உபத்திரவமும் மற்றும் கள்ளப்போதகர்களும், அவரது வருகை உடனடியானதாக உள்ளது என்பதற்கு அடையாளங்களாயிருப்பது இல்லை. மாறாக இவைகள் வாழ்வின் ஒரு பாகமாக உள்ளன - இவை, உலகத்தில் பாவம் வந்ததின் விளைவாக உள்ளன.

குறிப்பு

[1]கிறிஸ்துவின் வாழ்வு என்ற பாடத்தொடரில் நான், மத்தேயு 24ஐப் பற்றி முழுமையாக விவரித்துள்ளேன். "யுத்தங்களும் யுத்தங்களைக் குறித்த வதந்திகளும்" மற்றும் இவை போன்றவை அடையாளங்களே அல்ல என்று உண்மையிலேயே இயேசு கூறினார் என்பதை அதில் நான் குறிப்பிட்டுள்ளேன்.

தேவகோபத்தின் மகாநாள் (6:12-17)

25

புயலின் மையத்தில் அமைதி

[7:1-8]

நானும் எனது மனைவியும் ஓக்லஹாமா நகரத்தை நோக்கிப் போய்க் கொண்டிருந்தபோது ஒரு புயல் தாக்கியது. எங்களுக்கு முன்னால் இருந்த சாலை ஒரு நிமிடம் உலர்ந்திருந்தது; அடுத்த நிமிடத்தில், நாங்கள் மழையினால் தாக்கப்பட்டோம். மின்னல் மேகங்களுக்கு ஒளியூட்டியது; இடிமுழக்கமானது காரைப் புரட்டிப்போடும் அளவுக்கு மிகவும் பலத்த சத்தமாய் இருந்தது. சாலையைப் பார்வையில் காத்துக்கொள்வதற்கு நான் முன்னாகச் சாய்ந்து, காரின் கண்ணாடி வழியே உற்றுநோக்க வேண்டிய தாயிற்று. புயல் வலுவாய் அதிகரித்தது, அது காரைத் தள்ளாடச் செய்தது. நாங்கள் புயலினால் விரட்டப்பட்டபோது, நெடுஞ்சாலையோரமாக காரை நிறுத்த ஏறக்குறைய நான் முடிவுசெய்தபொழுது புயலைவிட்டு வெளியே வந்தோம். திடீரென்று வானம் நீலநிறமாயிற்று; சூரிய ஒளி (காரின்) ஜன்னல்கள் வழியாகப் பாய்ந்து வந்தது. எங்களுக்கு முன்பாக கொதிக்கும் மேகங்களும் குதிக்கும் மின்னல்களும் ஒளிவீசின; எங்கள் பயணத்தில் இன்னும் அதிகமான புயல்கள் காத்திருந்தன - ஆனால் அந்தக் கணத்திற்கு எல்லாம் அமைதியாய் இருந்தது. சற்று நேரமாவது நாங்கள் பாதுகாப்பாக இருந்தோம்.

வெளிப்படுத்தின புத்தகத்தினூடே நமது பயணம் அந்த அனுபவத்தைப் போன்றதாகவே உள்ளது: நாம், அதிகாரம் 6ன் புயல்களினூடே வெடித்தெழுந்து அதிகாரம் 7ன் பிரகாசமான சூரிய ஒளிக்குள் வருகிறோம். இன்னும் அதிகமான புயல்கள் காத்துள்ளன; ஆனால் இந்தக் கணத்திற்கு, பூமியின் மேற்பரப்பு அமைதியாக உள்ளது.

அதிகாரம் 7ன் காட்சிகள், வெளிப்படுத்தின விசேஷத்தைத் தொடக்கத்தில் வாசிக்க கேட்டவர்களுக்கு ஒரு வியப்புக்குரியதாக வந்திருக்கலாம். முதல் ஆறு முத்திரைகள் விரைவான வரிசையொன்றில் உடைக்கப்பட்டன. அடுத்ததாக ஏழாவது முத்திரை உடைக்கப்படும் என்று (வாசிக்க) கவனித்தவர்கள் எதிர்பார்த்து இருந்திருக்கலாம்; ஆனால் நாம் (8:1ல்) அதைப் பெறுவதற்கு முன்பு, "ஒரு இடையிசை" அல்லது ஒரு "அடைப்புக் குறி" என்று விளக்கவுரையாளர்கள் அழைக்கும் ஒரு விஷயத்தைக் கொண்டுள்ளோம்: அரியணையைச் சுற்றிலும், அடையாளத்துவ முத்திரையிடப்பட்ட 144,000 பேர்களும் எண்ணவியலாத பெருந்திரளான கூட்டமும் சூழ்ந்திருக்கும் காட்சி.[1]

நாள்வரிசை முறையில் அதிகாரம் 6ஐத் தொடர்ந்து அதிகாரம் 7 வருவதில்லை என்று பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள்

ஒப்புக்கொள்கின்றனர், அதாவது நிகழ்ச்சிகளின் நாட்காட்டி ஒன்றை கட்டியமைத்தல் என்பது யோவானின் நோக்கமாக இருந்ததில்லை. அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள், ஆறாம் முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்பு, ஒருவேளை முதலாம் முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்பேகூட நடந்திருந்தன என்பதற்கு நாம் பல குறிப்புகளைக் கண்டறிகின்றோம்:

வேதசாட்சியாக மரித்தவர்கள், ஐந்தாம் முத்திரை உடைக்கப்பட்ட போது பழிவாங்குதலுக்காக சத்தமிட்டுக் கூப்பிட்டனர், ஆனால் அவர்களுக்கு நியாயம் செய்யப்படுவதற்கு முன்பு, அவர்கள் "கொஞ்சக் காலம்" காத்திருக்க வேண்டும் என்று கூறப்பட்டிருந்தது (6:11). நியாயந்தீர்த்தல் என்பது பிற்பாடு, ஆறாம் முத்திரை உடைக்கப்படும்போது வரும் என்ற உண்மையானது, ("கொஞ்சக் காலம்" என்ற) காலவேளை யானது, ஐந்தாம் மற்றும் ஆறாம் முத்திரைகள் உடைக்கப்பட்ட காட்சி களுக்கிடையில் கடந்தது என்று கருத்துத் தெரிவிக்கிறது. அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள் இந்தக் காலவேளைக்குள் பொருந்தியிருக்க முடியும்.

அதிகாரம் 7ன் முதல் பகுதியில், தேவனுடைய ஊழியக்காரர்கள் முத்திரைபோட்டுத் தீருமளவும், "பூமியைச் சேதப்படுத்தாது இருக்கும்படி" தூதர்களுக்குக் கூறப்பட்டது (7:3). இருப்பினும் அதிகாரம் 6ல் சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவர் "சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்து" போட்டார் (6:4), மற்றும் மங்கின நிறமுள்ள குதிரையின்மீது ஏறியிருந்த வருக்கு "பட்டயத்தினாலும், பஞ்சத்தினாலும், சாவினாலும், பூமியின் துஷ்ட மிருகங்களினாலும், பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் ... கொடுக்கப்பட்டது" (6:8ஆ). நான்கு குதிரைகளின்மீது ஏறியிருந்தவர்களுடன் "பூமிக்குத் தொடங்கிய தீமை" என்பது, அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள், குதிரையில் ஏறியிருந்தவர்கள் சவாரி செய்யத் தொடங்குவதற்கு முன்பு நடைபெற்றிருக்கலாம் என்று கருத்துத் தெரிவிக்கிறது.

அதிகாரம் ஏழின் நான்கு காற்றுகள் என்பவை, அதிகாரம் ஆறின் நான்கு குதிரை வீரர்களால் ஏற்படுத்தப்பட்ட அதே இன்னல்களைக் குறிக்கலாம். விஷயம் இதுவாகவே இருந்தது என்று J. W. இராபர்ட்ஸ் அவர்கள் நம்பினார்:

> இந்த (நான்கு) காற்றுகள் என்பவை, முதல் நான்கு முத்திரைகள் உடைக்கப்பட்டபோது வந்த நான்கு குதிரைவீரர்களின் இன்னொரு அடையாளமாக உள்ளன என்பது, இறைவெளிப்பாட்டின் மிகவும் திட்டவட்டமான அடையாளத்துவங்களில் ஒன்றாயிருப்பதாகக் காணப்படுகிறது. இறைவெளிப்பாடு தொடர்ந்து தரவழைக்கும் சகரியாவின் தரிசனத்தில், நான்கு குதிரைவீரர்கள். ஆகாயத்தின் நான்கு காற்றுகள் என்று வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளனர் (சகரியா 6:5).[2]

இராபர்ட்ஸ் அவர்களின் கூற்று சரியானதென்றால், அதிகாரம் 7ல் கிறிஸ்தவர்கள் முத்திரையிடப்படுதல் என்பது நிச்சயமாகவே, முதல் முத்திரை உடைக்கப்படுவதற்கு முன்பாக நடந்தது என்றாகிறது.

மேற்கண்ட விஷயத்தைக் கவனத்தில் கொண்டு, நாம் இந்தப் பாடத்தில், அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகளை அதிகாரம் 6ல் சித்தரிக்கப்பட்ட பயம்நிறைந்த நிகழ்ச்சிகளுக்கு முன்னதாக நடைபெற்றன என்ற வகையில் பின்னோக்கித் திரும்பி நினைத்துப் பார்ப்போம்.[3]

இது, "விஷயம் அப்படியுள்ளதென்றால், அதிகாரம் 7ன் நிகழ்ச்சிகள் இந்த விபரத்தின் முற்பகுதியில் உட்செருகப்படாதது ஏன்?" என்ற கேள்வியைத் தூண்டுகிறது. சாத்தியக்கூறுள்ள பல காரணங்கள் தரப்படலாம்: ஒருவேளை இந்தக் கருத்துகள், ஒரு நாடகத்துவமான செயல்விளைவைக் கொண்டுவரும் வகையில் அமைக்கப்பட்டிருக்கலாம். அதிகாரம் 6ஐ, தரம்வாய்ந்த இசைப்பத்தி ஒன்றில் பலவந்தமாக நுழைக்கப்பட்ட படிப்படியாக அதிகரிக்கும் இசையுடன் ஒப்பிடலாம். பின்பு, நமது புலன்கள் இனியும் தாங்க இயலாது என்று காணப்படும்போது, இதமான பத்தியொன்று நமது காதுகளை வருடி வாழ்த்துகிறது - இது அதிகாரம் 7ல் மீண்டும் கட்டியெழுப்பப்படும் இறுக்கத்திற்கு முன்னதாக ஆத்துமாவை அமைதிப்படுத்தும் வர்ணமெட்டாக, அமைதிப்படுத்தும் இடையிசையாக உள்ளது.

அதிகாரம் 6ன் விளைவாக எழுந்த கேள்விக்கு அதிகாரம் 7 பதில் அளிக்கிறது என்பது அதிகம் நம்பக்கூடிய விளக்கமாக இருக்கிறது. அதிகாரம் 6ல் சித்தரிக்கப்பட்டுள்ள துன்பத்திற்குப் பின்பு - விசேஷமாக, இந்த அண்டத்தின் அளவையியல் ரீதியான (அடையாளத்துவ) அழிவிற்குப் பின்பு - "ஆனால், கிறிஸ்தவர்களைப் பற்றிய விஷயம் என்ன? இவை நடக்கும்போது எங்களுக்கு என்ன நேரிடும்?" என்பதே யோவானின் வாசகர்களினுடைய இயல்பான பதில் செயலாய் இருந்திருக்கும். அதிகாரம் 7 இதற்கான பதிலைத் தருகிறது.

அதிகாரம் ஏழில் இரண்டு காட்சிகள் சித்தரிக்கப்படுகின்றன: 144,000 பேர் முத்திரையிடப்படுதல் (வசனங்கள் 1-8) மற்றும் அரியணையைச் சுற்றிலும், ஒருவராலும் எண்ணிக்கணக்கிட முடியாத பெருந்திரளானவர்கள் சூழ்ந்திருத்தல் (வசனங்கள் 9-17). நாம் இந்தப் பாடத்தில் 144,000 பேர்களைப் பற்றியும் அடுத்த பாடத்தில் பெருந்திரளானவர்களைப் பற்றியும் கலந்துரையாடுவோம்.

தேவன் அளிப்பின் வார்த்தையைக் கொண்டுள்ளார்: அவர் தமக்குச் சொந்தமானவர்களை ஆதரிக்கின்றார் (7:1-3)

அதிகாரம் 7, "இவைகளுக்குப்பின்பு ..." என்று தொடங்குகிறது (வசனம் 1அ). "இவைகளுக்குப் பின்பு" என்பது, வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரு புதிய தலைப்பையோ அல்லது சிந்தனையின் புதிய வரியையோ அறிமுகப்படுத்தப் பயன்படுத்தப்பட்டுள்ள ஒரு கிரேக்கச் சொல்விளக்கமாகும்.[4] *"இவைகளுக்குப் பின்பு, பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று, பூமியின்மேலாவது, சமுத்திரத்தின்மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்று*

களையும் பிடித்திருக்கக்கண்டேன்" என்று அப்போஸ்தலர் கூறினார் (வசனம் 1). ("நான்கு தூதர்களும் பூமியின் நான்கு காற்றுகளைப் பிடித்திருத்தல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தப் புத்தகம் முழுவதிலும் நாம், தூதர்கள் தேவனுடைய திட்டங்களைச் செயல்படுத்துவதைக் காண்கின்றோம். இவர்களில் சிலருக்கு விசேஷித்த விதமான பணிப்பொறுப்புகள் தரப்பட்டிருந்தன: ஒருவர் "அக்கினியின்மேல் அதிகாரம்" கொண்டிருந்தார் (14:18), இன்னொருவர் "தண்ணீர்களின் தூதனாக" இருந்தார் (16:5). அதிகாரம் 7ல், "பூமியின் காற்றுகளை"[5] கட்டுப்படுத்துவதற்கு நான்கு தூதர்கள் தேவனால் பயன் படுத்தப்பட்டனர். நான்கு என்பது "வானவியல் எண்ணாக" (படைப்பின் எண்ணாக) உள்ளது என்பதையும், வெளிப்படுத்தின விசேஷத்தில் இது மனிதகுலம் முழுவதையும் குறிக்கிறது என்பதையும் நினைவில் வையுங்கள்.[6]

"பூமியின் நான்கு திசைகளிலும் நான்கு தூதர்கள் நின்று" இருந்தனர் (வசனம் 1ஆ): ஒருவர் கிழக்கிலும், மற்றவர்கள் மேற்கிலும், வடக்கிலும் மற்றும் தெற்கிலும் நின்றிருந்தனர். " 'பூமியின் நான்கு திசைகள்' என்ற சொற்றொடரை இவ்விடத்தில் அறிவிப்பதில் நாம், இது ஏசாயா 11:12[7] அல்லது அன்றாட செய்தித்தாள் ஆகியவற்றில் இருப்பதைக் காட்டிலும் அதிகம் 'விஞ்ஞானப் பூர்வமற்றதாக' இருப்பதில்லை என்பதைக் கவனிக் வேண்டும்."[8] ஆபிரகாமுக்கு நீண்டநாட்கள் முன்னதாகவே, "பூமியின் நான்கு திசைகள்" என்பது உலகளாவிய தன்மையை மறைமுகமாய்க் குறிப்பிடப் பயன்படுத்தப்பட்டது.[9]

இந்த நான்கு தூதர்களும் "பூமியின்மேலாவது, சமுத்திரத்தின் மேலாவது, ஒரு மரத்தின்மேலாவது, காற்று அடியாதபடிக்கு, பூமியின் நான்கு காற்றுகளையும் பிடித்திருந்தனர்"[10] (வசனம் 1இ). இந்தக் காற்றுகள் "பூமியையும் சமுத்திரத்தையும்" (வசனம் 2ஆ) மற்றும் "மரங்களையும் சேதப்படுத்துகிறதற்கு" (வசனம் 3ஆ) நியமிக்கப்பட்டிருந்த அழிவின் முகமைகளாக இருந்தன. வேதவசனங்களில், தேவனுடைய கோபத்திற்கு அடையாளங்கள் என்ற வகையில் கடுங்காற்றுகள் அடிக்கடி பயன்படுத்தப் படுகின்றன;[11] இங்கு அவைகள் பூமியின்மீது கட்டவிழ்த்து விடப்படுவதால் ஏற்படும் பயங்கரங்களை அடையாளப்படுத்துகின்றன. நான்கு திசைகளிலும் இருந்து நான்கு காற்றுகள் வரும் என்ற உண்மையானது "எப்பக்கத்திலும் இடர்ப்பாடு" என்ற சிந்தனையை அடிக்கோடிடுகிறது. நீங்கள் இந்தக் காட்சியை உங்கள் மனதில் காணுகையில், சுழற்காற்றுகள் கட்டவிழ்க்கப்படுவதற்குக் காட்டு விலங்குகள் தங்கள் கட்டுகளில் வலிந்து துடிப்பதுபோல் போராடுவதைக் கண்ணோக்குங்கள்!

பின்பு யோவான், "வேறொரு தூதன் சூரியன் உதிக்குந்திசையிலிருந்து ஏறிவரக்கண்டார்" (வசனம் 2அ), அதாவது "கிழக்குத் திசையிலிருந்து" அந்தத்தூதன் வரக்கண்டார். யூதத்துவச் சிந்தனையில், தேவனுடைய கிருபையுள்ள வெளிப்பாடுகள் கிழக்குத் திசையுடன் தொடர்புடையவை களாய் இருந்தன: பரதீசு கிழக்கு திசையில் அமைக்கப்பட்டது (ஆதியாகமம் 2:8), தேவாலயத்திற்குத் தேவனுடைய மகிமை கிழக்கில் இருந்து வந்தது (எசேக்கியேல் 43:2), மற்றும் மேசியா கிழக்கில் இருந்து வருவார் என்று

எதிர்பார்க்கப்பட்டிருந்தார்.[12] சூரியன் உதிக்கும் திசையில் இருந்து வருதல் என்பது, அந்த தூதர், ஆண்டவரிடத்தில் இருந்து நம்பிக்கையின் செய்தியொன்றைக் கொண்டுவந்தார் என்று சுட்டிக்காண்பித்தது.

இந்தத்தூதர் "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலை"க்[13] கொண்டிருந்தார் (வசனம் 2ஆ). "கிழக்குநாடுகளின் முடியரசர்கள் தங்கள் உடைமைகளை அடையாளப்படுத்திப் பாதுகாப்பதற்கும், சட்டபூர்வமான பதிவேடுகளை செல்லத்தக்கதாக்குவதற்கும் தங்களுக்கென்று விசேஷித்த முத்திரைகளைக் கொண்டிருந்தனர்."[14] பொதுவாக இந்த முத்திரைகள், முத்திரை மோதிரங்களின்மீது இருந்தன (ஆதியாகமம் 41:42; எஸ்தர் 3:10; 8:2 ஆகிய வசனங்களைக் காணவும்), ஆனால் இவைகள் கைப்பிடிகள் கொண்ட உலோக முத்திரைகளாகவும் இருந்திருக்கக்கூடும்.

முத்திரைக்கோலைக் கொண்டிருந்த தூதர், "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்" (வசனம் 3). "ஊழியக்காரர்" என்பது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் தொடக்க வார்த்தைகளில் (1:1) காணப்படும் அதே சொற்றொடராக உள்ளது.[15] இது தேவனுக்குரியவர்கள் எல்லாரையும் குறிக்கிறதாக இருக்கும் வேளையில், விசேஷமாக அந்த வேளையில் உபத்திரவப்படுத்தப்பட்டிருந்த கிறிஸ்தவர்களை அர்த்தப்படுத்திற்று.

தேவன் தமது மக்களைப் பற்றி அக்கறை கொண்டிருந்தார். உண்மையில் அவர், "எனது பிள்ளைகள் ஆயத்தமாகும் வரையிலும் பயங்கரங்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருங்கள்!"[16] என்று கூறினார். தேவன் தமக்குச் சொந்தமானவர்களிடத்தில் பட்சபாதமாய் இருக்கின்றார் என்பது வேதாகமத்தின் மாபெரும் சத்தியங்களில் ஒன்றாக உள்ளது! என்னைத் தவறாக புரிந்துகொள்ளாதீர்கள்; இரட்சிப்பின் விஷயத்தைப் பொறுத்தமட்டில், "தேவன் பட்சபாதமுள்ளவரல்ல" (நடபடிகள் 10:34ஆ, 35; கலாத்தியர் 3:28ஐயும் காணவும்).[17] இருப்பினும் ஒரு நபர், விசுவாசத்திலும் கீழ்ப்படிதலிலும் கர்த்தருக்குப் பதில் அளிக்கின்றபோது, அவர் தேவனுக்குப் பிரியமானவர்களில் ஒருவராகின்றார்![18]

ஆதியாகமம் 6:8ல் நாம், "நோவாவுக்கோ, கர்த்தருடைய கண்களில் கிருபை கிடைத்தது" என்று வாசிக்கின்றோம். மோசே, சாமுவேல், தாவீது, மரியாள் மற்றும் இயேசு ஆகியோருக்கும் இதே விஷயம் கூறப்பட்டுள்ளது (யாத்திராகமம் 33:12; 1 சாமுவேல் 2:26; நடபடிகள் 7:46; லூக்கா 1:30). ஞானவானாக இருந்த மனிதர், "நல்லவன் கர்த்தரிடத்தில் தயைபெறுவான்" என்று உரைத்தார் (நீதிமொழிகள் 12:2அ), மற்றும் சங்கீதக்காரர், "தமக்குப் பயந்து, தமது கிருபைக்குக் காத்திருக்கிறவர்கள்மேல் கர்த்தர் பிரியமாயிருக்கிறார்" என்று எழுதினார் (சங்கீதம் 147:11அ). குறிப்பாக ஏற்புடைய வசனப்பகுதியொன்று 1 பேதுரு 2:20ஆ வில் காணப்படுகிறது: "நீங்கள் நன்மைசெய்து பாடுபடும்போது பொறுமையோடே சகித்தால் அதுவே தேவனுக்குமுன்பாகப் பிரீதியாயிருக்கும்!"[19]

நீங்கள் கிறிஸ்தவராகும்போது, நீங்கள் தேவனுக்கு விசேஷித்தவரா

கின்றீர்கள்[20] *- உங்கள் வாழ்வில் ஊடுருவும் பிரச்சனைகள் உங்களைக் குறைவாக விசேஷித்தவர்களாக்கி விடுவதில்லை. உண்மையில், நீங்கள் அந்தப் பிரச்சனைகளை விசுவாசத்துடன் சந்திக்கும்போது, கர்த்தருக்கு நீங்கள் இன்னும் அதிகமாக விசேஷித்தவர்கள் (அப்படிப்பட்டது சாத்தியமென்றால்) ஆகின்றீர்கள்!*

தேவன் பாதுகாப்பின் முத்திரையைக் கொண்டுள்ளார்: அவர் தமக்குச் சொந்தமானவர்களைப் பராமரிக்கின்றார் (7:2-4)

தேவன் தமக்குப் பிரியமானவர்களுக்கு என்ன செய்கின்றார்? பின்தொடரும் பதிலைக் கவனமாக வாசியுங்கள், ஏனெனில் இது நமது பாடத்தின் முதன்மைச் செய்தியாக உள்ளது.

"முத்திரை" என்பது இவ்வசனப் பகுதியின் திறவுகோல் வார்த்தையாக உள்ளது: கிழக்கில் இருந்து வந்த தூதர், "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக்கோலை"க் கொண்டிருந்தார் (வசனம் 2). அவர், "நான்கு தூதரையும் நோக்கி: நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் பூமியையும் சமுத்திரத்தையும் மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்" (வசனங்கள் 2ஆ, 3). ("தேவனுடைய ஊழியக்காரர்மீது ஒரு தூதன் முத்திரை இடுதல்" என்ற விளக்க படத்தைக் காணவும்.) நாம், "இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்" என்று வாசிக்கின்றோம் (வசனம் 4). இஸ்ரவேலின் பன்னிரு கோத்திரங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன, ஒவ்வொரு கோத்திரத்திலும் "பன்னீராயிரம் பேர்" முத்திரை போடப்பட்டனர் (7:5-8).

அதிகாரம் 5ல் ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகச்சுருளைப் பற்றிப் படித்தபோது நாம், முத்திரையொன்றின் முக்கியத்துவத்தைக் கவனித்திருந்தோம். முத்திரை என்பது மூன்று மடங்கு நோக்கம் கொண்டிருந்தது என்று நாம் வலியுறுத்தினோம்:

(1) உரிமைத்துவத்தைச் சரிபார்த்தல் (உன்னதப்பாட்டு 8:6),

(2) உண்மைத் தன்மையை உறுதிசெய்தல் (எஸ்றா 3:12), மற்றும்

(3) உள்ளிருப்பவற்றைப் பாதுகாத்தல் (மத்தேயு 27:66).

வெளிப்படுத்தின விசேஷம் 7ல் உள்ள "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை" என்பது, இந்த மூன்று நோக்கங்களுக்கும் பயன்பட்டது. அது, ஊழியக்காரர்கள் தேவனுக்கு உரியவர்கள் என்று காண்பித்தது. தேவனுடைய ஊழியக்காரர்களைத் தவிர வேறெவரும் முத்திரை இடப்படவில்லை; இவ்விதமாக, முத்திரையானது உண்மைத் தன்மையைச் சுட்டிக் காண்பித்தது. இருப்பினும், பாதுகாப்பு என்பதே வெளிப்படுத்தின விசேஷம் 7ன் வலியுறுத்தமாக உள்ளது; வரவிருந்த பெருந்துன்பங்களில் இருந்து ஊழியக்காரர்களைப் பாதுகாப்பதற்காக அவர்கள்மீது

முத்திரையிடப்பட்டது.[21] அவர்கள் இவ்வாறு பாதுகாக்கப்பட்டனர் என்பது வெளிப்படுத்தின விசேஷம் 9ல் காணப்படமுடியும், அங்கு பாதாளக்குழியில் இருந்து புறப்பட்டு வந்த வெட்டுக்கிளிகளுக்கு, "தங்கள் நெற்றிகளில் தேவனுடைய முத்திரையைத் தரித்திராத மனுஷரைமாத்திரம் சேதப்படுத்த அவைகளுக்கு உத்தரவு கொடுக்கப்பட்டது" (9:4).

இதற்கான பழைய ஏற்பாட்டு இணைவு ஒன்று எசேக்கியேல் 9:2-6ல் கண்டறியப்பட முடியும்: தேவபக்தியற்றவர்களைத் தண்டிப்பதற்காகத் தேவன் எருசலேமுக்கு, கொலைத்தண்டனை நிறைவேற்றும் ஆறுபேரை அனுப்பினார். இந்த ஆறுபேருடன், "கணக்கனுடைய மைக்கூட்டை வைத்திருக்கிற" (வசனம் 2) இன்னொரு மனிதரும் சென்றார். இந்த மனிதருக்கு, "நீ எருசலேம் நகரம் எங்கும் உருவப்போய், அதற்குள்ளே செய்யப்படுகிற சகல அருவருப்புகளினிமித்தமும் பெருமூச்சுவிட்டழுகிற மனுஷரின் நெற்றிகளில் அடையாளம் போடு" என்று கூறப்பட்டது (வசனம் 4). இவர் ஒரு தனிப்பட்ட அடையாளத்தைக் கொண்டு ஒன்றுமறியாத வர்களை அடையாளப்படுத்த வேண்டியிருந்தது. அதன்பின்பு, கொலைத்தண்டனை நிறைவேற்றுபவர்கள் எருசலேம் நகரெங்கும் சென்று, "முதியோரையும், வாலிபரையும், கன்னிகைகளையும், குழந்தைகளையும், ஸ்திரீகளையும்" இரக்கமின்றிக் கொன்றுபோட்டனர் (வசனம் 6அ). ஆனால், "அடையாளம் போடப்பட்டிருக்கிற ஒருவனையும் கிட்டாதிருங்கள்" (வசனம் 6ஆ) என்று தேவன் கட்டளையிட்டார். எசேக்கியேல் கண்ட தரிசனத்தில், அடையாளமானது[22] உண்மை யுள்ளவர்களைப் பாதுகாத்தது போலவே, யோவான் கண்ட தரிசனத்திலும் அடையாளமானது உண்மையுள்ளவர்களைப் பாதுகாத்தது.

மக்களை முத்திரையிடுதல் என்பது உங்களுக்கு வினோதமானதாகக் காணப்படலாம். சாதாரணமாக, பொருட்கள்தான் முத்திரையிடப் பட்டன,[23] ஆனால் இங்கு மக்கள் முத்திரையிடப்பட்டனர். இருப்பினும், ஆவிக்குரிய வகையில் முத்திரையிடப்பட்டிருத்தல் என்பது அன்றைக் கிருந்த கிறிஸ்தவர்களுக்கு நன்கு பழக்கமான கருத்தாக இருந்தது, அது இன்றைய நாட்களிலும் அவ்வாறே இருக்க வேண்டும். ஒரு நபர் ஞானஸ்நானம் பெறுகின்றபோது, அவர் பரிசுத்த ஆவியானவரை வரமாகப் பெறுகின்றார் (நடபடிகள் 2:38; நடபடிகள் 5:32; கலாத்தியர் 4:6ஐயும் காணவும்) - மற்றும் இந்த ஆவிக்குரிய காரியமானது "முத்திரையிடப் படுதல்" என்று குறிப்பிடப்படுகிறது. பவுல், "விசுவாசிகளானபோது, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட பரிசுத்த ஆவியால் அவருக்குள் முத்திரை போடப்பட்டீர்கள்" என்று எழுதினார் (எபேசியர் 1:13, 14ஆ; எபேசியர் 4:30; 2 கொரிந்தியர் 1:21, 22ஐயும் காணவும்).

பரிசுத்த ஆவியானவர் நமக்குள் வாசம் பண்ணுகின்றார் என்ற உண்மையானது (1 கொரிந்தியர் 3:16; 2 தீமோத்தேயு 1:14) உரிமைத்து வத்தையும் உண்மைத் தன்மையையும் குறிக்கிறது (ரோமர் 8:9), ஆனால் இது விசேஷமாக, தேவன் தொடர்ந்து அருளிரக்கத்துடன் அளிக்கின்றவற்றைப் பற்றிப் பேசுகிறது (ரோமர் 8:11, 26).[24] முதல் நூற்றாண்டில் இருந்து தற்காலம் வரையில் உள்ள கிறிஸ்தவர்கள், தேவனால்

முத்திரையிடப்பட்டு - மற்றும் இவ்விதமாகப் பாதுகாக்கப்பட்டு - இருக்கின்றனர்!

இது நம்மை நமது பாடத்தின் இருதயம் போன்ற மையப்பகுதிக்குக் கொண்டுவருகிறது: அவர்கள் எந்தக் கருத்தில் பாதுகாக்கப்பட்டு இருந்தனர்? அந்த முத்திரையானது அவர்களின் உடல்களை, அம்பு களாலும், ஈட்டிகளாலும் மற்றும் பட்டயங்களாலும் தாக்க முடியாத வைகள் ஆக்கிற்றா? அந்த முத்திரையானது, அவர்களின் கழுத்துக்களை, கொலைத்தண்டனை நிறைவேற்றுபவர்கள் எம்பிவிழும்படிக்கு மிகவும் விரைப்பாக்கிற்றா? அந்த முத்திரையானது, கொழுந்து விட்டு எரியும் நெருப்பு அவர்களின் உடல்களைப் பட்சித்துப் போடாதபடிக்கு, அவர்கள் வெப்பத்தை உணராத வகையில் அவர்களைத் தீயினால் பாதிக்கப்படாத வர்கள் ஆக்கிற்றா? இந்தக் கேள்வியை இன்னும் நெருங்கிக் கொண்டு வருவதென்றால் அந்த முத்திரையானது இன்றைய நாட்களின் கிறிஸ்தவர் களை, புற்றுநோய் உட்பட, மரணத்திற்கு ஏதுவான நோய்களினால் தாக்கப்பட முடியாதவர்கள் ஆக்குகிறதா? நாம் முத்திரையிடப்பட் டிருத்தல் என்பது, நாம் சாவுக்கேதுவான கார்விபத்து ஒன்றில் அகப்பட இயலாது என்று அர்த்தமாகிறதா? அந்த முத்திரையானது நம்மை நிதிநிலைப் பேரழிவில் இருந்து தாமாகவே பாதுகாக்கிறதா? நம்மில் ஒவ்வொருவரும் வயது முதிர்வது என்பதுடன் இணைந்துள்ள (உடல் அளவில்) தாழ்வு நிலைகளில் இருந்து விலக்கிவைக்கப் படுவோமா? உண்மையுள்ள கிறிஸ்தவர்கள், ஒரு குடும்பம் பிரிந்து சீரழிந்து போவதால் ஏற்படும் இருதய துக்கத்தை அறியாமல் இருப்பார்கள் என்று அர்த்தமா?

இந்தக் கேள்விகளுக்கான பதில்களை நாம் ஒவ்வொருவரும் அறிந்துள்ளோம். வாழ்வு கொண்டுவரக்கூடிய எல்லா பிரச்சனைகளுக்கும், அத்துடன் கூடுதலாக, தேவனுடைய பிள்ளைகள் சகிக்க வேண்டியவையாக உள்ள தனிப்பட்ட பிரச்சனைகளுக்கும், கிறிஸ்தவர் உட்பட்டுள்ளார் என்பதை வேதவசனங்களும் மனித அனுபவமும், நமக்குக் கூறுகின்றன.[25] *இதுவரைக்கும் அதிகாரத்திற்குப் பின் அதிகாரமாக நாம் படித்துள்ள படிப்பில், கிறிஸ்தவர்கள் துன்புறுவதை நாம் கண்டுள்ளோம் (1:9; 2:10, 13; 3:10; 6:4, 6, 8-11). மீண்டுமாக நாம், "முத்திரையானது தேவனுடைய விசேஷித்த மக்களை எந்தக் கருத்தில் பாதுகாக்கிறது?" என்று கேட்கின்றோம்.*

முத்திரை வைக்கப்பட்ட இடத்தில் இதற்கான பதில் கிடக்கிறது என்று நான் நம்புகின்றேன்: "நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் ..." (வசனம் 3; மேலும் 9:4; 14:1; 22:4ஐயும் காணவும்). இது தேவனால் அங்கீகரிக்கப்பட்டவர்கள், தங்கள் நெற்றிகளில் ஒரு தெய்வீக அடையாளச் சின்னத்தைக்[26] *கொண்டிருந்தனர் என்று அர்த்தப்படுவது இல்லை. மிருகத்தை வணங்கியவர்களுக்கு "தங்கள் தங்கள் வலதுகைகளிலாவது நெற்றி களிலாவது ஒரு முத்திரை" தரப்பட்டிருந்தது என்று பிற்பாடு நாம் வாசிப்போம் (13:16; மேலும் 14:9; 20:4ஐயும் காணவும்).*[27] *விசுவாசிகள் தங்கள் நெற்றிகளில் ஒரு பெரிய வெள்ளை முத்திரையைக் கொண்டிருந்து,*

அவிசுவாசிகள் ஒரு அழகற்ற மஞ்சள் அடையாளக் குறியைக் கொண்டிருந்தால், அது உதவி நிறைந்ததாக இருந்திருக்கும், ஆனால் விஷயம் அப்படியிருக்கவில்லை.

எனவே, "அவர்களின் நெற்றிகளில்" முத்திரையிடப்பட்டது என்ற உண்மையின் முக்கியத்துவம் என்னவாக உள்ளது? இந்த விபரத்தைப் பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் கவனியாது விட்டு விடுகின்றனர். ஒருவேளை யாரேனும் இதைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தார் என்றால், அவர்கள் நெற்றியின் மேன்மைத் தன்மையை வலியுறுத்து கின்றனர், அல்லது நெற்றி என்பது முகத்தின் உணர்வை வெளிப்படுத்தும் பாகமாக உள்ளது என்று கூறுகின்றனர். இராபர்ட் முல்ஹாலண்ட் அவர்கள், நெற்றி என்பது "உள்ளுணர்வின் இருக்கையாக உள்ளது"[28] என்று குறிப்பிட்டபோது, அவர் இந்த அடையாளத்துவத்தின் அழுத்தத்தைப் படம்பிடித்துக் காட்டினார் என்று நான் நம்புகின்றேன். நீங்களும் நானும் நமது நெற்றிகளைத் தட்டிக்கொள்ளும்போது, நாம் குறிப்பிடுவது என்ன? நமது சிந்தைகளைத் தானே! தேவனுடைய மக்களின் "நெற்றிகளில்" முத்திரையிடப்படுதல் என்பது, அவர்களின் சிந்தைகளிலும் இருதயங் களிலும் தேவன் தமது பாதுகாப்பை வைத்தார் என்று சுட்டிக்காண்பிக்கிறது என்று நான் நம்புகின்றேன்.

(அன்பான வாசகரே, பின்வரும் கருத்தை உங்கள் மனதில் பதியவைக்க என்னை அனுமதியுங்கள்: பின்வரும் கலந்துரையாடலில் நீங்கள் "உநெத" என்பதைக் காணும் ஒவ்வொரு முறையும், நிறுத்தி உங்களது நெற்றியைத் தட்டிக் கொள்ளுங்கள். இப்போது முந்திய பத்தியைத் திரும்பவும் வாசித்து, சாய்வெழுத்துக்களில் உள்ள வார்த்தை ஒவ்வொன்றிற்குப் பின்பும் உங்கள் நெற்றியைத் தட்டிக்கொள்ளுங்கள், பின்பு கீழே தொடரும் பத்தியைத் தொடர்ந்து வாசியுங்கள்.)

தேவனுடைய மக்களின் நெற்றியில் முத்திரையிடுதல் மற்றும் மிருகத்தைப் பின்பற்றுபவர்களின் நெற்றிகளிலும் கைகளிலும் அடையாள மிடுதல் என்பது எனக்கு உபாகமம் 6ஐ நினைவூட்டுகிறது. அங்கு இஸ்ரவேல் மக்களுக்கு, "இந்த வார்த்தைகள் உன் இருதயத்தில் இருக்கக்கடவது ... அவைகளை உன் கையின்மேல் அடையாளமாகக் கட்டிக்கொள்வாயாக, அவைகள் உன் கண்களுக்கு நடுவே ஞாபகக்குறியாய் இருக்கக்கடவது" என்று கூறப்பட்டது (வசனங்கள் 6-8). (உநெத.) யூதர்கள் இந்தக் கட்டளையை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொண்டு, சிறு பெட்டிகளை - சின்னஞ்சிறு கையெழுத்துப் பிரதிகள் கொண்ட பெட்டிகளை - தங்கள் கைகளிலும் நெற்றிகளிலும் கட்டிக்கொண்டனர்.[29] இருப்பினும் பெரும்பான்மையானவர்கள், "உங்கள் இருதயத்தில்" என்பது முக்கியமான சொற்றொடராய் இருந்தது என்பதைப் புரிந்து கொண்டிருந்தனர் - மற்றும் தேவனுடைய வசனத்தை நெற்றிகளிலும் கைகளிலும் "கட்டிக் கொள்ளுதல்" என்பது, வசனம் அவர்களின் இருதயங்களில் இருந்தால், அது அவர்களின் சிந்தித்தலையும் (உநெத) அவர்களின் செயல்களையும் கட்டுப்படுத்தும். அதுபோலவே, விசுவாசிகளை முத்திரையிடுதலும், அவிசுவாசிகளின் நெற்றிகளில் அடையாளமிடுதலும், அவர்களுடைய

சிந்தித்தலின் செயல்முறைகள் (உநெத) பாதிக்கப்பட்டன என்பதைச் சுட்டிக்காண்பித்தது!

நான் கூற முயற்சி செய்வதைத் தவறாகப் புரிந்து கொள்ளாதிருங்கள். தேவனுடைய வசனத்திற்கு நன்கு பழக்கப்பட்ட எவரும், தேவன் தனிப்பட்ட வகையில் இடையிடுவதாகவும், தமது மக்களின் சார்பாக செயல்துடிப்புடன் இருப்பதாகவும் வாக்களித்துள்ளார் என்பதை அறிகின்றார். அவர் நமக்கு உள்ளான வல்லமைகளைக் கூடுதலாக்குவதாக வாக்குத்தத்தம் செய்துள்ளார் (எபேசியர் 3:20). நமது சோதனைகள் ஒருபோதும் நம்மால் கையாளப்படுவதற்கு அதிகமாய் இருக்க மாட்டாது என்று அவர் வாக்களித்து இருக்கின்றார் (1 கொரிந்தியர் 10:13). சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கும்படி மேலாதிக்கம் செய்வதாக அவர் வாக்களித்துள்ளார் (ரோமர் 8:28). இருந்தபோதிலும், உயர்த்தப்படுதல் மற்றும் வாழ்வின் பிரச்சனைகளினால் கீழே தாழ்த்தப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள வேறுபாடு என்பது, பெரும்பாலும் எண்ணப்போக்கைப் (உநெத) பொறுத்த விஷயமாகவே உள்ளது. இதைப் பின்வருமாறும் கூறலாம்: மேலே பட்டியலிடப்பட்ட வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கின்ற (உநெத) கிறிஸ்தவர், வாழ்வின் புயல்களில் உயிர்பிழைத்திருக்க முடியும்; இவற்றை விசுவாசிக்காதவர் அதே புயல்களினால் விழுங்கப்பட்டுவிட முடியும்.

எனது கருத்தை விவரிப்பதற்கு, அல்லல்களைப் பற்றிப் பொதுவாகவும், மரணத்தைப் பற்றிக் குறிப்பாகவும் பவுல் கொண்டிருந்த எண்ணப் போக்கை (உநெத) ஆழ்ந்து சிந்தியுங்கள்:

> ஆனபடியினாலே நாங்கள் சோர்ந்து போகிறதில்லை. எங்கள் புறம்பான மனுஷனானது அழிந்தும், உள்ளான மனுஷனானது நாளுக்குநாள் புதிதாக்கப்படுகிறது. மேலும் காணப்படுகிறவைகளை யல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதி சீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது. ஏனெனில், காணப்படுகிறவைகள் அநித்தியமானவைகள், காணப்படாதவை களோ நித்தியமானவைகள்.
>
> பூமிக்குரிய கூடாரமாகிய நம்முடைய வீடு அழிந்துபோனாலும், தேவனால் கட்டப்பட்ட கைவேலையல்லாத நித்திய வீடு பரலோகத் திலே நமக்கு உண்டென்று அறிந்திருக்கிறோம் (2 கொரிந்தியர் 4:16-5:1).

இந்த அப்போஸ்தலருக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டபோது, அவர் பின்வருமாறு கூறினார்,

> ஏனென்றால், நான் இப்பொழுதே பானபலியாக வார்க்கப்பட்டுப் போகிறேன். நான் தேகத்தை விட்டுப் பிரியும் காலம் வந்தது. நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன். இதுமுதல் நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது, நீதியுள்ள நியாயாதிபதியாகிய

கர்த்தர் அந்நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார். எனக்கு மாத்திரமல்ல, அவர் பிரசன்னமாகுதலை விரும்பும் யாவருக்கும் அதைத் தந்தருளுவார் (2 தீமோத்தேயு 4:6-8).

டொனால்டு பார்ன்ஹவுஸ் என்ற பெயருடைய பிரசங்கியாரின் மனைவி, தமது முப்பதுகளின் வயதில் புற்றுநோயினால் இறந்து போனார், அவர் பல சிறுபிள்ளைகளைத் தமக்குப் பின்விட்டுச் சென்றிருந்தார். சவ அடக்கத்திற்குச் செல்லும் வழியில், பார்ன்ஹவுஸும் அவரது பிள்ளைகளும், அவர்களின் கார்மீது பெரிய நிழலை இட்ட ஒரு பெரிய வண்டியைக் கடந்து சென்றனர். அவர் தமது மகளிடத்தில், "நீ அந்த வண்டியினால் நசுக்கப்படுவதையா அல்லது அதன் நிழலினால் மேற்கொள்ளப்படுவதையா, எதைத் தேர்ந்து கொள்வாய்?" என்று கேட்டார். அந்தப்பெண், "நிழலினால் மேற்கொள்ளப்படுவதைத்தான்! ஒரு நிழல் என்பது உங்களைத் துன்புறுத்த முடியாதே" என்று பதில் அளித்தாள். அந்த மனிதர் தலையை அசைத்து, "உன் தாய் மரணத்தினால் நசுக்கப்படவில்லை, ஆனால் மரணத்தின் நிழலினால் மேற்கொள்ளப்பட்டு மாத்திரம் இருக்கின்றாள்" என்று கூறினார். சவ அடக்கத்தில் அவர், சங்கீதம் 23:4அ வின்மீது உரையாற்றினார்: "நான் மரண இருளின் பள்ளத்தாக்கிலே நடந்தாலும் பொல்லாப்புக்குப் பயப்படேன், தேவரீர் என்னோடேகூட இருக்கிறீர்."[30]

திரு. பார்ன்ஹவுஸ் அவர்களின் உணர்வுடன் பவுல் அடையாளப் படுத்தப்படலாம். இந்த அப்போஸ்தலர் முத்திரையிடப்பட்டிருந்தார் (உநெத); இவர் பாதுகாக்கப்பட்டிருந்தார் (உநெத). இப்படிப்பட்ட எண்ணப்போக்கைக் (உநெத) கொண்டுள்ள எந்த நபரும் துன்புறுத்தப்பட முடியாது!

வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தை முழுமையாக, மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7ல் குறிப்பிடப்பட்டுள்ள முத்திரை யிடப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் ஒரு இணைவைக் குறிப்பிடுவதன் மூலம் நான் எனது சிந்தனையை ஒரு அடிவைப்பு முன்னதாகக் கொண்டுசெல்ல விரும்புகின்றேன். (1) வெளிப்படுத்தின விசேஷத்தை யோவான் எழுதிய காலத்தில், மிகமோசமான துன்புறுத்துதல்கள் இனிமேல் வரவேண்டியவைகளாயிருந்தன (உதாரணமாக, 3:10ஐக் காணவும்). இவ்விதமாக, வெளிப்படுத்தின புத்தகமானது, கிறிஸ்தவர்கள் அந்த உபத்திரவங்களினூடே பாதுகாப்பாக வரும்படிக்கு எழுதப்பட்டது (2:10ஐக் காணவும்). (2) வெளிப்படுத்தின விசேஷம் 7ல், கடுமையான காற்றுகள் பூமியின்மீது கட்டவிழ்த்துவிடப்படவிருந்தன. ஆகையால் கிறிஸ்தவர்கள், முன் வந்துகொண்டிருந்த பயங்கரமான நாட்களில் உயிர்பிழைத்து இருக்கும்படிக்கு முத்திரையிடப்பட்டனர். வெளி.புத்தகத்தின் முழுமையும் அதன் நோக்கமானது, முன்வந்து கொண்டிருந்த இடர்ப்பாட்டில் இருந்து தேவனுடைய மக்களை முத்திரையிடுதல்/பாதுகாத்தல் என்பதே நோக்கமாக உள்ளது.

யுத்தத்திற்கு அணிவகுத்துள்ள கிறிஸ்தவர்கள், வெளிப்படுத்தின விசேஷத்தின் கொள்கைகளைத் தங்கள் இருதயங்களில் பதித்துக்கொண்டு,[31]

அவற்றைத் தங்கள் சிந்தித்தல் (உநெத) மற்றும் வாழ்வுகளில் ஒரு பாகமாக்கிக் கொண்டால், அழிவின் காற்று எதுவும் அவர்களை உலுக்கிப்போடாது. வெளிப்படுத்தின புத்தகத்தின் மீதான இந்தப் பாடத்தொடரானது உங்கள்மீது தேவனுடைய "முத்திரையின்" பாகமாய் இருக்கக்கூடும் என்று நான் நம்புகின்றேன். இந்தப் புத்தகம் போதிப்பதைக் கற்றுக்கொண்டு அவற்றை உங்கள் இருதயத்தில் பொக்கிஷமாய்ப் பாதுகாத்துக் கொள்ளுங்கள் (உநெத)!

தேவன், பாதுகாக்கப்பட்டவர்களின் பட்டியலைக் கொண்டுள்ளார்: அவர் தமக்குச் சொந்தமானவர்களை அறிகின்றார் (7:4-8)

அது, இந்தப் பாடத்தை முடிப்பதற்கான மிக உன்னதமான இடமாய் இருக்கும் - ஆனால் நாம், எடுத்துரைத்து முடிக்க இன்னும் ஐந்து வசனங்களையும், கற்றுக்கொள்ள இன்னும் ஒரு பாடத்தையும் கொண்டுள்ளோம். இந்தக் கடைசி ஐந்து வசனங்கள் பலரால், இப்புத்தகத்தில் உள்ள மிகவும் குழப்பமூட்டுபவைகளில் ஒருபகுதியென்று பலரால் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டுள்ளது:

> முத்திரைபோடப்பட்டவர்களின் தொகையைச் சொல்லக்கேட்டேன்;[32] இஸ்ரவேல் புத்திரருடைய சகல கோத்திரங்களிலும் முத்திரைபோடப்பட்டவர்கள் இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர். யூதா கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ரூபன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். காத் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். ஆசேர் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். நப்தலி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். மனாசே கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். சிமியோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். லேவி கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். இசக்கார் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். செபுலோன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். யோசேப்பு கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம். பென்யமீன் கோத்திரத்தில் முத்திரைபோடப்பட்டவர்கள் பன்னீராயிரம் (வசனங்கள் 4-8).

இவ்வசனப்பகுதியானது யூதர்களை நேரடியான அர்த்தத்தில் குறிக்கிறது என்று சிலர் வலியுறுத்துகின்றனர்.[33] நீங்கள் பின்வருபவற்றைச் செய்தால் இந்த முடிவையே அடைவீர்கள் என்று நான் யூகிக்கின்றேன்-

(1) இஸ்ரவேல் மக்களின் பன்னிரண்டு கோத்திரங்களைப் பற்றி நீங்கள் எதையும் அறியாதிருந்தால்.

(2) கி.மு. 722ல் பத்து கோத்திரங்கள் தங்கள் அடையாளத்தை அடிப்படையாக இழந்து போயின,[34] மற்ற இரண்டும் கி.பி. 70ல்

அவ்வாறாயின்[35] என்பதை நீங்கள் அறியாதிருந்தால்.

(3) தனிப்பட்ட கோத்திரங்கள் இருந்த வேளையிலும், அவைகள் எண்ணிக்கையில் பெரிதும் வேறுபட்டு இருந்தன என்பதை நீங்கள் அறியாதிருந்தால்.[36]

(4) எந்த நாட்டைச் சேர்ந்தவர்கள் என்பது கர்த்தருக்கு இனியும் முக்கியமானதாக இருப்பதில்லை என்ற உண்மையை நீங்கள் அறியாதிருந்தால். பவுல் பின்வருமாறு எழுதினார்: "யூதனென்றும் கிரேக்கனென்றும் வித்தியாசமே இல்லை, எல்லாருக்குங் கர்த்தரானவர் தம்மைத் தொழுதுகொள்ளுகிற யாவருக்கும் ஐசுவரியசம்பன்னராயிருக்கிறார்" (ரோமர் 10:12); "யூதனென்றும் கிரேக்கனென்றுமில்லை. அடிமையென்றும் சுயாதீனனென்றுமில்லை, ஆணென்றும் பெண்ணென்றுமில்லை. நீங்களெல்லாரும் கிறிஸ்து இயேசுவுக்குள் ஒன்றாயிருக்கிறீர்கள்" (கலாத்தியர் 3:28). பர்ட்டன் காஃப்மென் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

> யூதர்களை தேவன் என்ன செய்யப்போகின்றார் என்பது பற்றிய பேச்சு யாவும் வீணானதாக, தவறாய் வழிநடத்துவதாக மற்றும் (புதிய ஏற்பாட்டில் உள்ள) யாவற்றிற்கும் நேர்மாறானதாக உள்ளது. இனியும் தேவன், ஈரானியர்களுக்கு, டச்சுக்காரர்களுக்கு, ஆங்கிலேயர் களுக்கு, ஜப்பானியர்களுக்கு வைத்துள்ளதைக் காட்டிலும் அதிக விசேஷித்த திட்டம் ஒன்றை யூத இனத்தவருக்கென்று வைத்திருப்பது இல்லை.[37]

பட்டியலிடப்பட்ட பன்னிரண்டு கோத்திரங்கள், மாம்சப்பிரகாரமான யூதர்களைக் குறிப்பதில்லை என்றால், அவைகள் எதைக் குறிக்கின்றன? வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தில் பழைய ஏற்பாட்டுச் சொல்லாக்கங்கள் பயன்படுத்தப்படும்போது "திரிபு" இருக்கிறதா என்று கண்ணோக்கும்படி, அறிமுகப் பாடம் ஒன்றில், நான் உங்களுக்குக் கூறினேன். வெளி. 7ல் தரப்பட்டுள்ள கோத்திரங்களின் பட்டியலில், வழக்கத்திற்கு மாறான எதையாவது உங்களால் கண்டறிய முடிகிறதா என்று பாருங்கள்:

> யூதா, ரூபன், காத், ஆசேர், நப்தலி,
> மனாசே,[38] சிமியோன், லேவி, இசக்கார், செபுலோன்,
> யோசேப்பு, பென்யமீன்.

இந்தப் பட்டியலில் யூதா கோத்திரத்தை முதலில் குறிப்பிடுதல் என்பது வினோதமானதாக உள்ளது - இது பொதுவாக, முதல் பிறந்தவரான ரூபனுக்கு ஒதுக்கப்பட்ட இடமாக உள்ளது.[39] லேவியும் யோசேப்பும் உள்ளடக்கப் பட்டு, எப்பிராயீமும் தாணும் சேர்க்கப்படாததென்பது மிகவும் வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது. லேவி என்பவர் யாக்கோபுவின் குமாரர்களில் ஒருவராயிருந்தார், ஆனால் அவருடைய சந்ததியார்கள் "ஆசாரியத்துவக் கோத்திரமாய்" இருந்தனர், அவர்கள் பொதுவாகப் பன்னிரண்டு கோத்திரங்களின் பட்டியலில் உள்ளடக்கப்படவில்லை (எண்ணாகமம் 18:20-24; யோசுவா 13:14ஐக் காணவும்). கோத்திரங்களின்

எண்ணிக்கையைப் பன்னிரண்டு என்று ஆக்குவதற்காக, யோசேப்பின் இரண்டு மகன்களான எப்பிராயீமும் மனாசேயும் இரண்டு கோத்திரங்களாக உள்ளடக்கப்பட்டனர்.

இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்கள்

	யாக்கோபுவின் மகன்கள் (பிறப்பு வரிசையின்படி)	பன்னிரண்டு கோத்திரங்கள்
யாக்கோபு (இஸ்ரவேல்)	ரூபன்	ரூபன்
	சிமியோன்	சிமியோன்
	லேவி*	
	யூதா	யூதா
	தாண்	தாண்
	நப்தலி	நப்தலி
	காத்	காத்
	ஆசேர்	ஆசேர்
	இசக்கார்	இசக்கார்
	செபுலோன்	செபுலோன்
	யோசேப்பு	எப்பிராயீம்
		மனாசே
	பென்யமீன்	பென்யமீன்

*ஆசாரியத்துவக் கோத்திரம் என்ற வகையில், லேவியின் சந்ததியார்களுக்கு, மற்ற கோத்திரங்கள் பெற்றுக்கொண்ட காணியாட்சி சுதந்திரவகை தரப்படவில்லை.

இருப்பினும் வெளிப்படுத்தின விசேஷம் 7ன் பட்டியலில், லேவி கோத்திரம் உள்ளடக்கப்பட்டது - அதே வேளையில் யாக்கோபுவின் இன்னொரு மகனான தாண் என்பவரின் கோத்திரம் விட்டு விடப்பட்டுள்ளது. மற்றும், எப்பிராயீமுக்குப் பதிலாக யோசேப்பு பட்டியலில் இடப்பட்டுள்ளார்.[40] குறிப்பிடத்தக்க இந்த "திரிபுகள்," இவ்வசனப் பகுதியானது நேரடி அர்த்தத்தில் யூதர்களைக் குறிப்பிடு வதில்லை என்று நம்மை அறியும்படி அனுமதிக்கிற தெய்வீகத் தந்தியாக உள்ளன.[41]

என்றால் இவ்வேத வசனப்பகுதி எதைத்தான் குறிக்கிறது? வசனங்கள் 1முதல் 3வரையிலான நமது படிப்பில் நாம், இவ்வசனப்பகுதியானது கிறிஸ்தவர்களை முத்திரையிடுதல் குறித்துப் பேசுகிறது என்று வலியுறுத் தினோம். வசனம் 3ல் "ஊழியக்காரர்" என்பது 1:1ல் அர்த்தப்படுத்தியது போலவே அர்த்தப்படுத்துகிறது. யூதர்களோ புறஜாதியாரோ, யாராயிருப் பினும், உபத்திரவப்பட்ட கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துதல் என்பதே வெளிப்படுத்தின விசேஷம் புத்தகத்தின் நோக்கமாக உள்ளது.[42]

இது இன்னொரு கேள்வியை எழுப்புகிறது: வசனம் 4முதல் 8வரை யுள்ள பகுதியானது கிறிஸ்தவர்களைக் குறிக்கிறது என்றால், இவ்வசனப் பகுதியானது யூதத்துவக் கோத்திரங்களின் அடையாளத்துவத்தைப்

பயன்படுத்துவது ஏன்?

(1) இந்த அடையாளத்துவமானது வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் முழுவதிலும் கிறிஸ்தவக் கருத்துக்களையும் கோட்பாடுகளையும் குறிப்பதற்கு யூதத்துவச் சொல்லாக்கத்தின் பயன்பாட்டுடன் இணக்கம் கொண்டுள்ளது.

(2) இந்த அடையாளத்துவம், சபை என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலாக உள்ளது என்ற புதிய ஏற்பாட்டுப் போதனையுடன் இணக்கம் கொண்டுள்ளது. வெளிப்படுத்தின விசேஷம் 2 மற்றும் 3ம் அதிகாரங்கள், “தங்களை யூதரென்று சொல்லியும் யூதராயிராமல்'' போனவர்களைப் பற்றிப் பேசுகிறது (2:9; 3:9ஐயும் காணவும்). அந்த வசனப்பகுதிகளை நாம் படிக்கும்போது, இவர்கள் இயேசுவை மேசியா என்று ஏற்றுக்கொள்ள மறுத்திருந்த மாம்சப்பிரகாரமான யூதர்களாய் இருந்தனர் என்று நாம் வலியுறுத்தினோம்.[43] இதனுடன் தொடர்புடைய வகையில், ரோமர் 2:28, 29 மேற்கோள் காண்பிக்கப்பட்டது: “ஆதலால் புறம்பாக யூதனானவன் யூதனல்ல, புறம்பாக மாம்சத்தில் செய்யப்படும் விருத்தசேதனமும் விருத்தசேதனமல்ல. உள்ளத்திலே யூதனானவனே யூதன், எழுத்தின்படி உண்டாகாமல், ஆவியின்படி இருதயத்தில் உண்டாகும் விருத்தசேதனமே விருத்தசேதனம், ...”

யூதர்கள் “ஆபிரகாமின் சந்ததியார்களாய்” இருப்பதினால் மாத்திரம், இனியும் அவர்கள் தேவனுடைய விசேஷித்த மக்களாக இருப்பதில்லை (ரோமர் 9:7; மேலும் வசனம் 6ஐயும் காணவும்). மாறாக, இப்போது ஆபிரகாம் ‘‘விசுவாசிக்கின்ற யாவருக்கும் தகப்பனாக'' இருக்கின்றார் (ரோமர் 4:11; மேலும் கலாத்தியர் 3:7, 29ஐயும் காணவும்). இன்றைய நாட்களில் சபையானது, ‘‘தேவனுடைய இஸ்ரவேல்'' என்று அழைக்கப்படுகிறது (கலாத்தியர் 6:16). “மாம்சத்தின்மேல் நம்பிக்கையாயிராமல், ஆவியினாலே தேவனுக்கு ஆராதனைசெய்து, கிறிஸ்து இயேசுவுக்குள் மேன்மைபாராட்டுகிற'' மக்களே உண்மையான “விருத்தசேதனமுள்ளவர்கள்” (பிலிப்பியர் 3:3).

(3) இந்த அடையாளத்துவமானது, இஸ்ரவேலுக்குத் தேவன் கொண்டிருந்த தோற்றகாலத் திட்டத்தை சபை நிறைவேற்றுகிறது என்ற உண்மையுடன் சீர்பொருந்தியுள்ளது. இஸ்ரவேலைக் குறிப்பதற்கு பழைய ஏற்பாட்டில் பயன்படுத்தப்பட்ட சொற்றொடர்கள், இப்போது சபைக்கு நடைமுறைப்படுத்தப்படுகின்றன: சபை “தேவனுக்குச் சொந்தமானதாக” உள்ளது (எபேசியர் 1:14; மேலும் தீத்து 2:14ஐயும் காணவும்) மற்றும் அது தேவனுடைய “பரிசுத்த இனமாக (ஜாதியாக)” உள்ளது (1 பேதுரு 2:9).

பன்னிரண்டு கோத்திரங்களை, சபை என்று அடையாளப்படுத்துதல், எல்லா சிரமத்தையும் தீர்த்துவைப்பதில்லை. இன்னமும் நாம், “இலட்சத்து நாற்பத்து நாலாயிரம்பேர்” (வசனம் 4) என்ற எண்ணிக்கையைக் குறித்துத் திகைப்புடையவர்களாகவே/குழப்பம் கொண்டவர்களாகவே இருக்கின்றோம். சிலர், இந்த எண்ணை நேரடி அர்த்தமாக எடுத்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.[44] சிலரைப் பொறுத்தமட்டில், 144,000 பேர் என்பவர்கள் பரலோகத்தில் பிரவேசிக்க அனுமதிக்கப்படும்

“உயர்நிலைப் பரிசுத்தவான்களாய்” இருக்க, நம்மில் எஞ்சியுள்ளவர்கள் - அதாவது, “சாதாரண” பரிசுத்தவான்கள் - புதுப்பிக்கப்பட்ட பூமியுடன் மனநிறைவு கொண்டிருக்க வேண்டும்.[45]

இப்போது நீங்கள், இப்படிப்பட்ட போதனையினால் அலைவுபடாத படிக்கு, வெளிப்படுத்தின விசேஷத்தில் எண்களின் அடையாளத்துவப் பயன்பாடு பற்றிப் போதிய அளவு அறிந்திருக்க வேண்டும்.[46] “பன்னிரண்டு” என்பது முழுமைத்துவத்தின் அடையாளமாக உள்ளது, எனவே “144” (பன்னிரண்டு முறை பன்னிரண்டு) என்பது ‘‘முழுமைத்துவத்தின் முழுமைத்துவமாக” இருக்கிறது. “ஆயிரம்” என்பது முழுமைத்துவத்தின் இன்னொரு அடையாளமாக இருப்பதால், “144,000” (144 x 1,000) என்பது ‘‘வலிவாக்கப்பட்ட முழுமைத்துவம்’’ என்பதைக் குறிக்கிறது. வேறு வார்த்தைகளில் சொல்வதென்றால், “அங்கு அவ்வளவுதான்; இனி அதிகம் ஒன்றுமில்லை!” என்றாகிறது.

என்றால், “144,000” என்ற எண்ணின் பயன்பாட்டில் இருந்து நாம் கற்க வேண்டியிருப்பது என்ன? பாடமானது பின்வருவதாக மாத்திரம் இருக்கிறது: தேவனுடைய மக்கள் அனைவரும் முத்திரையிடப்பட்டனர். கர்த்தர், தமது பிள்ளைகளின்மீது அங்கீகாரம் மற்றும் பாதுகாப்பு ஆகியவற்றிற்கான தமது முத்திரையை இடுவதை முடித்தபோது, அவர் (தமது பிள்ளையாக உள்ள) எந்த ஒரு தனிநபரையும் தவறவிட்டுவிட வில்லை; அவர் எல்லாரையும் முத்திரையிட்டார்! இந்த சத்தியத்தை நாம் இன்னும் அதிகமான அளவுக்குத் தனிநபருக்கு உரியதாக்குவோம்: நீங்கள் இராஜாவுடைய ஒரு பிள்ளையாக இருந்தால், நீங்கள் கவனிக்காமல் விட்டுவிடப்படவில்லை. நீங்கள் முத்திரையிடப்பட்டு இருக்கின்றீர்கள்!

எவரொருவரையும் தேவன் தவறவிடுவதில்லை என்ற உண்மையானது, தேவன் தமது மக்களை *அறிகின்றார்* என்பதை மறைமுகமாய் உணர்த்து கிறது. இது, முத்திரையிடப்படுதலின் அடையாளத்துவத்தில் இருந்து நாம் கற்றுக்கொள்ள வேண்டிய பிரதானமான சத்தியமாக உள்ளது என்பதை, அதிகாரம் 14 தெளிவாக்கும். அதிகாரம் 14ல், 144,000 பேர், சீயோன் மலையில் ஆட்டுக்குட்டியானவருடன் “அவரோடேகூட அவருடைய பிதாவின் நாமம் தங்கள் நெற்றிகளில் எழுதப்பட்ட’’வர்களாய் நிற்கின்றார்கள் (14:1ஆ). நான், எனது பெயர் முத்திரையை முகப்பில் கொண்ட வேதாகமம் ஒன்றை வைத்துள்ளேன் - அது, அந்தப்புத்தகம் வேறு யாருடையதும் அல்ல, என்னுடையது என்பதை நிலைநாட்டுகிறது.

நாம் அதிகாரம் 14ஐப் படிக்கும்போது இந்த சிந்தனையை இன்னும் விபரமாய் ஆராய்வோம். இந்த கணத்திற்கு நான் இக்கருத்தைத் தொகுத்துரைப்பதற்கு 2 தீமோத்தேயு 2:19அ வைப் பயன்படுத்த விரும்புகின்றேன்: ‘‘ஆகிலும் தேவனுடைய உறுதியான அஸ்திபாரம் நிலைத்திருக்கிறது. *கர்த்தர் தம்முடையவர்களை அறிவார்.*” நீங்கள் தேவனுடைய பிள்ளையாய் இருந்தால், அவர் உங்களை அறிகின்றார் (நாகூம் 1:7; யோவான் 10:14ஐக் காணவும்): அவர் உங்களின் உள்ளும் புறம்பும் அறிகின்றார். அவர் உங்கள் பலங்களையும் பலவீனங்களையும் அறிகின்றார். அவரிடத்தில் நீங்கள் கேட்பதற்கு முன்பாகவே, அவர் உங்கள் தேவைகளை

அறிகின்றார் (மத்தேயு 6:8). உங்கள் தலையில் எத்தனை முடிகள் உள்ளன என்றுகூட அறிந்திருக்கும் அளவு அவர் உங்களை மிகவும் நெருக்கமாக அறிகின்றார் (மத்தேயு 10:30)!

நீங்கள் கர்த்தருக்கு விசேஷித்தவர்கள் என்று நான் மீண்டும் கூறுகின்றேன்!

முடிவுரை

மீண்டுமாக வசனம் 1முதல் 8வரை (சிறப்பாக, வசனங்கள் 1முதல் 3வரை) வாசித்துப் பாருங்கள். இந்த வசனப்பகுதி உங்களிடத்தில் விட்டுச் செல்லுகிற முழுமையான மனப்பதிவு என்ன? தேவன் தமது ஊழியக்காரர்களைப் பற்றி அக்கறையாய் இருப்பதில்லையா? அதாவது அவர்களைப் பாதுகாக்க வேண்டுமென்று அவர் விரும்புகிறதில்லையா? உலகில் நான் வாழும் பகுதியில் நாங்கள் சிலவேளைகளில், "அடையாளமிடப்படுதல், முத்திரையிடப்படுதல், வழங்கப்படுதல்" ["signed, sealed, and delivered"[47]] *என்ற சொற்றொடரைப் பயன்படுத்து வதுண்டு. நாம் இந்தப் பாடத்தில், தேவன் கிறிஸ்தவர்களுடன் இருக்கின் றார் மற்றும் அவர்களைப் பாதுகாப்பார் என்பதன் அடையாளமாக அவர்கள் முத்திரையிடப்பட்டனர் என்று கண்டோம். நாம் நமது அடுத்த பாடத்தில், கிறிஸ்தவர்கள் அதன் விளைவு என்ற வகையில் விடுவிக்கப் படுவார்கள் என்று காண்போம்.*

இந்தப் பாடத்தை முடிக்கையில் நான், "நீங்கள் முத்திரையிடப்பட்டு இருக்கின்றீர்களா?" என்று கேட்டாக வேண்டும். நாம் நமது பாடத்தில், மக்கள் பாவங்களில் இருந்து மீட்கப்படுவதற்காக ஞானஸ்நானம் பெறும்போது (முழுக்காட்டப்படும்போது), அவர்களுக்குத் தேவன் தமது சொந்த ஆவியை ஒரு வரமாகத் தருகின்றார் என்று கவனித்தோம் (நடபடிகள் 2:38) - மற்றும் இந்த மாறுதல் ஒரு தெய்வீக முத்திரையிடுதலாகக் குறிப்பிடப்படுகிறது (எபேசியர் 1:13, 14). புதிய ஏற்பாடு போதிக்கிறபடி நீங்கள் ஞானஸ்நானம் பெறாதிருந்தால், நீங்கள் முத்திரையிடப்படவில்லை; உங்களுக்குத் தேவனுடைய பாதுகாப்பு வாக்குத்தத்தம் செய்யப்படவில்லை.

ஒரு புயல் பற்றிய விவரிப்பைக் கொண்டு நான் இந்தப் பாடத்தைத் தொடங்கினேன். நீங்கள் அனேகமாக, உலகப்பிரகாரமான மற்றும் உலகப்பிரகாரமற்ற பல புயல்களில் இருந்திருக்கலாம். வாழ்வின் புயல்கள் கடுமையானவை என்று உங்களை நான் இணங்கச் செய்யத் தேவையில்லை. தேவனுடைய முத்திரையைக் கொண்டிருத்தல் என்பதே இதைச் சமாளிப்பதற்கான ஒரே வழியாக இருக்கிறது என்று நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நீங்கள் புதிய ஏற்பாட்டு மாதிரியின்படியாக இன்னமும் ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளாது இருந்தால், இப்போதே அதைப் பெற்றுக்கொள்ளும்படி நான் உங்களை வற்புறுத்த அனுமதியுங்கள். காத்திருக்காதீர்கள்; தயங்காதீர்கள்![48]

குறிப்புகள்

[1]ஆறு மற்றும் ஏழு ஆகிய எக்காளங்களுக்கு இடையில் நாம் இதே வகையான இடையிசையைக் கொண்டிருப்போம். [2]J. W. Roberts, *The Revelation to John (The Apocalypse)*, The Living Word Commentary Series (Austin, Tex.: Sweet Publishing Co., 1974), 70. [3]அதிகாரம் 7ல் உள்ள இந்தக் காற்றுகள், ஏழு முத்திரைகள் - குறிப்பாக ஏழு எக்காளங்கள் ஆகியவற்றிற்கு - சித்தரிக்கப்பட்டுள்ளவற்றுடன் கூடுதலாக உள்ள புயல்களைக் குறிக்கிறது என்று சிலர் நினைக்கின்றனர் மற்றும் இது சாத்தியமானதாகவே உள்ளது. ஏழு முத்திரைகளும் ஏழு எக்காளங்களும் (நாம் காணப்போகின்றபடி) அடிப்படையில் இணைவாகவும் ஒரே காலகட்டத்தைப் பற்றி எடுத்துரைப்பவைகளாகவும் இருப்பதால், காற்றுகளை முத்திரைகள் அல்லது எக்காளங்களுடன் தொடர்புடைய வகையில் நாம் நினைக்கின்றோமா இல்லையா என்பது சார்பு நிலையில் முக்கியத்துவம் அற்றதாக உள்ளது. கிறிஸ்தவர்களின் வழியில் எப்பொழுது என்னவிதமான உபத்திரவம் வந்தாலும், அவர்களைத் தேவன் பாதுகாக்கின்றார்! [4]W. B. West, Jr., *Revelation Through First Century Glasses*, ed. Bob Prichard (Nashville: Gospel Advocate Co., 1997), 69. [5]இவர்கள் துன்மார்க்க சக்திகளை அடக்குகின்ற காவல் தூதர்களாய் இருக்கவில்லை. மாறாக இவர்கள் தேவனுடைய ஆணையைச் செய்த அவரது ஊழியக்காரர்களாய் இருந்தனர். [6]"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் தொடங்குகிற "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தைக் காணவும். [7]"பூமியின் நான்கு திசைகளிலுமிருந்து" சிதறியிருந்தவர்களை ஒன்றுகூட்டுதல் பற்றி ஏசாயா பேசியபோது (ஏசாயா 11:12), அவர் "from everywhere" ["எங்குமுள்ள"] என்று மாத்திரம் அர்த்தப்படுத்தினார் (ஏசாயா 11:11ஐக் காணவும்). எசேக்கியேல் 7:2 இன்னொரு விவரிப்பாக உள்ளது, அவ்விடத்தில் எசேக்கியேல், "[பலஸ்தீன] தேசத்தின் நாலு முனைகளின்மேலும்" என்பது பற்றிப் பேசினார். பலஸ்தீன நாடு வடிவத்தில் ஒரு சதுரமாக அல்லது நீண்ட சதுரமாக இருந்தது என்று தீர்க்கதரிசி நம்பியதற்காக அவரை எவரொருவரும் குற்றம்சாட்டமாட்டார்கள் என்பது உறுதி. [8]Warren W. Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 590. [9]H. L. Ellison, Scripture Union Bible Study Book Series: *1 Peter - Revelation* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1969), 57. [10]மரங்களை இதில் உள்ளடக்கியிருத்தல் என்பது வழக்கத்திற்கு மாறானதாக உள்ளது. ஒருவேளை இது, எல்லாத் தாவர வாழ்வைப் பற்றிக் குறிப்பதாக மாத்திரம் இருக்கலாம், அல்லது புயலுக்குப் பின்பு ஒரு பலத்த காற்றினால் மரங்கள் விழுந்து கிடப்பது, மிகவும் மனதில் பதியக்கூடிய காட்சியாக இருப்பதால் இங்கு குறிப்பிடப்பட்டிருக்கலாம். 8:7 மற்றும் 9:4 ஆகிய வசனங்களில் மரங்களும் மற்றும் வளருகின்ற பிறவும் மீண்டும் குறிப்பிடப்படும்.

[11]எடுத்துக்காட்டாக, எரேமியா 4:11, 12; 23:19; 49:36 மற்றும் 51:1 ஆகிய வசனங்களைக் காணவும். கடுங்காற்றுகள் வீசாத, சமச்சீரான தட்பவெப்பநிலை கொண்ட இடத்தில் நீங்கள் வாழ்ந்தால், இந்தக் கற்பனையானது உங்களுக்குச் சிறிதளவே அர்த்தப்படும். பலத்த காற்று ஒன்றின் கடும் சீற்றத்தின்கீழ் தங்களின் வீடுகள் நடுநடுங்கி வீழ்ந்திருப்பதைக் கொண்டவர்கள், இந்த அடையாளத்துவத்தை எவ்வாறு தழுவுவது என்பதைப் புரிந்து கொள்வார்கள். [12]This sentence was adapted from G. R. Beasley-Murray, *The Book of Revelation*, New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 142. ஆசரிப்புக்கூடாரமும் தேவாலயமும் கிழக்கு நோக்கியிருந்தன என்பதையும் வேதாகம மாணவர்கள் நினைவுகூருவார்கள். [13]புறதெய்வ வணக்கத்தார்களால் ஆராதிக்கப்பட்ட செத்த உருவங்களுக்கு மாறாக, யெகோவா, "ஜீவனுள்ள தேவன்" என்று அழைக்கப்பட்டார். [14]Homer Hailey, *Revelation: An Introduction and Commen-*

tary (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 202. *இந்தப் புத்தகத்தில் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராயிருக்கின்றார்" என்ற பாடத்தில் உள்ள முத்திரையிடப்பட்ட பதிவேடுகள் பற்றிய விளக்கங்களைக் காணவும்.* [15]*"ஊழியக்காரர்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் அர்த்தத்திற்கு, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் 1:1க்கான குறிப்புகளைக் காணவும்.* [16]*உண்மையுள்ளவர்கள் தயாராகும் வரையில் வெள்ளப்பெருக்கு வருவதை தடுத்திருந்ததான தேவனுடைய செயல் என்ற ஒத்த நிகழ்ச்சி மனதிற்கு வருகிறது (1 பேதுரு 3:20).* [17]*நாம் பட்சபாதம் காண்பிக்க வேண்டுமென்று தேவன் விரும்புவதும் இல்லை (யாக்கோபு 2:1-9ஐக் காணவும்).* [18]*தேவன் "நம் பட்சத்தில்" இருக்கின்றார் (ரோமர் 8:31): அவர் நம் பக்கத்தில் இருக்கின்றார்; அவர் நமது ஆதரவில் இருப்பதை முன் செயலுதவி நோக்கமாகக் கொண்டுள்ளார்!* [19]*தேவனுடைய ஆதரவைப் பெற்றுக்கொள்ளுதல் மீதான மற்ற வசனப்பகுதிகளுக்கு, சங்கீதம் 5:12; 30:5; 44:3; 106:4; நீதிமொழிகள் 3:4; 8:35; 18:22; கலாத்தியர் 1:10 ஆகிய வசனங்களைக் காணவும்.* [20]"Special" [*"விசேஷித்த"*] *என்ற சொற்றொடர்* KJV & NASB *வேதாகமங்களில் ஒருசில முறைகள் மாத்திரமே காணப்படுகிறது (விசேஷமாக, உபாகமம் 7:6ஐ* KJV *வேதாகமத்தில் காணவும்), ஆனால்* "sanctified" *மற்றும்* "holy" *என்ற வார்த்தைகள் தேவனுக்கு "விசேஷித்தவர்களாக" இருத்தல் என்ற கருத்தை உள்ளடக்குகின்றன - மற்றும் அந்தச் சொற்றொடர்கள் பெரும்பாலும் தேவனுடைய மக்களுக்குப் பயன்படுத்தப்படுகின்றன (1 கொரிந்தியர் 6:11; 2 தீமோத்தேயு 2:21; எபிரேயர் 2:11; 10:10; 1 பேதுரு 1:16; 2:5, 9 ஆகிய வசனங்களைக் காணவும்).*

[21]*முத்திரையானது கிறிஸ்தவர்களைப் பாதுகாத்தாலும், அவர்கள் இன்னமும் விழுந்துபோய், உண்மையற்றவர்கள் ஆகிவிடக்கூடிய சாத்தியக்கூறு உள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டும். அவ்வாறு இல்லையென்றால், வெளிப்படுத்தின விசேஷத்தில் உண்மையுடன் நிலைத்திருக்க வேண்டும் என்று புத்திகூறுவதில் கருத்து எதுவும் இருந்திராது (உதாரணமாக, 2:10).* [22]*வெளிப்படுத்தின விசேஷத்தில் "முத்திரை" மற்றும் "அடையாளம்" என்பவற்றிற்கு இடையில் ஒரு வேறுபாடு உள்ளது; "அடையாளம்" என்ற வார்த்தை எதிர்மறைக் கருத்தில் பயன்படுத்தப் பட்டுள்ளது. எசேக்கியேல் புத்தகத்தில், "அடையாளம்" என்பது, வெளிப்படுத்தின புத்தகத்தில் "முத்திரை" என்ற சொல் பயன்படுத்தப்பட்ட அதே கருத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது.* [23]*வேதவசனங்களில், பதிவேடுகள் முத்திரையிடப்பட்டன (1 இராஜாக்கள் 21:8), சிங்கங்களின் குகைகள் முத்திரையிடப்பட்டன (தானியேல் 6:17), மற்றும் இயேசுவின் கல்லறை முத்திரையிடப்பட்டது (மத்தேயு 27:66).* [24]*இது பரிசுத்த ஆவியானவரின் அற்புத வெளிப்பாடாக இருந்தது (மற்றும் இருப்பது) இல்லை.* [25]*கிறிஸ்தவர்கள் உபத்திரவங்களில் இருந்து பாதுகாக்கப்படுவதில்லை, ஆனால் அவற்றினூடே கடந்து செல்லும்போது பாதுகாக்கப்படுகின்றனர்.* [26]*"அடையாளம்"* ["logo"] *என்பது ஒரு பெயராக, அடையாளமாக அல்லது ட்ரேட் மார்க் என்பதாக, சுலபமாகவும் குறிப்பாகப் புரிந்துணருவதற்காகவும் வடிவமைக்கப்பட்டதாக உள்ளது.* [27]*வெளிப்படுத்தின விசேஷத்தில் "ஜீவனுள்ள தேவனுடைய முத்திரை" என்பது "மிருகத்தின் அடையாளம்" என்பதற்கு நேர்மாறாக்கப்பட்டுள்ளது (16:2; 19:20). அடையாளம் என்பது ஒரு மனிதரை, ரோமாபுரியின் அக்கிரமச் செய்கையில் இருந்து பாதுகாக்க முடியும், ஆனால் முத்திரை மாத்திரமே ஒரு மனிதரைத் தேவனுடைய கோபத்தில் இருந்து பாதுகாக்க முடியும்.* [28]M. Robert Mulholland, Jr., *Revelation: Holy Living in an Unholy World*, Francis Asbury Press Commentary, gen. ed. M. Robert Mulholland, Jr. (Grand Rapids, Mich.: Francis Asbury Press, 1990), 181. [29]*இந்தச் சிறிய*

பெட்டிகளின் உள்ளிருந்த வேதவசனத்தின் சிறு துணுக்குகள் "phylacteries" என்று அழைக்கப்பட்டன. மத்தேயு 23:5ல் இந்த நடைமுறையை இயேசு கண்டித்தார். [30]This illustration was adapted from Billy Graham, *Approaching Hoofbeats: The Four Horsemen of the Apocalypse* (New York: Avon Books, 1985), 210.

[31]அந்த சத்தியங்களில் சிலவற்றை நீங்கள் பின்வரும் அடிப்படைக் கொள்கையுடன் மறுகண்ணோட்டமிட விரும்பலாம்: "நாம் தேவனுடைய பக்கமாய் நிலைத்திருந்தால், நாம் வெற்றியடைகின்றோம்!" [32]யோவான் தாமே 144,000 பேர்களையும் எண்ணிக் கணக்கிடவில்லை; மாறாக எண்ணிக்கை அவருக்குக் கூறப்பட்டது. இதன் தனிச்சிறப்பு அடுத்த பாடத்தில் சுட்டிக்காண்பிக்கப்படும். [33]இவர்கள் நேரடி அர்த்தத்தில் யூதர்கள் தாம் என்ற இந்த நிலைப்பாட்டை ஆயிரம் ஆண்டு முன் அரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்களும் (மற்றும் ஒரு சிலரும்), மேற்கொள்கின்றனர். இவர்கள், இந்த 144,000 பேரும் யூதர்கள் என்றும் வசனங்கள் 9முதல் 17வரை உள்ள பகுதியில் குறிப்பிடப்படும் எண்ணமுடியாத பெருந்திரளான மக்கள் கூட்டம் புறஜாதியார் என்றும் பொதுவாக நம்புகின்றனர். நாம் காணப்போகின்றபடி, இவ்விரு குழுக்களிலுமே யூதர், புறஜாதியார் இருவருமே இருந்தனர். [34]கி.மு. 722ல் அசீரியர்கள், இஸ்ரவேலின் வடக்குக் கோத்திரங்களை வெற்றி கொண்டு, இஸ்ரவேல் மக்களில் பலரைப் பிடித்துச் சென்றனர். இது சில பிரிவினரால் பரப்பப்படுகிறதான "இழந்து போகப்பட்ட பத்துக் கோத்திரங்கள்" என்ற கருத்துக்கு நற்சான்று அளிப்பதில்லை. பத்து கோத்திரங்களில் எஞ்சியுள்ளவர்கள் இருந்தார்கள் என்பது, யூதர்கள் அடிமைத்தனத்தில் இருந்து திரும்பியபோது, பன்னிரண்டு கோத்திரங்களாலும் பலிகள் செலுத்தப்பட்டன என்ற உண்மையிலிருந்து தெளிவான கருத்தை நினைப்பூட்டுகிறது (எடுத்துக்காட்டாக, எஸ்றா 6:17ஐக் காணவும்). ஒருவேளை, இந்த எஞ்சியுள்ளவர்கள், இஸ்ரவேல் மக்கள் விக்கிரக ஆராதனைக்குச் சென்றபோது தெற்கில் யூதாவை நோக்கிச் சென்றிருக்கலாம். [35]கி.பி. 70ல், எருசலேம் நகரம், ரோமப்படைகளால் அழிக்கப்பட்டது, வம்சவழியியல் பதிவேடுகளும் அழிந்து போயின. இன்றைய நாட்களில், எந்த யூதரும் தாம் எந்த கோத்திரத்தில் இருந்து வந்தவர் என்பதை அறிந்திருப்பதில்லை. [36]ஒவ்வொரு கோத்திரத்தில் இருந்தும் மிகச்சரியாக 12,000 பேர்கள்தாம் மாற்றப்பட்டிருப்பார்கள் என்பது எவ்வளவு பொருத்தமற்றதாக உள்ளது! [37]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 154. [38]இந்தப் பட்டியலானது பழைய ஏற்பாட்டுப் பட்டியல்களில் இருந்து வேண்டுமென்றே மாற்றம் கொண்டுள்ளது என்பதைப் புரிந்துகொள்ளத் தவறிய நிலையில் சிலர், வசனங்களை மாற்றி அமைப்பது உட்பட, இந்தப் பட்டியலை "திருத்துவதில்" மாபெரும் உண்மையற்ற தன்மையைச் செயல்படுத்துகின்றனர். இந்தப் பட்டியலில் தாண் கோத்திரம் விடப்பட்டுள்ளதால், இந்த இடத்தில் மூலக் கையெழுத்துப்பிரதிகள் "தாண்" கோத்திரத்தைக் கொண்டிருந்தன, ஆனால் பிரதியெடுப்பவர்களில் சிலர் அதை "மன்" என்று ஆக்கிவிட்டனர், பிற்பாடு இது "மனாசே" என்று நீளமாக்கப்பட்டது என்று அவர்கள் யூகித்துள்ளனர். வசனப்பகுதியில் "மேம்படுத்துதல்" என்று அழைக்கப்படும் இச்செயலை ஆதரிக்கக்கூடிய சாட்சியம் எதுவும் இருப்பதில்லை. [39]ஆதியாகமம் 35:22-26; எண்ணாகமம் 13:4-15; உபாகமம் 33:6-29 ஆகிய வசனங்களைக் காணவும். இயேசு யூதாகோத்திரத்தில் உதித்தார் என்பதால் இந்தக் கோத்திரம் முதலாவதாக பட்டியலிடப்பட்டது என்று சிலர் நினைக்கின்றனர் (வெளிப்படுத்தின விசேஷம் 5:5). [40]இந்தப் பட்டியலில் எப்பிராயீமும் மனாசேயும் விடப்பட்டது ஏன் என்பது பற்றிப் பலரும் யூகம் செய்கின்றனர். மற்ற எந்தக் கோத்திரத்தைக் காட்டிலும் இந்த

இருகோத்திரங்களும் விக்கிரக ஆராதனையில் மிக நெருக்கமாக இணைவு கொண்டிருந்தன என்று சிலர் நினைக்கின்றனர். மற்ற எழுத்தாளர்கள், தாண் கோத்திரத்தைப் பற்றி ஆதியாகமம் 49:17ன் அடிப்படையில் அமைந்த பழங்கால ரபீத்துவ மூடநம்பிக்கையைக் குறிப்பிடுகின்றனர். இந்த இரண்டு கோத்திரங்களும் விடப்பட்ட உண்மையின் முக்கியத்துவம் எதுவும் உள்ளதா என்பது பற்றி நாம் எதுவும் அறிவது இல்லை.

[41]One of the more thorough discussions on this point is found in Ray Summers, *Worthy Is the Lamb* (Nashville: Broadman Press, 1951), 146-51. [42]*144,000 பேர் என்பது வேதசாட்சியாக மரித்த கிறிஸ்தவர்களை மாத்திரமல்ல, ஆனால் கிறிஸ்தவர்களாக உள்ள எவரொருவரையும் குறிக்கிறது. இது, வேத சாட்சியாக மரிப்பதில் ஒரு விசேஷித்த உண்மை நெறி காணப்பட்டது என்று சில கிறிஸ்தவர்கள் நம்பிய காரணத்தினால் குறிப்பிடப்பட வேண்டியதாக உள்ளது. இதைப் பற்றி காஃப்மென் அவர்களின் விளக்கம் கவனிக்கத்தக்கதாக உள்ளது: "வேதசாட்சியாக மரிப்பவருக்கான கிரீடமானது ஒரே ஒரு தீர்மானமான வீரத்துவச் செயலினால் வெற்றிகொள்ளப்படலாம் (மற்றும் அது மகிமையானதாகவே உள்ளது); ஆனால் ஒரு உண்மையான கிறிஸ்தவருக்கு எதிராகத் தொடுக்கப்பட்ட எல்லாவித வெறுப்புகளையும் பொறுமையுடன் சகித்திருந்து, வாழ்நாள் முழுவதும் இவ்விதமாக ஜீவித்து, இயல்பான காரணங்களினுல் வாழ்வு முடிந்து அதன்மூலம் கிரீடத்தை வெற்றிகொள்ளுதல் என்பது அதே அளவுக்கு மாண்புமிக்கதாகவும், கடினமானதாகவும் உள்ளது"* (Coffman, *158).* [43]*"வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "செல்வத்துடன் இருந்த ஏழை சபை" என்ற பாடத்தில் 2:9க்கான விளக்கங்களைக் காணவும்.* [44]*தொடக்க கால ஏழாம்நாள் அட்வென்ட்டிஸ்டுகள், 144,000 நபர்கள் மாத்திரமே பரலோகத்தில் கடைசியாக மீட்கப்படுவார்கள் என்று போதித்தனர். அவர்களின் உறுப்பினர்களுடைய எண்ணிக்கை அந்த எண்ணைத் தொட்டபோது, அவர்கள் அந்த போதனையைக் கைவிட்டனர். மற்ற சிறு மதக்குழுக்கள் இன்னமும் இதைப் போதித்து வருகின்றன. 144,000 பேர்கள் மாத்திரமே பரலோகத்தில் இருப்பார்கள் என்ற கருத்தைப் பராமரித்து வருகின்ற யெகோவா சாட்சியினர் இக்கருத்திற்கு முக்கியமான முன்மொழிவாளர்களாக உள்ளனர்.* (See Ed Sanders, "Revelation and the Cults," *Harding University Lectures* [1992]: 250.) *கறுப்பு முஸ்லீம்கள் இப்போது இவ்வசனத்தை அணுகி, 144,000 கறுப்பு மனிதர்கள் பரலோகத்தில் இருப்பார்கள் என்று போதிப்பதாக எனக்குக் கூறப்பட்டுள்ளது.* [45]*தேவனுடைய உண்மையான பிள்ளையாக உள்ள ஒவ்வொருவருக்கும், "அழியாததும் மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்தரம் ... பரலோகத்தில் வைக்கப்பட்டிருக்கிறது" (1 பேதுரு 1:4, 5) என்று வேதாகமம் போதிக்கிறது.* [46]*எண்ணின் அடையாளத்துவப் பயன்பாடு பற்றி நீங்கள் உங்கள் சிந்தைக்குப் புத்துணர்வூட்ட விரும்பலாம். " வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன!" என்ற பாடத்தில் காணவும். விசேஷமாக, "12," "1,000," "144," மற்றும் "144,000" என்ற எண்களுக்கான விளக்கங்களை மறுபடியும் வாசிக்கவும்.* [47]*"கையொப்பம் இடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, வழங்கப்பட்ட" பதிவேடு, கட்டுப்படுத்தும் பதிவேடாக உள்ளது. "கையொப்பம் இடப்பட்டு, முத்திரையிடப்பட்டு, வழங்கப்பட்டது" என்று நாம் குறிப்பிடும் எதுவும், நிலைநாட்டப்பட்டது என்று கருதப்படுகிறது.* [48]*இது ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப்பட்டால், உண்மையற்ற கிறிஸ்தவர்கள் மீளக்கட்டி எழுப்பப்படுதலை ஊக்குவிக்கவும் நீங்கள் விரும்புவீர்கள் (நடபடிகள் 8:22; யாக்கோபு 5:16).*

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *அதிகாரம் 6ன் வார்த்தைகளை மக்கள் வாசிக்கையில் எழுகின்ற எந்தக் கேள்விகளுக்கு அதிகாரம் 7 பதில் அளிக்கிறது?*
2. *"நான்கு" என்ற எண்ணின் அடையாளத்துவ அர்த்தத்தை விளக்கவும்.*
3. *நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நான்கு காற்றுகள் யாவை?*
4. *முத்திரையிடப்பட வேண்டியவர்களாய் இருந்த ஊழியக்காரர்கள் யார்?*
5. *தேவன் எவ்வகையில் பாரபட்சமற்றவராக இருக்கின்றார்? தேவன் எவ்வகையில் பட்சபாதம் உள்ளவராக இருக்கின்றார்?*
6. *முத்திரையின் மூன்று நோக்கங்களைக் கூறவும்.*
7. *ஞானஸ்நானம் மற்றும் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய முத்திரையிடப்படுதல் ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்பை விளக்கவும்.*
8. *இந்தப் பாடத்தின்படி, கிறிஸ்தவர்களின் நெற்றிகளில் முத்திரை யிடப்பட்டது என்ற உண்மையின் தனிச்சிறப்பு என்ன?*
9. *பன்னிரண்டு கோத்திரங்களினால் அடையாளப்படுத்தப்பட்டது என்ன (அல்லது யார்)?*
10. *144,000 என்ற எண்ணின் தனிச்சிறப்பை விளக்கவும்.*
11. *உங்களைப் பொறுத்தமட்டில், வெளிப்படுத்தின விசேஷம் 7:1-8ல் இருந்து கற்றுக் கொள்ளப்பட வேண்டிய மிக முக்கியமான பாடம் என்ன?*

நான்கு தூதர்களும் பூமியின் நான்கு காற்றுகளைப் பிடித்திருத்தல் *(7:1)*

தேவனுடைய ஊழியக்காரர்மீது ஒரு தூதன்
முத்திரை இடுதல் *(7:3)*

26

புயலுக்கு மேலாக உயருதல்

(7:9-17)

விமானம் கிளம்பத் தொடங்கியதும், நான் படபடப்பானேன். மழைபெய்து கொண்டிருந்தது; காற்று அடித்துக் கொண்டிருந்தது; மேல்மூடிய மேகம் இருளாகவும் தீமைவிளைவிக்கக் கூடியதாகவும் இருந்தது. மழைத்தாரை வடிந்த ஜன்னல் வழியாக நான், வெளியே உற்றுப்பார்த்தபோது, இந்த விமானப் பயணம் ஏன் இரத்து செய்யப்படவில்லை அல்லது குறைந்த பட்சம் இது ஏன் தாமதமாக்கப்படவில்லை என்று வியப்படைந்தேன். நாங்கள் மேல்நோக்கிப் பறந்தபோது, கொந்தளிக்கும் காற்று விமானி அறையை அலைக்கழித்தது. விமானப்பயண வியாதிச் சிகிச்சைப் பையொன்று என் அருகில் உள்ளதென்பதை நிச்சயப்படுத்திக் கொள்ள நான் சோதித்துப் பார்த்துக்கொண்டேன். பற்கடிக்கச்செய்யும் அதிர்வுகளுடனான பலநிமிடங்களுக்குப் பின்பு, விமானம் இருளில் இருந்து சூரிய வெளிச்சத்திற்குக் கடந்து சென்றது. கீழே இருந்த மேகங்கள், விளையாட்டு நிறைந்த கையினால் குவிக்கப்பட்ட பெரிய அளவிலான பஞ்சுப் பந்துகள்போல் வெண்மையாகப் பிரகாசித்தன. இப்போது விமானம் சொகுசாகச் சென்றது. நாங்கள் புயலுக்கு மேலாக உயர்ந்திருந்தோம்.

நமது முந்திய பாடமானது, வரவிருந்த புயலுக்குத் தேவனுடைய ஊழியக்காரர்களைத் தயார் செய்விப்பதற்காக அவர்களுக்கு முத்திரையிடப்படுதலைச் சித்தரித்தது. இந்தப் பாடத்தில் நாம், அவர்களைப் புயலுக்குப் பின்பு தேவனுடைய பிரசன்னத்தில் இருக்கக் காண்போம்.

அதிகாரம் 7ன் முதல் காட்சியில் நாம், பூமியின்மீது "சபை என்ற இராணுவசேனையை"[1] கொண்டுள்ளோம்; கடைசிக்காட்சியில் நாம், பரலோகத்தில்[2] "சபையின் வெற்றியை"[3] கொண்டுள்ளோம். இவற்றில் முதலாவது, கிறிஸ்தவர்கள் மீட்கப்படுதலைச் சித்தரிக்கிறது; இரண்டாவது, கிறிஸ்தவர்கள் பலன் அளிக்கப்படுதலைச் சித்திரிக்கிறது. வசனங்கள் 1முதல் 8வரையுள்ள பகுதியானது தற்போதய பாதுகாப்பில் மையங்கொண்டிருக்கையில், வசனங்கள் 9முதல் 17வரையுள்ள பகுதியானது நிறைவான இரட்சிப்பைக் கொண்டாடுகிறது.

வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17ஐ, "பரலோகத்தின் நிலை பற்றி, வேதவசனத்தில் எங்கும் காணப்படுபவற்றிலேயே மிகவும் உயர்த்தப்பட்ட சித்தரிப்புகளில் ஒன்று" என்று இராபர்ட் மவுன்ஸ் அவர்கள் அழைத்தார்.[4] மெரில் C. டென்னீ அவர்கள், இந்த அதிகாரம் "உபத்திரவப்படுத்தப்பட்டவர்களின் புகலிடத்தைப் பற்றி, ஒப்புக்கொடுத்திருப்பவர்களின் சந்தோஷத்தைப் பற்றி, மீட்கப்பட்டவர்கள் எல்லாருடைய இலக்கைப்

பற்றி" கூறுகிறது என்று எழுதினார்.[5] இவ்வசனங்கள், முதல் நூற்றாண்டில் மரணத்தை எதிர்கொண்டிருந்த கிறிஸ்தவர்களை ஆறுதல்படுத்துவதற்கு எழுதப்பட்டன - இவைகள் இன்றைய நாட்களிலும் தொடர்ந்து ஆறுதலைக் கொண்டுவருகின்றன.

காட்சி (7:9-12, 14)

மக்கள் கூட்டத்தை அடையாளப்படுத்துதல் (வசனங்கள் 9, 11, 14)

இவ்வசனப் பகுதியானது, அரியணையைச் சுற்றிலும் மீட்கப்பட்டவர்கள் இருக்கும் சித்தரிப்பைக் கொண்டு தொடங்குகிறது: "இவைகளுக்குப் பின்பு, நான் பார்த்தபோது, இதோ, சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும், ஒருவனும் எண்ணக் கூடாததுமான[6] திரளான கூட்டமாகிய ஜனங்கள், வெள்ளை அங்கிகளைத் தரித்து, தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து, சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்கக்கண்டேன்" (வசனம் 9).

வசனம் 11அ, "தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து," என்று கூறுகிறது. இது அதிகாரம் 4ல் அறிமுகப்படுத்தப் பட்டிருந்த அரியணைக்காட்சியாக உள்ளது. ("அரியணைச் சுற்றிலும் இருந்த காட்சிகள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தப் பகுதியில் நாம் ஒரு முழு வட்டத்திற்கு வந்துள்ளோம்:[7] அதிகாரம் 4ல் நாம், அரியணையைக் கொண்டு தொடங்கி, பின்பு மூப்பர் களையும் உயிருள்ள ஜீவன்களையும் கூட்டினோம். அதிகாரம் 5ல் நாம், இந்தக் காட்சியில் ஆட்டுக்குட்டியானவரையும் தூதர்களையும் சேர்த்துக் கொண்டோம். இப்போது அதிகாரம் 7ல், அரியணை அறையில் எண்ண முடியாத பெருந்திரளான மக்கள் கூட்டம் சூழ்ந்துள்ளது. ("அரியணையைச் சுற்றிலும் மக்கள்திரள்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

இந்தத் திரளான கூட்டத்தவர் யார்? எனது சிந்தையானது 1956ன் வசந்த காலத்தை நோக்கிப் பின்செல்கிறது. அப்போது நான், அபிலேன் கிறிஸ்தவக் கல்லூரியில் (இப்போது பல்கலைக் கழகம்), வெளிப்படுத்தின விசேஷம் பற்றி பிராங்க் பேக் அவர்கள் நடத்திக்கொண்டிருந்த வகுப்பில் இருந்தேன். ஒரு நாள், சகோதரர் பேக் அவர்கள், தமக்குப் பதிலாக என்னை அவரது வகுப்பை நடத்தும்படி கேட்டுக்கொண்டார். வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17 வசனப் பகுதியைப் போதிக்கும் பொறுப்பு என்னிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருந்தது. நான் வகுப்பில் போதித்தபோது, இந்தத் திரளான மக்கள் கூட்டம் என்பது அடிப்படையில், வசனங்கள் 1முதல் 8வரையுள்ள பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள 144,000 பேரைக் கொண்ட அதே குழுவாகவே உள்ளது என்று கூறினேன்.[8] எனது வகுப்புத் தோழர்களில் சிலர் இதில் பெரிதும் கருத்து வேறுபட்டனர் - அதை நான் அறியும்படி அனுமதிக்க அவர்கள் தயங்கவில்லை. அடுத்த வகுப்புப் பிரிவுவேளையின்

தொடக்கத்தில், அதைப் பற்றி அவர்கள், சகோ. பிராங்க் அவர்களிடத்தில் கேட்டனர். அவர் என் முடிவை ஒத்துக்கொண்டார், ஆனாலும் மாணவர்களைத் திருப்திப்படுத்துவதற்காக, அவர் அந்த வகுப்பின் எஞ்சிய நேரத்தை, நான் எடுத்துரைத்து முடித்திருந்த அதே வசனப்பகுதிக்கு விளக்கம் தருவதில் செலவிட வேண்டியிருந்தது. அந்த செம்ஸ்டர் கால வேளையில் அவர் மீண்டும் ஒருமுறை வகுப்பிற்கு வராதிருத்தல் என்பது இல்லாதவாறு உறுதிப்படுத்திக் கொண்டார் என்று நான் சிறந்த வகையில் நினைவுகூர முடிகிறது.

நாற்பது ஆண்டுகளுக்கு முன்பாக நான் அடைந்த (இம்) முடிவை இன்னமும் நான் பற்றிக்கொண்டுள்ளேன் - அதாவது, இவ்விரு குழுக்களும் அடிப்படையில் ஒரே குழுவினராகவே உள்ளனர். பெரும்பான்மையான விளக்கவுரையாளர்கள் என்னுடன் கருத்து ஒருமைப்படுகின்றனர். அவ்வாறு கருத்து ஒருமைப்படாதவர்கள் இவ்விரு குழுக்களுக்கும் இடையில் இருப்பதாகத் தோன்றுகிற பின்வரும் வேறுபாடுகளைச் சுட்டிக்காண்பிக்கின்றனர்:

(1) முதல் குழுவில் யூதர்கள் இருக்க, இரண்டாவது குழுவில் புறஜாதியார் இருந்தனர் என்று சிலர் வலியுறுத்துகின்றனர். இருப்பினும் முந்திய பாடத்தில் நாம், 144,000 பேர்கள் என்பது ஆவிக்குரிய இஸ்ரவேலாகிய சபையைக் குறிக்கிறது - இது இரட்சிக்கப்பட்ட எல்லாருடைய அடையாளத்துவமாக உள்ளது - என்று வலியுறுத்தியிருந்தோம். இந்தப் பாடத்தின் வசனப்பகுதியில், பெருந்திரளான மக்கள் கூட்டத்தில், "சகல ஜாதிகளிலும்" இருந்து மீட்கப்பட்டவர்கள் இருந்தனர் என்று நமக்குக் கூறப்படுகிறது (வசனம் 9) - இது யூதர்களைத் தவிர மற்ற எல்லா இனங்களிலும் என்றிருப்பதில்லை. ஆகையால் இரு குழுக்களிலுமே, யூத அல்லது புறஜாதிப் பின்னணியைக் கொண்டிருந்தவர்களில் இருந்து இரட்சிக்கப்பட்ட எல்லாரும் இருந்தனர்.

(2) முதல் குழுவானது எண்ணப்பட்டுள்ளது அதே வேளையில் இரண்டாவது குழுவானது எண்ணப்படாதுள்ளது என்பது குறிப்பிடத் தக்கது என்று சிலர் நினைக்கின்றனர். இருப்பினும், பெருந்திரளான மக்கள் கூட்டங்கள் இரண்டை யோவான் கண்டிருந்தார் என்பதைக் கவனியுங்கள். அவர் முதல் குழுவை எண்ணவில்லை; எண்ணிக்கை அவருக்குக் கூறப்பட்டது. (எனது சகோதரர் காய் ரோப்பர், ஒருமுறை என்னை, மிச்சிகன் பல்கலைக் கழகத்தில் நடைபெற்ற கால்பந்து விளையாட்டிற்கு அழைத்துச் சென்றார். இருக்கைகளில் அமர்ந்து இருந்தவர்களை எண்ணிக் கணக்கிடுதல் என்பது எனக்குச் சாத்தியமற்றதாயிருந்தது, ஆனால் அங்கு 100,000க்கும் அதிகமானவர்கள் இருந்தனர் என்று எனக்குக் கூறப்பட்டது.) 7:4ல் உள்ள 144,000 என்ற எண்ணிக்கை நேரடி அர்த்தம் கொண்டதல்ல, ஆனால் அது ஒரு அடையாளத்துவமாக உள்ளது. ஒருகூட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை கூறப்பட்டது, இன்னொரு கூட்டத்தில் உள்ள மொத்த எண்ணிக்கை கூறப்படவில்லை என்ற உண்மையானது, இரு குழுக்களும் அடிப்படையில் ஒரே குழுதான் என்ற முடிவைப் பற்றிப் பிரச்சனை எதையும் முன்னிறுத்துவதில்லை.[9]

அதிகாரம் 7ல் உள்ள இரண்டு காட்சிகளையும் நான் பின்வருமாறு ஒன்று கலப்பேன்: வசனங்கள் 1முதல் 8வரையுள்ள பகுதியானது, அழிவின் காற்றுகள் கட்டவிழ்க்கப்படும்போது கிறிஸ்தவர்களைப் பாதுகாப்பதற்காக அவர்களை முத்திரையிடுதல் பற்றிக் கூறுகிறது. 144,000 பேர் என்பது - கடந்த, நிகழ் மற்றும் எதிர் காலங்களில் - சபையின் உறுப்பினர்கள் எல்லாரையும் குறிக்கிறது. ஒவ்வொரு கிறிஸ்தவரும் முத்திரையிடப்பட்டு பாதுகாக்கப்படுகின்றார். அந்தச் சூழ்நிலையானது ஒரு கேள்வியைத் தூண்டுகிறது: தேவனுடைய (இந்த) பாதுகாப்பு போதுமானதாக உள்ளதா; இது செயல்விளைவு கொண்டதாக உள்ளதா? வசனம் 9முதல் 17வரையுள்ள பகுதியானது அந்தக் கேள்விக்குப் பதில் அளிக்கிறது: அந்தத் திரளான கூட்டத்தார் "மிகுந்த உபத்திரவத்திலிருந்து" உயிர்பிழைத்தவர்களாய் இருந்தனர் (வசனம் 14). முத்திரையிடப்பட்டவர்கள் பேரழிவின் காற்றுகளினால் அழிக்கப்படவில்லை, ஆனால் அதற்கு மாறாக, அவர்கள் தேவனுடைய பிரசன்னத்தில் பாதுகாப்பாக பத்திரமாக வந்து சேர்ந்திருந்தனர்! 144,000 பேர் என்பது இவ்விதமாக, யுத்தத்திற்கு முன்பிருந்த (தேவனுடைய) மக்களைக் குறிக்கிற வேளையில், திரளான மக்கள் கூட்டம் என்பது, யுத்தத்திற்குப் பின்பு, வெற்றிபெற்று, வெற்றி ஆரவாரம் செய்த (தேவனுடைய) மக்கள் கூட்டத்தைக் குறிக்கிறது.[10]

தொடக்க காலக் கிறிஸ்தவர்கள், அதிகாரம் 7ஐ வாசித்தபோது, அது அவர்களுக்கு, "நீங்கள் ரோமாபுரியை எதிர்கொள்ளும்போது, தேவன் உங்களுடன் இருந்து உங்களைப் பாதுகாப்பார். ரோமாபுரியார் உங்களைக் கொலைசெய்தாலும், நீங்கள் கர்த்தருடன் இருக்கும்படி இல்லம் திரும்புதல் என்பதே அதனால் ஏற்படும் ஒரே விளைவாய் இருக்கும்!" என்று கூறிற்று. இவ்வசனப்பகுதியை நீங்களும் நானும் வாசிக்கும்போது, இது நமக்கு, வாழ்வு என்பது எவ்விதப் பிரச்சனைகளைக் கொண்டுவந்தாலும், நாளையதினம் என்பது பிரகாசமான நாளாக இருக்கும் என்று வாக்குறுதி அளிக்கிறது!

வசனப்பகுதியைப் பரிசோதித்தல் (வசனங்கள் 9-12)

இந்த மேற்கண்ணோட்டத்தைச் சிந்தையில் கொண்டவர்களாய் நாம் இவ்வசனப்பகுதியை, வசனத்திற்குப் பின் வசனமாகக் கண்ணோக்குவோம்:

யோவான், "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்களை" கண்டார் (வசனம் 9அ). ஆபிரகாமின் சந்ததியானது, பூமியின் தூளைப் போலவும், வானத்தின் நட்சத்திரங்கள் போலவும் கடற்கரையில் உள்ள மணலத்தனையாகவும் இருக்கும் என்று அவருக்குக் கூறப்பட்டது (ஆதியாகமம் 13:16; 15:5; 32:12). கிறிஸ்தவர்கள் ஆவிக்குரிய வகையில் ஆபிரகாமின் சந்ததியாய் இருப்பதால் (ரோமர் 4:11; கலாத்தியர் 3:29), இந்த விவரிப்பு விசேஷமாய் ஏற்புடையதாகக் காணப்படுகிறது.

திரளான மக்கள் கூட்டம் "சகல ஜாதிகளிலும் கோத்திரங்களிலும் ஜனங்களிலும் பாஷைக்காரரிலுமிருந்து வந்ததும்" ஆக இருந்தது (வசனம் 9ஆ). முன்னதாக, ஆட்டுக்குட்டியானவர் "சகல கோத்திரங்களிலும் பாஷைக்காரரிலும் ஜனங்களிலும் ஜாதிகளிலுமிருந்து எங்களைத்

தேவனுக்கென்று உம்முடைய இரத்தத்தினாலே மீட்டுக்கொண்டு" (5:9ஆ) என்ற வார்த்தைகளினால் துதிக்கப்பட்டிருந்தார்.[11] இரட்சிக்கப் பட்டவர்கள், ஒவ்வொரு இனப்பின்னணியிலும் இருந்து வந்திருந்தனர். ஒரு பெரிய மாநகரத்தின் சுறுசுறுப்பான தெருவின் மூலையொன்றில் நீங்கள் நின்று பல இனக் கூட்டத்தைக் கவனித்திருந்தால், யோவான் கண்டது பற்றிய சிறுநோக்கை நீங்கள் கொண்டிருக்கலாம்.

இது "ஒரு பெரும் சேனையாக" ["a *vast* host" (AB)] இருந்தது என்பதைக் கவனியுங்கள். "ஜீவனுக்குப் போகிற வாசல் இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது, அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் சிலர்" என்று இயேசு வலியுறுத்தி இருந்தார் (மத்தேயு 7:14) - ஆனால் "சிலர்" என்பது சார்புச் சொற்றொடராக உள்ளது. கர்த்தர் விலக்கி வைத்துள்ள எவரையும் இரட்சிக்கப்பட்டவர்களில் உள்ளடக்குதல் என்பது தவறானதாக உள்ளது, கர்த்தர் உள்ளடக்குகின்ற எவரையும் விலக்கி வைத்தல் என்பதும் தவறானதாகவே உள்ளது. பழங்கால இரட்டை அர்த்தப்பாடல் ஒன்று பின்வருவது போன்று முடிகிறது: "நானும் நீங்களும் மாத்திரமே பரலோகம் செல்லுகின்றோம் ... சில வேளைகளில் நான் உங்களைப் பற்றி ஆச்சரியப்படுகின்றேன்."

நாம் "எலியாவின் மனநிலையை" தவிர்க்க வேண்டும்: "நான் ஒருவன்மாத்திரம் மீதியாயிருக்கிறேன்" (1 இராஜாக்கள் 19:10, 14). நாம் அவ்வாறு உணரும்போது, "பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால் களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுமுடைய ஏழாயிரம் பேர் இஸ்ரவேலிலே மீதியாக" இருத்தல் (1 இராஜாக்கள் 19:18) பற்றி நமக்கு நினைவூட்டப்பட வேண்டியது அவசியமாக உள்ளது. அல்லது, வெளிப்படுத்தின விசேஷம் 7ன் சொல்லாக்கத்தைப் பயன்படுத்துவ தென்றால், கர்த்தருக்கு இன்னமும் உண்மையாக நிலைத்துள்ளவர்களான, "ஒருவனும் எண்ணக்கூடாததுமான திரளான கூட்டமாகிய ஜனங்கள்" உண்டு (வசனம் 9அ)!

நான் மகிழ்ச்சியாக இருக்கின்றேன், நீங்கள் அவ்வாறு இல்லையா? பரலோகம் என்பது "ஆவிகளின் நகரமாக,"[12] அதன் தெருக்கள் வெறுமை யாக மற்றும் அதன் கட்டிடங்கள் காலியாக இருத்தல் என்பது கவலைக்குரிய தாக இருக்காதா? அது மகிழ்வுள்ள மக்களால் பொதியப்பட்ட உயிர்த்துடிப் புள்ள நகரமாயிருக்கும் - வெளிச்சமும் செயல்துடிப்பின் மும்முரமும் கொண்டு, களிகூருதலின் ஒலிகளினால் நிறைந்த ஒரு நகரமாயிருக்கும் - என்று வெளிப்படுத்தின விசேஷம் நமக்கு உறுதியளிக்கிறது!

பின்பு யோவான், ஒரு பெரிய கூட்டமானது "சிங்காசனத்திற்கு முன்பாகவும் ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் நிற்க" கண்டதாகப் பதிவுசெய்தார் (வசனம் 9இ). சாலொமோனிடத்தில் சேபாவின் இராஜஸ்திரீ, "உம்முடைய ஜனங்கள் பாக்கியவான்கள், எப்போதும் உமக்கு முன்பாக நின்று, உம்முடைய ஞானத்தைக் கேட்கிற உம்முடைய ஊழியக்காரரும் பாக்கியவான்கள்" என்று கூறினாள் (1 இராஜாக்கள் 10:8ஆ). தேவனுக்கும் இயேசுவுக்கும் முன்பாக நிற்பவர்கள் எவ்வளவு அதிகம் பாக்கியவான்களாக இருப்பார்கள்!

தேவனுடைய பிரசன்னத்தில் நின்றவர்கள் "வெள்ளை அங்கிகளைத் தரித்து" இருந்தனர் (வசனம் 9இ). ஜெயங்கொள்பவர்களுக்கு வெள்ளை அங்கிகள் வாக்களிக்கப்பட்டிருந்தது (3:4, 5; மேலும் 3:18ஐயும் காணவும்). வெள்ளை அங்கிகள் "பரலோக அரியணை அறையின் 'ஆஸ்தான உடையாக' இருந்தன."[13]

"தங்கள் கைகளில் குருத்தோலைகளைப் பிடித்து" (வசனம் 9உ). (வெளிப்படுத்தின புத்தகத்தில்) இவ்விடத்தில்தான் நாம் முதன்முதலாக, குருத்தோலைகளின் அடையாளத்துவத்தை எதிர்கொண்டுள்ளோம். யூதத்துவச் சிந்தனையில், குருத்தோலைகள் என்பது வெற்றி மற்றும் அக்களிப்பு ஆகியவற்றை அடையாளப்படுத்திற்று. யூதமக்களினம் முழுவதற்கும் அகமகிழ்ச்சியான வேளையான கூடாரப்பண்டிகையின் போது குருத்தோலைகள் பயன்படுத்தப்பட்டன (லேவியராகமம் 23:34, 40; மேலும் சகரியா 14:16ஐக் காணவும்). பின்பு, "யூதாஸ் மக்காபேயஸ் என்பவரின் காலம் தொடங்கி, [குருத்தோலைகள்], அரசத்துவ எதிர்பார்ப்புகளுக்கான யூதத்துவப் பண்டிகைகளின் அடையாளமாயின."[14] *எருசலேமுக்குள் இயேசுவின் வெற்றிப் பிரவேசத்தின்போது, மக்கள், "குருத்தோலைகளைப் பிடித்துக்கொண்டு, அவருக்கு எதிர்கொண்டு போகும்படி புறப்பட்டு: ஓசன்னா, கர்த்தருடைய நாமத்தினாலே வருகிற இஸ்ரவேலின் ராஜா ஸ்தோத்திரிக்கப்பட்டவர் என்று ஆர்ப்பரித்தார்கள்" (யோவான் 12:13).*

வெளிப்படுத்தின விசேஷம் 7ல், குருத்தோலைகளுடன் இருந்தவர்கள் அகம்மகிழ்ந்து இருந்தனர்: "அவர்கள் மகா சத்தமிட்டு: இரட்சிப்பின் மகிமை சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிற எங்கள் தேவனுக்கும் ஆட்டுக்குட்டியானவருக்கும் உண்டாவதாக என்று ஆர்ப்பரித்தார்கள்" (வசனம் 10). "இரட்சிப்பின் மகிமை ... எங்கள் தேவனுக்கும்" என்ற சொற்றொடரானது, தேவன், நமது இரட்சிப்பின் ஆதாரமூலமாக இருக்கின்றார் என்று அர்த்தப்படுத்துகிறது. RSV *வேதாகமத்தில்,* "salvation *belongs to* our God" [*"இரட்சிப்பு ... எங்கள் தேவனுக்கு ... உரித்தானது"*] *என்றுள்ளது.*

இவ்வசனப் பகுதியில், "இரட்சிப்பு" என்பது, பரலோகத்தில் நித்திய வாழ்வின் கடைசி நிலையைக் குறிக்கிறது. "இரட்சிப்பு" என்பது, கடந்த காலப் பாவங்களில் இருந்து இரட்சிக்கப்படுதலை (மாற்கு 16:16), தேவனுக்கு உண்மையாக உள்ள பிள்ளையினால் தொடர்ந்து மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் இரட்சிப்பை (2 கொரிந்தியர் 2:15; 1 யோவான் 1:7ஐக் காணவும்), அல்லது (இவ்வசனப்பகுதியில் உள்ளபடி) நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டிருத்தலைக் குறிப்பிட முடியும். "கடைசிக்காலத்திலே வெளிப்பட ஆயத்தமாக்கப்பட்டிருக்கிற இரட்சிப்பு" பற்றிப் பேதுரு குறிப்பிட்டார் (1 பேதுரு 1:5ஆ).

"இரட்சிப்பு" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தை, முழுமையாக்கப்பட்டிருத்தல், குணமாக்கப்பட்டிருத்தல், கடைசியில் பாதுகாக்கப்பட்டிருத்தல் என்ற கருத்துக்களைத் தழுவிக்கொண்டுள்ளது. இவ்விதமாக, NEB *வேதாகமம், இவ்வார்த்தையை* "victory" [*"ஜெயம்"*]

என்று மொழிபெயர்த்து உள்ளது. மீட்கப்பட்டவர்கள் பாவத்தின்மீது வெற்றி கொண்டனர், தங்களுக்கு நேரிட்ட சோதனைகளில் வெற்றி கொண்டனர், தங்கள் விரோதிகளின்மீது வெற்றி கொண்டனர் - எனவே அவர்கள் ஆண்டவரைத் துதித்தனர்!

விரைவிலேயே, அரியணை அறையில் இருந்த ஒவ்வொருவரும் துதிப்பதில் இணைந்தனர். " 'மனந்திரும்புகிற ஒரே பாவியினிமித்தம் தேவனுடைய தூதருக்கு முன்பாகச் சந்தோஷமுண்டாயிருக்கிறது' என்றால் (லூக்கா 15:10), மீட்கப்பட்டவர்கள் யாவரும், தங்கள் தேவனுக்கு முன்பாக நிற்கும்போது, பரலோக சேனையின் வழிபாடு/தொழுது கொள்ளுதல், நம்ப இயலாத வகையில் எவ்வளவு மாபெரியதாக இருக்கும்!"[15]

> தூதர்கள் யாவரும் சிங்காசனத்தையும் மூப்பர்களையும் நான்கு ஜீவன்களையும் சூழநின்று, சிங்காசனத்திற்குமுன்பாக முகங்குப்புற விழுந்து, தேவனைத் தொழுதுகொண்டு: ஆமென்,[16] எங்கள் தேவனுக்குத் துதியும் மகிமையும் ஞானமும் ஸ்தோத்திரமும் கனமும் வல்லமையும் பெலனும்[17] சதாகாலங்களிலும் உண்டாவதாக, ஆமென், என்றார்கள் (வசனங்கள் 11, 12).

சொல்லாக்கத்தை விளக்குதல்

வெளிப்படுத்தின விசேஷம் 7:9-12ன் துதி, அங்கிகள், குருத்தோலைகள் மற்றும் பிற விபரங்கள், இவ்விபரங்களில் பெரும்பான்மையானவை "யூதர்களின் பண்டிகைகளில், அதிமகிழ்ச்சிக்குரியதான"[18] - கூடாரங்களின் பண்டிகையில் இருந்து எடுக்கப்பட்டன என்று கவனித்து அறியும்படிக்கு விளக்கவுரையாளர்களைத் தூண்டுகிறது. இந்தப் பண்டிகை, யூதர்கள் எகிப்தில் இருந்து கானான் நாட்டிற்குப் பயணமானதை நினைவுகூர்ந்தது மற்றும் இது அறுவடைக் காலத்தின் முடிவைக் கொண்டாடியது. இந்தப் பண்டிகைக்கு இணைவாக, வெளிப்படுத்தின விசேஷம் 7:9-12ல் உள்ள சில விபரங்களை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம்:

அங்கிகள். கூடாரங்களின் பண்டிகையின்போது, மக்கள் பண்டிகைக்கான உடைகளை உடுத்திக்கொண்டு, தேவனைத் துதித்துப் பாடி, ஜெபித்தனர்.

குருத்தோலைகள். "முதல் நாளிலே அலங்காரமான விருட்சங்களின் கனிகளையும் பேரீச்சின் ஓலைகளையும் தழைத்திருக்கிற விருட்சங்களின் கிளைகளையும் ஆற்றலரிகளையும் கொண்டுவந்து, உங்கள் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதியில் ஏழுநாளும் மகிழ்ச்சியாயிருங்கள்" (லேவியராகமம் 23:40) என்று யூதர்களுக்குக் கட்டளையிடப்பட்டிருந்தது. இந்தப் பண்டிகை நாட்கள் யாவற்றிலும் குருத்தோலைகள் பயன்படுத்தப்பட்டன.

துதிகள். தேவன் தமது மக்களை வனாந்தர வழியில் பாதுகாப்பாகக் கொண்டு வந்ததற்காகப் புகழப்பட்டார்.

நமது வசனப்பகுதியில் எஞ்சியுள்ள 7:13-17ல் சாத்தியக்கூறுள்ள மற்ற இணைவுகள் அடங்கியுள்ளன:

கூடாரங்கள் (அல்லது தற்காலிக வசிப்பிடங்கள்). இந்தப்

பண்டிகையின்போது, யூதர்கள் தங்கள் முன்னோர்களின் வனாந்தர யாத்திரையைத் தங்களுக்கு நினைவூட்டும்படி தற்காலிக கூடாரங்களில் வசித்தனர். தங்குமிடம் அல்லது உணவு ஆகியவற்றில் குறைவுபடுபவர்கள் மற்றவர்களின் கூடாரங்களுக்கு (தற்காலிக வசிப்பிடங்களுக்கு) அழைக்கப் பட்டனர். அதுபோலவே, மீட்கப்பட்டவர்கள் பாதுகாக்கப்படவும் அவர்களுக்குத் தேவையானவைகள் அளிக்கப்படவும் கூடும்படிக்கு (வசனம் 16) தேவன் "இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்" (வசனம் 15).

தண்ணீரண்டைக்கு நடத்தப்படுதல். கூடாரங்களின் பண்டிகையினுடைய கடைசிநாள் "பண்டிகையின் கடைசிநாளாகிய பிரதான நாள்" (யோவான் 7:2, 37) என்று அழைக்கப்பட்டது. அந்த நாளில், குதூகலம் கொண்ட ஆராதனையாளர்கள் ஆசாரியருடன் இணைந்து சீலோவாம் குளத்திற்குச் செல்வார்கள், அங்கு ஆசாரியர், பண்டிகை ஆசரிப்புகளுக்குப் பயன்படுத்தப் படுவதற்காகத் தண்ணீரை மொள்ளுவார். அதுபோலவே, மீட்கப்பட்ட வர்களை ஆட்டுக்குட்டியானவர், "ஜீவத்தண்ணீருள்ள ஊற்று களண்டைக்கு" நடத்துவார் (வெளிப்படுத்தின விசேஷம் 7:17).[19]

இவ்வுருவகத்தில் பெரும்பான்மையான பகுதியானது கூடாரங்களின் பண்டிகையில் இருந்தே வந்தது என்று நிச்சயமாகத் தோன்றுகிறது. அது அவ்வாறு இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும், 7:9-17 வசனப்பகுதி யானது, குதூகலமான ஆராதனையாளர்களைச் சித்தரிக்கிறது. அவர்கள் "மகா உபத்திரவத்தினூடே" கடந்து வந்திருந்தனர், ஆனால் அவர்கள் எலும்புகளில் களைப்படைந்தவர்களாகவோ அல்லது யுத்தத்தினால் இளைப்படைந்தவர்களாகவோ இருக்கவில்லை. அவர்கள் மகிழ்ச்சி பொங்கியவர்களாக, அதீதமான சந்தோஷம் கொண்டவர்களாக, வெற்றிவீரர்களாக இருந்தனர்!

தனிச்சிறப்பு (7:13-17)

உண்மையுள்ளவர்கள் பரலோகத்தில் எவ்வாறு ஆசீர்வதிக்கப் பட்டிருப்பார்கள் என்பதை நாம் மதித்துணர்ந்து உறுதிப்படுத்திக் கொள்வதற்கு, ஆர்வம் நிறைந்த ஒரு கேள்வி - பதில் வேளையை யோவான் பதிவுசெய்வதற்குக் கர்த்தர் உதவினார்.[20] "அப்பொழுது, மூப்பர்களில் ஒருவன்[21] [பதில் அளித்து[22]] என்னை நோக்கி: வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்? என்று கேட்டான்" (வசனம் 13).

> தீர்க்கதரிசி தமது கண்களை நிழலிட்டுக் கண்ணோக்கினார், ஆனால் அவர் வெள்ளை உடையை உணரத் தவறினார். அதைப்போன்ற ஒன்றை அவர் ஒருக்காலும் கண்டதில்லை. அவர், துக்கத்தின் கறுப்பு நிறம், பாவத்தின் சிவப்பு நிறம், இராஜரீகத்தின் இளஞ்சிவப்பு நிறம் ஆகியவற்றை அறிந்திருந்தார்; அவர், மறக்கப்பட்ட மக்கள் கூட்டத்தில் இருந்து மாபெரும் மனிதர்களைப் பிரித்துக்காட்டும் பொன் மற்றும் வெள்ளி அலங்கரிப்புக்கொண்டதும் நகையணிவித்து அலங்கரிக்கப்பட்டதுமான தலைப்பின்னல்களையும் கண்டிருந்தார்; ஆனால் இங்கு, வித்தியாசப்படுத்துவதற்குப் புதிதான ஒரு

அடையாளம் இருந்தது, அது தூயவெள்ளை நிறத்தினால் ஆன அங்கியாக, பூமியில் ஒருக்காலும் காணப்பட்டிராத, வானத்திற்குரிய முறைமையின் சின்னமாக இருந்தது.[23]

யோவான், இவர்கள் யார் என்பது பற்றிய தமது அறியாமையை ஒப்புக் கொண்டு, தகவல் அறிவதற்கு விருப்பத்தை வெளியிட்டார்: "ஆண்டவனே,[24] அது உமக்கே தெரியும்" (வசனம் 14அ).

மூப்பரின் பதிலானது, நித்தியத்திற்கும் இரட்சிக்கப்பட்டவர்களால் மகிழ்வுடன் அனுபவிக்கப்படும் ஆசீர்வாதங்களைப் பற்றிய ஒரு விரிவான விவரிப்பைத் தருகிறது.

உயிர்பிழைத்திருத்தலின் ஆசீர்வாதம் (வசனம் 14ஆ)

மூப்பர், "வெள்ளை அங்கிகளைத் தரித்திருக்கிற இவர்கள் யார்? எங்கேயிருந்து வந்தார்கள்?" என்று கேட்டிருந்தார். இப்போது மூப்பர் தமது சொந்தக் கேள்விக்குத் தாமே பதில் அளித்தார்: "இவர்கள் மிகுந்த உபத்திரவத்திலிருந்து வந்தவர்கள்"[25] (வசனம் 14ஆ).

"மகா உபத்திரவம்" என்ற சொற்றொடரானது, இரண்டாம் வருகைக்குப்பின்பு உடனடியாக வருவதாகக் கற்பனை செய்யப்பட்டுள்ள ஏழாண்டு காலகட்டத்தைக் குறிக்கும் நுட்பச் சொற்றொடராக இருப்பதில்லை என்பதை வலியுறுத்துவதற்குச் சற்றே தாமதிக்க என்னை அனுமதியுங்கள்.[26] தேவனுடைய மக்கள், எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கான ஆண்டுகள் கால அளவுக்கு உபத்திரவத்தில் உயிர்பிழைத்து இருப்பார்கள் என்ற கருத்தானது யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு ஆறுதல் அளித்து இருந்திராது. தொடக்க நூற்றாண்டுகளில் இருந்த சபையின் கிறிஸ்தவர்கள் "மகா உபத்திரவம்" என்ற சொற்றொடரை வாசித்தபோது, அது அவர்களுக்கு ஒரு விஷயத்தை அர்த்தப்படுத்தியிருக்கும்: அவர்கள் அனுபவித்துக் கொண்டிருந்த சோதனைகளும் உபத்திரவங்களும்தான்.

நமது படிப்புகளில் நாம், வெளிப்படுத்தின விசேஷம் புத்தகம் உடனடியான எதிர்காலத்தில் சோதனைகளின் பயங்கரமான காலத்தை முன்னுரைத்தது என்று கண்டுள்ளோம். சிமிர்னாவில் இருந்த சபைக்கு, "இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான், பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள்" என்று கூறப்பட்டிருந்தது (2:10ஆ). பிலதெல்பியாவில் இருந்த கிறிஸ்தவர்களுக்கு, "பூமியில் குடியிருக்கிறவர்களைச் சோதிக்கும்படியாகப் பூச்சக்கரத்தின் மேலெங்கும் வரப்போகிற சோதனைகாலத்தைக்" குறித்துக் கூறப்பட்டிருந்தது (3:10ஆ). சிவப்புக் குதிரையின்மீது ஏறியிருந்தவனுக்கு, "பூமியிலுள்ளவர்கள் ஒருவரையொருவர் கொலைசெய்யத்தக்கதாகச் சமாதானத்தைப் பூமியிலிருந்தெடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது" (6:4ஆ). பலிபீடத்தின் கீழ் இருந்த வேதசாட்சியாக மரித்தவர்களுக்கு, "அவர்கள் தங்களைப்போலக் கொலைசெய்யப்படப் போகிறவர்களாகிய தங்கள் உடன்பணிவிடைக்காரரும் தங்கள் சகோதரருமானவர்களின் தொகை நிறைவாகுமளவும் இன்னுங்

கொஞ்சக்காலம் இளைப்பாற வேண்டும் என்று" கூறப்பட்டிருந்தது (6:11). "மகா உபத்திரவம்" என்பது சந்தர்ப்பப்பொருளில் அனேகமாக, ரோம அரசாங்கத்தினால் கிறிஸ்தவர்களுக்கு ஏற்பட்ட உபத்திரவத்தைக் குறிப்பிடுவதாக இருக்கலாம்.

இருப்பினும் இவ்வசனப்பகுதியானது இன்னமும் நமக்குச் செய்தியைக் கொண்டுள்ளபடியால் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளது: ஒவ்வொரு காலகட்டத்திலும் தேவன் தமது மக்களை, அவர்களின் காலம் மற்றும் இடம் ஆகியவற்றிற்கே உரித்தான சோதனைகள் மற்றும் உபத்திரவங்கள் ஆகியவற்றில் இருந்து உயிர்பிழைத்திருக்க உதவுவார். "உபத்திரவம்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையின் வினை வடிவமானது "அழுத்துவதற்கு அல்லது இறுக்குவதற்கு" என்று அர்த்தப்படுகிறது; இது கோதுமை அல்லது வாற்கோதுமையை நேர்த்தியான மாவாக்குவதற்காக அரைப்பதைக் குறிப்பிடுகிறது.

> இங்கு சித்தரிக்கப்பட்டுள்ள நிகழ்ச்சியானது, இடம் அளிக்காத கீழ்பாகமும் மற்றும் அழுத்துகிற மேல்பாகமுமாகிய இரு கற்களுக்கு இடையில் நசுக்கப்படும் செயல்முறையாக உள்ளது. இதைக் கிறிஸ்தவ வாழ்க்கைக்கு நடைமுறைப்படுத்தும்போது, கிறிஸ்தவர் தமது முற்றான விசுவாசத்தின் விளைவுகளற்ற கேட்புகளுக்கும், உடன்பாட்டிற்கான உலகத்தின் நசுக்கும் அறைகூவலுக்கும் இடையில் நசுக்கப்பட்டு நிற்கின்றார் என்று அர்த்தப்படுகிறது.[27]

இயேசு தமது சீஷர்களுக்கு, "உலகத்தில் உங்களுக்கு உபத்திரவம் உண்டு" என்று வலியுறுத்தியிருந்தார் (யோவான் 16:33ஆ), புதிய கிறிஸ்தவர்களுக்குப் பவுல், "நாம் அநேக உபத்திரவங்களின் வழியாய்த் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கவேண்டுமென்று" எச்சரிக்கை செய்திருந்தார் (நடபடிகள் 14:22ஆ). "மகா உபத்திரவம்" என்ற சொற்றொடர் "தேவனுடைய மக்களின் - தேவனுடைய எல்லா மக்களின் - பூமிக்குரிய அனுபவம்"[28] என்பதற்கு நடைமுறைப்படுத்தப்படக்கூடும் என்று எட்வர்டு மெக்டோவெல் அவர்கள் முடிவுசெய்தார். விழுந்துபோன ஒரு உலகத்தின் மத்தியில் உண்மைநிறைந்த வாழ்வை வாழ்வதற்கு முயற்சிசெய்கின்ற ஒவ்வொருவருக்கும் உபத்திரவம் பொதுவானதாக உள்ளது என்பதை வேதாகமம் தெளிவாக்குகிறது (கொலோசெயர் 1:24; 2 தீமோத்தேயு 3:1-5).

இவ்வசனப்பகுதியின் கருத்தை நாம் தவறவிடுமளவுக்கு உபத்திர வத்தை அடையாளப்படுத்துவதில் மிகவும் மூழ்கிப்போய்விடக்கூடாது: பரலோகத்தில் இருந்த பரிசுத்தவான்கள் உயிர்பிழைத்திருந்தனர். உபத்திரவம் என்பது எவ்வளவு பயங்கரமானதாக இருப்பினும், அது ஒருக்காலும் என்றென்றும் இருப்பதில்லை. கர்த்தருக்குள் உண்மையாய் நிலைத்திருங்கள், நீங்களும்கூட உங்கள் தனிப்பட்ட உபத்திரவங்களில் உயிர்பிழைத்திருக்க முடியும்.

இரட்சிப்பின் ஆசீர்வாதம் (வசனம் 14இ)

பின்பு மூப்பர், திரளான மக்கள் கூட்டத்தினரால் அணியப்பட்டிருந்த வெண்மை நிறமான அங்கியின் தனிச்சிறப்புப் பற்றி விளக்கியுரைத்தார்: "இவர்கள் தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (வசனம் 14இ).

"இரத்தத்திலே தோய்த்து" என்ற சொற்றொடரின் வலியுறுத்தும் உருவகத்தைத் தவற விடுமளவுக்கு அது நம்மில் சிலருக்கு மிகவும் பழக்கமானதாக உள்ளது. பாவம் நிறைந்த வாழ்வை, அழுக்கான உடையுடன் ஒப்பிடும் கருத்தானது மிகவும் சாதாரணமானதாக/பொது வானதாக உள்ளது (ஏசாயா 64:6; சகரியா 3:3-5), ஆனால் வெளிப்படுத்தின விசேஷம் 7:14ல் அழுக்கான உடையை வெண்மையாக்குவதற்கு, அது சிவப்பான இரத்தத்தில் தோய்க்கப்பட்டிருந்தது. S. D. கோர்டன் அவர்கள், "இயேசுவுக்குள் இருக்கின்ற ஒரு வேதியியல் நிபுணத்துவமும் ஒரு கலைத்துவமும் எப்படிப்பட்டதாக உள்ளது! அவர், மரித்துப்போன கறுப்பு நிறத்தில் இருந்து தூய்மையான வெண்மை நிறத்தை உருவாக்க, பிரகாசமான சிவப்பு நிறத்தைப் பயன்படுத்துகின்றார்"[29] என்று எழுதினார்.

அரியணையைச் சுற்றிலும் இருந்தவர்கள் சுத்திகரித்தலில் செயல்படா தவர்களாக இருந்ததில்லை என்பதைக் கவனியுங்கள்: இவர்கள் "தங்கள் அங்கிகளைத் தோய்த்திருந்தனர்"; இவர்கள் "அவற்றை இரத்தத்தில் தோய்த்து வெண்மையாக்கியிருந்தனர்."[30] பிரசங்கியாரான அனனியா, சவுலினிடத்தில் "நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுதுகொண்டு, ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு" என்று கூறினார் (நடபடிகள் 22:16ஆ). மனம்வருந்திய விசுவாசிகள் என்ற வகையில், ஞானஸ்நானத் தண்ணீரில் நாம் முழுக்காட்டப்படும்போது, நமது ஆத்துமாக்கள் ஆட்டுக்குட்டியானவரின் இரத்தத்தில் தோய்க்கப்பட்டுச் சுத்திகரிக்கப்படுகின்றன. பின்பு, கிறிஸ்தவர்கள் என்ற வகையில், நாம் தேவனுடைய வசனத்தின்படி நடக்கையில் (சங்கீதம் 119:105), அந்த இரத்தம் நம் பாவங்களைத் தொடர்ந்து கழுவுகிறது (1 யோவான் 1:7). "குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்திற்காக" தேவனுக்கு நன்றி (1 பேதுரு 1:19)!

ஊழியத்தின் ஆசீர்வாதம் (வசனம் 15அ)

அடுத்ததாக, மூப்பர் "ஆனபடியால், இவர்கள் தேவனுடைய சிங்கா சனத்திற்கு முன்பாக இருந்து, இரவும் பகலும்[31] அவருடைய ஆலயத்திலே[32] அவரைச் சேவிக்கிறார்கள்" என்று கூறினார் (வசனம் 15அ).

பரலோகம் என்பது, செயல்முனைப்பு இல்லாத ஒரு இடமாக, மிருதுவான மேகங்களின்மீது, பளிச்சிடும் வெண் உடைகளை அணிந்தவர்களாய், - நித்தியம் முழுவதற்கும் - கைகளைக் கட்டிக்கொண்டு நாம் அமர்ந்திருக்கும் இடமாக அடிக்கடி சித்தரிக்கப்பட்டுள்ளது. அது சலிப்பூட்டுவதாக இருக்காதா? பரலோகம் என்பது செயல்முனைப்பின் இடமாக - நாம் தேவனைத் தொழுதுகொண்டு அவரைச் சேவிக்கும்

இடமாக - உள்ளது என்பதை நாம் அறியவேண்டும் என்று தேவன் விரும்புகின்றார் (22:3ஐயும் காணவும்).[33]

ஒருநாள், மெர்லீ ஹன்ட்டர் என்ற சகோதரி, அடுத்து வரவிருந்த ஞாயிற்றுக்கிழமை ஆராதனைக்காகக் கர்த்தரின் பந்திக்கான தட்டுகளைக் கழுவுக்கொண்டிருந்தபோது, அந்த சகோதரி பிரசங்கியாரிடத்தில், "நான் பரலோகம் செல்லும்போது, சுத்தம் செய்ய வேண்டிய சிலவிஷயங்கள் அங்கிருக்கும் என்று நான் நம்புகின்றேன்!" என்றார்கள்.[34] (தேவனைத் துதித்தல் என்பதைத் தவிர) நாம் வேறு எவற்றைச் செய்துகொண்டிருப் போம் என்பது பற்றி நாம் மிகச்சரியாக அறிய இயலவில்லை, ஆனால் பின் வருவதை நாம் அறிந்துள்ளோம்: நாம் பணி மும்முரமாய் இருப்போம், நாம் மகிழ்ச்சியாய் இருப்போம்! ருட்யார்ட் கிப்லிங்க் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

பூமியின் கடைசிச் சித்திரம் வரையப்பட்டு
வண்ணக்குப்பிகள் பிதுக்கி உலர்ந்துபோகும்போது,
பழைய வண்ணங்கள் மங்கிப்போய்,
இளம் விமர்சகர் மரித்திருக்கும்போது,
நாம் இளைப்பாறுதல் அடைந்திருப்போம்,
நமக்கு விசுவாசம் மாத்திரமே தேவைப்பட்டிருக்கும்
நல்ல பணியாளர்கள் யாவருக்கும் எஜமானரானவர்
நம்மைப் புதிய பணியில் இடும் வரைக்கும்
ஒன்றிரண்டு யுகமுடிவில் நாம் கீழே கிடப்போம்.
. . . .
எஜமானர் மாத்திரமே நம்மைப் புகழுவார்,
எஜமானர் மாத்திரமே நம்மைக் குற்றம்சாட்டுவார்;
எவரொருவரும் பணத்திற்காகப் பணியாற்றமாட்டார்,
எவரொருவரும் புகழுக்காகப் பணியாற்றமாட்டார்,
ஆனால் ஒவ்வொருவரும் பணியாற்றுதலின் மகிழ்ச்சிக்காகவே
மற்றும் ஒவ்வொருவரும் தமது தனிப்பட்ட விண்மீனில் பணியாற்றுவார்,
அவர் தாம் காணுகின்றபடி, விஷயங்களைத்
தேவனுக்காகத் தரவழைப்பார்![35]

பாதுகாக்கப்பட்டிருத்தலின் ஆசீர்வாதம் (வசனங்கள் 15ஆ, 16, 17இ)

யோவான் தொடர்ந்து, "சிங்காசனத்தின்மேல் வீற்றிருக்கிறவர் இவர்களுக்குள்ளே வாசமாயிருப்பார்"[36] என்று குறிப்பிட்டார் (வசனம் 15ஆ). தேவன் தமது மக்களுக்குள்ளே "வாசமாயிருப்பார்" என்ற உருவகமானது, அவர்களை அவர் பாதுகாத்துப் பராமரிப்பார் என்பதை மறைமுகமாய் உணர்த்துகிறது. RSV வேதாகமத்தில், அவர் "தமது பிரசன்னத்தினுல் அவர்களைப் பாதுகாப்பார்" என்றுள்ளது.

அடுத்ததாக யோவான், விளைவைப் பற்றிக் கூறினார்: "இவர்கள் இனி பசியடைவதுமில்லை, இனி தாகமடைவதுமில்லை, வெயிலாவது உஷ்ண மாவது இவர்கள்மேல் படுவதுமில்லை" (வசனம் 16).[37] இங்கு "மனிதனின் ஆவிக்குரிய ஏங்குதல்களின் நிறைவான திருப்தி" உள்ளது.[38] வாழ்வின்

போராட்டங்கள் முடிந்துவிட்டன!

பின்பு அவர், "வேதாகமம் முழுவதிலும் மிகவும் மென்மையான சிறிய வாக்கியத்தை"[39] கூடுதலாகக் கூறினார்: "தேவன்தாமே இவர்களுடைய கண்ணீர் யாவையும் துடைப்பார்"[40] (வசனம் 17இ), தேவன், வருத்தத்தின் கண்ணீர் ஒவ்வொன்றையும், இழப்பின் கண்ணீர் ஒவ்வொன்றையும், ஏமாற்றத்தின் கண்ணீர் ஒவ்வொன்றையும், வேதனையின் கண்ணீர் ஒவ்வொன்றையும் துடைப்பார்.

கவிஞர் இராபர்ட் பர்ன்ஸ் என்பவரால், "இந்த அதிகாரத்தின் கடைசி வசனங்களைக் கண்ணீர் இன்றி வாசிக்க முடியாதிருந்தது'' என்று கூறப்பட்டுள்ளது.[41] வில்லியம் பார்க்ளே அவர்கள், "புலம்புதலின் இல்லத்திலும் மரண வேளையிலும் இவ்வசனப்பகுதியில் இருந்து ஆறுதலைக் கண்டறிந்துள்ளவர்களை எண்ணி முடித்தல் சாத்தியமற்றதாக இருக்கும்" என்று எழுதினார்.[42]

மேற்பார்வையிடுதலின் ஆசீர்வாதம் (வசனம் 17அ, ஆ)

இவ்வசனப் பகுதியானது, "சிங்காசனத்தின் மத்தியிலிருக்கிற ஆட்டுக்குட்டியானவரே இவர்களை மேய்த்து"[43] (வசனம் 17அ; யோவான் 10:11ஐக் காணவும்) என்று உறுதிப்படுத்துதலுடன் முடிகிறது. ஆட்டுக்குட்டியானவர் ஒரு மேய்ப்பரின் பணிப்பொறுப்பை நிறைவேற்றுதல் என்ற அடையாளத்துவம் நமக்கு வினோதமானதாகத் தோன்றலாம்,[44] ஆனால் ஒரு ஆட்டைத் தவிர வேறு எவரால் இன்னொரு ஆட்டின் தேவைகளை அதிகமாகப் புரிந்து கொள்ள முடியும்?

மேய்ப்பர் என்ற வகையில் இயேசு தமது மக்களை "ஜீவத்தண்ணீருள்ள ஊற்றுகளண்டைக்கு நடத்துவார்" (வசனம் 17ஆ)[45] - "பளிங்கைப்போல் தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டுவருகிறது'' (வெளிப்படுத்தின விசேஷம் 22:1) - என்பது அவர் செய்கின்ற செயலாக உள்ளது.

ஏர்ல் பால்மர் அவர்கள், "எனது விசுவாசத்தின் அன்றாட நடையின் ஆண்டவர் இன்றைய நாளில் ஆண்டவராய் இருக்கின்றது போலவே எனது பயணமுடிவிலும் ஆண்டவராய் இருப்பார், அவரை அவ்வாறே நான் சந்திப்பேன் ... மனித குல வரலாற்றின் எல்லையில் நிற்கின்றவர் அந்நியரல்ல, ஆனால் கலிலேயாவிலும், யோர்தானிலும் எருசலேமின் அருகில் இருந்த கொடிய குன்றிலும் நின்றிருந்த அதே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவே ஆவார்" என்பதில் ஆறுதலைக் கண்டறிந்தார்.[46] கோர்ரீ டென் பூம் என்ற பெண்ணின் தந்தையார் அவளிடத்தில், "இயேசு உன் கையைப் பற்றிக்கொள்ளும்போது, அவர் உன்னை அணைத்துக் கொள்ளுகின்றார். இயேசு உன்னை அணைத்துக் கொள்ளும்போது, அவர் உன்னை வாழ்வு முழுவதிலும் வழிநடத்துகின்றார். இயேசு உன்னை வாழ்வு முழுவதிலும் வழிநடத்தும் போது, அவர் உன்னை பத்திரமாய் இல்லத்திற்குக் கொண்டு வந்து சேர்க்கின்றார்" என்று கூறினார்.[47]

முடிவுரை

பவுல் ஒருமுறை, "தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்" என்று எழுதினார் (பிலிப்பியர் 1:23ஆ). எவ்வளவு நன்மையாயிருக்கும்? பின்வருமளவுக்கு நன்மையாயிருக்கும்: நாம் தேவனுடன் தனிப்பட்ட வகையில் நெருக்கமான ஐக்கியம் கொண்டிருப்போம். இந்த பூமியின் அற்பத்தனமும் அழுக்கும் நீங்கிப்போயிருக்கும்; நாம் வெள்ளைஅங்கிகளை உடுத்தியிருப்போம். நாம் கர்த்தரைத் துதித்துச் சேவித்துக் கொண்டிருப்போம். ஒவ்வொரு தேவையும் நிறைவேற்றப்படும். இயேசு நமது நிலையான துணையாளராக இருப்பார். தேவன் ஒவ்வொரு கண்ணீரையும் துடைப்பார்.

அது உங்களை பரலோகம் செல்வதற்கு விரும்பும்படி செய்வ தில்லையா? "தங்கள் அங்கிகளை ஆட்டுக்குட்டியானவருடைய இரத்தத்திலே தோய்த்து வெளுத்தவர்கள்" (7:14இ) மாத்திரமே அங்கிருப்பார்கள் என்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். உங்கள் பாவங்கள் இரத்தத்தினால் கழுவப்படவில்லை என்றால், நீங்கள் ஞானஸ்நானம் பெறவேண்டியதும் (நடபடிகள் 22:16), பின்பு அந்த இரத்தம் உங்களைத் தொடர்ந்து சுத்திகரிக்கும்படிக்குக் கர்த்தருடன் நடக்க வேண்டியதும் (1 யோவான் 1:7) அவசியமாக உள்ளன.

இந்த பாடத்தையும் இதற்கு முந்திய பாடத்தையும், ஒரு புயலைச் சித்தரிப்பதைக் கொண்டு நான் தொடங்கினேன். ஒருமுறை இயேசு, புயலில் உயிர் பிழைத்திருத்தல் பற்றிய பாடம் ஒன்றை போதித்தார்: மழை இறங்கிவரும்போது, வெள்ளங்கள் வரும்போது, காற்று வீசும்போது. அவரது வார்த்தைகளைக் கேட்டு அவற்றின்படி செய்கின்றவர்களே நிலைநிற்பார்கள் (மத்தேயு 7:24-27). நீங்கள் "புயலுக்கு மேலாக எழும்பி" நிற்க விரும்பினால், நீங்கள் - இன்றைக்கே - அவருக்குக் கீழ்ப்படிதல் அவசியமாக உள்ளது! உங்கள் பாவமன்னிப்பிற்கு நீங்கள் ஞானஸ்நானத்தில் முழுக்காட்டப்படாது இருந்தால் (நடபடிகள் 2:38; 22:16), அதைத் தள்ளிப் போடாதீர்கள். உங்கள் கிறிஸ்தவ நடக்கைக்கு நீங்கள் திரும்பிவர வேண்டியது அவசியமாயிருந்தால், "இப்பொழுதே அநுக்கிரககாலமாக" உள்ளது (2 கொரிந்தியர் 6:2).

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

நீங்கள், புயல் பற்றிய கருத்தைப் பயன்படுத்த விரும்பவில்லை யென்றால், இந்தப் பாடத்திற்கு "மற்றொரு பக்கத்தில் இருந்து கண்ணோக்குதல்," "சித்திரத்தின் இன்னொரு பக்கம்" அல்லது "வரலாற்றின் எஞ்சியபகுதி" என்று தலைப்பிடப்பட முடியும். முதல் காட்சியானது (7:1-8) (சபை உபத்திரவத்திற்குத் தயாராகிறது என்ற) ஒரு கண்ணோட்டத்தைக்

கொடுக்கிறது, ஆனால் இரண்டாம் காட்சியானது (7:9-17) (சபையின் வெற்றி என்ற) கடைசிக் கண்ணோட்டத்தைக் கொடுக்கிறது. "பரலோகத்தில் கண்ணீர் இல்லை" என்பது இன்னொரு தலைப்பாக இருக்க முடியும்.

மாறுபட்ட ஒரு அணுகுமுறைக்கு நீங்கள், "பரலோகத்தை மகிழ்வுடன் அனுபவிப்பது எப்படி?" என்று ஆய்வுக்கருத்தைப் பயன்படுத்த முடியும்: பரலோகம் என்பது ஆயத்தமான ஒரு மக்களுக்காக ஆயத்தமாக்கப் பட்டுள்ள ஒரு இடமாக உள்ளது (மத்தேயு 25:34; யோவான் 14:2; வெளிப்படுத்தின விசேஷம் 21:27), மற்றும் வெளிப்படுத்தின விசேஷம் 7:9-17, எவற்றிற்கு ஆயத்தமாக வேண்டும் என்று கூறுகிறது: (1) தேவனுக்குக் கீழ்ப்படிதலை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் (தேவனுடைய அரியணைக்கு முன்பாக நிற்குதல் (வசனம் 9) என்பது அவரது சித்தத்தைச் செய்வதற்குத் தயாராக இருத்தலைச் சுட்டிக்காண்பிக்கிறது); (2) தேவனை ஆராதிப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக் கொள்ளுங்கள் (வசனங்கள் 10-12); (3) ஒரு தூய்மையான வாழ்வை வாழுதலை (வெள்ளை அங்கிகள்; வசனங்கள் 13, 14; மேலும் 19:8ஐயும் காணவும்) மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள்; (4) கர்த்தரைச் சேவிப்பதை மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள் (வசனங்கள் 15); (5) பரிசுத்தவான்களின் ஐக்கியத்தை (முழு வசனப்பகுதியும்) மகிழ்வுடன் அனுபவிக்கக் கற்றுக்கொள்ளுங்கள். இந்தத் தலைப்புடன் கூடிய எனது பிரசங்கத்தை "The Day Christ Came (Again)" and Other Sermons[48] என்ற புத்தகத்தில் காணமுடியும். எனது சமீபத்திய வாசிப்பில் நான், இந்தப் பாடத்தில் பயன்படுத்தப்படக்கூடிய இரண்டு மேற்கோள்களைக் கண்டேன்: "பரலோகம் என்பது சேவிக்கும் இடமாக, ஒவ்வொரு மனிதரும் தமது ஏற்புத்திறன்களின் முழுமையான மேம்பாட்டிற்கு ஏராளமான வாய்ப்புகள் கொண்டிருக்கப் போகின்ற இடமாக இருக்கும் என்று வேதவசனங்கள் போதிக்கின்றன."[49] "பரலோகத்தில் எவரொருவராவது பாடாமல் இருப்பார் என்பதை யோவானால் கற்பனை செய்ய இயலாது இருந்தது."[50]

அதிகாரம் 7ஐ நீங்கள் ஒரே பாடத்தில் போதிக்க விரும்பினால், "இங்கிருந்து நித்தியத்திற்கு," "இவை யாவும் மற்றும் பரலோகமும்கூட," அல்லது "முன்பு மற்றும் பின்பு" என்பவை சாத்தியக்கூறுள்ள தலைப்புகளாய் இருக்க முடியும்.

நீங்கள் விரும்பினுல், அதிகாரம் 6ஐயும் 7ஐயும் ஒரே பாடத்தில் எடுத்துரைக்க முடியும். "தேவனுடைய சித்தம்" என்பது யாவற்றையும் ஒன்றாய்ச் சேர்த்து இழுக்கின்ற ஆய்வுப்பொருளாக இருக்கும். இவ்விரு அதிகாரங்களிலும் தேவனுடைய சித்தம் எவ்வாறு வலியுறுத்தப்படுகிறது என்பதைக் குறிப்பிடுவதைக் கொண்டு நீங்கள் தொடங்க முடியும். சாத்தியக்கூறுள்ள துணைத்தலைப்புகள் பின்வருமாறு: (1) தேவனுடைய சித்தமும் உபத்திரவமும் (6:1-11); (2) தேவனுடைய சித்தமும் தண்டனையும் (6:12-17); (3) தேவனுடைய சித்தமும் பாதுகாப்பும் (7:1-8); (4) தேவனுடைய சித்தமும் துதிகளும் (7:9-17).

வார்ரென் வயர்ஸ்ப் அவர்கள், அதிகாரங்கள் 6ஐயும் 7ஐயும், "முத்திரை களும் முத்திரையிடப்பட்டவர்களும்"[51] என்று தலைப்பிடப்பட்ட ஒரு

பாடத்தில் ஒன்றிணைத்தார், இதில் அவர் (1) தண்டித்தல் [Retribution] *(6:1-8), (2) பதில் செயல்* [Response] *(6:9-17) மற்றும் (3) மீட்பு* [Redemption] *(7:1-17) ஆகியவற்றில் கவனம் செலுத்தினார்.*

குறிப்புகள்

[1]*"சபை என்ற இராணுவசேனை" என்ற சொற்றொடரானது, மாம்சப் பிரகாரமான யுத்தத்தையல்ல, ஆனால் கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய யுத்தத்தைக் குறிப்பிடுகிறது.* [2]*வெளிப்படுத்தின விசேஷம் 7:9-13 வசனப் பகுதியானது பரலோகத்தின் சித்தரிப்பாக உள்ளது என்பதைச் சில எழுத்தாளர்கள் நம்புவதில்லை. இந்த நிலைப்பாட்டின் தொகுப்புரையொன்றை,* Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979) *என்ற புத்தகத்தின் பக்கம் 213ல் காணவும். இவ்வசனப் பகுதியானது பரலோகத்தைச் சித்தரிக்காவிட்டாலும், இது குறைந்தபட்சம், பரலோகத்தின் ஆசீர்வாதங்கள் பற்றிய ஒரு முன்சுவையைக் கொடுக்கிறது என்பதைப் பெரும்பாலானவர்கள் ஒப்புக்கொள்கின்றனர்.* [3]Albertus Pieters, *Studies in the Revelation of St. John* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1954), 125. [4]Robert Mounce, *The Book of Revelation,* The New International Commentary on the New Testament Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977), 171. [5]Merrill C. Tenney, *Proclaiming the New Testament: The Book of Revelation* (Grand Rapids, Mich.: Baker Book House, 1963), 37. [6]KJV *வேதாகமத்தில்,* "which no *man* could number" *என்றுள்ளது. மனிதர் எவரும் இந்தக் கூட்டத்தில் இருந்தவர்களை எண்ண முடியாதிருந்தது, ஆனால் தேவனால் எண்ண முடிந்திருந்தது.* [7]*இந்த இரண்டாம் பகுதியானது ஏழு முத்திரைகள் கொண்ட புத்தகத்தைச் சுற்றிச் சுழலுகிறது (4:1-8:5). "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் "நாம் ஜெயம்கொண்டோம், தேவனுக்கு நன்றி!" என்ற பாடத்தில் இந்தப் புத்தகத்தின் வரைக்குறிப்பையும் மேற்கண்ணோட்டத்தையும் காணவும்.* [8]*"அடிப்படையில்" என்ற வார்த்தையானது இந்தக் கூற்றைத் தகுதிப்படுத்த அவசியமானதாக உள்ளது ஏனென்றால் ஞானஸ்நானப்படுத்தப்படும்போது முத்திரையிடப்படுதல் என்பது (முந்திய பாடத்தைக் காணவும்) ஒருவர் "மரணபரியந்தம் உண்மையாய்" (2:10) இருப்பார் என்பதை உத்தரவாதப்படுத்துவதில்லை.* [9]*இவ்விரு கூட்டங்களுக்கும் இடையில் உள்ள மற்ற வேறுபாடுகள் சிலவேளைகளில் சுட்டிக்காண்பிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, ஒரு குழுவினர் பூமியில் இருக்கையில் இன்னொரு குழுவினர் பரலோகத்தில் இருக்கின்றனர் என்ற உண்மையானது பொதுவாக, நேர்மாறின் பாகமாக ஏற்படுத்தப்பட்டுள்ளது, ஆனால் அந்த வேறுபாடு இந்தப் பாடத்தின் இன்னொரு இடத்தில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.* [10]*சிலர், முத்திரையிடப்பட்டு இருந்தவர்களை யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்களுக்கும் திரளான கூட்டத்தாரை, வெளிப்படுத்தின விசேஷம் எழுதப்பட்ட காலத்தில் ஏற்கனவே மரித்திருந்த கிறிஸ்தவர்களுக்கும் மட்டுப்படுத்துகின்றனர். இவர்கள் நிச்சயமாகவே தரிசனத்தில் உள்ளடக்கப்பட்டிருப்பார்கள், ஆனால் இந்த அடையாளத்துவமானது அதைக்காட்டிலும் அதிகம் விரிவானதாக காணப்படுகிறது.*

[11]*நான்கு சொற்றொடர்களின் பயன்பாடு, மீட்கப்பட்டவர்கள் பூமியெங்கிலும் இருந்து வந்தவர்கள் என்ற கருத்தை மறு உறுதிப்படுத்துகிறது ("நான்கு" என்பது மனிதத்துவத்தின் எண்ணாக உள்ளது). "கோத்திரங்கள்," "பாஷைக்காரர்,"*

"ஜனங்கள்," மற்றும் "ஜாதிகள்" என்ற சொற்றொடர்களின் விளக்கத்தை, இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராய் இருக்கின்றார்" என்ற பாடத்தில் காணவும். [12]*"ஆவிகளின் நகரம்" என்பது (சுரங்கத்தில் இருந்து விலையுயர்ந்த உலோகங்கள் தோண்டி எடுக்கப்பட்டதினால்) ஒருகாலத்தில் செழிப்புற்று இருந்து, பின்பு மீதியாய் இருக்கும் கைவிடப்பட்ட நகரமாயிருக்கிறது. அங்கு இப்போது ஒருவரும் வசிப்பதில்லை, கட்டிடங்கள் விழுந்து கிடக்கின்றன.* [13]John Wick Bowman, *The First Christian Drama: The Book of Revelation* (Philadelphia: Westminster Press, 1955), 51. *வெள்ளை அங்கிகள் பற்றிய தனிச்சிறப்பின் மற்ற கலந்துரையாடலுக்கு, இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள, "நீங்கள் கேள்விகளைக் கொண்டுள்ளீர்களா? தேவன் பதில்களைக் கொண்டுள்ளார்!" என்ற பாடத்தில் 6:11ன் மீதான விளக்கங்களைக் காணவும்.* [14]Earl F. Palmer, *1, 2, 3 John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 182. [15]Mounce, 172. [16]*ஏழு மடங்கு துதியானது இரண்டு "ஆமென்"களுக்கு இடையில் வைக்கப்பட்டுள்ளது.* [17]*தேவனுக்கு செலுத்தப்படும் ஏழு மடங்கு மரியாதையானது 5:12ல் ஆட்டுக்குட்டியானவருக்கு செலுத்தப்படுவதுபோன்றே உள்ளது. 5:12 மற்றும் 7:12 ஆகியவற்றிற்கு இடையில் மூன்று வேறுபாடுகள் நிலவுகின்றன: (1) வரிசைமுறை வேறுபட்டுள்ளது; (2) 7:12ல் "ஐசுவரியம்" என்ற வார்த்தைக்குப் பதிலாக "நன்றிசெலுத்துதல்" ("ஸ்தோத்திரம்") என்றுள்ளது; (3) மூலவசனத்தில், 7:12 வசனத்தில் ஏழு சொற்றொடர்கள் ஒவ்வொன்றிற்கும் முன்பாக திட்டவட்ட சுட்டுச்சொல் (*the*) வருகிறது. அதே வேளையில் 5:12ல் அது வருவதில்லை. ஒவ்வொரு சொற்றொடரின் முன்பாகவும் தோன்றுகிற திட்டவட்ட சுட்டுச்சொல் தனிச்சிறப்புடையது.* [18]Hailey, 207. [19]*யோவான் 7:2, 37-39ஐக் காணவும். தண்ணீர்ச் சடங்கு செய்யப்படும் "பண்டிகையின் பிரதான நாளின்"போது, இயேசு "ஜீவதண்ணீர்" பற்றிப் பேசினார் (வசனம் 38) மற்றும் அவர், "ஒருவன் தாகமாயிருந்தால் என்னிடத்தில் வந்து, பானம்பண்ணக்கடவன்" என்று சத்தமிட்டுக்கூறினார் (வசனம் 37).* [20]*வசனங்கள் 13முதல் 17வரையுள்ள பகுதியில் கேள்விகள் மற்றும் பதில்கள் ஆகியவற்றின் இடமாற்றமானது பரலோகத்தின் அற்புதங்களை நோக்கி கவனம் செலுத்தும்படி அழைக்கும் அழைப்பிற்கான நாடகத்துவமான கருவியாக உள்ளது; இது எதையாவது "நிரூபிப்பதற்கு" அழுத்தப்படக் கூடாது. சிலர் இதை, அப்போஸ்தலரான யோவான் இந்தப் புத்தகத்தை எழுதவில்லை என்று நிரூபிக்க முயற்சிப்பதற்குப் பயன்படுத்துகின்றனர் ("அப்போஸ்தலரான யோவான், அந்தக் கூட்டத்தில் இருந்த மக்களில் சிலரை அறிந்திருப்பார்"). சிலர் இதை, அந்தக் கூட்டத்தில் கிறிஸ்தவர்கள் இருக்கவில்லை என்று நிரூபிக்கப் பயன்படுத்துகின்றனர் ("அந்தக் கூட்டத்தார் கிறிஸ்தவர்களாய் இருந்திருந்தால், அவர்கள் யாரென்று அப்போஸ்தலரான யோவான் அறிந்திருப்பாரே"). இப்படிப்பட்ட வாதமானது, இறைவெளிப்பாட்டு மொழிநடையின் அடையாளத்துவ மற்றும் நாடகத்துவ இயல்பைப் புறக்கணிக்கிறது.*

[21]*ஒருவேளை மூப்பர்களில் ஒருவர் யோவானை அணுகினார் என்ற உண்மையானது, குறிப்பிடத்தக்கதல்ல. (இது இதற்கு முன் 5:5ல் ஒருமுறை நடைபெற்றிருந்தது.) வெளிப்படுத்தின விசேஷம் என்ற நாடகத்தில், மேடையில் உள்ள எந்த ஒரு நடிகரும், அந்தக் காட்சியில் அவசியமானல் பேசும் பணிப்பொறுப்பு ஒன்றைக் கொண்டிருக்கலாம். இந்த உண்மையில் ஏதேனும் தனிச்சிறப்பு இருக்கும் என்றால், அது அந்த மூப்பர்கள் (மீட்கப்பட்டவர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தியவர்கள்) மீட்பின் கருத்தைப் பற்றிப் பேசத் தகுதிபெற்றிருப்பார்கள். (இந்தப் புத்தகத்தின் முந்திய பாடங்களில் ஒன்றான*

"கருத்துநோக்கில் விஷயங்களை வைத்தல்" என்ற பாடத்தில், இருபத்து நான்கு மூப்பர்களைப் பற்றிய குறிப்புகளைக் காணவும்.) [22](நாம் அறிந்த வரையில்) யோவான் கேள்வியெதையும் உரத்து எழுப்பியிருந்திராதபடியால், "பதில் அளித்தார்" என்ற சொற்றொடரானது அனேகமாக, அந்த அப்போஸ்தலர் தமது சிந்தையில் கேட்டிருந்த அல்லது தமது முகத்தில் காண்பித்திருந்த கேள்வி ஒன்றிற்கு மூப்பர் பதில் அளித்தார் அல்லது மூப்பர் கேள்வி ஒன்றை எதிர்பார்த்து மாத்திரம் இருந்தார் என்று அர்த்தப்படலாம். [23]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 38. [24]"ஆண்டவர்" என்பதற்கான கிரேக்க வார்த்தையானது (*kurios*) வழக்கமாக, தேவனுக்கும் இயேசுவுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது, ஆனால் இது அவ்வப்போது மனிதர்களுக்குப் பயன்படுத்தப்படுகிறது (மத்தேயு 18:25-34; 25:11; 1 பேதுரு 3:6 ஆகிய வசனங்களைக் காணவும்). [25]இது, "who *are* coming out of" ("ல் இருந்து வெளியே வந்த") என்று மொழிபெயர்க்கப்பட முடியும், இது இந்தக் காட்சியானது நியாயத்தீர்ப்பின் கடைசிநாளுக்கு முன்நடக்கிறது என்று சுட்டிக்காண்பிக்கலாம். இதற்கு மறுபுறத்தில், இது எதிர்காலத்தைப் பற்றிப் பேசுவதற்கு நிகழ்கால வினைச் சொல்லைப் பயன்படுத்தும் பேச்சு உருவகமாக இவ்விடத்தில் உள்ளது என்று பலர் நம்புகின்றனர். NIV மற்றும் RSV வேதாகமங்களில் இச்சொற்றொடர் "*have* come out of" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. [26]ஆயிரம் ஆண்டு முன்னரசாட்சிக் கொள்கைக்காரர்களில் பெரும்பான்மையானவர்கள், கர்த்தர் திரும்பவும் வந்து தமது (நேரடி அர்த்தத்திலான) ஆயிரம் ஆண்டு அரசாட்சியைத் தொடங்குவதற்கு முன்பு, ஏழு ஆண்டு காலத்திற்கு விசுவாசிகள் பூமிக்கு மேலே உலாவிக்கொண்டிருப்பார்கள் ("பரவசநிலை") மற்றும் அந்த வேளையில் பூமியின்மீது மாபெரும் உபத்திரவம் இருக்கும் ("உபத்திரவம்") என்ற தவறான கருத்தைப் பற்றிக்கொண்டுள்ளனர். [27]D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, Publishers, 1961), 139. [28]Edward A. McDowell, *The Meaning and Message of the Book of Revelation* (Nashville: Broadman Press, 1951), 99. [29]Quoted by Myer Pearlman in *Windows into the Future: Devotional Studies in the Book of Revelation* (Springfield, Mo.: Gospel Publishing House, 1941), 77. [30]இரண்டாவது "இவர்கள்" என்பது "have made" என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வினைச் சொல்லின் புரிந்துகொள்ளப்பட்ட பாகமாக உள்ளது.

[31]இவ்வசனம் "இரவும் பகலும்" என்பது பற்றிப் பேசுகிறபோது, 21:25அ "அங்கே இராக்காலம் இராது" என்று கூறுகிற உண்மை பற்றிச் சிலர் கவலைகொண்டுள்ளனர். (1) சீர்த்தன்மையல்ல, ஆனால் உருவகம் என்பதே வெளி.புத்தகத்தில் முக்கியமானதாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். (2) "இரவும் பகலும்" என்பது, "இடைவிடாமல், எப்போதும்" என்பதைக் கூறுவதற்கான மரபுசார்ந்த வழிமுறையாக உள்ளது. [32]இவ்வசனம் ஆலயத்தைப் பற்றிப் பேசுகையில், 21:22அ "ஆலயத்தை நான் காணவில்லை" என்று கூறுகிற உண்மை பற்றிச் சிலர் கவலை கொண்டுள்ளனர். (1) மீண்டுமாக, சீர்த்தன்மையல்ல, ஆனால் உருவகமே முக்கியமானதாக உள்ளது. (2) பரலோகத்தில் ஆலயம் என்று அழைக்கப்படும் கட்டிடம் எதுவும் இராது; மாறாக, பரலோகம் முழுவதும் தேவனுடைய பரிசுத்த ஸ்தலமாக (ஆலயமாக) இருக்கும், அங்கே அவர் ஆராதிக்கப்படுவார். [33]NASB வேதாகமத்தில் "serve" ("சேவித்தல்") என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "ஆராதனை" என்பதற்கு, அதிலும் விசேஷமாக, பொதுவான ஆராதனை என்பதற்கு உரிய வார்த்தைகளில் ஒன்றாக உள்ளது. இது நம்மைத் தேவனுடைய ஊழியத்திற்கு அர்ப்பணித்தலையும் குறிப்பிடக்கூடும்

(இவ்வார்த்தை ரோமர் 12:1ல் ஒருவர் தமது சரீரத்தை ஜீவபலியாக ஒப்புக்கொடுத்தலைக் குறிப்பிட பயன்படுத்தப்பட்டுள்ளது). [34]இந்த நிகழ்ச்சியானது ஐட்ஸோனியா கிறிஸ்துவின் சபையின் பிரசங்கியாரான கிளென் பேஸ் அவர்களால் பகிர்ந்துகொள்ளப்பட்டது. [35]Rudyard Kipling, "When Earth's Last Picture Is Painted," *Rudyard Kipling's Verse* (Garden City, N. Y.: Doubleday and Company, 1940), 226. [36]KJV வேதாகமத்தில் "shall dwell among them" என்றுள்ளது. பரலோகத்தில் தேவன் தமது மக்களின் நடுவில் வாசமாயிருப்பார், ஆனால் கிரேக்க வசனத்தில், அதைக் காட்டிலும் அதிகமான அர்த்தம் உள்ளடங்கியிருக்கிறது. மூலவசனமானது நேரடியான அர்த்தத்தில், அவர் "அவர்கள்மீது [தமது] கூடாரத்தை விரிப்பார்" என்றுள்ளது. [37]*7:16ஐ, யூதர்கள் அடிமைத்தனத்தில் இருந்து தங்கள் சொந்த நாட்டிற்குத் திரும்பியதைச் சித்தரிக்கிற ஏசாயா 49:10உடன் ஒப்பிடவும்.* [38]Mounce, 176. [39]Pearlman, 78. [40]*7:17இ யை, ஏசாயா 25:8; 66:13 உடன் ஒப்பிடவும்.*

[41]Baldinger, 38-39. [42]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 36. [43]KJV வேதாகமத்தில் "feed them" ["அவர்களைப் போஷிப்பார்"] என்றுள்ளது, ஆனால் இதன் வினைச்சொல்லானது "மேய்ப்பரைப்போல் அவர்களைப் பராமரிப்பார்" என்பதற்கானதாக உள்ளது. இது போஷித்தலை உள்ளடக்குகிறது, ஆனால் அதைக் காட்டிலும் அதிகமானதும் உள்ளடங்குகிறது. [44]ஆட்டுக்குட்டியானவர், ஆடுகளை வழிநடத்துதல் என்ற கருத்து தொடக்ககால வாசகர்களுக்கு அவ்வளவு புதுமையானதாக இருந்திராது. பெரும்பாலான மந்தைகளில் "வழிநடத்தும் ஆடு" ஒன்றிருந்தது. கால்நடைகள் பற்றி நன்கு அறிந்தவர்கள், வழக்கமாகக் கழுத்தில் மணியுடன் உள்ள "வழிநடத்தும் பசுமாடு" ஒன்றைக் கண்டிருப்பார்கள். [45]நல்ல மேய்ப்பர் தமது மக்களுக்குச் செய்கின்ற மற்றும் செய்யவிருக்கின்ற பிற விஷயங்களுக்கு சங்கீதம் 23ஐயும் ஏசாயா 40:11ஐயும் காணவும். [46]Palmer, 184. [47]Corrie ten Boom, *In My Father's House* (Old Tappan, N. J.: Fleming H. Revell Co., 1976), 192. [48]Roper, 175-86. [49]Pearlman, 77. [50]Baldinger, 38.

[51]Warren Wiersbe, *The Bible Exposition Commentary*, vol. 2 (Wheaton, Ill.: Victor Books, 1989), 586-91.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. இந்தப் பாடத்தை எழுதியவரின் கூற்றுப்படி, முத்திரையிடப்பட்டவர்களைக் கொண்டு குறிப்பிடப்பட்டவர்கள் யார் (7:1-8)? எண்ண முடியாத மக்கள்திரளைக் கொண்டு குறிப்பிடப்பட்டவர்கள் யார் (7:9-17)?
2. முதல் நூற்றாண்டில் வாழ்ந்த கிறிஸ்தவர்களுக்கு 7:9-17ன் முழுமையான செய்தியாக இருந்தது எது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்? இன்றைய நாட்களில் வாழும் கிறிஸ்தவர்களுக்கு இதன் முழுமையான செய்தியாக இருக்கிறது எது என்று நீங்கள் நினைக்கின்றீர்கள்?
3. திரளான மக்கள் கூட்டத்தாரால் அணியப்பட்டிருந்த வெள்ளை அங்கிகளின் தனிச்சிறப்பு என்ன?

4. குருத்தோலைகளின் தனிச்சிறப்பு என்ன?
5. புதிய ஏற்பாட்டில், "இரட்சிப்பு" என்ற வார்த்தை பயன்படுத்தப் பட்டுள்ள வேறுபட்ட மூன்று வழிமுறைகள் யாவை?
6. விளக்கவுரையாளர்கள் பலரின் கூற்றுப்படி, 7:9-17ன் பல விபரங்கள் யூதர்களின் எந்தப் பண்டிகையுடன் தொடர்பு கொண்டுள்ளன? அந்தப் பண்டிகையைப் பற்றி உங்களால் முடிந்த ஒவ்வொன்றையும் வாசித்து, அந்தப் பண்டிகையின்போது நடந்தவற்றைக் கலந்துரையாடத் தயாராகவும்.
7. யோவானின் நாட்களில் இருந்த கிறிஸ்தவர்கள் "மகா உபத்திரவம்" பற்றி வாசித்தபோது, அந்தச் சொற்றொடர் அவர்களுக்கு அர்த்தப்படுத்தியது என்ன?
8. இயேசுவின் இரத்தத்தில், நாம் "நமது அங்கிகளை" எவ்வாறு தோய்க்க முடியும்?
9. பரலோகம் என்பது செயல்முனைப்பற்ற இடமாக உள்ளதா? நாம் பரலோகத்தில் செய்பவை பற்றி நீங்கள் நினைப்பது என்ன?
10. 7:16, 17ல் உங்களுக்கு மிகவும் விலையேறப் பெற்றதாக உள்ள வாக்குத்தத்தம் எது? ஏன்?

அரியணையைச் சுற்றிலும் மக்கள்திரள் (7:9, 10)

27

கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது

[8:1-6]

அதிகாரம் 6ல் நாம், முதல் ஆறு முத்திரைகள் விரைவான வரிசைத் தொடரில் உடைக்கப்பட்டதைக் கண்டோம். பின்பு நாம் அதிகாரம் 7ல், பூமியில் தேவனுடைய மக்கள் முத்திரையிடப்படுதலையும் அவர்கள் பரலோகத்தின் அரியணை முன்பு அகம் மகிழ்வதையும் கண்டபோது முக்கியமான பயணத்தை மேற்கொண்டோம். அதிகாரம் 8ல் நாம் கடைசியாக, சிந்தனையின் தொடக்கநிலைக்குத் திரும்பி ஏழாம் முத்திரை உடைக்கப்படுவதைக் காண்போம்.

அதிகாரம் 8ன் முதல் ஆறு வசனங்கள் பல்வேறு நோக்கங்களை நிறைவேற்றுகின்றன:

(1) இவைகள் இந்தப் புத்தகத்தின் இரண்டாம் பகுதியை (4:1-8:5) முடித்து வைக்கின்றன;

(2) இவைகள் இந்தப் புத்தகத்தின் மூன்றாம் பகுதிக்குள் (8:6-11:19) வழிநடத்துகின்றன;

(3) இவைகள் யுத்தம் செய்யும் கிறிஸ்தவர்களுக்கு ஒரு விசேஷித்த நம்பிக்கையின் செய்தியைக் கொண்டுள்ளன.

ஏழாம் முத்திரை உடைக்கப்படுதலைப் பற்றி நாம் கலந்துரையாடுகையில், மேற்கண்டவற்றில் முதல் நோக்கத்தைப் பற்றி நாம் விரித்துரைப்போம், மற்றும் இப்பாடத்தின் பிற்பகுதியில் நாம், இவ்வசனங்கள், துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவர்களுக்கு எவ்வாறு நம்பிக்கையளித்தன என்பது பற்றி விரிவாகக் கண்ணோக்குவோம். இருப்பினும், இப்பாடத்தின் இருதயம் போன்ற மையப்பகுதிக்கு நாம் செல்லுவதற்கு முன்பு, சற்று நேரத்திற்கு நாம், இந்தப் புத்தகத்தின் மூன்றாம் பகுதிக்குள் வழிநடத்துகிறதென்ற இரண்டாம் நோக்கத்தின்மீது கவனம் செலுத்துவது அவசியமாக உள்ளது.

ஆயத்தமாகுதலின் நோக்கம் (8:1, 2)

இவ்வதிகாரம், ''அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று. பின்பு, தேவனுக்குமுன்பாக நிற்கிற ஏழு தூதர்களையுங் கண்டேன், அவர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டது'' என்று தொடங்குகிறது (வசனங்கள் 1, 2). ஏழாம் முத்திரையை உடைத்தல் என்பது

ஏழு எக்காளங்கள் ஊதப்படுதலுக்கு வழிநடத்திற்று - இதுபோன்றே, இப்புத்தகத்தின் பிற்பகுதியில் ஏழாம் எக்காளம் ஊதப்படுதல் என்பது ஏழு கோபக்கலசங்கள் ஊற்றப்படுதலுக்கு காட்சிமேடை அமைப்பதாயிருக்கும் (அதிகாரங்கள் 15 மற்றும் 16).

எக்காளங்கள் என்பவை ஏழாம் முத்திரையைத் தொடர்ந்த விஷயமாக மாத்திரம் இருக்கவில்லை; அவைகள் ஏழாம் முத்திரையின் முதன்மைச் செயல்பாடாக நினைக்கப்படலாம்.[1] பிராங்க் பேக் அவர்கள், "ஏழு எக்காளங்களின் குழு முழுமையும், ஏழாம் முத்திரைகளின் பொருளடக்கங் களைக் கொண்டுள்ளது" என்று கருத்துத் தெரிவித்தார்.[2] ஜிம் மெக்குய்க்கன் அவர்கள், "ஏழாம் முத்திரையானது ஏழு எக்காளங்களையும், ஏழாம் எக்காளமானது ஏழு கலசங்களையும் கொண்டுள்ளது" என்று வலியுறுத் தினார். அவர் பின்வரும் அடிப்படை வரைக்குறிப்பை முன்மொழிந்தார்:

I. முத்திரை ஒன்று
II. முத்திரை இரண்டு
III. முத்திரை மூன்று
IV. முத்திரை நான்கு
V. முத்திரை ஐந்து
VI. முத்திரை ஆறு
VII. முத்திரை ஏழு
    அ. எக்காளம் ஒன்று
    ஆ. எக்காளம் இரண்டு
    இ. எக்காளம் மூன்று
    ஈ. எக்காளம் நான்கு
    உ. எக்காளம் ஐந்து
    ஊ. எக்காளம் ஆறு
    எ. எக்காளம் ஏழு
        1. கலசம் ஒன்று
        2. கலசம் இரண்டு
        3. கலசம் மூன்று
        4. கலசம் நான்கு
        5. கலசம் ஐந்து
        6. கலசம் ஆறு
        7. கலசம் ஏழு[3]

ஏழு முத்திரைகள், ஏழு எக்காளங்கள் மற்றும் ஏழு கலசங்கள் ஆகியவற்றிற்கு இடையில், மனதில் பதியக்கூடிய பல இணைவுகள் நிலவுகின்றன: இந்த ஏழுகள் ஒவ்வொன்றும் நான்கு மற்றும் மூன்று என்ற குழுக்களாக அமைக்கப்பட்டுள்ளன (ஒவ்வொரு வரிசையிலும், முதல் நான்கு அடையாளங்கள் மிகவும் நெருக்கமாக உறவுபட்டுள்ளன, கடைசி மூன்று அடையாளங்கள் அதிகம் மாறுபட்டுள்ளன). "மூன்று விபரங்களுமே பெருமளவுக்கு ஒரே களத்தைக் கொண்டுள்ளன, பெரும்பாலும்

ஒரேமாதிரியான தகவல்கள் அடங்கப் பெற்றுள்ளன, மற்றும் சிலவேளைகளில் ஏறக்குறைய ஒன்றுபோலவே உள்ளன."[4] மற்றும், இவை யாவையும் தேவனுடைய வல்லமையை வலியுறுத்துகிற ஒரேவிதமான வார்த்தைகளைக் கொண்டு முடிகின்றன (8:5; 11:19; 16:18-21).

இது, இம்மூன்று பகுதிகளும் ஒரேமாதிரியானவைகள், எனவே அனாவசியமானவைகள் என்று அர்த்தப்படுத்துவதில்லை. "இவ்வரிசைகள் ஒவ்வொன்றும் ... தனக்கே உரிய தனிப்பட்ட ஆய்வுக்கருத்தை (யும் வலியுறுத்தத்தையும்) கொண்டுள்ளது"[5] இப்பிரிவுகள் தர்க்கரீதியாக வளர்ந்தேறுகின்றன.[6] இவற்றின் வளர்நிலையைப் பின்வருமாறு விளக்கப்படுத்த முடியும்:

(1) முத்திரைகள் உடைக்கப்படுகின்றன: வெளிப்படுத்துதல்

(2) எக்காளங்கள் ஊதப்படுகின்றன: எச்சரிக்கை

(3) கோபகலசங்கள் ஊற்றப்படுகின்றன: தண்டனை

ஒவ்வொரு வரிசையின் அடிப்படைச் செய்தியும் ஒரேமாதிரியானதாகவே நிலைத்துள்ளது: தேவன் கட்டுப்பாடு செலுத்துகின்றார், அவர் எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாகத் திருப்புவார்!

ஜெபத்தின் வல்லமை (8:1-6)

இப்போது நாம் நமது பாடத்தின் இருதயம் போன்ற மையப்பகுதிக்குத் திரும்புகின்றோம். 8:1-6 ஐப் பற்றிய எனது படிப்பை நான் தொடங்கிய போது, ஆயத்தப்படுதலின் முக்கியத்துவமே இதன் திறவுகோல் குறிப்பாய் இருக்கும் என்று நான் எதிர்பார்த்தேன்: தேவன் இந்தப் பகுதியை, ஏழு எக்காளங்கள் ஊதப்படுதலுக்கு நமது சிந்தைகளை ஆயத்தப்படுத்துவதற்குப் பயன்படுத்துகின்றார்; அதுபோலவே, நீங்களும் நானும் எந்த ஒரு தகுதிவாய்ந்த பணிப்பொறுப்பிற்கும் ஆயத்தம் செய்து கொள்வது அவசியமாக உள்ளது. அது ஒரு தகுதிவாய்ந்த ஆய்வுப்பொருளாக உள்ளது, ஆனால் இவ்வசனங்களை நான் அதிகமாய்ப் படிக்கப்படிக்க, இவ்வசனப்பகுதியில் பதித்து வைக்கப்பட்டுள்ளதான, ஜெபம் பற்றிய வல்லமை நிறைந்த போதனையினால் நான் அதிகமாக ஈர்க்கப்படுகின்றேன். "கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது" என்ன நடக்கிறது என்பதை மையமாக வைத்து எனது சிந்தனைகளைப் பகிர்ந்து கொள்ள என்னை அனுமதியுங்கள்.

பரலோகம் கவனித்துக் கேட்கிறது (வசனம் 1)

இவ்வசனப் பகுதியானது ஏழாம் முத்திரை உடைக்கப்படுதலுடன் தொடங்குகிறது: "அவர் ஏழாம் முத்திரையை உடைத்தபோது, பரலோகத்தில் ஏறக்குறைய அரைமணிநேரமளவும் அமைதல் உண்டாயிற்று" (வசனம் 1).

வெளிப்படுத்தின விசேஷத்தில் அடிக்கடி நடைபெறுவது போலவே, இந்த எடுத்துரைப்பானது நம்மில் பலரைத் திகைப்படையச் செய்கிறது. பரலோகத்தின் அரியணை அறையில் நாம் யோவானைப் பின்தொடர்ந்து சென்றதிலிருந்து (4:1, 2), நமது மனரீதியான காதுகளில் சத்தங்கள் முழங்கிக் கொண்டுள்ளன. அதிகாரங்கள் 4 மற்றும் 5ல் நாம் பரலோக பல்லவியைக்

கவனித்துக் கேட்டோம். அதிகாரம் 6ல் நாம் இடிமுழக்கம் செய்யும் குளம்பொலிகளை, வேதசாட்சியாக மரித்தவர்களின் கூக்குரல்களை, மற்றும் இந்த அண்டமானது பிரிந்து பறக்கும் சத்தத்தைக் கேட்டோம். அதிகாரம் 7, இதுவரை கூடியிருந்தவற்றிலேயே மாபெரும் கூட்டத்தாரால் எழுப்பப்பட்ட பல்லவியென்ற பெரிய கீதத்துடன் முடிவடைந்தது. அந்த அதிகாரங்களில், ஏறக்குறைய ஒவ்வொன்றுமே "உரத்த சத்தத்தினால்" கூறப்பட்டது அல்லது பாடப்பட்டது (5:2, 12; 6:10; 7:2, 10).

திடீரென்று ஒரு அமைதி - முழுமையான மற்றும் முற்றான அமைதி - ஏற்பட்டது[7] இந்த அமைதி "ஏறக்குறைய அரைமணிநேரமளவும்" இருந்தது. அரைமணி நேரம் என்பது - ஏதேனும் நடப்பதற்காக நீங்கள் காத்திருந்தால் அன்றி - ஒரு நீண்ட கால வேளையாக இருப்பதில்லை. நீங்கள் உங்கள் குழந்தையை மருத்துவமனைக்கு அவசரமாக கூட்டிக்கொண்டு போக வேண்டியிருந்தால், மருத்துவரின் ஆய்வறிக்கையை கேட்பதற்காக நீங்கள் காத்திருந்தால், அரைமணி நேரம் என்பது ஒரு ஆயுள்காலமாக காணப்படும். அடுத்து என்ன வருகிறது என்று காண்பதற்காக யோவான் காத்திருந்தபோது முப்பது நிமிடங்கள் என்பது ஒரு நித்தியமானதாக காணப்பட்டிருக்கலாம்.[8]

"ஏறக்குறைய அரைமணிநேரமளவும்" என்ற சொற்றொடரின் அடையாளத்துவத் தனிச்சிறப்பு பற்றி விளக்கவுரையாளர்கள் போராடுகின் றனர். அவர்கள் பின்வருமாறு வேதனைப்படுகின்றனர்: "இது அர்த்தப் படுத்துவது என்ன?" மிகவும் மேன்மையான கேள்வி என்பது "இந்த எடுத்துரைப்பில் இது பணியாற்றுகின்ற நோக்கம் என்ன?" என்பதாக இருக்கும். இசைக்குறிப்புகள் "இடை ஓய்வுகள்" என்ற அடையாளங்களைப் பயன்படுத்துகின்றன. ஒரு பாடகர் அல்லது இசையமைப்பவர் இடை ஓய்விடத்திற்கு வரும்போது, அவர் அந்த இடை ஓய்வினால் குறிப்பிடப் பட்ட கால அளவுக்கு மௌனமாய் இருக்கின்றார்;[9] அந்தக் காலவேளையில் அவர் அமைதிகாக்கின்றார். "இசையில் இந்த அமைதி எதை அர்த்தப் படுத்துகிறது?" என்று எவரொருவரும் கேட்டதாக நான் ஒருக்காலும் கேள்விப்பட்டதில்லை. மாறாக, அந்த அமைதியானது அவ்விடத்தில் சிலவற்றைச் செய்கிறது என்று நாம் புரிந்து கொள்கின்றோம்: அது இசையின் முழுச் செயல்பாட்டிற்கு அர்த்தம் கூட்டுகிறது, அது பாடலுக்கு லயத்தைக் கூட்டுகிறது. அவ்வாறே, 8:1ன் அமைதி என்பது அனேகமாக, பின்தொடர விருந்த வெளிப்படுத்துதலுக்கான எதிர்பார்த்தலை உயர்த்துதல் என்ற நோக்கம் கொண்டிருக்கலாம்.[10]

இந்த அமைதிக்குக் கூடுதலான நோக்கம் ஒன்றைச் சில விளக்கவுரை யாளர்கள் முன்மொழிகின்றனர். G. R. பீஸ்லீ-முர்ரே அவர்கள், சந்தர்ப்பப் பொருளானது "பரலோகத்தில் அமைதிக்கான ஒரு காரணத்தைக் கொடுக்கிறது. வசனம் 2க்குப் பின்வரும் பத்தியின் எஞ்சியபகுதியானது ஜெபத்தின் ஆய்வுக் கருத்தினால் ஆதிக்கம் செலுத்தப்படுகிறது ... அந்த அமைதியானது ஜெபத்தை மாண்புடன் கேட்பதை முற்றிலும் அறிவுக்குப் பொருத்தமுடையதாக்குகிறது" என்று குறிப்பிட்டார்.[11] வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

பரிசுத்தவான்களின் ஜெபம் தேவனை நோக்கி மேலே செல்லத் தயாராக இருந்தது; இங்கு, பரிசுத்தவான்களின் ஜெபங்கள் கேட்கப்படும்படிக்குப் பரலோகத்தில் உள்ள ஒவ்வொன்றும் நின்றது என்பது கருத்தாக இருக்கலாம் ... தேவனுடைய நம்பிக்கைக்குப் பாத்திரரான அவரது மக்களின் மிகத்தாழ்மையான மென்னொலியுடன் கூடிய ஜெபத்தையும் கூடத் தேவனுடைய காதுகள் கேட்கும் படிக்கு, பரலோகத்தின் இசையும் வெளிப்படுத்தின விசேஷத்தின் இடிமுழக்கமும் கூட அமைதியாக நின்றன.[12]

பிரான்க் பேக் அவர்கள் பின்வருமாறு உடன்பட்டார்: "பூமியில் இருந்த பரிசுத்தவான்களின் ஜெபங்கள் கேட்கப்படுவதற்காக, தூதர் சேனைகளின் துதிகளும் அவற்றுடன் இணைந்த மூப்பர்கள் மற்றும் நான்கு ... ஜீவன்களின் துதிகளும் நிறுத்தப்பட்டன."[13]

நீங்கள், "ஆனால் தேவன் தமது மக்களின் ஜெபத்தைக் கேட்பதற்காக முற்றிலுமான அமைதி அவருக்குத் தேவைப்படுவதில்லையே" என்று மறுத்துரைக்கலாம். அது உண்மையாகவே உள்ளது, ஆனால் இது ஒரு அடையாளத்துவமாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளுங்கள். நாம் மதிக்கின்ற யாரேனும் ஒருவர் பேசும்போது நாம், கவனித்துக் கேட்கும் சூழ்நிலையைச் சாத்தியமான அளவுக்குச் சிறந்ததாக ஏற்படுத்திக் கொள்கின்றோம்: நாம் செய்கின்ற செயல்களை நிறுத்திவிடுகின்றோம்; பிள்ளைகளை அமைதியாய் இருக்கும்படி கூறுகின்றோம், வானொலி அல்லது தொலைக்காட்சிப்பெட்டியின் இயக்கத்தை நிறுத்திவிடுகின்றோம். அதுபோலவே, தேவன் தமது பரிசுத்தவான்கள் கூறுவதை நன்கு கேட்பதற்காகப் பரலோகம் மற்றும் பூமியை அவர் அமைதிப்படுத்துவதின் அடையாளத்துவத்தை இவ்விடத்தில் நாம் கொண்டுள்ளோம்.[14] இந்தச் சித்தரிப்பு என் இருதயத்தைத் தொடுகிறது. யூஜீன் பீட்டர்ஸன் அவர்கள் பின்வருமாறு எழுதினார்,

> நாம் கூச்சல் மிகுந்த உலகத்தில் வாழ்கின்றோம். நாம் கூவப்படுகின்றோம், மேம்படுத்துகின்றோம், அழைக்கப்படுகின்றோம், ஒவ்வொருவரும் நமக்கு ஒரு அவசரச் செய்தியைக் கொண்டுள்ளனர். நாம் கூச்சலினால் சூழப்பட்டுள்ளோம்: தொலைபேசி, வானொலி, தொலைக்காட்சி, ஒலிப்பெருக்கிப் பெட்டிகள். செய்திகள் செவிடாக்குமளவுக்கு ஒலிபெருக்கப்படுகின்றன. உலகமானது ஒரேவேளையில் ஒவ்வொருவரும் பேசும் கும்பலாக உள்ளது, எவரொருவரும் கவனித்துக் கேட்க விருப்பமோ திறனோ இல்லாதவர்களாக உள்ளனர். ஆனால் தேவன் கவனித்துக் கேட்கின்றார் ... அவர் நம்மிடத்தில் பேசுகின்றதைக் காட்டிலும் மகா அற்புதமான வகையில் நம்மைக் கவனித்துக் கேட்கின்றார் ...
>
> ஜெபத்தில் நாம் கூறுகின்ற ஒவ்வொன்றும், ஒவ்வொரு பெருமூச்சும், ஒவ்வொரு முறுமுறுப்பும், ஒவ்வொரு தடுமாற்றமான சொல்லும்: இவை யாவையும் கவனித்துக் கேட்கப்படுகின்றன. பரலோகம் முழுவதும் அமைதியாய் இருக்கிறது. தேவன் கவனித்துக் கேட்கும்

போது, உரத்துக்கூறும் தூதர்களின் குரல்கள், ஊடுருவிப்பாயும் எக்காளச் செய்திகள், இடிமுழக்கமிடும் அரியணைப் பாடல்கள் ஆகியவை அமைதியாகின்றன.[15]

இந்த முப்பது நிமிட அமைதி என்பது இந்த மறைகருத்தைக் கொண்டிருப்பினும் இல்லாதிருப்பினும், இவ்வசனப்பகுதி முழுமையும், தேவன் தமது விசேஷித்தவர்களின் ஜெபங்களைக் கவனிக்கின்றார் என்று அறிவிக்கிறது. "அப்போதோ அல்லது இப்போதோ, இடர்ப்பட்ட வாசகர்களுக்கு, அவர்களின் ஜெபங்கள் பரலோகத்தில் கேட்கப்பட்டுள்ளன, அவர்கள் அவற்றிற்குப் பதிலைப் பெறுவார்கள் என்பதையே யோவான் கூறுகின்றார். இரக்கம் மற்றும் நியாயத்தீர்ப்பு ஆகியவற்றின் தேவன் மரித்தவராகவோ அல்லது காது கேளாதவராகவோ அல்லது மாறுபாடுள்ள வராகவோ இருப்பதில்லை."[16]

தேவன் தமது மக்களின் ஜெபங்களைக் கேட்கின்றார் என்ற ஆச்சரியமான சத்தியம் வேதாகமம் முழுவதிலும் போதிக்கப்பட்டுள்ளது. நீதிமொழிகளின் புத்தகமானது, "கர்த்தர் ... நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்" என்று எளிமையாகக் கூறுகிறது (15:29). சாலொமோனிடத்தில் தேவன், "நீ என் சமூகத்தில் செய்த உன் விண்ணப்பத்தையும் உன் வேண்டுதலையும் கேட்டேன்" என்று கூறினார் (1 இராஜாக்கள் 9:3அ). அவர் எசேக்கியாவினிடத்திற்கு, "உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்" என்று வார்த்தை அனுப்பினார் (2 இராஜாக்கள் 20:5ஆ). உண்மை நிறைந்தவர்களின் ஜெபங்களையும் வேண்டுதல்களையும் தேவன் இன்னமும் கேட்கின்றார். பேதுரு, "கர்த்தருடைய கண்கள் நீதிமான்கள்மேல் நோக்கமாயிருக்கிறது, அவருடைய செவிகள் அவர்கள் வேண்டுதலுக்குக் கவனமாயிருக்கிறது" என்று எழுதினார் (1 பேதுரு 3:12அ). யோவான் பின்வருமாறு ஒப்புக்கொண்டார்: "நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறா ரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்" (1 யோவான் 5:14). "கேட்கப்படுதலின் நிச்சயத்தன்மை என்பதே தொடக்ககாலக் கிறிஸ்தவர்களின் ஜெபங்களினுடைய தனிப்பட்ட அம்சமாயிருந்தது."[17]

நாம் ஜெபிக்கும்போது பரலோகம் கவனித்துக் கேட்கிறது என்பதை அறிதல் அற்புதமானதாக இருப்பதில்லையா?

பரலோகம் அகம்மகிழ்கிறது (வசனங்கள் 3, 4)

கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது, பரலோகம் அகம்மகிழ்கிறது என்றும் இவ்வசனப்பகுதி அறிவிக்கிறது.

வசனம் 2ல் ஏழு தூதர்களுக்கு ஏழு எக்காளங்கள் தரப்பட்டன; ஆனால் அவர்கள் தங்கள் எக்காளங்களை ஊதுவதற்கு அனுமதிக்கப்படுவதற்கு முன்னர், இன்னொரு தூதர் காட்சியில் தோன்றினார்:[18]

> வேறொரு தூதனும் வந்து, தூபங்காட்டும் பொற்கலசத்தைப் பிடித்துப் பலிபீடத்தின் படியிலே நின்றான், சிங்காசனத்திற்கு முன்பாக இருந்த பொற்பீடத்தின்மேல்[19] சகல பரிசுத்தவான்களுடைய

ஜெபங்களோடும்[20] செலுத்தும்படி மிகுந்த தூபவர்க்கம்[21] அவனுக்குக் கொடுக்கப்பட்டது.[22] அப்படியே பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும்[23] செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று (வசனங்கள் 3, 4). ("தூபத்தின் முன்பாக ஒரு தூதன்" என்ற விளக்க படத்தைக் காணவும்.)

பழைய ஏற்பாட்டில் இருந்து பின்வருவது அடையாளத்துவமாக உள்ளது: பொற்பீடம் என்பது ஆசரிப்புக் கூடாரத்தின் பரிசுத்தஸ்தலத்தினுள்ளே இருந்த தூபப்பீடமாயிருந்தது (யாத்திராகமம் 30:1-8). இது மூன்றடி உயரமும் ஒவ்வொரு பக்கமும் சுமார் பதினெட்டு அங்குலம் அகலமும் கொண்டதும், மரத்தினால் செய்யப்பட்டு பொன்தகடு போர்த்தப் பட்டதுமான ஒரு சிறு பீடமாக இருந்தது. அந்தப் பீடத்தின்மீது ஒரு நெருப்புத்தட்டு வைக்கப்பட்டிருந்தது, அத்தட்டின்மீது தூபவர்க்கம் எரிக்கப்பட்டது.

இந்த பீடமானது பரிசுத்த ஸ்தலத்தை மகாப்பரிசுத்த ஸ்தலத்தில் இருந்து பிரித்த திரையின் முன்பாக நேரடியாய் நின்றிருந்தது.[24]



குறிப்பிடப்பட்ட காலங்களில், ஒரு ஆசாரியர் ஆசரிப்புக்கூடாரத்திற்கு வெளியில் இருந்த (தகனபலிபீடமாகிய) வெண்கலப் பீடத்திற்கு ஒரு தூபக்கலசத்தை எடுத்துச்சென்று அந்தக் கலசத்தில் நெருப்பை இட்டு நிரப்புவார் (லேவியராகமம் 16:12; மேலும் எண்ணாகமம் 16:46ஐயும் காணவும்[25]). அவர் அந்தத் தூபகலசத்தையும் தூபத்தையும் பரிசுத்த ஸ்தலத்திற்கு உள்ளே எடுத்துக் கொண்டுபோய், தூபக்கலசத் தட்டைப் பொற்பீடத்தின்மீது இட்டு, தூளாக்கப்பட்ட தூபவர்க்கத்தை நெருப்பின் மீது தூவுவார் (லேவியராகமம் 10:1ஐக் காணவும்). விரைவிலேயே இனிய நறுமணமானது பரிசுத்த ஸ்தலத்தை நிரப்பும், அது மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள்ளும்கூட ஊடுருவிச்செல்லும். மகாப்பரிசுத்த ஸ்தலத்தினுள் கிருபாசனத்தை மேல்பகுதியில் கொண்டிருந்த உடன்படிக்கைப் பெட்டி[26] இருந்தது: அது தேவன் தமது மக்களைச் சந்திப்பதாக வாக்களித்திருந்த

இடமாயிருந்தது (யாத்திராகமம் 25:17-22; 26:34ஐக் காணவும்). யூதத்துவச் சிந்தனையில், தூபவர்க்கத்தின் நறுமணம் தேவனுடைய பிரசன்னத்திற்கே மிதந்து வருவதாய் இருந்தது.[27]

ஏறக்குறைய தொடக்கத்தில் இருந்தே, பொற்பீடத்தின்மீது எரிக்கப் பட்ட தூபவர்க்கமானது, தேவனிடத்திற்கு ஜெபம் மேலேறிச் செல்லுதல் என்ற கருத்துடன் இணைவிக்கப்பட்டிருந்தது. தாவீது, “என் விண்ணப்பம் உமக்கு முன்பாகத் தூபமாக ... இருக்கக்கடவது” என்று எழுதினார் (சங்கீதம் 141:2அ). தேவாலயம் கட்டப்பட்ட பின்பு, ஒருநாளில் தூபப்பலி செலுத்தும் இருவேளைகளின்போதும் (யாத்திராகமம் 30:7, 8), யூதர்கள் ஜெபத்திற்காகப் பெண்களின் முற்றத்தில் ஒன்றுகூடினர். லூக்கா 1ல், சகரியா தூபம் காட்டுவதற்காகத் தேவாலயத்திற்குள் சென்றபோது (வசனங்கள் 5, 8, 9, 11), “ஜனங்களெல்லாரும் கூட்டமாய் வெளியே ஜெபம் பண்ணிக்கொண்டிருந்தார்கள்” (வசனம் 10). தூபத்தையும் ஜெபங்களையும் ஒன்றுகலத்தல் என்ற உருவகம், தொடக்ககாலக் கிறிஸ்தவர்களுக்கு, அதிலும் விசேஷமாய் யூதப்பின்னணியைக் கொண்டிருந்த கிறிஸ்தவர் களுக்கு நன்கு பழக்கமானதாக இருந்திருக்கும்.[28]

வெளிப்படுத்தின விசேஷம் 5ல் இருபத்துநான்கு மூப்பர்களும் ‘‘தூபவர்க்கம் நிறைந்த பொற்கலசங்களைக்’’ கொண்டிருந்ததாகச் சித்தரிக்கப்பட்டிருந்தனர், இது “பரிசுத்தவான்களின் ஜெபங்கள்” என்று அடையாளப்படுத்தப்பட்டிருந்தது (வசனம் 8). அதிகாரம் 8ல் இந்தச் சித்தரிப்பு சற்றே மாறுபடுகிறது: இங்கு, பரிசுத்தவான்களின் ஜெபங்களுடன் தூபம் சேர்க்கப்பட்டது என்றும், அதன் பின்பு ‘‘பரிசுத்தவான்களுடைய ஜெபங்களோடும் செலுத்தப்பட்ட தூபவர்க்கத்தின் புகையானது தூதனுடைய கையிலிருந்து தேவனுக்கு முன்பாக எழும்பிற்று’’ (வசனம் 3, 4) என்றும் நாம் வாசிக்கின்றோம். ஜெபங்கள் மற்றும் தூபம் ஆகியவற்றிக்கு இடையில் ஒரு வித்தியாசம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்றால், தூபம் என்பது கிறிஸ்து மற்றும் பரிசுத்த ஆவியானவர் ஆகியோரின் வேண்டுதலினுடைய அடையாளமாய் இருக்கலாம் (ரோமர் 8:26, 34; மேலும் எபிரெயர் 7:25; 1 யோவான் 2:1ஐயும் காணவும்). லியோன் மோரிஸ் அவர்கள், “ஜெபம் என்பது மிகவும் அடிக்கடி உணரப்படுவதுபோல், தனிமையான சாதனையாக இருப்பதில்லை. பரலோக உதவி அதற்கு உள்ளது மற்றும் நமது ஜெபங்கள் தேவனைச் சென்று சேருகின்றன” என்று கவனித்துள்ளார்.[29]

தூப பீடம் மற்றும் தூபம் பற்றிய கலந்துரையாடலானது இங்கு ஏற்படுத்தப்பட்டுள்ள கருத்தை விட்டு நம்மை விலக்கும்படிக்கு நாம் அனுமதித்துவிடக் கூடாது: கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது பரலோகம் அகம் மகிழ்கிறது! பழைய ஏற்பாட்டின் மொழிநடையில், தூபம் என்பது தேவனுடைய நாசிகளுக்கு இனிமையானதாக (சுகந்த வாசனையாக) இருந்தது;[30] அதுபோலவே, உங்கள் ஜெபங்களும் அவருடைய பார்வைக்கு இனிமை யானவைகளாய் இருக்கின்றன. ‘‘செம்மையானவர்களின் ஜெபமோ அவருக்குப் பிரியம்’’ (நீதிமொழிகள் 15:8ஆ). நீங்கள் ஜெபிக்கும்போது பரலோகம் சந்தோஷம் அடைகிறது.

பரலோகம் பதில் அளிக்கிறது (வசனங்கள் 5, 6)

ஒவ்வொன்றைக் குறித்தும் நாம் ஜெபிக்க வேண்டும் என்று தேவன் விரும்புகின்றார்: "நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லாவற்றையுங் குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத்திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்கு தெரியப்படுத்துங்கள்" (பிலிப்பியர் 4:6). "ஒன்றைப் பற்றி நினைப்பது தகுதியானது என்றால், அதைப் பற்றி ஜெபிப்பதும் தகுதியானதாகவே உள்ளது."

இருப்பினும், வெளிப்படுத்தின விசேஷம் 8ன் முதல் பகுதியில், பரிசுத்தவான்களால் ஒரு குறிப்பிட்ட வகையிலான ஜெபம் ஜெபிக்கப்பட்டது என்பது தெளிவாக உள்ளது - இது "... கொல்லப் பட்டவர்களுடைய ஆத்துமாக்களைப் பலிபீடத்தின்கீழே கண்டேன். அவர்கள்: பரிசுத்தமும் சத்தியமுமுள்ள ஆண்டவரே, தேவரீர் பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர் ..." (6:9, 10) என்று குரல் எழுப்பப்பட்டதைப் போன்று இருந்தது. ஜெபங்களைத் தொடர்ந்து நடைபெற்றவற்றின் நிமித்தம் நாம் இந்த முடிவை அடைகின்றோம்:

> *பின்பு, அந்தத் தூதன் தூபகலசத்தை எடுத்து, அதைப் பலிபீடத்து நெருப்பினால் நிரப்பி, (அதை[31]) பூமியிலே கொட்டினான், உடனே சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின.*
>
> *அப்பொழுது, ஏழு எக்காளங்களையுடைய ஏழு தூதர்கள் எக்காளம் ஊதுகிறதற்குத் தங்களை ஆயத்தப்படுத்தினார்கள் (வசனங்கள் 5, 6).*

"பூமியிலே" என்ற சொற்றொடர், பாவநிலையில் உள்ள வட்டாரத்தைக் குறிக்கிறது.[32] வேதசாட்சிகளாக மரித்திருந்தவர்கள், "பூமியின்மேல் குடியிருக்கிறவர்களிடத்தில் எங்கள் இரத்தத்தைக்குறித்து எதுவரைக்கும் நியாயத்தீர்ப்புச்செய்யாமலும் பழிவாங்காமலும் இருப்பீர்" என்று கேட்டிருந்தனர். பலிபீடத்தில் இருந்து "பூமியிலே" நெருப்பைக் கொட்டுதல் என்பது, கிறிஸ்தவர்களை எதிர்த்திருந்தவர்கள்மீது பழிதீர்த்துக் கொள்ளுதல் என்பதைக் குறிப்பிட்டது.[33]

நெருப்பானது பூமியை வந்து தாக்கியபோது, "சத்தங்களும், இடிமுழக்கங்களும், மின்னல்களும், பூமியதிர்ச்சியும் உண்டாயின." அதிகாரம் 4ல் நாம், தேவனுடைய அரியணையில் இருந்து "மின்னல்களும் இடிமுழக்கங்களும் சத்தங்களும் புறப்பட்டன" என்று கண்டோம் (வசனம் 5அ). அதிகாரம் 6ல் நாம், பூமியதிர்ச்சி என்பது, அசைக்கப்பட முடியாதவை என்று மக்கள் கருதியவை அசைக்கப்படுதலின் அடையாளத்துவமாய் இருக்கிறது என்று குறிப்பிட்டோம்.[34] இந்தச் சொற்றொடர்களின் கூட்டிணைவானது தெய்வீக நியாயத்தீர்ப்பு என்ற கருத்திற்கு மறுவலிவூட்டுகிறது.

இவை யாவும், ஏழு எக்காளங்களின் நாடகத்துவமான எச்சரிக்கை

களின் ஒலித்தலுக்கு வழிநடத்துகின்றன.[35] அவிசுவாசிகளுக்குத் தேவனுடைய செய்தி தெளிவாயிருந்தது: நீங்கள் என்னுடைய மக்களைத் துன்புறுத்தினால், நீங்கள் எனக்குப் பதில் அளிப்பீர்கள்!

வசனங்கள் 5, 6 ஆகியவற்றின் செய்தியானது தொடக்ககாலக் கிறிஸ்தவ வாசகர்களுக்கு மிகவும் அவசியமாய் இருந்தது. "துன்புறுத்துதல் மற்றும் வருத்தப்படுத்துதலின் கனத்த இயந்திரங்கள் அவர்களுக்கு எதிராக அணிவகுத்து நிற்க வைக்கப்பட்டிருந்தன. அவர்கள் ஆயுதங்களோ அல்லது வாக்குகளையோ கொண்டிருந்தது இல்லை. அவர்கள் கொஞ்சம் பணம் கொண்டிருந்தனர், மதிப்பு மரியாதை எதுவும் அவர்களுக்கு இருந்ததில்லை."[36] குறைந்த பட்சமாக அவர்களில் சிலர், "ரோமாபுரியினுடைய அதிகாரத்தின் முன்னிலையில் நாம் என்ன செய்யக்கூடும்?'' என்று கேட்டிருக்க வேண்டும். ''ஜெபியுங்கள்!'' என்பதே இதற்கு, வெளிப்படுத்தின விசேஷம் 8ன் பதிலாக உள்ளது. தாமஸ் டொர்ரன்ஸ் அவர்கள், சிந்தனையைத் தூண்டும் பின்வரும் வார்த்தைகளை எழுதினார்:

> உலகத்தின் பின்புறத்தில் உள்ள உண்மையான எஜமானத்துவ - வல்லமைகள் யாவை? நமது அடைவிடத்தின் ஆழமான இரகசியங்கள் யாவை? இங்கே திகைக்கச் செய்யும் பதில் உள்ளது: பரிசுத்தவான்களின் ஜெபமும் தேவனுடைய அக்கினியுமே ஆகும் ... தேவனுடைய நெருப்பினால் தணல்மூட்டப்பட்டு பூமியின்மீது கொட்டப்பட்ட ஜெபத்தின் வல்லமை என்பது, பூமியின்மீது கட்டவிழ்த்துவிடப்பட்ட இருளைவிடவும் வல்லமையான அதிகாரங்களைவிடவும் அதிக வலுவான, அதிக வல்லமை நிறைந்த சக்திகளாக உள்ளன ...
>
> ... பரிசுத்தவான்களின் ஜெபங்களும் தேவனுடைய நெருப்பும் உலகத்தின் ஓட்டம் முழுவதையும் அசைக்கின்றன. அவைகள் இந்த உலகம் அறிந்துள்ளவற்றிலேயே மிகவும் வலுவானவைகளாகவும், மிகவும் கலங்கச் செய்பவைகளாகவும், மிகவும் புரட்சிகரமானவைகளாகவும், மிகவும் பயங்கரமூட்டும் வல்லமைகளாகவும் உள்ளன. கிறிஸ்துவின் சபையில் உள்ள நாம் தேவனுக்கென்று ஜெபத்தின் வல்லமை இவ்வாறு உள்ளது என்று உண்மையிலேயே புரிந்துகொள்வோமா! ...[37]

கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது பரலோகம் கவனிப்பது மட்டுமின்றி, பரலோகம் மகிழ்வடைவது மட்டுமின்றி, பரலோகம் பதில் அளிக்கிறது என்றும் வேதாகமம் போதிக்கிறது. நமது ஜெபங்களுக்குத் தேவன் பதில் அளிக்கின்றார்! இயேசு, ''கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்" என்று கூறினார் (மத்தேயு 7:7). யாக்கோபு, "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது" என்று எழுதினார் (யாக்கோபு 5:16ஆ). யோவான், "நாம் வேண்டிக்கொள்ளுகிறதெதுவோ அதை அவராலே பெற்றுக் கொள்ளுகிறோம்" என்று தெளிவாகக் கூறினார் (1 யோவான் 3:22அ). அவர் மேலும் பின்வருமாறு கூறினார்,

நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். நாம் எதைக் கேட்டாலும், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்று நாம் அறிந்திருந்தோமானால், அவரிடத்தில் நாம் கேட்டவைகளைப் பெற்றுக்கொண்டோமென்றும் அறிந்திருக் கிறோம் (1 யோவான் 5:14, 15).

நாம் இவ்வசனப் பகுதிகளை நம்புகின்றோமா? நாம் ஜெபத்தின் வல்லமையை நம்புகின்றோமா?

வெளிப்படுத்தின விசேஷம் 8:1-6 வசனப் பகுதியானது, பல்வேறு எழுத்தாளர்களால் ஜெபத்தைப் பற்றித் தரப்பட்ட பின்வரும் விளக்கங்களைத் தூண்டியது:

[ஜெபம் என்பது] தேவனுடைய ஆளுகையில் [கிறிஸ்தவரின்] நேரடியான பங்கேற்பின் ஒரு வடிவமாக உள்ளது.[38]

ஜெபத்தின் செல்வாக்கு என்பதே பூமியில் மிகவும் வல்லமை நிறைந்த செல்வாக்காக உள்ளது; மனிதர்களால் கடைப்பிடிக்கப்படக் கூடியவையாய் இருப்பினும் அல்லது இல்லாதிருப்பினும், கிறிஸ்தவ ஜெபங்களுடன் சில உறவுமுறையை நிலைநிறுத்திக் கொண்டிராத தனிச்சிறப்பான நிகழ்ச்சிகள் என்று பூமியில் எதுவுமே இருப்ப தில்லை.[39]

[பொல்லாங்குடனான யுத்தத்தில்,] விசுவாசத்தின் ஜெபத்திற்குத் தெய்வீக பதில் என்பதே கிறிஸ்தவரின் இரகசிய ஆயுதமாக உள்ளது.[40]

[இடர்ப்பாடு வருகிறபோது] ஜெபம் என்பது ... வேறு எதுவும் செய்யக்கூடியதைக் காட்டிலும் அதிகம் நடைமுறைக்கு உகந்த விஷயமாக உள்ளது.[41]

ஒருமுறை இரண்டு பையன்கள், யார் அதிகதூரம் தாண்ட முடியும் என்ற போட்டியில் இறங்கினர். பின்பு, வெற்றிபெற்ற பையன் முதல் இடத்திற்கான பரிசைத் திருப்பிக்கொடுக்க முயற்சி செய்தான். "நான் ஏமாற்றி விட்டேன், நான் தாண்டுவதற்கு முன்பு ஜெபித்தேன்" என்று அவன் கூறினான். அவன் ஏமாற்றவில்லை, ஆனால் அவன், வேறுவகையில் செய்திருக்க முடியாதவற்றைத் தேவனுடைய உதவியுடன் தன்னால் செய்ய முடியும் என்பதைப் புரிந்து கொண்டிருந்தான் - இது நாம் யாவரும் கற்றுக் கொள்ள வேண்டிய பாடமாக உள்ளது. கிறிஸ்தவர்கள் ஜெபிக்கும்போது பரலோகம் பதில் அளிக்கிறது என்பதற்காகத் தேவனுக்கு நன்றி!

முடிவுரை

சங்கீதம் 55ல் தாவீது தமது இருதயத்தைத் தேவனிடத்தில் ஊற்றினார்:

எனக்குச் செவிகொடுத்து, உத்தரவு அருளிச்செய்யும், சத்துருவினு

டைய கூக்குரலினிமித்தமும், துன்மார்க்கர் செய்யும் இடுக்கத்தினிமித் தமும் என் தியானத்தில் முறையிடுகிறேன். அவர்கள் என்மேல் பழிசாட்டி, குரோதங்கொண்டு, என்னைப் பகைக்கிறார்கள்.

என் இருதயம் எனக்குள் வியாகுலப்படுகிறது, மரணத்திகில் என்மேல் விழுந்தது. பயமும் நடுக்கமும் என்னைப் பிடித்தது, அருக்களிப்பு என்னை மூடிற்று. அப்பொழுது நான்: ஆ, எனக்குப் புறாவைப்போல் சிறகுகள் இருந்தால், நான் பறந்துபோய் இளைப்பாறுவேன் (வசனங்கள் 2-6).

நீங்கள் எப்போதாவது, தாவீதைப்போல் வாழ்க்கையினால் மூழ்கடிக்கப்படும்படி விடப்பட்டு இருந்துள்ளீர்களா? சங்கீதக்காரர் தொடருகையில் தமது விசுவாசத்தை அவர் வெளிப்படுத்திய வகையைக் கவனியுங்கள்: "நானோ தேவனை நோக்கிக் கூப்பிடுவேன், கர்த்தர் என்னை இரட்சிப்பார் ... அவர் என் சத்தத்தைக் கேட்பார்" (வசனங்கள் 16, 17). அவரது முடிவு என்னவாக இருந்தது? ''கர்த்தர்மேல் உன் பாரத்தை வைத்துவிடு, அவர் உன்னை ஆதரிப்பார், நீதிமானை ஒருபோதும் தள்ளாடவொட்டார்'' (வசனம் 22). நமது வேதவசனப் பகுதியின் அடிப்படைச் சத்தியங்களைத் தாவீது புரிந்து கொண்டிருந்தார்: தேவனு டைய மக்கள் ஜெபிக்கும்போது, பரலோகம் கவனித்துக் கேட்கிறது, பரலோகம் அகம் மகிழ்கிறது, பரலோகம் பதில் அளிக்கிறது.

இந்த மாபெரும் சத்தியங்களை ஏற்றுக்கொள்ளுதல் என்பது நமது வாழ்வில் செயல்விளைவை ஏற்படுத்தும். நாம் அதிகமாய் ஜெபிப்போம் என்பது ஒரு விளைவாக இருக்கும். தேவனுடனான நமது உறவுமுறை சரியாய் இருப்பதை நிச்சயப்படுத்திக் கொள்வதற்கு நாம் நமது வாழ்வைப் பரிசீலனை செய்து பார்ப்போம் என்பது இன்னொரு விளைவாக இருக்க வேண்டும். "துன்மார்க்கருக்கு கர்த்தர் தூரமாயிருக்கிறார்: நீதிமான்களின் ஜெபத்தையோ கேட்கிறார்" (நீதிமொழிகள் 15:29). நீங்கள் தேவனை ''அப்பா'' (''பிதா'') என்று அழைக்கக் கூடுவதற்கு முன்பு, நீங்கள் தண்ணீரினாலும் ஆவியினாலும் மறுபடியும் பிறந்திருக்க வேண்டும் (யோவான் 3:3, 5); நீங்கள் உங்கள் பாவமன்னிப்பிற்கென்று தண்ணீருக்குள் முழுக்காட்டப் பட்டிருக்க வேண்டும் (நடபடிகள் 2:38).

நீங்கள் தேவனுடைய பிள்ளையாக வேண்டியிருந்தால், அல்லது தவறுகின்ற பிள்ளை என்ற வகையில் நீங்கள் கர்த்தரிடமாய் திரும்ப வேண்டியிருந்தால், அதை நீங்கள் இன்றே செய்ய வேண்டும் என்பதற்காக நான் ஜெபிக்கின்றேன்!

போதகர்கள் மற்றும் பிரசங்கியார்கள் ஆகியோருக்கான குறிப்புகள்

டொர்ரன்ஸ் அவர்களால் பயன்படுத்தப்பட்ட பின்வரும் சொற்றொடரானது இந்தப் பாடத்திற்கு ஒரு நல்ல தலைப்பை ஏற்படுத்துவதாயிருக்கும்: "பரிசுத்தவான்களின் ஜெபங்களும் தேவனுடைய நெருப்பும்."[42] ஏர்ல் பால்மர் அவர்கள், மனதில் பதியும் பின்வரும் தலைப்பைக் கொடுத்தார்:

"அமைதியும் சப்தமும்."[43] வில்லியம் பார்க்ளே அவர்கள், "அமைதியும் ஜெபத்தின் முழக்கமும்"[44] என்ற தொடர் மொழியை உபயோகித்தார்.

குறிப்புகள்

[1]*ஏழாம் முத்திரையின் செயலானது வசனம் 1ல் முடிவடைகிறது என்றும், முத்திரை உடைக்கப்பட்டபோது மாத்திரமே அமைதி நிலவிற்று என்றும் சில விளக்கவுரையாளர்கள் வலியுறுத்துகின்றனர். இது சாத்தியமானதாக உள்ளது, ஆனால் சந்தர்ப்பப் பொருளானது, ஏழாம் முத்திரையின் செயல்பாடு தொடர்கிறது என்ற கருத்தை ஆதரிப்பதாக உள்ளது. முதலாவது, வசனம் 2 ஒரு புதிய பத்தியாகத் தொடங்குவதில்லை; மாறாக, வசனங்கள் 1ம் 2ம் ஒரே பத்தியின் பாகமாக உள்ளன. இரண்டாவது, வசனம் 5ன் உச்சநிலைக் காட்சி மொழிநடையானது ஏழாம் எக்காளம் ஊதப்படுதல் (11:19) மற்றும் ஏழாம் கலசம் ஊற்றப்படுதல் (16:18-21) ஆகியவற்றின் உச்சநிலைக் காட்சிக்கு இணையானதாக உள்ளது. இது, ஏழாம் முத்திரையின் செயல்பாடானது குறைந்தபட்சம் வசனம் 5 வரையிலுமாவது விரிவாக்கப்பட்டுள்ளது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது - இது தூதர்களுக்கு ஏழு எக்காளங்கள் கொடுக்கப்பட்டதைப் பற்றிக் கூறுகிற வசனம் 2ஐயும் உள்ளடக்குகிறது.* [2]Frank Pack, *Revelation*, Part 1, The Living Word Series (Austin, Tex.: R. B. Sweet Co., 1965), 73. [3]Jim McGuiggan, *The Book of Revelation*, Looking Into the Bible Series (Lubbock, Tex.: International Biblical Resources, 1976), 97-98. [4]Martin Kiddle, *The Revelation of St. John*, The Moffatt New Testament Commentary Series (New York: Harper & Brothers, Publishers, 1940), 128-29. *நீங்கள் அமெரிக்க நாட்டில் வசிப்பவராய் இருந்தால், தொலைக்காட்சியில் விளையாட்டு நிகழ்ச்சிகள் தொடர்பானவற்றில் "மறு ஒலிபரப்புகள்" பற்றிய விவரிப்பை நீங்கள் பயன்படுத்த முடியும்: நாம் அடிக்கடி, ஒரே விளையாட்டைப் பல மாறுபட்ட முறைகள் பார்க்கின்றோம், ஆனால் அவ்வாறு பார்க்கும்போது வேறுபட்ட கண்ணோக்கில் இருந்து பார்க்கின்றோம். (கிரிக்கெட் விளையாட்டில் சில காட்சிகள் திரும்பத் திரும்ப வேறுபட்ட கோணத்தில் காட்டப்படுவதைப் போன்றது.)* [5]Ibid. [6]*இந்த வளர்நிலையின் தனிச்சிறப்பு பிற்பாடு வலியுறுத்தப்படும்.* [7]*எண்ணமுடியாத திரளான கூட்டத்தாரின் ஆராதனை "இரவும் பகலும்" (வசனம் 15) - வேறு வார்த்தைகளில் கூறுவதென்றால், இடைவிடாமல் - தொடர்ந்தது என்று அதிகாரம் 7 எடுத்துரைத்தது. இது, திடிரென்று தோன்றிய அமைதியை இன்னும் அதிகத் திகைப்புக்கு உரியதாக்கி இருக்க வேண்டும்.* [8]*"மணி" என்ற சொற்றொடரின் அடையாளத்துவத் தனிச்சிறப்பு, "வெளிப்படுத்தின விசேஷம், 1" என்ற புத்தகத்தில் உள்ள "இங்கே வலுசர்ப்பங்கள் உள்ளன" என்ற பாடத்தில் சுருக்கமாகத் தொடப்பட்டுள்ளது, ஆனால் "அரைமணி நேரம்" என்பது குறிப்பிடப்படவில்லை. "ஏறக்குறைய அரைமணிநேரமளவும்" என்று யோவான் கூறியதான உண்மையில், "ஆழமான" அடையாளத்துவ அர்த்தம் எதுவும் இல்லை. இந்தச் சொற்றொடர், நாடகத்துவ விளைவுக்காக அமைதியின் ஒரு சுருக்கமான, திட்டவட்டமற்ற காலவேளையை மாத்திரம் குறிப்பிடுகிறது.* [9]*இசை என்பது, முழுக் குறிப்புகள், அரைக் குறிப்புகள், கால் குறிப்புகள், அரைக்கால் குறிப்புகள், வீசம் குறிப்புகள் ஆகிய அம்சங்களைக் கொண்டிருப்பதுபோலவே, அது முழு ஓய்வுகள், அரை ஓய்வுகள், கால் ஓய்வுகள், அரைக்கால் ஓய்வுகள், மற்றும் வீசம் ஓய்வுகள் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது. ஒரு ஸ்வரமானது எவ்வளவு நேரம்*

நீடிக்கவேண்டும் என்பதை குறிப்பின் வகையானது தீர்மானிக்கிறது, மற்றும் எவ்வளவு நேரம் அமைதியாய் இருக்க வேண்டும் (எவ்வளவு நேரம் பாடாது இருக்க வேண்டும்) என்பதை ஓய்வின் வகையானது கூறுகிறது. [10]*அமைதிக்கான மற்ற நோக்கங்களும் ஆழ்ந்து சிந்திக்கப்பட்டுள்ளன: (1) துன்மார்க்கரை மனம் வருந்தச் செய்யவைத்தல் என்பதே எக்காளங்களின் முக்கிய நோக்கமாக இருக்கும் என்பதால், அரைமணி நேர அமைதி என்பது, மனிதர்கள் மனந்திரும்பக் காலத்தைத் தேவன் கொடுத்தபோது, மனிதகுலத்திடம் அவர் காண்பித்த பொறுமையை அடையாளப்படுத்திற்று என்று சிலர் நினைக்கின்றனர். (2) ஏழாம் முத்திரையின் செயல்பாடு முழுவதும் வசனம் 1ல் காணப்படுகிறது என்று நம்புகின்றவர்கள், இந்த அமைதி என்பது, நித்தியத்துவத்தைப் பற்றி நாம் அறியாத மற்றும் அறிய முடியாத பல உண்மைகளை நமக்கு நினைவூட்டுகிறது என்று கூறுகின்றனர். (3) சிலர் இந்த அமைதியில், ஆழ்ந்தறிவுள்ள பயபக்தியின் காலவேளை ஒன்றைக் கண்டுள்ளனர்.*

[11]G. R. Beasley-Murray, *The Book of Revelation*, The New Century Bible Commentary Series (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1974), 150. [12]William Barclay, *The Revelation of John*, vol. 2, rev. ed., The Daily Study Bible Series (Philadelphia: Westminster Press, 1976), 40. [13]Pack, 73. See also Eugene H. Peterson, *Reversed Thunder* (San Francisco: Harper Collins Publishers, 1988), 87. [14]*"இஸ்ரவேல் மக்களின் துதிகள் பரலோகத்தில் கேட்கப்படும்படிக்கு, தூதர்கள் பாடுதலில் இருந்து ஓய்ந்திருத்தல் பற்றிய குறிப்பு ஒன்று தல்மூத்தில் உள்ளது"* (Robert Mounce, *The Book of Revelation*, The New International Commentary on the New Testament Series [Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1977], 179). [15]Peterson, 93. [16]Albert H. Baldinger, *Preaching From Revelation: Timely Messages for Troubled Hearts* (Grand Rapids, Mich.: Zondervan Publishing House, 1960), 40. [17]Peterson, 94. [18]*ஏழாம் முத்திரை உடைக்கப்படுதல் (8:1) மற்றும் இடிமுழக்க ஒலி (8:5) ஆகியவற்றிற்கு இடையில் நடைபெற்ற யாவும் முழுமையான அமைதியில் நடைபெற்றன என்று சிலர் நினைக்கின்றனர். அப்படியென்றால், அது அந்தச் செயல்பாட்டின் செயல்விளைவைக் கூட்டியிருக்கும்.* [19]*இந்தக் காட்சியானது, 6ம் அதிகாரத்தில் வேதசாட்சிகளாக மரித்தவர்களின் ஆத்துமாக்கள் "பலிபீடத்தின் கீழ்" இருந்தன (வசனம் 9) என்ற காட்சியுடன் உறவுபட்டுள்ளது. நாம் 6:9-11ஐக் கலந்துரையாடியபோது, அந்தக் காட்சியில் பலிபீடமானது பழைய ஏற்பாட்டின் வெண்கலப் பலிபீடத்துடன் உறவுபட்டிருந்தது என்று கருத்துத் தெரிவித்திருந்தோம். அதேவேளையில் நாம், வெளிப்படுத்தின விசேஷத்தில் ஒரே ஒரு பலிபீடம் மாத்திரமே குறிப்பிடப்பட்டது, அது சிலவேளைகளில் பொன்னால் ஆன பலிபீடம் என்றும் சிலவேளைகளில் வெண்கலப் பலிபீடம் என்றும் சித்தரிக்கப்பட்டது என்றும் குறிப்பிட்டோம். மௌன்ஸ் அவர்கள், "யோவானின் தரிசனத்தில் இரு பலிபீடங்களும் ஒன்றாக இணைக்கப்படாதிருக்க வேண்டிய காரணம் எதுவும் இல்லை" என்று கூறினார் (157). 8:1-5ல் உள்ள பலிபீடத்தைப் பற்றி பேக் அவர்கள், "இவ்வசனப்பகுதியில் தனித்தனியான இரு பலிபீடங்கள் காணப்படுகின்றன என்பது சந்தேகத்திற்கு உரியதாக உள்ளது, ஆனால் பொன்னால் ஆன பலிபீடம் மற்றும் தகனபலிசெலுத்தும் பலிபீடம் ஆகிய இரண்டின் பண்புகளும் இந்த பலிபீடத்தில் இணைக்கப்பட்டுள்ளன" என்று எழுதினார் (74). அதிகாரம் 6ல் உள்ள பலிபீடத்திற்கு நேர் எதிராக, அதிகாரம் 8ல் உள்ள பலிபீடமானது தூப பீடத்தின் பண்புகளை அதிகமாக கொண்டுள்ளது.* [20]*இந்தக் காட்சியானது, வேதசாட்சிகள் "எதுவரைக்கும்?" என்று கூக்குரலிட்ட அதிகாரம் 6ன் காட்சியுடன் உறவுபட்டுள்ளது (வசனங்கள் 9, 10). இருப்பினும் இவ்விடத்தில் வேதசாட்சிகள் மட்டுமின்றி "சகல பரிசுத்தவான்களுடைய" ஜெபங்களும் உள்ளன என்பதைக்*

கவனிக்கவும்.

[21]தூதனுக்கு, "மிகுந்த தூபவர்க்கம்" கொடுக்கப்பட்டது என்ற உண்மையானது, இந்த அடையாளத்துவம் யூதர்களின் பாவநிவாரண நாளில் இருந்து வந்துள்ளது என்று சில விளக்கவுரையாளர்களை நம்பி இணங்கச் செய்துள்ளது, ஏனெனில் மற்ற நாட்களைக் காட்டிலும் அதிகமான தூபவர்க்கமானது பாவநிவாரண நாளன்று பரிசுத்த ஸ்தலத்திற்கு எடுத்து செல்லப்படும். [22]சிலர் இவ்வசனப்பகுதியை, கிறிஸ்தவர்களுக்காகத் தூதர்கள் வேண்டுதல் செய்கின்றனர் என்று போதிக்கப் பயன்படுத்த முயற்சிசெய்துள்ளனர். இருப்பினும் தூபவர்க்கமானது தூதனிடத்தில் தோன்றவில்லை, அது அவருக்குக் கொடுக்கப்பட்டது. தூதர் என்பவர், வெளிப்படுத்தின விசேஷம் முழுவதிலும் உள்ளது போல, அரியணையில் இருந்து வரும் அறிவுறுத்துதல்களை நிறைவேற்றுகின்ற ஊழியக்காரராக மாத்திரமே இருந்தார். [23]"பரிசுத்தவான்களுடைய ஜெபங்கள்" என்ற சொற்றொடருக்கான மற்ற விளக்கங்களுக்கு, இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராய் இருக்கின்றார்" என்ற பாடத்தில் 5:8க்கான குறிப்புகளைக் காணவும். [24]KJV வேதாகமம், இதை "The Most Holy Place" ["மகாப் பரிசுத்த ஸ்தலம்"] என்று அழைக்கிறது. [25]பலிசெலுத்தும் பீடத்தில் எப்போதுமே நெருப்பு இருந்தது, ஆனால் தூப பீடத்தில் அவ்வாறு இருக்கவில்லை; இவ்விதமாக இவ்வசனப்பகுதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள பீடமானது அனேகமாக பலிபீடமாகவே இருக்க வேண்டும். [26]NASB வேதாகமம், இதை "the ark of the testimony" (சாட்சியின் பெட்டி) என்று அழைக்கிறது. [27]பொன்னால் ஆன பீடமானது மகாப்பரிசுத்த ஸ்தலத்தினுள் இருந்தது என்று எபிரெயருக்கு நிருபம் எழுதியவர் சித்தரிக்குமளவுக்கு (எபிரெயர் 9:3, 4ஐக் காணவும்) தூப பீடமானது மகாப்பரிசுத்த ஸ்தலத்துடன் நெருக்கமாக உறவுபட்டிருந்தது. [28]இது ஒரு அடையாளத்துவமாக உள்ளது என்பதை நினைவில் வைத்துக் கொள்ளவும். இவ்வசனப் பகுதியில் தூபவர்க்கத்தின் அடையாளத்துவப் பயன்பாடானது, இன்றைய நாட்களில் ஆராதனையில் தூபவர்க்கம் பயன்படுத்தப்படுவதை நியாயப்படுத்துவதில்லை. இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் "ஆட்டுக்குட்டியானவர் பாத்திரராய் இருக்கின்றார்" என்ற பாடத்தில் 5:8க்கான குறிப்புகளைக் காணவும். [29]Leon Morris, *Revelation*, rev. ed., The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1987), 118. [30]"சுகந்த வாசனை" என்பது பலிகள் தொடர்பாகப் பழைய ஏற்பாட்டில் மீண்டும் மீண்டும் காணப்படுகிற ஒரு சொற்றொடராக உள்ளது. இது (KJVயில்) "sweet savour" என்றும், (NASBயில்) "soothing aroma" அல்லது (NIVயில்) "pleasing aroma" என்றும் உள்ளது. (உதாரணத்திற்கு, ஆதியாகமம் 8:21; யாத்திராகமம் 29:18; லேவியராகமம் 1:9; எண்ணாகமம் 15:7; எசேக்கியேல் 20:41 ஆகிய வசனங்களைக் காணவும்.) AB வேதாகமமானது இந்தச் சொற்றொடரைப் பின்வரும் வார்த்தைகளைக் கொண்டு விரிவாக்குகிறது: "a scent of satisfaction to His heart" ["அவரது இருதயத்திற்கு நிறைவளிக்கும் ஒரு வாசனை"]. ஜட்ஸோனியாவில் எனது வகுப்பில், பாடத்தின் இப்பகுதியை நான் அடையும்போது, எனது மாணவர்களிடத்தில் நான், அவர்களுக்கு "இனிய நறுமணமாக" இருப்பது எது என்று கேட்டேன். புத்தறுப்புப் புல், வெட்டப்பட்ட ஒரு ஆரஞ்சுப்பழம், புதிதாய்ப் போடப்பட்ட காஃபி, வீட்டில் செய்யப்பட்ட ரொட்டி, சுத்தமான ஒரு குழந்தை, தேன்சிந்தும் மலர்க்கொத்துகள், புதிதாய் அடுமனையில் இடப்பட்ட பை என்ற கேக், மற்றும் இலவங்கப்பட்டையின் மணம் என்பவை பதில்களில் உள்ளடங்கின. நமது நாசிகளுக்கு இந்த நறுமணங்கள் எவ்வாறு உள்ளனவோ, அவ்வாறே தேவனுக்கு நமது ஜெபங்கள் மகிழ்வூட்டுவனவாக உள்ளன என்று நான் குறிப்பிட்டேன்.

[31]*"அதை" என்ற வார்த்தை மூலவசனத்தில் காணப்படுவதில்லை. தூதன், நெருப்பினால் நிரப்பப்பட்ட தூபக்கலசத்தையா அல்லது நெருப்பையா, எதைப் பூமியில் கொட்டினான்? இந்தக் கருத்து வசனப்பகுதியில் தெளிவாக இருப்பதில்லை, அது பொருட்படுத்தப்பட வேண்டியதும் இல்லை.* [32]*இந்தப் புத்தகத்தின் முற்பகுதியில் உள்ள "தன்னிடத்தில் உள்ளவற்றைக் கொண்டு தன்னால் முடிந்தவற்றைச் செய்திருந்த சபை" என்ற பாடத்தில் "பூமியில் குடியிருக்கிறவர்கள்" என்ற சொற்றொடரின்மீதான குறிப்புகளைக் காணவும்.* [33]*இந்தக் காட்சியானது, சணல்நூல் அங்கி தரித்திருந்த மனிதர் ஒருவரிடத்தில், கேரூபீன்களின் நடுவே இருக்கிற அக்கினித்தழலில் உன் கை நிறைய எடுத்து அதை நகரத்தின்மேல் இறை என்று அறிவுறுத்தல் தரப்பட்ட (எசேக்கியேல் 10:2) எசேக்கியேலின் புத்தகத்தில் உள்ள காட்சியைப் போன்றதாக உள்ளது. இந்த மொழிநடை நியாயத்தீர்ப்பின் மொழிநடையாக இருக்கிறது.* [34]*"மகாப்பெரிய நாள் ... வருகிறது" என்ற பாடத்தில் 6:12க்குக் காணப்படும் குறிப்புகளைக் காணவும்.* [35]*ஏழு எக்காளங்கள் பற்றியும் அவற்றின் நோக்கங்கள் பற்றியும் நாம், இனிவெளிவரவிருக்கும் "வெளிப்படுத்தின விசேஷம், 3" என்ற புத்தகத்தில் படிப்போம்.* [36]Peterson, 87. [37]Thomas F. Torrance, *The Apocalypse Today* (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1959), 60-61. [38]D. T. Niles, *As Seeing the Invisible: A Study of the Book of Revelation* (New York: Harper & Brothers, Publishers, 1961), 64. [39]Burton Coffman, *Commentary on Revelation* (Austin, Tex.: Firm Foundation Publishing House, 1979), 182. [40]Homer Hailey, *Revelation: An Introduction and Commentary* (Grand Rapids, Mich.: Baker Book House, 1979), 214.

[41]Peterson, 95. [42]Torrance, 61. [43]Earl Palmer, *1, 2, 3, John & Revelation*, The Communicator's Commentary Series, vol. 12 (Dallas: Word Publishing, 1982), 185-86. [44]Barclay, 39-41.

மறுகண்ணோட்டம் மற்றும் கலந்துரையாடல் ஆகியவற்றிற்கான கேள்விகள்

1. *வெளிப்படுத்தின விசேஷம் 8:1-6 வசனப்பகுதி நிறைவேற்றுகிற மூன்று நோக்கங்கள் யாவை?*
2. *இந்தப் பாடத்தின்படி, ஏழு எக்காளங்கள் என்பதை ஏழு முத்திரைகளைத் தொடர்ந்து வருவது மாத்திரமின்றி, அவைகள் "ஏழாம் முத்திரையின் அடிப்படைச் செயல்வகை என்றும் நினைக்கப்படலாம்" என்பது எதை அர்த்தப்படுத்துகிறது?*
3. *இந்தப் பாடத்தின்படி, முத்திரைகள், எக்காளங்கள் மற்றும் கலசங்கள் ஆகியவற்றின் வளர்நிலை என்னவாக உள்ளது? (இவையாவும் எதை அர்த்தப்படுத்துகிறது என்பது பற்றி இப்போது கவலைப்பட வேண்டாம். இந்தக் கணத்திற்கு, உங்கள் சிந்தையில் இந்தச் சிந்தனையை மட்டும் பெற்றுக்கொண்டிருங்கள்.)*
4. *வெளிப்படுத்தின விசேஷம் 8:1ல் உள்ள "அமைதி"யின் முக்கியத்துவம் என்று நீங்கள் நினைப்பது என்ன?*
5. *கிறிஸ்தவர் ஒருவரின் ஜெபங்களைத் தேவன் கேட்கின்றார் என்று வேதாகமம் போதிக்கிறதா?*

6. ஆசரிப்புக் கூடாரம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றில் நடந்த ஆராதனையில், பொன்னால் ஆன பீடம் என்றால் எதுவாக இருந்தது? ஆசரிப்புக் கூடாரம் மற்றும் தேவாலயம் ஆகியவற்றில் நடந்த ஆராதனையில், பொன்னால் ஆன பீடத்தில் தூபம் எவ்வாறு செலுத்தப்பட்டது என்பது பற்றி கலந்துரையாடத் தயாராகவும்.
7. இந்தப் பாடத்தின்படி, பரிசுத்தவான்களின் ஜெபங்களுடன் தூபவர்க்கத்தை ஒன்றுகலத்தல் என்ற செயலின் தனிச்சிறப்பு என்ன?
8. வெளிப்படுத்தின விசேஷம் 8ல் தூபவர்க்கம் குறிப்பிடப் பட்டுள்ளது என்ற உண்மையானது, நாம் இன்றைய நாட்களில் நமது ஆராதனையில் தூபவர்க்கத்தை எரிக்க வேண்டும் என்று அர்த்தப்படுகிறதா?
9. தேவனிடத்தில் எழும்பிச்சென்ற ஜெபங்களுக்குத் தேவனுடைய பதில் என்னவாக இருந்தது?
10. பரலோகமானது இன்னமும் கிறிஸ்தவர்களின் ஜெபங்களுக்குப் பதில் அளிக்கிறதா? உங்கள் ஜெபங்களுக்குத் தேவன் எப்போதாவது பதில் அளித்துள்ளாரா?

தூபத்தின் முன்பாக ஒரு தூதன் *(8:4)*

படிப்பு உதவிகள்

ஆசியாவின் ஏழு சபைகளும் பத்மு தீவும்

வெளிப்படுத்தின விசேஷத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள அடையாளத்துவ எண்கள்

1 = ஒருமை அலகு (ஒன்றே ஒன்று)
2 (1 + 1) = பலப்படுத்தப்பட்டது
3 = தெய்வீகத்துவ எண்
$3^1/_2$ (7ல் பாதி) = முழுமையின்மை (42 மாதங்கள்; 1,260 நாட்கள்; "ஒரு காலமும், காலங்களும் அரைக்காலமும்" = $3^1/_2$ ஆண்டுகள் காலத்திற்கு சோதனை, எதிர்காலத்திற்கான நம்பிக்கை மறைமுகமாய் உணர்த்தப்படுகிறது)
4 = படைப்பின் எண் (வானவியலின் எண், மனிதத்துவம்)
5 (10ல் பாதி) = மட்டுப்படுத்தப்பட்ட பலம்
6 (7 - 1) = பூரணத்துவம் இன்மை (துன்மார்க்கம், வஞ்சனை, முடிவில் தோல்வி)
7 (3 + 4) = பூரணத்துவம் (பரிசுத்தமான முழுமைத்தன்மை)
10 = மனிதத்துவ முழுமைத் தன்மை (நிறைவான தன்மை அல்லது அதிகாரம்)
12 (3 x 4) = மதரீதியான முழுமைத் தன்மை
24 (2 x 12) = மதரீதியான முழுமைத் தன்மை வலிவூட்டப்படுதல்
40 (4 x 10) = மனிதத் தரப்பில் முழுமைத்தன்மை
42 ($3^1/_2$ யில் காணவும்)
144 (12 x 12) = மதரீதியான முழுமைத் தன்மையின் முழுமைத்தன்மை
666 (6ல் காணவும்) = பூரணத்துவம் இன்மை, துன்மார்க்கம், வஞ்சனை, மற்றும் தோல்வி வலிவு ஊட்டப்படுதல்
1,000 (10 x 10 x 10) = முழுமைத்துவத்தின் முழுமைத்துவத்தின் முழுமைத்துவம்
1,260 ($3^1/_2$ யில் காணவும்)
1,600 (4 x 4 x 10 x 10) = மனிதத்தரப்பில் மொத்தத் தன்மை
7,000 (7 x 1,000) = முழுமைத்தன்மை வலிவூட்டப்படுதல்
12,000 (12 x 1,000) = முழுமைத்தன்மை வலிவூட்டப்படுதல்
144,000 (144 x 1,000) = முழுமைத்தன்மை வலிவூட்டப்படுதல்
200,000,000 (2 x பல 10கள்) = அளவிடமுடியாத பலம்
1,000,000,000 மற்றும் அதிகமானது = எண்ண இயலாதது, மனிதப்புரிந்துகொள்ளுதலுக்கு அப்பாற்பட்டது